டிசம்பர், நவம்பர் 1979

# தமிழ்ச்சு

JL
05329

434

# தமிழரசு

1-11-1979 50 காசு.





## கூட்டுறவுச் சிறப்பிதழ்

Verified



மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச்செல்வர் ம.பொ. சிவஞானம் அவர்களின் இலக்கியப் பணியைப் பாராட்டி சென்னைப் பல்கலைக் கழகம் அளித்த டாக்டர் பட்டத்தை மேதகு ஆளு[illegible] அவர்கள் 28.9.79 அன்று வழங்கினார்.

தமிழரசு மலர்:10 இதழ்: 9 ✱ 1-11-1979



# கூட்டுறவு பரவவேண்டும்!

—பேரறிஞர் அண்ணா

நீண்ட பல ஆண்டுகளாய்க் கூட்டுறவு இயக்கம் நமது நாட்டில் இயங்கி வந்ததன் காரணமாக அது பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்றுள்ளது. ஆனால், இயக்கம் அடைந்த வளர்ச்சிக்கேற்ப அதில் ஈடுபட்டுள்ள மக்களிடையே கூட்டுறவு உணர்வு பரவவில்லை. கூட்டுறவியக்கத்தின் கொள்கைகளில் மக்களிடையே ஆர்வம் பெருக வேண்டும். சமூகம் முழுவதிலும் இந்த இயக்கம் நன்கு ஊடுருவ இதில் சம்பந்தப்பட்ட அனைவரும் பாடுபட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபட்டுள்ள மக்களில் சுமார் 80 சதவிகிதத்தினர் அவைகளில் தீவிரமான பங்கு பெற்றவர்கள் அல்லர். இந்த இயக்கத்தில் நெருங்கிய தொடர்பு இன்றியே அவர்கள் இருந்திருக்கிறார்கள். இது வரையில் எப்படி நடந்தபோதிலும் இனிமேல் அவ்வாறு இருக்கக்கூடாது.

கூட்டுறவு முயற்சியானது அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்ட ஓர் இயக்கமாகும். கட்சி வேறுபாடுகளுக்கு அதில் எவ்வித இடமும் கிடையாது. இந்தியாவிலுள்ள மாநிலங்களில் கடந்த இருபது ஆண்டுகளாக இருந்து வந்த சூழ்நிலை இப்போது மாறிவிட்டது.

பல்வேறு அரசியல் கட்சிகள் மாநிலங்களில் இப்போது ஆட்சி புரிகின்றன. இது மிகப்பெரிய மாறுதலாகும். அரசியல் கட்சிகளின் செல்வாக்கைக் கூட்டுறவுத் துறை பெற்றால் அதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆனால் அரசியல் செல்வாக்கைக் கூட்டுறவாளர்கள் தங்கள் சொந்த நலனுக்குப் பயன்படுத்துவதுதான் கூடாது. கூட்டுறவில் தங்கள் தவறுகளை மறைக்க அரசியல் கட்சிச் செல்வாக்கை எவரும் பயன்படுத்தக்கூடாது. அரசியலுக்கு அப்பாற்பட்டதாக இயக்கம் விளங்கவேண்டும். இதில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்களுடைய சொந்த நலத்தை முன்வைக்காமல் பிறர் நலத்தைக் கருதிப் பாடுபடவேண்டும். இந்த மனப்பக்குவம் ஏற்பட்டால் ஜனநாயகம் சிறப்புற்று வளர்ந்தோங்கும்; சமூகம் முழுதும் தோழமை வளரும். பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூட்டுறவுத்துறையில் ஈடுபட்டுப் பாடுபடுவதன் மூலம் தங்களிடையேயுள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையுடன் பொதுப்பணிக்குச் சேவை புரிந்தவர்களாகிறார்கள்.

"கூட்டுறவுத்துறை நன்கு வளர்ந்திருக்கிறது" "இயக்கத்தில் எல்லாம் சரியாய் நடக்கிறது" என்று மனத் திருப்தியடைவதில் பயனில்லை. இயக்கத்தில் சங்கங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ள அளவுக்கு அவைகளில் ஏற்றம் காணப்படவில்லை. கூட்டுறவுத்துறையில் போதுமான அளவுக்கு மக்களிடையே நம்பிக்கை வளரவில்லை. "எங்களுக்கு எங்கே சங்கத்தில் இடம் கிடைக்கப் போகிறது?" "நம்மை யார் கவனிப்பார்கள்!" என்பன போன்ற எண்ணங்கள் இயக்கத்தில் ஈடுபட்டுள்ள மக்களிடையே ஏற்பட்டு வருகின்றன. கூட்டுறவியக்கத்தின் மீது மக்களின் ஆர்வத்தைக் குன்றச் செய்யும் இவைபோன்ற அவநம்பிக்கை எண்ணங்கள் முழுதுமாக நீங்கவேண்டும். அதைச்செய்ய வேண்டியது கூட்டுறவாளர்களின் தலையாய கடமையாகும்.

கூட்டுறவுச் சங்கத்தில் குடும்பத்துக்கு ஒருவர் வீதமாவது அங்கத்தினராய்ச் சேர வேண்டும். இந்த வகையில் இயக்கம் வளர்ந்தோங்கப் பாடுபடவேணுமாய் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். சமுதாயத்தில் தனி உடைமைக்கும், பொது உடைமைக்கும் மையமான ஒரு தங்குமிடமாகக் கூட்டுறவியக்கம் உருவாகியுள்ளது.

சமூக அமைதிக்கும் பொருளாதார நீதிக்கும் பயன்படும் கூட்டுறவு நமது நாட்டில் நன்கு பரவ வேண்டும்; அதன் முழுப்பயனையும் அனைவரும் அடையவேண்டும். நல்ல ஆர்வத்தோடு இந்த இயக்கத்தில் யாவரும் பணியாற்றினால் மக்களின் பொருளாதாரம் மேம்பாடடையும். நாடும் முன்னேற்றமடையும். கூட்டுறவே நாட்டுயர்வு!

# அரசு அலுவலர்களுக்குப் புதிய சலுகைகள்!

* 1-10-1979 முதல், காவல் துறையினர் உட்பட எல்லா அரசு ஊழியர்கள், பள்ளி ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள் ஆகிய தமிழ்நாடு அரசின்கீழ் வரும் அலுவலர்கள் அனைவருக்கும், அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும். 1979 ஏப்ரல் மாதம் அளிக்கப் பட்டதைப்போன்று இந்த அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூ. 6 முதல் ரூ. 30 வரையில் அமையும். கிராம அலுவலர்களுக்கும் ஏற்ற முறையில் 1-10-79 முதல், உயர்வு அளிக்கப்படும். ஓய்வு ஊதியம் பெறுபவர்களுக்கும் தக்க உயர்வு அளிக்கப்படும்.

* அலுவலர் சங்கங்கள், ஊதியக் குழுவின் அறிக்கையின் மீது காணும் முரண்பாடுகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை தருவதற்கான திரு சி. வி. ஆர். பணிக்கர் அவர்களை ஒருவர் குழுவாக அரசு நியமித்துள்ளது. ஊதியக்குழு அறிக்கையையும் அலுவலர்கள் சங்கங்களின் கோரிக்கைகளையும் விரிவாக ஆராய்ந்து அரசுக்கு அவர் அறிக்கை தருவார்.

* மத்திய அரசு அண்மையில் அறிவித்துள்ளவாறு ஓய்வு ஊதியம் அறிவிப்பதற்கான விதிமுறைகள் அலுவலர்கட்கு சலுகை தரும் முறையில் 1-10-79 முதல் மாற்றியமைக்கப்படும்.

* தற்போது வீட்டு வாடகைப்படி ஏதும் பெறாத கிராமப்பகுதிகளில் பணிபுரியும் அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள் ஆகியோர்க்கு கிராமப்பணி ஊக்கப்படியாக மாதமொன்றுக்கு ரூ. 10/- அளிக்கப்படும். இது ஒரு புதிய சலுகையாகும்.

* 1-1-1974 முதல் செயல்பட்டுவந்த குடும்ப பயன் திட்டத்தின்படி மாதமொன்றுக்கு ரூ. 10 வீதம் பணம் செலுத்தி, 30 ஆண்டுக் காலத்தின் பின் ரூ. 7,200 வரை பெறுவதற்கான திட்டம், இடையில் 1975ல் கைவிடப் பட்டது. அரசு இதனை மீண்டும் செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இதன்படி மாதமொன்றுக்கு ரூ. 10 வீதம் அரசு அலுவலர் செலுத்தி, 30 ஆண்டுகள் ஆனபின் ரூ. 10,000/- பெறலாம். இதில் அலுவலர்கள் தங்கள் விருப்பப்படி சேரலாம்.

* ஏற்கெனவே அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளன்று அறிவிக்கப்பட்டபடி, காவல் துறையினர், தீயணைப்புத் துறையினர் ஆகியோருக்கு மாதமொன்றுக்கு ரூ. 20/- வீதம் (Risk Allowance) இடையூறுப்படி 1-10-79 முதல் வழங்கப்படும். காவலர் முதல், ஆய்வாளர் உள்ளிட்டவர்களுக்கு இது அளிக்கப்படும்.

* அலுவலர் சங்கங்கள் அரசின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டிய குறைகளை Joint Civil Service Council மூலம் கலந்து பேசுவதற்கு தற்போதுள்ள வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்வதன் மூலம், பற்பல குறைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.



## கூட்டுறவுக் கோள்கைகள்

* அனைவரும் உறுப்பினராகலாம்
* மக்களாட்சி நிருவாகம்
* முதலீட்டுக்கு அளவான பயன்
* உபரித் தொகையில் நியாயமான பங்கு
* கூட்டுறவுக் கல்வி
* கூட்டுறவு நிறுவனங்களிடையே கூட்டுறவு

முன்பக்க அட்டையில்.... வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி வீழ் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் காரியாபட்டியில் நடைபெற்ற விழா ஒன்றின்போது கூட்டுறவுக் கடன்களை வழங்கினார்.

# மலரட்டும் மக்கள் இயக்கம்



"கூட்டுறவு என்பது வெறும் வழிமுறையல்ல. அது இதயத்தைத் தொடும் சக்தி. தன்னிறைவும் சேவையும் வெளிப்படும் சாதனம்", என்றார் மால்கம் டார்லிங் என்ற கூட்டுறவுச் சிந்தனையாளர்.

''கூட்டுறவு என்பது தன்னுதவியைப் பயனுள்ளதாகச் செய்யக்கூடிய ஒரு சிறந்த அமைப்பு'' என்றார் ஹோரஸ் பிளங்கெட்.

கூட்டுறவியக்கம் ஒரு பொருளாதார இயக்கம் மட்டுமல்ல; அறநெறி சார்ந்த ஓர் இயக்கமுமாகும் என்று, அண்ணல் காந்தி அடிகள் கருதினார்.

கூட்டுறவென்பது பொதுவுடைமைக்கும் தனி உடைமைக்கும் இடையே அமைக்கப் பட்ட வலிமையான பாலம் என்று பேரறிஞர் அண்ணா விளக்கமளித்துள்ளார்.

தனி மனித சுதந்திரமும் ஒருவருக்கு ஒருவர் சார்ந்து வாழும் இயல்பும் சமூக வாழ்வில் மிகவும் முக்கியமானது. இதன் அடிப்படையில் ''எல்லோரும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவரும் எல்லோருக்கும்'' என்ற பொதுநோக்கில் ஒரு குறிக்கோளை அடையப் பயணமாகும்போது ஏற்படும் இணைப்பே கூட்டுறவு.

கூட்டுறவு எண்ணம் அரும்பு விட்டு 100 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. தொன்மை மிகுந்த இந்த இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியில் பல மாற்றங்களும் முன்னேற்றங்களும் தோன்றின. மக்களின் வாழ்வில் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு மட்டும் தீர்வு காண்பதோடு நில்லாமல், எல்லா முனைகளிலும் எளியவரைத் தாக்கும் பொல்லாங்கினை எதிர்த்துப் போராடும் கருவியாக, போர்க்கலனாக, மறுமலர்ச்சி இயக்கமாக, கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக இந்த இயக்கம் அமைதிப் புரட்சி செய்து வந்துள்ளது.

கல்தோன்றி மண்தோன்றாக் காலமுதற் கொண்டே சிறந்த பண்பாட்டோடும் நாகரிக முதிர்ச்சியோடும் இருந்து பல வழிகளிலும் வழி காட்டியது தமிழகம். இந்தியக்கூட்டுறவியக்க வரலாற்றுக்கு 75 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த வரலாற்றின் துவக்கமே முதல்

கூட்டுறவுச் சங்கம் உதயமான தமிழகந்தான் என்பதை மறந்து விடக்கூடாது. அறிஞர் அண்ணா பிறந்த செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருருக்கு அந்தப் பெருமையுண்டு. எனவே, கூட்டுறவியக்கத்தின் வரலாறு தமிழகத்திலிருந்துதான் துவங்குகிறது.

எளிய விவசாயிகளின் கடன் சுமையினைக் குறைக்கக் கைகொடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட இயக்கம் இன்று எல்லாத்துறைகளிலும் பரவியுள்ளது. வாழ்க்கைப் போராட்டத்தில் எங்கெல்லாம் மனிதன் சிக்கித்திணருகின்றானோ அங்கெல்லாம் கூட்டுறவின் தேவை உணரப்பட்டு எங்கும் எதிலும் கூட்டுறவு என்ற இலட்சிய உணர்வு எதிரொலிக்கிறது.

எளியவரின் இன்னல் தீர்க்கும் உதயகீதமாக உருவெடுத்த இயக்கம் இன்று சமூகப் பொருளாதாரச் சிக்கல் நீக்கி, சமதர்ம சக வாழ்வுக்கு இட்டுச் செல்லும் இலட்சிய கீதமாக மலர்ந்துள்ளது.

இந்த இலட்சியம் வடிவம் பெறப்போராடிய பழம்பெரும் கூட்டுறவாளர்கள், அவர்கள் மேற்கொண்ட அரிய முயற்சிகளை இன்று நாம் நினைவு கூர்கின்றோம். குதிரையிலே சவாரி செய்து, கூடாரம் அடித்து, மக்களைச் சந்தித்துச் சங்கங்கள் அமைத்த அந்த மேதைகளுக்கு மரியாதை செலுத்துகிறோம். அவர்களது பணிகள் நமது நினைவில் நீங்காத இடம் பெற்றவையாகும்.

அவர்கள் நடந்த பாதையில் கடந்த 75 ஆண்டுகளாகத் தமிழகம் தலை நிமிர்ந்து வந்திருக்கிறது. கூட்டுறவியக்கத்துக்கு வழி காட்டியது மட்டுமன்றி, தனக்கெனத் தனிச் சிறப்பான இடத்தையும் இன்று தமிழகம் பெற்றிருக்கின்றது.

தமிழகத்தில் உள்ள சுமார் 53 இலட்சம் நில உடைமைகளில் சுமார் 40 இலட்சம் நில உடைமைகள், அதாவது 76 சதவீதம் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பயனடைகின்றன. தமிழகத்தில் சிறிய மற்றும் மிகச் சிறிய உழவர் நில உடைமையாளர்கள் 42 இலட்சம் பேர் உள்ளனர். அவர்களில் 30 இலட்சம் உடைமையாளர்கள், அதாவது 73 சதவீதத்தினர் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து பயன் பெற்று வருகிறார்கள்.

அவர்களுக்கு வேளாண்மைத் தொழிலுக்காக 1979-80-ல் சுமார் 160 கோடி ரூபாய் கடனாக வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உழவர் பெருமக்களுக்குக் கடன் வசதி, வேளாண்மைத் தேவைக்கு உரம் போன்ற பொருட்கள், விற்பனை வசதி, இன்றியமையாப் பண்டங்கள் வழங்குதல் போன்றவற்றை ஒரு இடத்தில் வழங்குவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு 26 உழவர் பணிக்கூட்டுறவுச் சங்கங்கள் தமிழகத்தில் செயல்பட்டு வருகின்றன. இவைகள் உழவர் பெருமக்களின் உற்ற தோழர்களாக இருந்து கிராம மட்டத்தில் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றன.

வேளாண்மைத்துறையின் சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்படி அளிக்கப்பட வேண்டிய கடன் வசதியை மத்திய கூட்டுறவு வங்கிகள் கவனித்து வருகின்றன. சிறிய மிகச் சிறிய உழவர்கள் நிலமற்ற குத்தகைதாரர்கள் உற்பத்தியை அதிகரித்து முன்னேறவும் தீவிரமாக, உழவுத் தொழிலில் ஈடுபடவும் துணைத் தொழில்களை நடத்தி, வருமானத்தைப் பெருக்கவும் இது உதவுகிறது.





மக்கள் சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை, கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். இதற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும். சுயநலத்தை ஒதுக்கி வைத்துவிட வேண்டும். பலருடைய நன்மை ஒன்றே கருதி வாழ்வில் இறங்க வேண்டும்.

—தந்தை பெரியார்

கூட்டுறவுச் சங்கங்கள் நலிந்தபிரிவினரின் தேவைகளைக் குறித்து அதிக அக்கறை செலுத்தி வருகின்றன. ரிசர்வ் வங்கியின் கருத்துப்படி மொத்தக் கடன் தொகையில் 20 சதம் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டும். ஆனால் சொந்தமாகவோ குத்தகையாகவோ சாகுபடி செய்கின்ற நலிந்த பிரிவினருக்கு, கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த ஆண்டு சுமார் 62 கோடி ரூபாய் (49 சதம்) கடன் வழங்கியுள்ளது. இது ரிசர்வ் வங்கி வகுத்துள்ள அளவைவிட இரு மடங்குக்கு மேற்பட்டதாகும். இதை நடப்பு ஆண்டில் 54 சதவீதமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மலைவாழ்மக்களின் இருண்ட வாழ்விலே ஒளி ஏற்றவும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் ஒரே இடத்தில் கடன் மற்றும் விற்பனை வசதிகளும் ஒருங்கிணைந்த பணிகளும் செய்யும் பொருட்டுத் தமிழகத்தில் 9 இடங்களில் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. இத்தனை உதவிகளும் கிராம மக்கள் குறிப்பாக உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள உழவர் பெரு மக்களின் நலனுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டதாகும். கிராம மட்டத்தில் உழவர் பெருமக்களுக்குத் தேவையான ஒருங்கிணைந்த பணியினை வழங்குவதற்குக் கிராமக்கூட்டுறவுச் சங்கத்தைத் தவிர வேறு எதுவுமே இல்லை. எனவே கூட்டுறவுச் சங்கத்தின் கடனைத் தவணை தவறாமல் திருப்பிச் செலுத்தி கூட்டுறவுச் சங்கம் தங்களுக்கும் மற்றவர்களுக்கும் தொடர்ந்து பணிபுரிய அவைகளைப் பலப்படுத்த வேண்டிய கடமை விவசாயப் பெரு மக்களுக்கு உள்ளது.

நகரங்களில் வாழும் மக்கள் நுகர்பொருட்களைப் பெறுகின்றபோது கிடைக்கும் வசதிகளைப் போலவே கிராமங்களிலும் பண்டங்களைச் சீராகவும் தரமாகவும், நியாய விலையிலும் வழங்க ஊருக்கோர் அங்காடித்திட்டம் 11000 கிராமங்களில் செயல்பட்டு வருகிறது. கிராம மக்கள் தங்கள் தேவைகளைப் பெற

காலத்தை வீணாக்கிக் கால்கடுக்க நடந்து செல்ல வேண்டிய குறையை நீக்கியது இந்தப் புரட்சித் திட்டம்.

சமுதாயத்தில் நலிந்த பிரிவினரான தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர், உப்பளத் தொழிலாளர்கள், பழங்குடி மக்கள் போன்றவர்களின் நலனைப் பேண கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல்லாயிரம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர். இச்சங்கங்களுக்குப் பங்கு மூலதனம், கடன், உதவித் தொகை அரசுப் பணியாளர்களின் இலவசச் சேவை ஆகியவற்றை வழங்கி அரசு உதவுகின்றது. சைக்கிள் ரிக்ஷாத் தொழிலாளர்கள் தங்களுக்கென வண்டிகளை வைத்துக் கொண்டு சுயவேலை வாய்ப்புப் பெற்று முன்னேறும் பொருட்டு திண்டுக்கல்லிலும் சென்னையிலும் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இல்லாமை என்ற பொல்லாங்கு மறையவேண்டும். எளியோர் ஏற்றம் பெற்று வாழ்வில் புதிய மாற்றம் காண வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளில் பல துறைகளில் கூட்டுறவியக்கம் பணியாற்றுகிறது. கூட்டுறவியக்கம் படராத இடமில்லை. அதன் பணிகள் தொடராத இடமுமில்லை.

கடந்த 75 ஆண்டுகளாகத் தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து சீராக வளர்ந்தோங்கியுள்ளது. ஆற்றி வந்த பணிகளையும் அடைந்த வெற்றிகளையும் எண்ணிப் பூரிக்கும் நேரத்தில் வரும் காலத்தில் ஆற்றவேண்டிய பணிகள் ஏராளம் என்பது நம் கண்முன் தெரிகின்றது. வாழ்வின் அடிமட்டத்திலுள்ள ஆதரவற்ற நலிவுற்றோரின் நலம் காக்கும் கேடயமாக இருப்பது கூட்டுறவு இயக்கந்தான். அந்தப் பெரும் பணியில் நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் நிரம்ப உண்டு. அந்த உணர்வை மக்கள் மன்றத்திலே பரப்பி கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபாட்டை வளர்த்து தொடர்ந்து பணிபுரிய பலப்படுத்த வேண்டும்.

நாணயத்தை அடித்தளமாகக் கொண்டு கூட்டுறவுக் கொள்கையில் நம்பிக்கையுடன் பணியாற்றினால், மாபெரும் சாதனைகளைக் குவிக்க முடியும். மக்களுக்காக மக்களால் உருவாக்கப்பட்டு மக்களால் நிர்வகிக்கப்படும் இந்த மக்கள் இயக்கம் மலர்ந்து மணம் பரப்பி எல்லோருக்கும் எல்லாம் என்று இருப்பதான பொன்னகரத்திற்கு வழி நடத்திச் செல்ல ஒன்றுபட்டுப் பணி புரிய வேண்டியது அனைவரது கடமையாகும்.

''வெல்க கூட்டுறவு.''



கூட்டுறவில் உறுப்பினர்கள் நேர்மையாக இருக்க வேண்டும். கூட்டுறவின் சிறப்பை நன்கு அறிந்திருக்க வேண்டும். முன்னேற்றம் காணக் குறிப்பிட்ட இலக்கு இருக்கவேண்டும். கூட்டுறவு முயற்சியின் வெற்றிக்கு இதுதான் ரகசியம்.

உறுப்பினர்களின் நாணயத்தைப் பொறுத்துத்தான் கூட்டுறவின் வெற்றி அமைகிறது. இவ்வியக்கம் சங்கங்களின் எண்ணிக்கையைப் பொறுத்ததல்ல; உறுப்பினர்களின் நேர்மையின் அடிப்படையில் அமைகிறது. —காந்தியடிகள்

கூட்டுறவோடு, கூட்டுறவியக்கத்தோடு,
இந்தியாவைப் பிணைக்க வேண்டும் என்பதே
என்னுடைய நோக்கம். அதுவே
ஊர்தோறும் அடிப்படைச் செயலாக
அமைய வேண்டும். இந்தியாவின் பொது
எண்ணமே கூட்டுறவு அணுகுமுறையில்
இருக்கவேண்டும்.

நமது உழவர்களை விஞ்ஞான முறையில் வேளாண்மைத் தொழில் செய்ய ஈடுபடுத்த வேண்டும். அதை நாம் எவ்வாறு செய்வது? கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக இதை மிக எளிதாகச் செய்ய முடியும். வேறு அணுகுமுறை எதுவும் எனக்குத் தோன்றவில்லை.

—ஜவகர்லால் நேரு



# கூட்டுறவுச் செய்திகள்!

தற்போது தமிழகத்தில் 116 பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்படுகின்றன. அவை விற்பனை செய்து தந்த வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் மதிப்பு 1973-74-ல், ரூ. 1164.71 இலட்சமாக இருந்தது. 1977-78-ல், ரூ. 3,376.48 இலட்சமாக உயர்ந்தது. இந்த வளர்ச்சியின் அளவு 190 சதவீதம். அவை வேளாண்மைக்குத் தேவையான பொருட்களை 1977-78-ல் ரூபாய் 927.61 இலட்சத்துக்கு வழங்கின.

116 பிரதமக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் கோவை மாவட்டத்தில்தான் அதிக எண்ணிக்கை (15) உள்ளன. அடுத்தபடியாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள 5 விற்பனைச் சங்கங்களும், ரூ.1141.72 இலட்சம் மதிப்புள்ள வேளாண்மைப் பொருட்களை விற்பனை செய்துள்ளன. இது மாநிலத்திலுள்ள விற்பனைச் சங்கங்கள் செய்த மொத்த விற்பனையில் 34 சதம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு அடுத்த இடத்தைப் பெறுவது இரண்டே விற்பனைச் சங்கங்கள் உள்ள நீலகிரி மாவட்டமாகும். இவை விற்பனை செய்துள்ள பொருட்களின் மதிப்பு ரூ. 656.72 இலட்சங்கள் ஆகும். (19 சதம்). 1977-78 சேலம் மாவட்டத்திலுள்ள சங்கங்கள் அதிக அளவான ரூ. 14.24 இலட்சம் ஆதாயம் பெற்றுள்ளன. அதற்கடுத்தபடியாக நீலகிரி மாவட்டம் ரூ. 12.90 இலட்சம் ஆதாயம் பெற்றுள்ளது.

## கூட்டுறவு நகர வங்கிகள்

கடந்த 10 ஆண்டுகளில் கூட்டுறவு நகர வங்கிகள் சீரான முன்னேற்றமடைந்துள்ளன. அவை 1977-78-ல் 131 ஆகக் குறைந்தன. அவற்றின் உறுப்பினர் தொகை ரூ. 10.82 இலட்சத்திலிருந்து 13.66 இலட்சமாக அதிகரித்துள்ளது. பங்கு மூலதனமும் ரூ. 222 இலட்சத்திலிருந்து, ரூ. 461 இலட்சமாக உயர்ந்துள்ளது. அவை வழங்கிய குறுகிய கால, நடுத்தரக்காலக் கடன்கள் ரூபாய் 1335 இலட்சத்திலிருந்து ரூ. 4838 இலட்சமாகப் பெருகிற்று. தமிழகத்தின் கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கும் நகையீட்டுக் கடனில் பெரும்பகுதி (52.93 சதம்) நகரவங்கிகளால் வழங்கப்படுகிறது. இந்தியாவில் உள்ள 1407 நகர வங்கிகளில் தமிழகம் நான்காவது இடம் பெறுகிறது.

## நீண்ட காலக் கடன்கள்

உழவர்களுக்குத் தேவையான நீண்ட காலக் கடன்களை 223 பிரதம நிலவள வங்கிகள் வழங்குகின்றன. இது 1968-69-ல் 106ஆக இருந்தது. இவற்றில் சேர்ந்துள்ள உறுப்பினர்கள் கடந்த பத்து ஆண்டுகளில் கணிசமாக உள்ளது. இவை வழங்கிய அதிக அளவு கடன்கள் (1970-71) ரூ. 2431 இலட்சம் ஆகும். 1977-78-ல் வழங்கிய கடனளவு ரூ. 1207 இலட்சமாகும்.

## உடல் நலக் கூட்டுறவுகள்

நீலகிரி மாவட்டத்தில் ஒன்றும், இராமநாதபுரத்தில் ஒன்றுமாக மொத்தம் இரண்டு உடல் நலக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. 1977-78-ன் போது, உறுப்பினர்களுக்கும், இதரர்களுக்குமாக மொத்தம் 6392 பேருக்கு இவை மருத்துவ வசதிகளை வழங்கின.

## நூற்பாலைகள்

31—12—78-ன்படி தமிழகத்தில் 13 கூட்டுறவு நூற்பாலைகள் உள்ளன. (மதுரை யில் மிசரேர் கூட்டுறவு நூற்பாலை 1977- ஆகஸ்டு முதல் இயங்கி வருகிறது) 1972-73-ல் 12 நூற்பாலைகளில் 9 நூற்பாலைகள் ரூ. 48.22 இலட்சம் ரூபாயை இலாபமாகச் சம்பாதித்தன. 1975-76-ல் 12 கூட்டுறவு நூற்பாலைகளும் ரூ. 275.50 இலட்சம் ரூபாய் அளவுக்கு நஷ்டத்தில் செயல்பட்டன. ஆனால், 31-12-78-ல் இவை அனைத்தும் இலாபத்தை ஈட்டின. சேலம் கூட்டுறவு நூற்பாலை அதிக அளவு நூலை உற்பத்தி செய்து ரூபாய் 32.77 இலட்சத்தை ஆதாயமாகப்பெற்றது.

## கூட்டுறவுப் பயிற்சி

தமிழ்நாட்டில் காஞ்சீபுரம், தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர், வேலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் சென்னையிலுமாக 7 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அரசுத்துறை சாராதவர்களுக்கும், இளநிலையினருக்கும் இவை கூட்டுறவுப் பயிற்சியை அளித்து வருகின்றன. 1960-61-முதல் 1977-78 வரை இவை 31144 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளன. 1973-74-ல் 3498 பேருக்கு இது உச்ச அளவு பயிற்சி அளித்திருந்தது.

இது தவிர தமிழ்நாடு அரசுப் பணித் தேர்வு ஆணையகம் தேர்வு செய்யும் நபர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக கூட்டுறவுப் பயிற்சிக்கழகமும் மத்திய பயிற்சி அளிப்பதற்காகக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியும் சென்னையில் உள்ளன. இந்தியாவிலே ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள கட்டடத்தைக்கொண்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி சென்னையில் உள்ளதாகும்.







# வேளாண்மைக்குக் கூட்டுறவுக் கடன்

டி. ஏ. எஸ். பிரகாசம், ஐ.ஏ.எஸ்.,
கூட்டுறவுப் பதிவாளர்

கிராமப் பொருளாதாரத்தின் அடிப்படை வேளாண்மையே. பல பொருளாதாரத் துறைகளில் கூட்டுறவு முறை பின் பற்றப்பட்டாலும், வேளாண்மைத்தொழிலுக்கும் அதன் வளர்ச்சிக்கும் கூட்டுறவு இயக்கம் ஆற்றிவரும் பணி தனிச் சிறப்புடையதாகும்.

தமிழ்நாட்டில் மூன்று அல்லது நான்கு கிராமங்களுக்கு ஒன்று வீதம் சுமார் 4700 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வருகின்றன. இரசாயன உரம், பூச்சிக்கொல்லி மருந்து போன்ற இடு பொருள்களையும் இதர சாகுபடிச் செலவிற்குத் தேவைப்படும் ரொக்கத்தையும் ஓராண்டுக்குள் திருப்பிச்செலுத்த வேண்டிய குறுகிய காலக்கடன்களாகக் கிராமக்கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. மேலும், உழவு மாடு வாங்கவும், மாட்டு வண்டி வாங்கவும், கறவை மாடுகள் வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற வேளாண்மைத்தொழில்களுக்காகவும் மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய மத்திய காலக் கடன்கள் வழங்குகின்றன. ஒவ்வொரு வகைப்பயிருக்கும் சாகுபடி செய்யத் தேவைப்படும் உரம் முதலிய இடுபொருள்களும் ரொக்கமும், அந்தப்பயிரின் அறுவடைக் காலத்தையொட்டி கடனைத் திருப்பிச்செலுத்தும் தேதியும் நிர்ணயிக்கப்படுகின்றன. சொத்து ஆதாரமின்றி இன்னொரு உறுப்பினரின் பிணையத்தின் பேரில் (Surety) கடன்கள் வழங்கப்படுகின்றன. சொந்த நிலமில்லாத குத்தகை சாகுபடியாளர்களுக்கும் இந்தக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன.

இந்தக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசின் நிதி உதவியுடன் சுமார் 3,000 கிடங்குகள் கட்டியுள்ளன. இரசாயன உரத்தை முன்கூட்டி இருப்பு வைத்து, பருவத்தில் வழங்குவதற்கு இவை பெரிதும் உதவுகின்றன. இரசாயன உரத்தைக் கடனின் ஒரு பகுதியாக வழங்குவதன்மூலம் பசுமைப் புரட்சிக்கு இக்கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் துணையாக இருக்கின்றன.

சென்ற ஆண்டுக்கு முந்தைய ஆண்டு, அதாவது 1977-78-ல், 120 கோடி ரூபாய் அளவிற்கு இந்தச் சங்கங்களால் பயிர்ச்சாகுபடிக் கடன்கள் வழங்கப்பட்டன. இது தமிழ்நாட்டு விவசாயிகளின் மொத்த சாகுபடிக் கடன்தேவையில் 60 சதவீதம் என்று கணக்கிடப்படுகிறது. கடன் நிவாரணச் சட்டத்தின் காரணமாக, தனியார்களிடமிருந்து கிடைத்து வந்த கடன் வசதி வெகுவாகக் குறைந்துவிட்டதால், இந்தக் குறையை முடிந்த அளவு சரிக்கட்டும் வகையில் 900-க்கு மேற்பட்ட கிராமக்கூட்டுறவுச்சங்கங்கள் நகையீட்டுக் கடன்கள் வழங்க முற்பட்டுள்ளன. இந்தச் சங்கங்களும் கூட்டுறவு மத்திய வங்கிக் கிளைகளும், நகர வங்கிகளும் சேர்ந்து சுமார் 79கோடி ரூபாய் அளவிற்குச் சென்றாண்டு நகையீட்டுக் கடன்கள் வழங்கின. விளைபொருளின் விலை சாதகமாக இல்லாத சமயத்தில் கூட்டுறவுச் சங்கக் கிடங்கில் ஈடு வைத்துக் கடன் பெற்று, நல்ல விலை கிடைக்கும் நேரத்தில் அதை விற்கும் வசதியும் கூட்டுறவுச் சங்கத்தினால் செய்யப்படுகிறது. மேலும், இன்றியமையாத நுகர் பொருட்களை இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்கின்றன. சிமெண்டு, மண்ணெண்ணெய் போன்ற கட்டுப்பாடான பொருள்களும் விநியோகிக்கப்படுகின்றன.

இப்படி எல்லா வகையிலும் விவசாயிக்கு உதவக்கூடிய, கிராமத்திலேயே இருக்கக்கூடிய ஒரே நிறுவனம் கிராமக் கூட்டுறவுச் சங்கம்தான். அதிக வட்டி வாங்கும் வட்டிக் கடைக்காரர்களுக்கும், சிறு வியாபாரிகளுக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சி வருத்தத்தை அளிக்கும் என்பதில் ஐயமில்லை. இடைத்தரகை நீக்கி, மக்களுக்கு நேரடிப் பயன் கிடைக்கச் செய்வதே கூட்டுறவுச் சங்கத்தின் நோக்கமாகும். கிராம மக்கள் தங்கள் தேவைகளை உரிய நேரத்தில், நியாயமான விலையில் கிராமத்திலேயே பெற முடிகிறது. விவசாயிகளே கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் சொந்தக்காரர்கள். அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் குழு, சங்கத்தின் நிர்வாகம் செய்கிறது. ஆகையால், விவசாயிகளின் தேவைகளையெல்லாம் முறைப்படி நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது.

பயிர் ஈட்டுறுதித் (Crop insurance) திட்டம் ஒன்று 10 மாவட்டங்களில் உள்ள 17 வட்டங்களில் அடுத்த நெற்பயிருக்குக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தப்பட இருக்கிறது. கிராமப் பொருளாதாரத்தில் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் இன்றியமையாத நிலையை உணர்ந்துதான் பல தன்னலமற்ற சமூகத் தலைவர்கள் கூட்டுறவு இயக்கத்தைப் பாடுபட்டு வளர்த்துள்ளனர். அரசும் பல வகைகளில் இதன் வளர்ச்சிக்கு உதவி செய்து வருகிறது.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி நிதிகளைப்பெற்று கடன் வழங்குகின்றன என்பதைப்பற்றித் தெரிந்து கொள்வது மிகவும்

முக்கியம். விவசாய உறுப்பினர்கள் தாங்கள் பெறுகின்ற கடனுக்கு, சிறு விவசாயியாக இருந்தால் கடனில் 5 சதவீதமும், மற்ற விவசாயியாக இருந்தால் 10 சதவீதமும் சங்கத்தில் பங்குத் தொகையாகச் செலுத்தவேண்டும். கடனின் ரொக்கப்பகுதியில் 2 சதவீதத்தைச் சிக்கன நிதியாகச் செலுத்த வேண்டும். கூட்டுறவுச் சங்கம் உறுப்பினர்களிடமிருந்து இதர இட்டு வைப்புகளும் பெறுகின்றது. இவ்வாறு கூடுகின்ற நிதியோடு மாவட்ட மத்திய வங்கியில் இருந்து கடன் பெற்று, உறுப்பினர்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது.

மாவட்ட மத்திய வங்கிகள் தாங்கள் பொதுமக்களிடமிருந்து பெறுகின்ற இட்டு வைப்புகளில் இருந்தும், மாநிலக் கூட்டுறவு வங்கி மூலம் பெறுகின்ற கடன் தொகை மூலமும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் வழங்குகின்றன. மாநிலக் கூட்டுறவு வங்கி ரிசர்வ் வங்கியில் இருந்து பெறுகின்ற கடனோடு, பொதுமக்களிடமிருந்து பெற்றுள்ள இட்டு வைப்புகளையும் சேர்த்து மத்திய வங்கிகளுக்குக் கடன் வழங்குகிறது. சராசரியாகப் பார்க்கும்போது, விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் பயிர்ச் சாகுபடிக் கடனில் 50 சதவீதத்திற்கும் குறைவாக ரிசர்வ் வங்கியில் இருந்து கிடைக்கிறது.

மற்ற பகுதி விவசாய உறுப்பினர்களின் பங்குத் தொகை, இட்டு வைப்புகள், மத்திய வங்கிகள், மாநில வங்கி ஆகியவற்றிலுள்ள இட்டு வைப்புகளைக் கொண்டு அளிக்கப்படுவதாகும். மற்ற எந்த வங்கியையும் போலத்தான் கிராமக் கூட்டுறவுச் சங்கமும் இயங்குகிறது. அது, தான் உயர் நிலை வங்கியில் இருந்து பெற்ற கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த வேண்டும். உறுப்பினர்களுக்குக் கொடுக்கும் கடன்களை உரிய காலத்தில் வசூலித்துத் தான் தன்னுடைய நாணயத்தை அது காப்பாற்றிக் கொள்ள முடியும். இதே நிலைமைதான் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கும், மாநிலக் கூட்டுறவு வங்கிக்கும் உள்ளது. கடன் வசூலில் ஓரளவுக்குச் சுணக்கம் ஏற்பட்டால் இவை தங்கள் சொந்த நிதியைக் கொண்டு தாங்கிக் கொள்ள முடியும். பெருத்த அளவிற்குச் சுணக்கம் ஏற்பட்டால் மேல்நிலை வங்கிகளுக்குக் கடனை உரிய காலத்தில் செலுத்த முடியாமல் போய் மேற்கொண்டு கடன் பெற்று விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் சக்தி இல்லாத நிலை ஏற்பட்டு விடும். இதனால் தான் கிராமக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் உரிய காலத்தில் கடனைச் செலுத்த வேண்டுமென்பது அவசியமாகிறது.

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் விளைச்சல் ஆறணாவுக்குக் குறைந்து விட்டால், அந்தப் பயிருக்காகப் பெற்ற குறுகிய காலக் கடனை அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் மத்திய காலக் கடனாக மாற்றும் வசதி ரிசர்வ் வங்கியின் உதவியுடன் அளிக்கப்படுகிறது. தொடர்ந்து இரண்டாவது ஆண்டிலும் விளைச்சல் பாதிக்கப்பட்டால், மேற்படி கடன் 5 ஆண்டுக் கடனாக மாற்றப்படுவதோடு, இரண்டாவது பெற்ற குறுகிய காலக் கடனும் மூன்றாண்டுக் கடனாக மாற்றப்படுகிறது.

சென்ற சில ஆண்டுகளில் இவ்விதம் இயற்கைச் சீற்றத்தினால் தமிழ்நாட்டில் பல பகுதிகள் பாதிக்கப்பட்டு, மேற்கண்ட வகையில் குறுகிய காலக்கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்த வசதி இருந்தும் தவணை தவறிய கடன்களின் நிலுவை அண்மைக் காலத்தில் அதிகரித்து வந்துள்ளது. விவசாயிகளின் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அமைக்கப்பட்ட உயர் மட்டக்குழு விவசாயிகளின் கடன் பிரச்சினையையும், பரிசீலித்து சில பரிந்துரைகள் செய்தது. இந்தப் பரிந்துரைகளைப் பரிசீலித்து தமிழக அரசு ஏறக்குறைய 27 கோடி அளவிற்குக் கூட்டுறவுச் சங்கக் கடன் பெற்ற உறுப்பினர்களுக்கு மானியம் அளித்துள்ளது. முக்கியமாக, வறட்சி போன்ற இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு, ஒரு விவசாயிக்கு மாற்றியமைக்கப்பட்ட மத்திய காலக் கடன்கள் இரண்டு இருந்தால் மூன்று ஆண்டுகளிலும், மூன்று இருந்தால் ஐந்து ஆண்டுகளிலும், நான்கு இருந்தால் ஆறு ஆண்டுகளிலும் அவற்றைத் திருப்பிச் செலுத்தும் வகையில் அக்கடன்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடன்களில் உரிய தேதி தாண்டிய தவணைத் தொகைகளும் சேர்த்து ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. 30-6-78 அன்று இந்தக் கடன்களின் மீது செலுத்தப்பட வேண்டியிருந்த வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. 1978-79-ல் கட்ட வேண்டிய தவணைத்தொகைகள் ஒத்தி வைக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்ட கடனின் முதல் தவணை 1979-80-ல் செலுத்தப்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக, 4 மத்திய கால மாற்றுக்கடன்களை உடைய ஒரு சிறு விவசாயி மீதம் கட்ட வேண்டியுள்ள மொத்தம் 2997 ரூபாயை 1977-78- இல் இருந்து மூன்று ஆண்டுகளில் முறையே ரூ. 1028; ரூ. 1027, ரூபாய் 942 என்று திருப்பிச் செலுத்த வேண்டி இருப்பதற்கு பதிலாக, 1979-80-ல் இருந்து 6 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு ரூ. 500 வீதம் செலுத்தினால் போதும். இதனால் ஒவ்வொரு ஆண்டும் கட்ட வேண்டிய தவணைத் தொகை குறைந்து விவசாயிக்கு நிவாரணம் கிடைக்கிறது. இந்த வகையில் நிவாரணம் அளிப்பதற்காகத் தமிழக அரசு மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குச் சுமார் 10 கோடி ரூபாய் அளவிற்குக் கடன் உதவி அளிக்க வேண்டியுள்ளது.

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேற்கண்ட வகையில் அரசு உதவி அளித்துள்ளது. பாதிக்கப்படாத விவசாயிகள் தங்கள் கடன்களை திருப்பிச் செலுத்தாமல் இருக்கிறார்கள். 1977-78-ல் சாகுபடிக் கடன் பெற்றவர்களில் பலர் 1978-79-ல் விளைச்சல் பாதிக்கப்படாமல் இருந்தும் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. இவர்கள் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கு எந்தவித நியாயமுமில்லை. பெருந்தொகையை அதிக நாட்கள் வேண்டுமென்றே திருப்பிக்கட்டாமல் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்கள் கடமையை உணர்ந்து, உரிய நேரத்தில் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதுதான் முறை. நடவடிக்கை எடுத்து வசூலிக்க வேண்டும் என்றநிலை கூட்டுறவு இயக்கத்திலே தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும். எல்லா உறுப்பினர்களும் கண்காணிப்புடன் ஒத்துழைத்து வசூல் செய்தால், இந்த நிலை தவிர்க்கப்படும். சங்க நிர்வாகக் குழுவினரும் தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பொறுப்பைக் கவனத்துடன் நிறைவேற்றவேண்டும். இதிலே அலட்சியம் இருந்தால் விவசாயிகளுக்குக் கேடயமாக இருக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கம் நலிவடைந்து, விவசாயிகள் கடன் வசதியும் இதர வசதிகளும் இன்றி அவதிப்பட நேரிடும்.

கிராமக் கூட்டுறவுச் சங்க நிர்வாகக் குழுவினரும், உறுப்பினர்களும் மத்திய கூட்டுறவு வங்கி மேற்பார்வையாளர்களும் இதர அலுவலர்களும் நல்ல முறையில் முழு முயற்சி எடுத்து கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியைக் குன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

# பெரியார் மாவட்டம்

டி. வி. வெங்கட்டராமன், ஐ.ஏ.எஸ்.,
ஆணையர் மற்றும் அரசுச் செயலர்,
வருவாய்த்துறை.

பெரிய மாவட்டங்களைச் சீரமைத்து அரசுப் பணிகள் செம்மையாகவும், விரைவாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்கிற தமிழ்நாடு அரசின் தலையாய கொள்கையின் அடிப்படையில், கோவை மாவட்டத்தைப் புனரமைக்க அரசு முடிவெடுத்து, அதற்கான ஆணைகளை 1979ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்களில் வெளியிட்டது. முதல் கட்டமாக, சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்தூன்றிய வரலாற்று நாயகர் தந்தை பெரியார் அவர்களின் நினைவிற்கு அழியாத அஞ்சலி செய்யும் வகையில் தமிழ்நாடு அரசு, புதியதொரு மாவட்டத்தினைப் பெரியார் அவர்களுடைய பெயரில் ''பெரியார் மாவட்டம்'' அவர் பிறந்த ஈரோடு நகரத்தினைத் தலைமையிடமாகக் கொண்டு அமைத்துள்ளது.

புதிய மாவட்டத்தினை அமைக்கும் பொறுப்பு ஒரு தனி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான எல்லாப் பணிகளும் நான்கே மாதங்களில் முடிக்கப்பட்டு 17.9.79-ஆம் நாளன்று ஈரோட்டில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமும் மற்றும் வேறு சில அலுவலகங்களும் செயல்படத் துவங்கியுள்ளன. அரசின் எல்லாத் துறைகளும் இப்புதிய மாவட்டத்தைத் துவங்கும் பணிகளில் ஊக்கத்துடன் ஈடுபட்டு மேலான ஆதரவை அளித்ததன் விளைவாக, இத்துணை குறுகிய காலத்தில் இம்மாவட்டம் மாநிலத்தின் 16-வது மாவட்டமாகச் செயல்பட ஏதுவாயிற்று.

இம்மாவட்டம் பற்றிய சில முக்கியப் புள்ளி விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | பிரிக்கப்படுமுன் கோவை மாவட்டத்தின் மொத்த பரப்பு | 15,673 ச.கி.மீ. |
| 2. | பெரியார் மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு | 8169.17 ச.கி.மீ. |
| 3. | வருவாய்-வளர்ச்சிக் கோட்டங்கள் | 2 (ஈரோடு, கோபி) |
| 4. | மாவட்டத்திலுள்ள மொத்த வட்டங்கள்: | 6 |
| 5. | வளர்ச்சி ஒன்றியங்கள் | 20 |
| 6. | நகராட்சிகள் | 5 |
| 7. | நகரியம் | 1 |
| 8. | பேரூராட்சிகள் | 61 |
| 9. | ஊராட்சிகள் | 346 |
| 10. | கிராமங்கள் | 510 |
| 11. | 1971 மக்கள் கணக்கெடுப் பின்படி மக்கள்தொகை | 17,97,016 (சுமார் 18 இலட்சம்) |
| 12. | தற்போதைய உத்தேச மக்கள் தொகை | சுமார் 20 இலட்சம் |
| 13. | கல்லூரிகள் | 5 |
| 14. | உயர்நிலைப்பள்ளிகள் | 107 |
| 15. | இளநிலைப்பள்ளிகள் | 1,341 |
| 16. | படித்தவர் சதவீதம் | 41% |
| 17. | தொழிற்பயிற்சி நிலையங்கள் | 2 |

புதிதாக உருவாகியுள்ள பெரியார் மாவட்டம், கோவை மாவட்டத்தோடு ஒப்பிடும்போது நிலப்பரப்பில் சில நூறு கிலோ மீட்டர்கள் கூடுதலாகக் கொண்டிருக்கும். இதன் மக்கட் தொகை பெருமளவிற்குக் குறைவுபட்டிருக்கும்.

கீழ்பவானித் திட்டம், அரக்கன் கோட்டை, தடப்பள்ளி, மேட்டூர்க் கால்வாய், காளிங்கராயன் கால்வாய்த் திட்டங்களினால் இம்மாவட்டத்தின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகள், வளங்கொழிக்கும் பகுதிகளாக விளங்குகின்றன. பெருந்துறையின் சில பகுதிகள், ஊத்துக்குளி, சென்னிமலை, காங்கேயம், மூலனூர், வெள்ளக்கோவில், தாராபுரம் ஆகிய பகுதிகள் வறட்சிப் பகுதிகளாகும். பரம்பிக்குளம -ஆளியாறு திட்ட விரிவாக்கத்தின் பயனால் காங்கேயம் தாராபுரம் பகுதிகளில் கூடுதலாக மானாவாரிப் புஞ்சை நிலங்கள் பாசனம் பெற வாய்ப்புள்ளது.

இம்மாவட்டத்தின் வடக்கெல்லையில் தாளவாடி, பர்கூர் பகுதிகளில் வன வளமும் மலை வளமும் அதிகம். கோபி, பவானி, ஈரோடு வட்டங்களில் நஞ்சைப் பகுதிகள் பெருமளவில் உண்டு. மற்ற வட்டங்களில் பெருவாரியாக வறண்ட பகுதிகளே அதிகம். நீர் வளத்தைப் பொறுத்தவரை காவிரியும், பவானி ஆறும் பெரியார் மாவட்டத்தின் உயிரோட்டமாக அமைந்திருக்கின்றன. ஈரோடு, பவானி, சத்தி வட்டங்களில் நஞ்சை சாகுபடியில் இவ்விரு ஆறுகளும் முக்கிய அங்கம் வகிக்கின்றன.

**வேளாண்மை:—**உணவு உற்பத்தியிலும் வணிகப் பயிர்களின் விளைச்சலிலும் இம்மாவட்டம் சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. கிராமத் தொழில்களான கதர் உற்பத்தி, கைத்தறி உற்பத்தி, துணிகளைச் சாயமேற்றி அச்சிடுதல் போன்ற தொழில்கள்

சிறப்பாகப் பெருகியுள்ளன. தோல் பதனிடும் தொழில், துணிகளுக்குச் சாயமேற்றும் தொழில் ஆகியவை தற்போது அதிகமாகப் பெருகியுள்ளது. சுற்றுச் சூழ்நிலையைப் பாதிக்கக்கூடிய கழிவு நீரை அதிகமாக வெளியேற்றும் தொழில்களுக்குத் தனியாகத் தொழிற்பேட்டை அமைக்க மாவட்ட அளவில் தற்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொழில் வாணிபத் துறையிலும், பெரியார் மாவட்டம் கோவைக்கு நிகரான மதிப்புப் பெற்றது. ஈரோடு நகரில் மஞ்சள், துணி நூல் வியாபாரம், பவானி நகரில் படுக்கை விரிப்பு நெய்யும் தொழில், சென்னிமலையின் புகழ்பெற்ற ஜவுளிகள், ஈரோட்டின் நிலக்கடலை எண்ணெய், தோல்பொருட்கள், 'ஸ்கிரீன் பிரின்டிங்' மற்றும் 'பாடிக்' முறையில் துணிகளை அச்சிடும் தொழில்கள் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

**கால்நடை வளம்:**—காங்கேயம் காளைகளுக்குப் பெயர் பெற்ற பெரியார் மாவட்டத்தில் கால்நடைச் செல்வத்திற்கும் குறைவில்லை. சமீப காலத்தில் கோழி வளர்த்தலும் அது சார்புடைய தொழில்களான கோழிப் பண்ணை அமைத்தல், கால்நடைத் தீவனம், கோழித் தீவனம் தயாரித்தல் ஆகிய தொழில்கள் வெகுவாக முன்னேறியுள்ளன. தமிழகத்தின் பெரிய சந்தைகளில் ஒன்றான ஈரோடு வாரச் சந்தை நெடுங்காலமாகவே ஈரோடு மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களின் பொருளாதார வளர்ச்சியில் உறுதுணையாக இருந்து வந்திருக்கிறது.

**திட்டப்பணிகள்:**—புதிய மாவட்டத்தில் பல்வேறு துறைகளால் நிறைவேற்றப்பட பல திட்டங்கள் உள்ளன. ஈரோடு நகரப் பொது மக்களுக்குக் குடிநீர் வழங்கும் தீவிரத் திட்டம் சென்ற ஆண்டு ஈரோட்டில் நடைபெற்ற பெரியார் நூற்றாண்டுத் துவக்க விழாவின் போது முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இப்பணி துரிதமாக முன்னேறி வருகிறது. மத்திய அரசு நிறுவனமான வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் ( HUDCO ) ஆதரவுடனும், தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடனும், ஈரோடு நகராட்சிப் பகுதியில் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்த வாய்ப்புக்கள் உள்ளன. இத்திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கக் கொள்கை அளவில் 'HUDCO' ஒத்துக்கொண்டுள்ளது.

| திட்டம் | உத்தேச செலவுத் தொகை ரூ. |
|---|---|
| 1. மணிக்கூண்டு அருகே விரைவு வடிகால் சாக்கடைத்திட்டம் | 45.5 இலட்சம் |
| 2. பாதாள சாக்கடைத்திட்டம் | 6 கோடி |
| 3. பெரும்பள்ளம் ஓடையில் குடிசைவாசிகளுக்கான புதிய குடியிருப்புக்கள் கட்டுதல். | 52.53 இலட்சம் |
| 4. புதிய மாவட்ட அலுவலகங்களின் மையம் அமைத்தல், மற்றும் அரசு அலுவலர்க்கான வீட்டு வசதித் திட்டம் | 78.76 இலட்சம் |
| 5. பொருளீட்டும் நோக்குடன் ( Remunerative Enterprise ) பேருந்து நிலையத்தில் கடைகள் அமைக்கும் திட்டம், தினசரி, வாராந்தரச் • சந்தைகள் அமைத்தல், துணிக்கடைகள் மற்றும் அங்காடி மையம் அமைத்தல் ஆகிய திட்டங்கள். | 1.73கோடி |



இவைகளைத் தவிர, குடிநீர் வடிகால் வாரியத்தினரால் நகராட்சி எல்லையில் ரூ. 194 இலட்சம் செலவில் குடிநீர் வழங்கு வளர்ச்சித் திட்டமும் செயல்படவுள்ளது. இப்பணிக்கான அங்கீகாரம் மார்ச்சு 1979ல் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இப்பணியைத் தொடங்கித் துரிதமாக முடிக்க, இவ் வாரியத்தின் செயற் பொறியாளர் அலுவலகம் ஒன்று ஈரோடு நகரில் செயல்பட ஆரம்பித்துள்ளது. மேலும் ஈரோடு நகராட்சியினரின் முன்மொழிவுகளின்பேரில் நகரில் ''சில்லரைத் துணிக்கடைப் பகுதி'' ஒன்றையும், ''தினசரி மார்க்கெட்'' ஒன்றையும் ரூ. 30.50 இலட்சம் செலவில் துவங்க அரசினர் சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளனர். மேலும், ஈரோடு நகரைச் சுற்றியுள்ள வீரப்பன் சத்திரம், பிராமணப் பெரிய அக்ரகாரம், காசிபாளையம், சூரம்பட்டி ஆகிய நகர்ப்புற ஊர்களுக்கும் குடிநீர் வழங்க ரூ. 92.17 இலட்சம் செலவில் ஒரு திட்டமும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டங்களெல்லாம் சீரான காலமுறை அடிப்படையில் ( Phased Programme. ) படிப்படியாகவும், துரிதமாகவும் நிறைவேற்றப்படும்.

**சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்:**—ஈரோட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கெனத் தனியாகவும், கோபியில் இயந்திரத் தொழில்களுக்கெனத் தனியாகவும், தொழிற்பேட்டைகள் நிறுவுதல், தொழிற்கூடங்கள் கட்டி சிறிய தொழில் தொடங்குவோருக்குத் தவணை முறையில் கடன்களையும் தேவையான முக்கிய உதவிகளையும் அளித்தல், சிறு தொழிற்கூடத் திட்டத்தின் கீழ் கிராமப்புற மக்களின் மேம்பாட்டிற்கான சைக்கிள் பழுதுபார்த்தல், 'பவர்' சலவைக்கடை, மருந்து தெளிக்கும் கருவிகளைப்பழுது பார்த்தல் போன்ற சுயவேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் சுமார் 10 இடங்களில் செயல்படுத்துதல் முதலியன தற்போது சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் பரிசீலித்து வருகிறது.

**கைத்தறி மற்றும் துணி நூல் துறை:** பெரியார் மாவட்டத்தில் கைத்தறித் தொழில் முக்கியப் பங்கு வகிக்கிறது. நடப்பு ஆண்டில் சென்னிமலையில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் கீழ் கைத்தறிகளைக் கொண்டு வருதல், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப உதவி அளித்தல், தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்து கூலி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தல், கைத்தறி நெசவாளர் சேமிப்பு, பாதுகாப்பு வசதிகள், வீட்டு வசதிகள் ஆகியனவற்றை விரிவாக்குதல் ஆகிய திட்டங்கள் இத்துறையின் பரிசிலனையில் உள்ளன.

**கால்நடை பராமரிப்புத் துறை:** பவானி சாகர் அருகில் வெள்ளகண்டி என்ற இடத்தில் சுமார் 5,000 ஏக்கரில் வனத் துறை, வரு

# மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர் அவர்களால் 24-9-'79 அன்று துவக்கி வைக்கப்பட்ட

# பெரியார் மாவட்டம்





வாய்த் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை ஆகியன அமைக்கும் திட்டமும், மற்றும் ஓர் ஆட்டுப் பண்ணை அமைக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

**வீட்டு வசதி வாரியம்:** ஈரோடு பெரும்பள்ளம் ஓடையில் உள்ள சுமார் 2,000 குடிசைகளை அப்புறப்படுத்திவிட்டு சுமார் 4.70 ஏக்கர் நிலத்தில் ரூ. 52.53 இலட்சம் செலவில் ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டி வழங்கும் திட்டம் அரசினரின் பரிசீலனையில் உள்ளது. அரசு அலுவலர்களுக்கான வாடகை வீடு அளிக்கும் திட்டத்தின் கீழ் புதிதாக 176 வீடுகளைக் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. நசியனூர், கொல்லம்பாளையம் ஆகிய கிராமங்களில் முறையே 81.36 ஏக்கர், 144.90 ஏக்கர் நிலம் கையகப்படுத்தி, வீடுகள் கட்டும் திட்டம் உள்ளது. பல்வேறு தர வருமானமுள்ளவர்களுக்காக 'HUDCO' உதவியுடன் பெரியார் நகரில் 808 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. இவை மனுதாரர்களுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளன.

**பால் வள அபிவிருத்தி:** பெரியார் மாவட்டம் பால் உற்பத்தியிலும், பால்படு பொருட்கள் உற்பத்தியிலும் தனி இடத்தைப் பெற்றுள்ளது. தேசியப் பால்வளப் பெருக்கக் கழகத்தினரால் ரூ. 1.50 கோடி செலவில் சித்தோட்டிற்கு அருகே ஏற்படுத்தப்படவிருக்கும் பால்வளக் கூட்டுறவு அமைப்பு, குஜராத் மாநிலத்தில் 'ஆனந்த்' எனப்படும் இடத்தில் ஏற்பட்டுள்ளதுபோன்று புரட்சிகரமான வளர்ச்சிக்கு வித்திடும் என எதிர்பார்க்கலாம். மேலும், கால்நடைத் தீவன ஆலை, பதனிடும் நிலையங்கள் எல்லாவற்றிற்கும் முழுமையாக ரூ. 6 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 500 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும் 15,000 பேருக்கு மறைமுகமாக வேலைவாய்ப்பும் இதனால் கிடைக்க வசதியுண்டு.

பெரியார் மாவட்டம், பல வசதிகளைக் கொண்ட ஒன்றாகும். உழவுத் தொழிலிலும், வாணிபத்திலும் தொழில் வகைகளிலும் ஏற்கெனவே கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ள மாவட்டங்களில் ஒன்றாகும்; கடுமையாக உழைக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் நிரம்பிய மாவட்டம், மேலும், அரசின் பல்வேறு திட்டங்கள் அடிப்படையில் வெகு வேகமாக முன்னேற்றம் காண்பதற்கு வாய்ப்புகள் ஏராளமாக உள்ள ஒரு மாவட்டம்.

இப்புதிய மாவட்டத்தைத் துவக்குவதால் அரசின் பல பொருளாதார, சமூக நலத் திட்டங்கள்—இப்புதிய மாவட்டத்தில் ஊக்கத்துடன் நிறைவேற்றப்பட்டு, ஏழை, எளிய மக்கள் வாழ்வு வளம்பெற வாய்ப்புகள் பெருகும்.

## புள்ளியியல் துறை—மாதிரி ஆய்வு

தமிழ்நாடு அரசின் புள்ளியியல் துறை மத்திய அரசின் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்துடன் பங்கேற்று, வர்த்தகம், போக்குவரத்து, உணவு விடுதி, தேநீர் விடுதி, கிடங்கு மற்றும் சேவைப் பிரிவு விவரங்களை 1979-80ல் மாதிரி ஆய்வு செய்யத் துவக்கியுள்ளது.

புள்ளியியல் துறையின் சிறப்புப் பயிற்சி பெற்ற பணியாளர்கள் மேற்குறித்த தொழிற் பிரிவுகளில் ஈடுபட்டுள்ளோரைச் சந்தித்து, இதற்கெனச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட படிவங்களில் விவரங்கள் சேகரிக்க கிராம-நகர்ப் புறங்களுக்கு மிக விரைவில் வருவார்கள். சேகரிக்கப்படும் விவரங்கள் திட்டப் பணிக்கு அடித்தளமாக அமைவதுடன், சமுதாயம் முழுமைக்கும் பயன் தரும் திட்டங்கள் தீட்டுவதற்கும், ஆட்சியாளர்களுக்கும் பயனுடையதாக இருக்கும். ஆகையால், சேகரிக்கப்படும் விவரங்கள் காலங் கடவாமலும், துல்லியமாகவும் இருக்க வேண்டும் என்பது மிகவும் அவசியமாகிறது.

சேகரிக்கப்படும் விவரங்களும், விவரம் வழங்கும் தனி நபர் அடையாளங்களும் எந்தச் சூழ்நிலையிலும் வெளியிடப்படமாட்டாது.

புள்ளியியல் துறைப் பணியாளர்கள் விவரங்களைச் சேகரிக்க வரும்போது நம்பகமான விவரங்களைக் குறித்த காலத்தில் கொடுக்குமாறு புள்ளியியல் ஆணையர், மேற்சொன்ன தொழிற்பிரிவுகளில் ஈடுபட்டுள்ளோரை வேண்டுகிறார்.

இந்த ஆய்வின் முழு வெற்றிக்கு, அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டப்படுகிறது.



# அயல் நாட்டுப் பணிக்கு ஆள் திரட்டும் நிறுவனம் ஆற்றிடும் அரிய பணிகள்

ஏ. உமாமகேஸ்வரன்
நிர்வாக மேலாளர்,
அயல் நாட்டு வேலை வாய்ப்புப் பணி நிறுவனம்,
சென்னை.

பூமிக்கடியில் சுரந்து வரும் கறுப்புத் தங்கம் எனப்படும் எண்ணெய் வளத்தால் பெரும் செல்வ வளம் பெற்ற மத்திய கிழக்கு நாடுகள், சமீப காலமாக தங்களது வளர்ச்சிப் பாதையில் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றன. இதன் விளைவாக மருத்துவ விடுதிகள் கட்டுதல், ஐந்து நட்சத்திர ஓட்டல்களை உருவாக்குதல், நிலத்தை வேளாண்மைக்கேற்றவாறு பண்படுத்துதல் மற்றும் பல்வேறு கட்டுமானப் பணிகள் இந்நாடுகளில் ஏராளமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய முன்னேற்றப் பணிகளினால் அங்கெல்லாம் கணிசமான வேலை வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த வேலை வாய்ப்புக்களை மேற்கொள்ள உள்நாட்டிலேயே தேவைப்படும் அளவுக்கு மனித சக்தி இல்லாமையினால் இந்நாடுகள் மற்ற நாடுகளிலிருந்து பல்வேறு தொழில்களுக்கான தகுதி பெற்ற ஆட்களை எதிர்பார்க்கின்றன. எனவே, தகுதி வாய்ந்த நம் இளைஞர்களுக்கு இந்த நாடுகளில் வேலை வாய்ப்புக்கள் உள்ளன எனலாம். திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்ற முதுரைக்கிணங்க ஏற்கெனவே நம் இளைஞர்கள் பலர், மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பணி புரிந்து பொருளீட்டச் சென்றுள்ளனர். மேலும் கணிசமான அளவில் நம்முடைய இளைஞர்களுக்கு அங்கு வாய்ப்புக்கள் உள்ளன எனத் தெரிகின்றது.

இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஏராளமான தனியார் நிறுவனங்கள் புற்றீசல்கள் போல் நாட்டில் தோன்றியுள்ளன. இந்த நிறுவனங்கள் அயல் நாட்டு வேலைகளுக்கு இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் தொழிலில் ஈடுபட்டுச் செழித்து வளர்ந்துள்ளன. கடுமையான போட்டிகள் நிறைந்த துறை இது. எனவே, ஏற்கத்தகாத முறைகேடுகள் இத்துறையில் மலிந்துள்ளன. இதனால் அயல் நாடுகளில் பணிபுரிய விரும்பி முயற்சிகளை மேற்கொள்ளும் இளைஞர் பலர் பாதிக்கப்பட்டு ஏமாற்றமுற்றுள்ளனர்.

இத்தகைய நிலையைத் தவிர்த்து, இடைத் தரகர்கள் ஊழல் இன்றி இளைஞர்கள் பயன்பெற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக தமிழக அரசினால் 'அயல் நாட்டுப் பணி வாய்ப்பு நிறுவனம்' (Overseas Manpower Corporation Ltd.) அண்மையில் தோற்றுவிக்கப்பட்டது.

இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்கள்:—

* படித்த, பயிற்சி பெற்ற மற்றும் தொழில் நுணுக்கத் தேர்ச்சி பெற்ற இளைஞர்களுக்கு அயல் நாடுகளில் வேலை வாய்ப்பினைத் தேடித் தருவது.
* சுயமாகவோ அல்லது அரசின் சார்பிலோ கூட்டுத் தொழில் முயற்சிகளை அயல்நாடுகளில் மேற்கொள்ள முனைவதன் மூலம் வெளிநாடுகளில் நம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தர முயற்சிப்பது.
* அயல்நாடுகளில் பணிபுரியும் இந்திய மக்களிடமிருந்து தேவையான பொருளாதார வசதியினைத் திரட்டி நம் நாட்டில் தொழில்களை ஏற்படுத்துவது.
* கைவினைப் பொருட்கள், கைத்தறித் துணிகள் மற்றும் கலாச்சார அல்லது கலைச் சிறப்பு வாய்ந்த உலோகப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முனைதல்.

தன்னுடைய பணியின் முதல் படியாக இந்நிறுவனம் அயல்நாடுகளில் வேலை பெறத் தகுதி

# மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்

## விஜய் காம்ப்ளெக்ஸ் & யூரியா உரங்களை தயாரிப்பவர்கள்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,25,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித் தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111




வாய்ந்த இளைஞர்களைப் பற்றிய 'குறிப்பு வங்கி' (Data Bank) ஒன்றினைத் தொகுத்தது. இந்நிறுவனம் தகுந்த தகுதி வாய்ந்த இளைஞர்களிடமிருந்து விண்ணப்பங்களை வரவேற்று, செய்தித் தாள்களில் விளம்பரம் ஒன்றினை வெளியிட்டது. இதன் பயனாக 6503 பேர் மனுச் செய்தார்கள். பூர்த்தி செய்து அனுப்ப அவர்களுக்குக் குறிப்பேடுகள் (Data Sheets) அனுப்பப்பட்டன. பூர்த்தி செய்த குறிப்பேடுகளை அனுப்பியவர்களில் 1627 பேர் குறிப்பு வங்கியில் சேர்த்துக் கொள்ளப் படத் தகுதி பெற்றிருந்தனர். அவர்கள் விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| பொறியாளர் | ... 310 |
| உழவு மற்றும் தோட்டக் கலைப் பணியாளர் | ... 9 |
| செவிலியர் | ... 29 |
| மற்ற மருத்துவத்துறை ஊழியர்கள் | ... 55 |
| ஆசிரியர் | ... 4 |
| கை வினைஞர் மற்றும் பயிற்சி பெற்ற தொழிலாளர் | ... 780 |
| மற்ற தொழில் நுட்பத் திறன் பெற்றவர் | ... 12 |
| பல்வேறு உணவு விடுதிப் பணியாளர் | ... 120 |
| கட்டுமானப் பணியாளர் | 115 |
| ஓட்டுநர் | ... 95 |
| அலுவலகப் பணியாளர் | 50 |
| தொழில் நுணுக்க உதவியாளர் | ... 35 |
| மற்றவர் | ... 13 |
| மொத்தம் | ...1627 |

அயல் நாட்டுப் பணி வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்து கொள்ள ஆகும் செலவு அதிகம் இல்லை. ஏழு ரூபாய் மட்டுமே! இதைத் தவிர வேறு எந்தக் கட்டணத்தையும் விண்ணப்பதாரர்களிடம் இருந்து இந்த நிறுவனம் பெறுவதில்லை.

குறிப்பு வங்கியினைத்தொகுத்து வைப்பது மட்டுமல்ல; பல்வேறு செய்தித்தாள்களில் வரும் வெளி நாட்டு வேலை வாய்ப்பு பற்றிய விவரங்களையும், விளம்பரங்களையும் தொகுத்து அதைப் பயனுள்ள வகையில் இந்நிறுவனம் பயன்படுத்துகின்றது. அயல் நாட்டு வேலை வாய்ப்பு விளம்பரங்களைப் பிரசுரித்த நிறுவனங்கள் அல்லது அவற்றின் அங்கீகாரம் பெற்ற உள் நாட்டு அமைப்புகளோடு இந்நிறுவனம் தொடர்புகொண்டு, தன்னுடைய குறிப்பு வங்கியில் உள்ள இளைஞர்களுக்குவேலை வாய்ப்பினைப் பெற்றுத் தர முயற்சிக்கின்றது. அதோடு மட்டும் இந்நிறுவனம் திருப்தி அடைந்துவிடுவதில்லை. தொழில் நிமித்தமாகவோ அல்லது வேறு காரணமாகவோ சென்னைக்கு வரும் தொழிலதிபர்களைச் சந்தித்து அவர்கள் மூலம்வேலைவாய்ப்பினைப்பெற இந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் தவறுவதில்லை. இத்தகைய முயற்சியினால் ஓட்டல் தொழில் சம்பந்தப்பட்ட 19 இளைஞர்கள் ஷார்ஜாவில் (U.A.E.) உள்ள 'நோவோடெல் ஷார்ஷா பீச்' என்ற ஐந்து நட்சத்திர ஓட்டலில் வேலை வாய்ப்பை சமீபத்தில் பெற முடிந்துள்ளது. முழு மூச்சுடன் பணியாற்றத் தொடங்கிய முதல் மூன்று மாதங்களிலேயே இத்தனைப் பேருக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றுத் தந்தது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 19பேர்களையும் வழியனுப்பும் நிகழ்ச்சி, தமிழகஅரசு தலைமைச் செயலாளர் திரு வி.கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் சென்னையில் 10.9.79 அன்று சிறப்பாக நடைபெற்றது.

தம்முடைய தலைமை உரையில் திரு கார்த்திகேயன் அவர்கள், வெளிநாடு செல்லும் 19 இளைஞர்களுக்கும் நல்லுரை வழங்கினார். 'அவர்கள் கடுமையாக உழைக்க வேண்டும் என்றும், தங்களுக்கு நல்ல பெயரைத் தேடிக் கொள்ள வேண்டும் என்றும், அவர்களுக்கு வேலை பெற்றுத் தந்த அயல் நாட்டுப் பணி வாய்ப்பு நிறுவனத்திற்கு நீடித்த நல்ல புகழைத் தேடித் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். தம்முடைய உரையில் அமைச்சர் அவர்கள், "வெளிநாட்டில் பணிபுரியச் செல்லும் நம் இளைஞர்கள் நன்கு உழைத்து நற்பெயர் பெறுவதுடன் அவர்கள் நமது நாட்டின் கலாச்சாரத் தூதுவர்களாகவும் திகழவேண்டும்' என்று குறிப்பிட்டார். இந்நிறுவனத்தின் மூலமாக வேலை வாய்ப்பினைப்பெற்றுபயனடைந்தவர்கள் தாங்கள் வேலை செய்யும் நாடுகளில் இருந்து மேலும் பல வேலைவாய்ப்பு விவரங்களை இந்நிறுவனத்திற்கு அறிவிப்பதன் மூலம் மற்ற இளைஞர்களுக்கும் உதவ வழி செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். துவக்கத்தில் வரவேற்புரை ஆற்றிய இந்நிறுவனத்தின் தலைவரும் மற்றும் தொழிலாளர் வேலை வாய்ப்புத்துறைச் செயலாளர் திரு சி. இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ். அவர்கள் இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளை விவரித்தார்.

முதல் அணியில் அனுப்பப்பட்ட 19 இளைஞர்களும் 16.9.'79 அன்று 'ஷார்ஜா' வில் உள்ள நோவோடெல் ஓட்டலில் தங்களுடைய பணியை ஏற்றுக் கொண்டனர். அவர்களுக்கு பாஸ்போர்ட், விசா மற்றும் பயண ஏற்பாடுகள் அனைத்தையும் அயல் நாட்டுப் பணி வாய்ப்பு நிறுவனமே செய்தது.

ஓட்டல் தொழில் சம்பந்தப்பட்ட பணியாளர் அடங்கிய இன்னொரு அணியினையும் விரைவில் வெளிநாடு அனுப்பக் கூடிய சூழ்நிலை விரைந்து உருவாகி வருகின்றது. எதிர்காலத்தில் இதன் பணிகள் மேலும் சிறக்கும்; அதனால் வெளிநாடுகளில் வேலை தேடும் நம்முடைய இளைஞர் பலர் மேலும் பயனடைவர் என்று தாராளமாகக் கூறலாம்.

அயல் நாட்டுப் பணி வாய்ப்பு நிறுவனத்தின் கவனம் வேலை வாய்ப்பைப் பெறுவதில் மட்டுமே செலுத்தப்படவில்லை. விதைகள், காய்கறிகள், செடிகள், பழவகைகள் போன்றவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக்களையும் இந்நிறுவனம் ஆராய்ந்து வருகின்றது. மத்திய கிழக்கு நாடுகளின் சீதோஷ்ண நிலையில் வளரக் கூடிய செடிகளை ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புக்களும் ஆராயப்பட்டு வருகின்றது.

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயாராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல—தொழிற்துறைக்கும் டான்சி தயாரித்தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI




# கூட்டுறவும் கைத்தறித் தொழிலும்


வி. சங்கரசுப்பையன், ஐ.ஏ.எஸ்.
இயக்குநர், கைத்தறித்துறை


தமிழ்நாட்டில் தொழில்களில் கைத்தறித் தொழில் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்தியாவில் உள்ள 35.63 இலட்சம் மொத்தக் கைத்தறிகளில் 5.56 இலட்சம் கைத்தறிகள் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. பின் தங்கிய நிலையில் உள்ள கைத்தறித் தொழிலை முன்னேற்றி வைக்கும் எண்ணத்துடனும், கைத்தறித் தொழிலை நல்ல முறையில் சீரமைக்கும் நோக்கத்துடனும் சில தீவிர முன்னேற்றத் திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகின்றது.

கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் நெசவாளர்களுக்குப் பயன்பட வேண்டுமெனில் அவர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருவதே சாலச் சிறந்தது என்பதை அரசு உணர்ந்து தமிழகத்திலுள்ள 60 சதவிகித நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டு வர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

மேற்படி திட்டத்தின் கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 44,720 நெசவாளர்கள் தனியார் துறையிலிருந்து கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். மேலும், இவ்விரண்டு ஆண்டுகளில் 118 புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சொந்தத் தறிகள் இல்லாத கூலி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க 19 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. தற்பொழுது தமிழ் நாட்டில் 2.20 இலட்சம் தறிகளைக் கொண்ட 996 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மேலும் தனியார் துறை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டு வரப்படுவர்.

கூட்டுறவுத் துறையின் உற்பத்தி 1976-77-ல் ரூ. 38 கோடியாக இருந்தது 1978-79-ல் ரூ. 45 கோடியளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கேற்ப, விற்பனை 1976-77-ல் ரூ. 42 கோடியாக இருந்தது. 1978-79-ல் ரூ. 54 கோடியாக அதிகரித்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளில் மாநில அரசு கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் கீழ் ரூ. 2471 இலட்சம் அளவிற்கு நிதியுதவி கடன் மற்றும் மானியமாக அளித்துள்ளது. 1976-77-ல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரிசர்வ் வங்கியின் மூலம் ரூ.9.27 கோடி அளவுக்கு மூலதனக் கடன் வழங்கப்பட்டது. 1978-79-ல் இது ரூ. 16.97 கோடி அளவிற்கு உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப் டெக்ஸ்):—

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தியில் 50 சதவிகிதம் வரை தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகின்றது. 1976-77-ல் கோ-ஆப்டெக்ஸின் விற்பனை ரூ. 19.24 கோடியாக இருந்தது. இது படிப்படியாக உயர்ந்து 1978-79-ல் கோ-ஆப்டெக்ஸின் விற்பனை ரூ. 34 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

விற்பனையைப் பெருக்க கோ-ஆப்டெக்ஸ் புது விற்பனை நிலையங்களைத் திறப்பதுடன் ஏற்கெனவே இயங்கிவரும் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியும் வருகிறது. தமிழ்நாட்டிலும் இதர மாநிலங்களிலும் சுமார் 400 விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. 1977-78 மற்றும் 1978-79-ல் மாநில சங்கத்திற்கு அரசு ரூபாய் 411.53 இலட்சம் அளவிற்கு நிதியுதவி அளித்து, ரிசர்வ் வங்கியின் நடைமுறை மூலதனக் கடன் உதவி 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 650 இலட்சமாக இருந்ததை 1978-79-ல் ரூ. 1200 இலட்சமாக உயர்த்தி அளிக்கப்பட்டுள்ளது.

### கூட்டுறவு நூற்பாலைகள்

கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கி வரும் நெசவாளர்களின்

மூலப் பொருளான நூல் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு தமிழக அரசு 12 கூட்டுறவு நூற்பாலைகளை நிறுவி இயக்கி வருகிறது. இந் நூற்பாலைகளின் மொத்த நிறுவை 2.30 இலட்சம் கதிர்களிலிருந்து, 1978-79-ல் 3.05 இலட்சம் கதிர்களாக அதிகப்படுத்தியுள்ளது. தவிர இரண்டாண்டுகளுக்கு முன்பு மாதந்தோறும் 4,500 பேல் நூல் உற்பத்தி செய்ததைத் தற்பொழுது 8500 பேல் அளவுக்குப் பெருக்கியுள்ளது. 1976-ல் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த நூற்பாலைகள் 1978-79-ல் ரூ. 2.01 கோடி அளவிற்கு நிகர இலாபத்தை ஈட்டியுள்ளன.

### தமிழ்நாடு கூட்டுறவு நூல் பதனிடும் ஆலை, ஈரோடு

இவ்வாலை நூல் மற்றும் கைத்தறித் துணி பதனிடும் வேலைகளில் படிப்படியாக நெசவாளர் கூட்டுறவுசங்கங்களின் தேவையை முழு அளவிற்குப் பூர்த்தி செய்ய ரூ. 22.50 இலட்ச செலவில் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றது. 1976-ல் இவ்வாலையின் திறன் 10.81 இலட்சம் மீட்டர்களாக இருந்தது. இதை 1978-79-ல் 28.27 இலட்சம் மீட்டர்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் இந் நிறுவனம் ஒரு துணி அச்சிடும் பிரிவை அமைத்துள்ளது. சாயச்சாலையை நவீன முறையில் விரிவுபடுத்தியுள்ளது. மேலும் சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் நவீன சாயச்சாலைகள், ரூ. 60 இலட்சம் செலவில் நிறுவும் வேலையை மேற்கொண்டுள்ளது. இந்த 5 சாயச்சாலைகள் தவிர வேலூரில் மற்றொரு நவீன சாயச்சாலையும் நிறுவத் தக்க நடவடிக்கைகளை ஈரோடு பதனிடும் ஆலை மேற்கொண்டுள்ளது. பாலிஸ்டர் போன்ற பருத்தியில்லா ரகங்களைப் பதனிட ஒரு பிரிவையும் ரூ. 31 இலட்சம் செலவில் அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

### தமிழ்நாடு கைத்தறி நிதி மற்றும் வர்த்தகக் கழகம்

இந்நிறுவனம், கடந்த 2 ஆண்டுகளில் ரூ. 2.13 கோடியை கடனாக நெசவாளர்களுக்கு வழங்கியது. 1976-ல் ரூ. 48.87 இலட்சம் ஆக இருந்த விற்பனை 1978-ல் ரூ. 193.07 இலட்சமாக அதிகரித்துள்ளது.



### கைத்தறி தீவிர வளர்ச்சி ஏற்றுமதி திட்டங்கள்

தமிழ்நாட்டில் 4 கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களும் 2 ஏற்றுமதித் திட்டங்களும் காஞ்சிபுரம், ஈரோடு, மதுரை, சேலம், கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் துவக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களில் மொத்தம் 22,000 தறிகளைச் சேர்க்க இருப்பதில் 31-8-1979 முடிய 9950 தறிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் மொத்த திட்ட முதலீடு ரூபாய் 464.20 இலட்சம் ஆகும். இத்திட்டங்களினால் கைத்தறித் துணியின் உற்பத்தி ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.75 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது. இவ்விரண்டு ஆண்டுகளில் மட்டும் இத்திட்டங்களுக்கு அரசு ரூ. 270.25 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

### தமிழ்நாடு நெசவாளர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள்

தறியில்லாத நெசவாளர்கள் அதிகமுள்ள இடங்களில் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தற்போது 4,700 கைத்தறிகளைக் கொண்ட 49 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் இம்மாநிலத்தில் உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 1,900 தறிகளைக் கொண்ட 19 தொழிலியல் நெசவாளர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### கோராப்பட்டு வழங்கும் திட்டம்

நல்ல தரமான கோரா மற்றும் ஜரிகை குறைந்த விலையில் காஞ்சிபுரம் மற்றும் ஆரணியில் உள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வாங்கி விநியோகிக்க 'கோ-ஆப்டெக்ஸ்' தனி அதிகாரியைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு இத்திட்டம் 15-8-1978 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த ஏற்பாட்டின் காரணமாக காஞ்சிபுரம் மற்றும் ஆரணியிலுள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிக இலாபகரமான முறையில் தரமான மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

### வடிவமைப்பு நிலையங்கள்

கைத்தறி நெசவாளர்களுக்குப் புதுப்புது வடிவங்கள் உருவாக்கவும், ஆலோசனை வழங்கவும், மதுரை, கோவை, சேலம் ஆகிய இடங்களில் 3 வடிவமைப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற மேலும் 3 வடிவமைப்பு நிலையங்கள் மாநிலத்தின் இதர பகுதிகளில் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஜனதா துணிகள்

குறைந்த விலையில் மக்களுக்குக் கைத்தறித் துணிகள் வழங்க மொத்தம் 10,000 தறிகள் ஜனதா ரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 1977-78 மற்றும் 1978-79-ல் மொத்தம் 2.40 கோடி மீட்டர் ஜனதாத் துணிகள் இத்தறிகளின் மூலம் உற்பத்தி செய்து 'கோ-ஆப்டெக்ஸ்' மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

### சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 66,382 நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் ஈட்டுறுதித் தொகையை ரூ. 500லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்துவது தற்பொழுது அரசின் ப்ரிசீலனையில் உள்ளது.

### கைத்தறி நெசவாளர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு

மாநில அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒரு குழு நெசவாளர்களின் வேலை செய்யும் முறை, வேலைக்குப் பாதுகாப்பு, சட்டப் பாதுகாப்பு முதலியவற்றை ஆராய்ந்து அதன் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. இக்குழுவின் பரிந்துரையின் பேரில் ஒருசட்டம் தமிழக அரசால் சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு அது ஒரு சட்டசபைக் கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவரல், தடையில்லாத நிதியுதவி, உறுதியான மூலப்பொருள் விநியோகம் துணிகளின் உற்பத்தியில் மாற்றம் செய்தல், பாலியஸ்டர் வகை துணிகள் அறிமுகம், ஜனதா ரகத் துணித்தேவை முழுதும் உற்பத்தி செய்தல், அரசுத் துறைகளுக்குத் தேவையான துணிகளை வாங்குதல், உள்நாட்டு வெளிநாட்டு விற்பனைகளை அதிகப்படுத்துதல் போன்றவைகளின் மூலம் கைத்தறி பிரிவின் துணி உற்பத்தியை அதிகரிப்பதோடு கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பையும் வருமானத்தையும்கிடைக்கச் செய்யலாம்.

# கிராமவளமே பால்வளக் கூட்டுறவின் இலட்சியம்

எம். ரகுபதி ஐ.ஏ.எஸ்.,
ஆணையர், பால்வளத்துறை.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் கிராமங்கள் தாம் உயிர்நாடியாக விளங்குகின்றன. கிராமத்தில் வாழும் ஏழை எளியவர்கள் ஏற்றம் பெற வேண்டும். அவர்களது இன்னல்கள் மாறிப் புன்னகை முகத்துடன் திகழ வேண்டும் என்பது அண்ணல் காந்தியடிகளும், அறிஞர் அண்ணாவும் கண்ட கனவாகும்.

கிராமத்தில் உள்ள சிறிய, மிகச் சிறிய விவசாயிகள், நிலமற்றவர்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். தொடர்ந்து வேலை வாய்ப்பினைப் பெற்று நிரந்தர வருமானம் பெற வேண்டும். வறுமையின் எல்லைக் கோட்டின் கீழ் வாடி வதங்கும் இலட்சக் கணக்கான குடும்பங்களின் வாழ்விலே ஒளியேற்ற வேண்டும். நாட்டுப் புறத்திலும், நகர்ப்புறத்திலும் வாழும் மக்களுக்குச் சிறந்த சத்துணவான பாலைச் சீராக விநியோகம் செய்ய வேண்டும். இந்த உயர்ந்த கோட்பாடுகளின் அடிப்படையில் பால் வளக் கூட்டுறவு நிறுவனங்கள் செயல்படுகின்றன.

ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாட்டில் நாம் அதிக கவனம் செலுத்தி வருகிறோம். கிராமப் புறத்தின் பொருளாதாரம் வளருமானால் பல துறைகளிலும் மேம்பாடு காண முடியும். அதை வெற்றிபெறச் செய்து முடிக்க வேண்டுமானால், கிராமங்களில் வேலை வாய்ப்பைப் பெருக்கியாக வேண்டும். வேலை வாய்ப்பு என்று குறிப்பிடும்போது, பெரிய தொழிற்சாலைகளையோ, நிலத்தின் அடியில் உறங்கிக் கிடக்கும் கனிவளத்தையோ நம்பிக்கொண்டிருக்க வேண்டியதில்லை. அதனால் பல கோடிக்கணக்கான தொகை முதலீடு செய்து சில ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புத் தர முடியும். ஆனால், கிராமங்களிலேயே, இயற்கையின் உதவியுடன் சில ஆயிரம் ரூபாய் முதலீடு செய்தால், சுதந்திரமாக, நிரந்தரமாகப் பல ஆயிரம் பேர் வேலை வாய்ப்புப் பெற முடியும். அதற்கு உறுதுணையாக இருப்பவைதான் பால்வளக் கூட்டுறவு நிறுவனங்கள்.



தமிழகத்தில் பால்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் கடந்த அரை நூற்றாண்டுகளாக அரும்பணியாற்றி வந்துள்ளன. அவற்றின் பணிகளை மேம்படுத்தும் வகையில் அண்மைக் காலத்தில் சில முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாலை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளருக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும். அது எல்லாக் காலங்களிலும் சீராகக் கிடைக்க வேண்டும். நுகர்வோருக்கும் தரமான பாலை, முறையாக வழங்க வேண்டும். உற்பத்தியாளர்களுக்கு, கால்நடை மருத்துவ வசதி, மற்றும் சத்துள்ள தீவனம் வழங்கி தரமான பால் உற்பத்திக்கு உதவ வேண்டும் என்ற அடிப்படை நோக்குடன் பால்வளக் கூட்டுறவு நிறுவனங்கள் மூன்றடுக்கு முறையில் உற்பத்தியாளர்களின் நலனை மையமாகக் கொண்டு சீரமைக்கப்பட்டு வருகின்றன.

முதலாவது—பால் பெருக்குத் திட்டம் என்றழைக்கப்படும் இத்திட்டம் 1972-ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு உறுதுணையாக உள்ளவை இந்தியப் பால்வள நிறுவனம் மற்றும் தேசியப் பால் வள வாரியம். அதனால் பால் உற்பத்தி பெருகியதோடன்றி, சீரான விநியோகத்திற்கும் ஏற்பாடு செய்ய முடிந்தது. பால் பெருக்குத் திட்டத்தின் முதல் கட்டத்தைச் சிறப்பாக முடித்துவிட்டு, இரண்டாவது கட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தும் முயற்சியில் தமிழக அரசு ஈடுபட்டுள்ளது.

இந்த அடிப்படையில்தான் 1978 ஜூன் திங்கள் இரண்டாம்நாளில் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டது. (அரசு ஆணை எண் 1000). இந்த ஆணை தமிழகப் பால்பெருக்குத் திட்டத்தின் வரலாற்றில் புதிய எழுச்சியையும் திருப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்று கூற

முடியும். பால் உற்பத்தியாளர்களின் நலனை அடிப்படையாகக் கொண்டு கிராம மட்டத்தில் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்-மாவட்ட அளவில் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள்-மாநில அளவில் கூட்டுறவு உற்பத்தியாளர் இணையம் என்ற மூன்றடுக்கு முறையில் தான் இனிவரும் சங்கங்கள் அமையும். கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கம் என்ற தத்துவத்தைச் செயல் வடிவில் கொண்டு வருவதற்கு இந்தத் திட்டம் பயன்படுகிறது.

புதிய பாணியில் அமைக்கின்ற சங்கங்களில்—

(1) பால் உற்பத்தியாளர்கள் மட்டுமே உறுப்பினர்கள் ஆகிறார்கள்.

(2) தரத்தின் அடிப்படையில் பாலின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

(3) பால் மாடுகளைப் பராமரிக்கக் குறித்த காலத்தில் மருத்துவ வசதி உண்டு.

(4) தரமான கன்றுகளைப் பெற செயற்கைக் கருவூட்டு முறை பயன்படுத்தப்படுகிறது.

சுருக்கமாகச் சொன்னால் தரமான பாலை உற்பத்தி செய்து நியாயமான விலையைப் பெற, சிறந்த பராமரிப்பு வசதிகளை அடைய இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வாய்ப்பு ஏற்படுகிறது.

உண்மையான உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களாக இல்லாத காரணத்தால் பல சங்கங்கள் செயலிழந்து விட்டன. ஆனால், ஆர்வமுள்ள உண்மையான உற்பத்தியாளர்கள் ஒன்று கூடி கூட்டுறவு முறையில் இயங்கும்போது வெற்றிக்கனிகள் நிச்சயம்.

பால் உற்பத்தியைப் பொறுத்த வரை, பால் அருந்துவோரின் தேவை சீராக இருப்பதும், உற்பத்தி மட்டும் பருவத்துக்குத் தகுந்தவாறு மாற்றம் பெறுவதாக உள்ள ஒரு விந்தையான பிரச்சினை உள்ளது. இதைத் தனிப்பட்ட பால் வியாபாரிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, பால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலை கொடுக்காமல் கொள்ளையடிக்க நேர்ந்தது. அந்த ஆபத்திலிருந்து, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர்களைக் காத்து உதவி வருகின்றன.

உபரிக் காலத்தில் கிடைக்கும் பாலைப் பக்குவப்படுத்தி, பால் பவுடர் போன்ற துணைப் பொருட்கள் தயாரிக்கும் திட்டமும் செயல்பட்டு வருகிறது. இந்தகைய திட்டம் மதுரையில் நடைமுறையில் இருந்து வருகிறது. (ஈரோடு, சேலம் ஆகிய இடங்களில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிலகம் துவக்கப்படவிருக்கின்றன.) இதனால் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை எக்காலத்திலும் வழங்க முடிகிறது.

## பால்வளம்



**1974-75-ல் தமிழ்நாட்டில் 2525 பால்வளக் கூட்டுறவுச் சங்கங்கள் (22 ஒன்றியங்கள் உட்பட) இருந்தன. இது 1976-77-ல் 3163 ஆக அதிகரித்தது. இச்சங்கங்கள் 1974-75-ல் செய்திருந்த பால் கொள்முதலைவிட (ரூபாய் 1197.43 இலட்சம்), 1976-77-ல் செய்திருந்த கொள்முதலளவு 40 சதவிகிதம் அதிகமாகும் (ரூ. 1680.55 இலட்சம்). விற்பனையும் 1974-75-ல் ரூ. 1497.21 இலட்சமாக இருந்தது. 1976-77-ல் ரூ. 2073.07 இலட்சமாக இருந்தது (38 சதவிகிதம் கூடுதல்). 1976-77-ல் இருந்து வந்த 3163 சங்கங்களில் 1510 சங்கங்கள் ரூ. 493.54 இலட்சம் இலாபமாகப் பெற்றன.**

## ஆடு வளர்ப்பு



1975-76-ல் 62 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. இவற்றின் எண்ணிக்கை 1976-77-ல் 89 ஆக உயர்ந்தது. 1975-76-ல் இருந்த 62 சங்கங்களில் 46 சங்கங்கள் ரூ. 1.80 இலட்சம் இலாபம் பெற்றன. 12 சங்கங்கள் ரூ. 0.17 இலட்சம் நஷ்டமடைந்தன. 89 சங்கங்களில் 42 சங்கங்கள் ரூ. 1.73 இலட்சம் இலாபம் அடைந்தன.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவுகள் அமைத்துச் செயல்படுவதில் தமிழகம் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளது. பல்லாண்டுகட்கு முன்பே குஜராத் மாநிலத்தில் துவங்கிய இந்த இயக்கம் சில ஆண்டுகளில் தமிழகத்தில் விரைவில் பரவி, இந்தியாவில் இரண்டாம் நிலையை எய்தியுள்ளது. 1973-74-ல் இங்கு 26 உற்பத்தியாளர் சங்கங்கள் இருந்தன, இன்று இவற்றின் எண்ணிக்கை 1800-க்கு மேல் உள்ளன.

பால் உற்பத்தியாளருக்குப் பால் பணமாக வழங்கப்பட்ட தொகை 1972-73-ம் ஆண்டில் ரூ. 130.60 இலட்சம். 1978-79ல் அதாவது 6 ஆண்டுகளில் ரூபாய் 1350 இலட்சமாக, 10 மடங்காக உயர்ந்துள்ளது. 1972-73-ல் 4240 விவசாயிகள் பலனடைந்தனர் பால் கூட்டுறவால்! 1978-79-ல் 2,73,000-க்கும் அதிகமான உற்பத்தியாளர்க்கு இவை உறுதுணையாக நின்று வாழ்வளிக்கின்றன.

தமிழகத்தில் கிராம வளம் பெருக—வேலை வாய்ப்பும், வருமானமும் உயர்ந்திட, நிரந்தரமாகிட—பால்வளக் கூட்டுறவுகள் பணிபுரிகின்றன.

இன்னும் 5 ஆண்டுகளில் சுமார் 5,000 கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் தமிழகத்தில் அமைக்கப்பட வேண்டும். அதன் மூலம் 12 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட வேண்டும்-என்ற உறுதியான கொள்கை அடிப்படையில் தமிழக அரசு முனைந்து செயல்பட்டு வருகிறது. இதன் மூலம், கிராமத்தில் வாழும் நலிவுற்ற பிரிவினரின் வாழ்வு மேம்பாட்டையும்-விசையொடிந்த அவர்களின் தேகத்தில் புதிய வேகம் புறப்படும்—அறிஞர் அண்ணா கண்ட 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற ஆசைக் கனவு நிச்சயம் நிறைவேறும்; ஏனெனில் கூட்டுறவு முயற்சியில் முடியாதது ஒன்றுமே இல்லை!



# மீனவர் நலன் காக்கும் மீனவர் கூட்டுறவுச்சங்கங்கள்

சி. செல்லப்பன், ஐ.ஏ.எஸ்.,
மீனவத்துறை இயக்குநர்.

தமிழகத்தில் கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் மாதிரியில் உள்நாட்டு மீனவர் சங்கங்களும், கடல் மீனவர் சங்கங்களும் நிறுவப்பட்டுள்ளன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது 513 உள்ளன. அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பெருமளவு உதவி புரிய முன்வந்துள்ளன. தற்போதுள்ள சாதகமான நிலையில் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சீரமைக்கவும், மீனவர்களுக்கு அதிகமான அளவில் உதவி

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பிரதம மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் ... | 478 | (உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கம் | 200 |
| | | | கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கம் | 278) |
| 2. | கூட்டுறவு விற்பனை ஒன்றியங்கள் ... | 10 | | |
| 3. | மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சம்மேளனங்கள் ... | 9 | | |
| 4. | ஐந்து இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழும் வேலைவாய்ப்பு அதிகரிப்புத் திட்டத்தின் கீழும் நடத்தப்படும் சங்கங்கள் ... | 16 | | |
| | மொத்தம் ... | 513 | | |

சமீப காலம் வரை மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்திய சேம வங்கி (Reserve Bank of India) போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடனேதும் பெறாமல், தமிழ்நாட்டு அரசின் கடனுதவியை மட்டுமே பெற்று வந்தன. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களையும், விவசாய நாணய கூட்டுறவுச் சங்கத்திற்கு இணையாகக் கருதி, இந்திய சேம வங்கிச் சட்டம் திருத்தப்பட்டவுடன் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் அளிக்கும் சக்திகள் விரிவாக்கப்பட்டு விட்டது. இந்திய சேம வங்கி, தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் (National Co-operative Development Corporation) மற்றும்

புரிந்து பயனுள்ளதாக ஆக்கவும் மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து மகிழ்ச்சியோடு விளங்க வைக்கவும் பயன்தரத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்திய சேம வங்கி, தமிழ்நாடு அரசு, தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் ஆகியவற்றின் ஒத்துழைப்போடு உற்பத்தி மற்றும் விற்பனை அபிவிருத்திக்காக மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 75 இலட்சம் வரை கடன் வழங்கும் பயனுள்ள திட்டம் ஒன்று தமிழக மீன்துறையின் தீவிர பரிசீலனையிலுள்ளது. இத்திட்டத்தினால் கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் மதிப்புள்ள மீன் உற்பத்தி மற்றும் விற்பனை உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்னோடியாக 78-79ஆம் ஆண்டில், தமிழக அரசு, உற்பத்தி மற்றும் விற்பனை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்குத் தொகையாகவும் அலுவலர்களுக்காகவும் ரூ. 3 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

## கடன்கள்

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழக அரசால் ஐந்து வகைக்கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அவையாவன:-

1. நீண்டகாலக் கடன், 2. மத்திய காலக்கடன், 3. குறுகிய காலக் கடன், 4. நடைமுறை மூலதனக் கடன், 5. கிடங்கு கடன்.

எல்லா மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் நியாய விலைக் கடைகளை நடத்த தங்கள் துணை விதிகளின் மூலம் அனுமதி பெற்றுள்ளன. தற்போது தமிழ்நாடு மீன்வள அபிவிருத்திக் கழகத்தால் அளிக்கப்படுகின்ற படகுகளுக்கு, மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் என்றால் முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

மீனவர்களுக்கு வழங்கப்படும் கடன் பணமாகவும் பொருளாகவும் தரப்படுகின்றது. முன்கடனைத் தீர்ப்பதற்குப் பணமாகவும், மற்ற கட்டங்களில் மீன்பிடிச் சாதனங்களாகவும், நைலான் நூலாகவும் வழங்கப்படுகின்றன.

உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், உறுப்பினர்களுக்கு அரிய சேவை செய்து வருகின்றன. உள்நாட்டு நீர்நிலைகளைக் குத்தகை எடுத்து அதனை தனது உறுப்பினர்களுக்கு மறு குத்தகை கொடுத்து உறுப்பினர்கள் பயன் பெறத்தக்க வகையிலே வேலை



வர்ய்ப்பினையும் ஊதியத்தையும் பெற அவை வழிவகை செய்கின்றன.

தேசியக் கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் மிக அதிக அளவிலே மீனவர் கூட்டுறவு அமைப்புகளுக்கு உதவிபுரிய முன் வந்துள்ளன.

**பங்கு மூலதனக் கடன்**

மீனவர் கூட்டுறவுச் சங்கம் 5 பங்கு மூலதனம் அங்கத்தினர்களிடமிருந்து வசூல் செய்யும் நிபந்தனையில் 100 சதவிகிதம் பங்கு மூலதனக் கடனைத் தருகின்றது. இதை 14 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

**வாகன வசதிக் கடன்**

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 50 சதவிகிதம் கடன்,50 சதவிகிதம் மான்யம்(இதை 10 வருடங்களில் திருப்பிச்செலுத்த வேண்டும்.)



| | |
|---|---|
| மீன்பிடி குளங்கள் பண்ணைகள் அமைக்க மற்றும் அபிவிருத்தி செய்ய | 100 சதவிகிதம் கடன் உபயோகத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தரப்படும்.(10 வருடங்களில் திருப்பிச் செலுந்த வேண்டும். |
| மீன்விதைப் பண்ணை அமைக்க மற்றும் மீன் வளத்தை அதிகரிக்க | 100 சதவிகிதம் கடன், உபயோகத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தரப்படும். (10 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும்.) |
| மீன்விதைப் பண்ணை அமைக்க மற்றும் மீன்வளத்தை அதிகரிக்க | 100 சதவிகிதம் கடன், உபயோகத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தரப்படும். ( 14 வருடங்களில் இதைத் திருப்பிச் செலுத்த வேண்டும்.) |
| மீனைப் பதப்படுத்த ஐஸ் நிலையங்கள் அமைக்க...... | |
| குளிர்பதன நிலையம் அமைக்க | 55 சதவிகித கடன் 25 சதவிகிதம் பங்கு மூலதனம். |
| மீன்பிடி சாதனங்கள், கலங்கள் சாதாரண மற்றும் விசைப் படகுகள் வாங்க | 20 சதவிகிதம் மானியம் உபயோகத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தரப்படும். 14 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும். சங்கம் 5 சதவிகிதம் பங்குத்தொகை வசூல் செய்யவேண்டும். |
| கிடங்கு கட்ட<br>சில்லரைக் கடைகள் திறக்க | 50 சதவிகிதம் மான்யம்<br>50 சதவிகிதம் கடன் |
| ஐஸ் பெட்டி வாங்க | உபயோகத்தின் அடிப்படையில் படிப்படியாகத் தரப்படும். |



இவை தவிர மாநில சம்மேளனங்களுக்கும், தனிப்பட்ட சிறப்புத் திட்டங்களுக்கும், தனிப் பயிற்சி, நுண்கலை மற்றும் மேலாண்மைப் பயிற்சி ஆகியவற்றிற்கும் முழு அளவிலே பண உதவிபுரிகின்றது.

**விற்பனை ஒன்றியங்கள்**

தற்போது தமிழகத்தில் 10 கூட்டுறவு விற்பனை ஒன்றியங்கள் உள்ளன. அரசின் உதவி பெற்று, உறுப்பினர்கள் பிடிக்கின்ற மீன்களையும், மற்றும் உறுப்பினர்கள் தயாரிக்கின்ற இதர பொருட்களையும் நல்ல முறையிலே விற்பனை செய்து நுகர்வோருக்கும் உறுப்பினர்களுக்கும் நல்ல விலை கிடைக்கச் செய்வதே விற்பனை ஒன்றியங்களின் முக்கிய நோக்கமாகும்.

**அரசின் புதிய திட்டம் :**

இடைத் தரகர்களை நீக்க வேண்டும் என்ற நோக்கத்தோடும், அரசு அளித்துள்ள -அளிக்கின்ற சலுகைகள் எல்லாம் உண்மையான மீனவர்களுக்கே சேர வேண்டும் என்ற நோக்கத்தோடும், அரசு, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் நேரடியாக மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளவரே உறுப்பினராக இருக்க முடியும் என்ற திட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. அதன்படி, மீன்பிடித் தொழிலில் நேரடியாக ஈடுபடாத மீனவர் சங்க உறுப்பினர்கள் எல்லோரும் அந்தந்த மீனவர் சங்கங்களிலிருந்து உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு வருகின்றார்கள். இப்பணி தமிழகம் முழுமையும் செயல்படுத்தப்பட்டு, மீன்பிடி தொழிலில் நேரடியாக ஈடுபடாதவர்களில் பெரும்பான்மைப் பகுதியினர் அந்தந்த சங்கங்களிலிருந்து நீக்கப்பட்டு விட்டார்கள். இதன் பொருட்டு எல்லா மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும் தங்கள் துணை விதிகளைத் தகுந்தவாறு திருத்தியுள்ளன.

சமீபகாலம்வரை தமிழக அரசு மட்டுமே மீனவர் கூட்டுறவு சங்கங்களுக்குப் பண உதவி அளித்து வந்துள்ளது. தற்போது அரசு உதவியோடு, தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம், இந்திய சேம வங்கி ஆகிய நிறுவனங்களும் மீனவர் கூட்டுறவுகளுக்குப் பெருமளவில் உதவிபுரிய முன் வந்துள்ளது. மற்றும் ஹிட்கா (HIDCA), இப்பட் (HIFAD) போன்ற சர்வதேச நிறுவனங்களும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி புரிய முன்வந்துள்ளன. மாவட்ட மீனவர் கூட்டுறவு வங்கிகளை ஏற்படுத்தும் திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் செயல்படத் துவங்குமேயானால் மீனவர்களுக்கு உதவிட இதைவிடச் சிறந்த நிறுவனம் வேறு ஏதும் இருக்க முடியாது என்பதில் ஐயமில்லை.

**இரால் வியாபாரம்**

மற்ற மீன் ரகங்களைக் காட்டிலும் இன்று மீனவர்களுக்கு நல்ல வருவாயை ஈட்டித் தருவது இரால் மீனாகும். இதற்குக் காரணம், இந்த இரால் மீனை மேல் நாட்டவர் மிகவும் விரும்பி உணவாக அருந்தி வருவதே, தற்சமயம் இரால் மீன் ஏராளமான அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி வருகிறது. இதனால், இரால் மீன் ஏற்றுமதிக்காக, மீன் வியாபாரிகள் இரால் மீனை அதிக விலை கொடுத்து வாங்க முன்வந்துள்ளனர். இதன் நிமித்தம் நல்ல ரக இரால் மீன் கிலோ ஒன்றுக்கு ரூ. 80 முதல் ரூ. 90 வரை விலை கொடுத்து வாங்கப் படுகிறது. ஆகவே, தற்சமயம் அநேகமாக எல்லா மீனவர்களும் இரால் மீன் பிடிப்பதில் தங்களது முழுக் கவனத்தை செலுத்தி வருகின்றனர்.

தமிழக அரசும் மேற்படி இரால் மீன் வியாபாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் இரால் மீன் வளர்ப்புக்கு ஏற்ற சுமார் 27,000 எக்டேர் கழிமுக நீர் நிலைப் பகுதிகளை இரால் வளர்ப்புக்குப் பயன்படுத்த, அரசு நிறுவனங்கள் நேரடியாக இந்தப் பகுதிகளை இரால் வளர்ப்பதற்குப் பயன்படுத்தி எடுத்துக் கொள்ளும் பகுதிகளைத் தவிர, இதர பகுதிகளை, மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரால் வளர்ப்பிற்காக நீண்டகாலக் குத்தகைக்குத் கொடுக்க உத்தரவிட்டுள்ளது.



## மீனவர் கூட்டுறவுகள்

1972-73-ல் எட்டு மத்திய சங்கங்கள் உட்பட மொத்தம் 469 மீனவர் கூட்டுறவுகள் இருந்தன. தற்போது 519 சங்கங்கள் (19 மத்திய சங்கங்கள் உட்பட) உள்ளன. 1972-73-ல் இவை ரூ. 10.38 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு மீன் பிடிப்பு செய்திருந்தன. 1976-77-ல் இதன் மதிப்பு ரூ. 27.28 இலட்சமாக இருந்தது.

உள்ளூர்க் குளங்களிலும், ஏரிகளிலும் மீன் பிடிப்பைக் குத்தகைக்கு எடுத்து 100 சங்கங்கள் தொழில் செய்கின்றன. மீனவர்களின் உதவிக்கு மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம் கைகொடுக்கின்றன. ஆண்டு சராசரி விற்பனை ரூ. 15 இலட்சமாகும்.

தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் வழங்கும் உதவிகளை மீனவர் கூட்டுறவுகள் பெற்றுக் கொள்கின்றன. 5 மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் மற்றும் மான்யமாக ரூ. 8.07 இலட்சம் வழங்கப்பட்டது.

மத்திய அரசின் ஒருங்கிணைந்த இரால் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 78-79ஆம் ஆண்டு முதல் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் மீன் பிடித்தொழில் அபிவிருத்திக்கு நைலான் நூல் விசைப்படகுகள், நாட்டுப்படகுகள் முதலியன 50 சதவீத மானியத்துடன் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே மீனவ சங்கத்தினர்களுக்குப் பட்டுவாடா செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதைத்தவிர, வறட்சிபாதிப்புப் பகுதித்திட்டத்தின் கீழ் இராமநாதபுர மாவட்ட மீனவ கூட்டுறவுச் சம்மேளனத்தின் மூலம் 300 நாட்டுப் படகுகள், 150 விசைப்படகுகள் முதலியன விநியோகம் செய்யவும் அவர்களுக்காகப் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கவும் மீன் விற்பனை வாகன ஊர்திகள் வாங்கவும் ரூபாய் 91.11 இலட்சம் (மானியம் ரூ.50.61 இலட்சம், கடன் ரூ. 40.50 இலட்சம்) அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுக்காலத்திற்குள் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது..

தமிழகத்திற்கு மாநில அளவில் ஓர் கூட்டுறவுச் சம்மேளனம் மிகவும் அவசியமானதாகும். இந்த அமைப்பு தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்திலிருந்து பெருமளவு பண உதவி பெற்று பயன்தரத்தக்க பல திட்டங்களை உருவாக்க முடியும். தற்போது மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மேற் கொண்டிருக்கும் உற்பத்தி விற்பனைப் பணிகளை ஒருங்கிணைக்கவும் முடியும். இவ்வித மாநில அளவிலான சம்மேளனம் அமைக்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. இனி புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டால் உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்களாகத்தான் அமைக்கப்படும்.

தமிழக அரசு, மீனவர்கள் மேம்பாடுடன் வாழ பல திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றது. அவர்களுக்கு ஒளி பொருந்திய எதிர்காலம் கூட்டுறவு அமைப்புகளின் மூலம்தான் அமையவிருக்கிறது என்றால் அது மிகையாகாது.



விதைப் பெருக்குத் திட்டப்பிரிவை கூட்டுறவுத் துறைச் செயலாளர் செல்வி. எம்.எஸ்.ரமேஷ் அவர்கள் பார்வையிடுகிறார்.

# 'டியூகாஸ்' என்றால் என்ன?

'டியூகாஸ்' என்றழைக்கப்படும் 'துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா நிலையம்' 1955-ஆம் ஆண்டு, தமிழக அரசின் முன்னோடித் திட்டத்தின் கீழ் 'துடியலூர் கிராம வளர்ச்சி வங்கி' என்ற பெயருடன் துவக்கப்பட்டு தற்போது துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா நிலையம் என்ற பெயரில் தென்னிந்தியாவில் தலை சிறந்த கூட்டுறவு நிலையமாக விளங்கி வருகிறது.

இச்சங்கம், 56 குக்கிராமங்களை உள்ளடக்கிய 13 ரெவின்யூ கிராமங்களைக் கொண்ட 135 சதுர கிலோ மீட்டர் பரப்பில் வாழும் பத்தாயிரம் மக்களுக்குச் சேவை புரியும் வகையில் எல்லை அமைப்பைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆரம்ப நிலையில் 397 உறுப்பினர்களையும், ரூ. 32,460- மூலதனத்தையும் கொண்ட இச்சங்கம், இன்று 11,839 உறுப்பினர்களையும், ரூ. 12,69,935-50 பங்கு மூலதனத்தையும் கொண்டிருக்கிறது. உறுப்பினர்களுக்கு விவசாய வளர்ச்சிப் பணிகளுக்காக அசையாச் சொத்துக்களின் பேரில் மத்திய காலக் கடன்களையும், மற்றும் நகை ஈட்டுக்கடன், கறவை மாட்டுக்கடன், உரக் கடன், விவசாயக் கருவிகள், கொள்முதல் கடன் போன்ற குறுகிய காலக் கடன்களையும் கொடுத்து வருகிறது. பல கிராமங்களைச் சார்ந்த உறுப்பினர்களிடமிருந்து அவர்களுடைய சேமிப்பின் கணிசமான பகுதியாக ரூ. 51,22,828 வரை, வைப்பு நிதியாக இச்சங்கம் பெற்றுள்ளது.

அரசு ஆணைப்படி, தமிழகத்திலேயே முதன்மையாக தேசியமயமாக்கப்பட்ட கனரா வங்கியிலிருந்து ரூ. 150 இலட்சம் ஆண்டுக் கடன் அளவு பெற்றுள்ளது.

இச்சங்கம் உறுப்பினர்கள், ஏனைய விவசாயப் பெருங்குடி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், கீழ்க்காணும் உற்பத்தி மற்றும் விநியோகப் பணிகளை மேற்கொண்டு வருகிறது:

**கலப்பு உரங்கள் :**

1961-ஆம் ஆண்டிலிருந்து ''அசோகா மார்க்'' என்ற தரமான கலப்பு உரங்களை உற்பத்தி செய்து, கோவை மாவட்டம், பெரியார் மாவட்டம் முழுவதுமுள்ள 82 கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், நீலகிரி மாவட்ட தேயிலைப் பயிர்களுக்கும், நீலகிரி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகம் செய்து வருகிறது.

**கால்நடை, கோழித் தீவனங்கள் :**

தீவிர கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1965-ஆம் ஆண்டு, ரூ. 2.40 இலட்சத்தில் தமிழக அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு, தரமான கால்நடை மற்றும் கோழித் தீவனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**பூச்சிக்கொல்லி மருந்துகள் :**

தேசிய வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன், 1970-ஆம் ஆண்டில் ரூ. 4,50,000-ஐ மூலதனமாகக் கொண்டு பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் தொழிற்கூடத்தை இச்சங்கம் நிறுவியுள்ளது. இத்தொழிற்கூடத்தின் மூலம் தனியே தூவப்படும் பொடி மருந்துகள், நீரில் கலந்து தெளிக்கும் பொடி மருந்துகள், நீரில் கலந்து தெளிக்கும் திரவ மருந்துகள் ஆகியவற்றை இந்திய தர நிர்ணயக் கழகத்தின் தரக் கட்டுப்பாட்டிற்குட்பட்டு தயாரித்து மாநிலத்தின் பல்வேறு கூட்டுறவுச்சங்கங்களுக்கும், அரசு விவசாய டிப்போக்களுக்கும், இச்சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் விநியோகம் செய்து வருகிறது.

உற்பத்தியாகும் மருந்துகளின் தரத்தை அவ்வப்போது பரி





சோதிக்க நவீன வசதிகள் கொண்ட ஆய்வுக்கூடம் ஒன்று திறமை வாய்ந்த இரசாயன வல்லுநர்கள் மூவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது. இப்பூச்சிக் கொல்லி மருந்தின் விற்பனைப் பிரிவு தமிழக அரசின் வேளாண்மைத் துறையிலிருந்து அயல் பணியில், பணியாற்றும் ஒரு இணை வேளாண்மை இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது.

**விதைப்பெருக்குத் திட்டம் :**

இத்திட்டம், தேசிய வளர்ச்சிக் கழகம், தமிழக அரசு ஆகியவற்றின் நிதி உதவியுடன் ரூ. 1.70 கோடி செலவில், விவசாயிகளுக்குத் தரமான, அரசு சான்றிதழ் பெறப்பட்டு சாஸ்திரியமான முறையில் விதைகளைக் குறைந்த விலையில் அளிக்கும் பொருட்டு, கோவை மாவட்டத்திலுள்ள ஒன்பது கூட்டுறவுச் சங்கங்களுடன் கூட்டாகத் துவக்கப்பட்டுள்ளது.

விதைப் பெருக்கத் திட்டத்தின் கீழ் இச்சங்கம் பருத்தி மற்றும் வீரிய வித்துக்களுக்கான நிலையங்களைச் சுமார் 4,000-ஏக்கரில் அமல் செய்வதோடு, மத்திய அலுவலகமாகவும் செயல்படுகிறது. நவீன கருவிகள் கொண்ட மத்திய விதைப் பரிசோதனைக் கூடமும், விதைகளை நீண்ட காலத்திற்குக் கெடாமல் பாதுகாத்து வைக்க தட்பவெப்ப நிலைகளைக் கட்டுப்படுத்தும் கிடங்கும் கட்டப்பட்டுள்ளது. விதை உற்பத்திக்குத் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகள் திறமை வாய்ந்த வேளாண்மைத்துறையைச் சார்ந்த அலுவலர்களால் வழங்கப்படுகின்றன.

**விவசாய உபகரணங்கள் வாடகைக்கு விடுதல் :**

இச்சங்கத்தின் சீரிய பணிகளைக் கண்ணுற்ற அகில உலக நிறுவனமான 'கேர்' நிறுவனம், ரூ. 5 இலட்சம் மதிப்புள்ள டிராக்டர்கள், துளைபோடும் இயந்திரங்கள், கதிரடிக்கும் இயந்திரங்கள் முதலியவற்றை 1969-ஆம் ஆண்டில் நன்கொடையாகக் கொடுத்துள்ளது. நன்கொடையாகப் பெறப்பட்ட இயந்திரங்களுடன் நிலையம் சொந்தமாகக் கொள்முதல் செய்த டிராக்டர், கதிரடிக்கும் இயந்திரம், பவர் டில்லர், பாறை உடைக்கும் இயந்திரம், கிணறு துளைபோடும் கருவிகள் முதலியவற்றைக் குறைந்த வாடகைக்குக் கொடுத்து வருகிறது.

**விவசாய உபகரணங்கள் உற்பத்தி:**

விவசாயத் தேவைக்கேற்ற கொத்துக் கலப்பைகள், பார் ஓட்டும் கலப்பைகள், கதிரடிக்கும் இயந்திரங்கள், தட்டு வெட்டும் இயந்திரங்கள், விசைத் தெளிப்பான்கள், சாண எரிவாயுச் சாதனங்கள், விதை தரம் பிரிக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்து விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றது.

**பெட்ரோல் பங்க்-சர்வீஸ் ஸ்டேஷன் :**

இப்பகுதியில் அதிகமான அளவில் விவசாயிகள் பவர் ஸ்பிரேயர்களைப் பயன்படுத்தி வருவதால், அவர்களுக்குத் தேவையான பெட்ரோல், டீசல் எண்ணெய் ஆகியவற்றை வழங்கிவருகின்றது. ஊர்திகளைக் கழுவிச் சுத்தம் செய்து எண்ணெய், கிரீஸ் முதலியன இட்டு செப்பனிடும் பகுதியும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்சங்கம் தொடங்கி 25 ஆண்டுகள் ஆனதை முன்னிட்டு வெள்ளிவிழா அலுவலகக் கட்டடம் கட்டுவதற்குக் கடந்த ஏப்ரல் மாதம் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்களால் கால்கோள் விழா நடத்தப்பட்டது.

சங்கத்தின் நிர்வாகமானது, தகுதியும் திறமையும் வாய்ந்த தலை சிறந்த கூட்டுறவாளர் திரு டி. என். பழனிசாமி அவர்களின் தலைமையின் கீழ் 12 இயக்குநர்களைக் கொண்டு சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

# ஜார்ஜ் டவுன் கூட்டுறவு வங்கி லிமிடெட்,

**எண் 8512**

(பாதுகாப்புப் பெட்டக வசதியுடன்)

டாக்டர் பி. நடேசன் மாளிகை

62, கிருஷ்ணப்ப அக்ரஹாரம் தெரு, சென்னை—600 001

பெரம்பூர் கிளை : 60, படேல் சாலை, பெரம்பூர், சென்னை—600 011

வர்த்தக வங்கிகளை விட டெபாசிட்டுகளுக்கு 1 % அதிக வட்டி பெறுவீர்.

| | | |
|---|---|---|
| எங்கள் நடைமுறை மூலதனம் | ... | ரூ. 5 கோடிக்கு மேல் |
| எங்கள் டெபாசிட்டுகள் | ... | ரூ. 4 கோடிக்கு மேல் |

1977-78 ஆம் ஆண்டு அளித்த ஈவுத்தொகை 12%

புதிய வட்டி விகிதங்கள் :

சேமிப்பு வைப்பு 6 %

நிரந்தர வைப்பு :

| | |
|---|---|
| 1 ஆண்டு | 8 % |
| 3 ஆண்டுகளுக்கு மேல் | 9.5 % |
| 5 ஆண்டுகளுக்கு மேல் | 11 % |

தொடர் வைப்பு : 8% முதல் 11% வரை கூட்டு வட்டி

| | | | |
|---|---|---|---|
| மாதம் ரூ. 10 செலுத்தினால் | 12 மாதங்களுக்குப் பின் | ரூ. | 125—80 |
| ,, | 60 ,, | ரூ. | 768—75 |
| ,, | 120 ,, | ரூ. | 2177—25 |

G. T. C. மறுமுதலீட்டுத் திட்டம் : 9.5% மற்றும் 11% கூட்டு வட்டி.

உங்கள் குழந்தைகளின் உயர் கல்விக்கும், திருமணத்திற்கும் உதவும் மறுமுதலீட்டுத் திட்டத்தில் சேருவீர்!

ரூ. 1,000 முதலீடு செய்தால்

255 மாதங்களில் ரூ. 10,033—55 திரும்பப் பெறலாம்.

எல். சுப்பிரமணியன், பி.காம்.,
துணைப் பதிவாளர்/செயலர்

டி. சி. பாபு, பி.காம்.,
தலைவர்.




# ஒளி பரவட்டும்


ம. கனகசபாபதி,
தனி அலுவலர்,
தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்.


வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர் தம் உள்ளத்தனையது உயர்வு என்பார் வள்ளுவப் பெருந்தகை. உயர்ந்த இலட்சியத்தை அடைய வேண்டுமென்ற உறுதியில்லாத மக்கள் சிறந்த சாதனைகளை நிகழ்த்திக்காட்ட முடியாது. கூட்டுறவு இயக்கம் பணியில் சிறந்திருக்க வேண்டுமானால் கூட்டுறவு இயக்கக் கொள்கைகளையும் கூட்டுறவு நிர்வாக முறைகளையும் தெரிந்து கொள்ளுதல் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டுள்ள அனைவரின் கடமையாகும். இச்சீரிய பணியில் கடந்த 65 ஆண்டுகட்கு மேலாகத் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

கூட்டுறவியக்கம் சமூக பொருளாதார மேம் பாட்டுக்காக இயங்கி வருகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் அதன் அங்கங்களாக அமைந்து ஆக்கப்பணியில் ஈடுபட்டு வருகின்றன. இந்தப் பெரும் பயணத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள அனைவரும் பெரும் பங்கு வகிக்கின்றனர். எனவே கூட்டுறவு அமைப்புகளில் இடம் பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களும் சங்கத்தின் நோக்கங்கள், செயல்முறைகள், நிர்வாகத்தின் வழிமுறைகள் சங்கத்திற்கு ஆற்றவேண்டிய கடமைகள் சங்கத்தின் மூலம் பெறக்கூடிய உரிமைகள் அனைத்தையும் தெரிந்திருக்கவேண்டும்.

கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாகத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் மிகுந்த பொறுப்புண்டு என்ற உணர்வு உறுப்பினர்களுக்கு ஏற்படாலன்றி நிர்வாகம் செம்மையாக நடைபெறும் என்று சொல்லமுடியாது. ஏனெனில் கூட்டுறவு நிறுவனத்தின் வாழ்விலும் தாழ்விலும் உறுப்பினர்கள் காட்டும் அக்கறை பின்னிப் பிணைந்துள்ளது. இதற்கு உயிர் ஓட்டமாக அமைந்துள்ளது கூட்டுறவுக் கல்வியாகும்.

## கூட்டுறவுக் கல்வி

கூட்டுறவியக்கத்தின் வெற்றிக்குக் கூட்டுறவுக் கல்வி மிக மிக முக்கியமானது என்பது இந்த இயக்கம் தோன்றியகாலம் தொட்டே ஏற்றுக்கொள்ளப் பட்ட உண்மையாகும். கூட்டுறவியக்கத்திற்கு வித்திட்ட வித்தகர்கள் என்று போற்றப்படும் ''ராக்டேல்'' முன்னோடிகள் தாங்கள் உருவாக்கிய கூட்டுறவுத் தத்துவத்தில் கூட்டுறவுக் கல்வியை வலியுறுத்தியிருக்கிறார்கள். கூட்டுறவியக்கத்தின் வளர்ச்சிக்கு அது மக்கள் மனத்தில் வேரூன்றி நிலைபெறவும் கூட்டுறவுக்கல்வி ஓர் அடிப்படைத் தேவையாகும் என்பது அவர்களுடைய கருத்து. எனவே ஒவ்வொரு சங்கமும் உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுக் கல்வியைப் புகட்டவேண்டுமென்று அந்த முன்னோடிகள் கருதினார்கள்.

அனைத்துலகக் கூட்டுறவு மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆறு கூட்டுறவுக் கொள்கைகளில் ''கூட்டுறவுக் கல்வி'' முக்கிய இடம் வகிக்கிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சட்டம், விதி முறைகளில் கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்த ஒவ்வொரு சங்கத்தின் நிகர இலாபத்தில் 2 சதவீதம் ,கூட்டுறவுக் கல்விக்காக ஒதுக்கப்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் மட்டுமின்றி கூட்டுறவுச்சங்க நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருக்கும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள், சங்கத்தலைவர் ஆகியோருக்கும் கூட்டுறவு இயக்கக் கொள்கை விளக்கமும், சங்கங்களைத் திறமையாக நடத்திச் செல்லத்தக்க பயிற்சியும் தேவைப்படுகிறது.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு மட்டுமின்றிச் சங்கத்தின் அன்றாட நிர்வாகப்பொறுப்பை மேற்கொண்டிருக்கும் பணியாளர்களும் கூட்டுறவுச் சங்கத்தின் செயல்முறைகளைப் பற்றிப் போதிய பயிற்சி பெற்றவர்களாக

இருக்கவேண்டும். மேலும் கூட்டுறவியக்கத்தின் நோக்கங்கள், சேவைகள், சாதனைகள்,செயல் திட்டங்கள் அனைத்தையும் அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துரைத்துக் கூட்டுறவியக்கத்தில் ஈடுபாடு கொள்ளச்செய்யும் பிரச்சாரப்பணியினையும் மேற்கொள்ளவேண்டியிருக்கிறது.

தமிழகத்தில் கூட்டுறவுக் கல்விப் பயிற்சி மற்றும் பிரச்சாரப்பணியில் கடந்த 65 ஆண்டுகளாகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் அயராது பணியாற்றி வருகிறது. கூட்டுறவியக்கம் வளர்ந்து வந்த பொழுது கூட்டுறவுப் பிரச்சாரம் மற்றும் கல்வியைப் பிரச்சாரப் படுத்தவும் பழம் பெரும் கூட்டுறவாளர்களான திவான்பகதூர் திரு. ஆதிநாராயணய்யா, திரு. யூ. வெங்கட்ராமய்யா, திரு.ஆதி நாராயண செட்டியார் திரு.எம் சிவராவ் இன்னும் பல பெரியோர்கள் ஒன்றுகூடி இவ்வொன்றியத்தை நிறுவினார்கள். இந்தியாவில் முதன் முதலாகத் தோன்றிய கூட்டுறவுப்பிரச்சார நிறுவனம் இதுதான்.

தமிழகத்திலுள்ள 13 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள், 7 கூட்டுறவுப்பயிற்சிக் கழகங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் உறுப்பினர்களாவார்கள். உறுப்பினர்கள் செலுத்தும் ஆண்டுச் சந்தாவைத் தவிர கூட்டுறவு நிறுவனங்களின் நிகர லாபத்திலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் 2 தொகையைக் கல்வி நிதி பெற்றுத் தமிழ் நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்விப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**கல்வியும் பயிற்சியும்:**

கூட்டுறவுச்சங்க உறுப்பினர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கங்களையும் செயல் முறைகளையும் சங்க உறுப்பினர்களின் கடமைகளையும் உரிமைகளையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு உறுப்பினர் கல்வித்திட்டம் நடத்தப் பட்டு வருகிறது. இதற்காகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் ஏழு பிரச்சார வண்டிகள் மாதத்தில் 20 நாட்கள் கிராமங்களில் பயணம் செய்கின்றன. மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத் தனி அலுவலரும் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சார்ந்த பல அலுவலர்களும் இணைந்து கிராமங்களுக்குச் சென்று உறுப்பினர் கல்வி முகாம்களை நடத்தி வருகின்றார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுக் கூட்டம் மற்றும் பொதுப்பேரவைக் கூட்டங்கள் கூட்டி உறுப்பினர்களுக்குத் தேவையான விளக்கங்கள்



அளிக்கப்படுகின்றன. மாலை வேளைகளில் கூட்டுறவு வேளாண்மை,பால்வளம்போன்ற திரைப்படங்கள் காட்டப்பட்டு வருகின்றன.

அனைத்திந்திய வானொலியில் ''வயலும் வாழ்வும்'' நிகழ்ச்சியின் மூலம் கடந்த ஆண்டு கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி வகுப்புகள் நடத்தப்பட்டன. அதைத்தொடர்ந்து கோவை, திருச்சி, நெல்லை ஆகிய நிலையங்கள் மூலம் இத்தகைய வகுப்புகள் நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மேலும் தேசியக்கூட்டுறவு ஒன்றியத்துடன் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும் இணைந்து சென்னை நகரத்தில் நுகர்வோர் கூட்டுறவுக் கல்வித்திட்டம் நடத்தி வருகிறது. நகரிலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகளில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ள தாய்மார்களைச் சந்தித்துக் கூட்டுறவுப்பண்டகசாலைகள் பற்றிய விளக்கங்கள், பண்டங்களை வாங்கும் முறை, அவற்றால் ஏற்படும் நன்மைகள், உறுப்பினர்கள் காட்டவேண்டிய ஈடுபாடு ஆகியவை எடுத்துரைக்கப்படுகின்றன. தாய்மார்களுக்குத் தேவையான சமையற் குறிப்புகள் ஓய்வு நேரத்தில் மேற்கொள்ள வேண்டிய கை வேலைப்பாடுகள் போன்றவை கற்றுத்தரப்பட்டு அவர்களுக்குக் கூட்றவுப் பண்டகசாலையின் மீது ஈபாடு கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக ஒரு திட்ட அலுவலரும் அவருக்கு உதவி புரிய ஒரு பெண்போதகரும் பணி புரிகிறார்கள்.

தமிழகத்தில் 7 கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றத் தேவையான இளநிலைப் பணியாளர்களுக்குத் தக்க பயிற்சி அளித்து, கூட்டுறவுச் சங்கங்கள் திறமையாக நிர்வகிக்கப்பட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பணியாற்றி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் 1400 இளநிலைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்து வருகிறது. இது மட்டுமன்றிப் பயிற்சி இன்றி கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றி வரும் பணியாளர்களுக்குப் பகுதி நேரப்பயிற்சியும் குறுகிய காலப் பயிற்சியும் அளித்து, பணியாளர்களின் மேலாண்மைத் திறமையை அதிகப்படுத்தியும் வருகிறது.

பால்வள நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு ஈரோட்டில் தனிப் பயிற்சி நிலையம் துவக்கப்பட்டு பால்வள கூட்டுறவுச் சங்க செயல்முறைகளுக்கு ஒத்த சிறப்புப் பயிற்சி வழங்கப் படுகின்றது.

சென்னையில் தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் நிர்வாகத்தில் நடைபெறும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிக்கு, குறுகிய காலச் சிறப்புப் பயிற்சிகள் நடத்துவதற்காகத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நிதிஉதவி வழங்கி வருகிறது. அண்மையில் 75 மனைகள் கொண்ட பரப்பில் அண்ணா நகரில் அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுக் கல்லூரியின் புதிய கட்டிடத் தொகுதிக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் சுமார் ரூ. 27 இலட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது என்



பது தமிழகக் கூட்டுறவு இயக்க வரலாற்றில் ஒரு சிறப்பான அம்சமாகும்.

1979-80 கூட்டுறவாண்டில் உறுப்பினர் கல்வித் திட்டத்தின் கீழ் சுமார் 80,000 உறுப்பினர்களுக்குக் கல்வி அளிக்கவும் குறுகிய காலப் பயிற்சித் திட்டத்தின் கீழ் கூட்டுறவுக் கல்லூரி மூலம் 25 குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளும் ஏழு கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளிகள் மூலம் 140 குறுகிய காலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**கூட்டுறவுப் பிரச்சாரம்:**

கூட்டுறவு இயக்கத்தில் சார்ந்துள்ளவர்கள் மட்டுமின்றி வெளியே இருப்பவர்களும் கூட்டுறவு இயக்கச் சிறப்பு இயல்புகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். கூட்டுறவுப் பிரசாரத்தைச் சீராகவும் தொடர்ந்தும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் செய்து வருகின்றது.

கூட்டுறவு இயக்கக் கருத்துக்கள், திட்டங்கள், சாதனைகள், நிறுவனங்களின் சிறப்புமிக்க வரலாறு, கூட்டுறவுத் தலைவர்கள் வாழ்க்கைக் குறிப்புகள் ஆகியவற்றைத் தாங்கி தமிழில் 'கூட்டுறவு' என்ற இதழும், ஆங்கிலத்தில் 'தமிழ்நாடு ஜெர்னல் ஆப் கோவாப்பரேஷன்' என்ற இதழும் கடந்த 50 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகின்றன. இதே போன்ற தமிழகத்திலுள்ள 13 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் நடத்தி வரும் செய்தி மடலுக்குத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நிதிஉதவி செய்து ஊக்குவித்து வருகிறது.

கூட்டுறவின் சிறப்பு அம்சங்களை விளக்கும் பல வண்ணச் சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு அவை பரவலாகத் தமிழகமெங்கும் விளம்பரப்படுத்தப் படுகின்றன. அவ்வாறே சிறப்புத் திட்டங்களை விளக்குகின்ற துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. பயிற்சி நிலைய மாணவர்களுக்குத் தேவையான பாட நூல்களும் அச்சிட்டு வினியோகிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு காலாண்டுக்கும் கூட்டுறவுத் துறை சார்ந்த புள்ளிவிவரத் தொகுப்பும் ஓராண்டு புள்ளி விவரப் புத்தகமும் அச்சிட்டு வெளியிடப்படுகின்றன.

கூட்டுறவு தொடர்பாக முழக்கங்கள் அடங்கிய பதாகைகள் தயாரிக்கப்பட்டு விழாக்களின் போது விளம்பரப்படுத்தப்படுகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு




ஒன்றியம் தயாரித்து வழங்கிய ''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்ற 'ஸ்டிக்கர்' அனைவரையும் கவர்ந்தது. அதேபோன்று 'பேட்ஜ்'களும் தயாரிக்கப்பட்டு கூட்டுறவாளர்கள் அறிந்துகொள்ள வழங்கப்பட்டு வருகின்றன. பல வண்ண ஸ்லைடுகள் மூலமாக தமிழகத்திலுள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் கூட்டுறவுச் செயல் முறைகள் விளம்பரப் படுத்தப்படுகின்றன.

வானொலி, தொலைக்காட்சி மூலம் கூட்டுறவு தொடர்பான விளக்க உரைகள் கூட்டுறவு நிறுவனங்கள் பற்றிய சித்திரம், உரையாடல், பேட்டி முதலியவை நடத்தப்பட்டு வருகின்றன. வர்த்தக ஒலிபரப்பு மூலமாகக் கிராமக் கூட்டுறவுச் சங்கத்தின் முக்கியத்துவம் பற்றியும் உறுப்பினர்கள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடமை பற்றியும் இசையுடன் கூடிய முழக்கங்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுக் கருத்துக்களை மையமாகக்கொண்ட கதை அம்சமிக்க கூட்டுறவுத் திரைப்படம் பிரச்சாரப் பிரிவு மூலம் கிராமங்களில் காட்டப்பட்டு வருகிறது. கூட்டுறவு தொடர்பாகத் திரைப் படங்கள் தமிழகம் மற்றும் மத்திய அரசின் திரைப்படப் பிரிவிலிருந்து தருவித்தும் காட்டப் பட்டு வருகின்றன.

கிராமக் கூட்டுறவுச் சங்கத்தில் பெறப்பட்ட கடன்களைத் திருப்பிச் செலுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் திரைப் படம் ஒன்று தயாரிப்பதற்கான ஏற்பாடு தமிழ்நாடு திரைப் படப்பிரிவு மூலம் செய்யப்பட்டு வருகிறது.

கூட்டுறவு நிறுவனங்களின் செயல்முறைகளில் தோன்றும் சிக்கல்களைக் கண்டறியவும் அவற்றைக் களைய வழிவகைகள் காணவும் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் கருத்தரங்குகளும் மாநாடுகளும் அவ்வப் போது நடத்தப்படுகின்றன. மாவட்ட அளவில் எழும் பிரச்னைக்குத் தீர்வுகாணும் வகையில் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் கருத்தரங்குகளை நடத்துகின்றன. அண்மையில் ''கிராம நுகர்வோர் திட்டம்'' பற்றி உதகையில் நடத்தப்பட்ட அனைத்திந்திய நுகர்வோர் கூட்டுறவுக் கருத்தரங்கு வரலாற்றுச் சிறப்புமிக்கதொன்றாகும்.

**கண்காட்சி:**

கூட்டுறவுப் பிரச்சாரத்தில் கண்காட்சி நடத்துவது ஒரு குறிப்பிடத்தக்க அங்கமாகும். மாநில அளவிலான அரசு நடத்தும் கண்காட்சிகளிலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் நடத்தும் கண்காட்சியிலும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் பங்கு பெற்று கவர்ச்சி மிக்க அரங்குகளை அமைத்து வருகின்றது. மாவட்ட அளவில் நடைபெறும் திருவிழாக்கள் கூட்டுறவு விழாக்கள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் பங்கேற்று கண்காட்சிகள் நடத்தி வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா தமிழகமெங்கும் சிறப்பாகக் கொண்டாட வேண்டிய ஏற்பாடுகளைத் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் சிறப்பாகச் செய்து வருகின்றன. சிறந்த கூட்டுறவாளர்களை கௌரவித்தல், சிறந்த கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பாராட்டுக் கேடயங்கள் வழங்குதல், சிறந்த கூட்டுறவாளர்களுக்குப் பதக்கங்கள் அளித்துப் பாராட்டுதல்,கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், கூட்டுறவாளர்களும் பல்துறை அறிஞர்களும் வழங்கும் கருத்துரைகள் ஏற்பாடு செய்தல் போன்றவை முக்கியமாக இடம் பெறும். இந்த ஆண்டும் தொடர்ந்து அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது.

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலக் கூட்டுறவு ஒன்றியங்களிலும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் நிதிவசதி மற்றும் கூட்டுறவுப் பிரச்னை நடவடிக்கைகளில் தனிச் சிறப்போடு இடம்பெற்று வருகிறதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோன்றி 75 ஆண்டுகள் ஆகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கடந்த 65ஆண்டுக் காலமாகக் கல்வி மற்றும் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டு கூட்டுறவியக்கத்தில் ஒரு சிறப்பான வரலாறு படைத்துள்ளது. கூட்டுறவு ஒளிபரப்பும் பணியில் இந்த நிறுவனம் தொடர்ந்து தளராது பணிபுரியத் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ளது.




# தேசியக் கூட்டுறவுக் கொள்கைகள்

- தொழில் வளர்ச்சி, கிராமம் சார்ந்த பொருளாதார மேம்பாடு ஆகியவற்றைப் பரவலாக்க உதவும் பெரும் சாதனங்களில் ஒன்றாகக் கூட்டுறவு நிறுவனங்கள் அமைக்கப்படும்.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான திட்டங்கள் தீட்டும்போது அனைத்து மட்டங்களிலும் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படும்.
- எளியோரைப் பாதுகாக்கும் "கேடயமாக" கூட்டுறவியக்கம் வளர்க்கப்படும். சிறிய, மிகச் சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள் குறைந்த, மற்றும் நடுத்தர வருவாயுள்ளவர்கள், கூட்டுறவியக்கத்தில் பங்குபெற அதிக வாய்ப்பளிக்கப்படுவதுடன், கோடிக்கணக்கான கிராம மக்களை இவ்வியக்கத்தில் ஈடுபடுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.
- கூட்டுறவு வளர்ச்சி தேசிய அடிப்படையில் ஏற்படுத்தப்படும், மண்டலங்களுக்கிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் படிப்படியாக அகற்றப்படும்.
- கூட்டுறவியக்கம் தனித்தியங்கும் தன்னிறைவு பெற்ற அதே வேளையில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, வெளியார் தலையீடு, முக்கியமாக அரசியல் தலையீடில்லா இயக்கமாக அமைக்கப்படும். கூட்டுறவுச் சங்கங்களின் தன்னாட்சியானது சொந்த நிதி வளத்தைப் பெருக்குவது —நகர, கிராமப்புறங்களின் சேமிப்பைச் சேகரிப்பது—அரசு மற்றும் பிற நிதி நிறுவனங்களின் உதவியை நாடாமல் குறைப்பது — ஆகிய அடிப்படையில் அமையும்.
- சுயநலமிகளின் ஆதிக்கத்திற்குட்படாத தெளிவு பெற்ற உறுப்பினர்கள் கொண்ட துடிப்புள்ள கூட்டுறவு ஜனநாயகம் உருவாக்கப்படும்.
- கூட்டுறவியக்கத்தின் நற்பெயரை மாசுபடுத்துகிற கூட்டுறவுக்கொள்கைகளுக்கு ஊறு விளைவிக்கின்ற ஊழல் மற்றும் முறைகேடுகளைக் களைந்து கூட்டுறவியக்கம் தூய்மைப்படுத்தப்படும்.
- கிராமப்புறங்களில் கடன் வழங்குதல், விவசாயத்துக்குத் தேவையான இடுபொருள் வழங்குதல், மற்றும் துணைத் தொழில்களான மாடு, கோழி, மீன், பன்றி வளர்ப்பு மற்றும் அவசியப்பண்டங்கள் வழங்குதல் போன்ற அனைத்திற்கும் உள்ள தொடர்பினை வலுப்படுத்தி, முழுமையான முன்னேற்றம் ஏற்படுத்தும் வகையில் தன்னிறைவுள்ள ஒருங்கிணைந்த கூட்டுறவு முறையை அமைக்க வேண்டும்.
- உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்குமிடையில் ஆதாயமுள்ள சிக்கனமான இணைப்பை அமைக்க கூட்டுறவு மூலம் வேளாண்மை அடிப்படையில் அமைந்த பதனிடுதல் மற்றும் தொழில் பிரிவுகள் அமைக்கப்படவேண்டும்.
- பொதுவிநியோக முறையை வலுப்படுத்தவும் நுகர்வோர் பாதுகாப்பு அரணாகச் செயல்படவும், விலைவாசிகளைக் கட்டுப்படுத்தும் சாதனமாகவும் நுகர்வோர் கூட்டுறவியக்கம் அமைக்கப்படும்.
- எளிய சாதாரண நடைமுறைகளுடன் கூடிய அமைப்புகளாகத் திறம்பட இயங்க, கூட்டுறவு நிறுவனங்களின் செயல்முறைகள் மேம்படுத்தப்படும்.
- தகுதி மிக்க, பொருத்தமானவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு முறையான பயிற்சியளிக்கும் திட்டத்தின் மூலம், தொழில் நுணுக்கமறிந்த நிர்வாகிகள் உருவாக்கப்படுவார்கள்.



நமது பொருளாதார அமைப்பின் எல்லாத் துறைகளிலும் கூட்டுறவு முறையானது நன்கு பரவியுள்ளது. பொருள்களின் விலை உயர்வுகளைக் கட்டுப்படுத்திப் பொது மக்களுக்கு நேர்மையான விலையில் அவர்களின் அவசியத் தேவைகளை வழங்கி உதவும் சிறந்த பணியைக் கூட்டுறவு நிலையங்கள் செவ்வனே நிறைவேற்றி வைக்க முடியும். சிறப்பான வகையில் அவைகளின் அமைப்பு இயங்குவதன் மூலம்தான் இயக்கம் இந்த உயர்ந்த குறிக்கோளை அடைய முடியும். கூட்டுறவுத் துறையானது பலம் பெற்று நல்ல வளம் பெற யாவரும் பாடுபடுவோமாக!

—பேரறிஞர் அண்ணா



# குடும்ப நலமும் கூட்டுறவும்

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் குக்கிராமங்களுக்கும் பரந்து விரிந்து, பல்லாயிரக் கணக்கான மக்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. இவ்வியக்கம் தன் உறுப்பினர் குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்திலும் சமூக நலத்திலும் பெரும் அக்கறை கொண்டுள்ளது. ஆகவே, குடும்ப நலத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும் கூட்டுறவு இயக்கம் தன் பங்கை வகித்து வருகிறது. இதைத் தீவிரப்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்ட வகைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:-

குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளைப்பற்றிப் பிரச்சாரம் செய்தல், தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் உடல் நலம் பேணும் பணிகளை மேற்கொள்ளுதல், தடுப்பு ஊசி போடும் முகாம்களை அமைத்தல்.

குடும்பக் கட்டுப்பாட்டுக்குத் தேவையான 'நிரோத்' போன்றவற்றைக் கூட்டுறவுச்சங்கங்கள் விநியோகித்தல். கூட்டுறவு சஞ்சிகைகளில் குடும்ப நலம் பற்றிய செய்திகள் தொடர்ந்து இடம் பெறுதல்.

மூன்று அல்லது அதற்குக் குறைவான குழந்தைகளையுடைய தம் பணியாளர் யாரேனும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொண்டால், அப்பணியாளருக்குக் கூட்டுறவுச் சங்கம் ஓர் ஆண்டு உயர் ஊதியத்தை அளித்தல்.

# கூட்டுறவுக் கொடி

கடைசி அட்டையில் வெளியாகியுள்ள படம் கூட்டுறவுக் கொடியாகும். கூட்டுறவுக் கொடியில் வண்ணங்கள் ஏழும் ஊதா (Violet), கரு நீலம் (Indigo), நீலம் (Blue), பச்சை (Green), மஞ்சள் (Yellow), ஆரஞ்சு (Orange), சிகப்பு (Red) என்ற வரிசையில் கீழிருந்து மேலாக நிறங்கள் சரிமட்டமாக அமைந்துள்ளன.

1895-ஆம் ஆண்டில் உலகெங்கும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்காக இலண்டன் மாநகரில் அனைத்து நாட்டுக் கூட்டுறவு நிலையம் அமைக்கப்பட்டது. அடுத்த ஆண்டில் 1896-ல் பிரான்சு நாட்டைச் சேர்ந்த எப்ஃபெர்னாடார்ட் என்னும் கூட்டுறவாளர், அனைத்து நாட்டுக் கூட்டுறவு நிலையத்திற்கு ஒரு கொடி அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆனால், அவருடைய கருத்து பல ஆண்டுகளாக முற்றுப் பெறாமல் இருந்தது. 1923-ல் 'ஜெண்ட்' எனும் இடத்தில் நடைபெற்ற அனைத்து நாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் செயற்குழுவில் ஒரு கொடியை அமைக்க வேண்டும் என்று ஒருமனதாக முடிவெடுத்தார்கள்.

தன்னிச்சையாய் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கும் உணர்வின் அடிப்படையில் ஏற்பட்டுள்ள கூட்டுறவு முயற்சியின் அறிகுறியாக அமையும் கொடி எவ்வாறு இருக்க வேண்டும் என்ற பிரச்சினை எழுந்தது. பிரஞ்சு நாட்டுக் கூட்டுறவாளர் சொன்னார் :

"அனைத்து நாட்டுக் கூட்டுறவு நிறுவனம் வானவில்லின் ஏழு வண்ணங்களைக் கொண்டதொரு கொடியை அமைத்துக் கொள்ளுதல் பொருத்தமானது. கொடியில் கழுகு, சிங்கம், புலி முதலிய வன விலங்குகளுக்குப் பதிலாக நாகரிக முன்னேற்றத்தை விளக்கக் கூடிய கரங்கள் இரண்டு கொண்ட சின்னம் பொறிக்கப் பெறல் வேண்டும்".

வானவில்லின் பின்னால் ஒரு தங்கப் புதையல் உள்ளது என்பதாக மேலை நாட்டுப் பழங்கதை ஒன்று உண்டு. இது வெறும் கட்டுக் கதையே ஆயினும், வானவில்லின் தோற்றம் அனைவருக்கும் உற்சாகத்தையும் நம்பிக்கையும் தரும் நிகழ்ச்சி என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆகவே, வானவில்லின் அமைப்பு, கூட்டுறவு இயக்கத்தின் கொடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டது.



# நம்பிக்கை விடியல் கீதம்



—கவிஞர் முத்துராமலிங்கம்—

ஏழையரின் இதய வானில் ஒளி
ஏற்றி வைத்த சூரியன் நீ!
வாழையென வைத்திழந்தும் நானும்
வளர் பிறை தான்; சந்திரன் நீ!
காளையரின் வழிப்பயணம்; திசை
காட்டுவதால் துருவ விண் மீன்!
நாளையவர் வாழ்வினுக்கோர் நல்ல
நாள்; நம்பிக்கை விடியல் கீதம்!

விதைத்தவன்; அறுத்துச் சேர்த்தே
விளைச்சலால் உள்ளம் சோர்ந்தோன்
சிதைத்திடும் கடனின் பின்னல்
சிக்கலைத் தீர்த்தாய் வாழி!
கதைப்பவர் கதைத்துப் பார்த்தார்;
கலகமும் மூட்டிப் பார்த்தார்!
நினைத்ததை முடிப்பவன் நீ! பெரு
நெருப்பினைச் சருகா மூடும்?

நடை பயிலக் காலிரண்டு, உலகை
நலம் பார்க்கக் கண்ணிரண்டு!
உடை கூட அணிகையிலே இரண்டு;
உழைப்பதற்கோ கையிரண்டு!
தடையெதற்கு சைக்கிளிலே இருவருக்கு?
தகக வழிப் பயணமன்றோ ஏழையர்க்கு?
விடை யெதற்கு? கேள்விக்கே; ஆட்சி
வினாக்குறிகள் நிமிர்வதற்கே!...

குளிருக்குப் போர்வை யானாய், விழி
குருடர்க்குப் பார்வை யானாய்!
நலிவிற்குச் செல்வ மானாய்; இந்
நாட்டிற்கே முதல்வனானாய்!
பொலிவுக்குப் புதையலானாய்; உயர்
புரட்சிக்கோ தலைவனானாய்!
அழிவிற்கோர் ஆக்கமானாய்; நல்
ஆட்சிக்கோ வாழி! வாழி!....

சாகாவரம் பெற்ற கதைகள்;

# சிரிக்கவில்லை

—கு. அழகிரிசாமி

மத்தியானம் இரண்டு மணி இருக்கும். ராஜாராமன் வீட்டுக்குள்ளே தனியாகப் படுத்துக்கொண்டிருந்தான். பன்னிரண்டு மணிக்குப் படுத்தவனாதலால் இரண்டு மணிக்கெல்லாம் தூக்கம் கலைந்துவிட்டது. நன்றாகத் தூங்கிய பிறகும், ஒரு பத்துப் பதினைந்து நிமிஷம் தூக்கமும் இல்லாமல் விழிப்பும் இல்லாமல் படுக்கையிலேயேபடுத்துக்கொண்டிருப்பது ஒரு சுகமான அனுபவம். அவனுடைய தாயார் எப்போதும் இரண்டு மணிக்கெல்லாம் காப்பி போட்டு வைத்திருப்பாள். அன்று அவளைக் காணவில்லை. ஆகவே விழித்துப் பார்த்ததும் சிறிது நேரத்தில் கண்களை இலேசாக மூடிக்கொண்டு பழையபடியும் படுத்துக் கொண்டான். மறுபடியும் தூக்கம் புது அத்தியாயத்தை ஆரம்பித்தது. இப்போது முக்கால் வாசித் தூக்கம் என்று கூடச் சொல்லிவிடலாம். அந்தச் சந்தர்ப்பத்தில் வாசலில் வெயிலுக்கு மறைவாகக் கட்டியிருந்த படுதாவில் ஒரு நிழல் தெரிந்தது. அம்மாதான் வருகிறாள் என்று நினைத்துக் கொண்டு அக்கறையில்லாமல் திரும்பிப் படுத்துக் கொண்டான். ஒரு நிமிஷம் கழிந்தது, இரண்டு நிமிஷம் கழிந்தது, ஐந்து நிமிஷம்கூட ஆனது. அம்மா வரவில்லை.

அப்படியானால் 'யார் அது?' என்று எட்டிப் பார்த்தான் ராஜாராமன். நிழலை இப்போது காணவில்லை. உடனே எழுந்தான். வாசலில் திரையை விலக்கிக் கொண்டு பார்த்தான். வெளியே யாரையும் காணவில்லை. வெயில்தான் தகித்துக் கொண்டிருந்தது. தூங்கி விழித்த அவன் கண்கள் கூசின; நெருப்பாக எரிந்தன. வெயில் கொடுமை, கண் எரிச்சல். தாயார் காப்பி போடாமல் எங்கோ போய் விட்டது, வாசலில் வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போன ஆள் இன்னாரென்று தெரியாமல் போனது-எல்லாம் சேர்ந்து அவனுக்கு எரிச்சலை உண்டாக்கிவிட்டன! கண்ணைக் கசக்கிக் கொண்டே வந்து குப்புறப்படுத்துவிட்டான். அந்தச் சந்தர்ப்பத்தில் தலையணையில் நெற்றியைத் தேய்த்துக்கொள்ளுவது மிகவும் சுகமாக இருந்தது. சாணையிலே கத்தியைத் தீட்டுவது போலத் தலையை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் இழுத்து நெற்றியைத் தேய்த்துக் கொண்டே இருந்தான். கொஞ்ச நேரத்தில் பழையபடியும் தூக்கம் வந்துவிட்டது. பாவம்! இரவெல்லாம் விழித்திருந்த அலுப்பு! குழந்தையைப் போல நிமிஷத்துக்கு ஒரு தூக்கம் தூங்கிக் கொண்டிருந்தான். பழையபடியும் படுதாவில் நிழல் தெரிந்தது. படுதாவில் உள்ள ஒரு சிறு துவாரத்தின் வழியே அந்த நிழலின் கண் எட்டிப் பார்த்தது. கண் மட்டும் நிழலில்லை. உண்மையான கண்தான். பிறகு கொஞ்ச நேரத்தில் அந்த நிழல் பதினாறு வயதுப் பெண்ணாக மாறி வீட்டுக்குள்ளேயே வந்துவிட்டது.

குப்புறப்படுத்துக்கொண்டிருந்த ராஜாராமனுடைய சட்டை போடாத முதுகையும், பிடரியின் மடிப்புகளையும் திரண்டு உருண்ட புஜங்களையும் பார்த்துக்கொண்டே நின்றது நிழல் - அதாவது அந்தப் பெண். பிறகு, அங்கே ஜன்னலிலிருந்த கண்ணாடியை எடுத்து நேராக நிமிர்த்தி வைத்துப் பக்கத்தில் கிடந்த ஒரு புதுச் சீப்பினால் தன் தலையைப் பட்டும் படாமல் இலேசாக இழுத்துக்கொண்டாள். தலை ஏற்கெனவே வாரப்பட்டிருந்தது.

அந்தக் கண்ணாடி ஒரு பொய்க்கால் குதிரை. அதன் பின்னால் அதைத் தாங்கிக் கொண்டிருக்கும் இரும்பு வளையம் காற்றடித்தாலும் 'டப்' பென்று படுத்துக் கொள்ளும். அப்படியிருக்க சீப்பு பலமாகத் தட்டியதைப் பொறுக்குமா? கண்ணாடி திடீரென்று எதிர்பாராதவிதமாகச் சாய்ந்து விட்டது; 'டபார்' என்று சப்தமும் கேட்டது.

இவ்வளவு நேரமும் மட்டித் தூக்கம் தூங்கிய ராஜாராமன் சப்தத்தைக் கேட்டதும் 'பளிச்' சென்று திரும்பிப் பார்த்தான்.

பாப்பம்மாள் பரக்கப் பரக்க விழித்துக்கொண்டு நின்றாள். ஒன்றுமே ஓடவில்லை. இலேசாகச் சிரிப்போமா என்றுகூட முயற்சி செய்தாள். சிரிப்பு வரவில்லை.

ராஜாராமனோ, ''என்ன சப்தம்?'' என்று கேட்கவில்லை.

''எப்போ வந்தே?'' என்றுதான் இனிமையாகக் கேட்டான்.

தான் கண்ணாடியைத் தாராளமாக எடுத்து உபயோகப்படுத்திய குற்றத்தைக் கண்டு, ''என்ன சப்தம்?'' என்று அவன் கேட்டால் சிரித்து மழுப்பிட நினைத்தாள். ராஜாராமன் இந்தக் குற்றத்தைப் பொருட்படுத்தாமல், வேறு கேள்வியைப் போட்டதனால் பாப்பம்மாள் சிரிப்பதற்கு அவசியம் நேரவில்லை. உடனே அப்பாவிப் பெண் போல முகத்தை வைத்துக் கொண்டு, ''இப்பத்தான் வந்தேன்'' என்றாள்.

''என்ன விஷயம்''?

சும்மா வந்தேன்'' என்றாள் பாப்பம்மாள்.

''எப்பக் கேட்டாலும் 'சும்மா' தானா?''

ராஜாராமன் சிரித்தான். பாப்பம்மாள் சிரிக்கவில்லை. அவசியம் இல்லாமலே, ''நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

''பாப்பம்மா'' என்று உரத்த குரலில், ஆனால் ரகசியம்போலக் கூப்பிட்டான் ராஜாராமன்.

அவள், ''நான் போகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.



பாப்பம்மாள் இப்படித் தினமும் நாலு தடவை ராஜாராமன் வீட்டுக்குச் 'சும்மா' வருவாள். ராஜாராமன் வீட்டிலிருந்தாலும் இல்லாவிட்டாலும், அவனுடைய தாயார் சமையல் செய்யும் போது மிகவும் அக்கறையாக உட்கார்ந்து அவளுக்கு ஒத்தாசை செய்வாள்! அவள் சொல்லாமலே பாப்பம்மாள் காய்கறிகளை எடுத்து நறுக்கத் தொடங்கி விடுவாள். வீட்டிலே இருப்பது ராஜாராமனும் அவனுடைய தாயாருமாக மொத்தம் இரண்டு உருப்படிகள்தான். பாப்பம்மாளோ ஒரு கல்யாணத்திற்குக் காய்கறிகளை நறுக்குவது போல வீட்டில் வாங்கி வைத்த காய்கறிகளையெல்லாம் நறுக்கி அம்பாரமாகக் குவித்து வைத்துவிடுவாள். இதைப் பார்த்ததும் ராஜாராமனுடைய தாயார் ஓடி வந்து,

''என்ன வேலை இது பாப்பம்மா! சும்மாயிரு இண்ணாலும் இருக்கயா? இவ்வளவையும் ஒரேயடியாக நறுக்கச் சொன்னது யாரு? எந்திரி, நல்ல வேலை செய்தே, பொம்பிளை!'' என்று அங்கலாய்ப்பாள்.

மிகவும் மனவருத்தத்துடன் முகத்தைக் கோணவைத்துக் கொண்டு எழுந்திருப்பாள் பாப்பம்மாள். அப்படியே தன் வீட்டுக்குப் போய்விடமாட்டாள். எழுந்து இப்படியும் அப்படியும் உலாத்திவிட்டு, புழக்கடையிலே கொடியில் காய்ந்து கொண்டிருக்கும் ராஜாராமனுடைய வேஷ்டி, சட்டைகளை எடுத்துக் கொண்டு வந்து வீட்டுக்குள்ளே போடுவாள். இதைப் பார்த்தால் ராஜாராமனுடைய தாயாருக்குக் குலை நடுக்கம் எடுத்துவிடும்.

''இதென்னடா அநியாயமாயிருக்கு! பார்க்கிறவங்களுக்கு இது எப்படி இருக்கும்? வீட்டுக்கு வந்த மருமக மாதிரி, இப்படி வேட்டி சட்டையைத் தூக்கிட்டு அலையறா இந்தப் பொண்ணு'' என்று சத்தம் போட்டுச் சொல்லிவிட்டு, ''அம்மா! பாப்பம்மா, 'ஒண்ணைத்தானே' ஒங்க அம்மா கூப்பிடறாளாம், போய் என்னான்னு கேளு!'' என்று ஒரு பொய்யைச் சொல்லி அனுப்புவாள்.

பாப்பம்மாள் போகும்போது வழக்கம்போலவே ''நான் வீட்டுக்குப் போகிறேன்'' என்று யாரையும் எதிர்பாராமல் தனக்குத்தானே சொல்லிக்கொண்டு போய்விடுவாள்.

ராஜாராமனுக்கு ரயிலில் புக்கிங் கிளார்க் வேலை; இந்த ஊருக்கு மாற்றிவந்து ஒரு வருஷமாகிறது. இந்த ஊர் ஒரு குட்டி டவுன். அங்கே ஹோட்டல் சாப்பாடு பிடிக்காமல் தன் தாயாரை ஊரிலிருந்து அழைத்துக் கொண்டு வந்து விட்டான். ஸ்டேஷனுக்குஅருகாமையிலேயே சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் ரயில்வே உத்தியோகஸ்தர்களின் வீட்டு வரிசை இருக்கிறது. அந்த வரிசையில் இரண்டாவது வீடுதான் ராஜாராமன் வீடு. அந்த ரயில்வேக் கம்பெனி வீடுகளுக்கு அடுத்தாற்போல ஓர் ஏழெட்டு வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகளில் ஒரு வீட்டைச் சேர்ந்தவள் பாப்பம்மாள். அவளுடைய அப்பாவுக்கு ஒரு பலசரக்குக்கடையில் கணக்குவேலை. அந்தக் கிழவரை ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாட்களில் வீட்டில் பார்க்க முடியாது. சாப்பாட்டு நேரம் போக மீதி நேரமெல்லாம் கடையில் தான் பெட்டியடியில் கிடப்பார். ஆகவே வீட்டில் பாப்பம்மாளும் அவளுடைய தாயாரும்தான் இருப்பார்கள். நாளெல்லாம் வீட்டிலேயே இருப்பது பாப்பம்மாளுக்குச் சங்கடமாக இருக்கும். அதனால் பக்கத்து வீட்டுப் பெண் ஒருத்தியோடு போய்ப் பல்லாங்குழி விளையாடிக் கொண்டிருப்பாள். அந்தப் பக்கத்து வீட்டுப் பெண், போன மாதம் கல்யாணமாகிப் புருஷன் வீட்டுக்குப் போய்விட்டாள். அதனால், பாப்பம்மாள் இப்போது ராஜாராமன் வீட்டுக்கு முன்போல ஏகதேசமாக வராமல் ஓயாமல் வந்து கொண்டிருந்தாள்; வரும்போதெல்லாம் 'சும்மா' தான் வருவது!

ராஜாராமனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை. நல்ல வாட்ட சாட்டமான உடம்பு. மா நிறமானாலும் பூசி மெழுகி விட்டது போன்ற பளபளப்பான மேனி. கண்களில் ஈரம் படிந்து குளு குளு என்றிருக்கும். ஒரு வார்த்தை பேசுவதென்றால் ஆயி



கு. அழகிரிசாமி

தமிழ் மறுமலர்ச்சி எழுத்தாளர்களில் முன் வரிசையில் வைத்து மதிக்கப்பட வேண்டியவர் காலஞ் சென்ற அமரர் கு. அழகிரிசாமி அவர்கள். அழியாத பல இலக்கியச் செல்வங்களை நமக்கு விட்டுச் சென்றுள்ளார் அவர். அவருடைய 'அன்பளிப்பு' என்ற நூலுக்குச் சாகித்ய அகாதமிப் பரிசும், 'கவிச்சக்கரவர்த்தி' என்ற நூலுக்குத் தமிழ்நாடு அரசின் பரிசும் கிடைத்துள்ளன. அவருடைய சிறுகதைத் தொகுதிகள், ஒன்பதுக்கு மேல் வெளிவந்துள்ளன. அவருடைய கதைகள் கருத்தாழம் கொண்டவை; சிந்தனையைத் தூண்டுபவையாகும்.

கு. அழகிரிசாமியின் சிறந்த சிறுகதைகளில் ஒன்றான, ''சிரிக்கவில்லை'' என்ற கதையை இவ்விதழில் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

ரம் பொன் கேட்கும் அடக்கமான பேர்வழி. எடுத்ததற்கெல்லாம் சிரிப்பான்; ஆனால் வாய்விட்டுச் சிரிக்கமாட்டான்.

சோம்பேறித்தனம் அவனுக்கு ஒரு சுகபோகம். அதிலும் இப்போது ரயில்வேயில் வேலையான பிறகு, ஒரு வாரம் ராத்திரி வேலையும் ஒரு வாரம் பகல் வேலையுமாகப் போய்விட்டதனால், ராத்திரி வேலை நாட்களில் பகலெல்லாம் உறங்குவான். பகல் வேலை நாட்களிலோ இரவில் உறங்குவதோடு நின்றுவிடுவது கிடையாது. பகலிலும் தூக்கம் வரும். எப்படிப்பட்ட காரியத்துக்குச் சந்தர்ப்பம் கிடைத்தாலும், அந்தச் சந்தர்ப்பத்தைத் தூங்குவதற்குத்தான் பயன்படுத்துவான். பகலிலும் இரவிலும் கண்கள் சொருகிப்போய் ஒரு மயக்க நிலையிலேயே இருப்பான். அப்படி இருப்பதில் ஒரு கவர்ச்சி இருக்கும். சிலர் எப்படி இருந்தபோதிலும் கூடக் கவர்ச்சி மட்டும் அவர்களை விட்டுப் போகாமலே இருந்து விடுகிறது அல்லவா?



**பா**ப்பம்மாள் கண்ணாடியைக் கீழே தள்ளிய நாள் போய் சுமார் பத்து, பதினைந்து நாட்கள் ஆகியிருக்கும். நடுவிலே ஏதோ ஒரு நாள் ராஜாராமனுடைய தாயார்—அந்தப் பெரியம்மாள்—அரிக்கன் லாந்தரின் மூடியைக் கழற்ற முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தாள். அப்போது ராஜாராமனும் வீட்டில் இல்லை. சந்தர்ப்ப வசமாக வந்த பாப்பம்மாள், தான் கழற்றுவதாகச் சொன்னாள். பெரியம்மாளுக்கோ லாந்தரைக் கொடுக்க இஷ்டமில்லை; ஆனால் பிடிவாதம் பிடித்துக்கொண்டு பாப்பம்மாள், பெரியம்மாள் கையிலிருந்த லாந்தரைப் பிடித்து இழுத்தாள். உடனே அவள் சிமினியைப் பத்திரமாகக் கழற்றிக் கொண்டு லாந்தரைப் பாப்பம்மாள் கையில் கொடுத்தாள். அதை வாங்கி, பல்லைக் கடித்துக் கொண்டு மூடியைக் கழற்ற முயன்றாள். முடியவில்லை. உடனே தன் சேலை முந்தியை விரலில் சுற்றிக்கொண்டு திருகினாள். எவ்வளவோ [illegible]ரம் கழித்து,மூடி ‘படார்’ எ[illegible] திறந்தது. ஆனால் திறந்ததோடு விவகாரம் நின்றுவிட வில்லை. லாந்தரில் கொஞ்ச நஞ்சம் இருந்த மண்ணெண்ணெய் இருவர் மேலும் தெறித்து, பக்கத்தில் கிடந்த பாயிலும் கொட்டிவிட்டது.

‘‘அப்போதே சொன்னேன், கேட்டியா? கொண்டா கொண்டான்னு லாந்தரைப் பிடுங்கிக்கிட்டே!’’ என்று எப்போதும் இல்லாதவாறு மிகவும் அதிகமாகக் கோபித்துக் கொண்டாள் பெரியம்மா.

பாப்பம்மாள் மிகவும் பயந்து போனாள். அன்றுமுதல் அவள் ராஜாராமன் வீட்டுக்குச் சரியாக வருவதே இல்லை. அந்தத் தெரு வழியாக மட்டும் பத்துத் தடவை போய்வருவாள். வாசலில் ஈஸிச் சேரில் படுத்துக்கொண்டு பேப்பர் படிக்கும் ராஜாராமனை போகும்போது ஒரு தடவையும் வரும்போது ஒரு தடவையுமாகக் கடைக் கண்ணால் பார்ப்பாள். ராஜாராமன் சிரித்தால் சிரிப்பாள். இல்லாவிட்டால், புருவத்தை இடுக்கிக்கொண்டு, முகத்தையும் ‘உம்’மென்று வைத்துக் கொண்டு போய்விடுவாள்.



ஒருநாள் பாப்பம்மாளுக்கு ஒரே சந்தோஷம் வந்துவிட்டது. அவள் வீட்டில் பசு, கன்று போட்டுவிட்டது. இந்த ‘அதிசயமான’ செய்தியைச் சொல்லுவதற்கு ராஜாராமன் வீட்டுக்கு ஓட்டோடியும் வந்தாள். ராஜாராமன் வாசலில் உட்கார்ந்திருந்தான். அதை அவள் லட்சியம் பண்ணவே இல்லை. விறு விறு என்று வீட்டுக்குள்ளே போய், வேர்த்து விறு விறுக்க பசு கன்று போட்ட செய்தியைச் சொன்னாள். இது வெளியிலிருந்த ராஜாராமனுக்குத் தெளிவாகக் கேட்டது. உடனே ஜன்னல் வழியாக உள்ளே திரும்பி, ‘‘கண்ணுக்குட்டிக்குக் கொம்பு ரெண்டா, நாலா?’’ என்று கேட்டான்.

‘‘ஆமா. எட்டிருக்கும் ஒங்க காலத்திலே!’’

‘‘அப்படியானால் ரெண்டு கொம்புதானா? அடேடே, இதுக்குத்தானா இப்படி ஓடிவரணும்?’

பெரியம்மாள் சிரித்தாள். பாப்பம்மாள் வேகமாக வெளியில் வந்து ராஜாராமனுக்கு எதிரே நின்று கொண்டாள். ஆள் வந்ததும் ராஜாராமனுடைய ஹாஸ்யம் காற்றில் பறந்துவிட்டது. பேசாமல் தலை குனிந்து கொண்டான்.

‘‘ஒங்களுக்கு இனிமேல் பால் கொண்டு வரட்டுமா? இந்தா பாருங்கோ’’ என்று ராஜாராமனின் குனிந்த தலையை வாய்ச் சொல்லாலேயே நிமிர்த்த முயன்றாள் ’பாப்பம்மாள்.

ராஜாராமன் ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே, பழையபடியும் ‘‘பால் வேண்டாமா? உம்?’’ என்று ரகசியம்போல் ‘குசு குசு’ வென்று சொன்னாள். எந்த விஷயத்தையும் ரகசியம் போலச் சொன்னால், அதில் ஒரு கவர்ச்சி ஏற்பட்டு விடும். ராஜாராமனுக்குப் பாப்பம்மாள் பேசப் பேச மிகவும் சுகமாக இருந்தது.

‘‘ம் ம். பால் கொண்டு வா.’’

‘‘சரி, நான் வீட்டுக்குப் போகிறேன்’’ என்று புறப்பட்டாள் பாப்பம்மாள்.

‘‘இந்தா, இன்னிக்குக் கொண்டு வந்துடாதே! நாலு நாள் போகட்டும்’’ என்று அவன் எச்சரித்தான். அவன் சொன்னதைப் பாப்பம்மாள் கேட்டாளோ இல்லையோ?

மறுவாரம் ராஜாராமனுக்குப் பகல் வேலை. காலையில் கொஞ்ச நேரமும் அப்புறம் சாப்பாட்டுக்காக வரும் நேரமும் தவிர, மீதி நேரமெல்லாம் அவனுக்கு ஆபீசில் வேலை இருந்தது. அதனால் அந்த வாரத்தில் பாப்பம்மாள் வந்து போனது ராஜாராமனுக்குத் தெரியாது. பால் மட்டும் வீட்டுக்கு ஒழுங்காக வந்து கொண்டிருக்கிறது என்பதைத்தெரிந்துகொண்டான்.

அதற்கு அடுத்த வாரம்; இரவு வேலை வந்தது. பகலில், பாயும் படுக்கையுமாகத் தான் வழக்கம் போல வீட்டோடு கிடந்தான் ராஜாராமன். சாயங்காலக் காப்பிக்காகச் சுமார் நாலரை மணிக்கெல்லாம் பால் கொண்டு வந்துவிடுவாள் பாப்பம்மாள். ராஜாராமனுடைய தாயார், மத்தியானம் இரண்டு மணிக்கு வீட்டு வேலையை ஒதுங்க வைத்து விட்டு வெளியே போனால், அப்புறம் திரும்பிவர மணி ஐந்தாகிவிடும். எங்காவது பக்கத்து வீட்டுப் பெண்களுடன் போய்ப் பேசிக் கொண்டிருப்பாள். இந்த நித்திய நியதி ராஜாராமனுக்குத் தெரியும்; பாப்பம்மாளுக்கும் தெரியும். அதனால்தான் அவள் நாலரைக்குப் பதிலாக நாலுமணிக்கே பால் கொண்டு வரத் தொடங்கினாள். பாலை ஜன்னலில் வைத்துவிட்டு வந்து, ராஜாராமன் தூங்கிவிட்டானா என்று எட்டிப் பார்த்தாள். அவன் முன்பெல்லாம் இந்த நேரத்துக்குத் தான் தூங்கச் செல்வான்; இப்போதோ தூங்குவதெல்லாம் வெறும் பாசாங்கு!

ஒருநாள் நாலு மணிக்குப் பாப்பம்மாள் வந்தாள். அன்று அவள் புதுப் புடவை கட்டிக் கொண்டு புது ரவிக்கையும் போட்டுக்கொண்டு வந்தாள். புடவை அலங்காரத்திற்குப் பொருத்தமாக முகத்தைக் கழுவி சாந்துப் பொட்டு வைத்துக் கொண்டு, தலையிலே பூவும் முடித்துக் கொண்டு வந்து விட்டாள். அன்று அவளுக்கு ஒரே குதூகலம்.

ராஜாராமன் பொய்த் தூக்கத்தில் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் அவன் தானாகவே எழுந்து விடுவது வழக்கம். அன்று அவன் விழிக்கும் வரையிலும் பாப்பம்மாள் சும்மா இருக்கவில்லை, கண்ணாடியை எடுத்துப் பார்த்தாள். சீப்பு இருந்தால் இன்னும் கொஞ்சம் படிய வாரிக் கொள்ளலாம் போல இருந்தது. சீப்பைக் காணவில்லை. ‘சரி, காணோம்; எங்கே இருக்கோ?’ என்று மனத்துக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.



ராஜாராமனை எழுப்ப வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. எப்படி எழுப்புவது? அவனுடைய தாயார் ‘‘ராசா’’ என்று அவனை அழைப்பது வழக்கம். பாப்பம்மாள் கொஞ்சம் யோசித்தாள். அப்புறம் தூங்குகிறவனுக்குக் கேட்கவா போகிறது என்று நினைத்து, விளையாட்டாக ‘ராசா’ என்றாள்.

‘‘ராசா’’ என்று கொஞ்ச உரக்கச் சொன்னாள். அதுவும் விளையாட்டாகவும் ரகசியம் போலவும் இருந்தது.

ராஜாராமனுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டான்.

சிறிது நேரம் கழிந்தது.

பம்மாளுக்கு உலகமே புரண்டது போலிருந்தது.

ஒரு நல்ல நாளன்று குழந்தையோடு வந்து சேர்ந்தாள் ராஜாராமனின் மனைவி. அவள் வந்த சிறிது நேரத்திற்குள் மிகவும் உற்சாகத்துடன் ஓடோடியும் வந்தாள் பாப்பம்மாள். வந்து ஆவலோடு குழந்தையைப் பார்த்தாள். ராஜாராமனுடைய சாயலிலேயே இருந்தது குழந்தை. அதிலும் குழந்தையின் புன்சிரிப்பு ராஜாராமனின் புன்சிரிப்பேதான். தாமரை இதழ்களின் வெளிவரிசையும் உள் வரிசையும் உருவத்தில் பெரிதும் சிறியதுமாக இருந்தாலும், அமைப்பு ஒன்றுபோலவே இருப்பது மாதிரி இருந்தன. அந்த இரண்டுபேரின் புன்னகைகளும்!

இதைப் பார்க்கும்போது பாப்பம்மாளுக்கு என்னவோ போலிருந்தது. அவளுடைய ஏதோ ஒரு நம்பிக்கை அடிப்படையோடு சாய்ந்து விழுந்துவிட்டது. ராஜாராமன் அவன் மனைவிக்குத்தான் சொந்தம், என்பதைக் குழந்தை ஒவ்வொரு கணமும் சிரித்துச் சிரித்து நிரூபித்தது.

ராஜாராமனால் தான் அவள் குழந்தை பெற்றாள். குழந்தையோ அவன் குழந்தை. ஆனால் பிறந்தது அவள் வயிற்றில். கல்யாணமானால் இப்படிக் குழந்தை பிறக்கத்தான் செய்யும் என்பதைப் பாப்பம்மாள் முன்பு நினைத்ததாகத் தோன்றவில்லை; நினைக்காதது போலவும் தோன்றவில்லை. எப்படியும் குழந்தை பிறந்துவிட்டது. அப்படியானால் அவன் அவளுக்கு எப்போதோ சொந்தமாகிவிட்டான். இப்போது பாப்பம்மாள் யார்? குழந்தை பெறாத பாப்பம்மாள் யார்?

எழுந்து வெளியே வந்தாள். ஒருவரோடும் ஒன்றும் பேசவில்லை. வழக்கம்போல 'நான் வீட்டுக்குப் போகிறேன்' என்றும் அவள் சொல்லவில்லை. மிகவும் வேகமாகத் தன் வீட்டைநோக்கி நடந்தாள். வீட்டுக்குப் போய்ப் படுக்கையில் வீழ்ந்ததும் அவளுக்கு அழுகை வந்துவிட்டது. 'மூஸ் மூஸ்' என்று நாலைந்து தடவை அழுதாள்; விம்மினாள். ஒரு நிமிஷத்திற்குள் அழுகை நின்றுவிட்டது. ஆனால் பழையபடியும் மறுநிமிஷத்தில் அழுகை நின்றுவிட்டது. இப்படியே நிறுத்தி நிறுத்தி நாலைந்து தடவைகள் அழுதுவிட்டாள்.

அவளுடைய மானசீகப் பற்று வரவுக் கணக்கில் ஒரு பெரிய தப்பு விழுந்துவிட்டது. பற்று வரவுக் கலங்களில் வரவு வைக்க வேண்டியதைப் பற்று என்றோ, பற்று என்று எழுத வேண்டியதை வரவு என்றோ பதிவு செய்துவிட்டாள். கணக்குப் பார்த்தாள், மாறி மாறித் தப்பு விழுந்துகொண்ண்டிருந்தது.

மறுநாள்-மறுநாள் என்ன? எல்லா நாட்களும் தான்-ராஜாராமனை அவள் பார்க்கத்தான் செய்தாள்; ஆனால் முன்போல் சிரிக்கவில்லை. ராஜாராமன் சிரித்தாலும் அவள் சிரிக்கவில்லை. அவனைப் பார்த்தால் அவளுக்கு ஐந்தாறு தடவை இமை கொட்டும். முகத்தையும் 'உம்' மென்று வைத்துக் கொள்ளுவாள். 'டூ' விட்டுக் கொண்ட குழந்தைபோல, வேண்டுமென்றே கோபித்துக்கொண்டு தன் வீட்டுக்கு வந்து விடுவாள் பாப்பம்மாள்.

*("தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5" வெளியிட்டுள்ள "சிரிக்கவில்லை" என்ற சிறு கதைத்தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)*



### —பாரதி விழா—

சென்னை பாரதியார் சங்கத்தின் ஆதரவில் சென்னை மத்திய மாவட்ட நூலகத்தில் செப்டம்பர் 11, 12 ஆகிய தேதிகளில் நடைபெற்ற பாரதியார் விழாவில் பாரதியார் கண்காட்சியை திரு சீனி விசுவநாதன் - திரு டி. வி. எஸ். மணி ஆகியோர் அமைத்திருந்தனர். அக்கண்காட்சியில் பாரதியார் எழுதிய நூல்கள், பாரதியாரைக் குறித்த நூல்கள் என 189 நூல்கள் இடம்பெற்றிருந்தன. கண்காட்சியைப் பார்வையிடும் மேதகு ஆளுநர் அவர்களுக்கு விளக்கம் தருபவர் திரு டி. வி. எஸ். மணி.



# கூட்டுறவு தரும் வீட்டு வசதி

**நா. ஜகந்நாதன்,**
**பதிவாளர்,**
**வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கம்.**

தமிழகத்தில் உள்ள ஏழை நடுத்தர வருமானமுள்ள பிரிவினருக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் வீடு அமைத்து கொடுக்கக் வேண்டும் என்ற கோரிக்கை பல்லாண்டுகளுக்கு முன்பே எழுப்பப்பட்டது. அதன் விளைவாக 1924-ஆம் ஆண்டு முதல், கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் துவக்கப்பட்டுச் செயலாற்றி வருகின்றன.

1964-ஆம் ஆண்டு வரை மாநில அரசு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மூலம் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்கு கடன் உதவி செய்தது. இச்சங்கங்கள் அதன் உறுப்பினர்களுக்கு 20 ஆண்டு தவணை முறையில் கடன் வழங்கின. 1964-ஆம் ஆண்டுக்குப் பிறகு மத்திய அரசு வகுத்த திட்டத்தின்படி குறைந்த வருமானமுள்ளவர்கள், நடுத்தர வருமானம் உள்ளவர்கள், ஆலைகளில் தொழில் புரிவோர் என்று ஒவ்வொரு தொகுதியினருக்கும் தனித்தனியாக கடன் தொகை வீட்டுப் பரப்பளவு, வருமானம் ஆகியவற்றிக்கு உச்சளவு நிர்ணயம் செய்து ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டது. மாநில வீட்டு வசதிப் பதிவாளர் வீடு கட்டும் கூட்டுறவு சங்கங்களால் அனுப்பப்படும் உறுப்பினர்களின் கடன் மனுக்களை அனுமதித்து கடன் தொகையைச் சங்கங்களின் மூலமாகப் பட்டுவாடா செய்வார்.

மத்திய, மாநில அரசுகளால் செயலாற்றப்பட்ட இத்திட்டம் 1972-ல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. 1973 முதல், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் என்ற மாநில சங்கத்தின் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வகையான கூட்டுறவு வீட்டமைப்புச் சங்கங்களுக்குக் கடன் உதவி செய்யத் திட்டமிடப்பட்டது. அதன்படி தலைமைச் சங்கத்திற்கு வேண்டிய பண உதவியை பம்பாயில் உள்ள ஆயுள் காப்புறுதிக் கழகத்திடம் பெற்று தன்னுடன் இணைந்துள்ள எல்லாப் பிரதம வீட்டு வசதிச் சங்கங்களுக்கும் தேவையான கடனை அளிக்கின்றது

தற்போது தமிழ்நாட்டில் பல் [illegible] 1500 [illegible] கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கம் வீடில்லாதோருக்கு வீடு அமைத்துக் கொடுப்பதேயாகும். இதற்காக இச்சங்கங்கள் வீடு கட்டிக் கொடுத்தோ வீடு கட்டக் கடன் வழங்கியோ அங்கத்தினர்களுக்கு உதவிபுரிகின்றன. மற்றும் வீடு கட்டுவதற்கு முன்பும் வீடு கட்டும் போதும் வீடு கட்டிய பின்பும் ஏற்படும் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் இச்சங்கங்கள் உதவி புரிகின்றன. வீடு கட்ட மனைகள் தேவைப்படுவதால் பெரும் அளவில் நிலங்களைக் கையகப்படுத்தி அவைகளைக் குடியிருப்பு மனைகளாகப் பிரிக்க மேம்பாட்டுத் திட்டம் வகுத்துச் செயலாற்றல், சாலைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் குடியிருப்புக்கு வேண்டிய வடிகால், மின்சார விளக்கு முதலியவற்றை நிறுவிப் பராமரித்தல் போன்றவற்றையும் இச்சங்கங்கள் செய்கின்றன.

மேற்குறிப்பிட்ட சங்கங்களில் 2,67,000 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களால் சுமார் ரூபாய் 756.59 இலட்சம் பங்கு மூலதனமாகச் செலுத்தப்பட்டுள்ளது. இவைகளின் செயல் மூலதனம் சுமார் ரூ 48 கோடியாக உள்ளது. இச்சங்கங்கள் துவக்க காலம் முதல் இதுநாள் வரை மத்திய, மற்றும் மாநில அரசுகள் வழங்கிய கடன் மற்றும் மானியம் பெற்று குறைந்த வருவாய்ப் பிரிவினருக்காக ரூ. 406 இலட்சம் கடன் அளித்து 5096 வீடுகளும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு ரூ. 279.59 இலட்சம் கடன் வழங்கி 1530 வீடுகளையும் கிராம மக்களுக்கு ரூ. 129 இலட்சமும் கடன் உதவி செய்து 1893 வீடுகளையும் அரசு வீட்டமைப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 483 இலட்சம் கடன் கொடுத்து 7473 வீடுகளையும் தொழிலியல் தொழிலாளருக்காக ரூ. 135 இலட்சம் கடன் வழங்கி 3086 வீடுகளையும் கட்டிக் கொள்ள உதவி செய்தன.

1972ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு தன்னுடைய நிதியிலிருந்து கடன் கொடுப்பதை நிறுத்தி, தலைமைச் சங்கமாகிய தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடம் அரசு உத்தரவாதத்தின் பேரில் கடன் வாங்க ஏற்பாடு செய்தது. இக்கடன் தமிழ்நாட்டில் உள்ள பல்வகைப்பட்ட கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களுக்குத் தலைமைச் சங்கமாகிய தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் மூலமாக வழங்கப்பட வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. இத்திட்டப்படி கடன் பெற விரும்பும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் தலைமைச் சங்கத்துடன் இணைந்து கடன் பெற வேண்டும். இந்நாள் வரை 553 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்துடன் இணையப் பெற்றுக் கடன் வசதி பெற்றுள்ளன.

## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்!

இச்சங்கம் துவக்கத்தில் தமிழ்நாட்டில் இயங்கி வந்த கூட்டுறவு வீடு அடமான சங்கங்களின் தலைமைச் சங்கமாக இருந்து மேற்படி சங்கங்களுக்கு நிதி வசதி செய்து வந்தது. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முடிவின்படி எல்லாவிதமான கூட்டுறவு வீட்டு வசதிச்சங்கங்களுக்குத்தலைமைச் சங்கமாக மாற்றப்பட்டு சென்னையில் இயங்கி வருகிறது. 553 பிரதம கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களையும் 31 தனிப்பட்டோரையும் உறுப்பினராகக் கொண்டுள்ள இச்சங்கத்தில் தமிழ்நாடு அரசும் பங்கு முதலீடு செய்துள்ளது.

தற்போது அரசு செலுத்தியுள்ள ரூ. 2,85,00,000 சேர்த்து இச்சங்கத்தின் பங்கு மூலதனம் ரூ. 5,98,15,000 ஆகவுள்ளது. மேலும் ஆயுள் காப்புறுதிக் கழகத்தில் பெற்றுள்ள கடன் ரூ. 37,00,07,000 தவணை வைப்புத் தொகை ரூ. 94,88,000

நிமிர்ந்து நின்று கொண்டு, புத்தகத்தைப் பார்த்துப் படிப்பது போல, குரலில் ஏற்ற இறக்கமின்றி ''ஏ, ராசா'' வென்று மூன்று தடவை சொன்னாள்.

ராஜாராமனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. எழுந்து நின்று இலேசாகத் தலைகுனிந்து கொண்டு, கண்களை மேல் நோக்கித் திரும்பிப் பாப்பம்மாளைப் பார்த்தான். தன் கீழுதட்டைக் கடித்தான். கீழுதடு நனைந்து பளபளத்தது. சீப்பால் தலையைக் கோதுவது போல, பல்லால் நாலு தடவை மாறிமாறிக் கீழுதட்டைக் கோதிக்கொடுத்தான். 'பளிச்' சென்று பாப்பம்மாளின் கையைப் பிடித்துவிட்டான். 'அவள் கையைப் பிடிப்போம்' என்று அவன் எழுந்து நிற்கும் வரையிலும் நினைத்தது கிடையாது.

பாப்பம்மாள் ராஜாராமனின் புஜங்களிடையில் சிக்கினாள். அவன் அவளுடைய முகத்தைத் தன் முகத்துக்கு நேராகத் திருப்பினான்; அவளுடைய கண்களை ஒரு நிமிஷம் கூர்ந்து பார்த்தான். திடீரென்று அவளை முத்தமிட்டு விட்டான்.

ராஜாராமனுக்கு, முத்தத்தில் சுகானுபவம் பொதிந்திருந்தது. பாப்பம்மாளுக்கோ முத்தம் குஷியாகத்தான் இருந்தது. அவளைப் பொறுத்தமட்டிலும் முத்தத்திற்காகத் தான் முத்தம்; வேறு எதற்காகவும் அல்ல!

சந்தர்ப்பங்கள் மாறின. பாப்பம்மாள் வெளியே வந்தாள். 'வெளியே சொல்லக்கூடாது' என்ற ஜாக்கிரதைதான் பாப்பம்மாளுக்கு இருந்ததே ஒழிய, முத்தத்தில் தன்னை மறந்த உணர்ச்சியோ, பெரிய பயமோ ஏற்படாது போய்விட்டன.

எதிர்பாராதவிதமாக வீட்டுக்குள்ளே வந்த ராஜாராமனின் தாயாரிடம் பாப்பம்மாள் கொஞ்சங்கூடக் கல்மிஷம் இல்லாமல், ''பால் கொண்டுவந்து வச்சுட்டேன்'' என்று சொல்லிவிட்டு வாசல் படியில் காலெடுத்து வைத்தாள். அப்புறம் தெருவில் இறங்கிப் போகும்போது அவள் தனக்குத் தானே ''நான் வீட்டுக்குப் போறேன்'' என்று சொல்லிக் கொண்டாள்.

அது நிலாக்காலம். அன்றிரவு பாப்பம்மாள் ஜன்னலோரத்தில் கட்டிலைப் போட்டுப் படுத்துக் கொண்டாள். ஜன்னல் கம்பி சந்திரனின் மத்திய பாகத்தில் விழும்படியாக முகத்தைத் தள்ளி வைத்துக் கொண்டாள். இரண்டு



கண்களையும் குவித்து ஜன்னல் கம்பியைப் பார்த்தாள். ஆகாயத்தில் இரண்டு சந்திரன்கள் இருப்பது போல் தோன்றியது. பளிச்சென்று வானத்தை ஏறிட்டுப் பார்த்தாலோ ஒரே சந்திரன் தான். சந்திரனை இரண்டாக்குவதும் பழையபடியும் ஒன்றாக்குவதுமாகப் படுத்துக் கொண்டிருந்தாள் பாப்பம்மாள். அப்போது அவளுக்கு எதிர்பாராத விதமாக உறக்கம் வந்துவிட்டது. 'சரி தூங்கணும்' என்று திரும்பிப் படுத்துக் கொண்டாள். மேலே பார்த்த வாக்கில் வெறும் வெளியை இரண்டு மூன்று தடவை முத்தமிட்டாள். மிகவும் குதூகலமாக இருந்தது அவளுக்கு. 'ரொம்ப நேரமாய் விட்டதே! தூங்கணுமே' என்று ஜாக்கிரதைப் படுத்திக் கொண்டு கண்களை மூடினாள். கொஞ்சநேரத்தில் தூக்கமும் வந்துவிட்டது.

வழக்கம் போலவே அவள் தினமும் பால் கொண்டுவந்து வைத்துக் கொண்டிருந்தாள். மறுவாரம் ராஜாராமனுக்குப் பகல் வேலை, அதனால் அவன் வீட்டிலே இல்லை. பாப்பம்மாளுக்கு அது ஓர் ஏமாற்றமாகவும் இல்லை. 'அவர் இருந்தால் முத்தமிடுவார்' என்று மட்டும் எப்போதோ ஒரு தடவை சொல்லிக் கொண்டாள்.

பத்துப் பதினைந்து நாட்கள் தான் கழிந்திருக்கும். ஒரு நாள் திடீரென்று பாப்பம்மாளுக்குக் காய்ச்சல் வந்தது. சாதாரணக் காய்ச்சலைப் போலத் தான் ஆரம்பத்தில் இருந்தது. பிறகு அந்தக் காய்ச்சலே பலத்துவிட்டது. படுத்த படுக்கையாகிவிட்டாள் பாப்பம்மாள். அவளுடைய தாயார்தான் பால் கொண்டுவர வேண்டியதாய்விட்டது. பாப்பம்மாள் நாளுக்கு நாள் மெலிந்து கொண்டு வருகிறாள் என்றும், சரியாகச் சாப்பிடாமல் இருக்கிறாள் என்றும் அவளுடைய தாய் சொன்னாள்.

ஒரு நாள் பாப்பம்மாளைப் பார்க்கப் போனாள் ராஜாராமனுடைய தாயார். ராஜாராமனுக்கும் போகலாம் என்று ஆசை தான். கொஞ்ச நாட்களுக்கு முன் என்றால் தாராளமாகப் போயிருப்பான். இப்போது அவன் மனத்தில் ஏதோ ஒரு திருட்டு உணர்ச்சி ஊசலாடிக் கொண்டிருந்தது. தான் முத்தமிட்டதன் காரணமாகப் பாப்பம்மாளைப் பார்க்கப் போனால் ஊரார் என்ன நினைப்பார்களோ என்று காரணமில்லாமல் பயம் தட்டுப்பட்டது அவனுக்கு. கடைசியில் அவன் போகவில்லை.

முத்தமிட்ட விஷயம் இன்னும் கொஞ்சம் அழுத்தம் பெறுவதற்கு வேறொரு காரணமும் இருந்தது. அந்தத் தினத்திற்குப் பின் நாலைந்து நாட்களில் ராஜாராமனுக்குக் கல்யாணம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஊரிலிருந்து அவனுடைய சிற்றப்பா கடிதம் எழுதியிருந்தார். தகப்பனார் காலமாகிவிட்டதால் சிற்றப்பாதான் தகப்பனார் ஸ்தானத்தில் இருந்து ஒரு பெண்ணை ஏற்பாடு செய்திருந்தார். அந்தப் பெண் ராஜாராமனுக்குத் தெரியும். நல்ல பெண் தான். கட்டிக் கொள்ளவும் இஷ்டம் தான். ஒரு மாதத்துக்குள்ளாகவே கல்யாணத்தை நடத்த ஏற்பாடாகிவிட்டது.

கல்யாணம் ஏற்பாடானதும், பாப்பம்மாள் அந்நியப் பெண் என்றும் யாருக்கோ மனைவியாகப் போகிறவள் என்றும், ராஜாராமனுக்குத் தோன்றியது. ஒரு கன்னிப் பெண்ணை முத்தமிட்டது பிசகு என்றும் அவனுக்குத் தோன்றியது. ஆகவே, பாப்பம்மாள் சம்பந்தப்பட்ட எந்தக் காரியத்தைச் செய்யவும் அவனுக்குக் கொஞ்சம் அச்சம்தான்.

ராஜாராமனுடைய கல்யாண சமாச்சாரம் தெரிந்தது பாப்பம்மாளுக்கு. உடனே அவளுக்குச் சந்தோஷம் வந்து விட்டது. கல்யாண வீட்டின் கோலாகலம் அவள் கண்முன் வந்து நின்றது. கொஞ்ச நேரத்தில் அவளுக்கு வேறொரு அபிப்பிராயமும் தோன்றியது. 'அவரை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளட்டுமா!' என்று நினைத்தாள். நினைத்தால் உடனே நடந்துவிடக்கூடிய சர்வ சாதாரணமான காரியமாகத்தான் பாப்பம்மாளுக்குப் பட்டது. ஆனால் அந்த யோசனையும் திடீரென்று மாறிவிட்டது. 'அதெப்படி முடியும்! அவர் வேறே சாதி; நான் வேறே சாதி. கல்யாணம் செய்து கொள்ள முடியாதே' என்று நினைத்துக் கொண்டாள். அப்புறம் 'கல்யாணத்துக்கு நான்

புதுச் சேலை கட்டி, புது ரவிக்கை போட்டுக்கிட்டுப் போகணும். அதுவரைக்கும் அந்தப் புதுச் சேலையையும் ரவிக்கையையும் அழுக்காக்கிறக்கூடாது. என் உடம்பும் அதுக்குள்ளே தாவலையாகிப் போகணும் கடவுளே' என்று கடவுளைக் கும்பிட்டாள்.

ராஜாராமனுடைய சொந்த ஊரிலேயே கல்யாணம் நடந்ததால், புதுப் புடவையும் புது ரவிக்கையும் இருந்தும் பாப்பம்மாள் கல்யாணத்துக்குப் போக முடியவில்லை. உடம்பெல்லாம் குணமாகிப் பழையபடியும் வீட்டிலே நில்லாமல் இங்கும் அங்கும் போய்க் கொண்டிருந்தாள்.

சில தினங்களில் ராஜாராமன் தன் மனைவியோடு உத்தியோக ஸ்தலத்துக்கு வந்து விட்டான். வந்த தினத்தன்று பாப்பம்மாள் வீட்டுக்குப் பலகார பண்டங்களெல்லாம் கொடுத்தனுப்பினாள் பெரியம்மாள்.

பாப்பம்மாள் ராஜாராமன் வீட்டுக்கு வருவதற்கு இடையூறாக இப்போது இரண்டு தடங்கல்கள் இருந்தன; ஒன்று, யாரோ ஒரு புதுப்பெண் வந்துவிட்டது. அவள் இருக்கும்போது பாப்பம்மாளுக்கு அந்த வீட்டில் நடமாடுவது அவ்வளவு உற்சாகமில்லை; தவிரவும் அந்த வீட்டில் தான் செய்த வேலைகளை எல்லாம் அந்தப் புதுப் பெண்ணே செய்து வந்தாள். அங்கேபோய்ச் சும்மா உட்கார்ந்து கொண்டு இருப்பது எப்படி?

அடுத்தபடியாகப் பாப்பம்மாளின் தாயார், ''இனிமேல் நீ அங்கே அடிக்கடி போகக்கூடாது' என்று பாப்பம்மாளிடம் சொன்னாள்.

பாப்பம்மாளுக்குக் கொஞ்சம் கஷ்டமாகவே இருந்தது. ஆனாலும் ஏகதேசமாக நாலைந்து நாட்களுக்கு ஒரு தடவை வந்து ராஜாராமன் மனைவியிடம் பூவோ, ரிப்பனோ வாங்கிக் கொண்டு போவாள். தான் பூ வாங்கினாலும் அவளுக்குக் கொண்டு வந்து கொடுப்பாள். சில நாட்களில் அவனுடைய மனைவியிடம் அவளுக்குப் பிரியம் உண்டாகிவிட்டது. தன் தாயாரிடம் எப்போதும் ராஜாராமன் மனைவியைப் பற்றி ஏதாவது சிலாகித்துச் சொல்லிக் கொண்டிருப்பாள். அவளைப் பற்றிப் பேசாவிட்டால் பாப்பம்மாளுக்கு நெஞ்சு வெடித்துவிடும்.

இப்போது பாப்பம்மாளோ அவளுடைய தாயாரோ யாராவது ஓர் ஆள் பால் கொண்டு வருவது வழக்கம். சில நாட்களில் பசுவின் பால் வற்றிப்போய்விட்டது; கன்றுக்குட்டிக்கே அவ்வளவு பாலையும் விட்டுவிட்டார்கள். பால் விவகாரம் நின்றுவிட்டது.

இப்போது ராஜாராமன் வீட்டுக்குப் பாப்பம்மாள் போவதென்றால் பழையபடியும் 'சும்மா' தான் போகவேண்டியதாய் விட்டது. ராஜாராமன் தன் மனைவியைப் பக்கத்தில் வைத்துக்கொண்டே பாப்பம்மாளைப் பார்த்துக் குறும்பாக ஏதாவது சொல்லுவான். புருஷனும் மனைவியும் சிரிப்பார்கள். இது பாப்பம்மாள் மனதுக்குச் சந்தோஷமாக இருக்கும். சில சமயங்களில் ராஜாராமனின் முன்னிலையிலேயே பாப்பம்மாள் அவன் மனைவியை அதட்டுவது உண்டு. 'அப்படிச் செய்யலாமா? இப்படிச் செய்யலாமா' என்று ஏதாவது சொல்லுவாள். ஒருநாள் ராஜாராமனின் வேஷ்டி கொடியிலிருந்து விழுந்து தரையில் கிடந்ததைக் காட்டி, 'இதை எடுத்து வைக்கவில்லையே?' என்று அவனுடைய மனைவியைக் குற்றம் சாட்டுவது போலச் சொன்னாள். பிறகு அவளே போய் எடுத்து வைத்தாள்.

ராஜாராமன் தனக்குள்ளாகவே நினைத்துக் கொண்டான்:

'அவளுக்கில்லாத அக்கறையா பாப்பம்மாளுக்கு? நான் கண்டிப்பதைப் போல அல்லவா பாப்பம்மாள் அவளைக் கண்டிக்கிறாள்! என் விஷயத்தில் எவ்வளவு அக்கறை!'

ஏழெட்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டன. பாப்பம்மாள் தெருவோடு போகும்போது, நாள்தோறும் ஒன்றுபோல ராஜாராமனைப் பார்த்துச் சிரிப்பதும் அவன் பதிலுக்குச் சிரிப்பதும், ஏகதேசமாக அவனுடைய வீட்டுக்கு வந்து உரிமையுடன் நடந்து கொள்ளுவதும் நிற்கவில்லை. வழக்கம் போல நடந்துகொண்டு தான் இருந்தது. இந்தச் சமயத்தில் ராஜாராமனின் மனைவி கர்ப்பிணியாக இருந்தாள். அவள் ஊருக்குப் போய் ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. 'அடுத்த மாதம்தான் அவளுக்கு மாதம்' பிறகு இரண்டு மாதங்களில் அவள் குழந்தையை எடுத்துக் கொண்டு வருவாள் என்று ஒரு நாளைக்கு நூறு தடவை மனதுக்குள்ளேயே மாறி மாறிச் சொல்லிக் கொண்டிருந்தான் ராஜாராமன். அவனுக்குக் கனவும் நனவும் அதுதான். பத்துப் பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவை போய் மனைவியைப் பார்த்து விட்டு வருவதும், வாரத்துக்கு ஒரு தடவை கடிதம் எழுதுவதுமாக இருந்தான்.

அடுத்த மாதத்திலேயே குழந்தை பிறந்தது. ஆண் குழந்தை. இந்தச் செய்தியைப் பாப்பம்மாள் கேள்விப்பட்டாள். அப்பொழுதுகூட அவளிடம் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. ஆனால் குழந்தையை எடுத்துக் கொண்டு ராஜாராமனுடைய மனைவி வந்ததும் கதை எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. பாப்

### ஆங்கிலப் பயிற்றுமொழி வகுப்பில் பயிலும் மாணவர் செலுத்தும் படிப்புக் கட்டணம்

மேல் நிலைப்பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஆண்டினிடையில் ஆங்கிலப் பயிற்று மொழிப் பிரிவை விட்டு விலகும்போது, எந்த மாதத்தில் விலகுகிறார்களோ அந்த மாதம்வரை மட்டும் தான் படிப்புக் கட்டணம் செலுத்த வேண்டுமென அரசு, ஆணை பிறப்பித்துள்ளது. அவர்களிடமிருந்து ஒரு முழு ஆண்டுக்குச் சம்பளம் வசூலிப்பது கூடாது என்று முடிவு செய்யப் பட்டுள்ளது.

31-7-'79-க்குப்பின் தாமதமாகப் பள்ளியில் சேருபவர்களிடமிருந்து அவர்கள் பள்ளியில் சேரும் மாதத்திலிருந்து படிப்புக் கட்டணம் ஒவ்வொரு மாதமும் வசூல் செய்து ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ. 200/-க்குக் குறைவு படும் தொகையைக் கடைசித் தவணையில் வசூல் செய்ய வேண்டுமென்றும் அரசு ஆணையிட்டுள்ளது. இவை 1979-80-ஆம் கல்வி ஆண்டிலிருந்து அமல்படுத்தப்படவேண்டும். தமிழ் மூலம் கல்வி கற்கும் மாணவர்கள் இலவசக் கல்வி பெறுகிறார்கள்.

தமிழ்நாடு அரசு கடன் ரூபாய் 2,00,00,000 பொது காப்புறுதிக் கழகத்தின் கடன் ரூபாய் 1,00,00,000 ஆக மொத்தம் ரூ. 40,94,95,000 கடனாகவும் வைப்புத் தொகையாவும் இது வரை பெற்றுள்ளது.

30-6-'79 வரை இச்சங்கம் 53,433 வீடுகள் கட்ட ரூபாய் 63,20,33,000 கடனாக வழங்கியுள்ளது. இதில் 32,896 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும், 10,760 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இச்சங்கம் வழங்கும் கடன்களுக்கு உறுப்பினர்களிடம் தங்கள் வருமானத்திற்கு ஏற்பக் கீழ்க்கண்ட விகிதத்தில் வட்டி வசூல் செய்யப்படுகிறது.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் (E.W.S.) — 9.25 சதவீதம்

குறைந்த வருவாய்ப் பிரிவினர் (L.I.G.)—10.75 சதவீதம்

நடுத்தர வருவாய்ப் பிரிவினர் (M.I.G.)—12.75 சதவீதம்

உயர்ந்த வருவாய்ப் பிரிவினர் (H.I.G.)—14.75 சதவீதம்

**கிராமிய வீட்டு வசதித் திட்டம் :**

பல்லாண்டுகளாகவே கிராம மக்களுக்கு வீடு கட்டுவதற்காகப் பல கிராமிய வீட்டு வசதிச் சங்கங்கள் துவக்கப்பட்டு இயங்கி வருகின்றன. ஆயினும் கிராம மக்களின் தேவைகள் முழு அளவில் உடனுக்குடன் கவனிக்கப்படவேண்டும் என்ற நோக்கத்துடன் 10 தாலூகா அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் 50, கோட்ட அளவிலான கிராமிய கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் துவக்கப்பட்டன. மேற்கூறிய 50 சங்கங்கள் தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் வீடு கட்ட கடன் உதவி செய்ய பணிக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் முழு நேர தனி அலுவலராக ஒரு முது நிலை ஆய்வாளர் நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் பணிச்செலவை முதல் இரண்டு ஆண்டுகளுக்கு அரசு ஏற்கும். 3-ஆம் ஆண்டு 80 சதவீதம் 4-ஆம் ஆண்டு 50 சதவீதம் 5-ஆம் ஆண்டு 20 சதவீதம் செலவையும் அரசு ஏற்கும். ஆறாம் ஆண்டு முதல் முழுச் செலவையும் சங்கம் ஏற்கும்.

கிராமங்களில் வீடு கட்டும் திட்டத்தைத் துரிதப்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு 16-2-'79-ஆம் தேதியில் ஒரு திட்டத்தை வெளியிட்டது. இதன்படி 1978 ஜூலை முதல் 1983 ஜூன் முடிய 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள கிராம மக்களுக்காக ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும். இதில் பெரும்பான்மையான வீடுகளின் மதிப்பு ரூ. 3,000-க்குள் இருக்க வேண்டும் என்றும் மற்றும் 4,000 ரூ. 5,000 மதிப்பீட்டிலும் கட்டப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் 1978-79-ல் 10,000 வீடுகளும் 1979-80-ல் 20,000 வீடுகளும் 1980-81-ல் 20,000 வீடுகளும் 1981-82, 1982-83 ஆகிய இரு ஆண்டுகளில் ஆண்டுக்கு 25,000 வீடுகளும் கட்டப்பட வேண்டும் என்பது திட்டம். இதில் 1979-80 ஆண்டுகளுக்கு 30,000 வீடுகள் கட்ட வேண்டும் என்ற மாற்றத்தை அரசு சமீபத்தில் வெளியிட்டது. இத்திட்டத்திற்கு ஆகும் ரூ. 40 கோடி முதலீடு செய்ய வேண்டியிருக்கும்.

இத்திட்டப்படி அரிசன உறுப்பினர்கள் வட்டியில்லாக் கடன் பெறலாம். ரூ. 3,000 மதிப்பீட்டில் கட்டப்படும் வீட்டிற்கு அரிசன உறுப்பினருக்கு ரூ. 600 மானியமாக வழங்கப்படும். மேலும், இந்த மானியம் பெரும்பான்மையான அரிசனங்கள் வாழும் குடியிருப்பில் வீடு கட்டிக் கொள்ள முன்வரும் மற்ற வகுப்பினருக்கும் தரப்படும். இத்திட்டப்படி வகுப்பு பேதமற்ற குடியிருப்புகளை உருவாக்க வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் முதலாவது ஆண்டான 1978-79-ல் 10,000 வீடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இத்திட்டம்ஆண்டு இறுதியில் செயலாற்றப்பட்டதால் 7430 வீடுகளே கட்டி முடிக்கப்பட்டன. மற்றும் 6727-க்கு மேலான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. வரும் ஆண்டுகளில் திட்டப்படி வீடுகள் கட்டி முடிக்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## வீட்டு வசதி

1976-77-ல் 1215 ஆரம்பக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள். வீடுகள் கட்டுவதற்காகச் செயல்பட்டு வந்தன. 1974-75-ல் ரூ. 943.71 லட்சம் வழங்கப்பட்டன. 1975-76-ல் ரூ.1043.96 இலட்சமாகக்கூடியது. 1976-77-ல் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் 538.77 இலட்சம் ரூபாயை மட்டுமே கடனாக வழங்க முடிந்தது. இந்தத் தலைமைச் சங்கத்திடம் நிதிப் பற்றாக்குறை, மற்றும் ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் அறிவுரையின் பேரில் அது கடன் வழங்கவில்லை. 1974-75-ல் 5158 வீடுகளையும், 1975-76-ல் 4150 வீடுகளையும், 1976-77-ல் 4153 வீடுகளையும் இந்தப்பிரதம சங்கங்கள் கட்டி முடித்திருந்தன.

## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் 1957-ஜூலையில் செயல்படத் துவங்கியது. அதன் ஆரம்பநாள் முதல் 30-6-78 வரை வீடுகள் கட்டுவதற்காக 45.53 கோடி ரூபாயைக் கடனாக வழங்கியது. 30-6-77 வரை 28,904 வீடுகள் கட்டுவதற்காக நிதியுதவின [illegible] அனுமதித்துள்ளது. இவற்றில் 19394வீ[illegible]ள் கட்டி முடிக்கப்பட்டு குடியமர்த்தலும் செயயப்பட்டுவிட்டது. ஆண்டு இறுதியில் 7369 வீடுகள் கட்டுமானத்தில் இருந்து வருகின்றன. 1960-61-முதல் இச்சங்கம் தொடர்ந்து ஆதாயத்திலேயே இயங்கி வந்தது. 1960-61-ல் 0.25 இலட்சம் ரூபாயையும், 1976-77-ல் ரூ. 34.29 இலட்சம் ரூபாயையும் ஆதாயமாகப் பெற்றது. 1977-78-ல் ரூபாய் 26.16 இலட்சம் மட்டும் அது ஆதாயமாகப் பெற்றது.

# முதல் கிராமக் கூட்டுறவுச் சங்கம்

**நம் மாநிலத்தில், ஏன், இந்தியாவிலேயே, செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூர் வட்டத்தில், திரூர் கிராமத்தில்தான் முதலாவதாகக் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டது. திரூர் கிராமக் கூட்டுறவுச் சங்கம் 75 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய வரலாற்றையும், அதன் நடைமுறை விவரங்களையும் சங்கத்தின் தலைவராயிருந்த திரு கே. ராஜரத்தினம் நாயுடு 24 ஆண்டுகளுக்கு முன்பு 'கூட்டுறவு' பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் சுருக்கத்தை இங்கே வெளியிட்டுள்ளோம்.**

திரூர் கிராமத்தில் எங்கள் கம்மவார் குடும்பமும், திவான் பகதூர் திரு எம். ஆதிநாராயண ஐயா அவர்கள் குடும்பமும்தான் செல்வாக்கு வாய்ந்த குடும்பங்களாகும். திரு. ஆதிநாராயண ஐயா அரசாங்கத் துறையில் ரெவின்யூ செட்டில்மெண்ட் இலாக்காவின் டிப்டி கமிஷனராக சேவை செய்து 1902-ல் ஓய்வு பெற்றிருந்தார். அவரும் என் சிறிய தகப்பனார் திரு கே. முனிசாமி நாயுடுவும் நண்பர்கள்.

பொது சேவையில் இருவரும் வேறுபாடின்றி ஒருமித்துப் பாடுபடும் பண்பாளர்கள். அந்தக் காலத்தில் 'அர்பத்நாட் கம்பெனி' என்று ஒரு நிறுவனம் இருந்தது. அது திடீரென திவாலாகிவிட்டது. அதில் பணம் போட்டிருந்த இந்தியர்களில் பலர் தங்கள் சொத்தை இழந்து தவித்ததைக் கண்டு மனந்தாளாது திரு ஆதிநாராயணய்யா வருந்தினார். இப்போது 'இந்தியன் பாங்கு' என்று ஓங்கி வளர்ந்துள்ள நிறுவனத்தை நிறுவி, அதில் அலுவல்களை நடத்தி வந்தார். விவசாயத்தில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த அவர், திரூர் கிராம விவசாய மக்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க விரும்பினார். அவருக்கு வலக் கையாக என் சிறிய தகப்பனார் இருந்து வந்தார்.



முதல் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர்
(திரூர் கூட்டுறவுச்சங்கம்)
திரு. ஆதிநாராயண ஐயா.

1904-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் எங்கள் திரூரில் நடைபெற்ற இன்பகரமான நிகழ்ச்சிகள் என் மனக் கண்முன் படம் படமாய் விரிகின்றன. ஓர் உயர் அதிகாரி எங்கள் கிராமத்திற்கு வருவதாக நான் கேள்விப்பட்டேன். அக்காலத்தில் ஓர் அதிகாரி ஒரு கிராமத்துக்கு வரப் போகிறார் என்றால், என்ன ஆர்ப்பாட்டம்! என்ன ஆனந்தம்! என்ன வரவேற்புகள்! திரு. ஆதிநாராயண ஐயாவும், என் சிறிய தகப்பனாரும், என் சகோதரரும் கிராம மக்களுக்கு அதிகாரியின் வருகை பற்றி தெரிவித்திருந்தார்கள். அந்த அதிகாரி யார் தெரியுமா? முதல் கூட்டுறவுப் பதிவாளரான சர் பி. ராஜகோபாலாச்சாரியார்தான்! அவர் கூட்டுறவுப் பதிவாளராக நியமனம் பெற்றவுடன், எந்த கிராமத்துக்குச் சென்றால் தம் அலுவல்களைச் செய்ய முடியுமென்று ஆலோசித்து, திருவள்ளூர் தாலுக்காவிலுள்ள மற்றொரு கிராமமாகிய மப்பேடு கிராமக் குளக் கரையில் கூடாரம் அடித்து அலுவல்களை கவனித்து வந்தார்.

(மப்பேடு கிராமத்துக்கு அடுத்த கிராமம் கீழச்சேரி கிராமம்). திரூர் கிராமத்திலுள்ள ஆதிநாராயண ஐயாவை அணுக வேண்டுமென்று எண்ணி, அவர் எங்கள் ஊருக்கு வந்தார். அவர் வந்தபோது ஏற்பட்ட நிகழ்ச்சி தான் இன்று என் மனக்கண்முன் வருகிறது. சர் பி. ராஜகோபாலாச்சாரியாரைக் கண்டதும் திரு. ஆதிநாராயணய்யா ஓடோடியும் சென்று, அவரை மார்புறத் தழுவிக் கொண்டார். இருவரும் நலம் விசாரித்துக் கொண்டார்கள்.

இவ்விருவரும் கூட்டுறவு விதையை எங்கு ஊன்றலாம் என்று ஆலோசித்தார்கள். தீர ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். திரூரில் முதல் கூட்டுறவுச் சங்கத்தைப் பதிவு செய்வது என்ற முடிவுதான் அது. உடனே சுற்றுப்புற கிராமங்களிலுள்ள மக்களைத் திரட்டினார்கள். கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகளை அவர்களுக்குக் கூட்டுறவு

பதிவாளர் எடுத்துக் கூறி விளக்கம் தந்தார்

சர். பி. ராஜகோபாலாச்சாரியார் அப்போது வழங்கிய கருத்துக்களிலே வரையறுக்கப்பட்ட பொறுப்பு, வரையறுக்கப்படாத பொறுப்பு பற்றி சொல்லியது இன்னும் எனக்கு நினைவு இருக்கிறது. வரையறுக்கப்படாத பொறுப்பைப் பற்றி அவர் விளக்கிக் காட்டியபோது கிராமமக்கள் பயந்தார்கள். இப்படிப்பட்ட கூட்டமைப்புள்ள சங்கம் தங்களுக்கு வேண்டாம் என்று சொன்னார்கள். ஆனால், 1904-ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சட்டம் வரையறுக்கப்படாத பொறுப்பு சங்கம் அமைவதைத்தான் அனுமதித்தது! இதற்கு என் செய்வது?

கிராம மக்கள் வரையறுக்கப்படாத பொறுப்பை ஏற்க மறுக்கின்றனர் என்பதை உணர்ந்த அவர், அரசாங்கத்துக்கு எழுதி விசேஷ அனுமதியைப் பெற்றார். வரையறுக்கப்பட்ட பொறுப்பின் அடிப்படையிலேயே சங்கத்தினைப் பதிவு செய்துகொடுத்தார். எங்கள் சங்கம் கிராம சங்கமாயிருந்தாலும் வரையறுக்கப்பட்ட பொறுப்பு சங்கமாக— திரூர் கிராமக் கூட்டுறவுச் சங்கம் எண். 1 என - 30-8-1904-ல் பதிவு செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் 12 கிராமங்களில் திரூர் சங்கம் அதன் அலுவல்களை நடத்திற்று. 214 அங்கத்தினர்கள் சேர்ந்தார்கள். 12 கிராமங்களில் அலுவல் நடத்துவது சிரமம் என்று கருதப்பட்டதால், திரூர் கிராமத்தில் மட்டும் அலுவல்களை நடத்த செயல் எல்லையைக் குறைத்துக் கொண்டோம். அதனால் 214 அங்கத்தினர்கள் 120 பேராகக் குறைந்தார்கள். அப்போது அங்கத்தினர்களிடமிருந்து வசூலித்த டிபாசிட் தொகை ரூபாய் 410. அதற்கு வட்டி 6.5 சதவிகிதம். அங்கத்தினர்களுக்குக் கொடுத்திருந்த கடன் எவ்வளவு தெரியுமா? ரூ. 4991. மொத்தம் 14 கடன்கள்-எல்லாம் ரூ. 50க்குக் குறைவு. ஜாமீன் பேரில்தான் கடன்கள் வழங்கப்பட்டன. கடனின் வட்டி 9 3/8 சதவிகிதம். மாடு வாங்க. அரசின் கந்தாயம் கொடுக்க, வீட்டுச் சாமான் வாங்க, சில்லரைக் கடன் தீர்க்க கடன்கள் கொடுக்கப்பட்டன. முதல் ஆண்டின் இலாபம் ரூ. 5.50 காசு.

இரண்டாவது உலகப்போரின் சமயத்தில் எங்கள் சங்கம், பொது மக்களுக்கு உதவ ரேஷன் கடையை நடத்திற்று. கட்டுப்பாட்டுச் சாமான்கள், துணிமணி முதலியனவற்றை நியாய விலையில் விற்று உதவிற்று. இவைகளையெல்லாம் நினைத்தால்- இந்த நிலையம் வலிவு பெற்றிராமல் இருந்தால், இந்தச் சேவைகளையெல்லாம் செய்திருக்க முடியாது என்பது என் முடிவு.

[தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட திரூர் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக-2வது உறுப்பினராக இருந்த-93 வயது நிரம்பிய மதிப்பிற்குரிய லலிதா அம்மையார் அவர்களை, சென்ற ஆண்டு சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற கூட்டுறவு வார விழாவில், தமிழக அரசு கௌரவித்துப் பாராட்டியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்—

ஆசிரியர்]



## கிராமக் கடைத் திட்டம்!

அரிசி, கோதுமை, சீனி, மிளகாய், புளி, தனியா, கடலை எண்ணெய் போன்ற இன்றியமையாத பொருட்களை ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் திறக்கப்படும் சில்லறைக் கடை மூலம் விநியோகம் செய்யும் பொது விநியோக முறையைச் சென்ற ஆண்டு (1978-79) அரசு கொண்டு வந்துள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் இன்றியமையாத பொருட்கள் நியாயமான விலையில் தாராளமாகக்கிடைக்க வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். செங்கற்பட்டு, வடஆர்க்காடு, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அரசு நிதி உதவியுடன் 6,012 புதுக்கடைகளைத் திறந்துள்ளன. எஞ்சியுள்ள மாவட்டங்களில் இக்கடைகள் திறக்கும் பொறுப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவே நடத்தி வந்த 4,441 நியாய விலைக்கடைகளும் முழு அளவு நுகர்பொருள் விற்பனைக் கடைகளாக மாற்றப்பட்டு, எல்லா இன்றியமையாதப் பண்டங்களையும் கிராமப்புற மக்களுக்கு வழங்கி வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் 10,453 கிராமக் கடைகள், அத்தியாவசியப் பண்டங்களை நியாய விலையில் விநியோகம் செய்வதன் மூலம், கிராமப்புறங்களில் ஒரு சாதனையைச் செய்துள்ளன. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இன்னும் 362 புதுக்கடைகளைத் திறக்க அரசு அனுமதியளித்துள்ளது. இவற்றையும் துவங்கினால் மாநிலத்தின் மொத்தம் 10,815 கூட்டுறவுக் கிராமக்கடைகள் செயல்படும். ஜூலை '79 முடிய ஏழு மாத காலத்தில் இக் கூட்டுறவு கிராமக் கடைகள் சுமார் 5.32 கோடி ரூபாய் பெறுமானமுள்ள பண்டங்களை விற்பனை செய்தன.



# எளியவர் இல்லந்தோறும் எரியும் விளக்கு!

—கொங்குநாடன்







அடிவானில் வான வில்லின்
ஆட்சியால் அழகுத் தோற்றம்;
மிடியெலாம் தூள் தூளாக
மாறிய புதுமை; பாதை
நெடுகிலும் வண்ணக் கோலம்!
நெஞ்சிலே உறவின் பாலம்!
விடிந்தது பொழுது! வாழ்த்தி
வளம்பெற வாராய் தம்பி!

உழவர்கள் எழுந்தார்; கூட்டு
உறவினில் மலர்ச்சி கண்டார்!
பழுதிலாப் பணிக ளாற்றும்
பழமுதிர் சோலை யென்றார்!
விழுதிட்டு நாட்டி லெங்கும்
விரிந்திட்ட இயக்கம்; நாடு
செழித்திட உழைத்து வாழச்
சேருவோம் ஒன்றாய் வாரீர்!

நலிந்தவர் வலிமை பெற்று
நலமெலாம் துய்க்க வேண்டும்!
வலியவர் மெலியார் என்ற
வேற்றுமை மறைதல் வேண்டும்!
பொலிக கூட்டுறவு எண்ணம்!
பாடுக உதய கீதம்!
சிலிர்க்கட்டும் சிந்தை; வையம்
சிறந்திடக் காண்போம் வாரீர்!

தனிநபர் வாழ்ந்து இந்தத்
தரணியில் என்ன லாபம்?
இனிதாகப் பலரும் கூடி,
இதயங்கள் தழுவும் போது
கனிந்திடும் உறவு! தீய
காரிருள் மறையு மன்றோ!
இனியொரு வழியு முண்டோ?
எதிர்காலம் நமக்கே சொந்தம்!

ஊரெங்கும் கடைகள்; வாழ்வில்
உடைந்தது தடைகள்; மக்கள்
தேர்ந்ததை விரும்பி வாங்கத்
திறந்தது வழியே! வானம்
கார்மழை பொழிவ தைப்போல்
கூட்டுறவு வுதவக் கண்டோம்!
சீர்பெற, உழைக்கும் மாந்தர்
சிரித்திட நிறைவு காண்போம்!

எண்ணங்கள் இணைக; இன்ப
இசையெங்கும் பாய்க; எழு
வண்ணங்கள் ஒளிர்க; நாடு
வளமெலாம் பெற்று வாழ்க!
கண்ணான தமிழில் பாடிக்
கொள்கையைப் பரப்பு! சொந்த
மண்ணுக்கு வளத்தைக் கூட்டு
உறவினில் வளர்க்க வாராய்!

எளியவர் இல்லந் தோறும்
எரிகின்ற விளக்கு! கற்றுத்
தெளிந்தவர் உள்ள மெங்கும்
தவழ்கின்ற நிலவு! மக்கள்
உளமொன்றாய் இணைந்து வாழ
உணர்வூட்டும் பாடல்! கோடி
வளநகர் நோக்கிச் செல்லும்
வழியென வாழ்த்த வாராய்!



# விவசாயிகளுக்கு அரசு அளித்துள்ள சலுகைகள்

விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் பரிந்துரைகளுக் கேற்ப கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த மட்டில் அரசு கீழ்க்கண்ட சலுகைகளை அளித்துள்ளது.

1. அபராத வட்டி தள்ளுபடி :

30.6.'78ல் தவணை தவறி யிருந்த எல்லா விவசாயக் கடன்கள் மீதும் அந்தத் தேதியில் செலுத்த வேண் டியிருந்த அபராத வட்டியும் அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துகிற தேதி அல்லது 30-6-'79 இவற்றில் எது முன்னதோ அத்தேதி வரை அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப் படுதல். 1.7.'77 முதல் 30.6 '78 வரை செலுத்தப்பட்ட அபராத வட்டியும், 30.6.'78ல் தவணை தவறிய கடன் கள் மீது செலுத்த வேண்டியிருந்த அபராத வட்டியை 30.6.'78க்குப் பிறகு செலுத்தியிருந்தால் அந்த அபராத வட்டியும் திருப்பித் தரப் படுதல்.

2. சாதாரண வட்டி தள்ளுபடி :

குறுகிய காலக் கடன்கள் ஏற் கனவே மூன்று அல்லது ஐந்து ஆண்டு களில் திருப்பிச் செலுத்த வேண்டிய மத்திய காலக் கடன்களாக மாற்றப் பட்டு, 30.6.'78ல் நிலுவை நின்ற தொகையில் பேரில் அந்தத் தேதியில் செலுத்த வேண்டியிருந்த சாதாரண வட்டி தள்ளுபடி செய்யப்படுதல். மேற்படி வட்டி 30.6.'78க்குப் பிறகு செலுத்தப்பட்டிருந்தால் அந்தத் தொகை திருப்பத் தரப்படுதல்.






3. வட்டி வீதம் குறைப்பு :

30.6.'78ல் நிலுவையிலிருந்த மாற்றியமைக்கப்பட்ட கடன்களுக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட கடன்களுக்கும் 1.1.'79 முதல் வட்டி வீதம் சிறு விவ சாயிகளுக்கு 10.5 சதவீதமாகவும் இதர விவசாயிகளுக்கு 12 சதவீத மாகவும் குறைக்கப்படுதல்.

4. கடன்களைத் திருப்பிச் செலுத் தும் கால நீட்டிப்பு:

ஒரு விவசாயிக்கு மாற்றியமைக் கப்பட்ட கடன்கள் 2 இருந்தால் 3 ஆண்டுகளில், 3 இருந்தால் 5 ஆண்டு களில், 4 இருந்தால் 6 ஆண்டுகளில் அவற்றைத் திருப்பிச் செலுத்தும் வகை யில் அக்கடன்கள் ஒருங்கிணைக்கப் படுதல். அவ்வாறு ஒருங்கிணைக்கப் படும் கடன்களில் ஆண்டுத் தவணைகள் 30.6.'80ல் முடியும் கூட்டுறவு ஆண்டில் தொடங்குமாறு அமைத்தல்.



# கூட்டுறவுச் செய்திகள்

உழவர் பெருமக்களின் குறுகிய கால,
நடுத்தரக் காலக் கடன் தேவைகளைக் கவனிக்க
4802 பிரதம வேளாண்மைக் கடன் சங்கங்கள்
தமிழகத்தில் இயங்குகின்றன. இவற்றின்
எண்ணிக்கை 1968-69-ல் 7255 ஆக இருந்தது.
வலிமையற்ற சங்கங்களை வலிமையுள்ளன
வாக மாற்றியமைத்த வகையில் அவற்றின்
எண்ணிக்கை குறைந்தது. எண்ணிக்கையைப்
பொறுத்த வரை இந்தியாவில் தமிழகம் 11-
வது இடத்தைப் பெற்றுள்ளது. கடன் வழங்கு
தலில் தமிழகம் மூன்றாவது இடத்தை (அதா
வது மராட்டியம், உத்திரப் பிரதேசத்திற்கு
அடுத்தபடியாக) வகிக்கிறது.

4802 பிரதம வேளாண்மைக் கடன் சங்
கங்களில் தன்னிறைவுடன் செயல்படுபவை
4254 சங்கங்கள் (88.6 சதம்). இதில் அனைத்
திந்திய மட்டத்தில் தமிழகம் முதலிடம் வகிக்
கிறது. 4415 சங்கங்களில் சம்பளச் செய
லாளர்கள் பணிபுரிகிறார்கள்.

வேளாண்மைக் கடன் சங்கங்கள் உறுப்
பினர்கள், பங்குத் தொகை இட்டுவைப்பு
கடன் பெற்றது, செயல் மூலதனம் மற்றும்
கடன் வழங்கிய வகையில் கடந்த 10 ஆண்டு
களில்(1968-69 முதல் 1977-78)வியத்தகு முன்
னேற்றம் கண்டுள்ளன. உறுப்பினர் தொகை
31.3 இலட்சத்திலிருந்து 47.58 இலட்சமாக
உயர்ந்துள்ளது. இது 49 சதவீத வளர்ச்சி
யாகும். பங்குத் தொகை ரூ. 1294 இலட்சத்
திலிருந்து ரூ. 3676 இலட்சமாகப் பெருகி
யுள்ளது (184 சதம்). அரசு வழங்கிய பங்குத்
தொகை ரூ. 122 இலட்சத்திலிருந்து ரூ. 703
இலட்சமாக உயர்ந்துள்ளது (75 சதம்).

## அச்சகங்களின் பணி

கூட்டுறவு இயக்கம் வளரும் இயக்கம்,
சங்கங்கள் வளர வளர, அவற்றின் தேவைக்
கான குறிப்பேடுகள், படிவங்கள், எழுது
பொருட்களின் தேவையும் வளர்கிறது.
கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான
வற்றை அச்சிட்டுத் தருவதும் கூட்டுறவு
அச்சகங்களின் முக்கிய நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு அச்சகங்கள்,
7702 உறுப்பினர்களுடனும், 14.55 இலட்ச
ரூபாய் பங்கு முதலீட்டுடனும் இயங்கி வரு
கின்றன. அவை 167.34 இலட்ச ரூபாய்
அளவுக்குத் தொழிலை நடத்தியிருந்தன. இவை
வழங்கிய ஊதியத்தின் அளவு ரூ. 33.78
இலட்சமாகும். இந்த அச்சகங்கள் 1455
பேருக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளன.
இவைகளில் 13 அச்சகங்கள் ஆதாயத்தில்
இயங்கி வருகின்றன.

1976-77-ல் தமிழகக் கூட்டுறவு அச்சகங்கள்
அதிக அளவு வேலை செய்து (ரூ. 153.15
இலட்சம்) இந்தியாவில் முதலிடத்தைப்
பெற்றுள்ளது. இரண்டாவது இடத்தை
குஜராத் மாநிலம் பெறுகிறது. கூட்டுறவு
அச்சகங்களுக்கு அதிக அளவு வேலை
வாய்ப்புக்களை அளித்ததும் தமிழ்நாடுதான்
(1516 பேர் 30.6.77-ன்படி) இரண்டாவது
இடத்தை மகாராஷ்டிரம் பெறுகிறது.

## மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

பிரதம வேளாண்மைக் கடன் சங்கங்
களைப் போலவே மத்தியக் கூட்டுறவு வங்கி
களும் கடந்த 10 ஆண்டுகளில் சிறந்த முன்
னேற்றம் கண்டுள்ளன. அவற்றின் உறுப்பினர்
தொகை எட்டு மடங்காகப் பெருகியுள்ளது.
மத்திய வங்கிகளில் உள்ள பங்குத் தொகை
(1968-69) ரூ. 1040 இலட்சத்திலிருந்து
(1977-78) ரூ. 3169 இலட்சமாக உயர்ந்
துள்ளது. இது 205 சதவீத வளர்ச்சியாகும்.
இவற்றில் உள்ள இட்டு வைப்புத் தொகை
ரூ. 2559 இலட்சத்திலிருந்து, ரூ.12666 இலட்
மாக (395 சதம்) உயர்ந்துள்ளது. கடந்த
பத்தாண்டுகளில் 704 சதம் ஆக உயர்ந்துள்
ளது. குறிப்பாக, கடந்த நான்கு ஆண்டுகளில்
அதிகம் என்றே கூறலாம்.

இட்டு வைப்புப் பொறுத்த மட்டில்
தமிழக வங்கிகள் நான்காவது இடம் வகிக்
கின்றன. (ரூ. 9917 இலட்சங்கள்). முதல்
மூன்று இடம் வகிப்பவை முறையே மராட்டி
யம், குஜராத் மற்றும் உத்திரப்பிரதேச
மாகும்.

கடன் வசூலில்கூட தமிழகம் முதலிடம்
(87 சதம்) வகிக்கிறது. அடுத்தபடியாக
அரியானா (77 சதம்) மாநிலம் இடம் பெறு
கிறது.

## மாநிலக் கூட்டுறவு வங்கி

கடந்த பத்து ஆண்டுகளில், மாநிலக்
கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனம் ரூபாய்
471 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்த
வளர்ச்சி 38.5 சதம் ஆகும். இவ்வங்கியில்
உள்ள இட்டு வைப்புத் தொகை ரூ. 1172
இலட்சத்திலிருந்து, ரூ. 8784 இலட்சமாகப்
பெருகியுள்ளது. இந்த வளர்ச்சியின் அளவு
649 சதவிகிதம். அதேபோல, இவ்வங்கி
வழங்கிய கடன் தொகை ரூ. 2765 இலட்சத்தி
லிருந்து, ரூ. 30,648 இலட்சமாக உயர்ந்துள்
ளது. இந்த வளர்ச்சி 1008 சதவீதமாகும்.
இவ்வங்கி ஈட்டிய ஆதாயம் ரூ. 32 இலட்சத்
திலிருந்து, ரூ. 221 இலட்சமாகப் பெருகியுள்
ளது ,கடந்த ஆண்டைவிட 1977-78 ஆதாயம்
இரு மடங்கு அதிகரித்துள்ளது. இந்த வகை
யில் தமிழக மாநில வங்கி இந்தியாவில் ஐந்தா
வது இடம் வகிக்கிறது. மராட்டியம் முதலி
டம் பெறுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



2.10.1979 அன்று, கதர் கைத்தொழில் அங்காடியில் (குறளகம்) காந்தி ஜெயந்தி கதர் விற்பனை விழாவை மேதகு ஆளுநர் துவக்கி வைத்தார். அதிகக் கதர் விற்பனை செய்த ஊராட்சி ஒன்றியங்களுக்குரிய பரிசுகளை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் வழங்கினார்.

2.10.1979 அன்று சென்னை வியாசர்பாடியில் கூட்டுறவு சங்கக் கட்டிடத் திறப்பு விழாவின்போது, மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள், சிறு வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்களை வழங்கினார். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் செல்வி பி.டி. சரசுவதி உடன் உள்ளார்.

திரு எஸ். எம். துரைராஜ், எம்.எல்.ஏ., அவர்கள், முதல்வரின் பேரவைச் செயலாளராகப் பதவி ஏற்றார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பதிவு எண். M. 8676



# கூட்டுறவு இயக்கம்- 75 ஆண்டுகள்

# தமிழரசு

[illegible]-11-1979 60 காசு.



# தென்மாவட்டங்களில் முதல்வர்



இராமநாதபுரம் மாவட்டம், எமனேஸ்வரம் பகுதியில் நெசவாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் (18—10—79) திறந்து வைக்கப்பட்டது.

இளையாங்குடி அரசினர் மருத்துவமனைக்கு (18—10—79) அடிக்கல் நாட்டப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டம் எம். ரெட்டியபட்டி அருகில் புதிய வழித் தடங்கள் (19—10—79) துவக்கி வைக்கப்பட்டன.

இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி கிராமத்தில் விவசாயிகளுக்கு (19.10.79) தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன.

மதுரை மாவட்டம் நத்தம், பெரியகுளம் பகுதியில் குடிநீர்த் திட்டம் (21—10—79) துவக்கி வைக்கப்பட்டது.

# 1979-80 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீடு - முக்கிய திட்டங்கள்

தமிழ்நாட்டில் சிறு உழவர் மேம்பாட்டு நிறுவன வளர்ச்சி வட்டாரங்கள் 267-லும், பிற வளர்ச்சி வட்டாரங்களில் 31-லும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான 2.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரியில், வறட்சிப் பாங்கான பகுதித் திட்டத்தின்கீழ் பால் மாவுத் தொழிற்சாலை ஒன்று 1.75 கோடி ரூபாய்ச் செலவில் நிறுவப்படும். உபரி நிலங்களையும், பயிரிடத்தக்க தரிசு நிலங்களையும் ஒப்படை செய்யும் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு, தனிப் பணியாளர்களை அரசு நியமித்துள்ளது. இதற்கென ஆண்டொன்றுக்கு 23.77 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். இந்த ஆண்டில் 25 முறைப்படுத்தப்பட்ட அங்காடிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று, 25 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.



மாண்புமிகு நிதியமைச்சர்
திரு கி. மனோகரன்

சென்னையிலுள்ள தண்டையார்ப்பேட்டையிலும் அண்ணா நகரிலும் அமைந்திருக்கின்ற 100 படுக்கைகள் கொண்ட மாநகர எல்லைப் பகுதி மருத்துவ மனைகளைத் தொடங்கவும், சென்னை எழும்பூரிலுள்ள அரசினர் கண் மருத்துவ மனையில் 146 படுக்கைகள்கொண்ட வார்டு ஒன்றைத் தொடங்கவும், அரசினர் பொது மருத்துவ மனையில் சில சிறப்புத் துறைகளைத் தொடர்ந்து நடத்தவும் 41.67 இலட்சம் ரூபாய் செலவிடுவதற்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 40 நகரங்களில், தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம், காப்புறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஆண்டொன்றுக்கு 22.75இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இவ்வாண்டில் 152 மேல்நிலைப் பள்ளிகள் கூடுதலாகத் தொடங்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப 2,000 பட்டதாரி ஆசிரியர் பதவிகளையும், 750 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பதவிகளையும் ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. மேலும் அரிசன வகுப்பினர், பழங்குடி வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்கள், மேல்நிலைப் பள்ளிக் கல்வி பயில்வதற்குப் படிப்புதவித் தொகைகள் வழங்கவும் அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்திற்கு 1.07கோடி ரூபாய் செலவாகும்.

கடந்த மாதத்தில் ஈரோட்டில் பெரியார் மாவட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. புதிதாக அமைக்கப் பெற்றுள்ள இந்த மாவட்டத்தில், பல்வேறு அலுவலகங்களை நிறுவுவதற்காக, 22.64 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு துணை மதிப்பீடுகளில் கேட்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் மதுரை மாநகரில் - உலகத் தமிழ் மாநாடு நடைபெறவிருக்கிறது. இதனைச் சிறப்பாக நடத்தும் பொருட்டு, மதுரை மாநகரை மேம்படுத்துவதற்காகப் பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இதற்கென இம் மதிப்பீடுகளில், 1.43 கோடி ரூபாய் செலவுக்கு அவையின் ஒப்புதல் கேட்கப்பட்டுள்ளது.

சாலைகளை மேம்படுத்தவும், தனியார் சாலைகள் மேம்பாட்டு நிதி ஒன்றை ஏற்படுத்தவும், சென்னை மாநகராட்சிக்கு வழங்குவதற்காக 2.5 கோடி ரூபாய் இம் மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. பல்வேறு போக்குவரத்து நிறுவனங்களுடைய நிதி நிலைமையை வலுப்படுத்துவதற்காக 3.06 கோடி ரூபாய் வழங்க அரசு அனுமதித்துள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கம், கிராமப் பகுதிகளில் வீடு கட்டும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இத்துணை மதிப்பீடுகளில், அச்சங்கத்திற்கு 2 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்க அரசு வகை செய்துள்ளது.

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் ஆகியோருக்கு மற்றொரு தவணை அகவிலைப்படி வழங்குதல் குறித்து அரசு அண்மையில் அறிவித்துள்ளது. காவல் துறைப் பணியாளர்களுக்கும் தீயணைப்புப், பணித் துறை பணியாளர்களுக்கும் இடையூறுப் படி ( Risk Allowance ) வழங்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் பணிபுரிகின்றவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, கிராமப் பணி ஊக்கப் படி வழங்கும் புதிய திட்டமொன்று தற்போது முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கிராம அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் அளிக்கப்படும் மதிப்பூதியத்தொகை கூடுதலாக்கப்படுகிறது

[மாண்புமிகு நிதி அமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1979-80-ஆம்ஆண்டின் முதலாவது துணை மதிப்பீடுகளை முன் வைத்து 27-10-79 அன்று ஆற்றிய உரையிலிருந்து]

# நலிவுற்றோர் துயர்துடைக்கும் அரசு


மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்

செல்வி பி.டி. சரசுவதி


கடந்த இரண்டாண்டுக் காலமாகத் தமிழகத்தில் சமுதாயநலனில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதை மக்கள் மகிழ்ச்சியோடு கவனித்துக்கொண்டு இருக்கிறார்கள். சமூகநலத்துறை என்று கூறும்பொழுது அது ஏழை-எளியவர்களையும், திக்கற்றவர்களையும், ஆதரவற்றவர்களையும், வாழ்க்கையின் அடித்தளத்தில் தத்தளித்துக் கொண்டிருப்பவர்களையும், விதவைச் சகோதரிகளையும், உடல் ஊனமுற்றவர்களையும், அநாதைக் குழந்தைகளையும், மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும், சந்தர்ப்பவசத்தால் தவறிழைத்த இளங்குற்றவாளிகளையும் பராமரிக்கின்ற மிகப்பெரிய பொறுப்பேற்றிருக்கின்ற துறையாகும். இந்த இரண்டாண்டுக் காலத்தில் இந்தத் துறையில் தீவிரமான திட்டங்கள் பல தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களைப் பொறுத்த அளவில் தாய்க்குலத்தின்மீது அவர் காட்டுகின்ற பாசத்தின் அறிகுறியாகவும், குழந்தைகள்மீது அவர் வைத்துள்ள அன்பின் அறிகுறியாகவும், வயதானவர்கள்மீது கொண்ட அக்கறையின் காரணமாகவும் பல்வேறு திட்டங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துக் கொண்டு வருகிறார்.

## குழந்தைகள் நலம்

இந்த ஆண்டு அனைத்துநாட்டுக் குழந்தைகள் ஆண்டு என்பதனை ஒட்டி சமூகநலத் துறை மிகச் சிறப்பான திட்டங்களைத் தீட்டி இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ''குழந்தைகள் நல வாரியம்' அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டினை எப்படிக் கொண்டாட வேண்டுமென்பதற்காகச் சென்ற ஆண்டே திட்டங்களைத் தீட்டி உள்ளது.

அதன்படி இந்த ஆண்டு ஜனவரி முதல்தேதி அன்று தமிழகம் எங்கும் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகளுக்கு அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு முத்திரை பொறிக்கப்பட்ட போர்வைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

தமிழகம் பூராவும் குழந்தைகள் கண்காட்சிகள், குழந்தைகளுக்கான சிறப்பு விளையாட்டுப் போட்டிகள் ஆகியவை நடத்தப்பட்டு வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், எட்டாவது வகுப்புவரை படிக்கின்ற உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உதவித்தொகை அளிக்க சமூக நலத் துறை முன்வந்துள்ளது. அவர்கள் இலவசமாகப் பள்ளிக்குப் பயணம் செய்ய பஸ் பாஸ்கள் கொடுக்கவும் சமூக நலத் துறை விழைந்துள்ளது.

மேலும், ஆயிரம் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயற்கை அவயவங்களும் காது கேட்கும் கருவிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

## ஆதரவற்றோர் இல்லங்கள்

தமிழக அரசின் வரலாற்றிலேயே சமூக நலத்துறையால் ஆதரவற்ற குழந்தைகளுக்கென அநாதை இல்லங்கள் ஏற்படுத்தப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆசியோடு சென்னை, மதுரை, சேலம், குமரி மாவட்டங்களில் அநாதை இல்லங்கள் ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இது தவிர மனநிலை வளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கெனவும் ஒரு நிலையத்தைச் சமூக நலத்துறை நடத்த உள்ளது.

## குழந்தைகள் காப்பகங்கள்

தமிழகம் எங்கும் சமூகநலத் துறையின் கீழ் 4,100 குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 50 அரிசனக் குழந்தைகள் காப்பகங்களும், 30 மலை வாழ்மக்கள் குழந்தைகள் காப்பகங்களும் உட்பட 200 குழந்தைகள் காப்பகங்கள் புதிதாக ஆரம்பிக்கப்படுகின்றன.

அமெரிக்க 'கேர்' நிறுவன உதவியுடன் இந்தக் காப்பகங்கள் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகட்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும், சத்துணவு வழங்குகின்றன. சென்னை, மதுரை, தர்மபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ப்புத் திட்டமும், சென்னை மாநகரில் உலக வங்கி நிதியுடன் தாய்சேய் நலத் திட்டமும், செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட குழந்தைகள்நலத் திட்டத்திற்காகச் சமூக நலத் துறை ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் செலவு செய்து வருகிறது.

## சிறப்புச் சத்துணவுத் திட்டம்:

தமிழக அரசின் வரலாற்றிலேயே முதன்முறையாக இளம் சிறார்களுக்குச் சத்துணவு அளிக்கின்ற மிகப்பெரிய திட்டமொன்று உலகவங்கி நிதியோடு சுமார் 51 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட இருக்கிறது.

1980ஆம் ஆண்டு தொடங்கப்படவிருக்கின்ற இத்திட்டத்தின் மூலமாகத் தமிழகத்தில் 6மாவட்டங்களில் 6 மாதம் முதல் 3 வயதுக்குட்பட்ட 11 இலட்சம் குழந்தைகளுக்கும் 27 இலட்சம் பாலூட்டுகின்ற தாய்மார்களுக்கும், கர்ப்பிணிப்பெண்களுக்கும் சத்துணவு வழங்கப்படவிருக்கின்றது. 13,500 குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட இருக்கின்றன. இத்திட்டத்தின் பயனாக 20 ஆயிரம் பெண்களுக்கும், ஆயிரம் ஆண்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படும்.

## மகளிர் வேலை வாய்ப்பு

நாடு சுதந்திரம் பெற்று ஏறக்குறைய 32 ஆண்டுகள் ஆகியும் கிராமப்புறப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தவேண்டும் என்று இதுவரை எந்த அரசும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவரின் தலைமையிலான இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்புதான் கிராமப்புறப் பெண்களின் வாழ்க்கையில் ஒளியேற்றவெனப் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமப்புறப் பெண்கள் வீட்டிலிருந்தபடியே வேலைவாய்ப்பைப் பெறத்தக்கதாகச் சுமார் 25 இலட்சம் ரூபாய் சமூக நலத் துறைக்கென ஒதுக்கியிருக்கிறார்கள்.

இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு முறையில் தீப்பெட்டித்தொழில் நிலையங்கள் அமைத்தல், சாக்கட்டி தயாரித்தல், மெழுகுவர்த்தி தயாரித்தல், கவர் தயாரித்தல், பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், பாய் முடைதல், புத்தகம் கட்டுதல் ஆகிய தொழிற் கூடங்கள் பல மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் முழுமையாகச் செயல்படும்பொழுது தமிழகம் முழுவதும் எட்டு மாவட்டங்களில் அறுநூறு தொழில் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு ஏறக்குறைய 20 ஆயிரம் பெண்கள் பயனடைவார்கள்.



மதுரை மாவட்டத்தில் உள்ள



திருமங்கலம் தொகுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆரம்பித்துவைத்த இத் திட்டம் செயல்படத்துவங்கி இன்றைய தினம் பெண்கள் வீட்டிலிருந்தபடியே வேலை வாய்ப்பினைப் பெற்று ஊதியம் பெறுகிறார்கள்.

மதுரை நகரிலும், சென்னை வியாசர்பாடியிலும் புத்தகம் கட்டுதல், கவர் தயாரித்தல் ஆகிய தொழிற்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான பெண்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். இதைத் தவிர வீட்டிலிருந்தபடியே பெண்கள் இட்டிலிக்கடை, பலகாரக் கடை, பூ வியாபாரம், பழ வியாபாரம், விபூதி குங்குமம் தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் ஆகிய சிறுதொழில்கள் நடத்தத் தேவையான மூலதனத்தைத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து நீண்ட காலக் கடனாகச் சமூக நலத்துறை பெற்றுத்தருகிறது.

சென்னை நகரில் மட்டும் சுமார் 2,500 ஏழைச் சகோதரிகளுக்கு இம்மாதிரியான கடன் தொகை பெற்றுத்தரப்பட்டுள்ளது. மதுரை நகரிலும் நூற்றுக்கணக்கான சகோதரிகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளனர்.

**உடல் ஊனமுற்றோர் நலம்**

உடல் ஊனமுற்றோர் நலம் காக்கச் சமூக நலத்துறை அமைச்சரின் தலைமையில் ஒரு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தின் வாயிலாக உடல் ஊனமுற்றவர்கள் பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். சுய வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். செயற்கை அவயவங்கள் வாங்குவதற்கும் ஊன்று கோல்கள், முச்சக்கர வண்டிகள் ஆகியவை வாங்குவதற்கும் நிதி உதவி பெறுகிறார்கள்.

**உடல் ஊனமுற்றோர் வேலை வாய்ப்பு**

உடல் ஊனமுற்றோர் வேலை வாய்ப்பிற்கெனத் தமிழக அரசின் சரித்திரத்தில் முதன்முறையாக ஆயிரம் உடல் ஊனமுற்றவர்களுக்குப் பெட்டிக் கடைகள் வைத்து நடத்த சுமார் நான்காயிரம் ரூபாய் கடன் உதவி அளிக்கப்படுகிறது. இதில் ரூபாய் ஐநூறு, சமூக நலத்துறை அளிக்கும் மானியம் ஆகும்.





மேலும் உடல் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் வேலை வாய்ப்பினை அளிக்கவும் இரண்டு புதிய தொழிற்சாலைகள் சேலம், மதுரை மாவட்டங்களில் துவங்கப்படவிருக்கின்றன. ஏற்கெனவே சென்னையை அடுத்த முட்டுக்காட்டில் உள்ள தொழிற்சாலை விரிவுபடுத்தப்படும். இந்தத் தொழிற்கூடங்களில் முச்சக்கர வண்டிகள் பெட்டிக்கடைகள் சிறிய நுண் கருவிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படும். இந்த அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுக் காலத்தில் உடல் ஊனமுற்றவர்களின் வேலை வாய்ப்பிற்கென எடுத்துக்கொண்ட தனி அக்கறையின் காரணமாக அரசு அச்சகம் மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆகிய நிறுவனங்களில் அதிக அளவில் உடல் ஊனமுற்றவர்களை வேலைக்கு அமர்த்தி அதற்காக மத்திய அரசின் பரிசுகளைப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**வயோதிகர் நலம்**

17 ஆண்டுக் காலமாகத் தமிழகத்தில் முதியோர்களுக்கென உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை எந்த அரசும் இவர்களின் நலனில் அக்கறை கொண்டு இத்தொகையை உயர்த்தவேண்டும் என்று எண்ணியதில்லை. கருணை உள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் இந்த ஆண்டுதான் முதியோர் உதவித்தொகையை ரூபாய் இருபதில் இருந்து, ரூபாய் இருபத்தைந்தாக உயர்த்தி இருக்கின்றார். மேலும் அவர்களது மானம் காக்க ஆண்டுக்கு இருமுறை அதாவது பொங்கல் திருநாளிலும், சுதந்திர நாளன்றும் புத்தாடைகள் வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்த ஆண்டு சுதந்திர நாளன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத் திட்டத்தினைத் துவக்கி வைத்து முதியோர்களுக்குப் புத்தாடைகள் வழங்கிய போது அந்த வயது முதிர்ந்தவர்கள் இந்த அரசினையும் புரட்சித் தலைவர் அவர்களையும் நெஞ்சார வாழ்த்திய காட்சி மறக்க முடியாத ஒன்றாகும்.

தமிழக அரசின் வரலாற்றில் முதன்முறையாக விதவைகள் வழிகாட்டி அமைப்பு நிலையங்கள் சென்னை, மதுரை, கோவை, தஞ்சை ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விதவைச் சகோதரிகளின் கணவன்மார்கள் விட்டுச் சென்ற ஓய்வூதியம் மற்றும் ஈட்டுத்தொகை ஆகியவைகளைப் பெற்றுத்தருவதையும் அவர்களது குழந்தைகளுக்குப் படிப்பு வசதி போன்றவைகளைச் செய்து தருவதையும் இந்நிலையங்கள் தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றன. ஆண்டொன்றுக்கு ரூபாய் 3,000க்கும் குறைவான வருமானம் உள்ள விதவைச் சகோதரிகளின் குழந்தைகட்கு இந்த நிலையம் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் இலவசமாக வழங்கி வருகின்றது. மேலும், இந்த அரசு விதவைச் சகோதரிகளின் உதவித்தொகை பெறுவதற்கான வயது வரம்பை 45ல் இருந்து 40 ஆகக் குறைத்துள்ளது. இதனால் சுமார் ஐயாயிரம் விதவைச் சகோதரிகள் கூடுதலாகப் பயனடைகிறார்கள்.



இந்த அரசின் நோக்கமெல்லாம், வாழ்க்கையின் அடித்தளத்தில் இருப்பவர்களின் வறுமையைப் போக்கி, அவர்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்து, கிராமப்புறங்களில் உள்ள மகளிர்க்கு வேலை வாய்ப்பினை உருவாக்கி, ஊட்டமில்லாது வாடுகின்ற குழந்தைகட்குச் சத்துணவு அளித்து, உடல் ஊனமுற்றவர்களுக்கு இன்னும் அதிகமான முறையிலே வேலைவாய்ப்பினை உருவாக்கி, விதவைச் சகோதரிகள் துயர் துடைத்து வாழவைக்கவேண்டும் என்பது தான்.

தமிழக அரசின் இன்றைய திட்டங்கள் முழுமையாகப் பயனளிக்கும்பொழுது, தமிழக மக்களின் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தம் உருவாகும் என்பதில்

# அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டில் குழந்தைகள் நலம்

ஏ. எஸ். அஹ்லுவாலியா ஐ.ஏ.எஸ்.,
ஆணையர் மற்றும் செயலர், சமூக நலத்துறை.

மனித குலத்தின் வளர்ச்சி, குழந்தைகள் நல்ல முறையில் பேணி வளர்ப்பதைப் பெரிதும் சார்ந்ததாகும். பொருளாதார வளர்ச்சி வேறு, சமுதாயவளர்ச்சி வேறு. பொருளாதார வளர்ச்சிக்குச் சமுதாய வளர்ச்சி மிக முக்கியமானதாகும். எத்திட்டமும் சிறிது காலம் காத்திருக்கலாம். ஆனால், குழந்தைகள் நலம் பேணும் எத்திட்டமும் காலந்தாழ்த்த இயலாது. இப்பின்னணியில்தான் குழந்தைகள் நலத் திட்டங்களைக் காணவேண்டும்.

உடலாலும், உள்ளத்தாலும் குழந்தைகள் வயது வந்தவர்களைவிட மெலிந்தவர்கள். எனவே, அவர்களின் நலத் திட்டங்களுக்கு நிதியும் மற்ற உதவிகளும் மிக அதிக அளவில்தேவை. ஊட்டச்சத்துக் குறை, குழந்தைகளுக்கு நிரந்தரமான, சரிசெய்ய இயலாத, மூளை வளர்ச்சிக் குறைவை ஏற்படுத்துகிறது. வறுமை, இவர்களது சத்துக் குறைவான நிலையினை மேலும் அதிகப்படுத்துகின்றது.

ஆசிய நாடுகளிலேயே இந்தியா தான், முதன் முதலில் "யூனிசெப்" பின் சிபாரிசினை ஏற்றுக் குழந்தைகளுக்கான ஒரு தேசீயக் கொள்கையினை வகுத்தது. 1973ல், குழந்தைகள் பிறப்பதற்கு முன்பும், குழந்தைகள் பிறந்த பின்பும் தேவையான வசதிகளை மாநில அரசுகள் நல்கவேண்டுமென மத்திய அரசு தீர்மானித்தது. 1974ல் முழுமையான தேசீய கொள்கை வரையறுக்கப்பட்டு "தேசீய குழந்தைகள் வாரியம்" ஏற்படுத்தப்பட்டது.

இக்கொள்கைகளுக் கிணங்க, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் தொண்டு மையங்கள் ஊட்டச்சத்துக் குறைவான குழந்தைகளுக்கான தொண்டு செய்து வருகின்றன. ஆனால், இத்திட்டங்கள் இப் பிரச்சினையில் ஒரு சிறு பகுதியினையே தீர்க்க முடிந்தது. இப்பிரச்சினையினைச் சமாளிக்க பெரியதொரு முயற்சி தேவை. எனவே, இவ்வரசு இப்பிரச்சினையைச் சமாளிப்பதற்கு இந்த அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டை ஓர் ஆரம்பமாக எடுத்துக் கொள்கிறது.

இச்சத்துணவுக் குறைவினைப் போக்கி, குழந்தைகளின் வாழ்வு வளம் பெற, இவ்வரசு, உலக வங்கியின் நிதி உதவியுடன் ஒரு ஊட்டச்சத்து வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டம் 6 மாதம் முதல் 5 ஆண்டுகள் வரை உள்ள குழந்தைகளையும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களையும் பேணிக் காத்து அவர்களுக்கு வேண்டிய ஊட்டச்சத்தினை அளிக்கும். இத்திட்டத்தில் சத்துணவு வழங்கல், மருத்துவ வசதி வழங்குதல் மற்றும் சத்துணவுக் கல்வி அளித்தல் ஆகியவை உள்ளடக்கம். முதலமைச்சர் குழந்தைகள் நிதிக்காக ரூ. 1 கோடி திரட்ட, எடுக்கப்பட்டிருக்கும் இவ்வரசின் முடிவு இம்மாநிலத்தில் குழந்தைகள் நலத் திட்டங்களின் செம்மையினைக் காண்பிக்கும்.

இம்மாநிலத்திலுள்ள 2.35 இலட்சம் உடல் ஊனமுற்றோரில் 75 ஆயிரம் பேர், 16 வயதிற்குட்பட்டவர்கள். இந்த அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டிலிருந்து 3 அல்லது 5 ஆண்டுகளில், இந்த உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயற்கை உறுப்புக்கள், காது கேட்கும் கருவிகள் மற்றும் தேவையான இதர கருவிகள் வழங்கப்படும். மேலும் உடல் ஊனமுற்ற, 8வது வரையில் படிக்கும் குழந்தைகளுக்குப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வாங்குவதற்கென ரூ. 25 அளிக்கும் திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. கண் பார்வை இழந்தோர், சென்னை நகர் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யும வசதி ஏற்கெனவே உள்ளது. அதேபோல் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் இலவசப் பேருந்து வசதி அல்லது ரூ 10 முதல் ரூ.15 வரை ரொக்கமாக வழங்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. இக்குழந்தைகளின் நலனுக்கென நிதி திரட்ட, சிறப்புப் பரிசுத் திட்டம் ஒன்றும் பரிசீலனையில் உள்ளது.

வருகிற நிதியாண்டில் அனாதைக் குழந்தைகள் அனைவருக்கும் தேவைப்பட்ட எல்லா வசதிகளையும் இவ்வரசு செய்யும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தற்பொழுது சமுதாய ரீதியாக ஊனமுற்றோர் குழந்தைகளுக்கு வழங்கும் சலுகைகள் அனைத்தும்-விதவைத் திருமணத்தால் பிறந்த குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்படும் திட்டம் ஏற்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

பொதுவாக, வளரும் நாடுகளில் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைவு போன்றவைகளுக்கு வானொலி மற்றும் பத்திரிகைகள் முக்கியத்துவம் அளிப்பதில்லை என்ற கருத்து நிலவுகின்றது. இவ்வரசு , ஊட்டச்சத்துக் குறைவு, உடல் நலம் பேணல் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் செய்திகளை வானொலி மற்றும் பத்திரிகைகள் மூலம் மக்களுக்கு அறிவிக்கும் திட்டம் மன நிறைவினை அளிக்கின்றது.

இத்திட்டத்தினை இந்த அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டிலேயே செயல்படுத்துவது மிகவும் உசிதமாகும்.

மேற்கூறிய அரசின் திட்டங்களும் அவற்றைச் செவ்வனே செயல்படுத்த இவ்வரசு எடுத்துக் கொள்ளும் அக்கறையும், இம்மாநிலத்தின் குழந்தைகளின் நலன் எதிர்காலத்தில் நன்கு காக்கப்படுவதைத் தெளிவாகக் காட்டுகின்றது. நாமும் இக்குழந்தைகளின் நலம் பேண இச்சந்தர்ப்பத்தில் துணை புரிவோம் என்று உறுதியெடுத்துக் கொள்வோமாக!






# சமூக நல வாரியமும் சமுதாய வளர்ச்சியும்

இந்தியத் துணைக்கண்டம், அரசியல், ஆன்மீகம், கலாச்சாரம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தனக்கென்ற ஆழ்ந்த பாரம்பரியத்தைக்கொண்டது. வளர்ந்து வரும் நாடு என்ற நிலையில் தற்போது அது இருப்பினும் வளர்ந்துவிட்ட பல நிலைகளைப் பல துறைகளிலும் கண்டது. இருப்பினும் பொருளாதார மற்ற அரசியல் காரணங்களினால் நாம் எட்ட வேண்டிய வளர்ச்சி இன்னும் அதிகமாகவே உள்ளது.

**தமிழ்நாடு சமூக நல வாரியம் :**

1961-லிருந்து தமிழ்நாடு சமூக நல வாரியம், மாநில அரசின் சமூக நலத்துறையுடன் இணைக்கப்பட்ட தனித்தன்மையுடன் மற்ற மாநில வாரியங்களிலிருந்து மாறுபட்டு இயங்கி வருகிறது. இதனால் அரசுத்துறையும், வாரியமும் ஒரே நோக்குடன் மாறுபாடின்றித் திட்டங்களைச் செயலாற்றவும், நிறுவனங்களுக்கு உதவவும் முடிகிறது.

1978-ல், வாரியம் மாற்றியமைக்கப்பட்டபோது தமிழக அரசு, சமூக நல வாரியத்தில் கட்சி வேறுபாடின்றி அனைத்துக் கட்சியினருக்கும் உறுப்பினராகும் வாய்ப்பு அளித்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக சமூக நலம் என்பது அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது, சமுதாயத்தின் எல்லா அங்கங்களும் ஒரே மனத்துடன் ஈடுபட வேண்டுவது என்பதைச் செயல்படுத்திக் காட்டியுள்ளது. இது மட்டுமின்றி வாரியத்தின் வேறு பல செயல்திட்டங்களிலும், மற்ற மாநிலங்களை ஒட்டி நோக்குங்கால், அதிகத் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றி முதன்மையாக நிற்கிறது என்பது வாரியத்தின் வெள்ளிவிழா ஆண்டில் குறிப்பிடத்தக்க ஒன்று.

**வருடாந்தரத் திட்டக்கால உதவித் தொகை:—**

இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் (50 சதவீதம்) பாதித்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. மீதித் தொகையை நிறுவனமே ஈடுகட்ட வேண்டும். இது, பயன் பெறும் சமுதாயத்தின் ஈடுபாட்டை வளர்ப்பதற்காக அவர்களின் பங்கும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், பாலர் பள்ளிகள், ஆதரவற்ற குழந்தைகளுக்கு இல்லங்கள், கிராமப்புற மருத்துவ மனைகள் போன்ற பல பணிகளுக்கு, இதுகாறும் ரூ. 3.89 இலட்சம் 303 நிறுவனங்களுக்கு வருடாந்தர மானியமாகவும், 81 நிறுவனங்களுக்கு ரூ. 4.60 இலட்சம் திட்டக்கால உதவித்தொகையாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.



திருமதி சிந்து நந்தகோபால்
தலைவர்,
தமிழ்நாடு சமூக நல வாரியம்.

**மகளிர் நல இயக்கங்கள் :**

கிராமப்புறங்களில் மகளிர் மன்ற அமைப்புகள் மூலம் அவர்களுக்கான குழந்தைகள் காப்பகம், தொழிற்பயிற்சி, சுகாதார நலம், சத்துணவு போன்ற நலப் பணிகளை வளரச் செய்வதற்காக இத்திட்டத்தின் கீழ், செலவுத் திட்டத்தின் (75 சதவீதம்) முக்கால் பங்கு மானியமாக வழங்கப்படுகிறது. தற்போது சுமார் 15 நிறுவனங்கள் 38 கிராமங்களில் 1.25 இலட்ச ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**குழந்தைகள் காப்பகம் :**

பெண் தொழிலாளர்கள் நோயுற்ற தாய்மார்கள், இவர்களின் குழந்தைகளுக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் 5 வயது வரையுள்ள குழந்தைகள் பகல் முழுவதும் பாதுகாக்கப்பட்டு சத்துணவு, உடல்நலம் முதலியவை பேணப்படுகின்றனர். தற்போது 120காப்பகங்கள் இத்திட்டத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இதற்கு ஆகும் செலவில் 90 சதவீதத்தை சமூக நல வாரியம் அளித்து வருகிறது. சுமார் 3000 குழந்தைகளுக்கு 6.85 இலட்ச ரூபாய்



"இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும் நல்ல முறையில் வளர்க்கப்படுகிறார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு. ஏனெனில் குழந்தைகள் இந்த நாட்டின் செல்வம். இச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது."

அளவில் இத்திட்டம் மிக்க வரவேற்போடு குழந்தைகள் ஆண்டில் நடைபெற்று வருகிறது.

நகர்ப்புறங்களில் பணிபுரியும் பெண்களுக்கெனப்பாதுகாப்பான விடுதிகள் தேவையாக உள்ள படியால், இத்தகைய விடுதிகளைக் கட்டுவதற்கும் சமூக நலத்துறையும் மத்திய அரசும் சமூக நல வாரியமும், உதவி செய்து வருகின்றன. குறைந்த செலவில் ஆரோக்கியமான உணவு, உறையுள், பாதுகாப்பு பெண்களுக்கு இதன் மூலம் கிடைக்கின்றன. தற்போது ஏழு விடுதிகள் இத்தகைய உதவி பெற்று வருகின்றன. 1978-79 ஆம் ஆண்டு ரூபாய் 29,080- தொகை அளிக்கப்பட்டுள்ளது.

எத்தனை தான் சமூகப்பணிகள் நடைபெற்றாலும் அது பாதிப்பிற்குப் பின் நடைபெற்றால் அது புண்ணுக்குப் புனுகு தடவும் வேலை போன்றதாகும். எனவே, அவை பாதிப்பை தடுக்கும் முகத்தான் அமைய வேண்டும். அதற்கு மக்களின் அடிப்படைப் பொருளாதாரம் உயர வேண்டும். இதற்கு அரசின் பல துறைகளும் பல வழிகளில் முயன்று வருவதைப்போல, சமூக நல வாரியமும், குறிப்பாக, பெண்களின் பொருளாதார முன்னேற்றம் வேண்டி இயங்கிவருகிறது. இதற்கென உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**கறவை மாட்டுத் திட்டம் :**

இத்திட்டத்தின் கீழ் பெண்கள் தங்கள் குடும்பத்திற்கு அதிகப்படியான வருவாய் ஈட்டுவதற்கு வகை செய்யப்படுகிறது. 5பசுக்கள் கொண்ட ஒரு அலகு வீதம் 5 பெண்களுக்கு ரூ. 14,000- கடனாகவும், மானியமாகவும் வழங்கப்படுகிறது, தற்பொழுது 324 அலகுகள் (யூனிட்) ரூ. 45.67 இலட்சத்திற்கு வழங்கப்பட்டு 1932 பெண்கள் பயன்பெற்று வருகிறார்கள். இதேபோல் ஒரு அலகுக்கு 5 கைத்தறிகள் மூலம் 9 அலகுகளுக்கு கைத்தறிக்கான கடனுதவியும் 10 தையல் இயந்திரம் வீதம் 15 அலகுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கறவைமாடு, தையல் இயந்திரம் கைத்தறித் திட்டங்களின் கீழ் ரூ. 8 லட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதே திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்களும் கடனாக வழங்கப்படுகின்றன. 10 பெண்களுக்கு 1 அலகு வீதம் ஒவ்வொன்றிற்கும் ரூ. 10,000 - கடன் வழங்கப்படுகிறது. ஏழைப் பெண்களுக்கு வேலை வாய்ப்பும், பொருளாதார ரீதியாக இலாபகரமாக நடக்கக்கூடிய எத்தகைய சமூக நலத்திட்டங்களுக்கும் வாரியம் உதவித்தொகை வழங்க தயாராக உள்ளது. உதாரணமாக அச்சுக் கூடங்கள், சிற்றுண்டி விடுதிகள் உபதொழில் கூடங்கள் போன்ற வணிக ரீதியான திட்டங்களுக்கும் உதவி செய்து வருகின்றது. தற்பொழுது இத்தகைய சிறுதொழில் திட்டங்களின் கீழ் 26கூடங்கள் அமைக்கப்பட்டு ரூ.9,43,333 அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு சமூக நல வாரியம் நவம்பர் 14-ல் குழந்தைகள் தினத்தை சென்னையில் சிறப்பாகக்கொண்டாடி வருகிறது. அவ்வமயம் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஓவியப்போட்டி, மாறுவேடப்போட்டி, பாடல்போட்டி போன்றவை நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டாகவும் சமூக நல வாரியத்தின் வெள்ளிவிழா ஆண்டாகவும் உள்ள நடப்பு ஆண்டில் வாரியம் தனது பணிகளில் புதிய பரிமாணங்களைக் காணவிருக்கிறது என்பதையும், இதில் தமிழக அரசு மற்றும் தனியார் சமூக நல நிறுவனங்களின் பாராட்டத்தக்க ஒத்துழைப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கது.

சமுதாய நல நிறுவனங்களே முழுவதும் மக்கள் மத்தியில் மக்களாலேயே நடத்தப்பட்டு அவர்களின் தேவைகளுக்கு ஏற்றபடி பாடுபடமுடியும், இதில் அரசின் பங்கு நல்லுதவியும், ஆலோசனையும், தகுந்த குறிக்கோள்களையும் காட்டி ஊக்குவித்தல் இந்த அடிப்படையின் கீழ் சமூக நல வாரியமானது இதற்காகவே இயங்குகின்ற ஒரு தனிப்பட்ட அங்கம் என்ற முறையிலே சமுதாய வளர்ச்சியில் இன்றியமையாத பங்கு வகித்து வருகிறது.



# சமூகநலத் துறைப் பணிகள்

உலக நாடுகளில் குறிப்பாக மக்கள் நல அரசுகளில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டங்களுக்கு சிறப்பிடமுண்டு. அவ்வாறே தமிழக அரசிலும் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக சமூக நலத் துறையின் மூலம் பல சீரிய நலத்திட்டங்கள் தமிழகத்தின் பல்வேறு நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும் வாழும் ஏழை எளிய மக்களின் துயர் துடைக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டான இவ் வாண்டில் குழந்தைகள் நலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நல்ல பல திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

**என். சண்முகம், ஐ.ஏ.எஸ்.,**
**இயக்குநர்,**
**சமூகநலத் துறை.**

1962ஆம் ஆண்டு 21 ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே ஆரம்பிக்கப்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் திட்டம், இன்று தமிழகத்தில் வேரூன்றித் தழைத்துச் செழித்து நிற்கின்றது. இன்று சுமார் 4500 குழந்தைகள் காப்பகங்கள் தமிழகமெங்கும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 50 குழந்தைகள் காப்பகங்கள் அரிசனங்களுக்கும், 30 மலை வாழ்மக்களுக்கும், மற்றும் இதர மக்களுக்காக 200 குழந்தைகள் காப்பகங்களும் ஆரம்பிக்கப்படுகின்றன. இவை தவிர, குழந்தைகள் காப்பகங்களுக்கான நிரந்தர கட்டிடங்கள் கட்டுதல், முன் பள்ளி வயதுடைய குழந்தைகள் மற்றும் பாலூட்டும் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம் கேர் (CARE) நிறுவன உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும், சென்னை, மதுரை, தருமபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டமும், சென்னை மாநகரில் உலக வங்கி உதவியுடன் தாய் சேய் நலத் திட்டமும் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட குழந்தைகள் நலத்திட்டத்திற்காக அரசு ஆண்டொன்றுக்கு சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவு செய்கிறது. இது தவிர உலக வங்கி உதவியுடன் சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 6 மாவட்டங்களில் விரைவில் நிறைவேற்றப்பட உள்ளது. குழந்தைகள் நலத்திட்டங்களை நிறைவேற்ற முதலமைச்சரின் குழந்தைகள் நலச் சிறப்பு நிதி என்ற ஒரு நிதி ஆரம்பிக்கப்பட்டு ரூபாய் ஒரு கோடி அளவில் அதற்கு நிதி திரட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



**மகளிர் நலம் :**

சமூக நலத்துறையின் நலப் பணித் திட்டங்களில் முக்கிய



பங்கு வகிப்பது மகளிர் நலத்திட்டங்களாகும். கல்வி கற்ற பெண்கள் திரும்ப மற்றவர்க்கு அக்கல்வியைப் பற்றிச் சொல்லும் போது மற்றவர்களுக்கும் தங்களுடைய உரிமையைப் பற்றியும் வேலை வாய்ப்புபெறவும், ஆண் பெண் சமத்துவம் அடையவும், அடிமைத் தனத்தை ஒழிக்கவும், வழி செய்கிருர்கள். இச்சமுதாய மாற்றத்திற்காகப் பெண்கள் நலனில் அக்கறை கொண்டு தமிழக அரசும் தாம்பரம், ' தஞ்சாவூர், கடலூர் திருநெல்வேலி, சேலம் ஆகிய 5 இடங்களில் சேவை இல்லங்கள், அமைத்து சமுதாயத்தில் ஆதரவற்ற, புறக்கணிக்கப்பட்ட அபலைப் பெண்களின் மறு வாழ்விற்காகச் சேவை செய்து வருகின்றது.

சேவை இல்லங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களில் எஸ். எஸ்.எல்.சி. குறுகிய காலப் பயிற்சியில் தேறிய பெண்களுக்காக ஒரு இடைநிலை ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி, பல்லாவரத்தில் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் உடைய மகளிர் தங்கக்கூடிய பணிபுரியும் பெண்கள் இல்லம் ஒன்றும் சென்னை நகரில் நடத்தப்பட்டு வருகிறது.

கிராமப் புற மகளிர்க்கு தங்கள் குடும்ப வருவாயைக் கூட்டிக் கொள்ளும் வகையில் தையல், கம்பளி நெசவு, ஜமக்காளம் நெய்தல், பனை ஓலைப் பாய் முடைதல் போன்ற எளிய குடிசைத் தொழில்களில் தகுந்த பயிற்சி அளிக்கும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் இத்துறையின் கீழ் மகளிர் மன்றங்கள், விதவைகளின் குழந்தைகளுக்கு இலவச பாட புத்தகங்கள் வழங்குதல், ஆதரவற்ற குழந்தைகளுக்கு அனாதை இல்லங்கள் போன்ற திட்டங்களும். செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



### விதவைகள் பயனடைய அரசு அளிக்கும் திட்டங்கள் :

கணவனை இழந்த ,சுற்றத்தாரால் கைவிடப்பட்டு அவதியுறும் பெண்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, விதவையை மறுமணம் செய்து கொண்ட தம்பதியினருக்கு ரூ. 5000—க்கான தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கல் மற்றும் 20 முதல் 40 வயது வரையிலுள்ள ஆதரவற்ற இளம் விதவைகளுக்கு தையல் இயந்திரம் இலவசமாக வழங்குதல் ஆகிய திட்டங்களை அரசு செவ்வனே நிறைவேற்றி வருகிறது. மேலும், இளம் விதவைகள் தொழில் செய்ய வங்கிகள் மூலம் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு ஆயிரக்கணக்கான பெண்கள் பயனடைந்துள்ளனர்.

### ஊனமுற்றோருக்கான நல்வாழ்வுத் திட்டங்கள் :

உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டங்களின் கீழ் இத்துறையின் மூலம் கால் ஊனமடைந்த ஏழைகள் சரியாக நடப்பதற்குச் செயற்கைக் கால் உறுப்புகளும், காது கேளாத பள்ளிக் குழந்தைகட்குக் காது கேட்கும் கருவிகளும் மற்றும் முச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. உடல் ஊனமுற்றோர் நலன் காக்க ஊனமுற்றோர் மாநில வாரியம் அமைக்கப்பட்டு அதன் மூலம் உடல் ஊனமுற்றவர்களுக்குச் செயற்கை உறுப்புகள் வழங்குதல், ஊனமுற்ற இளைஞர்களை பல பயிற்சிகளில் சேர்த்தல், தொண்டு நிறுவனங்களுக்கு மத்திய அரசின் மானியம் பெறுவதற்கான பரிந்துரைகள் செய்தல் ஆகிய பணிகள் சீரிய முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஊனமுற்ற நபர்கள் சொந்தமாகத் தொழில் செய்து வாழ்க்கை நடத்த பெட்டிக்கடைகள் திறக்க வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கப்பட்டு பல நூற்றுக்கணக்கான 'உடல் ஊனமுற்றோர்' பயனடைந்துள்ளனர்.





### ஊரகப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கான சிறப்பு திட்டங்கள் :

ஊரகப் பெண்களின் வேலை வாய்ப்பிற்கான பெரிய அளவிலான திட்டங்கள் ரூ. 25 இலட்சம் செலவில் சமூகநலத் துறையின் மூலம் மிக விரைவில் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நோட்டுப் புத்தகம் தயாரித்தல், சாக்கட்டி தயாரித்தல், தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் செயல்படுகின்றன.



### சிறப்புச் சத்துணவுத் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் தமிழகத்திலுள்ள அனைத்து பெரிய நகரங்களிலும் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர் பயன்பெறும் வண்ணம் துணைச் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது.

முடிவாக அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டான இவ்வாண்டில் கீழ்க்கண்ட குழந்தைகள் நலத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளன.

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் 1979ஆம் ஆண்டிற்குள் கூடுமான வரை செயற்கை அங்க அவய உறுப்புகள் வழங்கல்.

(ஆ) ஐந்தாண்டுக் காலத்திற்குள் ஒன்பதாயிரம் பாலர் பள்ளிகள் திறந்து தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் குறைந்தபட்சம் ஒரு பாலர் பள்ளி ஏற்படுத்துதல்.

(இ) ஆயிரம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு நான்கு பராமரிப்பு இல்லங்கள் அமைத்தல்

(ஈ) ரூபாய் ஆறு இலட்சம் செலவில் குழந்தைகள் அருங் காட்சியகம் அமைத்தல்.

(உ) ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் வழங்குதல்.

மேலும் நல்ல பல திட்டங்கள் தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்களின் துயர்துடைக்க தீட்டப்பட்டு சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன,






# குழந்தைகள் நலம்

'தமிழரசு இதழ் சமூகநலக் குழந்தைகள் நலச் சிறப்பிதழாக வெளிவருவது சர்வதேசக் குழந்தைகள் ஆண்டில் ஒரு சிறப்பு அம்சமாகும். சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு நாளைய குழந்தைகளின் எதிர்காலத்திற்கு நம்பிக்கை ஊட்டுவதற்கு வழி வகுத்துள்ளது. மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்டி குழந்தைகள் தான் நமது தேசத்தின் பொக்கிஷம் என்று நினைவூட்டுகின்றது.

இன்றைய இந்தியக் குழந்தைகளின் நிலையை எண்ணிப் பார்த்தால் உண்மை தெரியவரும். நமது இந்திய சமுதாயத்தில் மிகப் பின்தங்கிய வகுப்பு நம் குழந்தைகள்தான். அடிப்படைத் தேவைகளான சத்துணவு, சுகாதாரம், கல்வி இவைகள்கூட பெறாத இலட்சக்கணக்கான குழந்தைகள் நம் நாட்டில் இருப்பது நாம் வருந்தத்தக்கது.

இந்தியக் குழந்தைகள் ஏழையென்றும், பணக்காரன் என்றும் தன் பிறப்பினால் பாதிக்கப்படுகின்றார்கள். 44 சதவிகிதம் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். 145 மில்லியன் குழந்தைகளை நாம் எப்படி அணுகுவது? கல்வி, உணவு, நாளைய இந்தியாவை உருவாக்கும் இன்

**சரோஜினி வரதப்பன்**
**தலைவர்**
**இந்திய செஞ்சிலுவைச் சங்கம்,**
**(தமிழ்நாடு கிளை)**

றைய குழந்தைகள் அவர்களின் முழு வளர்ச்சிக்கு, நாம் எவ்வாறு தீர்வு காண்பது? இது ஒரு பெரிய பிரச்சினை அல்லவா?

குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எல்லாக் குழந்தைகளும் ஒரே மட்டத்தில் வாழ நாம் எவ்வாறு திட்டமிடுவது?



சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு பல கோணங்களில் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகுத்துள்ளது. இன்று குழந்தைகளின் வளர்ச்சி முழுமை பெற நாம் பாடுபட வேண்டும்.

வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் அடிப்படைத் தேவைகள் குழந்தைகளுக்கு அரசு மூலம் அளிக்கப்படுகின்றன. அரசாங்கம் கல்வி, சுகாதாரம், சத்துணவு போன்ற பொறுப்பினை அரசினர் ஏற்றுள்ளார்கள்.

சுதந்திரம் பெற்றபின் நம் நாட்டிலும் நாம் பல்வேறு திட்டங்களின் மூலம் நமது குழந்தைகள் நலத் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சீரிய முறையில் செயலாற்றி வருகிறோம். மக்கள் பெருக்கம் அதிகமாயுள்ள நமது நாட்டில் நமது அரசு மிகப் பொருத்தமாக நமது சர்வதேசக் குழந்தைகள் ஆண்டிற்கு ' Reaching the deprived child ' 'ஒதுக்கப்பட்ட குழந்தைகளை அணுகுவது', என்பதை சுலோகமாக வைத்துள்ளார்கள். அதே போல 'சந்தோஷமான குழந்தை தேசத்தின் பெருமை' என்றும் முழக்கம் எழுப்பியுள்ளார்கள். 100 மில்லியன் குழந்தைகளை அணுகுவது சாத்தியமல்ல என்றாலும் அரசு, துறைகளுடன் சமூக நல நிலையங்களும் பங்குகொள்ள வேண்டும். இதற்குத் தன்னலமற்ற சேவை, நம்பிக்கை, அன்பு பொறுமை, கிடைக்கும்வசதிகளை நன்கு பயன் பெறச் செய்வது, பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது. எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற திட சங்கல்பம் ஆகியவை வேண்டும்.

சட்டங்கள் மூலமாகவும், திட்டங்கள் மூலமாகவும், பிரச்சாரம் செய்தும் இன்று பின்தங்கிய குழந்தைகளை மேலே உயர்த்த எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை. எந்தத் திட்டத்திற்கும் பொருள், மனித சக்தி, வசதிகள் நிறைய இருந்தால்தான் வெற்றி காண முடியும். இவைகளுக்கு மேலோக உணர்ச்சிகளை எழுப்பி, மக்களுக்கு விழிப்பை ஏற்படுத்தித் தங்கள் கடமைகளைச் செய்ய வைப்பது மிகவும் முக்கியம். இந்த அம்சம் முழுவதாகக் கிடைக்காததால் தான் நாம் செலவிடும் பணம், மனித சக்தி, திட்டங்கள் வெற்றி பெறாது போகின்றன.

குழந்தைகளிடம் திறமை இல்லாது போகவில்லை. சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால் அது முழுமையாக வெளிப்படும். சுதந்திரம் பெற்று 32 ஆண்டுகள் ஆன பின்

# சத்துணவுக் கல்வி

இராசம்மாள் பா. தேவதாஸ்
இயக்குநர்—முதல்வர்
அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி, கோவை.



ஈடு, இணையிட்டுக் கூறவியலாத, நாட்டின் மிகப் பெரிய மனிதச் செல்வமாகிய குழந்தைகள் போற்றிப் பாதுகாப்படவேண்டியவர்களென்பதை அகில உலகும் உணர்ந்து இவ்வாண்டைக் குழந்தைகள் ஆண்டென நிர்ணயித்துச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

'இன்றைய குழந்தைகள் நாளைய குடிமக்கள்' அவர்களுடைய ஆரோக்கியத்தை நிரந்தரமாக நிர்ணயிப்பதில் உணவுக்கு முக்கிய பங்கு உண்டு. எதிர்கால இந்தியா வளமுடன் திகழ நல்ல பண்புள்ள அறிவு நிறைந்த, ஆரோக்கியமான குடிமக்கள் தேவை. 'உடலில் உறுதி வேண்டும், வாக்கினிலே இனிமை வேண்டும்'' என்ற பாரதியின் பாட்டிற்கேற்ப உடலுறுதி பெற நல்லுணவு வேண்டும்.

நம் நாட்டில் மக்கள் குறிப்பாகக் குழந்தைகள் உணவுப் பற்றாக்குறையாலும், உணவுச் சத்துக்களின் குறைவாலும், பல வித நோய்களுக்கு ஆளாகிப் பரிபூரண வளர்ச்சியடைவதில்லை. தவறான உணவுப் பழக்க வழக்கங்கள், சரியான உணவுகளைத் தேர்ந்தெடுத்து உண்ணாமை, குறைநோய்கள் பற்றி அறிவின்மை ஆகியவை குழந்தைகளின் உடல் நலனைப் பெரிதும் பாதிக்கின்றன.

இன்றைய உலகில், கல்வி பல்வேறு கிளைகளாகப் பரவிச் செழிப்பாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்தப் பல்வேறு கிளைகளில் மிக முக்கியமானதும், வாழ்க்கையில் பிணைந்ததும், செயலாற்றப்பட வேண்டியதுமானது உணவியலாகும். நமது அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவைப் பற்றி விளக்கும் கல்வி உணவியல் கல்வி, சத்துணவியல் கல்வியை அனைவருக்கும் தீவிரமாகப் பரப்ப வேண்டும்.

மனிதனின் வளர்ச்சிக்கும், வாழ்க்கை நலத்திற்கும் வேண்டிய சத்துப் பொருட்களைத் தரத்திலும் அளவிலும் போதுமானபடி கொண்டுள்ள உணவு சீருணவு அல்லது நலந்தரும் நல்லுணவு எனப்படும். உடலின் வெவ்வேறு பகுதிகள் தத்தம் தொழில்களைச் சீரான முறையில் செயல்படுத்தவும் உடல் நலத்தைப் பேணிப் பாதுகாக்கவும், உடலில் அவ்வப்பொழுது தேய்ந்து, நலிந்து போகும் பகுதிகளைப் புதுப்பிக்கவும், உடலின் பல்வேறு வேலைகள் செவ்வனே நடப்பதற்குத் தேவையான சக்தியை அளிப்பதற்கும் நல்ல உணவு, சீருணவு மிகவும் அவசியமாகும்.

உயிரானது பல்வேறு செயல்களின் மூலமாகத் தன்வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும், தேய்ந்து போன உறுப்புக்களைப் புதுப்பித்தலுக்கும், தேவையான சக்தியையும், சத்துக்களையும் பெற்றுப் பயன்படுத்துவதை விளக்கும் பிரிவு உணவியல் ஆகும். மேலும், என்னென்ன சத்துப் பொருட்கள் நமக்குத் தேவை என்பதையும், நமக்கு அவை எப்படிக் கிடைக்கின்றன என்பதையும் விளக்கும் அறிவியல்பிரிவு சத்துணவியல் ஆகும். சத்துணவியல் கல்வி மக்களின் உணவுப் பழக்க வழக்கங்களிலுள்ள தவறான கருத்துக்கள், மூட நம்பிக்கைகள் ஆகியவற்றை அறிவியலின் அடிப்படையில் மாற்றி அமைத்துத் தம் சூழ்நிலையில் கிடைக்கும் அனைத்து உணவுப் பொருட்களையும் பயன்படுத்தி நல்ல உணவுப் பழக்கங்களை மேற்கொள்ளுதற்குப் பெரிதும் உதவுகிறது. வாழ்க்கை முழுவதற்குமேற்ற வளமான சிந்தனைக்கும், செயல்பாட்டுக்கும், முன்னேற்றத்திற்கும், உணர்வுக்கும், நிறைவுக்கும் வழி வகை செய்வதில் மிக முக்கிய இடம் பெறுவது சத்துணவே.

சுவரை வைத்துக் கொண்டு தான் சித்திரம் வரைய முடியும். நல்ல உடல் வளம், நல்ல உள்ள வளத்திற்கும், தூய்மையான ஆன்மீக வளத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிகோலும், உடல், உள்ளம் ஆன்மா இம்மூன்றையும் ஒருமித்து வளர்ப்பதுதான் உண்மைக் கல்வியாகும் என்று அண்ணல் காந்தி அடிகள் விளக்கியுள்ளார். எனவே, எவற்றிற்கும் அடிப்படையாக அமைந்துள்ள உடல் நலங் காத்தல் பயிற்சியினைக் குழந்தைகளுக்கும், அவர்களின்மூலம் குடும்பத்திற்கும் செவ்வனே அளித்து உணவியல் கருத்துக்களை உரிய முறையில் பரப்பி நாட்டையும், வீட்டையும் நலமுற வளர்த்திட, உணவியல் கல்வியை எல்லாப் பள்ளிகளிலும் கற்பிக்க வேண்டும். இக்கருத்துக்களைப் பிஞ்சு நெஞ்சங்களில் பதிய வைப்பது குழந்தைகள் பள்ளி, ஆரம்பப் பள்ளிக் கல்வியின் இன்றியமையாத கடமையாகும்.



னும் நாம் இந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்திசெய்யாவிட்டால் நாம் கடமையில் தவறினவர்களாகின்றோம். எனவே, இன்று அரசும், சமூக நல நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள், வசதிகளை முழுவதும் குழந்தைகளின் நலனிற்குப் பரிபூரணமாகப் பயன்பெற முயற்சி செய்ய வேண்டும். ஐக்கிய நாட்டுப் பொதுச் சபை சர்வதேசக் குழந்தைகள் ஆண்டிற்குத் திட்டமிட்டபடி நமது அரசினரும் ஒரு தேசீயத் திட்டம் ( National plan of action ] அமைத்துள்ளார்கள். நாம் இதற்கிணங்க குழந்தைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாகக் கொண்டாடி குழந்தைகளின் உயர்வில் அக்கறை கொண்டு வருகின்றோம்.



மத்திய அரசும், மாநில அரசும் வகுத்துள்ள பல திட்டங்களை நாம் அமலாக்க முழுமூச்சுடன் பாடுபடவேண்டும். இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிடாது நாம் பயன்பெற முயற்சிப்போம்.

மத்திய சமூகநல வாரியம் 1954-ஆம் ஆண்டிலேயே குழந்தைகள் திட்டங்களை உருவாக்கியுள்ளது. கிராமப் புறங்களில்கூட ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடந்து வந்துள்ளன. இன்று அது வெகுவாக விரிவடைந்து குறிப்பாக நமது தமிழகத்தில் ஏராளமான 'பால்வாடிகள்' சத்துள்ள உணவுத் திட்டம் மூலம் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. மேலும் வருவாய் குறைவான குடும்பக் குழந்தைகளுக்கு விடுமுறை முகாம்கள் மூலம் நல்ல பலனைத் தந்துள்ளது.

வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைகளுக்கென 'Creche' ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அனாதைக் குழந்தைகள் சிறப்பாகப் பாதுகாக்க 'Destitute Home' ஒரு பெரும் சாதனை. இந்தியக் குழந்தைகள் நலச் சங்கம் மிகச் சிறப்பாக இந்தத் துறையில் பணியாற்றி வருவது வரவேற்கத்தக்கது.

இத்துடன் பெற்றோர்களுக்கும் பொறுப்புணர்ச்சியை உண்டாக்க வேண்டும். அதுதான் குழந்தைகளின் சக்திகளை வெளிப்படுத்த நல்ல பலனைத் தரும். இந்த ஆண்டு கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, கைவேலை மற்றும் பல்வேறு கலைகளில் ஆர்வம் உண்டாக்க பல நிலையங்கள் முன் வந்துள்ளது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் நமது குழந்தைகள் நல்ல பலனைப் பெறுவார்கள் என்று நம்புகின்றோம். சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்க்க குழந்தைகள்தான் நமது நம்பிக்கை. இதை ஒட்டி தமிழக அரசு எடுத்துள்ள அத்தனைத் திட்டங்களும் வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.



ஐந்து முதல் ஆறு மாதக் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே மிக முக்கியஉணவாகும். அதற்குப் பிறகு சத்து மிகுந்த தாய்ப்பாலுடன்கூட, ஊட்டம் மிகுந்த பிற உணவுகளும் தேவையாக அமைகிறது. வளருகின்ற குழந்தைகளுக்குத் துணை உணவு போதுமான அளவில் கொடுக்கப்பட வேண்டும். ஊட்ட உணவு பற்றியும், குறைந்த செலவில் உள்ளூரிலேயே கிடைக்கும் உணவுப் பொருட்களை வைத்துக்கொண்டு குழந்தைகளுக்குத் தர வேண்டிய துணை உணவு குறித்துத் திட்டமிடுவது பற்றியும், தாய்மார்களுக்குத் தகுந்த கல்வி புகட்டப்பட வேண்டும். ஊட்ட உணவுத்துறை ஆய்வின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட குறைந்த, விலைகளில் கிடைக்கும் 'குழந்தையமுது' 'இலைப்புரத லட்டு' போன்ற உணவுகள் புரதச்சத்து, கலோரிகள் அதிகம் உடையதாக உள்ளன.

நமது மக்கள் தொகுதியில் முக்கால் பகுதிக்குமேல் சுத்தம் செய்யப்படாத தண்ணீரைக் குடிக்கிறார்கள். குடிநீர் அசுத்தம் காரணமாகவே பலநோய்கள் குழந்தைகளையும், பெரியவர்களையும் தொற்றிக் கொள்கின்றன. ஊட்ட உணவுக்குறைபாட்டினால் ஏற்கெனவே தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய குழந்தைக்கு, அசுத்த நீரும் சேர்ந்து நோய் தீவிரமடைவதற்கு வசதியாகிறது.

குழந்தை பிறந்த ஆறு ஆண்டுகளுக்குள் மூளை வளர்ச்சி நிறைவடைகின்றது. புலன்களே அறிவாகிய கோட்டையின் வாயில்கள். ஐம்புலன்களும் கற்பதில் முழுமையாக ஈடுபட்டால்தான் கற்றல் நிறைவு பெறும். இதற்கு இவ் ஐம்புலன்களும் குறைபாடற்ற நிலையில் இருக்க வேண்டும். அவை நிறைவுடன் செயல்படவும், குறைகளைக் களைந்துவிடவும், கல்வி நல்கிடவும், சத்துணவியல் கல்வி வழிகோலுகின்றது.

நம் நாட்டில் சத்துணவு இன்மையால், ஆயிரமாயிரம் குழந்தைகள் நாளும் அல்லலுறுகின்றனா. நாள் ஒன்றுக்கு மருத்துவமனையில் சேர்க்கப்படும் 25 மில்லியன் குழந்தைகளில் 5 மில்லியன் குழந்தைகள் சத்துணவுக் குறைவால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களில் 3,500 பேர் ஒவ்வொரு நாளும், மரணத்தைத் தழுவுகின்றனர். இந்தப் புள்ளி விவரம் ஒன்றே சத்துணவியல் கல்வி பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. சத்துணவுக் குறைவால் மக்களுக்குக் குறிப்பாக வளரும் குழந்தை



களுக்கும், கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஏற்படும் கொடிய நோய்களின் நீண்ட பட்டியல் சத்துணவுக் கல்வியின் இன்றியமையாமையை இன்னும் அதிகப்படுத்துகின்றது. கருச்சிதைவு, இறந்து பிறத்தல், பிறந்த சில நாட்களில் இறத்தல், குழந்தைகளிடத்தில் வளர்ச்சியின்மை, வைட்டமின் ஏ-சத்துக் குறைவால் ஏற்படும் கொடிய கண் நோய்-பார்வையிழப்பு போன்ற பயங்கரங்கள் தவிர்க்கப்படல் வேண்டுமெனில் பெற்றோர்க்கும், மற்றும் அனைவர்க்கும் சத்துணவியல் கல்வியை அவசியம் வழங்க வேண்டும்.

'நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச்செயல்'

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நோய் நம்மை நாடும் காரணங்களையும், அதைத் தணிக்க நாம் நாடிச் சேர்க்க வேண்டிய சத்துக்களின் வகைகளையும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து, 'வருமுன் காக்கும் பண்பினை' வளர்க்கச் சத்துணவுக் கல்வித் திட்டம் தீட்டித் தருகின்றது.

குழந்தைப்பள்ளி, ஆரம்பப் பள்ளி சமுதாயத்தின் முன்னோடி. சத்துணவுக் கல்வியின் சாரங்கள் பள்ளியின் மூலமாக தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் நன்றாக எட்ட முடியும். வளர்ந்த நாடுகளில், 15 சதவீத உழைக்கும் சக்தியற்ற இளம் குழந்தைகளை 40 சதவீத உழைக்கும் சக்தியுள்ள மக்கள் காக்கின்றனர். ஆகவே, அங்கு உற்பத்தி பெருகிப் பொருளாதாரம், ஸ்திர நிலையில் உள்ளது. ஆனால், வளரும் நம் நாட்டிலோ, 40 சதவீத உழைக்கும் சக்தியற்ற குழந்தைகளை 15 சதவீத உழைக்கும் திறனுடையோர்தான் காக்கின்றனர். இந்தப் புள்ளி விவரம் நமது நாட்டின் பொருளாதார அவல நிலையினைக் காட்டுகிறது. இந்த இழிநிலை மாறி உழைக்கும் சக்தியுள்ள மக்கள் கூட்டம் பெரிதாகி 'இல்லையே உணவில்லையே எனும் நிலை இனிமேலில்லை' என்னும் நிலை ஏற்பட வேண்டும். 'உணவியல் கல்வி நம் நாட்டு உணவுத் திட்டத்தின் இணைந்த பகுதியாக அமையவேண்டும். காரணம், இக்கல்வியின் மூலம், கிடைக்கின்ற பொருட்களைக் கொண்டு, அதிகப்படியான சத்துணவைக் குடிமக்கள் அடையலாம்.

நாட்டுக் குடிமக்களுக்குத் தேவையான சத்துணவு கிடைக்காவிட்டால் உடல் நலக்குறைவு உண்டாகும். அப்போது நம் திட்டங்களும், செயல் முறைகளும் பயனளிக்காமல் தோல்வியை எதிர்நோக்க வேண்டிவரும் என்று திட்டக் கமிஷன் கூறியுள்ளது. எனவே, வளமான 'பிற்கால சமூக வாழ்க்கைக்கு எல்லா நிலையிலும், எல்லா வகை மக்களுக்கும் நல்ல, சத்துள்ள உணவு வகைகள் கிடைக்கச் செய்வதுதான் நாடு. நமது இளம் செல்வங்களை—குறுகுறுவென நடந்து, சிறுகை நீட்டி இட்டும்தொட்டும், கவ்வியும் துளந்தும், மழலை மொழி பேசும் மாண்புறு செல்வங்களைப் பாரதியார் கண்டபடி,

ஒளிபடைத்த கண்களையுடையவர்களாகவும்
உறுதி கொண்ட நெஞ்சினையுடையவர்களாகவும்

கடுமை கொண்ட தோளினை உடையவர்களாகவும்

தெளிவு பெற்ற மதியினையுடையவர்களாகவும்

ஏறுபோல் நடையினையுடையவர்களாகவும்

நோய்மையற்ற சிந்தனையுடையவர்களாகவும்

நோயற்ற உடலினையுடையவர்களாகவும்

மாற்றுவது அனைவரது கடமையாகும். அனைவரும் உடல் நலத்தின் மேன்மையினை உடலோம்பல் பயிற்சி முறையினை அறிய ஆவல் கொள்ள வேண்டும்.
அப்போதுதான், வளமார்ந்த நம் தாய்நாடு நலமார்ந்த குழந்தைகளையும், அதன் மூலம் வளமார்ந்த நாட்டினையும் கண்டு வாழ்ந்து மேதினியில் உயர முடியும்!



# மகளிர் நலம்

உலக நாடுகளில் குறிப்பாக மக்கள் நல அரசுகளில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்குச் சிறப்பிடமுண்டு. பாரதப் பெண்கள் முன்னேற்றத்திற்கு நம் சமுதாயத்தில் என்றும் ஒரு தனி அக்கறை உண்டு. அவ்வாறே தமிழக அரசிலும் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காகச் சமூக நலத்துறையில் பல சீரிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள், மகளிர் துயர் துடைக்கவும், அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கவும், அவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தவும் அரும்பாடுபடுவதாக உள்ளன.

**சேவை இல்லங்கள்:**

தமிழ்நாட்டில் தாம்பரம், தஞ்சாவூர், கடலூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய 5 இடங்களில் அரசினரின் சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் திருநெல்வேலி, சேலம் சேவை இல்லங்கள் 1978-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டவை. இச்சேவை இல்லங்களில் 18 முதல் 40 வயது வரையிலான சமூகத்தில் ஆதரவற்ற நிலையிலுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட மகளிர் மற்றும் ஆதரவற்ற பெண்கள், தங்களுடன் இரண்டு குழந்தைகளும் 3 ஆண்டுகள் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு இ.எஸ்.எல்.சி, எஸ்.எஸ்.எல்.சி. தேர்விற்கும், தையற்கலை அரசுத் தொழில் நுட்பத் தேர்விற்கும் பயிற்சி பெறுகின்றனர். இவ்வில்லங்களில் தங்கியிருக்கும் காலங்களில் மகளிர் ஒவ்வொருவருக்கும் ரூ. 50-ம், குழந்தைக்கு ரூ. 36-ம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இச்சேவை இல்லங்கள் சமுதாயத்தில் ஆதரவற்ற நிலையிலுள்ள சமூகத்தால் புறக்கணிக்கப்படும் அபலைப் பெண்களுக்கு ஆதரவளித்து, அவர்கள் மீண்டும் அதே சமுதாயத்தில் சிறப்புடன் வாழ வழிவகை செய்கின்றன.

**இடைநிலை ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி:**

சேவை இல்லங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களில் எஸ்.எஸ்.எல்.சி. குறுகிய காலப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றபெண்களுக்காக ஒரு இடைநிலை ஆசிரியைப் பயிற்சிப்பள்ளி, பல்லாவரத்தில் நடத்தப்படுகிறது. இப் பள்ளியில் இளநிலைப் பிரிவில் 40ம், முதுநிலைப் பிரிவில் 40ம் ஆக 80 பெண்கள் பயிற்சி பெறுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 50 உதவித்

—தாராபாய்
துணை இயக்குநர்,
(மகளிர் நலம்)
சமூக நலத்துறை.

தொகை வழங்கப்படுகிறது. மேலும், அரசினர் இப்பள்ளியில், பயிற்சி பெற்ற முன்னாள் சேவை இல்ல மாணவிகளைக் கல்வித் துறை, சமூக நலத்துறைகளில் ஆசிரியை வேலைக்கு, வேலை வாய்ப்பகத்துடன் தொடர்பு கொள்ளாமல் நேரடியாக வேலையில் அமர்த்தவும், இவர்கள் 40 வயதுவரை அரசுப் பணிகளில் சேர வயது வரம்பினைத் தளர்த்தியும் உத்தரவுகள் பிறப்பித்துள்ளனர். இவ்வாறாக இப் பயிற்சி, முன்னாள் சேவை இல்ல மாணவிகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கிறது.



**பணிபுரியும் பெண்கள் இல்லம்:**

குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் உடைய மகளிருக்காக, சென்னை நகரில் 25 மகளிர் தங்கக்கூடிய பணிபுரியும் பெண்கள் இல்லம் ஒன்று நடத்தப்படுகிறது. இதில் தங்கும் பெண்களிடமிருந்து குறைந்த அளவில் உணவுக் கட்டணமும், வாடகை மற்றும் மின்சாரக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. இவ்வில்லம் வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வேலை பார்க்கவரும் ஏழைப் பெண்களுக்குக் குறைந்த செலவில் நிறைந்த வசதிகள் பெறும் ஒரு சிறந்த இல்லமாகத் திகழ்கிறது.

**பயிற்சி நிலையங்களும் உற்பத்தி நிலையங்களும்:**

கிராமப்புற மகளிர்க்குத் தங்கள் குடும்ப வருவாயைக் கூட்டிக் கொள்ளும் வகையில் தையல், கம்பளி நெசவு, ஜமுக்காளம் நெய்தல், பனை ஓலைப் பாய் முடைதல் போன்ற எளிய குடிசைத் தொழில்களில் தீவிர பயிற்சியளிக்கும் பொருட்டுப் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன. இந்நிலையங்களில் பெறும் பயிற்சியின் காலம் ஓராண்டு. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 30 உதவித்தொகை வழங்கப்படுகிறது. சமூக நலத்துறையின் நிதியின் மூலம் 25 பயிற்சி நிலையங்களும், 4 உற்பத்தி நிலையங்களும், அரிசன நலத்துறையின் 16 பயிற்சி நிலையங்களும், பிற்பட்டோர் நலத்துறை நிதியின் மூலம் 7 பயிற்சி நிலையங்களும், மறுவாழ்வுத்துறை மூலம் 2 பயிற்சி நிலையங்களும் இம்மாநிலம் முழுவதிலும் நடைபெற்று வருகின்றன.

இப் பயிற்சி நிலையங்களில் பெறும் பயிற்சியின் மூலம் தமிழகத்தின் கிராமப்புறப் பெண்கள் சொந்தமாகத் தொழில் நடத்தியும், அதிக அளவில் வேலைவாய்ப்புப் பெற்றும் பொருளாதார மேம்பாடு அடைகின்றனர்.

**மகளிர் மன்றங்கள்:**

கிராமப்புற மகளிர் தங்களின் பற்பல சமூக, பொருளாதார வேற்றுமைகளைக் களைந்து

ஒன்றுகூடுவதற்காகக் கிராமங்கள் தோறும் மகளிர் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகின்றன; தமிழ்நாடு முழுவதிலும் 11,220 மகளிர் மன்றங்கள் நடைபெறுகின்றன. மகளிர் மன்றங்கள் செயல்படுவதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 4000 செலவிடப்படுகிறது.

மகளிர் மன்றங்களின் உயர்வு மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் திட்டத்தின்படி 1978-79ல் 5 வட்டாரங்களில் 46 மகளிர் மன்றங்களில் ரூ. 47,950- செலவிடப்பட்டுள்ளது.

**சிறப்புத் திட்டங்கள்:**

1978-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் ரூ. 3000-க்கும் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு குறைவான ஆண்டு வருமானமுள்ள குடும்பங்களிலுள்ள 16 முதல் 30 வயதுள்ள 1000 ஏழைப் பெண்கள் தட்டச்சு பயிற்சிபெற 10மாதங்களுக்கு உதவித்தொகை ரூ. 150 வழங்கப்படும். புதிய திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 1.50 இலட்சம். இத்திட்டத்தினால் படித்து முடித்து தட்டச்சுப் பயிற்சி பெற வசதியற்ற பல ஏழைப் பெண்கள் தட்டச்சு பயிற்சி பெற்று விரைவில் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்.



**இலவச பாட புத்தகம் வழங்குதல்:**

ஆண்டு வருமானம் ரூ. 3000-க்கும் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகம், நோட்டுப்புத்தகம் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி 1978-79-ஆம் ஆண்டில் 3,000 குழந்தைகள் பலனடைந்தனர். இத்திட்டத்தில் மொத்த செலவு ரூ.1 இலட்சம். இத்திட்டம் ஆதரவற்ற ஏழை விதவைகள் தங்கள் குழந்தைகளைச் செலவின்றிக் கல்வி கற்பிக்க உதவுகிறது.

**அநாதை இல்லங்கள்:**

தமிழகத்திலுள்ள அநாதை மற்றும் ஆதரவற்ற குழந்தைகளை நன்கு பேணி வளர்க்கவும் இதர வசதிகளுடைய குழந்தைகளைப் போன்று அவர்களையும் சமுதாயத்தில் பொறுப்புள்ள குடிமகனாக மாற்றும் வகையில் தமிழ்நாடு அரசு 1000 அநாதைக் குழந்தைகளுக்கென்று 4 அனாதை இல்லங்களை அமைக்க உத்தரவிட்டுள்ளது. இவ்வில்லங்களை விரைவில் துவங்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

# கோவை மாவட்டத்தில் சமூக நலப்பணிகள்



**பங்கஜாட்சி சுப்பையன்**
**சமூகநல வாரிய உறுப்பினர்,**
**கோவை.**

**கோ**வை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மத்தியமாநில சமூகநல வாரியங்களின் பொருளுதவியுடன் வசதியற்ற பெண்களுக்கான தையல் பயிற்சிநிலையங்கள், சமூகசேவை நிலையங்கள் நடத்தி வருகின்றன. அதிலும் முக்கியமாக வசதியற்ற மலைப்பிரதேசமான வால்பாறை பகுதியில் ஓர் நிலையம் செயல்பட்டு வருகின்றது. இந்த 4 நிலையங்களிலும் 95 பேர் தையல் பயிற்சிபெற்று வருகின்றனர். கடந்த ஆண்டு 70 பேர் பயிற்சி பெற்று தத்தம் வாழ்வில் ஓர் நிலையான வருவாய் பெறும் வண்ணம் தொழில் கற்றுள்ளனர். இதேபோல் கிராமப் பெண்களைப் பள்ளி இறுதி வகுப்பிற்கு பயிற்றுவிக்கும் குறுகிய காலப் பயிற்சிக்காக (Condensed Course for S.S.L.C. failed Students) மத்திய சமூக நல வாரியம் அவிநாசிலிங்கம் மனை இயல் கல்லூரிக்கு நிதி உதவியுள்ளது.

இந்தியக் குழந்தைகள் நலக் கழகம் கோவை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் சமூக நல வாரிய நிதி உதவியுடன் 11 குழந்தைகள் காப்பகங்கள் (Creches) நிறுவியுள்ளது. இது தவிர அகில இந்திய மாதர் சம்மேளனம் (A.I.W.C.) பெண்கள் சேவா நிலையம் (W.V.S.) ஆசிரமம், கோவை சேவா நிலையம், கஸ்தூரிபா காந்தி நினைவு அறக்கட்டளை, எல்.ஆர்.இ. நாயுடு கல்வி அறக்கட்டளை போன்ற நிலையங்கள், சமூக நல வாரியத்தின் நிதி உதவியுடன் குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பித்து நடத்திவருகின்றன.

மலைவாழ் மக்களுக்காக வால்பாறையைச் சுற்றியுள்ள ஒரு மருந்துகள் வழங்கும் நிலையமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 90 பெண்களுக்குக் கறவைமாடுகள் வாங்க நிதியுதவி வழங்க மாநில சமூக நல வாரியம் பரிந்துரை செய்துள்ளது. இந்த ஆண்டு மத்திய வாரியத்தின் பரிசீலனையுடன் 25 வசதியற்ற பெண்களுக்குக் கறவை மாடுகள் வாரியத்தின் வட்டியில்லாக் கடன் மூலமாக வழங்கப்பட்டுள்ளன. சிறு குழந்தைகள் பள்ளி, ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒன்றும் இந்த ஆண்டு மத்திய சமூக நல வாரிய நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 20 பெண்கள் பயிற்சி பெறுகின்றனர்.

கோவை அவிநாசிலிங்கம் மனை இயல் கல்லூரியில் ஓர் அச்சுக்கூடத்திற்கு ரூபாய் 48,000 மத்திய சமூக நல வாரியம் வழங்கியுள்ளது. பொது வாழ்வில் கிராமப்புறப் பெண்கள் எப்படி இணைந்து வாழ்வது என்பதற்கான பயிற்சி முகாம் ஒன்றும் நடத்தப்பட்டது.

கோவை உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலையம் ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கடந்த ஆண்டு ஓர் விடுமுறை முகாம் சமூக நல வாரிய நிதி உதவியுடன் நடத்தப்பட்டது. இந்த நிலையத்திலேயே இரண்டாண்டுகளாக வாரிய நிதி உதவியால் வளமான குழந்தைகளுக்கான மருத்துவப் பயிற்சி நிலையமும் செயல்பட்டு வருகிறது. செவிட்டு ஊமைப் பள்ளிக் குழந்தைகளுக்காகவும், வசதியற்ற குழந்தைகளுக்காகவும், ஐந்து கோடைகால விடுமுறை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.





அரசின் சமூக நலத்துறையின் மூலமாக 'கேர்' (CARE) நிறுவன உதவியுடன் ஊராட்சி ஒன்றியங்களில் கடந்த இரண்டாண்டுகளில் 36 குழந்தைகள் காப்பகங்கள் கட்டப்பட்டுள்ளன. 35காப்பகங்கள் கட்டப்பட்டுவருகின்றன.

மகளிர் மன்றங்கள், குடும்ப நலம், சிறு சேமிப்பு, வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் அமைத்தல், சிறு கைத்தொழில்கள் கற்றுத்தரல், தையல் கற்பித்தல், போன்றவற்றில் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் 12 மகளிர் மன்றங்கள் பரிசு பெற்றுள்ளன. சிறப்புச்சத்துணவுத் திட்டத்தின் மூலம், கோவை சிங்கா நல்லூர், திருப்பூர், நகராட்சிகள் மூலம் குழந்தைகள், கர்ப்பிணிப்பெண்கள், பாலூட்டும் தாய்மார், ஆகியோர் 23,000 பேர் மருத்துவ வசதி, பாலர் உணவு, பெற்று வருகின்றனர். இங்கு தமிழக அரசு சமூக நலத்துறை மூலமாக சமூக நலக்கிளைகள் நிறுவப்பட்டு, அரிசன நலத்துறை சீருடைகள் தைத்தல் மூலம் 1977-78, 1978-79ல் ரூபாய் 13,000 வருவாயாகப் பெற்றுள்ளனர். இதேபோல்உடல் ஊனமுற்றோர் 125 பேருக்கு மூன்று சக்கர வண்டிகளும், காதுகேளாத 42 பள்ளிக் குழந்தைகளுக்குக் காது கேட்க உதவும் கருவிகளும் தரப்பட்டுள்ளன.

ஆதரவற்ற பெண்களுக்கு உதவும் வகையில் 20 முதல் 40 வயது வரையில் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையிலுள்ள பெண்கள், உடல் ஊனமுற்ற- தையல் தெரிந்த பெண்களுக்கு 1977-78ல் 30 பேருக்கும் 78-79ல் 100 பேருக்கும் தையல் இயந்திரங்களை அரசின் சமூக நலத் துறை வழங்கியுள்ளது. இளம் விதவைகள் மறுமணத்திட்டத்தின் கீழ் 13 தம்பதியர் பயனடைந்துள்ளனர். விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் அளிக்கும் வகையில் 77-78ல் 298 பேருக்கும் 78-79ல் 257 பேருக்கும் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளி இறுதி ஆண்டில் சிறப்பாகத் தேறிய ஏழைப்பெண்கள் 62 பேருக்குத் தட்டச்சுப் பயிற்சி இலவசமாகத் தரப்பட்டு அவர்களுக்கு மாதம் ரூ. 15- உதவித் தொகையும் அளிக்கப்பட்டு வருகின்றது.

மத்திய மாநில சமூக நலத் துறையின் மானியம் மூலமாக 2 பணிபுரியும் பெண்கள் விடுதிகள், ஒன்று 5 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் இளம் கிறிஸ்தவப் பெண்கள் கழகத்தினராலும், மற்றொன்று சேவா நிலையத்தாரால் ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. இந்த விடுதிகளில் வெளியூர்களிலிருந்து இந்த நகரில் பணிபுரியும் பெண்கள் தங்கியுள்ளனர்.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட கோவை ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலையத்தின் காது சரிவரக் கேளாத குழந்தைகளுக்கும் திக்கிப் பேசும் குழந்தைகளுக்குமான மருத்துவப்பிரிவின் (Sound - Proof Room) ஒலி அடக்கிய அறையின் அமைப்பிற்காக வாரியம் ரூபாய் பத்தாயிரம் அளித்துள்ளது. இந்த நிலையத்தின் படுக்கைப்பிரிவு 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் மாண்புமிகு. சமூக நலத்துறை அமைச்சர் செல்வி. பி.டி.சரசுவதி அவர்களால் துவக்கப்பெற்றது. இந்த நிலையத்தின் பள்ளிக்குத் தற்போது அன்றாடம் வந்து போகும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் தங்கிப் படிக்கும் வகையில் விடுதி வசதிக்காகத் தமிழக அரசு சமூக நலத் துறையை நாடியுள்ளது. இந்த நிலையத்தில் இயன் மருத்துவம், (Physiotherapy) மொழிப் பயிற்சி (Speech Therapy) மன நோய் மருத்துவம் (Pshychiatry) மந்த செவியுடையோருக்குப் பயிற்சி போன்ற பிரிவுகளில் உடல் ஊனமுற்ற ,மனவளர்ச்சி குன்றிய எல்லா வயதினருக்கும் மருத்துவ உதவியும், உடல் ஊனமுற்ற மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான தனிப்பள்ளிகளும் தகுந்த நிபுணர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன.

# கோ-ஆப்டெக்ஸ் அழகோவியம்!

அழகு மகளிர்
ஆவலோடு வாங்கி அணிவதெல்லாம்
கோ-ஆப்டெக்ஸ் சேலைகளையே!
அதில் உள்ள விந்தையெல்லாம்
அழகும் நயமும் இழைய...
அகம் கவரும் வண்ணங்கள் மிளிர.
கோடுகளும்-புள்ளிகளும் குலவ...
எண்ணற்ற வகைகளை
கோ-ஆப்டெக்ஸ் வழங்குகிறது!



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ELEGANT


# கிராமப்புறப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு





நமது கிராம மக்கள், குறிப்பாக பெண்களில் பெரும்பாலோர் நிரந்தர வேலையில்லாமலோ வேலையே இல்லாமலோ இருக்கிறார்கள்.

ஊரகப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காகப் பெரிய அளவில் திட்டங்களை அரசு. தீட்டி அதற்காக ஆரம்பத்தில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கியுள்ளது. 1979-80-க்கான வரவு செலவுத் திட்டம் ரூ. 20 இலட்சம்.

அதிக அளவில் வேலைவாய்ப்பு இருக்க வேண்டும். எளிமையாக, தொழில் நுட்பங்கள் இல்லாமல், குறைந்த முதலீட்டில், அந்தந்த கிராமங்களில் உள்ள கச்சாப் பொருட்களைக் கொண்டு நடத்தப்படக் கூடியதாக வேலைகள் அமைய வேண்டும் என்று அரசு வரையறுத்துள்ளது. இந்த சிறப்புத் திட்டங்களுக்காக ஓர் ஆளுகைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆட்சி அதிகாரங்களும், நிதி அதிகாரங்களும் உள்ளன. சமூக நலத் துறைச் செயலாளர் இந்த ஆளுகைக் குழுவின் தலைவர்; சமூக நலத் துறை இயக்குனர் செயலாளர் உறுப்பினர்.

நோட்டுப்புத்தகம் தயாரித்தல், தீப்பெட்டி செய்தல் சாக்கட்டி செய்தல் ஆகியவை இத்திட்டத்திற்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட தொழில்கள், இத்திட்டத்தின் கீழ், அங்கீகரிக்கப்பட்டு அமல்படுத்தப்படுகின்றன:

**1) 500 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 20 பெண்கள் தீப்பெட்டி தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் திருமங்கலத்தில் (மதுரை மாவட்டம்) ரூபாய் 4.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.** மத்திய சேவை கூட்டுறவுச் சங்கம் 28-6-79-லிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கங்கள் அனைத்தும் செயல்பட்டு வருகின்றன. இதற்கான 20 கட்டடங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு, தீப்பெட்டித் தொழிற்சாலையின் தேவைக்கேற்ப திருத்தி அமைக்கப்படுகின்றன. பத்துத் தொழிற்சாலையில் உற்பத்தி துவங்கி உள்ளது. மற்ற தொழிற்சாலைக்கான கருவிகள், கச்சாப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளுக்கான உரிமம் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எல்லாத் தொழிற்சாலைகளிலும் விரைவில் உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(2) சென்னை வியாசர்பாடியில் நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதற்காக ரூ. 1.63 இலட்சம் செலவில் ஒரு திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஒரு கூட்டுறவுச் சங்கமாக அமைக்கப்பட்டு 6-9-79 அன்று பதிவு செய்யப்பட்டது. 10-9-79ல் இருந்து அலுவல் முறைப்படி இயங்கத் தொடங்கிவிட்டது. இந்தத் தொழிற்கூடத்தில் 24-9-1979 முதல், பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(3) மதுரை, தஞ்சாவூர், இராமநாதபுரத்தில் மூன்று சாக்கட்டி, செய்யும் தொழில் கூடங்கள் ரூ. 1,76,100 செலவில் செயல்பட்டு வருகிறது.

(4) ரூபாய் 42 இலட்சம் செலவில் 5,000 பெண்களுக்குத் தீப்பெட்டித் தொழிற் பயிற்சி அளித்து, வேலை வாய்ப்பு அளிக்க ஒரு திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 5 தீப்பெட்டித் தொழில் மையங்கள் அமைக்கப்படும்.

| மாவட்டம் | தீப்பெட்டித் தொழில் மையம் | பகுதி |
|---|---|---|
| தருமபுரி | 1 | 50 |
| மதுரை | 1 | 45 |
| இராமநாதபுரம் | 1 | 50 |
| புதுக்கோட்டை | 1 | 50 |

மீதம் உள்ள ஒரு தொழில் மையம் கீழ்க்கண்டவாறு விரிவாக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| சேலம் | ... | 10 |
| கோயம்புத்தூர் | ... | 10 |
| திருநெல்வேலி | ... | 10 |
| கன்னியாகுமரி | ... | 10 |

மேற்கண்டவற்றில் 48 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இது வரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதம் உள்ள சங்கங்கள் அமைக்கப்புட்டு வருகின்றன. 10 சாக்கட்டி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க ரூ. 1.42 இலட்சம் செலவில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**சி. அப்துல் அஜீஸ்,**
**துணை இயக்குனர்,**
**(சிறப்புத் திட்டங்கள்)**
**சமூகநலத் துறை.**



மழலையின் நல்வாழ்வையெண்ணி
மகிழ்ந்திடும் தாய்.

வளமான வருங்காலத்தை
எதிர்நோக்கும் சேய்

இவாகளின் எண்ணங்கள் நனவாகிட
ஏற்றதொரு சேமிப்புத் திட்டம்

"புதையல் டெபாசிட்"

உங்களின் வருவாய்க்கேற்ப பல்வகை திட்டங்கள் !....

* தினசரி சேமிப்புக்கு "தேன்கூடு"   * மாதாந்திர சேமிப்புக்கு "ரெகரிங்"

* வாராந்திர சேமிப்புக்கு "வீக்லி"   * முதுமையில் பயன் பெற "பென்ஷன்"

வங்கி திரட்டியுள்ள டெபாசிட் ரூ. 22 கோடி

* வங்கி வழங்கிய விவசாயக் கடன் ரூ. 17 கோடி
* நெசவாளர்களின் இன்னல் களைய ரூ. 4 கோடி
* கால்நடைகள் வாங்க மத்திய கால கடன் ரூ. $2\frac{1}{2}$ கோடி
* மலைவாழ் மக்கள் நலம் பேண ரூ. 63 லட்சம்
* நகை ஈட்டின் பேரில் நலிவுற்றோர்க்கு ரூ. 7 கோடி

உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி

கூடுதல் வட்டி அளிக்கின்ற கூட்டுறவு வங்கி

"சேலம் மத்திய கூட்டுறவு வங்கி"

# மகளிர் முன்னேற்றம்

பா. வளர்மதி
உறுப்பினர், தேசிய மகளிர் நலக் குழு

இந்தியத் துணைக்கண்டத்தில் மகளிர் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுக்கும் பொருட்டு, இந்தியப் பிரதமர் அவர்களைத் தலைவராகவும், மத்திய சமூக நலத் துறை அமைச்சர் அவர்களை துணைத் தலைவராகவும் கொண்ட திட்டக் குழு ஒன்றும், மத்திய சமூக நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட வழி காட்டிக் குழு(Steering Committee) ஒன்றும் மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

இதைப்போன்றே மாநில அளவில் மகளிர் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுக்க மாண்புமிகு சமூக நல அமைச்சர் செல்வி பி.டி. சரஸ்வதி அவர்களின் தலைமையில் மாநிலக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தமிழக முதல்வராகப் பதவி ஏற்ற பின்னர் மகளிர் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறார். மகளிர் முன்னேற்றத்திற்குத் திட்டங்கள் வகுக்க முதன்முறையாக சமூக நலத்துறைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளார். முதல்வர் அளித்த ஊக்கத்தினால் இதற்கு முன் இல்லாத வகையில் சமூக நலத்துறை உற்சாகமாகச் செயல்பட்டு வருகிறது.

மாநில திட்டக்குழு இதுவரை மூன்று முறை கூடியிருக்கிறது. தமிழகத்தில் மகளிர் முன்னேற்றத்திற்காகத் திட்டப்பட வேண்டிய பல திட்டங்களைப் பற்றி இந்தக் குழு ஆராய்ந்தது.

தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவர் ஆட்சியில் மதுவிலக்கு, மிகத்தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. மதுரை போன்ற பல இடங்களில் முதலமைச்சர் முன்பு கள்ளுப்பானைகளைப் பலர் உடைத்த நிகழ்ச்சிகள் இந்த ஆட்சியில் இடம்பெற்றிருக்கின்றன. ஒரு நாட்டில் பெண்கள் முன்னேற்றமடைய மதுவிலக்கு மிகவும் அவசியம் என்று மாநிலத் திட்டக்குழு உணர்கிறது.

தமிழக மகளிர் வேலைவாய்ப்பைப்பற்றி இந்தக்குழு பெருமளவில் அக்கறை கொண்டு திட்டங்கள் பலவற்றைத் தீட்டியுள்ளது. வேளாண்மைத்துறையில் வேலை செய்யும் பெண்களுக்கு ஆண்களுக்குச் சமமாக ஊதியம் அளிக்க வேண்டுமென்றும், தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றிற்குச் சான்றிதழ்கள் வழங்குவதுபோல தையல் வேலை, எம்பிராய்டரி வேலை ஆகியவற்றிற்கும் தேர்வுகள் வைத்துச் சான்றிதழ்கள் வழங்க வேண்டும் என்றும், குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளும் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும் இக்குழு தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது. வேலை செய்யும் பெண்களுக்கு விடுதி வசதி அளிக்க சேவை நிறுவனங்கள் முன்வர வேண்டுமென மாண்புமிகு சமூக நல அமைச்சர் வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார். அதன்படி சேவை ஸ்தாபனங்களை விடுதிகள் கட்ட முன்வரும்படி இந்தக்குழு கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. கிராமப்புறப் பெண்கள் செய்யும் பொருட்களை விற்க பொதுவான ஒரு முத்திரை வழங்கவும் தனியாக ஒரு விற்பனை நிலையம் அமைக்கவும் இந்தக் குழு தமிழக அரசைக் கேட்டுக்கொண்டது. இந்தக் குழு சிறார்களை வேலை வாங்குவதைக் கடுமையாகக் கண்டித்ததோடு இதனை ஒழிக்க வீட்டிலுள்ள மகளிருக்குச் சுயவேலை வாய்ப்புத்தருவதே சிறந்த வழி என்றும் கருதுகிறது.

இவை தவிர, இந்தக்குழுவில் தீண்டாமை ஒழிப்பு, வரதட்சணை ஒழிப்பு, இரயில்வே நிலையங்களில் பெண்களுக்கான பயணச்சீட்டுப்பெற தனியாக நுழைவுச்சீட்டு வழங்கும் இடங்கள் அமைத்தல். ஆகிய பொருள்கள் விவாதிக்கப்பட்டன. ஆபாசமான சுவரொட்டிகள், புத்தகங்கள் ஆகியவற்றை ஒழிக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றி அதனை மத்திய அரசுக்கு அனுப்ப இக்குழு முடிவெடுத்துள்ளது. சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றங்களில் பெண்களுக்கு அதிக அளவில் இடங்கள் ஒதுக்க வேண்டுமென இக்குழு தீர்மானித்தது. இந்தத் தீர்மானம் மாநில சமூக நல அமைச்சர் அவர்களால் தலைநகரில் நடைபெற்ற வழிகாட்டிக்குழுக் கூட்டத்தில் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளது.




பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்கான நடைமுறைகள் இந்தக்குழுவில் ஆராயப்பட்டன. தற்போது பிச்சைக்காரர்கள் ஒழிப்புக்காகச் சமூக நலத்துறை தனியாக வண்டிகளை ஒதுக்கி அவர்களைப் பிடித்து அந்தத் துறையினரால் நடத்தப்பட்டு வரும் விடுதிகளில் சேர்ப்பித்து வருகிறது. விபச்சாரத் தடைச் சட்டத்தின் கீழ் ஆண்களும் தண்டிக்கப்பட வேண்டும் என இக்குழு கருதியது. இதற்கான செயற்குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழக மகளிர் முன்னேற்றத்திற்கு இக்குழு தீவிரமாகப் பாடுபட்டு வருகிறது.

# சிறப்புச் சத்துணவுத் திட்டம்



**ஏ**ளிய வாழ்க்கையைக் கொண்டோர்களிடையே உள்ள குழந்தைகள், கர்ப்பிணிகள், தாய்மார்கள், தங்கள் உடல் நலம் காக்கும் அளவுக்குத் தேவையான உணவு உட்கொள்ளுவதில்லை. மேலும் உண்ணும் உணவும் நோய் தடுக்க கூடியதும் உடல் வளர்ச்சிக்குரியதுமான முக்கிய ஊட்டச் சத்தான புரதமும், கலோரிகளும் மிகக் குறைந்த அளவில் இருப்பது நலக்குறைவுக்குக் காரணமாகும். இதுவன்றி இரத்தக்குறைவு, மாலைக்கண், கக்குவான் இருமல், தொண்டையடைப்பான் காச நோய், அம்மை முதலியவை ஏற்படுவதற்குக் காரணம் உயிர்ச்சத்து 'ஏ' குறைவும் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்துக் குறைவும் ஆகும். சத்துக் குறைவினால் அதிக அளவில் சிசு மரணம், தாய்மார் அகால மரணம் முதலியவை ஏற்படுகின்றன.

மக்களுக்கு ஊட்டச்சத்தினையளித்து ஊட்டக்குறைவினைப் போக்குவதற்கு, வளர்ச்சிப்பணிகளில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

**தடுப்பு:** ஏழை மக்களிடையே முக்கியமாக கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள் மேலும் 6 மாதம் முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளின் ஆதாரக் குறைவை நிறைவு படுத்தவும் முக்கியமாகப் புரத கலோரிகள் தேவையைப் பூர்த்தி செய்யவும் சிறப்புச் சத்துணவுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

**செயலாக்கம்:** இத்திட்டத்தைத் தமிழக அரசு சமூக நலத்துறை மூலம் மான்யம் அளித்து, உள்ளாட்சி மன்றங்களின் வாயிலாக 'கேர்' நிறுவனம் இலவசமாக வழங்கும் உணவுப் பொருள்களான பாலாஹார், சால்டு எண்ணெய் முதலியவை கொண்டு சத்துணவு தயார் செய்து உண்ணும் உணவில் உள்ள சத்துக் குறைவை நிறைவு படுத்தும் வகையில் பயனடைவோர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஒரு பயனடைவோருக்குத் தினமும் 6 காசு வீதம் ஓர் ஆண்டிற்கு 300 நாட்களுக்கு அரசு மான்யம் வழங்கப்படுகிறது.

மளிகைச் சாமான்கள், காய்கறிகள், அக போக்குவரத்துச் செலவுகள், அமைப்பாளர், உதவியாளர், சமையல்காரர்கள் முதலியோருக்குச் சிறப்பூதியம் இந்தத் தொகையிலிருந்து செலவிடப்படுகிறது. அடுத்து பயனடைவோருக்குத் தலா ரூ. 5 வீதம் மீளாத் தொகையாகச் செலவுசெய்ய அதாவது சமையல் கூடம் அமைத்தல், எளிய போக்குவரத்து வாகனம் வாங்குதல் முதலியவை மீளாச் செலவினங்களுக்குத் திட்டத்தைச் செயல்படுத்தும் போது வழங்கப்படுகின்றன.

1977-78ஆம் ஆண்டில் 60 உள்ளாட்சி மன்றங்களின் வாயிலாக 2,76,530 பயனாளிகள் பயனடைந்தனர். அந்த நிதியாண்டில் தமிழக அரசால் இத்திட்டத்திற்காக 41 இலட்சம் நிதி செலவிடப்பட்டது. 1978-79ஆம் ஆண்டில் 60 உள்ளாட்சி மன்றங்களின் வாயிலாக 2,76,530 பயனாளிகள் பயனடைந்தனர். அந்த நிதியாண்டில் தமிழக அரசால் ரூ. 46 இலட்சம் நிதி செலவழிக்கப்பட்டது. நகராட்சிகளிலுள்ள மருத்துவர்களால் சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடைவோருக்கு முதன்மையான நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்பட்டும் இதர மருத்துவ வசதியும் செய்யப்பட்டு வருகிறது. இப்படி மருத்துவ வசதிகள் இணைந்த திருத்திய சத்துணவுத் திட்டம் சென்னை மாநகரம், மதுரை மாநகரம், கோயம்புத்தூர், புதுக்கோட்டை சிங்காநல்லூர் நகராட்சிகளில் சம்பந்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சிகள் வாயிலாகச் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைவோருக்கு வாரம் ஒரு முறை தலா 700 கிராம் சமைக்காத பாலாஹார் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காகத் தனியாக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு பயனடைவோருக்கும் தடுப்பு ஊசிகளும் போடப்படுகின்றன. இத்திட்டத்தை மேலும் 2,75,000 நபர்கள் பயனடையும் வண்ணம் ஆண்டு வாரியாக விரிவுபடுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

**இரா. பட்டம்மாள்**
**சிறப்புச் சத்துணவுத் திட்ட தனி அலுவலர், சமூகநல இயக்ககம்**

# குழந்தைகள் ஆண்டு



1979ஆம் ஆண்டை "அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு" என ஐக்கிய நாடுகள் பேரவை பிரகடனப்படுத்தியுள்ளது. அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு எனச் சிறப்பாக அழைப்பதின் முக்கிய நோக்கம், ஒவ்வொரு நாடும் சிறப்பாகக் குழந்தையின் அனைத்து வளர்ச்சிப் பருவத்திலும் அவர்களின் தேவைகளைக் கொள்கை அளவில் "நலப் பணி" எனக் கருதாமல், நாளைய சமுதாய வளர்ச்சிக்கு வளமான வழி செய்து, இளமையிலேயே சிறப்பான வித்திட்டு முனைப்புடன் செயல்படுவது நாளைய உலக முன்னேற்றத்திற்கு அடிகோலுவது ஆகும்.

**கா. தங்கவேலு**
**இணை இயக்குநர்**
**(சமூக நலம்)**
**சமூக நலத்துறை.**

## இவ்வாண்டு நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள்:

* தமிழகத்திலுள்ள அனைத்து உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் 1979ஆம் ஆண்டிற்குள் கூடுமானவரை செயற்கை அங்க அவயவ உறுப்புகள் வழங்கல்.

* ஐந்தாண்டுக் காலத்திற்குள் ஒன்பதாயிரம் பாலர்பள்ளிகள் திறந்து தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் குறைந்த பட்சம் ஒரு பாலர் பள்ளி ஏற்படுத்துதல்.

* ஆயிரம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு நான்கு பராமரிப்பு இல்லங்கள் அமைத்தல்.

* ரூபாய் ஆறு இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் ( Children's Museum ) அமைத்தல்.

* ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குப் படிப்பு உதவித்தொகை அளித்தல் ஆகியன.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டைத் தமிழகத்தில் சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு திட்டங்களை அரசுக்குப் பரிந்துரை செய்ய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக் குழு நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. இது தவிர மூன்று செயற்குழுக்கள் (1) குழந்தை நலம் மற்றும் சத்துணவு (2) கல்வி (3) சமூக நலம் ஆகிய பிரிவின் கீழ் திட்டங்களைப் பரிந்துரை செய்ய அரசு நியமித்துள்ளது.

## குழந்தைகள் ஆண்டினை ஒட்டி இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் :

(அ) 1.1.79 அன்று அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டைக் குறிக்கும் வகையில் பாலர் பள்ளி மற்றும் பள்ளிக் குழந்தைகளின் அணிவகுப்புகள் நடத்தப்பட்டன.

(ஆ) 1.1.79 அன்று தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் மகப்பேறு இல்லங்களில் பிறந்த குழந்தைகள் அனைவருக்கும் அனைத்து நாட்டு மற்றும் இந்திய சின்னங்கள் பொறிக்கப்பட்ட போர்வைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

(இ) தமிழகத்தில் அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டின் துவக்கவிழா 11.1.79 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்து உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயற்கை அவயவங்கள் வழங்கினார்.

(ஈ) சென்னையில் நடைபெற்ற அகில இந்திய வர்த்தகப் பொருட்காட்சியில் 9.3.79அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

(உ) தமிழ்ப்புத்தாண்டு தினத்தையொட்டி 1979 ஏப்ரல் திங்களில் சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்தப்பட்டு, அதன் வருவாய் முதலமைச்சரின் குழந்தைகள் நிதியில் சேர்க்கப்பட்டது. வரும் டிசம்பர் திங்களில் முற்றிலும் குழந்தைகளுக்கான ஒரு சிறப்புப் பரிசுச்சீட்டுக் குலுக்கல் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஊ) தமிழகத்தில் குழந்தைகள் நலத்திட்டங்களைச் சிறப்புறச் செயல்படுத்த "முதலமைச்சரின் குழந்தைகள் நல நிதி" என்ற சிறப்பு நிதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி திரட்ட பல்வேறு வகை திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

(எ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் மற்றும் மாவட்ட அளவிலும், குழந்தைகள் கண்காட்சியும், கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆறு ஆயிரம் ரூபாயும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஆயிரம் ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும், இதுபோன்ற பல சிறப்புத் திட்டங்கள் மாநில அரசின் பல துறையினரால் தீட்டப்பட்டு 1.1.79 முதல் துவங்கி தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் உள்ள குழந்தைகளின் நலனுக்காகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பண்டித நேரு அவர்கள் பிறந்த தினமான 14.11.79 தேதியன்று குழந்தைகள் தினம் சென்னையிலும், மற்றும் மாவட்டங்களிலும் வட்டாரங்களிலும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

**சேவையில் சிறந்த வங்கி**
**சென்னை**
**மத்திய கூட்டுறவு**
**வங்கி**

சுய தொழில் புரி
வோர்க்குக் கடன்
ரூ.4.37 இலட்சம்

உடல் ஊனமுற்றோர்
தொழில் புரிய 4%
வட்டியில் கடன்

ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்கி ஓட்டுநர்களுக்குக் கொடுக்க ரூ. 19.56 இலட்சம் கடன்கள் வழங்கியது.

வலை வாங்க, மற்றும் பழுது பார்க்க, கட்டு மரம் பழுது பார்க்க, இயந்திரப் படகுகள் வாங்க ரூ. 22.06 இலட்சம் மீனவர்களுக்கு கடன்கள் வழங்கியது.

நகர வங்கிகள் மூலம் சிறு தொழில் வளர்ச்சிக்கு ரூ. 6.96 இலட்சம் கடன்கள் வழங்கியுள்ளது.

விலைவாசியைக் கட்டுப்படுத்த டி.யு.சி.எஸ். முதலிய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 113.16 இலட்சம் கடன் வசதி அளித்தது.

நலிவுற்றோர்க்கு வங்கி வழங்கிய நகைக்கடன்கள்

| | | |
|---|---|---|
| 1977—78ல் | ... .... | ரூ. 272 இலட்சம் |
| 1978—79ல் | ... .... | ரூ. 517 இலட்சம் |
| 1979—80ல் (6 மாதங்களில்) | ... .... | ரூ. 668 இலட்சம் |

சுமார் 5 இலட்சம் பணியாளர் குடும்பங்களின் வாழ்க்கை வசதியைப் பெருக்க, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.1800.56 இலட்சங்கள் கடன் வழங்கியது.

**இந்தப் படிகள்...**
**எங்களின்**
**சேவைப்படிகள்**
**மட்டுமல்ல**
**உங்கள் வாழ்வின்**
**உயர்வுப்படிகளும் கூட...**

| உறுப்பினர்களுக்கு சிறப்புச் சேவை | |
|---|---|
| பங்குத் தொகைக்கு 12% டிவிடெண்ட் | இலாப விகிதம் வைக்காது சலுகை வட்டியில் கடன்கள் |

வைப்புகள் :

வங்கி எல்லாவித வைப்புகளையும் பெற்று ½ சதவிகிதம் அதிக வட்டி அளிக்கின்றது.

| | | |
|---|---|---|
| சேமிப்புக் கணக்கு | .. ... | 5½% |
| நிரந்தர வைப்பு | ... ... | 4½% முதல் 10½% வரை |
| குழந்தைகள் வைப்பு | ... .... | 9% |
| ரொக்கச் சான்றிதழ் | ... .... | 7½% முதல் 10½% வரை |
| செல்வக் களஞ்சியம் | .... .... | 10½% |
| இரட்டை ஒய்வூதிய வைப்பு | .... | 10½% |
| கற்பகம் நிரந்தர (ஒய்வூதிய வைப்பு) | | 10½% |
| தொடர் வைப்பு | .. .. | 10½% |

*அனைத்து வாடிக்கையாளர் சேவைகளையும் அளிக்கின்றது. டிராப்ட்டுகள், பே-ஆர்டர்களை கழிவு, கட்டணமின்றி வழங்குகின்றது.*

| | |
|---|---|
| வங்கியின் பங்கு மூலதனம் | ரூ. 2 கோடிக்கு மேல் |
| நடைமுறை மூலதனம் | ரூ. 26 கோடிக்கு மேல் |
| வைப்புகள் .... | ரூ. 18 கோடி |
| இலாபம் (1977-78) | ரூ. 74.18 இலட்சங்கள் |

**சேமிப்புகளை முதலீடு செய்வீர் !**
**சிறப்பான சேவையையும்**
**அதிக வருமானத்தையும் அடைவீர் !...**

# சென்னை மத்திய கூட்டுறவு வங்கி

தொலைபேசி எண்கள்: 21784, 27888, 29687



# ஸ்திரீ சேவா மந்திர்

"ஸ்திரீ சேவா மந்திர்'', பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், குழந்தைகளின் நலனுக்காகவும் கடந்த முப்பது ஆண்டுகளாகப் பயனுள்ளவகையில் பணிபுரிந்து வந்துள்ளது. துன்பத்தில் உழலும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பாடுபடுவதே இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொருவருக்கும் தங்க இடம், உணவு, கல்வி, வேலைப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் அவரவர் திறமைக்கு ஏற்றவாறு அளிக்கப்படுகின்றன.

இந் நிறுவனத்தின் முக்கியமான ஐந்து இலட்சியங்கள், இதன் பல்வேறு கிளைகளால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வசதியுள்ளவருக்கும் ஏற்றவகையில் இந்நிறுவனம் அமைந்து, அவர்களிடமிருந்து பெறுகின்ற நிதியைக் கொண்டு ஆதரவற்றவருக்குச் சேவை செய்கின்றது. இது மட்டுமின்றி, மத்திய மாநில அரசுகளின் நிதி உதவி, அயல் நாட்டு நிதியுதவி, பொதுமக்களின் நிதியுதவியையும் பெற்று, ஆதரவற்றவருக்கு உதவுகின்றது.

ஸ்திரீ சேவா மந்திரின் விடுதிகள் பசுல்லா வீதி, சாலிக்கிராமம், விருகம்பாக்கம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இதில் 40 வயதுக்குட்பட்ட 350 பெண்களும், குழந்தைகளும் தங்கியுள்ளனர். விருகம்பாக்கம் விடுதியிலுள்ள 100குழந்தைகட்கு மத்திய அரசு உதவி புரிந்து வருகின்றது.

சாலிக்கிராமத்தில் வேலை செய்யும் பெண்களுக்கென அமைந்துள்ள விடுதியில் 35 குறைந்த வருவாய் பெறும் பெண்டிரும் மற்றும் ''அப்ரண்டீஸ்'' பயிற்சி பெறுபவர்களும் தங்கியுள்ளனர்.

பசுல்லா வீதியிலும், சாலிக்கிராமத்திலும் அமைந்துள்ள விடுதிகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் குழந்தைகளுடனும், மற்றும் பள்ளி செல்லும், ஆதரவற்ற குழந்தைகளும் தங்கியுள்ளனர்.

**தொழிற் பயிற்சி:**

ஸ்திரீ சேவா மந்திரின் மேற்பார்வையில் ஆரம்பப்பள்ளி ஒன்றும், நடுநிலைப் பள்ளி ஒன்றும், உயர்நிலைப்பள்ளியொன்றும் அமைந்துள்ளன. இவற்றில் முறையே 150, 1000, 1800 என்ற கணக்கில் மாணவர்கள் உள்ளனர். இம் மாணவர்கள் மூன்றிலிருந்து பதினாறு வயதுக்குட்பட்டவர்கள். இவ் விடுதியில் தங்கியுள்ள குழந்தைகள் இப் பள்ளிகளிலும் மற்றும் தனியார்ப் பள்ளிகளிலும் கல்வி பயிலுகின்றனர்.

**பள்ளிகள்:**

ஆரம்பக் கால முதலே ஸ்திரீ சேவா மந்திர், தொழிற் பயிற்சியில் மிகுந்த அக்கறை கொண்டு இயங்கி வருகிறது. செய்யும் தொழிலின் உயர்வை அறிவதற்காகவும், அவரவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்காகவும், தன்னம்பிக்கை உண்டாக்கவும், இந்நிறுவனம் இடைவிடாது பாடுபட்டு வருகின்றது.

ஸ்திரீ சேவா மந்திரின் மேற்பார்வையின் கீழ் அமைந்துள்ள அரசினர் மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஏறக்குறைய 260 பயிற்சியாளர்கள் தையல், பூ வேலை, நெசவு, தட்டெழுத்து, சுருக்கெழுத்து, புத்தகம் கட்டுதல், வானொலி, தொலைக்காட்சி கருவிகள் பழுது பார்த்தல், கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் பயிற்சி பெறுகின்றனர். 32 பயிற்சியாளர்களுக்கு 'டிராப்ட்ஸ்மேன்' பயிற்சி கொடுக்க எண்ணியுள்ளனர்.

ஸ்திரீ சேவா மந்திரின் நேரடி மேற்பார்வையில் நடைபெறும் 'லோட்டே லெம்கே' கலைத் தொழில் நிறுவனத்தில் இவ்வகைப் பயிற்சிகள் 450-க்கும் மேற்பட்ட பெண்களுக்கு அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெறுவோரின் வசதிக்கு ஏற்பப் பகுதி நேர, முழுநேரப் பயிற்சி அளிக்கப்படுகின்றன. இவ்வகைப் பயிற்சிகள் பட்டம்பெற அல்லது சுயவேலை பெறக் கற்போருக்கு அளிக்கப்படுகின்றன. இங்குப் பயிற்சி பெறும் மாணவியரில் 50 பேருக்கு மத்திய சமூக நலப் பாதுகாப்பு வாரியத்தின் உதவியும், மற்றும் 50 மாணவியருக்கு மாநில சமூக நலப் பாதுகாப்புத் துறையின் உதவியும் கிடைக்கின்றன. இவர்களுள் 16 பேர் உடல் ஊனமுடையோர், மற்றும் 16 பேர் காதுகேளாத ஊமைகள். உடல் ஊனமுடையோர், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சியும், காதுகேளா ஊமைகள் தையற் கலைப் பயிற்சியும் பெறுகின்றனர்.

மத்திய அரசின் உதவியோடு துன்பத்தில் உழன்ற நாற்பது பெண்களுக்கு1979-ஆம் ஆண்டில் புத்தகம் கட்டுதல், அச்சுகோத்தல், உடை தைத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் வேலைக்காகப் பயிற்சி அளித்தலும், பயிற்சி பெற்றபின் வேலை அளித்தலுமே ஆகும். இதுவரையில் 6,500 பெண்கள் பயிற்சியும், சுய-வேலைவாய்ப்பும் பெற்றுள்ளனர்.



# வழிகாட்டும் நிலையங்கள்

சமூதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள விதவை மற்றும் அனாதை, ஆதரவற்ற பெண்களின் நலனிற்கும் அவர்களது சீரான மறுவாழ்விற்கும் உதவி புரிவது மிகவும் உணர்ச்சிகரமான மற்றும், தீவிர கவனத்துடன் கையாள வேண்டிய அரசின் மிக முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும்.

சமூக நிலையிலும் பொருளாதார நிலையிலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் பொறுப்பாகவும் தனிப்பட்ட கவனத்துடனும் செயல்படுத்துதல் மிக அவசியம். அவர்களை அன்புடனும், ஆதரவுடனும் அணுகி மிக விரைவாக மறுவாழ்வு அளித்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும், தக்க தருணத்தில் உணர்ந்து தமிழக அரசு 1978-ஆம் ஆண்டு இதற்கென தனியே சமூக நலத்துறையின் கீழ் நான்கு மாவட்டங்களில் வழிகாட்டி நிலையங்கள் அமைத்துள்ளது. இந்நிலையங்கள் சென்னை, தஞ்சை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன.

நிலையங்களை நாடிவரும் பெண்களை அன்புடனும், ஆதரவுடனும் அணுகி அவர்களின் தரத்தை அறிந்திடவும், காலத்தில் தக்க உதவிகளைச் செய்திடவும் அவர்களைத் தீர விசாரித்தல் மிகஅவசியம்என இந்நிலையங்கள் கருதுகின்றன. ஆகையால், அவர்களுடைய சமுதாய நிலை, குழந்தைகளின் விவரங்கள், வருவாய் விவரங்கள், கல்வி மற்ற தகுதிகள் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இந்நிலையங்களின் நோக்கங்கள் முதலில், ஏழை விதவைத் தாய்மார்களின்குழந்தைகளுக்குத் தக்க பாதுகாப்பு, உணவு, கல்வி ஆகியவற்றைச் சமூக நிலையங்கள் மற்றும் அரசு நடத்தும் நிலையங்கள் மூலம் அளிக்க உதவி செய்தல், விதவைப் பெண்மணிக்குக் கல்வியும், வாழ்க்கைக்குத் தேவையான தொழிற்பயிற்சியும் நல நிறுவனங்களின் மூலம் அளித்தல், அவர்களின் இறந்து போன


**என். சி. கோதமணி**
**சிறப்பு அலுவலர்**
**(வழிகாட்டி நிலையம்)**
**சமூக நலத்துறை.**


கணவன்மார்களுக்குச் சேர வேண்டிய வைப்பு நிதி, ஆயுள் கால வைப்பு நிதி, ஆகியவற்றைப் பெற்றுத்தர ஏற்பாடு செய்தல், வேலை கோரிவரும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வசதி குறைவாக இருப்பதால், தங்கள் முயற்சியிலேயே கவுரவமான வாழ்க்கை நடத்துவதற்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஏதேனும் தொழில் புரிந்திட தேவையான பண உதவியை அரசுடைமையாக்கப்பட்ட அல்லது தனியார் வங்கிகள் மூலம் கடனாகப் பெற்றுத் தருதல் ஆகியவை.

மேற்கூறிய பணிகளை நிறைவேற்றிட சென்னை சமூக நலத் துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டி நிலையத்தில் சமூக இயலில் தேர்ச்சிப் பெற்ற சிறப்பு அலுவலர் பிரத்தியேகப் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார். இவர்சென்னை வழிகாட்டி நிலையத்தில் தனது சொந்தப் பொறுப்புகளுடன், மற்றுமுள்ள மூன்று மாவட்ட வழிகாட்டி நிலையங்களின் பணிகள் செவ்வனே நடைபெற அந்தந்த வழிகாட்டி நிலைய அலுவலர்களுக்கு அவ்வப்போது நேரில் சென்று தக்க அறிவுரையும், ஆலோசனையும் அளித்து வருகிறார்.

இந்நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து சுமார் 2,500 குடும்பங்களில் உள்ள விதவை, அனாதை மற்றும் ஆதரவற்ற பெண்கள் பயனடைந்துள்ளார்கள். இந்நிலையங்களின் மூலம் உதவி நாடி வரும் பெண்களில் பெரும்பாலோர் கல்வி அறிவு அற்றவர்களே. ஆயினும் பிழைப்பதற்கு வழி வேண்டி ஏதேனும் வேலை ஒன்றையே நாடி வருகின்றனர். தக்க வேலை வாய்ப்பு வசதி இல்லாததால் இவர்களுக்குச் சுயவேலை அமைத்துக்கொள்ள வழியும், ஆலோசனையும் வழங்குவதோடு அல்லாமல் வங்கிகளுடன் நேரிடை தொடர்பு கொண்டு, அவர்கள் மூலமாகக் கடன் பெற்றுத் தரப்படுகிறது. இதுபோல், சுயதொழில் தொடங்குவதற்கு இவ்வழிகாட்டி நிலையம் தீட்டிய திட்டம் தற்போது மிகவும் முன்னேற்ற நிலையை அடைந்து, நலிவுற்ற பெண்களால் நல்ல முறையில் வரவேற்கப்பட்டும் வருகிறது. குறைந்த அளவில் கடனுதவி அளித்தாலும் அதன் மூலம் தங்களின் வாழ்க்கைத் தரத்தினைச் சீரமைத்துக் கொள்ள அவர்களுக்கு உதவுகிறது.

சிற்றுண்டி, காய்கறி, பழம், பூ, கட் பீஸ் துணி, அலுமினியம் மற்றும் எவர்சில்வர் சாமான்கள், பங்க் கடை போன்ற தொழில்களுக்கு வழிகாட்டி நிலையங்கள் பரிந்துரை செய்யப் பட்டு, நேர்முகத் தொடர்பு செய்து அனுப்பும் நலிவுற்ற பெண்களுக்கு மிகவும் திருப்திகரமான முறையில் வங்கிகள் உதவி புரிகிறது என்பதை எடுத்துச் சொல்ல வழிகாட்டி நிலையம் கடமைப்பட்டுள்ளது.

ஆனால், வங்கிகள் மிகக் குறைந்த வட்டியுடன், அதாவது ரூபாய் 100-க்கு ஆண்டிற்கு ரூபாய் 4. Differential rate of interest Schemeஎன்ற திட்டத்தின் மூலம் உதவி புரிகிறது. இதன் மூலம் மட்டுமே வழிகாட்டி நிலையங்கள் ஆரம்பித்ததிலிருந்து ஏறத்தாழ 2,000 நலிவுற்ற பெண்கள் பயனடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி





மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித்தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, [illegible]ன்னை-600 014

தொலைபேசி: 82[illegible] [illegible]ந்தி: TANSI [illegible]லக்ஸ்: 41-7496 TNSI




# குழந்தைகள் காப்பகங்களின் வெற்றி!


நா. வசந்தகுமாரி சிறப்பு அலுவலர் (குழந்தைகள் நலம்) சமூக நலத்துறை.


சமூக நலத்துறையின் குழந்தைகள் நலத் திட்டங்கள் ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கென உருவாக்கி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆறு வயதிற்குட்பட்ட இந்த முன் பள்ளிப் பருவமானது, குழந்தைகளின் வளர்ச்சிப் பருவங்களில் மிகவும் முக்கியமானது எனவும், உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு அடிகோலும் பருவம் எனவும் குழந்தைகள் நல வல்லுநர்கள் கோடிட்டுக் காட்டுகிறார்கள். இந்தப் பருவத்தில் அவர்களுடைய உடல் மற்றும் மன வளர்ச்சிக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அது பின்னர் நிவர்த்தி செய்ய இயலாத சேதத்தை விளைவிக்கும் என்றும் கூறுகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டே தமிழக அரசு தமிழமெங்கும் குழந்தைகள் காப்பகங்கள் திட்டத்தை மேற்கொண்டு உள்ளது.

இக் குழந்தைகள் காப்பகங்கள் என்பவை என்ன?

நகர்ப்புறங்களில் நர்சரி பள்ளிகள் அமைக்கப்பட்டு நடைபெற்று வருவதைக் காண்கிறோம். பெற்றோர்கள் தங்களின் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை இப்பள்ளிக்கு அனுப்பி வைக்கிறார்கள். ஐந்து வயது வந்த பின்னர் அவர்கள் பள்ளிகளுக்குச் செல்ல ஏதுவாகிறது. ஆனால் கிராமப்புறங்களில் சென்று இவ்வாறு நர்சரி வகுப்புகள் நடத்துபவர்களும் இல்லை. கல்வியின் அவசியமும் இன்னும் கிராமப் புறங்களில் உணரப்பட வேண்டியுள்ளது. இந்நிலையைச் சீர்படுத்த குழந்தைகள் காப்பகங்கள் கிராமப்புறங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.



ஆதாரப் பள்ளிக்கே ஆதாரமான முன்னாதாரப் பள்ளி, நாடெங்கும் தகுந்த கவனிப்பைப் பெறவில்லை. ஆதாரக் கல்வியை அனைவருக்கும் வழங்குவதில் கவனம் எடுத்துக் கொண்டவர்கள், முன்னாதாரக் கல்வியின் அவசியத்தையும், அக் கல்விதான் வீட்டிற்கும், ஆதாரப்பள்ளிக்கும் ஒரு பாலமாக உள்ளது என்பதையும் உணரவில்லை. இந்த வகையில் தமிழகம் அதிர்ஷ்டமானது எனவே சொல்லலாம்.

ஆதாரக் கல்வி கற்க குழந்தைகளைத் தயார் செய்யும் முன்னாதாரப் பள்ளிகளை அமைப்பது மிகவும் அவசியம் என அரசு உணர்ந்துள்ளது. முன்னாதரவுக் கல்வி பெற்ற குழந்தைகள், கல்வி கற்பதில் ஆர்வமும், அக்கறையும், கவனமும் காட்டுகிறார்கள்; அவர்கள் கல்வித்திறம் சிறப்பாக உள்ளது. பள்ளிப் படிப்பினை பாதியில் விட்டுச் செல்வது மிகுந்த அளவு குறைகிறது. நாட்டிற்கும் நல்ல குடிமகன் கிடைக்கிறான்.

நம் மாநிலத்தில் உள்ள இலவசக் கல்வி வெற்றியடைய பெருமளவு உதவி செய்வதுடன், இது பெண் குழந்தைகளின் படிப்பிற்கும் ஊக்கமளிக்கிறது. குழந்தைகள் காப்பகங்களில் குழந்தைகளுக்குப் பாதுகாப்பும் கல்வியும் அளிப்பதனால் இச்சிறு குழந்தைகளைக் கவனிப்பதற்கென்றே வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பெண் குழந்தைகள் கல்வி கற்க ஏதுவாகிறது.

குழந்தைகள் காப்பகங்களில் $2\frac{1}{2}$ வயது முதல் 5 வயதுவரை உள்ள குழந்தைகள் சுமார் 40 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். வேலை செய்யும் பெண்களுக்கு உதவும் வகையில் இக் காப்பகங்கள் காலை முதல் மாலை வரை நடைபெறுகின்றன. இங்கு குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாதனங்கள் மூலம் கல்வி போதிக்கப்படுகிறது. விளையாட்டுக்களுடன், பாட்டு, நடனம் முதலியவையும், நல்ல பழக்க வழக்கங்கள், சுகாதாரம்



முதலியவைகளும் கற்றுத் தரப்படுகின்றன. இவை மட்டுமின்றி, காப்பகங்களுக்கு வரும் குழந்தைகளுக்குப் பகல் வேளையில் 'கேர்' நிறுவன உதவியுடன் சத்துணவு வழங்கப்படுகிறது. இக் காப்பகங்கள் மூலம் சுமார் 3 இலட்சம் குழந்தைகளும், தாய்மார்களும், சத்துணவு பெறுகிறார்கள்.

காப்பகத்திற்கு வரும் குழந்தைகளின் உடல் நலம் பேண, ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவர்களும் இங்கு வந்து, நோய்த் தடுப்பு ஊசி அளிக்கிறார்கள். இக் குழந்தைகளின் மூலம், அவர்களின் பெற்றோர்களையும் அணுகி அவர்களுக்கும், சுகாதாரம் மற்றும்சத்துணவு கல்வி வழங்க ஏதுவாகிறது. ஐந்து ஆண்டுகள் பூர்த்தி செய்த குழந்தைகளை, குழந்தைகள் காப்பகம் நடத்தும் குழந்தைகள் நலப் பணியாளர், அவ்வூரில் உள்ள பள்ளிகளில் சேர்க்கிறார்கள். இவ்வாறு குழந்தைகள் காப்பகங்களிலிருந்து பள்ளி வரும் குழந்தைகள், மற்ற குழந்தைகளைவிடத் திறமையாக இருப்பதாகவும், அவர்கள் பள்ளிப் படிப்பை இடையில் விடாமல் இருப்பதாகவும் ஆங்காங்கே ஆரம்பப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இதையே இக் குழந்தைகள் காப்பகங்களுக்குக் கிடைத்த வெற்றியாகக் கொள்ளலாம்.

# தமிழ்நாடு
# நுகர்வோர் கூட்டுறவு இணையம்

**பதிவு எண்: எக்ஸ். எண். சி. 663**

(தமிழ்நாட்டில் இயங்கும் நுகர்வோர் கூட்டுறவுகளுக்கான மாநில நிறுவனம்)

தலைமை அலுவலகம்: சென்னை-17
தொலை பேசி எண்: 444725
444763

கிளை: மதுரை
25015

தந்தி: "STATEFED"

தமிழ்நாட்டில் இயங்கி வரும் நுகர்வோர் கூட்டுறவுகளின் மூலம் ஏழைகளுக்காகக் கட்டுப்பாடு விலையில் துணிகள், மற்றும் மில்களில் நேரடியாகக் கொள்முதல் செய்த துணி வகைகள், அரசு வெளியீடு பாடப் புத்தகங்கள், மலிவு விலையில் மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள் கட்டுப்பாடு காகிதங்கள், குழந்தை உணவுகள், மின்கலம் செல்கள், மளிகைச் சாமான்கள், சலவைச் சோடா மற்றும் அத்தியாவசிய பண்டங்களை மக்களுக்கு இவ்விணையம் விநியோகம் செய்து வருகிறது.

சென்னை, செங்கை மற்றும் வட ஆர்காடு மாவட்டங்களில் உள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து நுகர் பொருட்களையும் உற்பத்தியாளர்களிடமிருந்து அதிக அளவில் நேரடியாகக் கொள்முதல் செய்து, அம்மாவட்டத்தில் இயங்கும் கூட்டுறவுகளின் மூலம் தரமான சாமான்களாகவும், நியாயமான விலையிலும் விநியோகம் செய்ய இவ்விணையம் மண்டல விநியோக மையம் ஒன்று நிறுவி வருகிறது.

உங்களின் அன்றாட தேவைகளுக்கு நாடிடுவீர் கூட்டுறவு பண்டக சாலைகளை! தரம், விலை, எடை ஆகியவற்றில் தவறேதும் அங்கில்லை!! நீங்களே அப்பண்டக சாலைகளின் சொந்தக்காரர்!!!


"**போ**றியின்மை யார்க்கும் பழியன்று
அறிவறிந்து ஆள்வினையின்மை பழி"

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. உறுப்புக் குறைவு ஓர் பழியல்ல; உண்மையான முயற்சியின்மைதான் பெரும் பழி என்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

"மனிதனின் எண்ணத்தில் ஊனம்; சிந்தனையில் குறைவு; செயலில் குற்றம்". ஆகியவை மனிதனின் வாழ்வுக்கும், சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் தடைக்கற்கள். ஆனால் உடல் ஊனம், மனிதனின் செயல்திறனின் வேகத்தை ஓரளவு கட்டுப்படுத்தலாமே தவிர, செயல்திறனை முழுக்க அழிக்க முடியாது. அவரது செயல் திறத்தால் அவருக்கும் வாழ்வுண்டு; சமுதாயத்திற்கும் வளமுண்டு. இதைத் தமிழக அரசு நன்கு உணர்ந்திருப்பதால் உடல் ஊனம் ஒரு பெரும் குறையல்ல என்பதை அறிந்து, அவர்களின் மறுவாழ்வுக்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**பெரும்புகழ் பெற்ற பெரியோர்:**

'அந்தகக் கவி' கண்பார்வையற்றவரே! ஆனால் அந்தக் கவியின் செந்தமிழ்ப் பாடல்கள் தமிழ்ப் பெருமக்களின் சிந்தனையை என்றும் மயக்கும் தன்மை வாய்ந்தனவாகும். இரட்டைப் புலவர்களின் ஒருவர் கண்பார்வையற்றவர்; மற்றவர் இருகால்களும் ஊனமுற்றவர். ஒருவர் பாடலை எடுத்தால், இன்னொருவர் முடிப்பார். அந்த இரட்டையரின் இனிய தமிழ்ப் பாடல்கள் தமிழ் இலக்கியத்திற்கு என்றும் அழியாச் செல்வங்களாகும்.

கால் ஊனமடைந்த ரூஸ்வெல்ட் அமெரிக்காவின் பெரும் புகழ் பெற்ற ஜனாதிபதிகளில் ஒருவர். கண்பார்வையும், காது கேட்கும் தன்மையும் இழந்த 'ஹெலன் கெல்லர்' அவர்கள் சிறந்த அறிவுலக மேதையாக வாழ்ந்திருக்கிறார்கள்.

மனிதனின் உயர்வுக்கு ஊனம் தடைக்கல் அல்ல என்பதற்கு எடுத்துக் காட்டுக்களே மேற்கூறியவை. தகுந்த வாய்ப்பும், சூழ்நிலையும் வழங்கப்படுமானால், ஊனமுற்றவர்கள் மற்றவர்களைவிடச் சிறந்து விளங்க முடியும். இதைத் தமிழக அரசு நன்கு உணர்ந்திருப்பதால் ஊனமுற்றோரின் உள்ளாற்றலை முழுமையாகப் பயன்படுத்தி, அதனால் அவர்களுக்கும் வாழ்வு அளித்து, சமுதாயத்திற்கும் வளம் சேர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

**ஊனமுற்றோர் மாநில வாரியம்:**

ஊனமுற்றோரின் நலன் கருதி தமிழக அரசு, ஊனமுற்றோரின் மறுவாழ்வுக்காகவென்றே "ஊனமுற்றோர் மாநில வாரியம்" என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் ஊனமுற்றோருக்கு பல வகையிலும் உதவி செய்ய முயன்று வருகிறது. இவ்வாரியம் 1979 ஜனவரி முதல் சமூக நலத் துறை இயக்ககத்தின் கீழ் இயங்கி வருகிறது.

(1) ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக இயங்கும் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக, இவ்வாரியம் நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் நிதி உதவியை மானியமாகப் பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 5.

(2) ஊனமுற்றோர் சுயமாகத் தொழில் செய்வதற்கென்று, இவ்வாரியத்தின் மூலம் மானியம் ( Grant ) வழங்கப்படுகிறது. இவ்வாரியத்தின் மூலம் சுய தொழில் செய்ய மானியம் பெற்றவர்களின் எண்ணிக்கை: 54. இந்த மானியம் பெற்றவர்கள் சுய தொழில் செய்து, வளமாக வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

(3) கால் ஊனமடைந்த ஏழைகள் சரியாக நடப்பதற்குச் செயற்கைக் கால் உறுப்புகள் வாரியத்தின் நிதி உதவியுடன் வழங்கப்படுகின்றன. வாரியத்தின் மூலம் இவ் உதவி பெற்றவர்கள்: 170 பேர்.

(4) ஊனமுற்ற இளைஞர்கள் பலர் புல பயிற்சிகளில் சேர்க்கப்படுகிறார்கள். அப்படிப் பயிற்சியில் சேர்க்கப்பட்டவர்கள்: 42 பேர்.

(5) மத்திய அரசிடமிருந்து மானியம் பெறுவதற்காகப் பரிந்துரை செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை: 8.

இவை தவிர, ஊனமுற்றோரைப் புத்தகம் கட்டும் பயிற்சியில் சேர்த்தல், தொழில் செய்வதற்கு வங்கியின் மூலம் கடன் ஏற்பாடு செய்தல், பிற தொழில் பயிற்சிகளில் சேர்த்தல், பொருத்தமான வேலைகளில் அமர்த்துதல் போன்ற பணிகளையும் ஊனமுற்றோர் மாநில வாரியம் சிறப்பாக ஆற்றிவருகிறது.

**அ. பிச்சை,**
**செயலாளர்,**
**ஊனமுற்றோர் மாநில வாரியம்.**



### 1979-80ஆம் ஆண்டில் ஊன முற்றோர் மறுவாழ்வுக்கான சிறப்புப் பணிகள் :

### பெட்டிக்கடை வைத்துத் தொழில் செய்ய உதவி செய்தல் :

1979-80 ஆம் ஆண்டில் ஊன முற்றோர் 1000 பேருக்கு வங்கியின் மூலம் கடன் உதவிக்கு ஏற்பாடு செய்து, அதன் மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வங்கி சுமார் ரூ.4000- கடனாக 4 சதவீத வட்டியில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெட்டிக்கடை வைக்கத் தகுந்த இட ஒதுக்கீடும், பெட்டிகள் செய்து கொடுப்பதும் ஆகிய பணிகளைச் சமூக நலத்துறையின் சார்பாக ஊனமுற்றோர் மாநில வாரியம் ஆற்றுகிறது.

பெட்டிக்கடை வைக்கும் ஒவ்வொரு ஊனமுற்றோருக்கும் அரசு ரூ. 500 மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூ. 5,00,000ஐ 1979-80ல் ஒதுக்கீடுசெய்துள்ளது. இத்திட்டம் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. இது வரை இத்திட்டத்தால் சுமார் 137 பேர் பெட்டிக்கடை வைக்க நிதி உதவி பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 1,980 மார்ச் இறுதிக்குள் 1,000 ஊன முற்றோர் இத்திட்டத்தால் மறுவாழ்வு அளிக்கப்படுவார்கள்.



### 1,500 பேருக்கு வேலைவாய்ப்பு :

ஊனமுற்றோர் தகுந்த பயிற்சிகள் பெற்றபின், வேலைக்காக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறார்கள். இவ்வாறு பயிற்சி பெற்ற ஊனமுற்றவர்கள் 1500 பேர் வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் பல நிறுவனங்களில் ஒரு ஆண்டிற்குப் பயிற்சியாளராக வைத்து, மேலும் பயிற்சி பெற்றபின், வேலையில் அமர்த்திக் கொள்ளும் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. பயிற்சிக்காலத்தில் ஒவ்வொரு ஊனமுற்றவரும் மாதம் ரூ. 150 தமிழக அரசிடமிருந்து உதவித் தொகையாகப் பெறுவார்கள். ஓராண்டுப் பயிற்சி முடிந்தபின் வேலையில் அமர்த்திக் கொள்ளப்படுவார்கள். இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு 1979-80ஆம் ஆண்டில் ரூ. 25,88,400 ஒதுக்கீடு செய்துள்ளது.

### ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயற்கைக் கால் உறுப்புகள் :

1979ஆம் ஆண்டு உலகெங்கும் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப் படுகிறது. இந்த ஆண்டில் ஊனமுற்ற குழந்தைகளின் மறுவாழ்வு கருதி ஓர் சிறப்புத் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தத் துவங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி இவ்வாண்டில் ,கால் ஊனமுற்ற 1000 குழந்தைகளுக்குச் செயற்கைகால் உறுப்புகள் வழங்கப்பட இருக்கிறது. இதற்காகத் தமிழக அரசு 1979-80ஆம் ஆண்டில் ரூ. 2,50,000 ஒதுக்கீடு செய்துள்ளது.

### தமிழக அரசின் தனிக்கவனம் :

சேமநல அரசு என்றால், அங்கு எல்லாருடைய முன்னேற்றமும் முறையாக அமைய வேண்டும். நலிந்தவர்களும், தாழ்ந்தவர்களும் முன்னேறுவதற்குச் சிறப்பு வாய்ப்புகளும், வசதிகளும் செய்து தரப்படவேண்டும். இதைத் தமிழக அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஆகவேதான் சமுதாயத்தில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காகத் தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது. ஊனமுற்றோரும் பிறரைப்போல் முன்னேறினால்தான் முழுமையான சமுதாய வளர்ச்சி ஏற்படும் என்பதைத் தமிழக அரசு உணர்ந்து, ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.





ஊனமுற்றோர் மறுவாழ்வு மூன்று வகைப்பட்டது. அவை, ஊனத்தின் தன்மையை அல்லது கடுமையைக் குறைக்கும் மருத்துவ வசதி வழங்குதல், கல்வி-பயிற்சிக்குரிய வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருதல், வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல் ஆகியவை ஆகும். இத்தகைய மூன்று வழிகளிலும் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு வழங்க தமிழக அரசு முயன்று வருகிறது. இத்தகைய முயற்சிகளாலும், திட்டங்களாலும் ஊனமுற்றோர் அனைவரும் முறையாகத் தொழில் செய்யும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அதனால் அவர்களின் வாழ்வு வளமடைய வேண்டும். இதுவே தமிழக அரசின் தலையாய இலட்சியமாகும்!



# சீர்திருத்தப் பணித்துறை

தமிழ்நாடு அரசு சீர்திருத்தப் பணித்துறையின் கீழ், சிறார்கள் மற்றும் சிறுமிகளுக்கான, சீர்திருத்தப்பள்ளிகளும், வாழ் நெறியில் தம் நிலையில் தவறியபெண்களுக்கு, அவர்கள் மீண்டும் வாழ வகை செய்ய, அவர்களுக்குப் போதுமான கல்வியும், கைத் தொழிலும் கொடுத்து, பழைய படி சமுதாயத்தில் கௌரவமாக வாழ வழிவகுக்கும் அருட்கூடங்களாகத் திகழும் மகளிர் காப்பு இல்லங்களும் மற்றும் பல நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.

### "மகளிர் காப்பகம், சென்னை"

அல்லவை நீங்க, நல்லவை நிலைத்திட சமூக நலத்தில் நாட்டங்கொண்ட பெரியவர்களின் அமைப்பென அன்றையச் சென்னையில் இயங்கி வந்த விழிப்புக் கழகத்தின் அமைப்பாக, 1930-ஆம் ஆண்டு முதல், பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடத்தப் பெறும் இல்லமாக, விழிப்புப் பணி இல்லமும் மகளிர் காப்பகமும் (ஸ்திரி சதனா) இயங்கி வந்தன.

இவ்வில்லம் 1948-ல் தமிழக அரசின் பொறுப்பிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சென்னை, பரத்தமைத் தடுப்புச்சட்டம், 1956-ஆம் ஆண்டில் மத்திய அரசினர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

இவ்வில்லத் தோற்றத்தின் முக்கியக் குறிக்கோள், பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ், அதன் பிடியில் அகப்பட்ட அபலைகள், மீண்டும் சமூகத்தாரால்


**எம்.கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,**

**இயக்குநர், சீர்திருத்தப்பணித்துறை**


கேவலப்படுத்தப்படாமல், அவர்கள் தவறிய நிலைக்கு மீண்டும் ஆட்படாது, திட்டமாகவும், உறுதியாகவும், புதிய வாழ்க்கையை மேற்கொள்ள, நல்ல சமூக அங்கத்தினராய் திகழ வழி செய்வதேயாகும். நல் வாழ்விற்கான விழிப்புணர்ச்சிகளை அவர்களுக்குள் ஏற்படச் செய்ய, கல்வியறிவும், தம் திறனில் மேம்பாடடைய தொழிற்கல்வியும் பெறச் செய்து, உடல் நலம் பெற்று, ஆரோக்கிய வாழ்வு பெற மன நல, உடல்நல சிகிச்சைகள் அளித்தும், சமய போதனைகளையும், அறிவுரைகளையும் அவர்களுக்கு அவ்வப்போது தந்தும், பெரும் பணியாற்றி வருதலும் இந்நோக்கத்தின்கீழ் அமைந்த சீரமைப்பு முறைகளாகும். அப்படி சீர் பெறச் செய்து, அவர்களை வாழ்வில் ஈடுபடுத்த ஆவன செய்வதும், அவர்களுக்கு புனர்வாழ்வளித்தலும் இத்துறையின் முக்கியக் குறிக்கோளாக மேற்கொள்ளப்படுகிறது.

### காரணம் என்ன?

ஏன் இப்பெண்கள் இக்கதிக்கு ஆளானார்கள்? இவ்வினாவிற்கு பொதுவான காரணங்களாக இவர்கள் வாழ்க்கைக் குறிப்புகளை நோக்கும் போது கிடைக்கக் கூடிய பதில்கள் வறுமை, காதலில் தோல்வி, திருமண வாழ்வு முறிவு, குடும்பத் தலைவர் அல்லது பெற்றோர்கள் வளர்ப்பு முறையில் ஏற்படும் சிக்கல்கள், பெரியோர்களின் கவனமற்ற போக்கு, ஒருவரையொரு



வர் புரிந்து செயல்படாமை, சினிமா மோகம், ஆடம்பர வாழ்க்கை வாழ ஆசை, சுலப மான முறையில் பணம் சம்பா திக்கும் ஆர்வம் ஆகிய இவை போன்றவைகளேயாகும்.

சமூகத்தில் மதிப்பிழந்தவர் களாய், சிக்கல்களில் சிக்கித் தவித்து, தம் வசத்தை இழந்த நிலையில் தவறுக்கு ஆளாகி, பரத்தமைத் தடுப்புச் சட்டத் தின்கீழ் கொணரப்படும் இப் பெண்களை, சமூக இகழ்ச்சியி னின்றும் காப்பாற்ற அவர்கள் மீண்டும் புனர்வாழ்வு பெறச் செய்ய, இத்தகைய இல்லங் களின் சேவை சமூகத்திற்கு மிக வும் முக்கியத் தேவையாகிறது.

இவர்களும் ஊனமுற்றோரே. இவர்கள் உள ஊனமுற்றோர். இவர்களுக்கும் ஆதரவு தேவை. இதைக் கருதியே நமது அரசு உதவி வருகிறது. உடல் ஊன முற்றோருக்கு உதவுவதுபோல, உளம் ஊனமுற்றோருக்கும் தமிழக அரசு தளராது உதவி செய்கிறது.



# உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கம்

பார்வை யற்றோருக்காகச் சென்னையில் ஒரு சங்கம் அமைக் கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கும் வகை யில் வேலை அளிப்பது இச்சங் கத்தின் நோக்கம். 18 பார்வை யற்றோர் இச்சங்கத்தில் உறுப்பி னர்களாக உள்ளனர். ஒப்பந்தப் புள்ளி கேட்காமல், சென்னையி லுள்ள எல்லா அரசு அலுவலகங் களும் நாற்காலிகளுக்குப் பிரம்பு பின்னிப் பழுதுபார்க்கும் வேலை யை இச்சங்கத்திற்குத் தரவேண் டும் என்ற சலுகையை அரசு அளித்துள்ளது.



**சென்னை, மயிலாப்பூரில் இயங்கும் மகளிர் பாதுகாப்பு இல்லத்தின் உட்பிரிவுகள்:—**

1. விசாரணைக்கால குற்ற வாளிகள் தங்குமிடம்.
2. மகளிர் காப்பக இல்லம் (ஸ்திரி சதனா).
3. விழிப்புப்பணி இல்லம்.
4. கன்னித்தாய்மார்களின் இல்லம்
5. பிற்காப்பு விடுதி.

**விசாரணைக்கால குற்றவாளிகள் தங்குமிடம்: (பெண்கள்)**

இவர்கள், காவல்துறையின ரால், பரத்தமைத் தடுப்புச் சட் டத்தின் கீழ் குற்றம் சாட்டப் பட்டு நியாய மன்றங்களின் மூல மாய், இவ்வில்லத்தின் பாதுகாப் பிலும், பராமரிப்பின் கீழும் விசா ரணை முடியும் வரை இருக்க வேண்டுமெனப் பணிக்கப்பட்டு, சேர்க்கப்படுவார்கள். இவர் களில் பலருக்குப் பால்வினை நோயும், மற்றும் வேறு நலக் குறைவுகளும் உண்டு. எனவே இவர்களைத் தனிக்கூடத்திலே இருக்கச் செய்ய நலம் எனக் கண்ட மாண்புமிகு தமிழக முதல் வர் அவர்கள், 29.6.1979 அன்று இதற்கென ரூ. 1 இலட்ச மதிப் பீட்டில் அமைக்கப்பட்ட புதிய கூடத்தினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் சீரிய தலைமையில் திறந்து வைத்தார்கள். முன்னர் இக்கட் டிடத்திற்கான அடிக்கல்லை 5.4.'78 அன்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தலைமையில், மாண்புமிகு உள் ளாட்சித்துறை அமைச்சர் அவர் கள் அடிக்கல் நாட்டினார்கள். இவ் வில்லத்தின் நீண்ட நாள் தேவையொன்று இதன் மூலம் நிறைவு செய்யப்பட்டது.

**மகளிர் காப்பகம் (ஸ்திரி சதனா இல்லம்)**

இவ்வில்லத்தில் 21 வயதுக்குட் பட்டவர்களே உள்ளனர். இவர் கள் தங்கள் பெண்மைப்பாதுகாப் பிற்காக தாங்களே விரும்பிச் சேர்ந்தவர்கள். இத்தகையோரை இவ் வில்லத்தில் சேர்ப்பதற்கு, இத்துறை இயக்குநருக்கே அதி காரமுள்ளது. காவல்துறையின ரால் அனுப்பப்படும் கடத்தப் பட்ட (Kidnapped) இளம் பெண்களும் இங்கு சேர்க்கப்படு கின்றனர்.

**மகளிர் காப்பகம் (விழிப்புப்பணி இல்லம்):**

பரத்தமைத் தடுப்புச் சட்டத் தின்கீழ் விசாரணைக்குப் பிறகு, நீதிபதிகளால் குற்ற வாளிகள் எனத் தீர்மானிக்கப் பட்டு, இவ்வில்லப் பராமரிப்பின் கீழ் இருந்துவர அனுப்பப்பட்ட வர்கள் இங்குள்ளனர்.

**அருள் இல்லம் எனும் கன்னித்தாய் இல்லம்:**

இவ்வில்லத்தில் 21 வயதுக்குட் பட்டவர்கள், திருமணமாகாத பெண்கள், சமூக விரோதிகளால் ஏமாற்றப்பட்டு, கன்னித்தன்மை குலைய, தாய்மையினை எய்திய கர்ப்பிணிகள் தாமாக விரும்பிச் சேர்த்துக் கொள்ளப்படுவதும், விபச்சார விடுதியில் இருந்த போது கருவுற்றவர்கள் சேர்க்கப் படுவதும், இவ்வில்லத்தில்தான். இது 1973-ஆம் ஆண்டு துவங்கப் பெற்று, தவறிய பெண்களின் பாதுகாப்பு இடமாகவும், மறு வாழ்வடைய வகை செய்யும் நல்வில்லமாகவும் இயங்கி வரு கிறது, கன்னித்தாய்மார்களின் குழந்தைகள், தாயின் முழு விருப் பத்தின் பேரில், குழந்தைகள் இல்லாத பெற்றோர்களுக்கு, வளர்ப்புக் குழந்தைகளாகவும், அல்லது சிசுபோஷக சாலைகள் அல்லது பாலமந்திரம் போன்ற நிறுவனங்களுக்கு அனுப்பி வைக் கப்படுகின்றனர்.

**பிற்காப்பு இல்லங்கள்:**

இவ்வில்லத்திலேயே நன்கு பயின்று தேறியவர்களும், அவர் களுள் உத்தியோகம் பெற்றிருந் தும், வெளியில், சமூகத்தில் அவர் களை ஏற்றுக் கொள்ளக்கூடிய வர்கள் யாரும் இல்லாத நிலை யில், அனாதைகளாக விடப்பட்ட பெண்களின் புகலிடமாகவும், குறைந்த வருவாய் உடையோர் உறைவிடமாகவும், பிற்காப்பு இல்லங்கள் செயல்பட்டு வருகின் றன.

**கல்வியும், தொழிற் பயிற்சியும்:**

சேர்க்கப்பட்ட பெண்களின் கல்வித் தகுதியும், தொழில் ஆர் வமும், கண்காணிப்பாளராலும், பெண்கள் நல அலுவலராலும், அவர்களை நேர்காணல் செய்தல் மூலம் தெரிந்து கொள்ளப்பட்டு அவரவர்களுக்குத் தகுந்த நிலை யில் கல்வியும், தொழிற் பயிற்சி யும் அளிக்கப்படுகிறது. பெண் கள் காப்பகத் தனிப்பள்ளி 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை கல் வித் தேர்ச்சியளித்து வருகிறது. அம்பர்சர்க்கா கூடமும் நெசவுக் கூடமும் உள்ளன. மேலும் மாண வியருக்கு நூல் நூற்றலும், நெச வுத்தொழில் பயிற்சி, பாய்முடை தல் பயிற்சி, தையற்கலைத் தேர்ச்சி, சித்திரத் தையல்கலைப் பயிற்சி ஆகியவைகளைப் பெறு வதற்குப்போதுமான வாய்ப்புகள் அளிக்கின்றன.

பகுதிநேரப் பயிற்சிகளாகச் சங்கீதப் பயிற்சியும், ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு நாட்டியப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கல்வியில் ஆர்வமும், ஊக்கமும் கொண்ட மாணவர்கள் உயர் நிலைப் பள்ளிப் படிப்பைத் தொடர உயர் நிலைப்பள்ளிக் கும் அனுப்பி வைக்கப்படுகிறார் கள். மற்றும் அச்சுக் கோக்கும் பயிற்சி, செவிலிப் பணியாளர் பயிற்சி இவைகளுக்கும் பயிற்சி பெற விரும்புவோரைத் தெரிந் தெடுத்து, சம்பந்தப்பட்ட நிறு வனங்களுக்கு அரசு செலவில் அனுப்பப்படுகிறார்கள்.

அரசு நடத்தும் தொழில்நுட் பத் தேர்வுகளுக்கும் தெரிந் தெடுக்கப்பட்ட மாணவியர் அனுப்பப்பட்டு, அவர்களும் அத் தகைய தேர்வுகளில் வெற்றி பெற்று வருங்கால வாழ்விற்குத் தங்களைத் தயார் செய்து கொள்ள வகைகள் செய்யப் படுகின்றன.

**நீதிபோதனை:**

கல்வியுடன் இணைந்த அற நெறி முறைகளும், இறை உணர்வூட்டும் நீதிபோதனை களும் இல்லத்தின் பணியாளர் கள் மூலமாகவும், தக்க சான் றோர் மூலமாகவும் அளிக்கப்படு கின்றன.

பண்டிகை தினங்களில் அவ ரவர் மதங்களைச் சார்ந்த ஆலை யங்கள், தொழுகை ஸ்தலங்கள், இவற்றிற்குத் தகுந்த பாதுகாவ லுடன் மாணவியர் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதனால் இல்லவாசிகள் அவரவர் மத நோக்கத்தினை நல்லுணர்வுடன் வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. பெரும் பண் டிகைகளைக் கொண்டாடுவதில் இல்லமே பங்கு கொள்ளுவதால், மதங்களினால் ஏற்படும் வேற்று மைகளைக் களைந்து நல்லுணர்வு வுடன் செயல்படவும் உதவுகி றது.

**உணவும் உடையும்:**

அரசு வகுத்துள்ள உணவுத் திட்டத்தின்படி, இல்லவாசி களுக்கு நல்ல சத்துள்ள உணவு அளிக்கப்படுகிறது. வாரமொரு முறை ஒவ்வொருவருக்கும் ஒரு முட்டை உணவின் பாகமாக தரப்படுகின்றது.

கதர், கைத்தறி ஆடைகள், படுக்கைகள் முதலியனவும் அரசு வகுத்துள்ள திட்டப்படி இல்ல வாசிகள் அனைவருக்கும் வழங் கப்படுகின்றன.

**"உடல் ஆரோக்கியமே உள ஆரோக்கியம்":**

இவையிரண்டும் செம்மையாக கவனிக்கப் பெறுகின்றன. உடல் ஆரோக்கியம், மருத்துவ அலு வலர், மருந்து கலக்குநர், செவிலி ஏவலர் இவர்களைக் கொண்ட அமைப்பால் நன்கு கவனித்துக் கொள்ளப்படுகிறது.




சேர்க்கப்படும்போது, மருத் துவப் பரிசோதனையும், சேர்க்கப் பட்டபின், இல்லவாசிகளாகிய போது அவர்களுக்கேற்படும் உடல் நலக் கோளாறுகளைப் போக்கி, அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தலும், இவ்வில்ல மருத்துவப் பகுதியினரால், நன்கு கவனிக்கப்பட்டு வருகிறது. பல வீனமானவர்களுக்குத் தேவை யான அதிக சத்துள்ள உணவுகள் வழங்க, ஏற்பாடுகளும் மருத்துவ அலுவலரின் ஆலோசனையின் பேரில் செய்யப்படுகின்றன.

**புனர் வாழ்வு:**

சமூகத்தினரால், புறக்கணிக் கப்பட்ட பெண்களை, மேற்படி சமூகமே திரும்ப ஏற்றுக் கொள் ளும் வகையில் அவர்களைத் தயார்செய்து, நல்லவர்களாக வாழும் வகை அமைய, பயிற்சிக் குப் பின்னர், புனர்வாழ்வு அமை பும் ஆரம்பமாகிறது.

சேர்க்கப்பட்ட பெண்கள் இல்லத்தில் இருக்கவேண்டிய நாட்கள் முடியும தருவாயில், மூன்று மாத காலத்திற்கு முன்ன தாக, வெளியில் அனுப்பப்பட வேண்டிய பெண்களின் பெற் றோர் அல்லது உறவினர், அவர் வாழ்நிலை, இவைகளைப் பற் றிய அறிக்கையானது நன் னடத்தை அலுவலரின் வாயி லாகப் பெறப்படுகிறது. அதன் அடிப்படையில், பெற்றோரோ அல்லது உறவினரோ உள்ளவர் களை அவரவர்களின் பெற்றோர் அல்லது உறவினர்களின் பொறுப் பில் ஒப்படைக்கப்படுகிறது. இவ் வாறு ஒப்படைக்கப்பட்டவர்க ளைப் பற்றிய பிற்காப்பு அறிக் கைகளும், அவ்வப்போது 3 ஆண்டுகள் வரை பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

உறவினர் மற்றும் பெற்றோர் ஆகிய ஆதரவு ஏதும் இல்லாத வர்கள் விரும்பினால் திருமணம் செய்வித்தல் மூலம் ஆதரவு தேடப்பட்டு, புனர்வாழ்வும் அளிக்கப்படுகிறது. அவ்விதம் வாழ்நிலை எய்திய பல பெண் கள் இவ்வில்லத்திலிருந்து சென்று கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்பை நன்குணர்ந்து, இல் வாழ்வைச் செவ்வனே நடத்தி வருவதுகண்டு இவ்வில்லம் பெரு மிதமடைகிறது.

சமூகத்தின் ஒரு சாராரால், பெண்ணினத்திற்கு இழைக்கப் படும் தீங்கிற்கு பரிகாரம் காண நமது அரசு இச்சீரிய பணியினை இத்தகைய இல்லங்கள் மூலமா கச் செய்து, மகளிர் வாழ்வில் ஒளியேற்ற, எல்லா முயற்சி களும் மேற்கொண்டு வருகிறது.

நீங்களே கண்டுகொள்ளுங்கள்

# மின்னலடிக்கும், ஸூப்பர் ரின் வெண்மை.. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை




வேளை தவறாமல் உபயோகியுங்கள் ஸூப்பர் ரின், எத்தகைய வெள்ளைவெளேர் சலவை கிடைக்கிறது பாருங்கள்—இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை அது. காரணம், மேம்பட்ட வெளுப்பூட்டும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின். நீங்களே கண்டுகொள்ளுங்கள்.




**இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் விட அதிக வெளுப்பூட்டும் சக்தி.**

லின்டாஸ்-RIN 34.2317 TM (RR)

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



# ஊனமுற்றோர் நலன்

ரா. கோவிந்தராஜலு,
உதவி இயக்குநர்,
உடல் ஊனமுற்றோர் நலம்
சமூக நலத் துறை.

தமிழ்நாட்டில் மட்டும் 1974ல் நடத்திய கணக்கெடுப்பின்படி, 2,35,000 ஊனமுற்றோர் இருப்பதாகத் தெரியவருகிறது. இதில் 89 விழுக்காட்டைச் சார்ந்தவர்கள் ரூ. 200க்கும் கீழ் மாத வருவாயுள்ள குடும்பங்களைச் சார்ந்தவர்கள் ஆவர். இம்மாதிரி ஆயிரக்கணக்கான ஊனமுற்றவர்கள் சமுதாயத்தின் சுமைகளாக இல்லாமல் பயனுள்ள குடிமக்களாக ஆக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு பல பயனுள்ள திட்டங்களை அமலாக்கிக் கொண்டு வருகிறது.

**நவீன முறைப் பயிற்சி:**

சென்னை - மாமல்லபுரம் சாலையில் கோவளத்திற்கு அருகேயுள்ள முட்டுக்காடு என்னும் இடத்தினருகே சுமார் ரூ. 30 இலட்சம் செலவில் நவீனமுறைப் பயிற்சி உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இங்கு பலதரப்பட்ட உடல் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது எண்பதிற்கும் மேற்பட்ட ஊனமுற்றோர் இத்தொழிற்சாலையின் பணி புரிந்து வருகின்றனர். ஊனமுற்றோர் பயன்படுத்தும் முச்சக்கர வண்டிகள், பெட்டிக் கடைகள், கட்டுமான பணிகள் மற்றும் எஃகிலான பல தரப்பட்ட பொருட்களை இத்தொழிற்சாலையில் ஊனமுற்றோர் செய்து வருகின்றனர் இத்தொழிற்சாலையை மேற்கொண்டு விரிவுபடுத்தவும், இது போன்று மற்றும் இரண்டு தொழிற்சாலைகளை வேறு மாவட்டங்களில் நிறுவவும் அரசு திட்டமிட்டு வருகிறது.

**முச்சக்கர வண்டிகள்:**

இரண்டு கால்களை அறவே இழந்தவர் மற்றும் பிணி, விபத்து முதலியவற்றால் இரு கால்களின் சக்தியையும் இழந்த ஊனமுற்றோர் பயனுள்ள வாழ்க்கையை மேற்கொள்ளும் பொருட்டு, ரூ. 1000 மதிப்புள்ள முச்சக்கர வண்டிகளை தமிழ்நாடு அரசு இலவசமாக வழங்கி வருகிறது. இதுகாறும் சுமார் 4,000 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு 79-80ஆம் ஆண்டில் மட்டும் 1000 முச்சக்கர வண்டிகளை அளிக்க அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

**கேட்பு உதவிச் சாதனம்:**

காது கேளாதோர் பள்ளிகளிலும் மற்றும் சாதாரண பள்ளிலும் கல்வி பயின்று வரும் காது கேளாத எளிய குடும்பத்தைச் சார்ந்த சிறார்கள் நன்கு கல்வி பயில அரசு இலவசக் கேட்பு உதவிச் சாதனங்கள் (Hearing Aid) வழங்கி வருகிறது. இது வரை 1600 கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டையொட்டி இந்நடப்பு ஆண்டில் மட்டும் 700 கருவிகள் இலவசமாக அளிக்க அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

**படிப்பு உதவித் தொகை:**

இந்திய அரசின் இத்திட்டம் 1977ஆம் ஆண்டிலிருந்து சமூக நலத்துறை இயக்கத்தின் வழியாக அமலாக்கப்பட்டு வருகிறது. 14லிருந்து 30 வயதைச் சார்ந்த ஊனமுற்றோர் பொதுக் கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிலவும், 14லிருந்து 40 வயதைச் சார்ந்தோர் தொழிற் பயிற்சி (Inplant Training) பயிலவும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. பயிலும்

படிப்பு அல்லது பயிற்சிக்கேற்றாற்போல் மாதம் ரூ. 40லிருந்து ரூ. 125- வரை இந்த உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இதைத் தவிர, பார்வையற்றோருக்கு, தங்கள் பாடப் புத்தகங்களையும் வகுப்புக் குறிப்புக்களையும் படித்து உதவி செய்வோரை அமர்த்திக்கொள்ள தனி ஊதியம் (Readers Allowance) வழங்கப்பட்டு வருகிறது.



**மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு.....**

மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகளை நவீன முறைகளில் பயிற்றுவிக்க மற்றும் இளநிலை ஆசிரியர் பயிற்சி தேர்வு பெற்ற ஆசிரியர்களுக்குச் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள ''பாலவிஹார் நிறுவனத்தின் வாயிலாக இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி அளிக்கும் பொருட்டு இந்நிறுவனத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ. 45,600 மான்யமாக அரசு அளிக்கிறது.

**தனியார் சேவை நிறுவனங்களுக்கு மானிய உதவி:**

உடல் ஊனமுற்றோர் நலனுக்காகத் தன்னிச்சையாக இயங்கும் சமூக சேவை நிறுவனங்களுக்கு அவர்கள் பணியின் தரத்தை உயர்த்தவும், நிறுவனங்களை விரிவுபடுத்தவும் அரசு நிதியுதவி அளித்து வருகிறது. இதுவரை 17 நிறுவனங்களுக்குக் கட்டடங்கள் கட்டவும், பலவித உபகரணங்கள் வாங்கவும் ரூ. 3,07,000 அரசு நிதியுதவி அளித்துள்ளது.

8 முதல் 16 வயதுக்கு உட்பட்ட இளம்பிள்ளைவாதம், முடக்குவாதம், காதுகேளாமை, வாய்பேச இயலாமை, பார்வை இன்மை போன்ற பலதரப்பட்ட உடல்ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்காக சமூக சேவை நிறுவ்னங்களுக்கு ஓர் குழந்தைக்கு ரூபாய் 30 வீதம், ஆண்டுதோறும் ரூ. 40,000 மானியத் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இதுபோன்று தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு ஆண்டொன்றிற்கு ரூ. 40,000 மானியத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

**பார்வையற்ற பெண்டிர்க்கான மறுவாழ்வு இல்லம்:**

எளிய மற்றும் ஆதரவற்ற பார்வையிழந்த பெண்டிர்க்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன் இந்நிலையம் சென்னையிலுள்ள சாந்தோம் நெடுஞ்சாலையில் ஏப்ரல் 1978 முதல் செயல்பட்டு வருகின்றது.

துணி நெய்தல், சாக்குக்கட்டி செய்தல் போன்ற தொழில்களில் ஆறுமாதக் காலத்திற்கு இப்பெண்டிருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 50 உதவித்தொகையாகவும் இலவசமாகத் தங்க விடுதி வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகை கொண்டு இவர்களுக்கு உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி முடிந்த பின்னர் இவ்வில்லத்திலேயே பணியளிக்கப்பட்டு, பணிக்கேற்றார் போல் ஊதியம் அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின்னரும் விடுதியில் தங்க விரும்புவோரிடமிருந்து அவர்களின் உணவுச் செலவிற்காக, மாதம் ரூ. 25- மட்டும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**ஓய்வு ஊதியம்:**

45 வயதிற்கும் மேற்பட்ட ஆதரவற்ற உடல் ஊனமுற்றோருக்கு மாதம் ரூ. 20 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சியரின் வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**மூளை வளர்ச்சி குன்றியவருக்கு...**

பொதுவாக உடல் ஊனமுற்றோர், சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையினர் என்றாலும், மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டோர் அதைவிட பின்தங்கிய நிலையினர் ஆவர். தற்போது, இத்தரப்பட்ட மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டவர்க்குக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அளிக்கும் நிலையங்கள் யாவும் தனியார் நிறுவனங்களே. இந்நிறுவனங்கள் நபர் ஒன்றுக்கு ரூ. 200-ம் அதற்கு மேலும் கட்டணங்கள் வசூலித்து வருகின்றன. ஆதலின் இந்நிறுவனங்களில் பயிற்சிபெறும் வாய்ப்பு சமுதாயத்தின் உயர் மட்டத்தில் உள்ளோருக்கு மட்டுமே கிட்டியுள்ளது. ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் கவனிப்பாரின்றி பரிதாபமான நிலையில் இருந்து வருகின்றனர். இவர்களுக்கு விசேடக் கவனிப்பு, கல்வி, பயிற்சி மற்றும் பராமரிப்பு அளிக்கும் நோக்குடன், மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட 100 ஏழைக் குழந்தைகளுக்கென ஒரு தனி நிலையம் இவ்வாண்டு நிறுவப்படவிருக்கிறது.

**பரிசீலனையில் உள்ள திட்டங்கள்:**

எல்லா உடல் ஊனமுற்ற மாணவர் மாணவியர் பயிற்சியாளர்களும் அவரவர் இருப்பிடத்திலிருந்து பள்ளி பயிற்சி நிலையத்திற்கு சென்று திரும்ப இலவசப் பேருந்துப் பயண வசதி செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றவரை மணம் செய்து கொள்ள ஊக்குவிக்கும் பொருட்டு, ஊனமுற்றவரை மணம் புரிபவர்க்கு மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக முதலீடு செய்யப்படுகின்ற வகையில் ரூ. 5,000 ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கலாமென ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

நம் நாட்டிலேயே ஊனமுற்றோருக்கான இது போன்ற பல்வேறு திட்டங்களை வேறு எந்த மாநிலமும் செயல்படுத்துவதில்லை என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிடலாம்.



மொத்த மக்கட்தொகையில் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் பல்வகைப்பட்ட நோய்களினாலும், இறப்பின் பிடிப்பினாலும் எளிதில் பாதிக்கப்படுவதால் இவர்களை 'Vulnerable Group' என்று கூறுகிறோம். இவர்கள் துயர் துடைக்கும் பணி நம்நாட்டின் மூலை முடுக்குகளில் உள்ள எல்லாக்குழந்தைகளுக்கும் பரவலாக்கப்பட வேண்டும் என்னும் நல்லெண்ணத்தில் இந்திய அரசு 1974-ஆம் ஆண்டு பிரதமரைத் தலைவராகக் கொண்டு தேசியக் குழந்தைகள் வாரியம் ( National Children's Board ) என்னும் அமைப்பினை உருவாக்கியது.

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்



இந்த வாரியம் குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை (National policy for children ) ஒன்றினை உருவாக்கியது. பதினைந்து அம்சத் திட்டமான இக் கொள்கை குழந்தைகளுக்கான அடிப்படை நல்வாழ்வையும், ஊட்டச் சத்தையும் வலியுறுத்துகின்றது. இந்த வாரியத்தின் அரும்பெரும் முயற்சியின் விளைவாகக் குழந்தையின் மொத்த வளர்ச்சிக்குத் தேவையான ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. அதுவே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டமாகும். தமிழ்நாட்டில் சென்னை நகர்ப்புறத்திலும், நிலக்கோட்டை, தல்லி முதலிய கிராமப்புறங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.


டாக்டர் கே. ஏ. கிருஷ்ணமூர்த்தி,
இயக்குநரும், கண்காணிப்பாளரும்

டாக்டர் இரா. துரைராசன்,
மருத்துவ அதிகாரி.
சென்னை நகர்ப்புற ஒருங்கிணைந்த
குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
குழந்தை நல ஆராய்ச்சி நிலையம்,
சென்னை


சென்னையில் இத்திட்டம் 27 குடிசை மாற்றுவாரியப் பகுதிகளில் சுமார் நூறாயிரம் மக்களுக்குப் பயன்படுகின்றது. இவர்களில் சுமார் 12,000 ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளும், 2,000 கர்ப்பிணிகளும் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தின் கீழ் நேரடியாகப் பயனடைவோராவர். சுமார் பதினைந்து வயது முதல் நாற்பத்திநான்கு வயதுக்குட்பட்ட பெண்டிர்களும் இத்திட்டத்தின் மூலம் மறைமுகமாகப் பயன்பெறுகின்றனர்.

**பணியாற்றுவோர்:**

ஒவ்வொரு ஆயிரம் மக்கட்தொகைக்கும் ஒரு அலுவலர் என்று 100 அங்கன்வாடி அலுவலர்கள் இத்திட்டத்தின் கீழ் பணிபுரிகின்றனர். இவர்களே இத்திட்டத்தின் உயிர்நாடிகளாவர். நூறு 'அங்கன்வாடி நிலையங்கள்' மூலமாக எல்லாப் பணிகளும் செயலாக்கம் பெறுகின்றன.

'அங்கன்வாடி நிலையங்கள்' (Anganwadi Centres) என்பவை ஒருவகையில் குழந்தைகள் காப்பகங்களேயாகும். இத்திட்டத்தின மூலம் எல்லா நல்வாழ்வுப் பணிகளும் அவரவர் விட்டு முற்றத்திற்கு அருகிலேயே கிடைப்பதால் இக்காப்பகங்களை 'அங்கன்வாடி நிலையங்கள்' என்னும் புதுப்பெயரிட்டு அழைக்கிறோம்.

இத்திட்டம் மத்திய சமூகநலத் துறையின் சார்பாக மாநில சமூக நலத்துறையினரால் நடத்தப்பட்டாலும், இதில் நல்வாழ்வுப் பணிகள்தான் பெரும்பான்மையானவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நல்வாழ்வுப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு அருகிலுள்ள ஆரம்பசுகாதார நிலையத்திற்கு அளிக்கப்பட்டு, அங்குள்ள பணியாளர்களின் திறமையும் குறியளவும் மேலும் சில பணியாளர்களை அமர்த்துவதன் மூலம் பலப்படுத்தப்படுகின்றன.

சென்னை நகர்ப்புறத் திட்டம், மாநக ராட்சியுடன் இணைக்கப்படாமல், எழும்பூர் குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையம் மற்றும் குழந்தைகள் மருத்துவ மனையுடன் இணைக் கப்பட்டுள்ளது.

சென்னை நகர்ப்புறத் திட்டம் கோட்டூர் புரம், தாண்டவராயன் பிள்ளைச்சத்திரம், வியாசர்பாடி, கடற்கரைப் பகுதி என்ற நான்கு பகுதிகளாகப பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக் கும் ஒரு பகுதி மருத்துவ அதிகாரியும், முழுத் திட்டத்தையும் நிர்வகிக்க ஒரு பொறுப்பு மருத்துவ அதிகாரியும் இங்கு உள்ளனர்.

**பணிகள்**

இத்திட்டத்தின் மூலம் ஏழுவகைப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. சமூக நலத் துறையைச் சார்ந்த இத்திட்டத்தில் பெரும்பான்மையான பணிகள் நல்வாழ்வுப் பணிகளாகும் ( Health inputs )

**மருத்துவப் பரிசோதனை: (Health check-up)**

ஆறு மாதத்திற்கொரு முறை அங்கன் வாடிப் பகுதியில் உள்ள ஆறு வயதுக்குட் பட்ட அனைத்துக் குழந்தைகட்கும் மருத்துவப் பரிசோதனை செய்யப்படல் வேண்டும்.

இம்மருத்துவப் பரிசோதனை மூலம் குழந்தைகளுக்கு ஏற்படும் சிறு சிறு வியாதி களும் ஒரு பகுதியில் பரவலாகக் காணப்படும் வியாதிகளின் தன்மை, தீவிர கவனத்துக்குரிய குழந்தைகளின் நிலை, ஊட்டச்சத்து முதலி யன தெரியவருகின்றன.

இதுபோலவே கர்ப்பிணித் தாய்மார் களும், பாலூட்டும் தாய்மார்களும் அடிக்கடி நமது மருத்துவர்களாலும், எழும்பூர் மகப் பேறு மருத்துவ நிலையத்தைச் சார்ந்த மேல் பட்டப்படிப்பு பயிலும் மருத்துவர்களாலும் மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படு கின்றார்கள்.

**நோய்த்தடுப்புச் சிகிச்சை: (Immunisation)**

இத்திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசியும், பி.சி.ஜி,. அம்மைப்பால் முதலிய தடுப்பு ஊசிகளும், இளம்பிள்ளை வாத நோய்த்தடுப்புச் சொட்டு மருந்தும் அளிக்கப்படுகின்றன. போலியோசொட்டு மருந்து நமது திட்டத்தில்தான் அளிக்கப்படு கிறது என்பது பெருமைக்குரிய செய்தியாகும். இதுவரை நமது திட்டத்தில் 54,416 முறை முத்தடுப்பு ஊசியும், 53,279 முறை போலியோ சொட்டு மருந்தும் கொடுக்கப்பட்டுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு டெடனஸ் தடுப்பு ஊசியும் நமது திட்டத்தில் போடப்படு கிறது.

வைட்டமின் 'ஏ' குறையால் ஏற்படும் நோய்களைத் தடுக்க எல்லாக் குழந்தைகளுக் கும், ஆறு மாதத்திற்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' சொட்டு மருந்து (2 இலட்சம் யூனிட்டுகள்) அளிக்கப்படுகின்றது.

**துணை உணவு அளித்தல் (Supplementary Feeding)**

இத்திட்டத்தின் தலையாய பணிகளுள் ஒன்று ஊட்டச்சத்துக் குறைவான குழந்தை களுக்கு துணைஉணவு அளித்தலாகும். மாதா மாதம் அங்கன்வாடிப் பகுதியிலுள்ள எல்லாக்





குழந்தைகளுக்கும் எடை எடுக்கப்பட்டு, எடைக் குறிப்பேட்டில் குறிக்கப்பட்டு, அந்த எடைக் குறிப்பேடுகள் தாய்மார்களிடம் கொடுக்கப்படுகின்றன. இருக்க வேண்டிய எடையில் இரண்டாம், மூன்றாம், நான்காம், நிலையிலுள்ள குழந்தைகளுக்கும், கர்ப் பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக் கும், பள்ளி முன்னிலைப் பருவக் கல்விபயிலும் குழந்தைகளுக்குமாகச் சேர்த்து, ஒவ்வொரு அங்கன்வாடியிலும் சுமார் ஒரு நூறு பேர் களுக்கு, அதாவது நமது திட்டத்தில் தினந் தோறும் சுமார் 10,000 பேர்களுக்குத் துணை உணவு அளிக்கப்படுகின்றது.

**மருத்துவச் சிகிச்சை: (Referral and curative services)**

மருத்துவச் சிகிச்சையின் முதற்படி நமது அங்கன்வாடிகளேயாகும். சாதாரண மாக அடிக்கடி ஏற்படும் வாந்திபேதி, காய்ச்சல், சளி, வெட்டுக்காயம், சொறி, சிரங்கு முதலிய நோய்களைக் குணப்படுத்த அங்கன்வாடி அலுவலர்களுக்குப் போதிய பயிற்சியும், மருந்துகள் அடங்கிய பெட்டியும் அளிக்கப்பட் டுள்ளன. தீவிர சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் மருத்துவத்துணை நிலையங்களுக் கும் அனுப்பப்படுகின்றனர். நமது திட்டத்தில் எட்டு இடங்களில் துணை நிலையங்கள் (Sub-Centres) உள்ளன. இங்கு வாரம் இரு முறை பகுதி மருத்துவரும், துணை மருத்துவச் செவிலித் தாதியரும் குழந்தைகளுக்கு மருத் துவச் சிகிச்சையும், நல்வாழ்வுக் கல்வியும் அளிக்கின்றனர்.

துணை நிலையத்திலிருந்து அடுத்தபடி யாக நான்கு குழந்தை நல நிலையங்கள் (Peripheral paediatric centres) உள்ளன. சைதை, சூளை நிலையங்களுக்கு நமது குழந் தைகள் அவ்வப்போது சிகிச்சைக்காகச் சென்று வருகின்றன. மேல்நிலைச் சிகிச்சை நிலையமாகச் செயல்படுவது எழும்பூர் குழந்தைநல ஆராய்ச்சி நிலையமாகும். இங்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலையும் 7 மணி முதல் 9 மணி வரை ஐ. சி. டி. எஸ். கிளினிக் என்ற சிறப்புக் கவனிப்புப் பகுதி செயல்பட்டு வருகின்றது.

**நல்வாழ்வு மற்றும் சத்துணவுக் கல்வி (Health and Nutrition Education)**

இது மிக மிக முக்கியமானதொரு பணி யாகும். திங்கள், புதன், வியாழன், சனி ஆகிய நாட்களிலும் பிற்பகலில் நமது துணை மருத்துவச் செவிலித் தாதியர் அங்கன்வாடி நிலையங்களில் நல்வாழ்வு போதனையோ அல் லது சத்துணவு பற்றிய செயல்முறை விளக் கமோ அளிக்கிறார்கள். ஒவ்வொரு செவ்வாய் பிற்பகலிலும் சிறப்பான நிகழ்ச்சி மூலம் நல் வாழ்வு போதனை நமது மருத்துவர்களாலும், பயிற்சி மருத்துவர்களாலும் அளிக்கப்படுகின் றது. இதைப் போலவே வாரம் ஒருமுறை நமது மேற்பார்வையாளர்களும் சிறப்பு நிகழ்ச்சிகள் மூலம் நல்வாழ்வு மற்றும் சத்து ணவுக் கல்வியளிக்கிறார்கள்.

**பள்ளி முன்னிலைப் பருவக்கல்வி (Non Formal Pre-School Education)**

ஒவ்வொரு அங்கன்வாடியிலும் மூன்று முதல் ஆறு வயதுக்குட்பட்ட சுமார் 40 குழந்தைகளுக்கு, அதாவது நமது திட்டத்தில் சுமார் 4000 குழந்தைகளுக்குப் பள்ளி முயன் னிலைப் பருவக் கல்வி அளிக்கப்படுகின்றது. இது முறைசாராக் கல்வியாகையால் குழந்தை களுக்குப் பாடல்கள், கதைகள், விளையாட்டு மூலம் நல்ல பழக்க வழக்கங்களும், மன வளர்ச்சியும் அளிக்கப்படுகின்றன.

**செயல் திட்டம் :**

சென்னை நகர்ப்புறத் திட்டத்தில் தினந் தோறும் நான்கு பகுதிகளிலும் வெவ்வேறு வகையான நல்வாழ்வுப் பணிகள் நடைபெறு கின்றன. வெள்ளிக்கிழமை தவிர மற்றைய வேலை நாட்களில் இரண்டு பகுதிகளில் நான்கு குழந்தை நல துணை நிலையங்களும் (Sub-centres) ஒரு பகுதியில் உள்ள சுமார் ஆறு அங்கன்வாடி நிலையங்களில் மருத்துவப் பரி சோதனை நிலையம் மற்றும் நோய்த் தடுப்புச் சிகிச்சையும் (immunisation and Health check-up) மற்றொரு பகுதியில் உள்ள சுமார் ஐந்து அல்லது ஆறு அங்கன்வாடி நிலையங்களில் மருத்துவம் மற்றும் துணை மருத்துவச் செவிலித் தாதியரால் விரிவான அங்கன்வாடிப்



பார்வையிடலும் ( Angan wadi visits ) தினந்தோறும் நடைபெறுகின்றன. ஒரேநேரத் தில் வெவ்வேறு இடங்களில் பல்வகைப்பட்ட நல்வாழ்வுப் பணிகள் நடைபெறுவது இத் திட்டத்தில்தான் என்று உறுதியாகக் கூறலாம்.

கிராமப்புறத் திட்டங்களைவிட இத் திட்டத்தில் மருத்துவர்களது அங்கன்வாடிப் பார்வையிடல் அதிக எண்ணிக்கையில் உள்ளது,

**திட்ட ஆய்வு:**

இத்திட்டம் ஒரு முன்னோடித் திட்ட மாதலால் இந்திய அரசு திட்டக்குழு பத்து அங்கன்வாடிகளைத்தேர்ந்தெடுத்து, அடிக்கடி ஆய்வு செய்து வருகின்றது. மத்திய சமூக நலத்துறையில் உள்ள ஆய்வுக்குழுவும் இத் திட்டத்தை ஆய்வு செய்து வருகின்றது.

**செய்தது என்ன ?**

கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் (1978) நம் திட்டத்தில் நடைபெற்ற பல்வேறு பணிகள் :

| | | முறைகள் |
|---|---|---|
| 1. | மருத்துவர்களால் நடத்தப் பட்ட அங்கன்வாடிகள் பார்வையிடல் ... | 619 |
| 2. | குழந்தைகளுக்குச் செய்யப் பட்ட மருத்துவப் பரி சோதனை ... | 15,680 |
| 3. | கர்ப்பிணிகளுக்குச் செய்யப் பட்ட மருத்துவப் பரி சோதனை ... | 4595 |
| 4. | துணை நிலையங்களில் குழந்தை களுக்கு அளிக்கப்பட்ட மருத்துவச் சிகிச்சை | 41,562 |
| 5. | குழந்தைகளுக்கு அளிக்கப் பட்ட நாக்குப்பூச்சி மருந்து சிகிச்சை ... | 4337 |
| 6. | ஐ. சி. டி. எஸ். சிறப்பு சிகிச் சைப் பிரிவில் கவனிக்கப் பட்ட குழந்தைகளின் எண் ணிக்கை ... | 1184 |
| 7. | துணை மருத்துவ செவிலித் தாதியரால் நடத்தப்பட்ட அங்கன்வாடிகள் பார்வை யிடல் ... | 507 |
| 8. | மேற்பார்வையாளருடன் சேர்ந்து அங்கன்வாடிகள் பார்வையிடல் ... | 122 |
| 9. | முன்னறிவிப்பின்றி அங்கன் வாடிகளைப் பார்வையிடல் ... | 221 |
| 10. | மேற்பார்வையாளருடன் சேர்ந்த அங்கன்வாடி களை முன்னறிவிப்பின்றிப் பார்வையிடல் ... | 25 |
| 11. | பார்வையிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை ... | 2029 |

12. மேற்பார்வையாளருடன் சேர்ந்து, பார்வையிடப் பட்ட வீடுகள். ... 47

13. அம்மைப்பால் குத்தப்பட்ட குழந்தைகளின் விகிதம். 96%

14. பி.சி.ஜி. ஊசி போடப்பட்ட குழந்தைகளின் விகிதம் 85%

15. முத்தடுப்பு ஊசி ஊக்குவிப்பு போடப்பட்ட குழந்தைகளின் விகிதம் ... 74%

16. முத்தடுப்பு ஊசி 2 முறை போடப்பட்ட குழந்தைகளின் விகிதம் ... 7.8%

17. முத்தடுப்பு ஊசி ஒரு முறை போடப்பட்ட குழந்தைகளின் விகிதம் ... 7.9%

18. போலியோ தடுப்பு ஊக்குவிப்புச் சொட்டு மருந்துபெற்ற குழந்தைகளின் விகிதம் 74%

19. டெடனஸ் தடுப்பூசி மூன்று போடப்பட்ட கர்ப்பிணிகள் விகிதம் ... 30%

20. டெடனஸ் தடுப்பூசி இரண்டு போடப்பட்ட கர்ப்பிணிகள் விகிதம் ... 28%

21. டெடனஸ் தடுப்பூசி ஒன்று போடப்பட்ட கர்ப்பிணிகள் விகிதம் ... 39%

22. குழந்தைகளின் ஊட்ட உணவுத் தன்மை

| குழந்தைகளின் ஊட்ட உணவுத் தன்மை | ஜனவரி 79 | செப்டம்பர் 76 |
|---|---|---|
| | சதம் | சதம் |
| நல்ல எடையுள்ள குழந்தைகள் (Normal) | 27.2% | 22.1% |
| முதல் நிலை ஊட்டக் குறைவு (Grade I) | 36.2% | 29.4% |
| இரண்டாம் நிலை ஊட்டக் குறைவு (Grade II) | 30.4% | 32.1% |
| மூன்றாம் நிலை ஊட்டக் குறைவு (Grade III) | 5.2% | 12.5% |
| கடைநிலை ஊட்டக் குறைவு (Grade IV) | 1.1% | 3.7% |



23. துணை மருத்துவச் செவிலியரால் நடத்தப்பட்ட சத்துணவு விளக்கம், மற்றும் நல்வாழ்வுக் கல்வி வகுப்புகள் 156 முறைகள்

24. மருத்துவர்களும், பயிற்சி மருத்துவர்களும் பங்கு கொண்ட நல்வாழ்வுக் கல்வி சிறப்பு நிகழ்ச்சிகள் 34 முறைகள்

25. கள விளம்பர விழா (Field Publicity Function) 1

இவை தவிர யூனிசெப் நிறுவனம் வழங்கும் மாரிஸ் பேட் விருது (Maurice Pete Award) நமது குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைத்திற்கும், குழந்தைகள் மருத்துவமனைக்கும் கிடைத்திருக்கிறது என்றால் அதற்கு நமது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டமும் ஒரு முக்கியக் காரணம்.

ஒவ்வொருவருக்கும் சுய ஒழுங்கும், சுய ஈடுபாடும் இருந்தால் இவ்வுலகில் சாதிக்க இன்னும் எவ்வளவோ இயலும் என்பதை உணர்ந்து, அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டில் நமது பணியைப் புதுப்பொலிவுடன் தொடரச் சூளுரை ஏற்போமாக!



# பஞ்சாபி சங்கம்



சென்னை பீட்டர்ஸ் சாலை வழியாகச் செல்பவர்களுக்கு அமரர் ''பஞ்சாப் சிங்கம்'' லாலா லஜபதிராய் நினைவுக் கட்டடத்தில் சந்தடியின்றி மகத்தான தொண்டு புரியும் பஞ்சாபி சங்கம் நினைவுக்கு வராமல் போகாது.

42 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் குடிபுகுந்த பஞ்சாபியர்களில் ஒரு சிலரின் சேவா உணர்ச்சியே இச் சங்கம் உருவாக உதவியது. சாதி, மதம், மொழிப் பிராந்திய வேற்றுமையின்றி இலாப நோக்கம் பாராமல் ஏழை மக்களிடையே கல்வியைப் பரப்புவது தான் சங்கத்தின் முதல் குறிக்கோளாக இருந்தது. காலப் போக்கில் சமூக, மருத்துவ, கலாசாரத்துறைகளில் அது கவனம் செலுத்தி வரலாயிற்று.

இன்று நகரிலும் அதன் அருகிலும் சுமார் 37 நிறுவனங்கள் சங்கத்தின் ஆதரவில் இயங்கி வருகின்றன. முதலில் 34 மாணவிகளுடன் துவங்கிய நர்சரிப்பள்ளி நாளடைவில் ஆதர்ச வித்தியாலயா மெட்ரிக்குலேஷன் பள்ளியாக வளர்ந்தது. இதில் தற்போது 2500 மாணவிகள் கல்வி பயில்கின்றனர்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தியாகராயநகரில் சங்கம் ஆண்களுக்கான மேல் நிலைப் பள்ளியைத் துவக்கியது.

இடம் கிடைக்காமல் தவிக்கும் மாணவ மாணவிகளின் தேவையைச் சமாளிக்க அனைத்து நாட்டுக் குழந்தைகளின் ஆண்டான இவ்வாண்டில் சுமார் 2000 மாணவிகளுக்குக் கல்வி போதிக்கக் கூடிய மெட்ரிக்குலேஷன் மேல் நிலைப் பள்ளி ஒன்று இராயப் [illegible] பாலாஜி நகரில் [illegible] 5 இலட்சம் செலவில் உருவாகி வருகிறது.

உயர் கல்வியைப் பரப்பும் நோக்கத்துடன் 1977ல் மகான் குருநானக் 500வது பிறந்த தினத்தின் நினைவாக வேளச்சேரியில் குருநானக் பெயரில் சங்க ஆதரவுடன் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலையின்றித் தவிக்கும் ஏழைப் பெண்களுக்கு (வயது 18-30) உதவச் சங்கம் அவர்களுக்கென தொழில் பயிற்சி நிலையத்தைச் சங்கம் நடத்தி வருகிறது. புகைப்படம் எடுத்தல், தையற் கலை, உடைகள் தயாரிப்பு, பின்னல் வேலை, பொம்மைத் தயாரிப்பு, அச்சுக் கோத்தல் (கம்போசிங்), பைண்டிங் போன்ற தொழில்களில் 200 பெண்கள் மாதம் ரூபாய் 15 உபகாரச் சம்பளத்துடன் இதில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி, வணிக இயல் பாட போதனை அளிக்கும் பல



தொழில் பள்ளி ஒன்றும் இயங்கி வருகிறது. பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூபாய் 15 உதவித் தொகை பெற்று வருகின்றனர்.

கணவனை இழந்த அல்லது கைவிடப்பட்ட அல்லது விவாகரத்து செய்யப்பட்ட திக்கற்ற பெண்களுக்கான மறு வாழ்வு நிலையம் ஒன்று மயிலையில் இவ்வாண்டு முதல் செயல்படுகிறது. இங்கு 40 பெண்களுக்கு இலவச உணவு, உடையுடன் அச்சுக் கோத்தல், அச்சுப்பிழை திருத்தல், புத்தக பைண்டிங், தையற் கலையில் 6 மாதக் காலப் பயிற்சி தரப்படுகிறது. பயிற்சி முடிந்த பின் இவர்களுக்குச் சங்கம் நடத்தும் அச்சுக் கூடம், உடை தயாரிப்பு நிலையம் ஆகியவற்றில் மாதம் குறைந்த பட்சம் ரூபாய் 150 ஊதியத்துடன் வேலை வசதியும் அளிக்கப்படுகிறது. பயிற்சியைப் பூர்த்தி செய்த பெண்கள் சொந்தமாகத் தொழில் நடத்த மத்திய அரசு ஒவ்வொருவருக்கும் ரூபாய் 500 வரை நிதி உதவி புரிகிறது.

ஆதரவற்ற குழந்தைகளும், பெற்றோர் பாதுகாப்பின்றித் தவிக்கும் குழந்தைகளும், வேலை செய்யும் பெண்களது குழந்தைகளும் ஆக சுமார் 45 குழந்தைகள் வளர்க்கப்படுகின்றனர். இந்தக் குழந்தைகள் பராமரிப்புக்காக வளர்ப்புப் பெற்றோர்களுக்கு மாதம் ரூ. 75 உதவித்தொகை கொடுக்கப்படுகிறது.

கல்வி, தொழில் துறைப் பணியுடன் நில்லாமல் நோய் தீர்க்கும் சேவையிலும் சங்கம் ஈடுபட்டுள்ளது. பீட்டர்ஸ் சாலையில் தர்ம சிந்தனையாளர் 'திங்கராதலிப்' பெயரில் இலவச மருத்துவ மனையைச் சங்கம் நடத்தி வருகிறது.

குழந்தைகளின் உடல் நலனைப் பேணிக்காக்கும் பொருட்டு சென்னை அருகேயுள்ள சோளிங்கநல்லூரில் குழந்தைகளுக்கான மருத்துவமனையைச் சங்கம் ஏற்படுத்தியுள்ளது.

நகரில் அரசு, தனியார் அலுவலங்களில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதியொன்றைச் சங்கம் கடந்த 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறது. இதில் 66 பெண்கள் தங்கி உள்ளனர்.

பள்ளிப் பாடப் புத்தகங்களை விலை கொடுத்து வாங்க இயலாத ஏழை மாணவ மாணவிகளுக்கு உதவ விஜயநகரம் மகாராணி வித்தியாவதி நினைவைப் போற்றும் வகையில் புத்தக வங்கியைச் சங்கம் நிறுவியுள்ளது. நகரிலுள்ள 30 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 500 ஏழை மாணவர்களுக்கு ரூபாய் 15,000 செலவில் புத்தகங்களை வழங்கி வருகிறது.

# நலிவுற்றோர் துயர் துடைக்கும்



பெருந்தலைவர் காமராஜ் முதல்வராக இருந்தபோது 1—4—1962 முதல், வயதானவர்களுக்கு ரூ. 20/- ஓய்வு ஊதியமாக வழங்கப்பட்டது. ஏறக்குறைய 17 ஆண்டுகளுக்குப்பின் தற்பொழுது இந்தத் தொகை ரூ. 25/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர இந்த ஆண்டிலிருந்து பொங்கல் மற்றும் சுதந்தரத் திருநாளில் இவர்களுக்குச் சேலைகள், வேட்டிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. இந்த வயது 1978-79-ஆம் ஆண்டு 45-ல் இருந்து 40 ஆகக் குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.





1978-79-ஆம் ஆண்டு பள்ளி செல்லும் ஏழைக் குழந்தைகளில் காது கேளாதவருக்கு ரூ. 1.20 இலட்சம் செலவில் காது கேட்கும் கருவிகள் 300 வழங்கப்பட்டன. இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டாக இருப்பதால் மேலும் 700 சேர்த்து காது கேட்கும் கருவிகள் 1,000 வழங்கப்பட இருக்கின்றன.



ரூ. 25,00,000 செலவில் 20,000 பெண்கள் வீட்டில் இருந்தவாறு கைத்தொழில்களில் ஈடுபட்டு வறுமையைப் போக்கும் திட்டம் தற்பொழுது செயல்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட கைத்தொழில்கள் அவர்களுக்குக் கற்றுத்தரப்படுகின்றன :

1. சாக்குத் துண்டு தயாரித்தல்.
2. காகித உறைகள் செய்தல்.
3. நூல் நூற்றல்.
4. தீப்பெட்டி செய்தல்.
5. பாய் பின்னுதல்.
6. மூங்கில் கூடை செய்தல்
7. பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல்.
8. பருப்பு வகைகளில் பொடிகள் தயாரித்தல்.
9. பாட நோட்டுப் புத்தகங்கள் தைத்தல்.
10. 'ஜெம்' கிளிப்புகள் தயாரித்தல்.



1978-79-ஆம் ஆண்டில் முதல் முறையாக ரூ. 12,500 செலவில் 50 ஊன்றுகோல்கள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் ரூ. 2.50 இலட்சம் செலவில் 1,000 ஊன்றுகோல்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்குக் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளில் ஒருவருக்கு இலவச பாடபுத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் 1978-79-ஆம் ஆண்டில் 3,000 குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர். 1979-80 கல்வி ஆண்டிலும் இத்திட்டம் அமலாக்கப்பட இருக்கின்றது.



1978-79-ஆம் ஆண்டில் பார்வை இழந்த 40 மகளிர் தங்கும் வசதியுடன் கூடிய பார்வையிழந்தோர் மறுவாழ்வு இல்லத்தைத் தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது. இந்த இல்லம் நடப்பு ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும்.





எல்லா மாவட்டங்களிலுள்ள விதவைகளுக்கு உதவுவதற்காக சென்னை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 4 வழிகாட்டி நிலையங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த வழிகாட்டி நிலையங்களின் மூலம் விதைவைகளின் குழந்தைகளுக்குக் கல்வி வசதி செய்தல், விடுதிகளில் சேர்த்தல் சம்பந்தமான ஆலோசனையும் அவர்களுக்குச் சேர வேண்டிய இன்சூரன்ஸ் தொகை, வருங்கால சேமநிதி போன்றவற்றினைப் பெற உதவியும் செய்யப்படுகிறது.

3,000/- ரூபாய்க்குக் குறைவாக ஆண்டு வருமானமுடைய குடும்பத்தைச் சேர்ந்த 16 முதல் 30 வயது வரையுள்ள பெண்கள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து போன்ற வேலை வாய்ப்புத் தொழில்களில் பயிற்சிபெற பயிற்சியாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150/- வீதம் 1,000 ஏழைப் பெண்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்கு 1977-78-ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 1978-79-லும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.



சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் பணிபுரியும் பெண்களுக்காக விடுதிகள் நிறுவப்படும். இதற்காகும் செலவில் 75 சதவிகிதத்தை மத்திய அரசும், 15 சதவிகிதத்தை மாநில அரசும், மீதம் 10 சதவிகிதத்தைச் சம்பந்தப்பட்ட நகராட்சியும் ஏற்கும்.



1,000 குழந்தைகள் பயனடையத் தக்க அளவில் அனாதை விடுதி நான்கு தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# நற்பணிகள்



# சிறுமலர் பள்ளி

சென்னையில் பேரறிஞர் அண்ணா மேம்பாலத்தருகிலுள்ள சிறுமலர் பள்ளி, கேள்வித்திறன், பார்வைத் திறன் குறை உள்ள மூன்று குழந்தைகளோடு 1926-ல் துவக்கப்பட்டது. இன்று 800 ஊன முற்றோர்க்கு வாழ்வளிக்கிறது.

செவித்திறன், பார்வைத்திறன் குறையுள்ள ஆண், பெண் இரு பாலரும், சாதி சமய, பொருளாதார வேறுபாடின்றிச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுமானமட்டும் சாதாரணக் குழந்தைகளுக்கான பள்ளிகளில் இணைந்து கல்வி கற்க வழிகாட்டல், சமுதாயத்தில் தன்னம்பிக்கையுடன் கலந்து வாழக் கற்பித்தல், ஊனமற்ற சமுதாயத்தோடு, சமுதாயத்தில் உழைத்து நாட்டின் நல்ல குடிமக்களாக வாழ வழிகாட்டல், பெற்றோருக்கு வழிகாட்டி, தங்கள் குழந்தைகளை உருவாக்கும் பணிகளில் தங்களால் ஆவன செய்ய ஊக்கமளித்தல் ஆகியவை இப்பள்ளியின் குறிக்கோள்கள்.

இங்கு நான்கு பகுதிகள் உள்ளன - அவை:

(1) பார்வைத்திறன் குறையுடையோர் பள்ளி பயிலும் மாணவ, மாணவியர் பிரிவு.

(2) பார்வைத்திறன் குறையுடைய பெண்களின் பயிற்சியில் நெசவுத் தொழில் பிரிவு.

(3) கேள்வித்திறன் குறையுடையோர் பள்ளி பயிலும் மாணவ மாணவியர் பிரிவு.

(4) கேள்வித்திறன், பேச்சுத் திறன் அற்ற பெண்களின் தையல் கலைக்கூடப் பிரிவு.

ஏழை மாணவருக்கான தனி இல்லமும் தமிழக அரசு உதவியுடன் இயங்கி வருகிறது.

உடனுக்குடன் அவசரச் சிகிச்சை அளிக்கவும், நோயுற்ற குழந்தைகளுக்குத் தக்க சிகிச்சையளிக்கவும் பயிற்சி பெற்ற இரண்டு செவிலியர் கொண்ட மருந்தகமும் இங்கு உள்ளது.

பள்ளிப்படிப்போடு, சாதாரணக் குழந்தைகளைப்போலவே, சாரணர் படை, குருளையர் கூட்டம் போன்றவற்றிலும் இவர்கள் பங்கேற்கின்றனர்.

**பார்வைத்திறன் குறையுடையோர் பள்ளி**

ஐந்தாம் வகுப்பு வரை மாணவரும், மாணவியரும் கல்வி கற்பிக்கப்படுகின்றனர். 5-ஆம்வகுப்பு முடிந்தபின் மாணவர் அடையாறிலுள்ள புனித லூயிஸ் பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். பெண்கள் மட்டுமே மேல்படிப்பைத் தொடர்கின்றனர். 1973 முதல் உயர்நிலைப் பள்ளியாக்கப்பட்டு 1975 முதல் அரசினர் தேர்வுக்கு மாணவிகள் அனுப்பப்படுகின்றனர். இதுவரை ஆண்டுதோறும் 100 விழுக்காடு வெற்றியேபெற்று வந்துள்ளது

நெசவுத்தொழில் செய்யும் பெண்களைத்தவிர, நெசவுத் தேர்வுக்குப் பயிற்சி பெறும் பெண்களும் உள்ளனர். கூடை முடைதல், தையல் இயந்திரத்தில் சாதாரணத் தையல் தைக்கவும், ஒரு சிலர் பயிற்சி பெறுகின்றனர். தட்டெழுத்து, பாட்டு இயற்றுதல், பாட்டுக் கருவிகளை இயக்குதல் போன்றவற்றிலும் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

**கேள்வித்திறன் குறையுடையோர் பள்ளி**

தமிழக சமூக நலத்துறை பரிந்துரை செய்ததால் மத்திய அரசின் வழியாகப் பெற்ற 'ஆடியோ மீட்டர்' என்ற கருவியின் மூலம் அதற்கென அமைக்கப்பட்ட அறையில் சோதனை செய்த பின்னரே குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இப்பள்ளியில் எல்லா ஆசிரியைகளுமே சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள்;

**அட்டைப்பட விளக்கம்**

**சிறுமலர் பள்ளியின் (LITTLE FLOWER CONVENT) தொழில் நுட்பப் பிரிவை மாண்புமிகு முதல்வர் பார்வையிடுதல். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் உடன் உள்ளார் (21.9.77).**

தமிழ்நாட்டிலே இப்போது இத்தகைய பெண்களுக்கான உயர்நிலைப்பள்ளி இது ஒன்றுதான்.

1970 முதல், தமிழக அரசின் சிறப்பு ஆணையின்படி அரசினர் தட்டெழுத்துத் தேர்வுக்கும் அனுப்பப்படுகின்றனர்.

1951-லிருந்தே அரசின் விருப்பத்திற்கிணங்க இப்பள்ளியில் அரசின் சான்றிதழ் பெறத்தக்க ஆசிரியர் பயிற்சி நடைபெறுகிறது.

**படிப்பை முடித்த பெண்களுக்கு வழிகாட்டும் இல்லம் (Guidance Home for Adult Deaf Girls):**

இப்பள்ளியை ஒட்டியுள்ள தையல் கலைக்கூடத்தில் 110 பெண்கள் தம் கைத்திறன்கொண்டு அழகிய பூத்தையல்கள் தைத்து, வருவாயைக்கொண்டு தம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சிற்றுண்டிச் சாலைகள் உள்ளன. சமூக நலத்துறைக் கட்டடம் அருகிலும், அரசுப் பணியாளர் தேர்வுக்குழுக் கட்டடத்திலும், பல்கலைக்கழகத் தேர்வுக் கூடத்திலும் மூன்று சிற்றுண்டிச் சாலைகள் உள்ளன. இவர்கள் தாங்களே நடத்தி வருவாயைத் தங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்கின்றனர்.

1979 மார்ச்சில் தமிழக சமூக நலத்துறை பரிந்துரை செய்ததன் பேரில் மத்திய அரசின் 90% மான்யம் பெற்று பள்ளியிலேயே ஒரு உழைப்பாலயம் உருவாகியது. இதில் பள்ளி மாணவர், மாணவியர்கள் தையல், தட்டெழுத்து, சித்திரம், இசை இவற்றில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். ஏப்ரல் '79 முதல் செருப்பு லேஸில் பயிற்சி பெறுபவர்களும் வருவாய் ஈட்டுபவர்களுமாக 37 பேரும் இங்கு உள்ளனர்.

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு சமூகநலத்துறை, கேள்வித்திறன் துணைக்கருவியை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இப்பள்ளி ஏழைக் குழந்தைகளும் உதவி பெற்று ஒலியைக் கேட்டு இன்புறுகின்றனர். 1978-'79ல் ஏழைக் குழந்தைகள் விடுதிக்கான உதவித் தொகையை 18 பேரும், மேல் வகுப்பு மாணவிகள் படிப்பு உதவித்தொகையை 4 பேரும் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# "தென்னகம் நோக்கி..."

தென் இந்தியாவில் சுற்றுலாவை மேம்படுத்தி வளர்த்திட 'தென்னகம் நோக்கி' என்ற திட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி, 30 சுற்றுலா எழுத்தாளர்கள், 6-10-79 முதல் 16-10-79 வரை தமிழக அரசின் விருந்தினர்களாக தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்தார்கள்.



ஆதரவற்ற முதியோர்க்கு ஆடை வழங்குதல்

உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வு.

மகளிர்க்கு வேலை வாய்ப்பு

சத்துணவுத் திட்டம்

குழந்தைகள் காப்பகம்

# தமிழரசு

1-12-1979 50காசு

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொன்விழா சிறப்பிதழ்



FOR STRENGTH & DURABILITY
CHETTINAD BRAND
PORTLAND/POZZOLANA CEMENT
Manufactured by:
CHETTINAD CEMENT CORPORATION LIMITED
"Catholic Centre",
64. Armenian Street,
Madras-600 001.
Factory:
"Kumararajah Muthiah Nagar"
Puliyur (Karur) Trichy District
Branches at:
Bombay, Bangalore, Calcutta and
Ernakulam.

# அரசன் அண்ணாமலை



—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

வயலும் ஏரும் மழையும் எருவும்
இருந்தும் என்ன செய்வேன் என்னுமோர்
ஏழைக்கு விதைநெல் ஈந்தான் போல
அரசன் அண் ணாமலை திருநாட் டுக்குப்
பண்டைப் பெருமையும் பதியும் நிதியும்
இருந்தும் வருந்தும் நிலைமை எண்ணி
அறிவின் ஊற்றுத் திறந்தான் அப்பெரு
நிறுவனம் வெல்க நீடுவா ழியவே
அண்ணா மலைபுகழ் விண்ணென விரிக
அன்னோன் மக்களும் சுற்றமும் மற்றும்
கழகம் காக்கும் கணக்கா யர்களும்
வழுவிலா தென்றும் மாணவர் தரமும்
எழிலுறு சீபி இராம சாமியும்
வாழிய பழந்தமிழ் நாடு
வாழிய வாழிய வண்தமிழ் நன்றே



[1955-ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழாவின்போது புரட்சிக் கவிஞர் பாடியது]



# இந்த நல்ல நாளில்...

1920-இல் சிதம்பரத்தில் மீனாட்சிக் கல்லூரியையும் அதைத் தொடர்ந்து மீனாட்சி தமிழ்க் கல்லூரி, மீனாட்சி வடமொழிக் கல்லூரி, மீனாட்சி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, இசைக் கல்லூரி முதலிய பல கல்லூரிகளை என் தகப்பனார் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தொடங்கினார்கள். 1929-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப் பெற்றது.

மகாகனம் சீனிவாச சாஸ்திரியார், சர் சாமுவேல் அரங்கநாதன், சர் கே. வி. ரெட்டி, பேராசிரியர் எம். இரத்தினசாமி, சர் ஆர். கே. சண்முகம் செட்டியார், சர் சி. பி. இராமசாமி அய்யர், திரு டி. எம். நாராயணசாமிப் பிள்ளை போன்ற பேரறிஞர்கள் துணைவேந்தர்களாக இருந்து இந்தப் பல்கலைக் கழகம் பெரு வளர்ச்சியடையப் பாடுபட்டிருக்கிறார்கள்.

இப்போது துணைவேந்தராக இருந்துவரும் திரு. பி. எஸ். சோமசுந்தரம் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்து புகழ் பெற்றவர்கள்; தமிழ்ப் பண்பாட்டின் சின்னமாக விளங்குபவர்கள். இவர்களுடைய பதவிக் காலத்தில் சட்டக் கல்லூரியும், அஞ்சல் வழிக் கல்வித்துறையும் ஏற்பட்டிருக்கின்றன. மருத்துவக் கல்வித்துறையும் தொடங்க ஏற்பாடுகள் செய்து இந்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகியோரின் இசைவு பெறப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் துணைவேந்தர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள்.

ஆரம்பம் முதல் ஒவ்வொரு துறையிலும் சிறந்த மேதைகள், இங்கு பேராசிரியர்களாக இருந்திருக்கிறார்கள். மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள், மகாமகோபாத்தியாய தண்டபாணிசாமி தீட்சிதர் அவர்கள் - ஏராளமான பெயர்கள் ஒவ்வொரு துறையிலும் பணியாற்றியது இந்த நல்ல நாளில் என் நினைவுக்கு வருகிறது.

இந்திய அரசாங்கமும் தமிழ்நாடு அரசாங்கமும் பல்கலைக் கழக மானியக் குழுவும் இந்த ஐம்பது ஆண்டுகளாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியில் அக்கறை காட்டி அவ்வப்போது ஆவன அனைத்தும் செய்து வந்திருப்பதற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டு மக்களும் பல்கலைக் கழகத்தின் முன்னாள் மாணவர்களும் தந்துவரும் ஆதரவு மிகவும் பாராட்டத்தக்கது. தொடர்ந்து இந்த ஆதரவு பெருகி, பல்கலைக்கழகம் இன்னும் பல மடங்கு வளர்ச்சி பெறும் என்று நம்புகிறேன்.

இப்போது பல்கலைக் கழகத்தில் உள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆட்சித் துறையில் பணி புரிந்து வருபவர்களுக்கும் பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொண்டுள்ள தமிழ்நாடு மக்கள் அனைவருக்கும் இந்தப் பொன் விழா நாளில் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



# புனிதப் பணியில் ஈடுபட வாரீர்!

## பேரறிஞர் அண்ணா

தமிழரசு 1.12.1979 மலர்:10 இதழ்:11

*(18.11.1967-ல் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரையின் சுருக்கம்.)*

"சமுதாயத்திற்குச் சேவை புரியும் உன்னதமான கடமைக்கு உங்களது உதவியையும் ஒத்துழைப்பையும் நான் விரும்பி வேண்டுகிறேன். இத்தருணத்தில் நீங்கள் கேலிப் புன்னகை புரிந்து கண்சிமிட்டி ''சொல்வது யார்க்கும் எளிது'' என்று தயவுசெய்து கூறிவிட வேண்டாம்.

உங்களது வாழ்க்கை வழித்தடத்திலுள்ள இன்னல்களை நான் அறியாதவனல்ல!

உங்கள் மீதுள்ள சுற்றுச் சார்பின் அழுத்தத்தையும் செல்வாக்கையும், 'இல்லை' என்று ஒதுக்கித் தள்ளி விடுபவனும் அல்லன் நான்.

எந்த உலகத்தில் உங்களது வாழ்க்கைப் பயணத்தைத் துவக்க இருக்கிறீர்களோ-அந்த உலகம் உங்களுடைய நம்பிக்கை ஒளியைக் குன்றச்செய்யலாம். உங்கள் உறுதியை உருக்குலைக்கும் தன்மையில் இருக்கலாம்.

உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் உங்கள் இதயம் படிந்த கொள்கை கோட்பாடுகளுக்கு முற்றிலும் எதிரான பழக்க வழக்கங்களை நேருக்குநேர் சந்திக்க வேண்டிவரும்.

எல்லாவகைக் கொடுங்கோன்மையும் உங்கள்மீது மிரட்டு விழிப் பார்வை செலுத்தலாம்.

அந்தப் பயணத்தில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியும் ஒவ்வொரு போராட்டமாக இருக்கலாம்.

நேர்மைக்குணம் படைத்த நிறை நோக்கர்களையும்கூட உற்சாகம் குன்ற வைத்து, சுலபமும் வசதியுமிக்க குறுக்கு வழியைத் தேர்ந்தெடுக்குமாறு பலவந்தப்படுத்தும் வலிமை மிக்கது இந்தச் சமூகச் சூழ்நிலை என்பதை, நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நாம் ஒன்றை உணரவேண்டும். சமூகத்திற்குப் பணியாற்றும் உள்ளுணர்வு மிக்க ஆடவர்-பெண்டிர் உள்ளடங்கிய அருவியோட்டம் போன்ற தொடர்பான திருக்கூட்டம் இருந்து வருகிறது. அது இந்தப் புனிதப் பணியை வெற்றிகரமாக நடத்துகிறது. மனித சமுதாயத்திற்கு வளமிக்க பலனைத் தந்திருக்கிறது.

சமூகப்பணி என்னும் இந்தத் தத்துவத்தை தமிழர்களாகிய நாம் உச்சிமேல் வைத்து மெச்சத்தகும் வகையில் கடைப்பிடித்துப் பாராட்டியிருக்கிறோம்.

புறநானூற்றில் அந்தக் கருத்தைக் காண்கிறோம்.

**உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும் இனிதுஎனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவிலர்**
**துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்**
**அன்ன மாட்சி அனைய ராகித்**
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே!**

நல்லது செய்ய நினைத்திடும் யாரும்-தங்கள் பாதையில் தடைப்படும் கற்களை மக்களில் சிலர் நீக்கியுதவுவார்கள் என்று எதிர்பார்க்கக்கூடாது.

அந்த தடைக் கற்களோடு மேலும் சில கற்களை உருட்டிவிட்டாலுங்கூட மிகுந்த பொறுமையாய் இருந்திடல் வேண்டும்.

''தடைகளைச் சந்தித்துப் பெறும் அனுபவம் மூலமாகவே தமது வலிமை தெளி

யில் இட்டுச் செல்வதாக இருக்கவேண்டு மென்று மக்கள் நினைக்கிறார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்ட தாரிகளே! ஜனநாயகத்தோடு ஒட்டி வாழ முடியாத சாதி முறையை எதிர்த்துப்போர் தொடுத்திடுங்கள் என நான் உங்களை அழைக் கிறேன். விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழ முடியாத மூடப் பழக்க வழக்கங்களுக்கு எதிராகவும் சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத் துவம் ஆகியவற்றோடு ஒட்டி வாழ முடியாத பல்வேறு கோணங்களில் அமைந்த கொடுமை களுக்கெதிராகவும் போர்தொடுத்திடுமாறு உங்களை நான் அழைக்கிறேன்.

நமது காலத்திலுள்ள வினோதமான இன்னொரு உண்மை-நாம் இப்போது ஒரு நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது.

ஒருமைப்பாடு ஏற்பட வேண்டும் என நினைப்பவர்களுக்கு உள்ளபடியே அந்தக் கருத்தில் ஆர்வம் இருக்கிறது என்றால், அந்தக் கருத்தைத் தெளிவாக இங்கு எடுத் துரைக்க வேண்டும்.

ஒற்றுமைக்கும் ஒரே தன்மைக்குமுள்ள வேறுபாடு புரியாது சிலர் குழப்பிக் கொள் கிறார்கள்

ஒற்றுமை என்ற பெயரில் நாட்டின் ஒரு பகுதி மற்றொரு பகுதியின் அடிமைப் பண்ணையாக மாறுவதற்குத் தெரிந்தோ-தெரியாமலோ அனுமதிக்கக்கூடாது.

எவ்வளவுதான் உயர்ந்த இலட்சியமாக இருந்தாலும் நாம் அதற்காக தவறான செயல்முறையைப் பின்பற்றுவோரில் ஒருவ ராக இருக்க முடியாது.

சுதந்திர நாளின்போது இராஜாஜி அவர்கள் தமக்கேயுரிய நுண்மான் நுழை புலத்துடன் கூறினார்கள்:

''நமது நாட்டின் அரசியல் அனுபவம்-இரும்பையும் உலோகங்களையும் உருக்கி வார்ப்படத்தில் வார்த்து தேய்மானத்திற்கு அஞ்சாத உருக்கு செய்வது போன்றதாகும்.

''இது சில நாடுகளில் உருவாகியுள்ள சைனா பீங்கான் போன்றதல்ல. அந்த நாட்டி னரின் ஜனநாயகமெல்லாம் பிளாஸ்டிக் செய்வதுபோல் எளிதில் செய்துவிடக்கூடியது. ஆனால் நமக்கு இங்கே ஈடுபாடு - உலோகங் களிடம்''

தேசிய ஒருமைப்பாடு என்பது நல்ல குறிக் கோள்; மதிக்கத்தக்கது. எனினும், அதற் காக மொழித் துறையிலோ - பொருளாதாரத் துறையிலோ அநீதியையும், ஆதிக்கத்தையும் சகித்துக் கொள்ள முடியுமா?

சகித்துக் கொள்ள முடியாது என்பதற் காகத்தான் இந்த (தமிழக) அரசாங்கமே ஏற்பட்டிருக்கிறது.

இந்தியை ஆட்சி மொழியாக ஏற்கக் கட்டாயப் படுத்துவதற்கு எதிரான மக்களின் வலிவுமிக்க உறுதிப்பாட்டையே இந்தத் தமி ழக அரசு பிரதிபலிக்கிறது.

நாம் ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டுவதைச் சிலர் தவறாகவும் திரித்தும் கூறுகிறார்கள்.

நிலைக்க முடியாத வாதங்களையும் விவாதத்திற்குரிய புள்ளி விவரங்களையும் காட்டி அவர்கள் வீராப்பு பேசியபடி மிரட்டல் கள்-ராணுவம் ஆகியவற்றின் மூலம் மக்களை மௌனமாக்க முயல்கின்றனர்.

பிரச்சினைகளை ஆதிபத்ய முறைகளில் எப்போதும் தீர்க்க முடியாது. குறிப்பாக இந்த மொழிப் பிரச்சினை நமது வாழ்க்கை வழியுடன் நிகழ்காலத்திலும் எதிர் காலத் திலும் நெருக்கமாக இணைத்துள்ளதாகும்.

தமிழக அரசாங்கம், தவறும் தடுமாற்றமும் இல்லாத சொற்கள் மூலம் விளக்கியுள்ளது.

தமிழும் ஆங்கிலமும் நமது எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும்.

தமிழ், இந்த மாநிலத்தின் ஆட்சி மொழி யாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருக்க வேண்டும்.

ஆங்கிலம் நமது நாட்டிற்கும் உலகின் பிற நாடுகளுக்குமிடையே இணைப்பு ஏற் படுத்தப் பணிபுரியும் என்று இந்தி ஆதர வாளர்கள் கூட ஒப்புக்கொள்கிறார்கள்.

அதை அவர்கள் ஒப்புக்கொள்வார்களா னால் இங்கு இணைப்பு ஏற்படுத்த இந்தி இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்று ஏன் கேட்கிறார்கள்?

வெளிநாட்டினருடன் இணைப்புக் கொள்ள எந்த மொழி பணியாற்றுகிறதோ-அதே மொழி அதே இணைப்புப் பணியை இந்தியாவுக்குள்ளும் செய்யும் ஆற்றல் பெற் றிருக்கிறது.

இரு இணைப்பு மொழிகள் தேவை என்று கூறுவது பெரிய பூனை செல்வதற்கு பெரிய வழி சுவரில் இருக்கும்போது பூனைக் குட்டி செல்ல இன்னொரு வழி செய்ய வேண்டும் என்பதற்கு ஒப்பானதாகும். பூனைக்கு என்ன வழியோ அதுவே பூனைக் குட்டிக்கும் வழியாகும்.

ஆங்கிலம் அன்னியநாட்டு மொழி என்று சிலர் வாதிடுகிறார்கள்.





# அண்ணாமலைப் பல்கலைக் கழகம்- சில விவரங்கள்

1929-ஆம் ஆண்டில் இந்தியாவின் பதினான்காவது பல்கலைக் கழகமாகத் தொடங்கப்பட்டது அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

* * *

1929 முதல் 1979 முடிய அண்ணா மலைப் பல்கலைக் கழகத்தில் 319 பேருக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

* * *

இப் பல்கலைக் கழகத்தில் இதுவரை 8,822 பேர்கள் முதுகலைப் (Postgraduates) பட்டம் பெற்றுள்ளார்கள்.

* * * *

இளங்கலைப் (Bachelor's degree)பட்டம் பெற்றோரின் எண்ணிக்கை 23,873 ஆகும்.

* * * *

டிப்ளோமா மற்றும் அது போன்ற சான்றிதழ் பெற்றவர்கள் 3,401 பேர் ஆவார் கள்.

உள்ளபடியே (இலக்கியநோக்கில்) ஷெல்லி-பைரன் - கீட்ஸ்-கால்ரிட்ஜ் - எமர்சன்-பேகன் ஆகியோர் நமக்கு அன்னியர்களா? திருவள்ளுவர் வெறும் தமிழர் மட்டுமா? அவர்கள் எல்லாம் உலகக்குடி மக்கள்! உலகப் பேராசிரியர்கள்!

அவர்களது எண்ணங்களை மிளிரச் செய்யும் மொழிகள் வேறு நாட்டிலிருந்து வருகிறது என்பதால் தள்ளிவிடக்கூடியவை அல்ல.

எனினும், தமிழ் மொழியை கல்லூரிப் பாடமொழியாக ஆக்கத் தேவையான கவ னத்துடன் படிப்படியாகச் செய்யும் கொள்-கையை ஏற்று செயல்படுத்துவதால், ஆங்கிலத் திற்குத் தமிழைவிட உயர்ந்த இடம் தந்து விடமாட்டோம்....

...சாதாரண மனிதனை-கீழ்த்தட்டு மனி தனை உயர்த்தும் பணியில் நாம் எங்கிருந் தாலும் ஈடுபட வேண்டும். அந்த மனிதன் தான் இந்த நாட்டின்-பிற நாடுகளின் முது கெலும்பாய் இருப்பவன். அந்த மனிதனின் ஓவியத்தை உங்கள் முன் சமர்ப்பிக்க விரும்பு கிறேன். அவன் நம்புதற்கு முடியாத நிலை யில் வாழ்பவன். ஆனால் மனிதகுலத்தின் மூன்றில் இரண்டு பகுதியாய் இருப்பவன். குடிசையில் அவன் வாழ்கிறான். அவனால் எழுதவோ படிக்கவோ முடியாது. அவனது சக்தி நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவன் ஒரு நாளைக்கு 15 மணி நேரம் வேலை செய்கிறான். அவனும் அவனது குடும்பமும் வழக்கமாகப் பசியுட னிருக்கிறது. இளைய வயதிலேயே அவன் இறந்து விடுகிறான். ஆனாலும், அவன் தனது குழந்தைகளைப் பற்றி நம்பிக்கை கொண் டிருக்கிறான். அவர்கள் வலிமையுடனும் உடல் உறுதியுடனும் இருக்க விரும்புகிறான். அவன் எழுதப் படிக்கத் தெரிந்தவனாக இருக்க விரும்புகிறான். சமாதான உலகில் தனி மனித உரிமையுடன் இருக்கவேண்டும் என்று விரும்புகிறான் - இத்தகையவன் தான் (கீழ்த் தட்டில் உள்ள) சாமான்ய மனிதன்.

இந்த மனிதன் தனக்கு இழைக்கப்படும் அநீதியை உணர்ந்து கொள்ளத் துவங்கி விட்டான். அதன் விளைவாகக் கிளர்ச்சி களும், மோதல்களும் ஏற்படுகின்றன.

உறுதி எடுத்துக் கொள்ளுங்கள் - நாம் பின்தங்கப் போவதில்லை. நமது சாமான்ய மனிதனை இடர்ப்பாடான நிலையில் விட்டுச் செல்லப்போவதில்லை.

கண்ணியமிக்க பரம்பரையின் வழித் தோன்றல்களாகிய நீங்கள்தான் இந்த உன்னதமான பணிக்கு மிகவும் பொருத்தமான -வர்கள். இந்தப் புணியில் நீங்கள் காணும் வெற்றியில்தான், இந்த நாட்டின் எதிர் காலமே இருக்கிறது.

அடிப்படை பலவீனமாயிருந்தால்-மகுடமும் இருளில் வீழும்.

புன்னகை பூக்கும் நிலம்நோக்கும் ஏழை மனிதனை - குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை - தனது குழந்தைகளின் எதிர் காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற் றும் புனிதப் பணியில் ஈடுபட வாரீர்!

**பின்பக்க அட்டையில்...**

**அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்ச்சியில் பேரறிஞர் அண்ணா பங்கு பெற்றபோது எடுத்த படம்.**

வாகும்; மேலும் பலப்படும். பிறகு அந்த வலிமையே தடைகளை வெல்லும் திறனாய் மாறும்'' என்கிறார் அறிஞர் ஆல்பர்ட் சுவிட்சைர்.

பல்வேறு நாடுகளிலுள்ள பிரச்சினைகள் ஒரேமாதிரியான இயல்புடையவை எனினும் நமது நாட்டின் பிரச்னைகளில் வினோதப் பண்பு நேர்ந்திருப்பதோடு தனித் தன்மையும் இருக்கும்!

எங்கோ ஏற்பட்ட கீறல்களிலிருந்து சிக்கல் எழுவது போன்ற தன்மை வாய்ந்த தல்ல நமது பிரச்சினை. அவ்விதம் இருக்குமாயின், அந்தப் பிரச்னையின் தீர்வுக்கு ஆழ்ந்த கவனிப்பு மட்டும் போதுமானது.

ஆனால் நமது பிரச்சினைகள் இதயத்தில் ஏற்படும் மண் அரிப்பு போன்ற செயலால் ஏற்படுவது.

நமது பணிக்கு வயல்களைத் தேடிப் போகவேண்டிய அவசியமில்லை. அதைவிடக் கடுமையான பணியில் ஈடுபட்டிருக்கின்றோம். இருக்கின்ற தத்துவங்களை வகைப்படுத்தி - தொகைப்படுத்தி - தணிக்கைப் படுத்தும் நிலையில் இருக்கிறோம்.

கலாச்சாரத்தை நாம் வேண்டி நிற்கும் நிலையில் இல்லை. இருக்கிற கலாச்சாரத்தில் காலம் ஏற்படுத்திய சிலந்திக் கூடுகளை அகற்றி-கலந்துவிட்ட கலப்படங்களை நீக்கும் பணியில் நிற்கிறோம்.

சுருங்கச் சொன்னால், நாம் நம்மையே கண்டு கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம். நமது சிந்தனைக் கட்டடத்தை மீண்டும் சீர்திருத்திக் கட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

கண்ணியமிக்க எல்லாவற்றிற்கும் நாம் ஒரு காலத்தில் காவலர்களாக இருந்தோம். ஆனால் அழிவின் கிருமிகள் பல்கிப் பெருகிட அனுமதித்தோம்!

இன்று நமக்குள்ள பணி தூய காற்றையும் உதய சூரியனின் ஒளியையும் அனுமதித்து, நமது உண்மையான பழைய உருவையும் பொலிவையும் அடைய வேண்டும் என்பதே. அத்தகைய பொலிவு மிக்க உருவந்தான் உலகின் நெடுந்தூர நாடுகளிலும் நிலப் பரப்புகளிலும் நமது புகழைப் பரப்பியது.

நமது இலக்கியமும், கலையும், சிற்பமும் மன்பதை அறிவின் சிறந்த சின்னங்களாய்த் திகழ்கின்றன. ஆனால் அவை இன்று காலம் ஆடிய சூறையாடல்களின் தழும்புகளை ஏற்று நிற்கின்றன. ஆகவேதான் நமது அருமை பெருமைகளைப்பற்றி வெளிநாட்டு சரித்திர ஆசிரியர்களிடம் கேட்கவேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளே! உங்களுடைய—உங்கள் குடும்பங்களுடைய நன்னிலைக்குப் பாடுபடுவதோடு, சமூகத்திற்கான பணியையும் நீங்கள் செய்ய வேண்டியிருக்கிறது.

பகுத்தறிவு வாதத்தின் ஒளிவிளக்கை ஏற்றிப் பிடிப்பவர்களாக நீங்கள் பணிபுரிய வேண்டியிருக்கிறது.

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை-நெறிகளை - மறுப்பது என்பது அல்ல. போலித்தனமான எண்ணத்தையும் செயலையும் அழித்தொழிப்பதுதான் பகுத்தறிவு வாதம்.

முனைப்புடனும்-உறுதியுடனும் நீங்கள் உழைக்க வேண்டும். ஏனெனில் நாம் பல நூற்றாண்டுகளாய் கப்பிவிட்ட சிலந்திக் காடுகளை அகற்ற வேண்டும்; காரண - காரிய செயல்முறை உயர்ந்த நிலையிலிருந்து ஆட்சி புரிய வைக்க வேண்டும்.

நமது நாகரிகமும் பண்பாடும் தொன்மை வாய்ந்தவை. அதில் தொய்வு உண்டாகச் செய்துவிட்டோம். காலத்தால் அதில் வடுக்கள் தோன்றிவிட்டன. அவற்றை நோக்கி நம்முடைய பண்பாட்டையும் நாகரீகத்தையும் மீண்டும் நிலை நாட்டுவதோடு மற்றைய நாட்டாரின் சாதனைகளிலிருந்தும் நாம் கற்றறிய வேண்டும்.

அறிவின் எந்தவொரு துறையாயினும் நமக்கென்று ஒரு முறை இல்லாமல் இல்லை. அற்புதமான உதாரணங்களாகத் திகழும் சான்றுகள் நமக்குண்டு; எனவே நம்முடைய வாழ்க்கை முறைகள் அழியாதவை; அமரத்துவமுள்ளவை என்று நாம் கொண்டாடலாம்.

ஆயினும் அந்த முறைகளை இளமை குன்றாது பசுமையோடு தீவிரத் தன்மையோடு கூடியதாக வைத்திருக்க நாம் தவறிவிட்டோம். அவை சீரழிய நாம் இடமளித்து விட்டோம்.

''ஒரு வாழ்க்கை முறை நிலைக்க வேண்டுமானால் என்றென்றும் இளமை குன்றாததாகவும் மாறுதலை ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருக்கவேண்டு''மென்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

அதாவது புதிய கருத்துக்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய இளம் இதயத்தைப்போல் பசுமையானதாக விளங்க வேண்டும்.

ஈவோஸ் என்னும் தேவதை ''ஆண்டவனே என் காதலனுக்கு அமரத்துவம் கொடு' என்று இறைவனை வேண்டினாள். சாகா வரப் பெற்ற அவள் காதலன் முதுமையடைந்தான் அந்த முதுமையினால் தளர்வுற்று முடக்கமுற்றான். எல்லோரும் அவனைக் கண்டு வெறுத்தனர். சிலர் வருந்தினர். அமரத்துவம் பெற்ற இவன் இறக்கமாட்டோமா என்று இறைஞ்சினான்.

தேவதை ஈவோஸ் பெருமூச்செறிந்து ''இறைவா! என் காதலனுக்கு நீங்கா இளமை கேட்டுப் பெறவேண்டிய நான் அதை மறந்து அமரத்துவம் வேண்டினேனே'' என்று வருந்தினாள்.

இந்த நாட்டில் வாழ்கின்ற நாம் அத்தகைய நிலைமையில்தான் இருக்கிறோம். நம்முடைய நாகரிகம் பண்பாடு ஆகியவற்றுக்குப் புத்துயிரும் புதுப்பொலிவும் ஊட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நெடுங்காலமாகப் பழைய முறைகளிலேயே ஊறி அவற்றைத் தாங்கி நின்று அவற்றுக்கெதிரான வாதங்களுக்கு எதிர்ப்புக் கூறிக் காலக்கைக் கழித்திருக்கிறோம்.



அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனர் பிறந்தநாள் விழாவில் தந்தை பெரியார் (30-9-1960)

இதே காலத்தில் உலகத்தின் ஏனைய நாட்டவரெல்லாம் உண்மையை நாடிப் பொறுமையோடு தங்களது இடைவிடா சோதனை மூலம் பல புதிய முடிவுகளை எய்தி புதிய உயர்வுகளை அடைந்துள்ளனர்.

நாமோ பண்டைப் பழம் பெருமையினிடத்தில்-இடிந்து கிடக்கும் கோட்டைக் கொத்தளங்கள் ஓரத்தில் - அமர்ந்திருப்பதிலேயே திருப்தி கொள்கிறோம். நமக்கென்று வாய்த்த சமய, சாத்திரமெல்லாம் வெறும் சடங்குகள் என்கிற நிலைக்குச் சீரழிந்துவிட்டன. வர்க்க பேதமற்ற சமுதாயமாக இருந்த நமது சமுதாயம் இன்று சாதி-இன-வேறுபாடுகளால் கூனிக் குறுகி சிறு சிறு அமைப்புகளாகக் கட்டப் பெற்றுள்ளது.

மூடப் பழக்க வழக்கங்களைக் காணுமிடத்தில் நம்மில் பலர் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறோம். சிலர் சாத்திரம் பேசி அவற்றைச் சமாளிக்கப் பார்க்கிறோம். இவற்றுக்கெதிரான கண்டனங்கள்-எதிர்ப்புகள் தோன்றியிருந்தும் கூட நம்மையறியாமல் நாம் இவற்றைப் பாதுகாக்கக் கூடியவர்களாக இருந்திருக்கிறோம்.

இக் கொடுந் தீமைகளை எதிர்த்துப் போராட தீரமிக்க வீரர்கள் தோன்றிய போதெல்லாம் அவர்களை உன்னதமான கருத்துக்களையும் - புனிதமான கொள்கைகளையும் ஒழிக்க வந்தவர்களென்று குறை கூறி வந்துள்ளோம்.

உள்ள வாழ்க்கை முறையைச் சீரழிய விட்டு விட்டுப் பகுத்தறிவாளர்களுக்கெதிராகக் குறை கூறுவது மென்மேலும் மூடநம்பிக்கைகள் வளரவும் இந்தச் சமுதாயம் சீரழியவுமே துணை புரிவதாகும்.

சமுதாயத்தினைச் சீரமைக்கும் பணியில் நீங்கள் ஈடுபட வேண்டும். நீண்ட காலமாகவே இப்பணி செய்யப்படாமல் உள்ளது. பல்கலைக் கழகத்தில் தேர்ச்சி பெற்று பட்டதாரிகளாகி வெளியேறுவோரை அப்பணிக்குரிய தூதுவர்களாக நான் கருதுகிறேன். பல்கலைக் கழகங்களில் சமுதாயச் சீரமைப்புக் குறித்த சிக்கலான விஷயங்களை திறந்த மனதோடு-முழுமையாகவும் விவாதிக்க வாய்ப்பிருக்கின்றது.

இப்பல்கலைக் கழகம் போன்ற அறிவாலயங்கள் மக்களை முன்னேற்றப் பாதை



மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சர்
**எஸ். டி. சோமசுந்தரம்,**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொன்விழாவினையொட்டி 1-12-79 நாளிட்ட 'தமிழரசு' இதழ் ''அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொன்விழாச் சிறப்பிதழாக'' வெளியிடயிருப்பது குறித்துப் பெரிதும் மகிழ்கிறேன். எனது இன்றைய தொண்டிற்கு முழுவதும் காரணம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்தான் என்பதை நன்றி உணர்வோடு எண்ணிப் பார்க்கிறேன். பழைய மாணவன் என்ற முறையில், எனது அறிவுலகத் தாயாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சிறப்புக்கள் கண்டு பூரிப்படைகிறேன்.

50 ஆண்டுகளுக்கு முன்பே, இந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கிய அண்ணாமலை அரசரின் முன்னோக்கும், ஆற்றலையும், கொடைத் திறனையும் வியந்து பாராட்டும் நாட்டு மக்களோடு நானும் சேர்ந்து நெஞ்சம் நிறைந்த நன்றியை அன்னாருக்கு உரிமையாக்குகிறேன்.

கல்வி அறிவோடு, சமுதாய உணர்வையும் ஊட்டி, புதுநெறி கண்ட பல்கலைக் கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். இந்த ''அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்றியிராவிடில்''-என ஒரு கணம் எண்ணிப்பார்க்கிறேன். இருண்ட தமிழகம்தான் என் முன் காட்சியளிக்கிறது. அறிவின்மை, அரசியல் தெளிவின்மை, பொருளாதாரச் சீர்கேடு —இவற்றின் கோரப்பிடிப்பிற்கு ஆளாகி, தாழ்வுற்று வறுமை மிஞ்சி, தன்னிலை தவறிக் கெட்ட தமிழகத்தின் இருள் சூழ்ந்த நிலையை மாற்றி ஒளி மிகுந்த எதிர்காலத்திற்கு இட்டுச் செல்லும் மிகப் பெரிய பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட இப்பல்கலைக் கழகத்தின் பொறுப்பாளர்களையும், பேராசிரியர்களையும் எண்ணிப் பார்த்து இறும்பூதெய்துகிறேன்.

நம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வரலாறு, தாய்த் தமிழகத்தின் வரலாற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்றாகும். தமிழகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கே உண்டு. முன்னர் போலவே. அறிவார்ந்த மொழித் தொண்டர்களையும், தியாக உணர்வுமிக்க தேசத் தலைவர்களையும், நம் பல்கலைக் கழகம் எதிர்காலத்திலும் உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.



# அண்ணாமலைப் பல்கலைக் கழக வரலாறு

**ஜஸ்டிஸ் பி. எஸ். சோமசுந்தரம்**
**துணை வேந்தர்,**
**அண்ணாமலைப் பல்கலைக் கழகம்**

தமிழ்நாட்டின் புகழ்வாய்ந்த பல்கலைக் கழகமாக விளங்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், செட்டிநாட்டு அரசர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் அளித்த தனிப்பட்ட பெருங்கொடையின் பயனாக 1929-ல் தோன்றி, 50 ஆண்டுகளாகச் சிறப்புற்றுள்ளது. இப் பல்கலைக்கழகம், தமிழ்நாட்டின் நடுப்பகுதியில், கோயில்களுக்கெல்லாம் கோயிலாக விளங்கும் தில்லைத் திருத்தலத்திற்கு அருகே உடனுறை பல்கலைக் கழகமாக அமைந்திருக்கிறது. இதை நிறுவிய கொடை வள்ளல் அண்ணாமலை அரசர் பெயரால், பல்கலை÷கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் எனவும் இப்பகுதி அண்ணாமலைநகர் எனவும் வழங்கப் பெற்று வருகின்றன. அண்ணாமலைநகர், எழில்பூத்துக்குலுங்கும் பூங்காக்களையும், மாடமாளிகைகளான கல்விக்கூடங்களையும், கவினுறும் பட்டமளிப்பு விழா மண்டபத்தையும், ஏராளமான ஆய்வுக்கூடங்களையும், அடுக்கடுக்கான மாணவர் விடுதிகளையும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. ஏறத்தாழ ஓராயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்நகர், காண்பாரைத் தன்வயப்படுத்தும் பேரெழிலுடன் காட்சியளிக்கிறது.

1920-ல் சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், சிதம்பரத்தில் மீனாட்சி கல்லூரியை நிறுவினார்கள். அதனைத் தொடர்ந்து தமிழ், வடமொழி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியையும், இசைக் கல்லூரியையும் அமைத்தார்கள்.

தலைசிறந்த ஆசிரியர்களைக் கொண்டு மிகப் பெரிய அளவில் இந்த மூன்று கல்லூரிகளும் இயங்கி, தென்னிந்தியாவெங்குமுள்ள நன்மாணாக்கர் அனைவரையும் தம்பால் ஈர்த்தன. இம்மூன்று கல்லூரிகளையும், மேற்கொண்டு முந்நூறு ஏக்கர் நிலத்தையும் இருபது இலட்சம் ரூபாயையும் அண்ணாமலை அரசர் 1928 ஆம் ஆண்டில், அன்றைய சென்னை அரசாங்கத்திற்கு வழங்கினார். அதன் பயனாக 1929-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்றுவதற்கு உரிய சட்டத்தை சென்னை அரசாங்கத்தார் நிறைவேற்றினார்கள்.

இப்போது இப்பல்கலைக்கழகம் 32 கல்வித்துறைகளைக் கொண்டு இருக்கிறது. இவை எட்டுப் புலங்களாக ( Faculties ) உள்ளன. அவையாவன: கலை, அறிவியல், இந்திய மொழிகள், பொறியியல், ஆசிரியப் பயிற்சி, நுண்கலைகள், வேளாண்மை, சட்டம் என்பன.

பொன்விழா ஆண்டில் ஒன்பதாவது பெரும் பிரிவாக மருத்துவக் கல்லூரிப்பகுதி





இங்கு தான் மீனாட்சி கல்லூரி தொடங்கப் பெற்று அதன் பின்னர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உருவாயிற்று.

தொடங்கப்பெற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பெற்றிருக்கின்றன. மாநில அரசும், இந்திய அரசும், இந்திய மருத்துவக் கழகமும் அதற்கு ஒப்புதல் கொடுத்துள்ளன.

தமிழக அரசின் முதல்வர் மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் உடற்பயிற்சியின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டி வருவதால், அதற்கெனத் தமிழக அரசில் தனித்துறையை நிறுவியுள்ளார். இப்பல் கலைக்கழகத்தில் ஏற்கெனவே உடற்பயிற்சி ஆசிரியர்களுக்குப் பட்டப்படிப்பு உள்ளது. தமிழக அரசு இங்கு ஒரு விளையாட்டரங்கு ( Gymnasium ) ஏற்படுத்த விரும்புகிறது. எனவே, உடற்பயிற்சிக் கல்விக்கெனப் பத்தாவது புலம் (Faculty) எதிர்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

கடல்வாழ் உயிரின ஆராய்ச்சித் துறையும், மொழியியல் ஆராய்ச்சித் துறையும், இந்திய நாட்டிலேயே ஈடும் இணையும் இல்லாத அளவிலும் உலகத்து அறிஞர்களெல்லாம் வியந்து புகழும் பாங்கிலும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் செயல்பட்டு வருகின்றன.

தமிழக அரசின் கொடையால் திருக்குறளுக்கு அமைந்துள்ள பேராசிரியக் கட்டில் வாயிலாக இப்பல்கலைக்கழகத்தில் அரிய ஆராய்ச்சி நூல்கள் மலர்ந்துள்ளன.

தத்துவம், உள இயல், வரலாறு, அரசியல், பொருளாதாரம், ஆங்கிலம், சமூக இயல், தொழில் நிர்வாக முறைப் படிப்பு, மக்கட்தொகை ஏற்றம் பற்றிய படிப்பு, கணிதம்-புள்ளி விவரவியல், இயற்பியல், வேதியியல், தாவரவியல், உயிரினவியல், புவியியல் துறைகளும் உள்ளன. இவற்றில் பட்ட, பட்ட மேற்படிப்புக் கல்விவரை உண்டு. தலைசிறந்த மேதைகள் இந்தத் துறைகளில் உயர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். தமிழக வரலாற்றுக்குப் புது விளக்கங்கள் கொடுத்த பெருமையும், தஞ்சைக் கோயில் ஓவியங்களை வெளிப்படுத்திய புகழும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் பிச்சாவரம் தாவரச் செல்வங்களையும் விரிந்த உலகம் அறியச்செய்த சிறப்பும் இப்பல்கலைக் கழகத்தின் வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்கன. வேதியியல்துறையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அரிய சாதனைகள் ஆற்றியுள்ளது.



பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பணிகள் குறித்துப் பல நூல்களையே எழுதலாம். தமிழ் நாட்டில் திக்குதோறும் இன்று காணப்படும் சமுதாய மறுமலர்ச்சிக்கும் தனித்தமிழ் இயக்கத்திற்கும் வித்திட்டது அண்ணாமலைப் பல்கலைக் கழகமேயாகும். வழக்கறிஞர்களாகவும், வேறு துறையாளர்களாகவும் தங்கள் வாழ்நாளெல்லாம் ஈடுபட்டிருந்த பெரும்புலவர்களை எல்லாம் தமிழ்ப் பேராசிரியர்களாக இருக்கும்படி வற்புறுத்தினார் அண்ணாமலை அரசர். அம்முயற்சியில் வெற்றியும் கண்டார்.

இந்த விளக்குகளால் அறிவு ஒளி ஏற்றப் பெற்ற பல்லாயிரம் தமிழ்ப் புலவர்களை இப் பல்கலைக்கழகம் உருவாக்கியிருக்கிறது. இன்று தமிழகம் சேமுற வேண்டுமென அவர்கள் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்து வருகின்றனர்.

சமஸ்கிருதம், இந்தி, உருது, பிரெஞ்சு ஆகிய மொழித் துறைகளும் உள்ளன.

தமிழ் இசை இயக்கம் இங்குள்ள இசைக் கல்லூரியில் தான் தோன்றிற்று எனலாம். தமிழ் இசைப் பாடல்கள் பல தொகுதிகளாக, இசைக் குறிப்புகளுடன் வெளியிடப் பெற்றுள்ளன.

கல்விப் பிரிவில் ஆசிரியர்களுக்கு முதுநிலை வரை பயிற்சி வழங்கப் பெறுகிறது.

வேளாண்மைத் துறையில் எம். எஸ். சி. நுண்கிருமிகள் பற்றிய படிப்பை இந்தியாவிலேயே முதல் முறையாகக் கற்பித்தது அண்ணாமலைப் பல்கலைக்கழகமே ஆகும். இங்குப் பயின்ற வேளாண்மைப் பட்டதாரிகள் ஏறத்தாழ ஓராயிரம் பேர் நாடெங்கும் உள்ள பல்வேறு பண்ணைகளிலும் அரசின் துறைகளிலும் பணிபுரிந்து பசுமைப் புரட்சிக்கு உறுதுணையாக உள்ளனர்.

WITH COURAGE AND FAITH

1978-ல் சட்டக் கல்லூரி ஏற்பட்டது. சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதிகள் பலர் இங்கு இடையிடையே வந்து சிறப்புச் சொற்பொழிவுகள் ஆற்றிவருவது குறிப்பிடத் தக்கது.

பொறியியல் பகுதியில் கட்டடக் கல்விக்குப் பயன்படும் இயந்திரங்கள் மற்றும் கட்டுமானக் கலை, இயந்திரப் பொறியியல், எலக்ட்ரானிக்ஸ் உள்பட மின்சாரப் பொறியியல் படிப்புக்கள் உள்ளன.

வள்ளல் அழகப்பச் செட்டியார் அவர்களின் கொடையால் ஏற்பட்டது இராசயனப் பொறியியல் துறை. இதில் பயின்றவர்கள் நாடெங்கும் உரத் தொழிற்சாலைகளிலும், மலேசியா நாட்டில் ரப்பர் நிறுவனத்திலும் சிறந்த பங்கு கொண்டு புகழ்க் கொடி நாட்டியிருக்கின்றனர்.

ஐந்து பொறியியல் துறைகளுமே இந்தியாவிலுள்ள பெரிய தொழிற்சாலைகள் பலவற்றிற்குப் பயன்மிக்க ஆலோசனைகளைக் கூறி அரும்பணி புரிந்து வருகின்றன.

அரிசி ஆலைகளை நவீனப்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சியை இந்திய அரசாங்கம் இப்பல்கலைக்கழகத்தில் நடத்தி வருகின்றது.

நெல்லிலுள்ள ஈரச் சத்தைச் சூரிய ஒளியால் ஈர்க்கப் பொறியியல் துறை ஆராய்ந்துள்ளது. சூரியனின் ஒளியைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற பன்னிரண்டுக்கு மேற்பட்ட கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

நெய்வேலியில் பணிபுரியும் பொறியியல் அலுவலர்கள் தங்கள் உற்பத்தித் திறனை மேலும் வளர்த்துக் கொள்ள உதவும் வகையில் எம். ஈ. படிப்பை இப்பல்கலைக் கழகம் நடத்தி வருகின்றது.

39 இலட்சம் ரூபாய் செலவில் ஒர் இயந்திரக் கணிப்பான் (Computer) பொருத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் மற்றொரு பகுதி முத்தையா பாலிடெக்னிக் ஆகும். இணைவேந்தர் அரசர் முத்தையா செட்டியார் அவர்கள் பெயரால் இயங்கும் இந்தத்தொழிற் கல்வி நிலையத்தில் 3 துறைகளில் டிப்ளோமா படிப்பு உள்ளது. வேளாண்மைப் பொறியியல் டிப்ளோமா, படிப்பு தொடங்கப் பெற்றுள்ளது.

அஞ்சல்வழிக் கல்வித்துறை 1979-ஆம் ஆண்டு ஏற்பட்டது. இதில் பி.ஈ.டி., பி.காம். சட்ட டிப்ளோமா படிப்புக்கள் உள்ளன. பி. ஈ.டி. படிப்புப் பயில 12,000 பேர் மனுச் செய்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. சில ஆயிரம் பேருக்கு மட்டுமே இடம் கொடுக்க முடிந்தது. இவர்களுக்குத் தொடர்வகுப்புக்கள் நடத்தப் பெறுகின்றன. அஞ்சல் வழிக் கல்வி வாயிலாக 6,900 பேர் இப்பல்கலைக்கழகத்தில் பயன்பெறுகின்றனர்.

பல்கலைக்கழகத்து நூலகம் இந்திய நாட்டிலேயே குறிப்பிடத்தக்க நூலகங்களுள் ஒன்றாக விளங்குகிறது. ஆயிரமாயிரம் சுவடிகளும், கிடைத்தற்கரிய நூல்களும் உள்ள இக் கருவூலத்தில் இவ்வாண்டு முதல் நூலகக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

450-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பல்கலைக்கழகத்தில் பணி புரிகின்றனர். பல்வேறு துறைகளுக்குச் சேர்ந்து ஆண்டுதோறும் ஒன்றரைக் கோடி ரூபாய் செலவாகிறது. வெளியீட்டுத் துறை இதுவரை 470 நூல்களை வெளியிட்டுள்ளது. ஏறத்தாழ 8,000 மாணவர்கள் உள்ளனர். இவர்களில் 5,000 பேர் உணவு விடுதிகளில் தங்கிப் படிக்கின்றனர்.

பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு ஆகியவை தவிரச் சான்றிதழ் படிப்புக்கும், இசைப் பயிற்சியால் மாலை நேரப் படிப்புக்கும், பரத நாட்டியம், நாதசுரம், தவில் ஆகியவற்றில் டிப்ளோமா படிப்புக்கும் புத்தம் புதிய துறைகள் பலவற்றில் உயர் ஆராய்ச்சிக்குப் பல மொழிப் படிப்புக்கும் இப்பல்கலைக் கழகம் வாய்ப்பு வழங்குகிறது.

இந்திய அரசும், தமிழக அரசும், பல்கலைக்கழக மானியக் குழுவும் பேரன்புடன் வழங்கும் கொடைகளால் இப்பல்கலைக் கழகம் நாளும் ஓங்கி வளர்ந்து வருகிறது.

பல்கலைக்கழகம் நிறுவிய பெருங்கொடை வள்ளலின் குடும்பத்தார் குறிப்பாகவும் சிறப்பாகவும் டாக்டர் ராஜா சர் முத்தையாச் செட்டியார் அவர்கள் தம் தந்தையார் பல்கலைக்கழகத்தைத் தொடங்கியபோது அவருக்கு உறுதுணையாக இருந்தும் அவர் மறைந்த பிறகு 1948 முதல் இணைவேந்தராக இருந்து கொண்டும் இந்த ஐம்பது ஆண்டுகளாகக் கண்ணினைக் காக்கும் இமைபோலப் பல்கலைக்கழகத்தைக் காத்து வருகிறார்கள். அவருடைய மூச்சும் பேச்சும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைப் பற்றியனவே என்று சொல்லுவது சாலப் பொருத்தம்.

மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார், திரு எம். இரத்தினசாமி, சர். ஆர். கே. சண்முகம் செட்டியார், சர் சி. பி. இராமசாமி அய்யர், திரு டி.எம். நாராயணசாமிப்பிள்ளை போன்ற பேரறிஞர்கள் துணை வேந்தர்களாக இருந்து புகழ்மணம் பரப்பினார்கள். இவர்கள் தங்கள் புகழாலும் செல்வாக்காலும் பல்கலைக் கழகத்துக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்தப் பொன்விழா ஆண்டில் துணை வேந்தராக இருப்பதை நான் பெற்ற பாக்கியமாகக் கருதுகிறேன். இணைவேந்தர் செட்டிநாட்டு அரசர் இராசா சர் முத்தையா செட்டியார் அவர்களும், அறிவில் சிறந்த ஆசிரியர்களும், நன்மாணாக்கர்களாகிய ஆயிரம் ஆயிரம் துடிப்புள்ள இளைஞர்களும், பல்

## அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
### அஞ்சல்வழிக் கல்வித்துறை

கல்லூரிக்குச் செல்ல இயலாதவர்களுக்கும் உடல்நலம் குன்றியிருப்பவர்களுக்கும், மூலை முடுக்குகளில் பின்தங்கிய பகுதிகளில் வாழ்பவர்களுக்கும், அலுவல் பார்த்து வருபவர்களுக்கும் பட்டம்பெற வாய்ப்பு நல்குவது அஞ்சல்வழிக் கல்வித்துறை ஆகும்.

இவ்வகையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஈடும் இணையும் இல்லாத பணியைச் செய்து வருவதை இந்தியாவெங்கும் உள்ளவர்கள் மகிழ்ந்து வரவேற்று வருகின்றனர். இந்தப் பொன்விழா ஆண்டில்தான் இந்தத் துறை தொடங்கப்பெற்றது. ஆசிரியர்களுக்கு பி.ஈடி. பட்டப் படிப்பும், ஏனையோர்க்கு பி.காம். பட்டப் படிப்பும், சட்டத் துறையில் (1) கம்பெனிச் சட்டம், (2) தொழிலாளர் நலச் சட்டம் ஆகியவை பற்றிய சான்றிதழ் படிப்பு ஆகியவையும் அஞ்சல்வழியாகக் கற்பிக்கப்பெறுகின்றன. அனுபவமும் திறமையும் நிறைந்த பலபேராசிரியர்களும் 10-க்கு மேற்பட்ட விரிவுரையாளர்களும் இத்துறைக்கு நியமிக்கப் பெற்றுள்ளனர்.

பி.ஈடி. படிப்புக்கு மட்டும் இவ்வாண்டில் 19,000 பேர் மனுச் செய்துகொண்டது குறிப்பிடத்தக்கது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து அஞ்சல்வழிக் கல்வி மாணவர்க்கு, உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்சி கொடுக்கத் தமிழக அரசு இசைவு தெரிவித்திருக்கிறது. இப் பல்கலைக் கழகம், மேற்கண்ட மாணவர்களுடன் நேர் தொடர்பு கொள்ளவும், அவர்களுக்கு வழி காட்டவும், அவர்களுடைய ஐயப்பாடுகளைப் போக்கவும் சென்னையிலும், நெல்லூரிலும், ஆத்தூரிலும், கோயம்புத்தூரிலும், திருக்குற்றாலத்திலும், கோவாவிலும் ஒரு முறைக்கு ஐந்து நாட்கள் வீதம் மொத்தம் ஓராண்டில் 10 நாட்களுக்கு வகுப்புகளை நடத்தி வருகின்றது. சேலம், நாகர்கோயில், திருச்சி ஆகிய இடங்களில் மேற்படி வகுப்புகளை நடத்தும் யோசனையும் உள்ளது. பி.காம்., சட்டப் படிப்பு மாணவர்க்கு 5 நாட்களுக்கு வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன.

இவ்வாண்டில் பி.காம். படிப்பிற்கு 226 பேரும், சட்டச் சான்றிதழ் படிப்பிற்கு 1,184 பேரும், பி.ஈடி. பட்டப் படிப்பிற்கு 5,472 பேரும் அஞ்சல்வழிக் கல்வித்துறையில் சேர்த்துக் கொள்ளப்பெற்றிருக்கின்றனர்.

இதுவரை எந்தப் பல்கலைக் கழகமும் வழங்காத அரிய வாய்ப்புகளை, இந்தியப் பல்கலைக்கழகக் குழுவின் ஒப்புதலுடனும், அவர்களால் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்கவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அளித்து வருகிறது. இந்திய மக்கள் அனைவருக்கும் கிடைத்துள்ள இந்த வசதியைப் பயன்படுத்தி "சாந்துணையும் கல்லாதவாறு" என்ற வள்ளுவர் குறள்படி தங்கள் தகுதிகளை அனைவரும் உயர்த்திக் கொள்வார்களாக!

கலைக் கழகத்தின் நிர்வாகப் பகுதி ஊழியர்களும், அரசாங்கத்தாரும் எனக்குத் தந்து வரும் எல்லையற்ற ஆதரவை எண்ணி நான் பெருமிதம் அடைகிறேன்.

பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்கள் உலகெங்கும் உயர் பதவிகளில் இருந்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் இப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியிலும் பொன் விழாக் கொண்டாட்டத்திலும், காட்டிய ஆர்வமும், வாரி வழங்கும் நன்கொடைகளும் பாராட்டத்தக்கன; பின்பற்றத்தக்கன.

எத்தனையோ பல்கலைக்கழகங்களுக்குத் துணைவேந்தர்களை வழங்கும் நிலையில் தொடக்கம் முதல் பெரும் புலமையும் பேராற்றலும் மிக்கவர்களை இப்பல்கலைக்கழகம் ஆசிரியர்களாகப் பெற்று மிளிர்கின்றது.

இடையிடையே அண்ணாமலை நகரில் நடைபெற்றுள்ள கல்வியாளர் மாநாடுகளும், அனைத்திந்திய விழாக்களும் மற்றும் பல நாட்டு அறிஞர்கள் கூடும் பேரவைகளும் இப் பல்கலைக்கழக மாணவர்களின் கருத்துக்களை உருவாக்கி வருகின்றன.

தமிழ் அன்னை மகிழ இப்பல்கலைக்கழகம் தன் நூற்றாண்டு விழாவை நோக்கிப் பீடு நடை போட்டு, மேன்மேலும் முன்னேற இந்தப் பொன்விழா அடிகோலுமாக!

'தில்லைப் பதியுடையான் சிற்றம்
பலம் தன்னில்
அல்லும் பகலும்நின் றாடுகின்றான்—
எல்லைக்கண்
அண்ணா மலைமன் அமைத்த கலைக்கழகம்
கண்ணாரக் கண்டு களித்து''

(கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை)



இந்திய சுதந்தரப் போராட்டத்தில் பெரும்பங்கு கொண்ட தலைவர்களை உருவாக்கிய பல்கலைக் கழகங்கள் என்று இந்திய நாட்டிலேயே குறிப்பிடத்தக்கவை காசி இந்து பல்கலைக் கழகமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும்தான்.

—தலைவர் காமராசர்.



# பல்கலைக் கழக நிறுவனர் வரலாறு

தமிழ்நாட்டின் தனிப்பெரும் பல்கலைக்கழகமென நாடு முழுவதும் பாராட்டப்பெறும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கடந்த ஐம்பது ஆண்டுகளாக நாட்டுக்கும் மொழிக்கும் நலம் பல செய்து இன்று 'பொன்விழா'க் கொண்டாடப்பெறும் சிறப்பெய்தியுள்ளது. இந் நன்னாளில் இதனை நிறுவின பெருங்கொடை வள்ளல் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய அரும்பெரும் பண்புகளையும், செயற்கரிய செயல்களையும் எண்ணுதல் பொதுவாக எல்லாருக்கும், சிறப்பாக ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் பெருமகிழ்ச்சி தருவதாகும்.

ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், கானாடு காத்தான் என்னும் நகரில், தன வணிகர் மரபில், அறம் பல புரிந்த செல்வராகிய முத்தைய செட்டியார் அவர்களின் குமாரராக 1881ஆம் ஆண்டில் பிறந்தவர்கள். இவர்கள் தம் ஆட்சித் திறத்தாலும், அறிவு நுட்பத்தாலும், பேருழைப்பாலும் தம் முப்பதாம் ஆண்டுவரை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பலதிறப்பட்ட தொழில் துறைகள் வாயிலாகப் பெரும் பொருள் ஈட்டினார்கள்.

### பொதுநலப்பணிகள்

இவ்வாறு ஈட்டிய பெரும் பொருளைக் கொண்டு தாமும், தம்மைச் சார்ந்தவருமே இன்ப வாழ்வு நடத்துதல் அமையுமென இவர்கள் கருதினாரல்லர். பொது மக்களுக்குப் பல்வாற்றானும் இயன்ற உதவிகள் செய்தல் வேண்டுமென எண்ணினார்கள். அந்நிலையில், தம் ஊருக்கு அண்மையிலுள்ள காரைக்குடி நகராண்மைக் கழகத் தலைமைப் பதவி இவர்களை நாடி வந்தது. பொதுநலப் பணி புரிவதற்கு இது ஓர் வாய்ப்பாகுமென எண்ணி, இவர்கள் அப் பதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார்கள். மூன்றாண்டுகள் தலைவராயிருந்து அந் நகரத்திற்குப் பல நன்மைகள் செய்தார்கள். அக் காலத்தில் பொதுமக்கள் இவர்களைத் தலைவராகக் கருதினாலும், இவர்கள் தம்மைப் பொது நலத் தொண்டராகவே கருதிப் பணிபுரிந்தார்கள்.

ஒரு நாட்டின் வளர்ச்சி அந் நாட்டிற் பிறக்கும் நன்மக்களைப் பொறுத்திருக்கிறது. தாய்மார்கள் உடல் வளமும், உள்ளக் களிப்பும் உடையவர்களாயிருந்தாலன்றி அவர்களிடம் நன்மக்களை எதிர்பார்த்தல் இயலாது. ஆகவே, பிள்ளைப் பேற்றின் போதும், பிற காலங்களிலும் பெண்டிர்களுக்கு வருத்தமும்



கவலையும் தோன்றாதவாறு மருத்துவ முதலான வசதிகள் செய்து கொடுத்தல், ஒரு நாடு நலம்பெறச் செய்யும் சிறந்ததோர் அறமாகுமென நம் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் எண்ணினார்கள். எண்ணியவாறே தம் ஊரில் மூன்று இலட்சம் ரூபாய் செலவு செய்து ஓர் அறப்பணி புரியும் மருத்துவச்சாலை அமைத்தனர். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆயிரக்கணக்கான தாய்மார்கள் அம் மருத்துவச்சாலையில் அழகிய நன்மக்களைப் பெற்றெடுத்திருக்கின்றார்கள்.

மாதரும் மைந்தரைப்போல உடற்பயிற்சிக்கான விளையாட்டுக்கள் விளையாடவும், உலகியலறிவு பெறவும், நாகரிக மக்களுடன் நன்கு கலந்து பழகவும் வேண்டுமென உணர்ந்த அண்ணாமலை வள்ளல், சென்னை மாநகரில் இரண்டு இலட்ச ரூபாய் செலவு செய்து ''வெல்லிங்டன் கிளப்'' என்னும் மகளிர் மன்றம் ஒன்று நிறுவினார்கள்.

சிதம்பர நகர மக்கள் பொதுக் கூட்டம் முதலியன நடத்துதற்குப் போதிய இடமும், கட்டடமுமில்லாமல் தயக்கமுறுதலையறிந்து, விரிந்ததோர் இடம் வாங்கி, அதன்கண் பூங்காவையும், பொது மன்றத்தையும் இவர்கள் ஆக்கித் தந்தார்கள். இது ராஜா அண்ணாமலை டவுன் ஹால் என வழங்கப் பெற்றது. இப்போது இவ்விடத்தில் அரசினர் மருத்துவமனை கட்டப்பெற்றிருக்கிறது. அண்ணாமலை அரசர் பெயரால் புதிய மண்டபம் கட்ட ஏற்பாடு நடைபெற்று வருகிறது.

அண்ணாமலை வள்ளல் அவர்கள் மதுரைக் கல்லூரிக்கு 1917 ஆம் ஆண்டில் ஐம்பதினாயிரம் ரூபாய்க்குமேல் மதிப்புள்ள இடம் வாங்கிக் கொடுத்து, அதிற் கட்டடம் கட்டுவதற்கும் பொருளுதவி செய்தார்கள். மதுரை அமெரிக்கன் கல்லூரிக்கு மாணவர் விடுதியொன்று கட்டிக் கொடுத்தார்கள்; பசுமலையிலுள்ள அமெரிக்க மிஷன் உயர்நிலைப்பள்ளிக்கு அவ்வப்போது செய்த உதவிகள் பலவாகும்; திருச்சிராப்பள்ளியிலுள்ள தேசிய உயர்நிலைப்பள்ளி, சென்னை மயிலாப்பூர் பின்னத்தூர் சுப்பிரமணிய ஐயர் உயர் நிலைப் பள்ளி, இராமகிருஷ்ண கல்வி நிலையம், சேவா சதனம், இந்திய செஞ்சிலுவைச் சங்கம், தில்லியிலுள்ள இர்வின் பாடசாலை, மகளிர் கல்விக் கழகங்கள், கொழும்பு, பர்மா இவற்றிலுள்ள கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்குப் பொருளுதவி செய்துள்





ளார்கள். டேராடூனிலுள்ள இந்தியப் பொதுமக்கள் கல்விச்சாலைக்குச் சற்றேறக்குறைய ஐம்பதினாயிரம் ரூபாய் நன்கொடையாக வழங்கினார்கள். சாந்திநிகேதனத்தில் கவியரசர் இரவீந்திரநாத தாகூர் நிறுவியுள்ள விசுவபாரதி பல்கலைக் கழகத்திற்குத் தமிழ் நூல்கள் அனைத்தையும் அன்பளிப்பாகக் கொடுத்துதவினார்கள். தமிழ்க் கலைக்களஞ்சிய வெளியீட்டிற்குப் பதினாயிரம் ரூபாய் அளித்தார்கள். இன்னும் எத்துணையோ சங்கங்கள், சபைகள், வாசகசாலைகள், பாடசாலைகள் முதலியவற்றிற்கு வழங்கியதொகைகள் வரம்பிலவாகும். சிதம்பரத்தில் கோவிந்தராசப் பெருமாள் கோயில் திருப்பணியையும், இளையாற்றங்குடியில் அம்மன்கோயில் திருப்பணியையும் இவர்கள் செய்ததோடு, மேலும், பல திருக்கோயில்களுக்கும் உதவி செய்துள்ளார்கள்.

## பட்டம் பதவிகள்

1929-ல் தகுதியான பட்டம் ஒன்று இவர்களுக்குக் கிடைத்தது. அதுதான் பரம்பரையாக வரும் 'செட்டிநாட்டு அரசர்' என்னும் பட்டமாகும்.

சென்னைப் பல்கலைக் கழகப் பேரவையின் வாழ்நாள் உறுப்பினராக இருந்த இவர்கள் செய்துள்ள கல்விப்பணியைப்பாராட்டி அப் பல்கலைக்கழகம், 1932-ல் எல். எல். டி. என்ற கௌரவ டாக்டர் பட்டத்தை இவர்களுக்கு வழங்கியது. 1942-ல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தார், டி.லிட். என்ற இலக்கிய முனைவர் பட்டமளித்து இவர்களைப் பாராட்டினர்.

1916ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் சென்னைச் சட்ட சபையிலும், 1921ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 15ஆண்டுகள் டில்லி அரசாங்க சபையிலும் (இப்போது மாநிலங்கள் அவை என வழங்கப் பெறுகிறது) உறுப்பினராக இவர்கள் இருந்து நாட்டுக்குச் செய்த உயர்ந்த தொண்டுகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இப்போது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா என வழங்கும் இந்திய இம்பீரியல் பேங்கின் கவர்னராக இவர்கள் பத்து ஆண்டுக் காலம் பணியாற்றியுள்ளார்கள்.

## பல்கலைக் கழகத் தோற்றம்

''மக்கள் வாழ்க்கை தனித்த முறையில் திருத்த முறுதல் இல்லை. அறிஞர் பலருடன் அடுத்தடுத்துப் பழகுதலும், அயலிடங்களுக்குச் சென்று ஆங்காங்குள்ள அருமை பெருமைகளைக் காண்டலும் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாகும்; சிறு பான்மையினரான ஆங்கிலேயர் கல்வி, வாணிகம், ஆட்சித்திறன் முதலியவற்றில் பிறநாட்டாரினும் மேன்மையுற்று விளங்குகின்ற நுட்பங்களை அறிதல் வேண்டும்'' என இவர்கள் அவாக் கொண்டு, காரைக்குடி நகராண்மைக்கழகத் தலைவராயிருந்த அக்காலத்தில் இங்கிலாந்துக்குச் சென்று இலண்டன் மாநகரில் தங்கினார்கள். அப்போது (1911-ல்) ஐந்தாம் ஜார்ஜ் மன்னருக்கு அங்கு நடைபெற்ற முடிசூட்டு விழாவிற்கு இவர்கள் சிறப்பாக அழைக்கப் பெற்று, அவ்விழாவிற் கலந்து கொண்டார்கள். அங்கே தங்கியிருந்தபோது ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுக்குச் சென்று அவற்றின் அமைப்புக்களையும், நடைமுறைகளையும் நன்கு கவனித்



தார்கள். அவை, இவர்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. இந் நினைவுகளுடன் இந்தியாவிற்கு வந்தார்கள்.

இங்கிலாந்திலிருந்து திரும்பியது முதல் அத்தகைய பல்கலைக் கழகம் நம் நாட்டில் உண்டாதல் வேண்டும் என்ற ஆர்வம் உடையவர்களாயிருந்தார்கள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளும் இப் பெருந்தகையாளரின் உள்ளமாகிய நன்னிலத்தில் அழுந்திப் பதிந்த அவ்வுயரிய நோக்கமாகிய நல் வித்தானது, நாளடைவில் முளைத்துக்கிளைத்துச் செழித்து வளர்ந்து முழு மரமாகிப் பூத்துக் காய்த்துப் பயன் விளைக்கத் தொடங்கிற்று. இது, தமிழகம் செய்த தவப்பயனென்றே கூறுதல்வேண்டும். இவர்கள் முதல் தரக் கல்லூரி ஒன்று நிறுவுதற்கு முதலில் முயன்றார்கள். பாண்டி நாட்டின் தலைநகரமும், முத்தமிழ் வளர்த்த முதலிடமுமாகிய மதுரை மாநகரமே கல்லூரி நிறுவுதற்குத் தக்க இடமென நினைத்து, காலந்தாழ்த்தாது அந் நகர்க்கண் விரிந்த நிலம் வாங்கினார்கள். பிறகு தாம் வாங்கிய நிலத்தையும் கட்டடம் கட்டுதற்கு வேண்டும் பொருளையும் மதுரைக் கல்லூரிக்கு வழங்கிவிட்டுச் சிதம்பரத்தை நோக்கினார்கள்.

தம் தந்தையார் அவர்களும் தமையனார் திவான் பகதூர் இராமசாமிச் செட்டியார் அவர்களும் பொதுநலப் பணிகள் புரிந்த இடம் சிதம்பரமாகும். ஆதலால், இந்நகரத்திலேயே தாமும் கல்லூரி அமைத்தல் சாலப் பொருத்தமுடையதென இவர்கள் முடிவு செய்தார்கள். தமையனார் திவான் பகதூர் இராமசாமிச் செட்டியார் அவர்கள் 1918-ல் இறையடி சேர்ந்தமையால், அவர்கள் பெயரால் நடைபெற்று வந்த உயர்நிலைப் பள்ளியைப்பாதுகாக்கும் பொறுப்பும் இவர்கள்பாலதாயிற்று. ஆதலின், அவ்வுயர்நிலைப்பள்ளியையே முதல்தரக் கல்லூரியாக்க முயன்றார்கள். 1920-ல் அப் பள்ளியின்கண் கல்லூரி முதல் வகுப்பும் தொடங்கப் பெற்றது. தக்கஆசிரியர்களாலும், மாணவர்களாலும் நூல்நிலையம் முதலான பிற உறுப்புக்களாலும் கல்லூரி செவ்வனே நடைபெற்றது. ஆயினும், அக்கல்லூரி ஊர் நடுவில் அமைந்திருந்தமையால், பிற்காலத்தில் அதனை விரிவுபடுத்தற்குப்போதிய இடம் பெறுதல் அரிதென உணர்ந்தார்கள். விரிந்த இடந் தேடும் எண்ணம் மேன்மேலும் வளர்ந்தது. அவ்வெண்ணத்தின் விளைவாகத் தில்லையின் எல்லையில் உள்ளதும், விரிந்த நிலப்பரப்பு உடையதும் ஆகிய திருவேட்களமே கலைவளர்ச்சிக்குத் தகுதியான இடமென முடிவு செய்தார்கள். வேண்டிய கட்டடங்களும் அமைப்புக்களும் விரைவில் நிறைவேறின. அங்கே நடைபெற்ற கல்லூரிதான் பிற்காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகமாக வளர்ச்சி பெற்றது. தனித்தனியான இருந்த தமிழ்க் கல்லூரி வடமொழிக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, இசைக் கல்லூரி ஆகியவை பல்கலைக்கழகத்தோடு இணைந்தன. இப்பல்கலைக் கழகத்துக்கு அண்ணாமலை வள்ளல் வழங்கிய தொகை ஏறத்தாழ ஐம்பது இலட்சம் ரூபாயாகும். இதனை நிறுவுவதற்கும், இதன் வளர்ச்சிக்கும் ராஜா அவர்கள் மேற்கொண்ட பேருழைப்பு விலை மதிக்க இயலாததாகும். இவர்களுக்கு முன்னும், இவர்களுக்குப் பின்னும் இன்று வரை ஆசிய நாடுகளில் தனியாக ஒருவர் இத்தகைய சிறந்த பல்கலைக்கழகம் நிறுவவில்லை. இப் பல்கலைக்கழக வரலாறும், இவர்கள் வரலாறும் பிரிக்க இயலாதவாறு இரண்டறக்கலந்து பின்னிக்கிடக்கின்றன. இவர்களின், என்றும் நின்று நிலவும் புகழ் வடிவாக இப்பல்கலைக்கழகம் காட்சி தருகின்றது.

## தமிழ்ப்பற்று :

அண்ணாமலையரசர் இளம் பருவந் தொட்டே, தேவார, திருவாசகங்களிலும் திருக்குறளிலும் அழுத்தமான பற்றுடையவர்களாக இருந்தார்கள். பல்கலைக் கழகந் தொடங்குவதற்கு முன்பே மீனாட்சி தமிழ்க் கல்லூரியை நிறுவிப் பல மாணவர்களுக்கு உண்டியும் உறையுளும் உதவி, அக்கல்லூரியில், தமிழ் வித்துவான் வகுப்பில் அம்மாணவர்களைப் பயிலச் செய்தனர். இவர்கள் இத் தமிழ்க் கல்லூரிக்கு மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்களைத் தலைவராக இருக்கச் செய்தது இங்கே குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகம் தொடங்கியபின் அதில் தமிழுக்கு முதன்மையிடங் கொடுக்க வேண்டுமென்னும் நோக்கத்தால் தமிழ் சிறப்பு வகுப்பும் (பி.ஏ. ஆனர்ஸ்) உண்டாக்கினார்கள். தமிழ், வடமொழி ஆசிரியப்பயிற்சிக் கல்லூரி நிறுவி, அதில் பயில்வோருக்கும் பொருளுதவி செய்தார்கள்.

மேலும், தமிழ்நாட்டில் தமிழ்ப் பேரறிஞராய்ச் சிறந்தவர்களையே தெரிந்தெடுத்துத் தமிழ் பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பணியாற்றச் செய்தார்கள். மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களும், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களும் தமிழ்நாட்டின் இரு கண்மணிகள்போல் விளங்கினார்கள். ஆதலின், அவ்விரு பெருமக்களுக்கும் தமது கையாற் பொன்னாடை போர்த்துப் பெருமைப்படுத்தினார்கள். தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல்கலைக்கழகத்தின் சிறந்த குறிக்கோளாக இருக்கும் என்று பல்கலைக் கழகப் பேரவையின் தொடக்க விழாவில் ராஜா அவர்கள் கூறியது ஒன்றே இவர்களின் தலையாய தமிழ்ப் பற்றிற்குச் சிறந்த சான்றாகும்.

**தமிழ் இசை இயக்கம் :**

தமிழ் இசை என்பது தமிழ் மொழியில் அமைந்த பாடல்களோடு இயைத்துப் பாடப் பெறும் இசையாகும். தமிழ் மொழி எக்காலத்தில் தோன்றியதோ அக்காலந்தொட்டே தமிழ் இசையும் வழங்கி வருகிறது. தமிழ்மொழியினை இயல், இசை, நாடகம் என முப்பெரும் பிரிவுகளாக்கி அவற்றுள் இசைக்கு நடுவிடங் கொடுத்து நம் முன்னையோர் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்த்து வந்தனர். எத்தனையோ இசை இலக்கணங்களும், ஆயிரக்கணக்கான இசைத் தமிழ்ப்பாடல்களும் இருந்தன.

முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் இன்றும் உள்ளது. அதன்கண் இசை நுட்பங்கள் பலவும், இசைக்கருவிகளின் இயல்புகளும் காணப்படுகின்றன. தேவாரம், திவ்வியப் பிரபந்தம், திருவிசைப்பா, திருப்புகழ் முதலானவை தமிழ் இசைப்பாடல்களேயாகும். பிற்காலத்து முத்துத் தாண்டவர், அருணாசலக்கவிராயர், இராமலிங்க அடிகளார், கோபாலகிருஷ்ண பாரதியார், வேதநாயகம்பிள்ளை முதலான இசையறிஞர் பலர் பாடிய இசைப் பாட்டுக்களும், பதங்களும் பலவுள்ளன. இவ்வாறிருப்பவும் நம் நாட்டு இசைவாணர்கள் வேற்று மொழிப் பாடல்களையே பெரும்பாலும் இசையரங்குகளில் பாடி வந்தனர். தமிழ்ப் பாடல்கள் இலதுக்கடாக்களாக இறுதியிற்பாடப் பெற்றன. இவ்இழிநிலை மாற நம் அண்ணாமலை அரசர் தமிழ் இசை இயக்கத்தைத் தொடங்கினார்கள். ''தமிழ்நாட்டில் தமிழைத்தாய்மொழியாகக்கொண்ட மக்கள் பெரும்பான்மையராய்க் குழுமியிருக்கும் இடங்களில் தமிழிசைப் பாடல்களே பாடப்பெற வேண்டும்; தமிழ்மொழிப் பாடல்களே மக்களுக்குப்பெரும் உணர்ச்சியைத் தந்து உளம் கவர்ந்து இன்புறுத் தக்கனவாகும்'' என்ற நியாயமான எண்ணம் ராஜா அவர்களின் உள்ளத்தில் பதிந்தது.

**தமிழரசு**
**சந்தா விவரம்**
**ஓர் ஆண்டு ரூ.12.00**
**அரை ஆண்டு ரூ.6.00**

இது தமிழ் மக்களின் பெரும் பேறாயிற்று. ராஜா அவர்களின் கொள்கையைத் தமிழ் மக்கள் அனைவரும் உவந்து வரவேற்றுப் பேராதரவு தந்தனர். டாக்டர் சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் முதலிய பேரறிஞர்கள் ஒத்துழைத்துப் பெருந்துணை புரிந்தார்கள். எவ்விதமான நல்லதோர் இயக்கத்தையும் சிலர் எதிர்ப்பது இயற்கைதானே ! அவ்வாறே இதற்கும் எதிர்ப்பு இருந்தது. தமிழில் கீதவர்ணங்கள் இல்லை எனவும், இசைக்கு மொழி அவசியமன்று எனவும் எதிர்ப்பாளர் கூறினர். அவர்களுக்குத் தக்கவாறு மறுமொழி கூட்டியும், சிறந்த தமிழிசைப் பாடல்களுக்குப் பரிசுகள் வழங்கியும், கீதவர்ணங்கள் இசை இலக்கணங்கள் முதலான தமிழ் இசைப் பாடல் தொகுதிகள் பலவற்றைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாக வெளிப்படுத்தியும், பல்கலைக்கழகத்தில் தமிழ் இசைப் பாடல்களைக் கற்பிக்கச் செய்தும், ஆங்காங்குத் தமிழிசைப் பள்ளிகள் அமைக்க உதவியும், சென்னையில் தமிழிசைச் சங்கம் நிறுவிப் பல மாணவர்களுக்குத் தமிழ் இசை கற்பித்துப் பட்டம் வழங்க ஏற்பாடு செய்தும் தமிழ் இசைக்கு அரசர் அவர்கள் புத்துயிர் அளித்தார்கள். ''தத்தளித்து நின்ற தமிழ் இசைச் செல்விக்குப் புத்துயிர் ஊட்டிய நற்புண்ணியவான்'' என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளைஅவர்கள் இவர்களைப் பாராட்டிப் பாடியிருப்பது இங்கே நினைக்கத் தக்கது.

இப்போது சிறந்த முறையில் அமைக்கப் பெற்றுச் சென்னை நகருக்கு அணியாக விளங்கும் ராஜா அண்ணாமலை மன்றம், நம் அண்ணாமலை வள்ளல் தமிழிசை வளர்ச்சிக்குச் செய்த அரும்பெரும் தொண்டுகளை நினைவூட்டித் தமிழிசை இயக்கத்தில் அவர்கள் பெரு வெற்றியின் அழியாச் சின்னமாகத் திகழ்கிறது. ராஜா அவர்களின் குமாரர்களாகிய ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களும், மு. அ. சிதம்பரஞ் செட்டியார் அவர்களும் அன்று முதல் இன்றளவும் தமிழ் இசை வளர்ச்சிக்கு இடையறாது செய்து வரும் அரும் பெரும் தொண்டுகள் தமிழ் மக்களின் உள்ளங்களில் நிலையான இடம்பெற்றுள்ளன. எனவே, நம் அண்ணாமலை அரசர் தம் குடும்பத்தையே தமிழ் இசைத் தொண்டாற்றச் செய்திருக்கிறார்கள். தமிழ் இசை வளர்ச்சிக்காக அண்ணாமலை அரசர் அவர்களும், அவர்கள் குடும்பத்தாரும் அந்நாளில் வழங்கியிருக்கும் தொகை மூன்று இலட்சம் ரூபாய்க்கு மேலாகும்.

**அறுபதாம் ஆண்டு நிறைவு விழா**

ராஜா அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, 28.9.1941-ல் செட்டிநாட்டில், மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தார் 1200 பக்க அளவில் ஒரு நினைவு மலரை ராஜா அவர்களுக்கு வழங்கித் தம் நன்றியறிவைப் புலப்படுத்திக் கொண்டார்கள். அம் மலரில், அறிஞர் பெருமக்கள் பலரின் வாழ்த்துரைகளும், பாடல்களும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நிறைந்துள்ளன. அவ்விழாவில் ராஜா அவர்கள், பலவகை அறங்களுக்காக மூன்றரை இலட்சம் ரூபாய் வழங்கினார்கள்.

இவ்வாறாக, பல பொதுநலப் பணிகளுக்கும் ராஜா அவர்கள் வழங்கிய தொகை 1930ஆம் ஆண்டு விலைவாசியில் ஒன்றரைக் கோடி ரூபாய்க்கு மேலாகும். இன்றைய விலை நிலவரப்படி இது பத்துக் கோடி ரூபாய் மதிப்புடையது.

அறிவாற்றலும், குணநலங்களும் வாய்க்கப்பெற்ற அண்ணாமலை அரசர் அவர்கள், இருபதாம் நூற்றாண்டு இந்திய வரலாற்றில் தன்னேரில்லாத் தனிப் பெருமகனாகப் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத் தக்கவர் ஆவார்கள். இவர்களின் பெரும்புகழ் அண்ணாமலைப் பல்கலைக் கழக வடிவாயும் தமிழிசை வடிவாயும், இவர்கள் செய்த பிற பல அறங்களின் வடிவாயும் இவ்வுலகம் உள்ளளவும் நின்று நிலவும் என்பது திண்ணமாகும்.






# கடலுயிரியல் துறை

உலக நாடுகள் சேர்ந்து கூட்டாக நடத்திய ''இந்தியப் பெருங்கடல் ஆய்வுப் பயணத்தின்'' (International Indian Ocean Expedition ) வாயிலாக நம் நாட்டைச் சூழ்ந்துள்ள கடற்பரப்பு, உலகிலேயே அதிக உற்பத்தித் திறன் கொண்ட கடற்பரப்புகளில்ஒன்றுஎன்ற உண்மை புலனானது. இக்கடற்பரப்பின் பாலுள்ள வளங்களை ( உயிர் வளம், கனிவளம்) நீண்ட நாள் போற்றிப் பாதுகாப்பதற்கும், பெருமளவு பொது நன்மைக்குச் சீரிய முறையில் பயன்படுத்துவதற்கும் எடுக்கப்பட வேண்டிய இன்றியமையாத முதல் நடவடிக்கை. இவ்வளங்களின் அளவைக் கணிப்பதுதான். இக்கணிப்பின் மூலம், கடல் வளங்களை நெறிப்படுத்துவதற்கு மட்டுமல்லாமல், கடற் சூழலின் தன்மை கெடாமல் (Pollution) தடுப்பதற்கான வழிவகைகளை உருவாக்குவது பற்றியும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அறிவியலறிஞர்கள் கூடி ஆராய்தல் அவசியம். இப்படிப்பட்ட முக்கிய பணி இந்நாட்டில் இதுகாறும் சீரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை.

பல்வேறு அறிவியல் துறைகளின் கூட்டுறவின் மூலமே கடலறிவியல் ( Marine Sciences ) பரிணமிக்கிறது. மேலை நாடுகளில் பல துறைகளைச் சார்ந்த ஆய்வாளர்கள் கடலைப் பொதுக் கருவாகக் கொண்டு, தங்கள் தங்கள் துறைகளில் ஆய்வினை நடாத்தி ஒருவருக்கொருவர் உதவியும், ஊக்குவித்தும் கடலறிவியலின் வளர்ச்சிக்கு வழிவகுக்கிறார்கள். இத்தகைய நிலையை நம் நாட்டிலும் தோற்றுவித்தால் நலம் விளையும்; நாடு முன்னேறும்.

கடல் வளங்களைப் பற்றி முழுமையான அறிவு பெறுவதற்கு, இந்தியா போன்ற வளரும் நாடுகள் கடலறிவியல் ஆய்வில் ஆர்வமுடன் ஈடுபடுவது இன்றியமையாதது. இவ்வளங்களைக் கணிப்பது, உபயோகிப்பது, பாதுகாப்பது இவைகளைப் பற்றிய ஒரு தேசீயக் கொள்கையை உருவாக்க, இத்தகைய ஆய்வினால் கிட்டும் அறிவு முதிர்ச்சி அவசியம். கடலறிவியல் ஆய்வை நம்நாடு மேற்கொண்டு உலகிலே அந்த ஆய்வில் பெரும் பங்கு பெற்று, கடல் வளங்களைப் பற்றிய அறிவுச் செல்வத்தைப் பெருக்குவதோடல்லாமல், ஒரு நல்ல தேசீயக் கொள்கையை வரையறுக்கும் திறன் பெற்ற அறிஞர் குழு ஒன்றையும் உருவாக்க வேண்டிய நிலை தற்போது உருவாகியுள்ளது.

கடலுயிரியல் உயர்நிலை ஆய்வு மையத்தை (Centre of Advanced Study in Marine Biology) மையத்தை உள்ளடக்கிய, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கடலுயிரியல் துறை, இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில், சென்னையிலிருந்து 240 கி.மீ. தெற்கே, அண்ணாமலை நகரிலிருந்து (பல்கலைக்கழக வளாகம்) 24 கி.மீ. வடக்கே பரங்கிப் பேட்டையில் அமைந்துள்ளது. விரிந்த நோக்கோடும், தீர்க்க தரிசனத்தோடும், இத்துறை, 1958ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் கடலுயிரியல் நிலையமாக, நமது மதிப்பிற்குரிய இணைவேந்தர் டாக்டர் ராஜா சர். முத்தைய செட்டியார் அவர்களால் நிறுவப்பட்டது. இந் நிலையத்தைச் சீரோடும், சிறப்போடும் பத்து ஆண்டுகளுக்கு மேல் வளர்த்த-மறைந்த பேராசிரியர் திரு சேஷையா அவர்கள் அமைத்துத் தந்த நிலையூான அடித்தளத்தின்மேல் தொடர்ந்து பல்கிப் பெருகி நற்பெயர் ஈட்டி வருகிறது. கல்வி மற்றும் ஆய்வுப் பணிகளில் புரிந்த சாதனைகளைக் கருத்தில் கொண்டு, 1963-ல் பல்கலைக் கழக மானியக் குழு (University Grants Commission) இக்கடலுயிரியல் துறையை உயர்நிலை ஆய்வு மையமாக (Centre of Advanced Study in Marine Biology) அங்கீகரித்தது. பத்தாண்டுகளுக்குப்பின் உயர்நிலை ஆய்வு மையங்களின் தொடர் செலவினங்களுக்




ஆண்டு தோறும் 5,50,000 டன் விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்களையும் 1,95,000 டன் விஜய் யூரியாவையும் தயாரிக்கின்றோம். தரமான உரங்களை தயாரித்தளிப்பதோடல்லாமல் இந்திய விவசாயம் சிறக்க பல விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை செயல் படுத்திவருகின்றோம். அவற்றுள் சில:

- **நீண்டகால விவசாய மேம்பாட்டுத் திட்டம்:**
  இந்த 22 திட்டங்களினால் 1,90,000 ஹெக்டர் நிலத்தைக் கொண்ட 76,000 குடும்பங்கள் பலனடைந்து வருகின்றன.
- **கிராம ஏற்புத் திட்டம்:**
  விவசாய உற்பத்தியைப் பெருக்குவதை குறிக்கோளாகக் கொண்ட இத்திட்டத்தினால் 200-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன் பெற்றுள்ளன.
- **துரித மண் பரிசோதனைத் திட்டம்:**
  விவசாயிகள் மண் மாதிரிகள் அனுப்பிய 4 வாரங்களுக்குள் முடிவுகளும் சிபாரிசுகளும் அவர்களுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றன.
- **நவீன விவசாய நுணுக்கங்களை தெரிவிக்கும் திட்டம்:**
  நடமாடும் திரைப்பட ஊர்திகள், வானொலி, சினிமா, செய்தித்தாள்கள் மற்றும் சாகுபடி குறிப்புப் புத்தகங்கள் முதலிய பல்வேறு சாதனங்கள் மூலமாக விவசாயிகள் புரிந்து செயலாற்றும் வகையில் நவீன விவசாய நுணுக்கங்கள் தெரிவிக்கப் படுகின்றன.

மேலும், விவசாய கருத்தரங்குகள், விவசாயிகள் பயிற்சி திட்டங்கள் போன்றவற்றை செயல்படுத்தி விவசாயிகளுக்குத் தேவைப்படும் ஆலோசனைகளும் தரப்படுகின்றன.

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் — இந்திய விவசாய வளர்ச்சியில் முழுமையான ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனமாகும்.**

VIJAY
MADRAS FERTILIZERS

மேலும் விவரங்களுக்கு, மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட், 10, வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001

MFL 2111




கான மானியத்தை அந்தந்த மாநிலங்களே ஏற்க வேண்டும் என்ற பல்கலைக் கழக மானியக் குழுவின் வேண்டுகோளின்படி 1974-ஆம் ஆண்டிலிருந்து மாநில அரசு இந்த ஆய்வு மையத்தின் தொடர் செலவினங்களுக்கான மானியத்தை அளித்துப் பேருதவி புரிகிறது. இந்த வகையில் 1979-80 நிதி ஆண்டிற்கு இந்த உயர் நிலை ஆய்வு மையத்திற்கும், கடலுயிரியல் நிலையத்திற்கும் சேர்த்து, 2,50,000 ரூபாய்களை மானியமாக மாநில அரசு அளித்துதவியுள்ளது.

கடலுயிரியல் ஆய்வுக்கு மிக ஏற்ற இடத்தில் இம்மையம் அமைந்துள்ளது. கழிமுகம், உப்பங்கழி, கடல், நன்னீர்ப்பரப்புகள், மற்றும் மாங்குருவ் (Mangrove) பிச்சாவரப் பகுதி சதுப்பு நிலக் காடுகள் போன்ற பலதரப்பட்ட சூழல்கள் இம்மையத்திற்கு அருகில் அமைந்துள்ளது ஒரு சிறப்பாகும். கடல் மேற்செல்லக் கூடிய 33' இயந்திரப் படகுகள் இரண்டும், சிறு படகுகள் இரண்டும், ஒரு நார்க் கண்ணாடிப் படகும் இம்மையத்தில் உள்ளன. கடலாய்விற்குத் தேவையான அனைத்துக் கருவிகளும் இங்குள்ளன. மேலும், ஒரு நுண்ணுயிராய்வுக் கூடமும், கதிரியக்க ஆய்வுக் கூடமும் இங்கு நிறுவப்பட்டுள்ளன.

முதற்கட்ட ஆரம்ப அணுகு முறை ஆய்விற்குப் பின் கரையோரக் கடற்பரப்பின் வளங்களைப் பற்றிய அறிவைத் திட்டமிட்டுச் சேகரிக்கும் பெரும் பொறுப்பை ஏற்க வேண்டிய இரண்டாவது கால கட்டத்தில் இம்மையம் நடைபோடுகிறது. இச் சிறப்பு வாய்ந்த கால கட்டத்தில் கீழ்க் காணும் குறிக்கோள்களை எட்டுவதற்கு அரும்பணியாற்ற இம்மையம் உறுதி மேற்கொண்டிருக்கிறது.

நாட்டின் நலனுக்காக, கரையோரக் கடற்பரப்பின் உணவு மற்றும் உலோக வளங்களைச் செவ்வனே பயன்படுத்துவதற்கும், கடல்நீரைப் பாதிக்கக்கூடிய விளைவுகளைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கும் தேவையான அறிவு மேம்பாட்டிற்காகப் பாடுபடுவது.

பல்லறிவியற் துறைகளின் சங்கமத்தில் பிறப்பதுதான் கடலறிவியல் என்பதைக் கருத்தில் கொண்டு இந் நாட்டின் கடலாய்வு மற்றும் கல்விப்பணிகளை வலுப்படுத்த, இந்த மையத்தைக் கடல் வளங்களைப் பற்றிய கருத்துக்களைத் திரட்டும், ஒரு கடலறிவியற் கழகமாக (Institute of Marine Sciences) மாற்றியமைப்பது.

மேற் சொன்னவாறு கடலறிவியற்கழகம் நிறுவுவதன் வாயிலாகக் கடலறிவியலின் வேறுபட்ட பல துறைகளில் உயர் நிலைக் கல்வியளிக்கக்கூடிய வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்துவது.

இந்தக் குறிக்கோள்களை அடைவதற்குத் தேவையான அடிப்படை ஆய்வுப் பணிகளைப் பற்றிய அறிவியல் திட்டத்தின் சிறப்பு அம்சங்களாவன:

புரதம் நிறைந்த உணவுப் பொருட்களையும், பயனுள்ள மருந்துகளையும், அளிப்பதால் மனிதனின் கருத்தைக் கவருகிறது கடல். இக்கடலில் வாழும் உயிரினங்களுக்கிடையேயும், உயிரினங்களுக்கும், கடல் நீருக்குமிடையே நிலவும் உறவுமுறைகளை ஆய்ந்தறிவது.

பூச்சி மருந்துகள் மற்றும் பல ஊறு ஏற்படுத்தக் கூடிய வேதியற் பொருட்கள் கடலில் கலப்பதால் விளையும் கடல் நீர்க்கேடு பற்றியும், அவை கடல் வாழ் உயிரினங்களில் ஏற்படுத்தும் விரும்பத்தகா விளைவுகளைப் பற்றியும், கடல் நீரிலுள்ள அப்பொருட்களின அளவு பற்றியும் ஆராய்வது.

கரையோரக் கடற் பரப்பின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிவது. மீன், மற்றும் பல பல கடலுயிரினங்களின் வளர்ப்புக்கேற்ற இடங்களை வரையறுப்பது. வளர்ப்பதற்கேற்ற மீன் மற்றும் கடலுயிரின வகைகளைத் தேர்ந்தெடுப்பது.

புற்றுநோயையும், நோயுண்டாக்கவல்ல சில நுண்ணுயிர்களையும் எதிர்க்கும் ஆற்றல் கொண்ட மூலக்கூறுகளைத் தரவல்ல நுண்ணுயிர்களைப் பற்றி ஆய்வு நடத்துவது. நுண்ணுயிர்களின் உதவியால் தாதுக்களிலிருந்து உலோகங்களைப் பிரித்தெடுப்பதற்கான நடைமுறை சாத்தியக் கூறுகளைக் கண்டறிவது. நுண்ணுயிர்களால் மீன் போன்ற கடல் வாழ் உயிரினங்களுக்கு ஏற்படும் நோய்களைப் பற்றியும், நோய்த் தடுப்பு வழிமுறைகளைப் பற்றியும் தெளிந்தறிவது. இதுபோன்ற மனித இனத்திற்கு மிகுந்த பயன்விளைக்கும் ஆய்வுகளின் காரணமாக, கடலறிவியலிலே, நுண்ணுயிரியல் பிரிவு சிறப்பானதொரு இடத்தை வகிக்கிறது. இங்கு தவிர, இந்தியத் திருநாட்டிலே வேறெந்த ஆய்வுக் கூடத்திலும் கடல்வாழ் நுண்ணுயிரியல் ஆய்விற்கான பயிற்சி அளிக்கப்படவில்லை என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

மேற்சொன்ன ஆய்வுப் பணிகளால் கடலுயிரியற் கழகம், நாட்டு மேம்பாட்டில் ஒரு சிறப்பான பங்கு வகிக்கும் நிலை பெறும் என்பதில் ஐயமில்லை. இந்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கடலறிவியல் அறிஞர்கள் பரஸ்பர நன்மைக்காக, கருத்துப் பரிமாற்றம் செய்யும் ஒரு களமாக இக் கடலறிவியற்கழகம் அமையும் என்பது திண்ணம்.

# தமிழ் இலக்கிய அமைப்புகளுக்கு ஓர் வேண்டுகோள்

ஐந்தாவது உலகத்தமிழ் மாநாடு 1980ஆம் ஆண்டு மதுரை மாநகரில் சிறப்பாக நிகழவுள்ளது. தமிழகத்திலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும் அயல்நாடுகளிலும் உள்ள தமிழ் இலக்கிய அமைப்புகள் சிறந்த பணிகளைப் புரிந்து வருகின்றன. அத்தகைய அமைப்புகளின் பட்டியலொன்றைத் தயாரிப்பதற்காக அவ்வமைப்புகள் தத்தம் முகவரியையும் ஆற்றிவரும் பணிகளையும் தெரிவிக்க வேண்டுகிறோம்.






தனி அலுவலர்
5வது உலகத் தமிழ் மாநாடு
கல்வித்துறை
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்.
சென்னை-600 009.


# தமிழ்ப் பணி


டாக்டர் ஆறு. அழகப்பன்
தமிழ்த் துறை.


தஞ்சைக்குப் பெருமை அளிப்பது பிரகதீசுவரர் ஆலயம். திருநெல்வேலிக்குப் பெருமையளிப்பது குற்றால நீர் வீழ்ச்சி, செங்கல்பட்டுக்குப் பெருமையளிப்பது மாமல்லபுரம் சிற்பக்கலை, திருவண்ணாமலைக்குப் பெருமையளிப்பது அண்ணாமலை தீபம். தமிழ்நாட்டுக்குப் பெருமையளிப்பது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். தில்லையில் அமைந்த கூத்தன் திருக்கோயிலைப் போல, அதன் எல்லையில் ஒப்பற்ற கலைக்கோயில் பல்கலைக் கழகம். அறத் தந்தை அண்ணாமலை வள்ளலின் அருட் பெருங்கொடையால் உருவாகிக் கடந்த 50 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டு வரலாற்றோடு இரண்டறக் கலந்து அது வளர்ந்து வருகின்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் மொத்த வரலாறு பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கது.

## அறத்தந்தையின் குறிக்கோள்

பல்கலைக் கழ்கத்தின் முதல் ஆளவை மன்றத்தின் தொடக்க விழாவில் அறத் தந்தை அண்ணாமலை வள்ளல் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்கள்:

''தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் உலகறியச் செய்வதே இப்பல்கலைக் கழகத்தின் தலை சிறந்த குறிக்கோளாக இருக்கும்.''

மேடை அலங்காரத்திற்காகவோ, கை தட்டலுக்காகவோ இக்கருத்துக்களைக் கூறவில்லை. சங்கங்கள் பண்டைக் காலத்தில் தமிழ் வளர்த்தது போல, இந் நூற்றாண்டில் தமிழ் வளர்க்கும் தமிழ்ச் சங்கமெனப் பல்கலைக் கழகம் திகழ்கிறது. ஒரு மொழி இலக்கிய இலக்கணங்களைப் புலவர் படைப்பர், புரவலர் காப்பர்; கழகம் வளர்க்கும். இம் முச் செயல்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிரம்ப இருந்த காரணத்தால்தான் இங்குச் செந்தமிழ் செம்மாப்புடன் வளர்ந்திருக்கின்றது. சிந்தனைச் செழுமையைப் படைக்கும் புலவர்களும் அப்புலவர்களைக் காத்திடும் புரவலராக அண்ணாமலை வள்ளலும் அறிவுத்தொண்டாற்றிடும் கழகமாக அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் இருந்து வரும் காரணத்தால் தமிழுக்கு ஒரு தனி வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

இப்பல்கலைக் கழகம் செய்த தொண்டினைச் சிறிது காண்போம்:

## பணிபுரிந்த தமிழறிஞர்கள்

சங்கப் புலவர் பிசிராந்தையார், தம்முடைய தலை நரைக்காமல் இருப்பதற்குரிய கராணங்களில் ஒன்றாகச் சான்றோர்கள் வாழும் ஊர் தம்மூர் என்ற காரணத்தைக் கூறுகின்றார். உலக அரங்கில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை, வரலாற்றுச் சிறப்படைவதற்குரிய காரணம், செந்தமிழ்ச் சான்றோர்கள் பலரும் இங்குப் பணிபுரிந்ததாலேயே யாகும். இந்நூற்றாண்டில் தமிழ்ப்பெரும் புலவர்களில் பலரும் தமிழ்த் துறையில் பேராசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும் பணி புரிந்திருக்கின்றனர். தமிழ்த்துறையில் முதல் தலைவரான சட்டப் பேரறிஞர் பேராசிரியர் கா. சுப்பிரமணியப்பிள்ளை, தமிழ்ப் பேராசிரியராக விளங்கத் தமிழ்த் துறையின் வரலாறு பீடுடன் தொடங்கிற்று.

வாழும் தமிழுக்காக வாழையடி வாழையாகச் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, சுவாமி விபுலானந்தர், எஸ். பொன்னோதுவார், சர்க்கரை

---

தமிழனுக்குத் தாய்மொழியைக் கற்றுக் கொடுத்த காரணத்திற்காகத் தமிழாசிரியர்களின் சம்பளம் குறைந்தது. அவர்களை இகழ்வது, தள்ளி வைப்பது ஆகியவைகளின் பிரதிபலிப்பு மாணவர்களிடையும் தென்பட்டது. தமிழ் வகுப்பு என்றால், இஷ்டப்பட்டால் போகிற வகுப்பு என்று நினைத்தார்கள். தமிழ் வகுப்பு நடந்து கொண்டேயிருக்கும்; தெய்வயானையை விட்டு விட்டு வள்ளியைத் தேடிக்கொண்டு முருகன்போவதுபோல, மாணவர்கள் வாத்தியாரை விட்டுவிட்டு வெளியே போய்விடுவார்கள்; ஆனால், அந்த நிலை இன்று மாறிவிட்டது. எங்குச் சென்றாலும் தமிழ், தமிழர் என்ற பேச்சுக்கள். நான் பார்த்திருக்கிறேன் ஓரிரண்டு ஆண்டுகளாக: 'ஆங்கிலத்திலேயே பேசுவேன்' என்று சபதம் செய்து கொண்டிருந்தவர்கள்கூட, இன்று தமிழிலேயே பேசுவேன்; தமிழிலேயே எழுதுவேன்; எண்ணுவேன் என்று சொல்வதை.

தமிழிலே கவிதைகள்; தமிழிலே நாடகங்கள்; தமிழிலே இசைகள்; இவைகளை யாரும், எங்குச் சென்றாலும் பார்க்கலாம். நேற்றுக் கூப்பிட்டிருந்தால் 'வரமாட்டேன்' என்று



இன் இறுமாப்புடன் இருந்திருப்பவர்கள்கூட, இன்று தாமும் தமிழர், தமிழர் இனம் என்று சொல்லிக் கொள்ள முற்படுகிறார்கள். ஆனால், இந்த நிலை என்றும் மாறாமல் நிலைத்திருக்குமாக!

—பேரறிஞர் அண்ணா.

[20-9-1945-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா மன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து.]



டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியாருக்குப் பொன்னாடை போர்த்துதல்

இராமசாமிப் புலவர், கந்தசாமிக் கவிராயர், நாவலர் சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி மு. கதிரேசஞ்செட்டியார், மகாவித்துவான் இராகவையங்கார், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், பல்கலைச் செல்வர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், டாக்டர் அ.சிதம்பரநாதன், முத்தமிழ் வித்தகர் லெ.ப. கரு.இராமனாதன் செட்டியார், ஆ. பூவராகம் பிள்ளை, தி. பொ. பழனியப்ப பிள்ளை, ஆர்.பி. அமிர்தலிங்கம் பிள்ளை, மு. அருணாசலம் பிள்ளை, கோ. சுப்பிரமணிய பிள்ளை, கல்வெட்டறிஞர் தி. வை. சதாசிவப்பண்டாரத்தார், டாக்டர் வ.சுப. மாணிக்கனார், உரைவேந்தர் ஔவை. துரைசாமிப்பிள்ளை, பண்டிதர் கி. இராமாநுச அய்யங்கார், லால்குடி நடேச முதலியார், உலக ஊழியர் ஈ.எஸ்.வரதராஜ ஐயர், மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், மு.சண்முகம்பிள்ளை, வி.மு. சோமசுந்தரம் பிள்ளை, டாக்டர் க. ஆறுமுகனார், டாக்டர் கு. தாமோதரனார், க. வெள்ளை வாரணனார், கே.என். சித்தாமணி, ஏ. இராமசாமி, அழகிய சொக்கலிங்கம் முதலியோர் பணியாற்றித் தமிழ்த்துறை விளங்கியிருக்கின்றது. இத் தமிழறிஞர்களின் தமிழ்ச் சால்பும், நுண்மாண் நுழைபுலமும் தெய்வத் தமிழ் மேல் அவர்கள் கொண்ட ஆராக் காதலும் தாம், தமிழ் மொழிக்குப் பேறாக அமைந்தன எனலாம்.

1925இல் பல்கலைக் கழகம் தோன்றுவதற்கு முன்பு மீனாட்சிக் கல்லூரியாக 1920இல் இப் பல்கலைக்கழகத்தின் தொடக்க உரு இருந்தபொழுது ''தமிழ் காத்தார்'' என்று போற்றப்படும் டாக்டர். உ,வே. சாமிநாதய்யர் தமிழ்க்கல்லூரி முதல்வராக இருந்து பெருமை சேர்த்துள்ளார்.

'தமிழிசைக் காவலர் முத்தையவேள்' கவிடிணி தேசிக விநாயகம் பிள்ளையைத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றப் பெரு முயற்சி எடுத்துக் கொண்ட வரலாற்றினைத் தமிழுலகம் நன்கறியும்.

## துணைவேந்தர் பதவியில் தமிழ்ப் பேராசிரியர்கள்

பல்கலைக் கழகங்களில் பொறுப்பும் சிறப்பும் உடைய பதவி, துணைவேந்தர் பதவியாகும். இப்பதவி, பல்கலைக்கழக இணைவேந்தர், மாநிலத்தை ஆட்சி செய்யும் அரசினர், நாட்டு ஆளுநர் இவர்களின் கலந்துரையாடலுக்குப் பின்வரும் கருத்தொப்புமையினாலேயே தீர்மானிக்கப்படுவதாகும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்த பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், முதலமைச்சர் பக்தவத்சலம் காலத்திலும், டாக்டர் வ. சுப. மாணிக்கனார், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.காலத்திலும் மதுரைப் பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தராக நியமனம் செய்யப் பெற்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நிகழ் நிலை துணைவேந்தர் பதவி ஏற்பட்ட காலங்களில் செந்தமிழ்க்காவலர் டாக்டர் சிதம்பரநாதனார் ஒரு முறையும், முத்தமிழ் வித்தகர் லெ. ப. கரு. இராமனாதனார் மும்முறையும் இருந்திருக்கின்றார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்களாக இருந்த சில பெரியார்கள் தமிழ்ப் பேராசிரியராக இல்லாவிட்டாலும், ஆழ்ந்த தமிழறிவும், தமிழ்க் காதலும் கொண்டவர்களாக விளங்கியிருக்கின்றார்கள். 1951-52இல் துணைவேந்தராக விளங்கிய ஆர்.கே. சண்முகம் செட்டியார், சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தைப் பதிப்பித்த பெருமைக்குரியவர். மேலும், அவர் டாக்டர் இராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடன் தமிழிசையைக் காத்த தானைத் தலைவர்களில் ஒருவராக விளங்கி இருக்கின்றார். அதுபோல 1955 முதல் 1961 வரையில் துணைவேந்தராகப் பணிபுரிந்த இ.மு. நாராயணசாமிப் பிள்ளை இறை இலக்கியங்களில் பெரும் ஈடுபாடு கொண்டவர். தமிழிசைச் சங்கத்தின் தலைவராக அவர் விளங்கி, நிலையான தமிழிசை வளர்ச்சிக்கு வழிகண்டவர்களில் ஒருவராகவும் விளங்கியுள்ளார். 1961-62இல் துணைவேந்தராக விளங்கிய வி. சுப்பிரமணியம் தமிழிலக்கிய அறிவும், தமிழ் வளர வேண்டும் என்ற வேட்கையுமுடையவராக விளங்கினார்.

## தமிழுக்கெனத் தனிச் சிறப்புகள்

ஆங்கில மோகம் கொடிகட்டிப் பறந்த வேளையில், சீரிளமைத் தமிழுக்குச் செட்டி நாட்டரசர் ஏற்றிய தமிழ்க் கொடி பட்டொளி வீசிப் பறக்கத்தொடங்கியது. தமிழுக்கென்று தனித்துறை கண்ட கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம். தமிழுக்கென்று கலைப்பிரிவு, கீழ்த்திசைப் பிரிவு, ஆராய்ச்சிப் பிரிவு என்ற மூன்று பிரிவுகளை அமைத்து மூன்று துறைகளுக்கும் பேராசிரியர்களை நியமித்த சிறப்புடையது. பிற துறை ஆசிரியர்களை விடக் குறைந்த ஊதியம் வாங்கிய தமிழாசிரியர்களுக்கும் ஒத்த ஊதியம் முதன் முதலாகக் கொடுத்த பெருமையுடையது. தமிழில் சிறப்பாக ஆராய்ச்சி செய்ததற்காக அ. சிதம்பரநாதனாருக்கு டாக்டர் பட்டம் முதன் முதல் கொடுத்தும், நெடுங் காலம் நிலையான தமிழ்த் தொண்டு ஆற்றியதற்காக நாவலர் சோமசுந்தர பாரதியார்க்குப் பல்கலைக் கழக் வெள்ளி விழாவில் டாக்டர் பட்டம் அளித்தும் சிறப்பினைக் கொண்டது. தமிழில் பி.ஏ. ஆனர்சு, புலவர், ஆசிரியப் பயிற்சி போன்ற பட்ட வகுப்புகள் முதல் முதலாக ஏற்படுத்தியது இப்பல்கலைக் கழகத்தில்தான்.

## தமிழ்ப் படிப்புகள் :

தமிழுக்கென்று தனியே பல பட்டப் படிப்புக்களைக் கொண்டிலங்குவது இப்பல்கலைக் கழகம், தமிழ் பி.ஏ., எம்.ஏ., பி.ஓ.எல்., எம்.ஓ.எல், புலவர், எம்.பில்., டாக்டர் முதலிய பல பட்டப்படிப்புகள் நாட்டின் பல்வேறிடங்களிலிருப்பினும் இப்பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் பெரிதும் விரும்பி வந்து பயின்று சிறக்கின்றனர். ஆங்கிலம், கலை, அறிவியல் போன்ற பட்டப் படிப்புக்களில் தமிழை முதற்பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவர்கள் சுமார் ஈராயிரவர் உள்ளனர். பட்டப் படிப்பு நிலையில் வரலாறு, பொருளாதாரம், வணிகவியல் முதலிய துறைகளைத் தமிழ் வாயிலாகவும் பயின்று வருகின்றனர். தமிழ்த்துறையில் பல்வேறு இலக்கண இலக்கியங்களைப் பற்றி இதுவரை பதினான்கு கருத்தரங்குகள் நடந்துள்ளன.

இவ்வறிவாலயத்தில் தமிழ்ப் படித்துப்பட்டம் பெற்று இன்று நாட்டிற்கும் மொழிக்கும் காவலராகவும் தூதுவர்களாகவும் விளங்குபவருள் நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன், குமரி அனந்தன், ப. நெடுமாறன், ந.ரா. முருகவேள், கவிஞர் உலகநாதன், அறிவுடைநம்பி, திருமாறன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்

இப் பல்கலைக் கழகத்தில் பயின்றவரான டாக்டர் முத்து சண்முகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைத் தலைவராகவும், டாக்டர் க. ஆறுமுகனார் டெல்லி பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் தலைவராகவும், டாக்டர் சிங்காரவேலு உஸ்மானியா பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகவும், டாக்டர் இளையபெருமாள், திருவனந்தபுரம் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவராகவும் விளங்கி வருகிறார்கள்.

மேலும், இப்பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்றவர்களான டாக்டர் வி.ஐ. சுப்பிரமணியம் திருவனந்தபுரம் மொழியியல் துறை இயக்குநராகவும், தலைவராகவும், டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் தமிழ்நாட்டுக் கல்லூரித் துணை இயக்குநராகவும், தி.அ. அழகிய சொக்கலிங்கம் மதுரை காமராசர் பல்கலைக் கழகக் கல்லூரிகளின் இணைப்பாளராகவும், டாக்டர் ச. வே. சுப்பிரமணியம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராகவும், டாக்டர் இரா. சாரங்கபாணி காரைக்குடி அழகப்பா கல்லூரித் தமிழ்த்துறை தலைவராகவும், டாக்டர் மெ. சுந்தரம் மாநிலக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகவும், வ. பெருமாள் மைசூர் உரிகம் தமிழ்த்துறைத் தலைவராகவும், திருவாட்டி சரோஜினிதேவி பழனியாண்டவர் மகளிர் கல்லூரி முதல்வராகவும், கொண்டல் கே. எஸ்.மகாதேவன் தமிழ் வளர்ச்சிக் கழக இயக்குநராகவும், டாக்டர் கு. திருமேனி தேசியக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவராகவும், செல்வி சோ. பாரதி திருக்குற்றாலம் பராசக்திக் கல்லூரி முதல்வராகவும், டாக்டர் பா. சௌந்தரா தூத்துக்குடி மகளிர் கல்லூரி முதல்வராகவும் இருந்து வருகிறார்கள்.

இங்கு பயின்று பல கல்வி நிலையங்களில் பல்லாற்றானும் தமிழ்த் தொண்டாற்றி ஓய்வு பெற்றுள்ள பேராசிரியர் சரவண ஆறுமுக முதலியார், அ.ச. ஞானசம்பந்தம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள். டாக்டர் தனிநாயக அடிகள், டாக்டர் ப. அருணாசலம் இருவரும் அக்கரைச் சீமையில் தமிழ் வளர்த்தவர்கள்.

## தமிழ் ஆராய்ச்சி

தமிழ்த் துறைக்கென்று தனி ஆராய்ச்சித் துறை 1952ஆம் ஆண்டு தொடங்கப்பட்டாலும், பல்கலைக்கழகத் தொடக்கக் காலம் முதற் கொண்டே தமிழறிஞர் குழாம் தமிழ் ஆராய்ச்சிப் பணியைத் தொய்வின்றி மேற்கொண்டு வந்திருக்கின்றன. தமிழ் மொழி உள்ளளவும், ஆய்வாளர்கள் அறிய விரும்பும் ஆராய்ச்சிக் கருத்துக்களைத் தமிழ் ஆராய்ச்சியாளர்கள் வெளியிட்டுள்ளனர்.

## வரலாற்று நூல்கள்

ஆங்கில இருட்டில் கிடந்த தமிழ்நாட்டு வரலாற்றையும், தமிழிலக்கிய வரலாற்றையும் துருவியாராய்ந்து பொதுமக்களுக்கும், தமிழ் வாணர்களுக்கும் பல்கலைக்கழகம் வெளியிட்டிருக்கின்றது. கல்வெட்டறிஞர் தி.



டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துதல்



## விபுலானந்தர்

வை.சதாசிவபண்டாரத்தார் பிற்காலச்சோழர் வரலாறு, இருண்ட காலத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி. 250 முதல் 600 வரை), கி.பி. 13, 14, 15ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாறு, ஔவை சு. துரைசாமிபிள்ளை எழுதிய கி.பி. 7ஆம் நூற்றாண்டு முதல் 10ஆம் நூற்றாண்டு வரை உள்ள தமிழிலக்கிய வரலாறு, ஈ.எஸ். வரதராஜய்யர் எழுதிய கி.பி. 1 முதல் 1100 வரை முடிய உள்ள சைன, புத்த, வைணவ, வரலாறு ஆகியவை தெளிவான வரலாற்று நூல்களாகும். மேலும், சில வரலாறுகள் பல்லோர் பாராட்ட வெளிவந்திருக்கின்றன. இரா. இராகவையங்காரின் 'தமிழ் வரலாறு' தமிழ்த்துறை ஆசிரியர்கள் எழுதிய 'தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம்' முதலியன அவைகளில் குறிப்பிடத்தக்கன.

### கம்பராமாயணம்

ஒரு காலத்தில் கம்பர் என்றால் அவர் பிறந்த தேரழுந்தூர் நினைவுக்கு வரலாம். ஆனால், இன்று கம்ப இராமாயணம் என்று கூறிடும்போது பல்கலைக்கழகம் தன் வெள்ளி விழாத் தொடக்கத்திலிருந்து வெளியிட்ட கம்பராமாயணப் பதிப்புக்கள் நினைவுக்கு வரும். கம்பராமாயணப் பழைய பதிப்புக்களையும், ஐம்பதுக்கு மேற்பட்ட ஓலைச்சுவடிகளையும் வைத்துப்பாட பேதங்களைக் கண்டறிந்து, உண்மையான மூல பாடங்களைத் தெரிந்தெடுத்து, அப்பாடல்களுக்குரிய பொருளையும், சிறப்பினையும், தக்காரைக் கொண்டு எழுதிக் கம்பராமாயணம் முழுமையும் ஆறு காண்டங்களாகப் பதினாறு தொகுதிகளாகச் செம்பதிப்பாக வெளியிட்டு மிக உயர்ந்த பணியைப் புரிந்துள்ளது இப்பல்கலைக் கழகம். இச் செம்பதிப்புகள் தன் நேரில்லாத் தலைவன் என்று அழைப்பது போல தன் நேரில்லாப் பதிப்புக்களாக விளங்குகின்றன. மூலபாடத்தை மட்டும் கொண்ட ஏழாவது காண்டமான உத்தரகாண்டம் தக்க பதிப்பே இல்லாமல் இருந்தது. ஆனால், இன்று மூலத்துடன் விளக்கவுரை, தெளிவுரை வித்வான் வேங்கடராமச் செட்டியார் அவர்களால் சிறப்பாக எழுதப்பட இன்று பொன்விழா வரும் இவ்வேளையில் அப் பெரும்பணி முழுமையடைகிறது.

பல்கலைக் கழகத்தின் கம்பராமாயணச் செம்பதிப்புகள், ஆங்கில நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பி



டாக்டர் உ.வே.சா

யரின் செம்பதிப்புகளோடு எண்ணத்தக்கவை.

### சங்க இலக்கியங்கள்

சங்கத் தமிழ் இலக்கியங்களுக்கு உரைகளையும், நயங்களையும் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ளது. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை உரை எழுதிய 'ஐங்குறுநூறு', இரா. இராகவையங்கார் எழுதிய 'குறுந்தொகை விளக்கம்', 'பெரும்பாணாற்றுப்படையாராய்ச்சி,' பட்டினப்பாலை ஆராய்ச்சி முதலியன தமிழ்த் தும்பிகள் விரும்பும் நல்ல இலக்கியத் தேனடைகளாகும்.

### சமய நூல்கள்:

சமய நூல்கள் பலவற்றைப் பல்கலைக் கழகம் போற்றிப் பொதுமக்களுக்குப் புரியும் வகையில் வெளியிட்டுள்ளது. என். கந்தசாமிப் பிள்ளையவர்களின் திருவாசகப் பதிப்பும், வித்வான். வெள்ளைவாரணாரின் பன்னிரு திருமுறை வரலாறும், சித்தாந்த புலவர் சிவப்பிரகாச தேசிகரின் திருமந்திர உரையும், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளையவர்களின் ஞானாமிர்தமும், சிவஞானபோதச் சிற்றுரையும், வள்ளலார் பாடல்களுக்கு விளக்கமும் இன்னபிற சில சமயப் பதிப்புகளும் பெரிதும் வரவேற்கப்படும் நூல்களாக விளங்கி வருகின்றன.

### இலக்கண நூல்கள்

இலக்கண நூல்கள் பலவற்றைப் பல்கலைக் கழகம் மாணவர்களுக்கு மிகக்குறைந்த விலையில் வெளியிட்டுள்ளது. மாணவர்களுக்கு உதவிபுரியும் இத்திட்டத்தின் அடிப்படையில் யாப்பருங்கலக்காரிகை, நம்பியகப் பொருள், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் முதலிய நூல்கள் வெளிவந்துள்ளன.

### மொழி பெயர்ப்புகள்

மொழி பெயர்ப்புப் பணிகளிலும் பல்கலைக்கழகம் முன்னின்று தொண்டாற்றி இருக்கின்றது. கௌடல்யரின் அர்த்தசாஸ்திரத்தைப் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரும், அறிஞர் பி.எஸ். இராமானுசாச்சாரியாரும் மொழி பெயர்த்ததோடு மட்டுமின்றி, விளக்கவுரைகளோடு கூடிய ஒப்பீட்டாய்வினையும் செய்துள்ளனர். இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்

கா.சு.பிள்ளை



இராதாகிருஷ்ணன் தொகுத்த கீழை, மேலைநாட்டுத் தத்துவ வரலாறுகளை இராவ்சாகிப் கு. கோதண்டபாணிபிள்ளையும், சி. இராமலிங்கமும் மொழி பெயர்ப்பு நூலென்றறியாத வகையில் மூலநூல் போல் மொழி பெயர்த்துள்ளனர்.

### தமிழிசை நூல்கள்

நிறுவியவரின் இலட்சியத்திற்கேற்பத் தமிழிசைத் துறைக்கும் இப்பல்கலைக்கழகம் நிரம்பத் தொண்டாற்றி வருகிறது. முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ணபாரதி, பெ. தூரன், சுத்தானந்த பாரதி, முத்துசாமிக் கவிராயர், இராமசாமி நாயர் முதலிய இசைவாணர்களுடைய பாடல்களையும் இருபது நூல்களாக வெளியிட்ட பெருமையைப் பல்கலைக் கழகம் பெற்றுள்ளது. இசைப்பாடல் தொகுப்புகளேயன்றி இசைக் கருவிகள் பற்றியும், அவற்றை இயக்கும் முறைகள் பற்றியும் நூல்கள் வெளிவந்துள்ளன. இத்துறையில் இசைக்கடல் நீந்திய டைகர் வரதாச்சாரி, சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, இசையரசு தண்டபாணி தேசிகர் முதலியவர்கள் பணியாற்றி இசைத்தமிழ் வளர்த்திருக்கின்றனர். இத்துறையில் ஓவியம், நாடகம் முதலிய கலைகளும், சான்றிதழ்ப் படிப்பாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டன.

இந்நூற்றாண்டுப் படைப்பிலக்கிய வரிசையில் இடம் பெறத்தக்கது 'பாரிகாதை' என்ற காவியமாகும். இரா. இராகவையங்கார் இதனை இயற்றி

டாக்டர்
அ.சிதம்பரநாதனார்



யுள்ளார். பண்டைத் தமிழகத்தில் 'பட்டினப் பாலை' கரிகாற் பெருவளத்தான் அரங்கேற்றப் பெற்றது போல இக்காவியமும் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா மண்டபத்தில் இன்றைய இணைவேந்தர் முத்தைய வேள் முன்னர் அரங்கேறியது. அந்நாளில் ஆயிரம் வெண் பொற்காசுகளை அவர் திருக்கரத்தால் காவியப் புலவருக்களித்தார் என்பது நினைவுகூர்தற்குரியது. 1926இல் வெளியிடப்பட்ட பல்கலைக் கழக முதல் தமிழ் வெளியீடே இந்நூல்தான்.

### பரிசு நூல்கள்

தமிழக அரசின் பரிசினைப் பல்கலைக்கழக வெளியீடான டாக்டர் வ.சுப. மாணிக்கத்தின்



பண்டிதமணி
கதிரேசன் செட்டியார்

கம்பர் எனும் நூலும், வித்வான் க.வெள்ளைவாரணாரின் 'பன்னிரு திருமுறை வரலாறு' என்ற நூலும் பெற்றமை பல்கலைக் கழக வெளியீட்டகத்திற்குக் கிடைத்த பெருமையாகும்.

### 500 நூல்கள்

அனைத்துத் துறைகளிலும், பன்மொழிகளிலும் பல்கலைக் கழக வெளியீட்டகம் 500க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுப் பிற பல்கலைக்கழகங்களுக்கில்லாத் தனிச் சிறப்பினைப் பெற்றுள்ளது.

### அறக்கட்டளை வெளியீடுகள்:

சில அறக்கட்டளைகளின் வழி



சதாசிவப்
பண்டாரத்தார்

யாக, பல அரிய நூல்கள் அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது திருக்குறள் ஆய்வுக்காகப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த தொகை மூன்று இலட்சம். இந் நிதியத்திலிருந்து ஆறு ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை தம் தாயார் சொருணாம்பாள் பெயரில் அளித்த நிதியத்திலிருந்து இதுவரையில் பதினெண் புலவர்களின் படைப்பாற்றல் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்ந்துள்ளன. அவை பதினெட்டு நூல்களாக வெளிவந்துள்ளன.

திருப்பனந்தாள் திருமடம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வழியாக மக்களுக்கு மலிவுப் பதிப்புகளாகச் சமயம், தமிழ் தொடர்பான நூல்கள் கிடைக்க வழி வகை செய்துள்ளது. அந்த அடிப்படையில் ஒரு பெரும் அறக்கட்டளை நிறுவியுள்ளது. அடக்க விலையில் 1/8 பங்கு விலையில் விற்க வேண்டுமென்ற திட்டத்தில் இதுவரை இருபதுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. பொதுவுடைமை நாட்டு நூல்களை விடத் திருப்பனந்தாள் நிதிய மலிவு வெளியீடுகள் விலை குறைவானதாகும்.

### ஆய்வுப் பட்டங்கள்

பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் இதுவரை 15 டாக்டர் பட்டங்களும், 35 எம்.லிட். பட்டங்களும் ஆராய்ச்சி செய்த ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ளன. இவ் வாய்வுகளை ஆய்

85329

வாளருக்கு மட்டும் பயன்தரா மல் பலருக்கும் பயன்படும் வகையில் பல்கலைக் கழகப் பதிப்புகளாக மானியக்குழு நிதி உதவியுடன் வெளிவந்துள்ளன.

### மொழியியல் துறை

உலக மொழிகளின் ஆய்வகமாகவுள்ள மொழியியல் துறை, நெறியாளர் டாக்டர் எஸ்.அகஸ்தியலிங்கம் தலைமையில் வடிவும் வனப்பும் பெற்று பெருமிதத்துடன் இயங்கி வருகின்றது. வெள்ளி விழாவின்போது வித்தாக விழுந்த இத்துறை பொன் விழாவின்போது ஆலமரமென வளர்ந்திருக்கின்றது. உலக மொழிகளின் ஆராய்ச்சி மட்டுமின்றித் தமிழ் ஆராய்ச்சிகளையும் இத்துறை மேற்கொண்டுள்ளது. கால் நூற்றாண்டில் 100 நூல்களை வெளியிட்டுள்ள இத்துறையில் நடைபெறும் பல கருத்தரங்குகள் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் உரமாக உள்ளன. டாக்டர். தெ. பொ. மீ. அவர்கள் தமிழ், மொழியியல் ஆகிய இரு துறைகளுக்கும் தலைமைப் பொறுப்பேற்றிருந்தது போல டாக்டர் அகஸ்தியலிங்கம் அவர்களும் இப்பொழுது இரு துறைகளுக்கும் தலைமை ஏற்றுள்ளார். சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் இத்துறையின் தமிழ் வளர்ச்சியை வியந்து ''ஆங்கிலச் செவிலியின் வழியாகத் தமிழ்க் காதலியின் கருத்துகள் உலக அரங்கில் பரப்பப்படுகின்றன'' என்று புகழ்ந்துள்ளார்.

### முத்தைய வேளும் தமிழும்

அறத் தந்தை அண்ணாமலை வள்ளலின் அடிப்படைக் குறிக்கோள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும். அக்கொள்கைக் கோமான் தன் காலத்தில் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டது போலவே இன்றைய இணை வேந்தர் முத்தையவேளும் எங்கெங்குத் தமிழ் வளர்ச்சியுண்டோ அங்கெல்லாம் தோன்றாத் துணையாக - தமிழ்க் காவலராக விளங்கி வருகின்றார்கள். தமிழுக்குக் கொடுத்துச் சிவந்த புரவலர் முத்தைய வேளின் பொற்கரங்களால் பொன்னாடை போர்த்தப்பட்ட தமிழ்ப் பெரியார்கள் பலருண்டு. அத்தகைய சிறப்பினைப் பெற்றவர்கள் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, பன்மொழிப் புலவர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், கல்வெட்டறிஞர் தி.வை. சதா



சிவப்பண்டாரத்தார், வரலாற்றறிஞர். மு. இராசமாணிக்கனார், பேராசிரியர் கோ. சுப்பிரமணிய பிள்ளை, செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனார் முதலியோராவார்கள்.

பல்கலைக் கழக வளர்ச்சியில் பண்பாளர் முத்தைய வேளுக்குப் பொதுப் பார்வை உண்டென்று சொன்னாலும், தனித் தமிழ்க் கண்ணோட்டம் தமிழ்த் துறை வளர்ச்சியில் உண்டென்று உலகோர் அறிந்த ஒன்றாகும்.

இப் பல்கலைக் கழகத்தின் மலைக்கத்தக்க வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணம் என்ன?

பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராகவுள்ள முத்தையவேள் அவர்கள், நாளும் பல்கலைக் கழகத்தின் மேன்மையைச் சிந்தித்துச் செயலாற்றுவதுதான்! பரந்த அறிவும் எதிர்கால நோக்கும் நாட்டின் நடப்பிற்கேட்ப ஒன்றினைச் சீர்தூக்கிப் பார்க்கும் சிந்தனையும், பல்கலைக்கழகத்தின் பூரித்த வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றன. முத்தைய வேள் இப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராக இருக்கும் பேற்றினை நாடு பெற்றதால் அறிவு ஆராய்ச்சியுலகம் போதிய ஊக்கம் பெற்றுள்ளது. சிறப்பாகத் தமிழ் மக்கள் பெரிதும் பயனடைந்து வருகிறார்கள்.

### கல்விக்கோயில்

வளர்ச்சியின்றி ஒரு கழகம் தன் வயதால் மட்டும் விழாக் கொள்வதுண்டு. ஆனால், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், கடலை அள்ளிக் குடித்த அகத்தியர் வந்தாலும் கூடக் குடிக்கவும் சீரணிக்கவும் முடியாத நிலையில் ஆழ்ந்தகன்று நீண்ட வரலாற்றினைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாகப் பெற்று வளர்ந்து வந்துள்ளது. 700 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டு அமைந்துள்ள இக்கலைக் கோயில் 32 படிப்புத் துறைகளையும், 350 ஆசிரியர்களையும், 7,000 மாணவர்களையும் கொண்டுள்ளது. இதன் துணைவேந்தராகவும் காவலராகவும் இப்பொழுது விளங்குபவர் புகழ் பூத்த நடுவரான திரு பி.எஸ். சோமசுந்தரனார் அவர்கள். மதுரையம்பதி இறைவன் சோமசுந்தரக்கடவுள் தமிழறிந்தவராக விளங்கியமையால் ஒரு தலைவி, தமிழையே தூதுவராக விடுத்தாள்; சிற்றிலக்கிய வரலாற்றில் அந்நூல் வனப்பும் உயர்வும் பெற்று விளங்குகிறது. தமிழ்வாணர்கள் தில்லையம்பதியின் எல்லையிலுள்ள அண்ணாமலைக் கலைக் கோயிலின் நாயகரான சோமசுந்தரனாரிடம் தம் நெஞ்சங்களைத் தூதராக அனுப்பிப் புதிய இலக்கியங்களை உருவாக்கி வருகின்றனர்.

### அடிப்படை உணர்வுகள்

''தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை'' என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். சாவா இலக்கியங்களைப் பெற்ற மூவாத் தமிழுக்கு. என் கடன் தமிழ்ப் பணி செய்து கிடப்பதே'' என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பணிபுரிந்து வருகின்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆரவாரமற்ற முறையில் அடக்கமாக, ஆனால், அழுத்தமாகத் தமிழ்த் தொண்டினைச் செய்து வருகிறது. தமிழ்ப் பாதுகாப்புத் தாய்மை உணர்ச்சி அதன் அடிப்படை உணர்வாகும். இந்நல்லுணர்வுகள் இருப்பதால் தான் தமிழென்று நினைக்கிற பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகமே தமிழ்ப் பெருங்குடி மக்கட்கு நினைவுக்கு வருகின்றது. புலவர்களுக்கு ஒரு காலத்தில் புரவலர்கள் பழுத்த மரங்களாக விளங்கினார்கள். அத்தகைய தமிழ்க் காதலுடையார்க்கு இன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஊருணியாகவும், பழுத்த மரமாகவும் விளங்கி வருகின்றது.

''அண்ணா மலைக்கழகம்
சேரார்க்கு அறிவுப்
பெரும்பசி மாற்ற லரிது''

''பொறியுழவு பொங்குதமிழ்
இன்பம் நிலைக்கும்
கலையறிவு மாநகரில் காண்''

''அறமாம் அரசின்
அடிப்பணிந்தார்க் கல்லால்
இசைக்கடல் நீந்த லரிது''—

என்ற புது வாழ்த்துக் குறள் மலர்கள் பாடும் அளவிற்கு இறைவனுக்காக வடக்கே இமயமலை உயர்ந்திருப்பது போலத் தேன் தமிழிற்காகத் தெற்கே அண்ணா மலை உயர்ந்துள்ளது!



# பெருமைக்குரிய பொறியியல் கல்வி



பேராசிரியர்
வீர. முத்துவீரப்பன்
விரிவுரையாளர்
அரு. இராமநாதன்

நாட்டின் முன்னேற்றத்தில் பொறியாளர் பங்கும், சிறந்த பொறியாளர்களை உருவாக்கும் பணியில் பொறியியல் கல்வியின் பங்கும் இன்றியமையாதவை.

தமிழகப் பொறியியல் கல்லூரிகள் பல சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற தொழில் நகரங்களிலேயே அமைந்துள்ளன. தொழில் துறையில் பின்தங்கிய பகுதியொன்றில் கிராமியச் சூழலில் பொறியியல் கல்வித்துறையினைத் தோற்றுவித்த முதல் நிறுவனம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். தமிழகத்திலேயே இரண்டாவதாக இப் பொறியியல் துறை 1945-ஆம் ஆண்டில் இப் பல்கலைக்கழகத்தில் தோற்றுவிக்கப்பட்டது. வேதியியல் பொறியியல் துறை, வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியாரின் நன்கொடை ரூ. 5இலட்சத்துடன் துவக்கப்பெற்றது.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய அண்டை மாநிலங்களிலிருந்தும், வடநாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் இத்துறையில் பயின்று பயனடைந்து வருகிறார்கள். குறிப்பாக தென் ஆர்க்காடு, தஞ்சை மாவட்டங்களைச் சேர்ந்த பிற்பட்டோரும் பிறரும் இப்பல்கலைக் கழகப் பொறியியல் துறையில் பயின்று இன்று சிறந்த பொறியாளராக விளங்கி வருகிறார்கள். இதுவரை சுமார் 6000 பொறியாளர்களை இத்துறை உருவாக்கியிருக்கிறது. இங்கே பயின்ற பலர் நம் நாட்டில் மட்டுமன்றி, வெளிநாடுகளிலும் மிக முக்கியமான பதவிகளை வகித்து செவ்வனே பணி புரிந்து வருகின்றனர். இன்று நம் நாட்டிலுள்ள முதன்மைப் பொறியார்களில் பலர் இங்கே உருவானவர்கள். தமிழக அமைச்சர்களாக இன்று சிறந்து விளங்கும் மாண்புமிகு திரு எஸ். இராமச்சந்திரன் அவர்களும், மாண்புமிகு திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களும் இங்கே முறையே மின்னியல் துறையிலும், கட்டடவியல் துறையிலும் பட்டம் பெற்றவர்கள். இங்கே தோன்றிய வேதியியல் பொறியாளர் சிலர் சிந்திரி உரத் தொழிற்சாலையில் பெற்ற அனுபவமும் பயிற்சியும் தான், தமிழகத்தில் பல உரத் தொழிற்சாலைகள் அமையக் காரணமாயிருந்தன.

### வளர்ச்சி

துவக்கத்தில் 60 ஆக இருந்த மாணவர் சேர்ப்பு எண்ணிக்கை இன்று 300-ஐ எட்டியிருக்கிறது. 1945ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட பொறியியல் துறை, இன்றோ, கட்டடவியல், இயந்திரவியல், மின்னியல், வேதியியல், கட்டட அமைப்புவியல் என ஐந்து வெவ்வேறு துறைகளாக வளர்ந்திருக்கிறது. இவை தவிர, அரிசித்தொழில் வளர்ச்சிக்கான ஆய்வு மற்றும் விரிவுப் பணிகளுக்கென மத்திய அரசு விவசாய அமைச்சர்உணவுத்துறையின்முழு நிதி உதவியுடன் அரிசிஆலையை நவீனமாக்கும் திட்ட விரிவுப் பணி மையம் இயந்திர வியல் துறையின் ஓர் அங்கமாக அமைந்திருக்கிறது. ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கும், அண்மைத் தொழிற் கூடங்களுக்கும் பெரிதும் உதவ இருக்கும் 'கம்ப்யூட்டர்' மையம் பல்கலைக் கழக மானியக் குழுவின் ரூ. 39 இலட்சம் நிதி உதவியுடன் இப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே பொறியியல் துறையில் பல புதிய சோதனைக் கூடங்கள் ஏற்பட்டிருப்பதோடு, இருக்கின்ற சோதனைக்கூடங்களிலும், பொறியியல் பட்டறைகளிலும் புதிய சாதனங்கள் பல சேர்க்கப்பட்டு இத்துறை சிறந்து விளங்குகிறது.

### பாடத்திட்டங்கள்

இயந்திரவியல், மின்னியல், வேதியியல், கட்டடவியல் ஆகிய நான்கு துறையினரும் தத்தம் துறையில் முழுநேரப் பட்டப் படிப்பினையும் (பி.இ), முழு நேரப் பட்ட மேற்படிப்பினையும் (எம்.இ) அளித்து வருகின்றனர். இப்படிப்புக்களின் பாடத்திட்டங்கள் விஞ்ஞான முன்னேற்றம், நவீனக் கண்டுபிடிப்புகள் இவற்றிற்கேற்ப சமுதாயம் பயன்பெறும் வகையில் அவ்வப்போது மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் 'மின் அணுவியலும் கருவியியலும்' 'இயந்திரம் மற்றும் உற்பத்தியியல்', 'கட்டட அமைப்பியல்' என்ற மூன்று புதிய பி.இ. பாடத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கட்டட அமைப்பியலில் பட்ட மேற்படிப்பு (எம்.இ) 1953ஆம் ஆண்டு பாரதத்திலேயே முதலாவதாக இங்குதான் துவக்கப்பட்டது,

### பகுதிநேர வகுப்புகள்

தொழிலகங்கள் அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரசுத்துறைகள் இவற்றில் பணிபுரியும் பொறியாளர்கள் தங்கள் தகுதியினையும், தொழில் நுட்ப

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயாராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித்தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI


அறிவினையும் வளர்த்துக்கொள்வதற்கெனப் பகுதிநேர மாலை வகுப்புக்கள் இந்த ஆண்டிலிருந்து நடத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 'டிப்ளமா' தாரர்களுக்கு பி.இ. வகுப்புகளும் பட்டதாரிகளுக்கு எம்.இ.வகுப்புகளும் நடைபெறுகின்றன. பயில்வோரின் பதவி உயர்வுக்கு வழி வகுப்பதோடு அவர்கள் பணியாற்றும் நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் இக்கல்வி துணை நிற்கும். இங்கே பணிபுரியும் ஆசிரியர்கள் சிலர் பொறியியல் துறையில் ஆராய்ச்சி (பிஎச்.டி) பட்டம் பெறுவதற்கெனப் பகுதிநேர ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**கம்ப்யூட்டர் மையம்**

இம்மையம் கீழ்க்கண்ட குறிக்கோள்களுக்காகப் பயன்படும்:

1. கம்ப்யூட்டரைப் பயன்படுத்துவதற்கு மாணவர்களைப் பயிற்றுவித்தல்.
2. ஆராய்ச்சி மாணவர்களுக்குச் சிறந்த கருவியாகப் பயன்படுதல்.
3. அருகிலுள்ள தொழிலகங்களுக்கு விரைவில் தயாரித்தளிக்கும் பணிக்காகப் பயன்படும்.
4. கம்ப்யூட்டர் தொடர்பான பாடத்திட்டங்கள் ஏற்படுத்தி வகுப்புகள் நடத்துதல்.





**பிராந்திய விரிவுப்பணி மையம்- அரிசி ஆலை நவீனமாக்கும் திட்டம்:**

இந்தமையம் 1977ஆம் ஆண்டு மத்திய அரசு விவசாய அமைச்சின் உணவுத் துறையினரால் ரூ. 14.3 இலட்சம் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இங்கு சத்துமிக்க அரிசியினை சேதமின்றித் தயாரிப்பதுகுறித்து பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அரிசி ஆலைகளை நவீனம் செய்ய முன்வருவோருக்கு இலவசமாகத் தொழில் நுட்பம் வழங்குவதோடு வங்கிகளில் கடன் பெறுவதற்கும் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகிறது.

**பயிற்சிகள்**

நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷனைச் சார்ந்த பொறியாளர்களுக்கு இப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு பொறியியல் துறையினர் பயிற்சி வகுப்புகளை நெய்வேலியில் நடத்தியிருக்கின்றனர். பிராந்திய விரிவுப்பணி மையம் இந்த ஆண்டு கூட்டுறவு முறையில் இயங்கிவரும் அரிசி ஆலை அதிகாரிகளுக்கு (12 பேர்) 'அரிசி ஆலை நவீனம் பற்றிய தீவிரப் பயிற்சியினை அளித்தது. இதே போன்று ஆபரேட்டர்களுக்கு (கைவினைஞர்கள்) பயிற்சி அளிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

**ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும்**

விஞ்ஞான முறையில் செயல்படும் கதிரவ நெல் உலர்த்தி (நாளைக்கு 1 டன் திறன்) இந்தியாவிலேயே முதன் முதலாக அண்ணாமலைப் பல்கலைக்கழக இயந்திரவியல் துறையினரால் தான் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கருவி நெல்லை, தொட்டி ஒன்றினுள் வெப்பக்காற்றின் உதவியால் ஒரே சீராக உலர்த்துகிறது. எனவே, (களத்தில்) திறந்தவெளியில் உலர்த்துவதால் ஏற்படும் சேதமும், சீரில்லாமல் உலர்ந்த நெல்லை அரைக்கும் போது ஏற்படும் அரிசி சேதமும் தவிர்க்கப்படுகின்றன. இந்த உலர்த்தி பெரிய அளவிலான நவீன ஆலைகளில் பயன்படுத்தப் பட்டால் பெருமளவு எரி எண்ணெய்யைச் சேமிக்க இயலும். பாரதப் பிரதமரால் பாராளுமன்றத்தில் 20-7-1978 அன்றுபுகழ்ந்துரைக்கப்பட்ட இக் கண்டுபிடிப்பினை அடிப்படையாகக் கொண்டு பெரிய அளவிலான (நாளைக்கு 10 டன்) உலர்த்திகள் நாட்டில் சில இடங்களில் அமைக்கப்பட்டு கணிசமான எரி எண்ணெய்யை சேமிக்க உதவி வருகின்றன.

நெல்லை நீரில் ஊறவைக்கும் போது குறிப்பிடத்தக்க அரிசியும், ஊட்டச்சத்துக்களும் கரைந்து விடுகின்றன. இதனை அகற்றும் புதிய புழுங்கல் முறை ஒன்றினையும் இயந்திரவியல் துறை கண்டுபிடித்திருக்கின்றது. இம்முறையில் அதிக அளவு அரிசி கிடைப்பதோடு, அரிசி சத்துமிக்கதாகவும் எவ்வித நாற்றமின்றியும் இருக்கிறது.

குறைந்த செலவில் அரிசி







ஆலைகளை நவீனமாக்கும் முறை விலை குறைந்த 'கப்-கோன்' இயந்திர நெல் உலர்த்தி, வெப் பக்காற்றை உருவாக்கும் உமி உலை இவை பிராந்திய பணி மையத்தின் கண்டுபிடிப்புகளில் சில.

நெல் உமிச் சாம்பலிலிருந்து சிமெண்ட் தயாரிப்பதற்கான ரூ.3.3 இலட்சம் ஆராய்ச்சித் திட் டம் கட்டட அமைப்பியல் துறை யினரால் மேற்கொள்ளப்பட்டுள் ளது.

உமிச் சாம்பலிலிருந்து 'சோடி யம் சிலிகேட்' என்னும் சோப்புத் தொழிலுக்குப் பயன்படும் இரசா யனப் பொருள் தயாரிக்கும் திட் டம் ரூ. 2½ இலட்சம் நிதி உதவி யுடன் வேதியியல் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாதுவிலிருந்து நேரடியாக தாமிர சல்பேட் தயாரித்தல், கரியமிலவாயு முறையில் சோடி யம் டைகுரோமைட் தயாரித்தல். சிட்ரிக் அமிலம் தயாரித்தல் இவை வேதியியல் துறையின் கண்டுபிடிப்புக்களில் சில.

## விரிவாக்கப்பணிகள்

நெல் மற்றும் தானியங்களை உலர்த்துதல், புதிய புழுங்கள் முறை போன்ற அரிசி ஆலைத் துறைக் கண்டுபிடிப்புகள் பல, சிறு வெளியீடுகள், நாளிதழ்கள், வானொலி இவற்றின் வாயிலாக மக்களுக்கு எடுத்துரைக்கப்படு கின்றன. அரிசி ஆலை நவீன மாக்குதல் பற்றிய கருத்தரங்கு கள் அண்ணாமலை நகரில் ஒன் றும், சேலத்தில் மற்றொன்றும் நடத்தப்பட்டன. நவீன இயந் திரங்களின் செயல் விளக்கக் காட்சிக்கு அவ்வமயங்களில் ஏற் பாடு செய்யப்பட்டது. அண்ணா மலை நகர் கருத்தரங்கில் தமி ழக உணவு அமைச்சர் மாண்பு மிகு திரு ஜி.ஆர். எட்மண்ட் அவர்களும், சேலம் கருத்தரங் கில் மத்திய விவசாய ஸ்டேட் அமைச்சர் மாண்புமிகு திரு பானு பிரதாப்சிங் அவர்களும் பங் கேற்றுச் சிறப்பித்தனர்.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கதிரொளி ஆற்றல் கருவிகள் அனைவரையும் கவர்ந்திருகின் றன. திருச்சி பாரத கனரகத் தொழிற்சாலை நடத்திய குழந் தைகள் ஆண்டு கண்காட்சியில் இக்கருவிகளில் சிலவற்றை மட் டுமே பார்வையிட்ட மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் வியப்பெய்தினார்.

பிராந்திய விரிவுப்பணி மையம் கேரள மாநிலத்தில் ஐந்து நவீன அரிசி ஆலைகளை குறைந்த செல வில் அமைத்து செயல்விளக்கம் செய்து வருகின்றது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிப் படுகையினை சோதனை செய்யும் பணி கட் டடவியல் துறையினரால் மேற் கொள்ளப்பட்டது. அரசு மற் றும் தனியார் துறையினருக்காக கான்கிரீட் மற்றும் கட்டடப் பொருள்களுக்கான சோதனை களை இத்துறை மேற்கொண்டி ருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்ட சுற்றுப்புறத்தில் நீர் வள ஆய்வு மேற்கொள்ளவும் நீர்வள வரைபடம் தயாரிக்கவும் இத்துறை திட்டமிட்டிருக்கிறது. நீர்வளத்தைத் துய்ப்பது பற்றி யும், திட்டமிடுதல் பற்றியும் ஆலோசனை வழங்கவும் முன் வந்திருக்கிறது.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கார்ப்பரேஷனில், பழுது பட்டு நீண்டகாலம் இயங்காமலிருந்த ரஷ்ய நாட்டு இயந்திரம் ஒன்றை மின்னியல் துறையினர் சரிசெய்து இயங்க வைத்திருக்கின்றனர். இன்சுலேட்டர்களைச் சோதனை செய்யும் முறை குறித்து வட லூரிலுள்ள 'சேஷசாயி இன்சுலேட் டர் லிமிடெட்' கம்பெனிக்கு இத்துறை ஆலோசனை வழங்கி யிருக்கிறது.

தாதுவிலிருந்து நேரடியாக தாமிர சல்பேட் தயாரிப்பது குறித்து வேதியியல் துறையினர் பெங்களூரைச் சேர்ந்த தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஆலோ சனை வழங்கியிருக்கின்றனர்.

பொது மக்களிடையே விஞ் ஞான அறிவை வளர்க்கவும், விஞ் ஞானத்தின்பால் ஆர்வம் ஏற் படுத்தவும் குறிப்பிட்ட இடை வெளிக்கிடையே 'பொருட்காட் சிகள்' பலமுறை பொறியியற் கல்லூரியில் நடத்தப்பட்டிருக் கின்றன. பொன்விழா ஆண்டி லும் நடத்தப்படுகிறது.

பொறியாளர்கள், பொறி யியல் தவிர ஏனைய செயல்களி லும் சளைத்தவர்கள் அல்லர் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமைச்சர்களா யிருப்பவர்களை யும், ஆட்சித் தலைவர்களாயிருப் பவர்களையும் கூறலாம். தமிழ் வளர்ச்சியும் பொறியாளர் பணி யிலொன்றாய் விளங்குகிறது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் ஆசிரியர்

களும், மாணவர்களும் தமிழகத்தில் நடைபெறும் தமிழ்க் கருத்தரங்குகள், கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் பலவற்றில் பங்குகொண்டு பாராட்டினையும், பரிசுகளையும் பெற்றிருக்கின்றனர்.

பொறியியல் துறைகளிலும், விடுதியிலும் மாணவர்களுக்கான தமிழ்ப் பேச்சுப் போட்டிகளும், கட்டுரைப் போட்டிகளும் நடத்தப்படுகின்றன. தமிழ் அறிஞர்கள் பங்குகொள்ளும் பட்டிமண்டபம், கவியரங்கம், வழக்காடு மன்றம் போன்ற இலக்கிய விருந்துகள் இங்கு செயல்படும் இலக்கிய மன்றத்தாரின் வாடிக்கை.



இப் பல்கலைக்கழகப் பொறியியல் ஆசிரியர்கள் 'கலைக்கதிர்' போன்ற விஞ்ஞான சஞ்சிகைகளிலும், சுழற்கழக வெளியீடுகளிலும், பிற ஏடுகளிலும் தமது ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள். 'அழுத்தப் பொறியியல்' என்னும் புத்தகம் இயந்திரத் துறைப் பொறியாளர்களால் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்காகத் தமிழாக்கம் செய்யப்பட்டது.

'அரிசி அரவைத் தொழில் நவீனம்' குறித்து தஞ்சை, அண்ணாமலைநகர், சேலம் ஆகிய இடங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் இப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளை தமிழிலேயே எழுதினார்கள். சேலம் கருத்தரங்கினை யொட்டி இப் பல்கலைக் கழகத்தினரால் வெளியிடப்பட்ட சிறப்பு மலரின் பெரும் பகுதி தமிழிலேயே அமைந்தது அனைவருக்கும் பயனளித்தது. இங்கிருக்கும் பிராந்திய விரிவுப் பணி மையம் தமது கண்டுபிடிப்புக்களைச் சிறு வெளியீடுகள், நாளிதழ்கள், வானொலி இவற்றின் வாயிலாக மக்களுக்குத் தமிழ் மொழியிலேயே எடுத்துரைக்கின்றது.

# திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி


**டாக்டர் கொ. இலட்சுமணசாமி**
**தமிழ்த் துறை,**


1968-ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் நினைவாகத் தமிழ்நாடு அரசு திருக்குறள் ஆய்வு நிகழ்த்தும் பொருட்டுச் சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்கட்கும் தனித்தனியாக மூன்று நூறாயிரம் (300,000) ரூபாயைவைப்பு நிதியாக வழங்கியது. அதற்கேற்ப அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் 1970-ஆம் ஆண்டு திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதி தொடங்கப் பெற்றது. இப்பகுதியில் ஆய்வு செய்வதற்கெனத் தமிழ்த் துணைப் பேராசிரியர் (ரீடர்) ஒருவரும், ஆய்வுத்துணையாளர் ஒருவரும், தட்டச்சுப்பணியாளர் ஒருவரும் ஆக மூவர் நியமிக்கப் பெற்றனர். பின்னர் உரையாளர் (ட்யூட்டர்) ஒருவரும் நியமிக்கப் பெற்றார்.

1968 ஆகஸ்டு 9-ஆம் நாள் அரசாங்கக் கல்வித்துறை ஏற்பாடு செய்த கூட்டத்தில் மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் ஆய்வுப் பொருள்கள் வரையறுக்கப் பெற்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவ்வரையறைக்கேற்ப (அ) திருக்குறள் ஒப்புமைப் பகுதி (ஆ) இடைக்கால இலக்கியங்கள் என்னும் பொருள்களில் ஆய்வுப் பணி தொடங்கியது.

## நூல் வெளியீடுகள்

ஆய்வுப் பணி தொடங்கிய பின்னர் டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்களால், (1) திருக்குறள் பொருளகராதி (2) திருக்குறளும் பிற உரையாசிரியர்களும் (3) பரிமேலழகர் என்னும் மூன்று நூல்களும், மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர் அவர்களால் (4) காப்பியங்களில் திருக்குறள் (5) வள்ளுவரும் கம்பரும் (6) வள்ளுவத்தில் மெய்ப்பொருட்சுவடுகள் என்னும் மூன்று நூல்களும், வித்துவான் என். இராமலிங்கம் அவர்களால் (7) திருக்குறளும் பெருந்தேவனார் பாரதமும் (8) திருக்குறளும் வில்லிபுத்தூரார் பாரதமும் (9) திருக்குறளும் நல்லாப் பிள்ளை பாரதமும் என்னும் மூன்று நூல்களும் வித்துவான் கா. ம. வேங்கடராமையா அவர்களால் (10) பரிப்பெருமாள் உரையும் உரைத்திறனும் என்னும் நூலொன்றும் ஆகப் பத்து நூல்கள் எழுதப் பெற்றுள்ளன.

அவற்றுள் முதல் ஐந்து நூல்கள் அச்சு வடிவில் வெளிவந்துள்ளன. அடுத்த நான்கு நூல்கள் சென்ற ஆண்டில் அச்சிடுதற்கு அனுப்பப் பெற்றுள்ளன. பரிப்பெருமாள் உரையும் உரைத் திறனும் அச்சிற்கு அனுப்பும் இவை நீங்கலாக பரிமேலழகர் உரைத் திறன் என்னும் நூல் ஆய்ந்து எழுதப் பெற்றுவருகின்றது.

## எழுதப்படுபவை

இப்போது இப்பகுதியில் (1) திருக்குறளும் புறநானூறும் (2) தேவார திருவாசகங்களில் திருக்குறள் (3) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருக்குறள் என்னும் தலைப்புக்களில் நூல்கள் எழுதப் பெற்று வருகின்றன. இந்தக் கல்வியாண்டில் (1979-80) இந்நூல்கள் நிறைவுற்றுவிடும்.

மூன்று பல்கலைக் கழகங்களிலுள்ள திருக்குறள் ஆராய்ச்சிப் பகுதிகளின் கூட்டுக் கூட்டங்கள் 17-11-77-ல் மதுரையிலும் 10-4-79-ல் சென்னையிலும்நடைபெற்றன. மாண்புமிகு கல்வியமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் அவ்வப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களும் தமிழ்ப் பேராசிரியர்களும் திருக்குறள் பகுதிப் பொறுப்பாளரும் ஆய்வுப் பணிகள் பற்றி ஆய்ந்துள்ளனர். ஆய்வு நூல்கள் விரைவில் நல்ல அமைப்புடன் வெளிவரல் வேண்டும் என்பதும், அதற்குரிய ஏற்பாடுகள் இவை என்பதும் ஏற்கப் பெற்றுள்ளன.

இப்பல்கலைக் கழகத்திலுள்ள இவ்வாய்வுப்பகுதி, மென்மேலும் வளர்ச்சி பெற்று, இவ்வறக் கொடை நிறுவிய தமிழ் நாட்டரசின் நோக்கத்தினை நிறைவேற்றும் என்பதில் ஐயமில்லை.





# அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் தமிழிசையும்


**பேராசிரியர் லெ.ப. கரு. இராமநாதன் செட்டியார்**

**ஆட்சிக்குழு உறுப்பினர், முன்னாள் நிகழ்நிலைத் துணை வேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.**


இருபதாம் நூற்றாண்டின் கல்வி வரலாற்றில் முதல் இடம் பெற்று இப்போது பொன் விழாக் காணும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அரும் பெரும் பணிகளுக்கு ஒப்பாகவும் உயர்வாகவும் உள்ள பணிகளைக் காணுதல் அரிது.

பெருங் கொடை வள்ளல், செட்டிநாட்டு அரசர் டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தனி ஒருவராய்த் தமது பெரும் பொருளை வாரி வழங்கி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினை நிறுவினார்கள். அவர்களும், அவர்கள் குமாரர் பத்மபூஷண் டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களும் ஐம்பது ஆண்டுகளாக இப் பல்கலைக் கழக வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள — ஆற்றி வருகின்ற சீரிய பணிகள் அளவிடற்கரியன. இவ் விரு பெருமக்களுக்கும் கல்வியுலகம், எப்போதும் நன்றி செலுத்தும் கடப்பாடு உடையது.

பல்கலைக் கழக நல்வளர்ச்சிக்குக் கட்டடங்களையும், சுற்றுப் புறங்களையும், அழகாக அமைப்பதில், ஆர்வம் கொண்டது போலவே, பல்கலைக் கழகத்தில் பணியாற்றுபவர்கள், மிகச்சிறந்தவர்களாக அமைய வேண்டும் என்பதிலும் அண்ணாமலைஅரசர் அவர்களும், முத்தைய வேந்தர் அவர்களும் ஆர்வம் கொண்டு ஆவன செய்தார்கள் - செய்து வருகின்றார்கள். நாட்டில் புகழ் சிறந்த பேரறிஞர்களைத் துணை வேந்தர்களாகவும், ஒவ்வொரு துறையிலும் திறமையும், அனுபவமும் நிறைந்தவர்களைப் பேராசிரியர்களாகவும், பல்கலைக் கழகத்திற்கு அழைத்து வந்து பணியாற்றச் செய்து மகிழ்வெய்தினார்கள் - மகிழ்வெய்து கின்றார்கள். இதன் விளைவாக அறிவாற்றல் நிறைந்த மாணவ மாணவியர் பலர் உருவாகி, உலகின் பல்வேறு இடங்களில், பல்வேறு துறைகளில் உயர்ந்து ஓங்கி விளங்கி, இப்பல்கலைக் கழகத்திற்குப் புகழ் சேர்த்து வருகின்றனர்.

இவ்வாறு எல்லாவகைக் கல்விகளையும் வளர்த்து வருகின்ற கலைக்கோயிலாக, இப் பல்கலைக் கழகம் விளங்குகின்ற நிலையில், இதன்கண், தனிச்சிறப்பாக வளர்ந்து வருகின்ற கல்வித் துறைகள் சிலவற்றில், தமிழும் தமிழ் இசையும் குறிப்பிடத்தக்கன. இவ்விரு துறைகளையும் வளர்ப்பதை அண்ணாமலை அரசர் அவர்கள், பல்கலைக் கழகத்தின் குறிக்கோளாகவும், தமது வாழ்க்கைக் குறிக்கோளாகவும் கொண்டார்கள். ''தமிழையும், தமிழ்ப் பண்பாட்டினையும் உலகறியச் செய்வது, இப் பல்கலைக் கழகத்தின் தலை சிறந்த குறிக்கோளாக இருக்கும்'' எனவும் ''தமிழ்நாடு எங்கும் தமிழிசை முழங்க வேண்டும் என்பது எனது ஆவல்'' எனவும் அண்ணாமலை அரசர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது நினைத்தற்குரியது.

அரசர் அவர்கள். இசைக் கலையில் தமக்கு இருந்த மிகப் பெரிய ஈடுபாட்டினால், தாம் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கு முன்பே, 1929-ஆம் ஆண்டிலேயே சிதம்பரத்தில், இசைக் கல்லூரியினை நிறுவி, இசைக் கலைக்கு அரும்பணி ஆற்றினார்கள். இக் கல்லூரி, நிலை பெற்று வளர்ச்சியுற்றவுடன், இதனை 1932-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைத்தார்கள். இசைக்காகத் தனியே நான்கு ஆண்டு வகுப்பு, முதன் முதலாக நடத்திப் பட்டம் வழங்கிய பெருமை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கே உரியது, வாய்ப்பாட்டு, வீணை, பிடில், மிருதங்கம், தேவாரம், நாகசுரம், தவுல், பரதநாட்டியம் ஆகியவை இங்கே கற்பிக்கப் பெறுகின்றன. இவ்வாண்டில், நூற்றுக்கு மேற்பட்ட மாணவ, மாணவியர் கல்வி பயில்கின்றனர். தமிழகத்தில் மட்டுமின்றிப் பிற மாநிலங்களிலும், இலங்கை, மலேசியா முதலிய பிற நாடுகளிலும் இருந்து மாணவ மாணவியர் பலர், இங்கே வந்திருந்து கல்வி கற்கின்றனர். இங்கே கற்றுத் தேர்ச்சி பெற்றவர்களுக்குச் சங்கீத பூஷணம், பி.மியூசிக் முதலிய பட்டங்கள் வழங்கப் பெறுகின்றன.

பெரும்பான்மையான இசைக் கருவிகள் இங்கே சேர்த்து வைக்கப் பெற்றுள்ளன. இவற்றில், இப்போதுகிடைத்தற்கரியஇசைக் கருவிகள் சிலவும் உள்ளன.

சிறந்த இசைவாணர்களாகிய சபேசையர், சங்கீத கலாநிதி டைகர் வரதாச்சாரியார், சங்கீத கலாநிதி கே. பொன்னையா பிள்ளை, சங்கீத கலாநிதி திருப்பாம்புரம் டி. என். சாமிநாதப்

# CO-OPERATIVE BANKS PAY MORE INTEREST ON DEPOSITS

YOUR INVESTMENTS WITH CO-OPERATIVE BANKS REAP HIGHER INTEREST

YOUR INVESTMENT WITH CO-OPERATIVE BANKS GO A LONG WAY IN THE DEVELOPMENT OF THE NATION

INTEREST RATES OFFERED BY

**The South Arcot Central Co-operative Bank Ltd.,**
CUDDALORE

| Fixed Deposits | (Effective from 13—9—1979) |
| --- | --- |
| 1. For 15 Days to 45 Days | 3.00% |
| 2. For 46 Days to 90 Days | 3.50% |
| 3. For 91 Days and above but below 6 Months | 4.50% |
| 4. For 6 Months and above but below 9 Months | 5.00% |
| 5. For 9 „ „ 12 Months | 6.00% |
| 6. For 1 year and above but upto and inclusive of 36 Months | 7.50% |
| 7. For over 3 Years (37 Months and above) but upto and inclusive of 5 years | 9.00% |
| 8. For over 5 Years (61 Months and above) With effect from | 1-10-79 |
| Savings and Theni Deposits | 5.50% |
| Current Deposits | 0.50% |

Your Central Co-operative Bank pays ½% Interest more on each Type of Deposit
For further details-Please contact

THE SOUTH ARCOT CENTRAL CO-OPERATIVE BANK LTD.,
CUDDALORE—1.
and its 30 Branches

**R. Rajaraman,** (B.A., Hons) *Secretary*

**S. Balasubramanian,** M.A.,B.L., *Special Officer*

**The South Arcot Central Co-operative Bank Ltd.,**
CUDDALORE - 607001.




பிள்ளை, இசைப்பேரறிஞர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, இசைப் பேரறிஞர். எம். எம். தண்டபாணி தேசிகர், கும்பகோணம் இசைப்பேரறிஞர் இராசமாணிக்கம் பிள்ளை, மன்னார்குடி இராசகோபாலப் பிள்ளை, மாயூரம் இசைப்பேரறிஞர் கோவிந்தராசப் பிள்ளை, யாழிசைப் புலவர் வி. எஸ். கோமதிசங்கரையர், சாத்தூர் கிருஷ்ணய்யங்கார், தஞ்சாவூர் இராமதாஸ் ராவ், வீணை கே.பி. சிவாநந்தம், டி.கே. ரங்காச்சாரி முதலியோர் இக்கல்லூரியில் பேராசிரியர்களாகவும், விரிவுரையாளர்களாகவும் பொறுப் பெற்றுப் பெரும்பணி புரிந்துள்ளனர். இசையுலகில் பெரும் புகழ் பெற்ற இசைப்பேரறிஞர் மதுரை எஸ். சோமசுந்தரம் (சோமு), அவர்கள் இப்போது இசைப் பேராசிரியராக இங்கே விளங்குகின்றார்கள். இவர்கள், அண்மையில், தமிழக அரசு இசைப்புலவராக நியமிக்கப் பெற்றிருப்பது குறிப்பிடுவத்ற்குரியது.

இசையுலகில் பாராட்டுப் பெற்ற சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியம், டி. கே. ரங்காச்சாரி, எஸ். வி. பார்த்தசாரதி, கே. எஸ் நாராயணசாமி, டாக்டர் எஸ். இராமநாதன், கோ.வி மணிசேகரன் முதலியோர், இங்கே கல்வி பயின்று சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவர்கள். இவர்களில் டாக்டர் எஸ்.இராமநாதன் அவர்கள், இங்கே கல்வி பயின்ற பின், அமெரிக்காவில் (WESLEYAN) பல்கலைக் கழகத்தில் தங்கி, இரண்டு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து அங்கு டாக்டர் பட்டம் பெற்றவர். நாட்டியக் கலையில் புகழ் பெற்ற திருமதி, பத்மா சுப்பிரமணியம் அவர்கள், இப்பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி செய்து அண்மையில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்கள். மேலும் இங்கே பயின்று சங்கீதபூஷணப் பட்டம் பெற்ற எஸ். கோபாலகிருஷ்ணன் அவர்கள், டெல்லியில் அனைத்திந்திய வானொலியில், பல்இசைக் கருவிகள் இயக்குநராகப் பணிபுரிகின்றார்.

இந்நிலையில், இப் பல்கலைக் கழகம், தமிழ் இசையை வளர்த்து வருகின்ற வரலாற்றினை எண்ணிப் பார்ப்பது பொருத்தமாகும்.

1936ஆம் ஆண்டில், துணைவேந்தர் மகாகனம் வி. எஸ். சீநிவாசசாஸ்திரியார் அவர்கள் தலைமையில், இசை மாநாடு ஒன்று இப்பல்கலைக் கழகத்தில் கூட்டப் பெற்றது. தமிழ்ப் பாடல்களைப் பலர் அறியச் செய்யவும், தமிழ் இசைப் பாடல்களை மேலும் மேலும் ஆக்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று அம் மாநாடு வற்புறுத்தியது. ஆயினும், 1940 ஆம் ஆண்டு வரை இப் பல்கலைக் கழக இசைப்பகுதி, பிறமொழிப் பாடல்களுக்கே இடம் தந்திருந்தது. இசைவாணர்கள், தமிழ் நாட்டு இசை அரங்குகளிலும் பிறமொழிப் பாடல்களையே பாடுவாராயினர். நம் நாட்டு இசையரங்குகளில் வேற்று மொழிப் பாடல்கள் பாடப்பெறுவது நியாயமில்லை; பயனுமில்லை என்ற உணர்ச்சி, அண்ணாமலை வள்ளல் அவர்களின் உள்ளத்தில் பதிந்தது. இந்த நல்லெண்ணம், தமிழ் இசை இயக்கமாக உருவெடுத்தது. எச் செயலையும் எண்ணித் துணிந்து, துணிந்தபின் எத்தகைய எதிர்ப்புக்களையும் பொருட்படுத்தாது தொடங்கிய செயலை நிறைவேற்றும் ஆற்றல் உடைய அரசர் அவர்கள் இயக்கத்திற்கு நேர்ந்த எதிப்புக்களையெல்லாம் தமிழ் இசை வளர்ச்சிக்கு ஊக்கம் தருவனவாகக் கருதினார்கள். அதனால், அரசர் அவர்கள் தொடங்கிய தமிழ் இசை இயக்கம், தமிழ் மக்களின் உள்ளங்களில் பெருவகை ஊட்டியது. டாக்டர் சர் ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அவர்கள் முதலிய பேரறிஞர்கள் அரசர் அவர்களுடன் ஒத்துழைத்தனர். பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் தமிழ் இசை இயக்கத்தை ஆதரித்துப் பேசி வந்தனர், எழுதி வந்தனர். எங்கும் தமிழ் இசை மாநாடுகள் நடைபெற்றன; தமிழ் இசைச் சங்கங்கள் தோன்றின. ஆங்காங்குத் தமிழ் இசைக் கல்லூரிகள் பணியாற்றத் தொடங்கின. இசை அரங்குகளில் பெரும்பாலும் தமிழ்ப் பாடல்கள் பாடப் பெற்றன. வேற்று மொழிப் பாடல்களுக்கு இடம் தந்திருந்த பல்கலைக் கழக இசைப் பகுதி, தமிழ் இசை கற்பிக்கும் பகுதியாக மாறியது. அவ்வளவில் அன்றிப் பழையனவும், புதியனவும் ஆகிய இசைப் பாடல்களையும், இசை இலக்கண நூல்களையும் வெளிப்படுத்தும் பெருமுயற்சியையும் அரசர் அவர்களின் பேராதரவில், பல்கலைக் கழகம் மேற்கொண்டது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் தமிழ் இசை ஆலோசனைக் குழு ஒன்று நிறுவப் பெற்றது. அக் குழுவுக்குப் பேராசியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள், செயலாளராகப் பணியாற்றினார்கள்.

வெளியிடங்களில் உள்ள இசைவாணர் பலரும், இசைப் பாடல் இயற்றுதலில் வல்ல அறிஞர்களும், இப்பல்கலைக் கழக இசைப் பகுதி ஆசிரியர் எல்லாரும், வித்துவான் மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் முதலிய தமிழ்ப் பகுதி ஆசிரியர் சிலரும் ஒத்துழைத்துப் பேருதவி செய்தனர். தமிழ் இசை ஆலோசனைக் குழு, அரசர் அவர்களின் அறிவுரைகளை அவ்வப்போது பெற்று, விரைந்து செய்த பெருமுயற்சியின் பயனாக, 20 தமிழ் இசை நூல்கள், பல்கலைக் கழக வெளியீடாகச் சில ஆண்டுகளுக்குள் வெளிவந்துள்ளன. அரசர் அவர்கள். பல்கலைக் கழகத்தின் வாயிலாகத் தமிழ் இசையை வளர்த்ததோடு, சென்னையில் தமிழ் இசைச் சங்கத்தையும் நிறுவினார்கள். அச்சங்கம், தமிழ் இசை வளர்ச்சிக்குச் சிறந்த பணி

# — POTASH —

## the most profitable fertiliser

Most crops respond to potassium in split doses
for higher and quality yields.

**WITH BEST COMPLIMENTS FROM:**

# Indian Potash Limited,

**727, PATHARI ROAD,**
**AMBAL BUILDING,**
**MADRAS-6.**



Telegram : 'SRIVARU'

# Sri Varu Enterprises

*(Regd Office :* **2 A, Langford Gardens, BANGALORE-560 025***)* *Office :* **29580**

**25, Silver Jubilee Park Road, BANGALORE-560 002.** **24335**

*Resi :* **53411**

*Regd. Dealers for :* **CARBORUNDUM UNIVERSAL Ltd.**

*Distributors for :* **WOLF ELECTRIC TOOLS & J. K. E. DIAMOND TOOLS**

| Bonded Abrasives | Coated Abrasives | Wolf Machines |
|---|---|---|
| Grinding Wheels | Flint Paper Sheets | Grinders |
| Segments, Cut-off Wheels | Emery Paper Sheets | Drills |
| Mounted Points | Emery Cloth, Aloxite Cloth | Sanders |
| Sharpening Stones | Silicon Carbide Cloth | Blower etc. |
| Finished Sticks | Garnet Cloth in Sheets, Rolls | & Diamond Dressing Tools |
| Floor Polishing Blocks | Belts, Discs etc. | |




**அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் நூலகத்திலும், கருத்தரங்கு நூலகங்களிலும் மொத்தம் 3,00,000 நூல்கள் உள்ளன.**



களை இடையறாது புரிந்து வருவது நாடறிந்த செய்தியாகும். அரசர் அவர்களின் பெயரைத் தாங்கும் பெருமை பெற்று, இப்போது அச் சங்கத்தின் கட்டடமாகச் சென்னையில் விளங்கும் ராஜா அண்ணாமலை மன்றம், அண்ணாமலை வள்ளலின் புகழ் போல் ஓங்கி நிற்பதை நாம் கண்டு மகிழ்வெய்துகின்றோம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், இதுவரை இருபது தொகுதிகளாக, 23 தமிழ் இசை நூல்களை வெளிப்படுத்தியுள்ளது. அந் நூல்களில், 1254 தமிழ் இசைப்பாடல்கள் 234 இராகங்களில் அமைந்துள்ளன. சிறந்த இசைவாணர்கள், அப்பாடல்களுக்கு இசை அமைத்துள்ளனர். மேற்குறிப்பிட்ட தொகுதிகளில் அடங்கிய இசை இயல், தமிழர் இசைக் கருவிகள், சுரமேளகலாநிதி, பரதசங்கிரகம், மத்தளம் கற்கும் முறையும் அதன் சிறப்பு வகையும் என்ற நூல்கள், இசை இலக்கண அமைதிகளைத் தெளிவாக விளக்கத்தக்கன. மிருதங்கம் பயிலும் மாணவர், திறமை பெறும் வண்ணம், இப் பல்கலைக் கழகம் வெளிப்படுத்திய மிருதங்க பாட முறைப் புத்தகமும் இத்தொகுதிகளில் ஒன்றாகும். மேலும் 1500-க்கு மேற்பட்ட பாடல்கள், இசை அமைக்கப் பெற்று அச்சிடுதற்கு ஏற்ற நிலையில் இருக்கின்றன. தமிழ் இசைக்கு அரும் பெரும் தொண்டுகள் புரிந்த அண்ணாமலை வள்ளல் அவர்களைப் பாராட்டியும், வாழ்த்தியும் பல சமயங்களில் தக்க புலவர்கள் இயற்றிய பாடல்கள், சிறந்த இசைவாணர்களால் இசை அமைக்கப் பெற்றுச் 'செட்டிநாட்டரசர் இசைமாலை' என்னும் பெயருடன் வெளிவந்துள்ளது.

தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் இசை வளர்ச்சிக்கும் பயன்தருமாறு, இரண்டு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையைத் திருப்பனந்தாள் காசி மடத்து அதிபர்களாக இருந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் இப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கியிருப்பது நன்றியுடன் குறிப்பிடத்தக்கது.

அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் அரசர் முத்தைய வள்ளல் அவர்கள், தம் தந்தையார் அவர்கள் காலத்திலும், அவர்களுக்குப் பின்னும் அவர்களைப் போலவே பேரூக்கம் கொண்டு தொடர்ந்து தமிழ் இசையையும், சென்னையில் தமிழிசைச் சங்கத்தினையும் வளர்த்து வருவது அனைவரும் அறிந்த செய்தியாகும். மேலும், இவர்கள், பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு, பாண்டிய அரசர்கள், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் தமிழ் இசை வளர்க்கத் திருவுளம் கொண்டு, அங்கே, 21-1-1974-ல் பெருந் திட்டத்துடன், தமிழ் இசைச் சங்கம் நிறுவியுள்ளார்கள். அந்நாள் முதல் இன்றுவரை, அரும்பணியாற்றிவரும் இச்சங்கத்தின் உரிமை நிலையமாக, அரசர் அவர்கள் பெயரால் ராஜா முத்தையா மன்றம் என்னும் கலைக்கோயில், மலைக் கோயில் போலக் கண்ணையும் கருத்தையும் கவரும் முறையில், ஐம்பது லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட செலவில் உருவாகி, நிறைவு பெறும் நிலையில் உள்ளது. இச் சங்கத்தின் வளர்ச்சியிலும், கட்டட வளர்ச்சியிலும் முத்தைய வள்ளல் அவர்கள் மேற்கொண்டுள்ள ஆர்வமும் வழங்கி வரும் உதவிகளும் அளவிடற்கரியன.



**அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவ, மாணவியர் எண்ணிக்கை 7,383 ஆகும். இங்கு கல்வி நல்கும் துறைகள் 33 ஆகும்.**

**அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு 676.28 ஏக்கர் ஆகும். இது தவிர இப் பல்கலைக் கழகத்திற்காக கடலுயிரியல் துறைக்காக பரங்கிப்பேட்டையில் 76.95 ஏக்கர் இடமும் உள்ளது. மொத்தப் பரப்பளவு 753.23 ஏக்கர்.**



**இப் பல்கலைக் கழகத்தில் அஞ்சல் வழிபயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 6,900**

* * *

**பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 400 ஆகும்.**

முத்தைய அரசர் அவர்கள் குமாரர் திரு எம். ஏ. எம். இராமசாமி அவர்கள், இச்சங்கத்தின் துணைத்தலைவராகப் பொறுப்பேற்றுத் தம் தந்தையாரையும் பாட்டனாரையும் பின்பற்றித் தமிழ் இசைக்கு அரும் பணியாற்றி வளர்த்து வருவது, தமிழகத்தின் நற்பேறாகும். இவ்வாறு, வழிவழியாகத்தொடர்ந்து கலைப்பணி புரிந்து வரும் இக் குடும்பத்தினரின் தொண்டுகளைத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சி. அவர்களும், மதுரை மாநகரின் தமிழ் இசைச் சங்கத்தில் இவ் ஆண்டில் நடைபெற்ற விழாவில், பெரிதும் பாராட்டியிருப்பது பலரும் அறிந்த செய்தியாகும்.

இக் குடும்பத் தலைவர் அண்ணாமலை அரசர், பொதுநலக் கற்பகத் தருவாக நிறுவியுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பொன் விழாவினை, உலகம் முழுதும் உவகைமிகக் கொண்டாடுகின்ற இந் நன்னாளில், இக் குடும்பத்தினர், நீடுழி வாழ்க! மேலும் மேலும் வளர்க!! என வாழ்த்துவது நம் கடமையாகும்.

மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
மேலுரமிட மேன்மையான உரம்
ஸ்பிக் யூரியா



றிய
வெண்முத்து
டிவங்கள்
• அதிகத் தழைச்சத்து 46.2%
• மிகக் குறைவான பையூரெட்-0.3% தான்
• ஆசியாவிலேயே மிகப் பெரிய, ஸ்பிக் தொழிற்சாலையில் தயாராகிறது.

சிறப்பான யூரியா வேண்டுமா? ஸ்பிக் யூரியா என்று கேட்டுவாங்குங்கள்.

CAS SPIC 4 TM 77,



# பல்கலைக் கழக வேளாண்மைத் துறை



பேராசிரியர்
அரு. லெட்சுமணன்
உழவியல்துறை

இறைவன், பார்த்திபனுக்குப் பாசுபதம் அளித்த சிறப்புடைய தாகக் கருதப்படும் திருவேட்கள கிராமச் சூழலில், கழனிகள் சூழ்ந்த காவேரி ஆற்றுப்படுகை யில், அமைந்துள்ள அண்ணா மலைப் பல்கலைக் கழகம் சிறப் பானதொரு வேளாண்துறை அமைவதற்கு இயற்கையாகவே எல்லா வசதிகளும் நிறைவுறப் பெற்றிருக்கிறது.

ஆழ்ந்த சிந்தனையும், நீண்ட நோக்கும் நிறையப்பெற்ற வள்ளல் அண்ணாமலை அரசர் பல்கலைக்கழகம் நிறுவிய அன்றே அதன் சட்டத் தொகுப்பிலேயே வேளாண்துறையும் சிறப்புற அமைய வழி வகுத்திட்டார்கள். அன்னார் கனவு, 1951-ல் ஓரளவு உருப்பெற்று விஞ்ஞானஇளநிலை (B.Sc.,) பட்டப் படிப்பில்இந்தத் துறை ஒரு பகுதியாகத் துவங் கியது. 1956-ல் முழுமை பெற்று வேளாண்துறைப் பட்டப் படிப்பு (B.Sc.(Ag.) & M.Sc.(Ag.)) கல்லூரி யாக வளர்ச்சியுற்றது. வேளாண் துறை ஆரம்பித்த பெருமை தோட் டக்கலை நிபுணர் டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி என்ற பேராசிரி யரையும், அதைக் கல்லூரியாக முழுமையாக்கிய சிறப்பு டாக்டர் கோ. அரங்கசாமி என்னும் நுண் ணியல் கலை வல்லுனரையும் சாரும்.

தற்போது காய்கறி இன வளர்ச்சி நிபுணர் டாக்டர் கோ. ந. சம்பந்தம் இதன் தலைவராக விருக்கிறார்.

### வசதி வாய்ப்புகள்

இத்துறை ஆண்டொன்றுக்கு வேளாண்மை இளங்கலைப் பட்டப் படிப்பிற்கு நூறு மாண வர்களையும், முதுநிலை பட்டப் படிப்பில் உழவியல், நுண்ணுயிர்க் கலை, பயிர்ப் பாதுகாப்பு பட்டப் படிப்பிற்கு, பகுதிக்கு ஐந்து மாணவர்களையும் பயிற்றுவிக் கின்றது. வரும் ஆண்டில் மண் ணியல், பூச்சியியல் பயிர்நோய் ஆய்வுப் பிரிவிலும் முதுநிலைக் கல்வி அளிக்கத் திட்டமிடப்பட்டி ருக்கிறது. மேற்கண்ட எல்லாத் துறைகளிலும் டாக்டர் பட்டம் பெறும் அளவிற்கு ஆய்வுகள் செய்ய இங்கே வசதிகளும், வாய்ப்புகளும் இருக்கின்றன.

பல்கலைக் கழகத்தின் மேற்கு எல்லையில் பொறியியற் கல்லூரி யும், கிழக்கு எல்லையில் வேளாண் துறையும், மையப் பகுதியில் மற்றக் கலைக் கல்லூரிகளும் அழகுற அமைந்திருக்கின்றன. கழனிகளின் நடுவில் மாணவர்கள் செய்முறைப் பயிற்சிகளில் சிறப் புடன் பங்கு பெறத் தக்க சூழ் நிலையில் கல்லூரி அமைந்திருக் கிறது. இதனைச்சார்ந்த ஆராய்ச்சிப் பண்ணையும் 200 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளது. எல்லாப் பருவங்களிலும் நெல், மற்றும் தோட்டப் பயிர் தானி யங்கள், பருத்தி, கரும்புப் பயிர் களும் பயிரிடப்படுகின்றன. பழத் தோட்டம், பால் பண்ணை, கழிவு நீர் புல் பண்ணை யாவும் இதனுடன் இணைந்திருக்கின் றன.

இதுவரை 25 மாணவர்கள் டாக்டர் பட்டத்திற்கும், 160 மாணவர்கள் முதுநிலைப் பட்டத் திற்கும், 1500 மாணவர்கள் இள நிலைப் பட்டத்திற்கும் இங்கு சிறப்புடன் பயின்று பயனுற்றி ருக்கிறார்கள். இங்கு பட்டம் பெற்ற மாணவச் செல்வங்கள் அரசாங்கத் துறைகளிலும், கல் லூரிகளிலும், வங்கிகளிலும், உரம், பூச்சி மருந்து விநியோகத் தனியார் நிறுவனங்களிலும் பெருஞ்சிறப்புடன் பணியாற்றி வருகின்றார்கள்.

இக்கல்லூரியில் உள்ள ஆசிரியர் களின் எண்ணிக்கை மாணவர் களுக்குக் கல்வி பயிற்றுவிக்கும் அளவிற்கே போதியதாகவிருக் கிறது. இருப்பினும் அத்துடன் ஆராய்ச்சிப் பணிகளையும் மேற் கொண்டு தமிழக வேளாண்குடி மக்களுக்குப் பயனுள்ள வகையில் நல்ல பல ஆய்வுகளையும் நடத்தி யிருக்கின்றார்கள்.

### அரிய ஆய்வுகள்

பொன்னி என்று பெயரிடப் பட்ட புகழ்வாய்ந்த மசூரி நெல் இங்குதான் முதன்முதலாகப் பயிரிடப்பட்டது. இத்துறையால் வெளியிடப்பட்ட உப்புத்தாங்கி வளரும் குறுகிய கால அண்ணா மலை உவர் நெல், AV 1 கட லோரப் பகுதி உழவர்களுக்குச் சிறப்பான ஒரு பரிசாக அமைந் துள்ளது. இது கோவா, பாண்டிச் சேரி பகுதிகளில் விரும்பிப் பெரு மளவில் பயிரிடப்பட்டு வரு கின்றது. காய்கறி இனப் பெருக் கத்தில் இத்துறை நல்ல பல ஆய்வுகளை மேற்கொண்டு தமிழ கத்திற்குச் சிறந்த பணி செய்தி ருக்கிறது. இலைப் பேனைத் தாங்கி வளரும்''அண்ணாமலை'' என்ற உயர்ந்த கத்தரித் தரம் தமிழக மக்களால் மட்டுமன்றி ஏனைய மாநில மக்களாலும் விரும்பிப் பயிரிடப்பட்டு வரு கிறது. இங்கு வெளியிடப்பட்ட அண்ணாமலை முழாம் பழம், வைட்டமின்கள் நிறைந்த புதிய தொரு பழவகையாகும். 'பொன் விழா' டின்டா காய் வகையும் இங்கு வெளியிடப்பட்டிருக்கிறது.

பயறு விதைகளின் வகைகளுக்கு நுண்ணுயிர் ஊட்டமளிப்பதற்கு நெய்வேலி பழுப்பு நிலக்கரியைக் கொண்டு (Rhizobia) -'ரைசோ பியா' நுண்ணுயிரைப் பெருக்கி ஏற்றுச் செல்லும் சிறந்ததொரு முறை இங்கு செயல்படுத்தப்பட் டது.

இவ்வகை ஆராய்ச்சிகளால் 300-க்கு மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் இந்திய விஞ்ஞானப் பத்திரிகைகளிலும், வெளிநாட் டுப் பத்திரிகைகளிலும் சிறப் புடன் வெளியிடப்பட்டிருக் கின்றன.

இந்திய வேளாண் துறை ஆராய்ச்சிக் குழுவும், தமிழக அரசும் அளிக்கும் மானியங்களால் இக்கல்லூரி சிறப்புடன் செயல் பட்டு வருகிறது. கூடுதலான ஆராய்ச்சிப் பணிகளை மேற் கொள்ளவும், வேளாண் பெரு மக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு விரிவுப்பணி ஆற்றிட வும், திட்டங்கள் தீட்டப்பெற்று, அரசாங்க ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டிருக்கின்றன.

வரும் ஆண்டுகளில் தமிழகத் திற்கும் குறிப்பாக வேளாண் துறை மக்களுக்கும் சிறப்பான பணி ஆற்றும் வாய்ப்பினை எதிர் நோக்கி இந்தத் துறை முனைப் புடன் காத்திருக்கிறது.

PHONE : 33688
GRAM : HOWRATRANS

Best compliments from:

**New Howrah Transport Co,**

**97, ARMENIAN STREET, MADRAS - 600 001.**

---

**PREMIER METALS AND ENGINEERING CORPORATION**

**HOUSE OF ALUMINIUM**

The largest and leading Stockist of ALUMINIUM SHEETS, COILS, CIRCLES, FOIL AND EXTRUSIONS Such as Rods, Angles, Flats, Tubings, Tees, Half-Round Mouldings, Show-Beadings,

**Channels, Squares, water Channels and various other sections for Architectural, Structural Industrial and Transport uses.**

HEAD OFFICE :
86, Mint Street,
MADRAS - 600 001.

Phone : 37713 and 30226
Grams: CINNABAR

BRANCH OFFICE :
XXXVIII/87(A) T. D. Road,
Ernakulam,
COCHIN - 682 011.

Phone: 37012
Grams: CINNABAR

# வேதியியல் ஆராய்ச்சியில் வியத்தகு சாதனை

—டாக்டர் வி. பாலையா

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின்
முன்னாள் வேதியியல் பேராசிரியர் மற்றும்
முன்னாள் நாகார்ஜுனா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர்

தென் இந்தியாவிலே வேதியியல் துறையில் தலைசிறந்து விளங்குவது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். இத்துறையினர் வெளியிட்டுள்ள பாடநூல்களைப் பின்பற்றி வரும் பாடத்திட்டங்களையும் ஏனைய பல்கலைக்கழகங்கள் ஏற்றுக் கொண்டிருப்பது இதற்குச் சான்றாகும்.

பிற பல்கலைக்கழகங்கள், பல கல்லூரிகள் இணைப்பாக உள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஒவ்வொரு துறையிலும் ஒவ்வொரு கல்லூரியைக் கொண்ட உடனுறை பல்கலைக்கழகமாக இருக்கிறது. எனவே, அவ்வப்போது மிக விரைவாகக் கல்வித் துறையில் சீர்திருத்தங்கள் செய்வது இங்கு எளிதாக இருக்கிறது.

உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் வேதியியல் படிப்பில் பயிற்சி கொடுக்க 1967-இல் பல்கலைக்கழக மானியக் குழு, கோடைகாலக் கல்வி நிறுவனங்களை அமைக்க முன்வந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலேயே மிகக் கூடுதலாக இருந்தது. இந்த நிறுவனங்களை இந்தியா முழுவதும் சுற்றிப் பார்த்து அமெரிக்க நிபுணர்கள் 1969-இல் அறிக்கை வெளியிட்டபோது, முதல் தரமானது என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை மட்டுமே குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் உள்ள நூற்றுக் கணக்கான வேதியியல் ஆசிரியர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வகுப்புக்களில் கலந்து கொண்டு மிகவும் பயன்பெற்றனர். இன்றும் அவர்கள் தங்கள் தொடர்பை நினைத்து மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிக்கின்றனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்து வேதியியல் பேராசிரியர்களாக இருப்பவர்களை இந்தியாவில் எங்கும் காணலாம். அமெரிக்காவில் சிலர் உயர்ந்த நிலையில் உள்ளனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்கூடங்களில் பயிற்சி பெற்ற ஏராளமான பேர் நம் நாட்டிலுள்ள இரசாயன தொழிற்சாலையிலும், தேசிய ஆய்வுக் கூடங்களிலும், அணு ஆராய்ச்சி நிறுவனங்களிலும் நுணுக்கமான பதவிகளில் அமர்ந்து ஈடும் இணையுமில்லாத பணியைச் செய்துகொண்டு வருகின்றனர். டிராம்பேயிலுள்ள அணு ஆராய்ச்சி கேந்திரத்தில் பயிற்சிபெற முதல் முறையாக அறிவியல் மற்றும் பொறியியல் பட்டதாரிகளைத் தேர்ந்தெடுக்க நடத்தப்பட்ட போட்டியில் அண்ணாமலைப் பல்கலைக் கழக எம்.எஸ்சி. வேதியியல் பட்டதாரிகள்தான் இந்தியாவிலேயே மிகக் கூடுதலான மதிப்பு எண்களைப் பெற்றனர்.

வேதியியல் ஆராய்ச்சியில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆற்றியுள்ள சாதனைகள் இந்தியாவெங்கும் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் பாராட்டப் பெறுகின்றன. குட்டநோய், காசநோய் ஆகியவற்றை நீக்க உதவும் சில வேதியியல் பொருள்கள் இங்குக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. எலெக்ட்ரானிக் துறையில் இயங்கும் சில வேதியியல் பொருள்களுக்கு விளக்கங்கள் இங்குதான் கொடுக்கப்பெற்றன.

கடந்த 25 ஆண்டுகளில் 50 பேர் வேதியியல் துறையில் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். உலகெங்கும் உள்ள ஆராய்ச்சி ஏடுகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் 200க்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதிப பாராட்டப்பெற்றிருக்கின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புதிதாக உருவாக்கப்பெற்ற 100 கலப்புப் பொருள்கள்பற்றிய வண்ணப் படங்களும் விளக்கங்களும் அமெரிக்காவில் உள்ள சாடுட்லர் ஆராய்ச்சிக் கூடங்களில் அச்சிட்டு உலகெங்குமுள்ள அறிவியல் அறிஞர்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வேதியியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளின் மறுபடிகள் வேண்டி உலகெங்குமிருந்து ஆயிரக் கணக்கான வேண்டுகோள்கள் வந்துள்ளன.

மேலும், இங்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் வேதியியல் முடிவுகளைப் பற்றி உலகெங்கும் வெளியிடப்பெற்ற நூல்கள் சஞ்சிகைகளில் மேற்கோள் காட்டப்பெற்றிருப்பதை எண்ண இயலாது. அந்த அளவிற்கு இந்தப் பல்கலைக்கழக வேதியியல் துறை ஒப்பற்ற பணி புரிந்து இருக்கிறது.

# அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர்கள்



மகாகனம் வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார் 1929
மீண்டும்— 1935—1940



பேராசிரியர் சாமுவேல் அரங்கநாதன்
1929—1935



சர் கே.வி. ரெட்டி நாயுடு
1940—1942



பேராசிரியர்
எம். இரத்தினசாமி
1942—1948



டாக்டர் எஸ்.ஜி. மணவாள இராமாநுஜம்
1948—1951



சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் 1951—1952



சர் ஸி. பி. இராமசாமி அய்யர்
1952—1955
மீண்டும் 1962—1966



திரு தி.மு. நாராயணசாமி பிள்ளை 1955—1961



நீதிபதி திரு.வி. சுப்பிரமணியம்
1961—1962



நீதிபதி திரு.பி. சந்திரா ரெட்டி 1966—1968



டாக்டர்
எஸ்.பி.ஆதிநாராயண்
1969—1975



டாக்டர் எஸ். சந்திரசேகர்
1975—1978



இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்களுக்கு இணங்க ஒரு மாபெரும் நூலகம் அண்ணாமலை நகரில் இயங்கி வருகிறது.

1920-ஆம் ஆண்டில் மீனாட்சி கல்லூரி ஏற்பட்டபோது 200 நூல்களுடன்தொடங்கப் பெற்ற இந்நூலகம் 1929-இல் 17,000 தொகுதிகள் அடங்கிய அண்ணமலைப் பல்கலைக்கழக நூலகமாகப் பெயர் பெற்றது.

இந்தப் பொன்விழா ஆண்டில் இந்நூலகம் மூன்று இலட்சம் நூல்களுடன் திகழ்கிறது. ஆண்டுதோறும் ஐந்து இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பத்தாயிரம் நூல்கள் புதிதாகச் சேர்க்கப் பெறுகின்றன. ஓராயிரம் சஞ்சிகைகளை இந்நூலகம் வரவழைக்கிறது.

நுண்மாண் நுழைபுலம் நிறைந்த சர் சி. பி. இராமசாமி ஐயர் பெயரால் அமைந்துள்ள நூலகக் கட்டடம், கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாகவும், அனைத்து வசதிகளையும் தன்னகத்தே கொண்டதாகவும் அழகிய மாளிகையாக அமைந்திருக்கிறது. 36,000 சதுர அடி பரப்புள்ள இடவசதிகளும், காண்பவர் யாவரையும் ஈர்க்கக்கூடிய அக — புற அமைப்புக்களையும் உடையது.

நூல்களின் இருப்பிடம், மேற்கோள் நூலகப் பகுதி, சஞ்சிகைப் பகுதி, நூல்களைக் கட்டிடமாகக் கட்டும் பிரிவு, படம் எடுக்கும் பகுதி, ஆராய்ச்சி மாணவர்க்கு ஒதுக்கப்பெற்ற பகுதி ஆகிய ஒவ்வொன்றும் குறிப்பிடத்தக்க தனிச் சிறப்புக்களுடன் விளங்குகின்றன.

நுண்கலை, அறிவியல், இந்திய இயல் ஆகிய துறைகளிலும், வேறு எங்கும் கிடைக்காத நூல்கள் இங்கே உள்ளதால் இவற்றைப் படித்துப் பெரும்பயனடையலாம். இந்நூலகத்தில் ஆயிரக்கணக்கான பழம் சுவடிகளும் ஏட்டுப் பிரதிகளும், இப்போது அச்சில் இல்லாத கலைத்துறை நூல்கள் பலவும், இசைத் தட்டுகளும் ஏராளமாக உள்ளன. திரைப் படப் பகுதியும், மைக்ரோ பிலிம் செய்யப் பெற்ற அறிவுத்துறைப் பகுதியும் இங்கு உள்ளன.

அண்ணாமலை அரசர், சர் சி. பி. இராமசாமி ஐயர், திரு. வி. கே. வேணுகோபாலச் செட்டியார் ஆகியோர் தம் வாழ்நாள் முழுவதும் சேகரித்த சிறந்த நூல்களை இந்த நூலகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள்.

இந்திய அரசாங்கத்தாரும், மாநில அரசாங்கத்தாரும், பிரிட்டிஷ் கவுன்சிலும், அமெரிக்க அரசின் தகவல் துறையினரும் தங்கள் வெளியீடுகளை இந்நூலகத்திற்கு அனுப்பி வருகிறார்கள்.

அவ்வப்போதுஅண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பட்டம் பெற்றவர்களின் பெயர்களும் கட்டுரைகளும் இந்நூலகத்தில் இடம்பெறுகின்றன. அந்த நூற் பட்டியல் அச்சிட்டு வெளியிடப் பெறுகிறது.

இந்த ஆண்டு முதல் நூலகக் கல்வித் துறையில் பட்டப் படிப்பு தொடங்கப்பெற்றிருக்கிறது.





# தமிழும் மொழியியலும்

டாக்டர் ச. அகத்தியலிங்கம்
[இந்திய மொழிகள் புலத்தலைவர்.]

இன்று பொன்விழாக் கோலம் பூண்டு நிற்கிறது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். 50 ஆண்டுக் காலக் கட்ட வளர்ச்சியில் எத்தனையோ பெருமைகளைத் தேடிக்கொண்டது இப்பல்கலைக் கழகம். தமிழுக்கெனப் பல்வேறு துறைகளைக் கண்டது இப் பல்கலைக் கழகம். தமிழ் இலக்கியமாகட்டும், தமிழ் இலக்கணமாகட்டும், தமிழ் மொழியியலாகட்டும் இல்லை தமிழ் இசையாகட்டும் இவற்றுக்கெல்லாம் தனித் தனித் துறைகளைக் கண்டு, தமிழ் மணம் பரப்பி வருவது இப்பல்கலைக் கழகம். 1929-ல் தோன்றிய இப்பல்கலைக்கழகத்தைப் பற்றிச் செட்டிநாட்டு வள்ளல் அண்ணாமலைப் பேரரசர் அவர்கள் பேசிய சில செய்திகள் என் நெஞ்சிலிருந்து நீங்காது நிலைபெற்றிருக்கக் காணுகிறேன்.

"This University owes its existence to two factors which I shall, with your leave, detail here to-day. First and Foremost is the hearty andenthu siastic response that the Govern ment of Madras has been giving to endeavours of private philanthrophy, and secondly, the desire of the 18 millions of Tamil speaking people in this presidency and abroad also to nurture a centre of learning, to give to the world the value of Tamil learning, literature and culture."

எனக் கூறிச் சென்றார். தமிழ் மக்களின் ஆசாபாசங்களையும் அபிலாசைகளையும் பிரதிபலித்து நிற்பதே இப்பல்கலைககழகம். அண்ணாமலையரசரின் சிந்தையில் முகிழ்ந்த எண்ணங்களின் திருஉருவாக உள்ளது இப் பல்கலைக்கழகம். கடந்த 50 ஆண்டுகளில் இப் பல்கலைக் கழகம் தமிழுக்கு ஆற்றிய பணிகள் பல; தமிழ் அன்னைக்குச் சூட்டிய ஆரங்கள் பலப்பல. இப் பல்கலைக் கழகத்தில்தான் முதன் முதலில் தமிழ் எம்.ஏ. வகுப்பு ஆரம்பமாயிற்றென்பது இன்று வரலாறாகிவிட்ட நிலை. இப் பல்கலைக் கழகந்தான் முதன் முதலில் தமிழில் டாக்டர் பட்டத்தை அளித்த பெருமை பெற்றது. வாழையடி வாழையாகச் சிறந்த பல தமிழ்ப் பேராசிரியர்களைக் கண்ட பெருமை கொண்டதும் இப்பல்கலைக் கழகந்தான்.

திருநெல்வேலிச் சீமை தந்த கா.சு. பிள்ளை, யாழ்நூலை ஆக்கிய ஈழம் தந்த சுவாமி விபுலானந்த அடிகள், தொல்காப்பிய செல்வர் நாவலர் சோமசுந்தர பாரதியார், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, செட்டிநாடு தந்த பண்டிதமணி கதிரேசன் செட்டியார், செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதன், பன்மொழிப் புலவர் தெ.பொ.மீ., முத்தமிழ்க் காவலர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார், இராமாயணச் செல்வர் கோ. சுப்பிரமணியப்பிள்ளை, அறிஞர் வ.சுப. மாணிக்கம், திருமுறைச் செல்வர் க. வெள்ளை வாரணனார் போன்ற இன்னோரன்ன பல பேராசிரியர்களைப் பெற்றெடுத்ததும் இப்பல்கலைக்கழகந்தான். மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சா.வும் இப்பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார் என்பது எனக்குத் தித்திக்கும் தேன் விருந்து.

நாட்டாரும் பண்டாரத்தாரும் சுப்பிரமணிய சாஸ்திரியும் வலம் வந்த பல்கலைக் கழகம் எங்கள் பல்கலைக்கழகம்.

இராகவையங்கார் குடிகொண்டது எங்கள் பல்கலைக்கழகம்.

தேவாரத் திருமுறையை வரலாறாக்கியது அண்ணாமலைப் பல்கலைக் கழகம். தமிழ் வரலாற்றை வரன்முறையாக முதன் முதலில் எழுதியது இப்பல்கலைக் கழகந்தான். தனியொரு வெளியீட்டுத் துறையை ஏற்படுத்தி அருந்தமிழ் நூல்கள் ஆக்கித் தந்த பெருமை இத்துறையைச் சாரும். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற சித்தாந்தத்திற்கு வித்திட்டது எங்கள் பல்கலைக் கழகம்.

மொழியியலுக்கெனத் தனியொரு துறையை ஏற்படுத்தி

**அடுத்த கல்வி ஆண்டிலிருந்து அஞ்சல வழிக் கல்வி மூலம் ஆசிரியப் பயிற்சியில் முதுநிலைக் கல்வி வசதி (Master's Degree in Education) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தொடங்கப்படும். இத்தகவலை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு பி.எஸ். சோமசுந்தரம் அவர்கள் 15.11.79 அன்று நடைபெற்ற பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.**

மொழி யாராய்ச்சி செய்த பெருமை இப்பல்கலைக்கழகத்திற்கு உண்டு. இன்று இத்துறை இந்திய நாட்டிலேயே சிறந்தஒரு துறையாக விளங்கக்காண்கிறோம். திராவிட மொழியாராய்ச்சியும் குறிப்பாகத் தமிழ் மொழியின் ஆராய்ச்சியும் இத்துறையின் வேரும் விதையுமாகும். இத்துறை கண்ட நூல்கள் பல. ஆராய்ச்சி உரைகள் பலப்பல. பத்துப் பதினைந்து ஆண்டுக் காலப் பகுதியில் 75-க்கும் அதிகமான நூல்களை வெளியிட்டது. இத்துறை 40-க்கும் அதிகமான டாக்டர் பட்டங்களை உருவாக்கியுள்ளது. ஆயிரத்துக்கும் அதிகமான ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. தமிழ் மொழியின் அமைப்பு, அதன் ஆக்கம் சொல்லியல், தொடரியல், பொருளியல், ஒலியியல், ஒலியணியியல் போன்றவற்றை யெல்லாம் ஆராய்ந்து வெளியிட்டுள்ளது.

சங்ககால மொழியை ஆராய்ந்து ஏழு பகுதி வரிசை நூல்களாக வெளியிடுகிறது இத் துறை. இடைக்கால்த தமிழையும் தற்காலத் தமிழையும் ஆராய்ந்து பல்வேறு பகுதிகளாக வெளியிட எண்ணியுள்ளது. இது நடத்திய 25-க்கும் அதிகமான கருத்தரங்குகளில் தொல்காப்பியத்திற்கெனத் தனிக் கருத்தரங்குகளை நடத்தி, தொல்காப்பிய மொழியியல் என்ற பெயரால் தொல்காப்பியத்தை நாடறியச் செய்த பெருமை எங்களுக்கு உண்டு. அதோடு சார்ந்த மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிகள் பற்றிய நூல்கள் பலவற்றையும் வெளியிட்டுள்ளது.

சென்னையில் மட்டுமின்றி சிக்காகோவிலும் லண்டனிலும் இதன் பெருமை பரவ வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஆங்கிலத்திலும் இதுபற்றி எழுதியும் பேசியும் வருகிறோம்.

அன்னைத் தமிழ் மட்டுமன்றி காட்டிலும் மேட்டிலும் கரந்துறைகின்ற பழங்குடி மக்கள் மொழிகளையும் ஆராய்ந்து 14 வரிசை நூல்களாக வெளியிட்ட பெருமை எங்களுக்கு உண்டு. இன்னும் பழங்குடிகள் பற்றிய 10 நூல்கள் வெளியிட உள்ளன என்பதையும் பெருமையோடு சொல்ல ஆசைப்படுகிறேன். தென்னிந்திய பழங்குடி மக்களைப் பற்றிய நூல் வரிசை (The Tribes and Tribal Languages of Southern India) என்ற பெயரில் ஆங்கிலத்திலும் தமிழிலும் வர உள்ளது.

மேலும், அன்றுமுதல் இன்று வரை தமிழ் மொழியில் காணப்படும் சொற்களை யெல்லாம் சேகரித்து, அவற்றின் ஆக்கம், அவற்றின் பொருள், எந்த இலக்கியத்தில் முதன் முதலில் எவ்வாறு வந்தது என்பன போன்ற செய்திகளையெல்லாம் திரட்டி, பெரியதொரு வரலாற்று அகராதியை உருவாக்க முனைந்துள்ளது. இத்துறை. The New English English Oxford Dictionary தொகுதிகளில் இருப்பதைப் போலப் பத்துப் பன்னிரண்டு தொகுதிகளில் உருவாக்க வேண்டும் என்பதே எங்கள் ஆசை. இது மட்டும் உருவாகிவிட்டால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைக் கண்ட அண்ணாமலைப் பேரரசருக்கும், அவர்தம் மைந்தர் எங்கள் இணை வேந்தர் முத்தையவேள் அவர்களுக்கும் எங்கள் துணைவேந்தர் சோமசுந்தரனார் அவர்களுக்கும் மொழியியல் துறை அளிக்கும் மிகப் பெரும் காணிக்கையாக அமையும்.

அன்னைத் தமிழுக்குச் செய்த அரும்பெரும் அணிகலமாக நிற்கும்.


THERE IS A METHOD OF MAKING
YOUR MONEY GROW
AND WE HAVE QUITE A FEW METHODS

**Given time, some serious thought and a little bit of thrift, your money can be made to grow.... finding different ways to do so, is our business strictly speaking.**

**It is no secret either. Everyone of our ideas is down to earth. Give us some time, we will show you our wealth of ideas.... Vidya Yojana Deposit Scheme, Kalpa Vriksha, Kshemanidhi, Fixed Deposits, to name a few. Pick the one you like, give it a little time and see how your money grows with us, even without your knowledge.**

**Corporation Bank Limited**

—Where Friendliness is a Tradition

*Regd. Office* : UDUPI
*Admn. Office* : MANGALORE

N. N. PAI
Chairman


# கொடி நாள்



எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009.

நாள் : 9—11—79

நாடு முழுவதும் டிசம்பர் 7-ஆம் நாள் கொடி நாள் கொண்டாடுவதறிந்து மனமகிழ்கிறேன்.

நாட்டின் பாதுகாப்பிற்காக படைவீரர்கள் ஆற்றிவரும் அரும்பணி போற்றுதற்குரியதாகும். தாயகம் காப்பதில் தன்னலம் பாராமல், குன்றாத ஆர்வத்துடன் அயராது உழைக்கும் படை வீரர்களை "இக்கொடி நாள்" நன்னாளில் உளமாரப் பாராட்டுகிறேன்.

(ஒ-ம்) எம். ஜி. இராமச்சந்திரன்

முதல் உலகப் போருக்குப் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்கள் 11-ஆம் நாள் "போர் நிறுத்த நாள்" ஆகக் கொண்டாடப்பட்டு வந்தது. பின்னர் அதுவே "பாப்பி நாள்" ஆகக் கொண்டாடப் பட்டது. இந்நாட்களில் முதல் உலகப் போரில் உயிரிழந்தோர் நினைவாகக் கலைப் பொருட்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் செய்யப்பெற்று விற்கப்பட்டன. அதன் மூலம் வசூலான தொகை முழுவதும் போர் வீரர்கள் மற்றும் அவர் தம் குடும்ப நலத்திற்கென செலவு செய்யப்பட்டது. இந்தியா சுதந்திரம் அடைந்ததன் பின் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் திங்கள் 7-ஆம் நாள் கொடி நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் மூலம் இந்திய மக்கள் போரில் வீரச் செயல்கள் புரியும் போர் வீரர்களைக் கவுரவிக்கவும், அவர்களுக்கு நாம் வழங்கும் ஒத்துழைப்பினை உறுதிப்படுத்தவும் வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே, கொடி நாள் என்பது தொன்று தொட்டே நமது தேசிய வாழ்வுடன் பின்னிப் பிணைந்த ஒரு விழாவாகும் என்பது வெள்ளிடைமலை.

கொடி நாளன்று பொதுமக்களிடமிருந்து நன்கொடைகள்

## நிதி வழங்குவீர்!

**எம். மாதவன் நம்பியார்,**
**ஐ.ஏ.எஸ்.,**
**முன்னாள் படைவீரர்**
**நல்வாழ்வு இயக்குநர்.**

பெருமளவில் எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் பெருமளவில் வாரி வழங்கிய போதிலும் படைவீரர் மற்றும் அவர்தம் குடும்ப நல்வாழ்வுக்கு ஆற்ற வேண்டிய அரும்பெரும் பணிகளுக்குப் பற்றாக்குறையாகவே உள்ளது. தமிழ்நாடும் மற்ற மாநிலங்களைப் போன்று இக்கொடி நாளில் நிதி வசூலித்து வருகிறது. இக் கொடி நாளில் வசூலாகும் தொகை மத்திய, மாநில அரசுகள் பகிர்ந்து, படைவீரர் குடும்ப நலப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படு




கிறது. மத்திய அரசின் பங்கினைப் பாதுகாப்பு அமைச்சரின் தலைமையிலான மேலாண்மைக் குழு ஒன்று நிர்வகிக்கின்றது. நமது மாநில அரசின் பங்கு தமிழ்நாடு முன்னாள் படை வீரர் நல நிதியுடன் இணைக்கப்பட்டு ஆக்கப் பணிகளில் செலவு செய்யப் பெற்று வருகிறது.

**அமைப்பு:**

தமிழ்நாட்டில் நிலையான கொடி நாள் விழா அமைப்புக் குழு ஒன்று மாநில ஆளுநரின் தலைமையில் இயங்கி வருகிறது. இது கொடி நாள் விழா கொண்டாட வேண்டிய வழி முறைகள் மற்றும் வசூல் செய்ய வேண்டிய தொகை முதலியவற்றை நிர்ணயிக்கிறது. . மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் கொடி நாள் விழா அமைப்புக் குழு மாநிலக் குழுவின் செயற் பிரிவாகச் செயல்படுகிறது.

**கொடி நாள் நிதியிலிருந்து வழங்கப்படும் நிதியுதவிகள்**

கொடி நாள் நிதியின் தமிழ்நாட்டின் பங்கு தமிழ்நாடு முன்னாள் இராணுவத்தினர் நல நிதியுடன் இணைக்கப்பட்டு முன்னாள் படை வீரர்களுக்கு அவர் தம் நலன் பேணும் பொருட்டு தக்கவகையில் மானியங்களாக வழங்குதற்கென முன்னாள் இராணுவத்தினர் நல இயக்ககத்தின் மேலாண்மையில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வண்ணம் இந் நிதியிலிருந்து 1978-79-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மானியங்கள் சுமார் 8 இலட்சம் ரூபாயாகும்.

மேலும், இந்நிதியிலிருந்து முன்னாள் படைவீரர் மற்றும் அவர் தம் குடும்பத்தினரின் புனர் வாழ்விற்கென சிறு திட்டங்கள் பலவும் செயலாக்கப்பட்டு வருகிறது. அவற்றுள் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. போரில் உயிரிழந்தோர்/ஒய்வு பெற்றோர்/விலக்கப்பட்டோர் மற்றும் பணியிலுள்ள இராணுவ வீரர் குடும்பத்தினைச் சார்ந்த பெண்களுக்கென முழு நேர தையற் பயிற்சி முகாம்கள் மாவட்டம்தோறும் அமைக்கப் பெற்று செயல்பட்டு வருகின்றன. அவ்வாறு பயிற்சி பெறுவோருக்கு மாதம் ரூ. 15 பெறுமான மூலப் பொருட்கள் வழங்குவதுடன் பயிற்சி உதவிப் பணமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 20-ம் வழங்கப்பட்டு வருகிறது.

2. தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து பயிற்சிக்கென தொழில்நுட்பப் பள்ளிகள் செங்கல்பட்டு, தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் நிறுவப் பெற்று இயங்கி வருகின்றன.

3. போரில் ஊனமுற்றோர்/உயிரிழந்தோர் கைம்பெண்கள் மற்றும் வறுமையிலுள்ள முன்னாள் படைவீரர் மற்றும் முன்னாள் படைவீரர் கைம்பெண்கள் ஆகியோர் நல் வாழ்விற்கென இராணுவத்தினர் இல்லங்கள் மாநிலத்தில் ஆங்காங்கு கட்டப்பட்டு வருகின்றன. தற்பொழுது வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் இத்தகைய இராணுவத்தினர் இல்லங்கள் உள்ளன.

4. ஊனமுற்ற முன்னாள் படைவீரர், விதவைகள் ஆகியோர் நலனை முன்னிட்டு அவர் தம் அன்றாட வருவாய்க்கு வியாபாரம் செய்வதற்கென சிறு பெட்டிக் கடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

5. மாவட்டந்தோறும் தலைமை மருத்துவ மனைகளில் முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்க்கு மட்டும் பயன்படும் வகையில் 12 படுக்கைகள் கொண்ட தனி அறைகள் கட்டப்பட்டுள்ளன.

6. ஆதரவற்ற ஒய்வூதியம் பெறும் வயது முதிர்ந்த முன்னாள் படைவீரர் நலன் கருதி வட ஆர்க்காடு மாவட்டத்தில் முதியோர் இல்லம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இவ்வில்லத்தில் அத்தகைய 58 பேர்கள் தங்குவதற்கான வசதிகள் உள்ளன.

7. வறுமையிலுள்ள ஊனமடைந்த முன்னாள் படைவீரர்/கைம்பெண்கள் அன்றாட வாழ்க்கைச் செலவிற்கென அவர் தம் தகுதிக்கேற்ப மொத்த/மாதாந்திர மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

8. முன்னாள் படைவீரர்/விதவைகளின் பெண் பிள்ளைகளுக்கு அவர்தம் திருமணச் செலவிற்கென திருமண மானியமாக நபர் ஒன்றுக்கு ரூ. 350 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

9. காச நோய் மற்றும் தொழு நோய் மருத்துவமனைகளில் உள் நோயாளியாகச் சிகிச்சை பெறும் முன்னாள் இராணுவத்தினருக்கு சிகிச்சை காலத்தில் மருத்துவ கைச் செலவுப் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

10. மிகவும் வறுமை நிலையிலுள்ளோர் துயரினை உடனடி துடைத்தற் பொருட்டு உடனடி நிவாரண நிதி வழங்கப்பட்டு வருகிறது.

11. முன்னாள் படைவீரர் இறந்தால் அவரது இறுதிச் சடங்கிற்கென நபர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

12. வெள்ளம் மற்றும் தீயால் பாதிக்கப்பட்ட முன்னாள் படைவீரர்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன.

13. பள்ளியில் படிக்கும் சிறார்களுக்குக் கல்வி உபகாரச் சம்பளமாக ரூ. 25-லிருந்து ரூ. 100 வரை வழங்கப்பட்டு வருகிறது.

14. டேட்டாமேட்டிக் கழகங்களில் பயிற்சி பெறும் முன்னாள் படைவீரர்களுக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்டுள்ளன போன்ற அறப் பணிகளைச் செவ்வனே நாளும் செய்வதற்கு நிதி வசதியின் அவசியம் சொல்லாமலே விளங்கும். எனவே, கருணை உள்ளம் கொண்ட தமிழக மக்கள் கொடி நாள் நிதிக்குத் தாராளமாக வாரி வழங்குவதன் மூலம், தமிழ்நாட்டிலுள்ள முன்னாள் படைவீரர் புனரமைப்பு என்னும் சீரிய பணியில் தமது பங்கினை இனிது ஏற்பர் என்பது திண்ணம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

*With the best compliments from*

**"RANITEX"**

**(UNIT OF MADURA SOUTH INDIA CORPORATION (P) LTD.,)**
Rajah Annamalai Memorial Institute,
603, Anna Salai, MADRAS 600 006.
(Near Anna Flyover)
FULLY AIR CONDITIONED
RETAIL TEXTILE SHOW ROOM
DEALERS IN SPECIALISED ITEMS OF

**"MADURA FABRICS"**
and other
**"LEADING MILLS"**

SUITINGS — SHIRTINGS — SAREES
and
Other Materials.

OUR MOTTO:
PROMPT AND COURTEOUS SERVICE
TO CUSTOMER'S FULLEST SATISFACTION

Grams: "MUSIC" Phone: 89652


பதிவு எண். M. 8676


தமிழரசு
16-12-1979
50 காசு

# அனைத்திந்தியக் கூட்டுறவு வார விழா

14-11-79 - 20-11-79






# தமிழரசு

## அரசுத் துறைகள் ஆற்றிய பணிகள் தொகுப்பு இதழ்

மலர்-10 16-12-1979 இதழ் 12

# எம் கடன் பணி செய்து கிடப்பதே!



மக்களின் எண்ணங்களை—மக்களின் விருப்பங்களைச் சட்டமாக்கவும், அவர்களது தேவைகளை நிறைவேற்றவும்தான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சட்டமன்றத்திற்கு அனுப்பப்படுகிறார்கள் என்று அமரர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

அதனை உள்ளத்திலே இருத்தி, லஞ்சலாவண்யம் இல்லாத—ஊழலற்ற-நீதித்துறையில் நிர்வாகம் தலையிடாத அரசை நடத்துகிற மாபெரும் பணியைச் செவ்வனே செய்ய உயிரைக் கொடுத்தாகிலும் பாடுபடுவோம். எங்களின் வாழ்வு வசதிகள் அத்தனையும் இழக்க வேண்டிய நிலை வந்தாலும்-அதற்காக எதிர்ப்படுகின்ற அத்தனை தடைகளையும் எதிர்த்து எங்கள் கடமைகளை நிறைவேற்றுவோம்.

—இப்படி, அமைச்சரவையின் சார்பிலே அமரர் அண்ணா மீது நான் ஆணையிட்டுச் சொல்லி இரண்டரை ஆண்டுக்காலம் ஆகிறது. அதாவது இந்த அரசு அமைத்து இரண்டரை ஆண்டு ஆகிறது.

இந்தக் குறுகிய காலத்திலேயே, நீண்ட நெடுங்காலமாக ஆளும் ஓர் அரசு ஆற்றிடத்தக்க பணிகளை, நாங்கள், இந்த நாடு நலம்பெறத்தக்க வகையில்- நாட்டுமக்கள் பயன்பெறத்தக்க விதத்தில் ஆற்றிவந்திருக்கிறோம்.

இந்த இரண்டரை ஆண்டுக்காலத்தில்-

அமரர், பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைகள்—இலட்சியங்கள் எவ்விதத் தடங்கலும் இன்றி, குறைவும் இன்றிச் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஊழல், லஞ்சம், உறவினர்களுக்குச் சலுகை போன்ற நீதிக்கு எதிரான செயல்முறைகள் அடியோடு நீக்கப்பட்டிருக்கின்றன.

உழைப்பவரே உயர்ந்தவர், எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்கிற தத்துவத்தின் அடிப்படையில், அரசின் நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன

எதிர்காலத்தில் யார் ஆட்சிக்கு வந்தாலும், மக்கள் தந்த அதிகாரத்தைத் தவறான வழியில் துர்விநியோகம் செய்யாமல் தடுக்க, எச்சரிக்க—நீதியின் தீர்ப்பு உதவி செய்திடவேண்டும் என்று மக்களுக்குத் தந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு வந்திருக்கிறது.

ஏழ்மை, வறுமை இவைகளை நீக்க நல்ல பல திட்டங்களைத் தீட்ட நிபுணர்களின் அறிவு நிச்சயம் பயன்படுத்திக்கொள்ளப்பட்டு, மக்களின் கட்டளைப்படி நாங்கள் எங்கள் கடமையைச் செய்து வந்திருக்கிறோம்.

ஏழை, எளிய தாழ்த்தப்பட்ட, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களின் மேம்பாட்டுக்காகப் பகுத்தறிவுப் பகலவனாம் தந்தை பெரியார் அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் மகத்தானவைகளாகும். அவர்களுக்குக் காணிக்கையாக அறிவித்து அரசை நடாத்திய அமரர் அண்ணா அவர்களைப் பின்பற்றியே, அடியொற்றியே இந்த அரசு நடந்து வருகிறது.

தந்தை பெரியார் அவர்களுக்கு நூற்றாண்டு விழா நடத்தும் அரிய வாய்ப்புக் கிட்டியதொன்றே எங்களுக்குப் பெரும்பேறாகும்.

## மாண்புமிகு முதல்வர்

எனவேதான்—

மதுவிலக்கை நேர்மையான வழியில்-மதுவின் தீமையைப் பற்றி மக்களுக்குப் பிரச்சாரம் செய்வதற்குத் தக்கமுறையில் — தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா நிறைவு நாளில் சட்டத்திருத்தத்தை அறிவித்துத் தாய்மார்களின் கண்ணீரைத் துடைத்திருக்கிறோம்.

அரசு ஊழியர்களுக்குத் தொண்டனாக இருப்பேன்; தோழனாக இருப்பேன் என்று அன்று கூறியதைப் போலவே, இந்தக் குறுகிய காலத்தில் அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு அளவற்ற சலுகைகளை அளித்து வந்திருக்கிறது.

வேளாண்மைத்துறை — கல்வித்துறை போன்ற பல்வேறு துறைகளும் மேம்பட்டு விளங்கிடத்தக்க பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்தாற்போல எடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

தமிழகத்திலே உள்ள யாரோ ஒரு குடும்பம், யாரோ ஒரு தனிமனிதர், எங்கோ கஷ்டப்பட்டால் நமக்கு என்ன என்று நினைக்கின்ற மனநிலை-அலட்சியம்-அந்தச் சுயநலம் யாருக்கும் வந்துவிடக்கூடாது என்பதிலே, இந்த இரண்டரையாண்டுக் காலமும் நாங்கள் மிகமிக எச்சரிக்கையாகவே இருந்து வந்திருக்கிறோம் என்பதைத் தெளிவுப்படுத்த வேண்டியது என்னுடைய நீங்காத கடமை.

தொழிலாளர் நலனைக் கருத்தில் கொண்டு இந்த அரசு, மேற்கொண்ட முனைப்பான நடவடிக்கைகள், வேறெந்த அரசும் செய்யக்கூட நினைத்திராதவை என்பதை என்னால் உறுதியாகச் சொல்லிக்கொள்ள முடியும். தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்குச் சட்டப்படி கிடைக்கவேண்டிய சலுகைகள் அவர்கள் முழுமையாகப் பெற்றிட வாய்ப்பளிக்கவும் அரசு பல சட்டத்திருத்தங்களைக் கொண்டு வந்தது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பதற்கு உதாரணமாகத் திகழும் இந்த அரசில், தொழில்துறை பெரிதும் மேம்பட்டிருக்கிறது என்பதனை யாராலும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

பெரிய தொழிற்சாலைகள் மட்டுமல்ல, சிறு தொழில்களும் வளர்ச்சியுற வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளாலே வேலைவாய்ப்புப் பெற்றோர் பல்லாயிரக்கணக்கானவர்கள் ஆவர்.

கிராமப்புற மக்களும் பயன்பெறும் விதத்தில் நகர்ப்புறங்களிலும் நிறைவேற்றப்பட்டு வரும் வேலைக்கு உணவுத் திட்டத்தின் மூலம் அமரர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும்' நிலையை இந்த அரசு உருவாக்கியிருப்பது உண்மை—வெறும் புகழ்ச்சியில்லை!

ஆண்டுக்கு ஆண்டு இயற்கைச் சீற்றத்தால் உருவான புயல்-வெள்ள பயங்கரங்கள், பல்வேறு துறைகளிலும் ஏற்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட வேலைநிறுத்தங்கள்-கிளர்ச்சிகள்-போராட்டங்கள் ஆகியவற்றால் உருவான இன்னல்கள், எதிர்ப்புகள், இடர்ப்பாடுகள் எல்லாவற்றையும் தாண்டி—நிதானமிழக்காமலும், அவசரமோ, ஆவேசமோ கொள்ளாமலும் இந்த அரசு நடைபோட்டு வருகிறது.

எங்கள் அடி ஒவ்வொன்றும், அமரர் அண்ணா அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டதைப் போல அளவான, ஸ்திரமான முறையில் வைக்கப்படுவதாகும் என்பதை அடக்கத்தோடு சொல்லிக் கொள்வதிலே நான் பெருமை கொள்கிறேன். பதவிச் சுவை எங்களுக்குப் பெரிதல்ல; எம் கடன் பணி செய்து கிடப்பதே என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்வதில் நான் பெருமிதம் அடைகிறேன்!



தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை வடநாட்டில் அமைந்துள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்துதான் கொண்டு வர வேண்டியிருந்தது. அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை இரயில் மூலமாகக் கொண்டு வருவதில் பல சிரமங்களும், இடையூறுகளும், தாமதங்களும் இருந்தன. இரயில் வாகன்கள் தேவைப்படும் நேரத்தில் கிடைப்பது அரிதாக இருந்தது. அத்துடன் இரயில் மூலமாக நிலக்கரியைக் கொண்டு வருவதற்கு அதிகச் செலவும் இருந்த காரணத்தால், அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கடல் மார்க்கமாகக் கொண்டு வருவதென முடிவு செய்யப்பட்டது. இதற்கான கப்பல்களை வாங்குவதற்கும், அதன் தொடர்பான பணிகளைக் கவனிப்பதற்கும் 1974-ஆம் ஆண்டு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் என்ற ஒரு நிறுவனம் மாநில அரசுத் துறையின் சார்பில் நிறுவப்பட்டது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம், 1974ஆம் ஆண்டில் இரண்டு கப்பல்களை வாங்கியது. அக்கப்பல்களுக்கு ''எம் வி. 'தமிழ் அண்ணா'', ''எம்.வி. தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா'' என்று பெயர்கள் சூட்டப்பட்டன. காலப்போக்கில் இவ்விரண்டு கப்பல்களும் உபயோகத்திற்குப் பயன்படாமல் போய்விட்டன.

இந்நிலையில் தமிழகத்தில் தூத்துக்குடியில் மிகப்பெரிய 210 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட ஒரு அனல் மின் நிலையம் அமைக்கப்பெற்று, அந்த அனல் மின் நிலையத்தின் முதல் நிலை ஜூலை 1979-ல் செயல்படத் தொடங்கியது. இந்த மின் நிலையம் முழு அளவில் செயல்படத் தொடங்கும்போது நாளொன்றுக்கு 650 மெட்ரிக் டன் நிலக்கரி தேவைப்படும்.

இந்த நிலக்கரியை வங்காளம் மற்றும் பீகார் மாநிலங்களில் அமைந்துள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து கப்பல் மூலமாகத் தான் கொண்டுவரவேண்டியுள்ளது. எனவே, கப்பல் மார்க்கமாகக் கொண்டு வரும் பொருட்டு அதிக எடைத்திறன் கொண்ட கப்பல்களை வாங்குவது பற்றி உலக நாடுகளிலுள்ள பல்வேறு கப்பல் கட்டும் தளங்களுடன் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தொடர்பு கொண்டது. நிலக்கரிப் போக்குவரத்தில் தூத்துக்குடி, ஹால்டியா போன்ற துறைமுகங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் இந்தத் துறைமுகங்களின் அமைப்புக்கு ஏற்றவாறு கப்பல்களை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பல்வேறு கப்பல் கட்டும் தளங்களும், அத்தளங்களைச் சேர்ந்த விற்பனை நிறுவனங்களும் விலைப்பட்டியல்களையும் மற்றும் தொழில்நுணுக்கக் குறிப்புகளையும் பூம்புகார் கப்பல் கழகத்திற்குத் தெரிவித்திருந்தன. மற்ற கப்பல் தளங்களுடன் பல்கேரியக் கப்பல் தளத்தைச் சேர்ந்த நிறுவனங்களிடமிருந்தும் விலைப் பட்டியல் வரப்பெற்றன. பல்கேரியக் கப்பல்களுக்கு இரண்டு நிறுவனங்கள் கப்பல் ஒன்றுக்கு முறையே 11.00 மில்லியன் யு.எஸ் டாலரும், 11.75 மில்லியன் யு.எஸ். டாலரும் விலையாகக் கேட்டிருந்தனர். இந்த விலையில் 'கிரேன்ஸ்' மற்றும் 'கிராப்ஸ்' முதலிய உறுப்புகள் அடங்கவில்லை. இதற்காக ஏற்படும் உத்தேசச் செலவுகளையும் சேர்த்து பல்கேரியக் கப்பல் வாங்குவதற்கு ஆகும் செலவு 15.00 மில்லியன் யு.எஸ். டாலரிலிருந்து 15.50 மில்லியன் யு.எஸ். டாலர் வரை இருக்குமென்று குறிப்பிடப்பட்டிருந்தது.

கப்பல்களைக் குறைந்த விலையில் வாங்கும்பொருட்டு மேற்குறிப்பிட்டுள்ள 15.50 மில்லியன் யு.எஸ். டாலர் என்ற விலைக்கு எதிர் விலையாகக் கப்பல் ஒன்றுக்கு 10.75 மில்லியன் யு.எஸ். டாலர் என்ற விலைக்கு வாங்க அனுமதி தெரிவிக்கப்பட்டது. இந்த எதிர் தொகையானது கப்பல் விற்கும் நிறுவனம் குறிப்பிட்டிருந்த தொகையைவிட கப்பல் ஒன்றுக்கு 4.75 மில்லியன் யு.எஸ் டாலர் அதாவது 3.80 கோடி ரூபாய் குறைவானது ஆகும். இந்தக் குறைந்த விலைக்குப் பல்கேரியக் கப்பல்களைக் கொடுக்க முடியாது என்றும், குறைந்த தொகையாக, கிரேன்ஸ் மற்றும் கிராப்ஸ் இவைகளுடன் சேர்த்து கப்பல் ஒன்றுக்கு 13.50 மில்லியன் யு.எஸ். டாலர் வேண்டுமென்று பல்கேரியக் கப்பல்களை விற்கும் நிறுவனம் தெரிவித்தது. இந்த 13.50 மில்லியன் யு.எஸ். டாலர் என்ற தொகை முதலில் கொடுக்கப்பட்ட ஆஃபரான 15.50 மில்லியன் யு. எஸ். டாலரிலிருந்து குறைக்கப்பட்ட தொகை ஆகும். அதாவது, கப்பல் ஒன்றுக்கு 2.00 மில்லியன் யு.எஸ். டாலர் வரை, அதாவது சுமார் 1.60 கோடி ரூபாய் வரை விலை குறைக்கப்பட்டது.

கப்பல் வாங்குவதற்கு முன்பு கப்பல்களை நேரில் சென்று பார்த்து அறிய மூன்று அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு பல்கேரியநாட்டில் வார்ணாவிற்கு அனுப்பப்பட்டது. இந்தக் குழுவிற்கு 11.90 மில்லியன் யு. எஸ். டாலர் வரை ஒரு கப்பலுக்கு விலையாக நிர்ணயிக்கலாமென்று அரசு அதிகாரம் அளித்தது. இந்தக் குழு, கப்பல்களைப் பார்வையிட்டு, பல்கேரியக் கப்பல் விற்பனை நிறுவன அதிகாரிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தியபின் மூன்று கப்பல்களை சராசரி விலையாக 13.00 மில்லியன் யு.எஸ். டாலர் செலவில் வாங்கலாமென்று அரசுக்கு உறுதியாகப் பரிந்துரை செய்தது. இந்தக் குழு நடத்திய பேச்சு வார்த்தையின் அடிப்படையில், இந்தக் குழுவின் தலைவர் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு மூன்று கப்பல்களை சராசரி 13.00 மில்லியன் யு.எஸ். டாலர் என்ற விலைக்கு பல்கேரிய அரசு மற்றும் தமிழக அரசின் விலை ஒப்புதலுக்கு உட்பட்டு வாங்க பல்கேரியக் கப்பல் விற்பனை நிறுவனத்திற்கு ''லெட்டர் ஆஃப் இன்டென்ட்'' (Letter of indent) கொடுத்திருந்தார். இந்தக் குழு செய்த பரிந்துரையில் 'கொராபோ இம்பக்ஸ்'

## பல்கேரிய கப்பல்களை வாங்குவதில் முறைகேடு எதுவும் நடக்கவில்லை

### குற்றச்சாட்டுகளுக்கு பல்கேரிய வர்த்தக அதிகாரி மறுப்பு

'பல்கேரிய கப்பல்களை வாங்குவதில் எந்தவித முறைகேடோ, தவறுதலோ நடக்கவில்லை

'கப்பல் பேரத்தில் முறைகேடுகள் நடந்ததாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை; அவதூறானவை' என்று பல்கேரிய நாட்டு வர்த்தகப் பிரிவு அதிகாரி திரு ஆர். வி. சார்கோப் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

''கப்பல் வாங்குவது குறித்து பல்கேரிய நாட்டு அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே தான் ஒப்பந்தம் ஏற்பட்டது. ஓர் அரசுக்கும் மற்றொரு அரசுக்கும் இடையே அரசு மட்டத்தில் நடந்த பேரம் குறித்து அவதூறு கூறுவதும் குற்றச்சாட்டுகளை சுமத்துவதும் மிகவும் வருந்தத்தக்கவையாகும். (It is a regrettable reflection on a Government to Government deal)'' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 'விழுப்புரம் கலவரம் சாதிக் கலவரம் அல்ல' _ சதாசிவம் குழு தீர்ப்பு

''விழுப்புரத்தில் நடைபெற்றது சாதிக் கலவரம் அல்ல, இரண்டு சமூக விரோத கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலே அது' என்று அக்கலவரம் குறித்து விசாரணைகள் நடத்த அரசினால் நியமிக்கப்பட்ட நீதிபதி சதாசிவம் தன்னுடைய தீர்ப்பில் கூறியுள்ளார்.

அந்தக் கலவரத்தில ஈடுபட்ட சமூக விரோதிகள் மீது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நீதிபதி அவர்கள் கூறியதற்கிணங்க அந்தக் கலவரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்ற விசாரணை நடந்து வருகிறது.

விழுப்புரம் கலவரத்தில் பாதிப்புக்குள்ளானவர்க்கு உதவ தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. அங்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு 10 கிலோ அரிசியும், வேட்டி, புடவை செலவுக்காக ரூ. 25-ம், 256 குடும்பங்களுக்கு குடிசைகள் கட்டிக் கொள்வதற்காக முதலமைச்சரின் நிதியிலிருந்து 1,86,400 ரூபாயும் தரப்பட்டிருக்கிறது. அத்துடன் இந்த மோதலில் உயிரிழந்த 12 குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு 6,000 ரூபாய் வீதம் நிதி உதவியும் அளிக்கப்பட்டது.

கப்பல் நிறுவனத்தார் இந்தக் கப்பல்களை டெலிவரி எடுக்கும் நாளிலிருந்து 20 ஆண்டுகளுக்கு உதிரிப் பாகங்கள் கிடைப்பதற்கான உறுதியை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுத் தருவதாகச் சொல்லியிருந்தார்கள். மேலும், அந்நிறுவனம் தனது அலுவலகம் ஒன்றினை சென்னையில் ஏற்படுத்தி இக் கப்பல்களில் பயன்படுத்தப்பெறும் உதிரிப் பாகங்களைத் தருவித்துத் தருவதற்கும் பழுது பார்ப்பதற்கும் முன்வருகிறது என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

இதற்கிடையில் 'சாம்சன்' என்ற கப்பல் கட்டும் தளம் தன்னுடைய கப்பல் விலையை 16.22 மில்லியன் யு.எஸ். டாலர் உயர்த்திவிட்டது என்றும் 'ஸலேபோ' என்னும் கப்பல் தளம் அதனுடைய விலையான 16.5மில்லியன் யு.எஸ்.டாலர் பரிசீலனைக்கு உரியது என்றும் 'ஒசாகா' கப்பல் கட்டும் தளம் அதன் விலையைக் குறைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் குழுவின் பரிந்துரையின்படி கப்பல் ஒன்றுக்கு சராசரியாக 13.00 மில்லியன் யு.எஸ்.டாலர் தொகையில் மூன்று பல்கேரியக் கப்பல்களை வாங்க அரசு அனுமதி அளித்தது. இதற்கிடையில் பல்கேரிய அரசின் 'கொராபோ இம்பக்ஸ்' நிறுவனம், பல்கேரிய அரசு கப்பல் ஒன்றுக்கு 13.20 மில்லியன் யு.எஸ்.டாலர் என்ற தொகையை வலியுறுத்துவதாகத் தெரிவித்தது. கப்பலின் விலையை நிர்ணயிப்பதில் பல்கேரிய அரசின் முடிவும் சம்பந்தப்பட்டிருப்பதால், தேவையானால் முடியாத பட்சத்தில் கப்பல் ஒன்றுக்கு 13.20 மில்லியன் யு.எஸ். டாலர் வரை கொடுக்கலாம் என்றும் எனினும், 13.00 மில்லியன் யு.எஸ். டாலர்விலைக்கே கப்பலைவாங்கஅனைத்து முயற்சிகளும் எடுக்கவேண்டும் என்றும் அரசு அறிவித்திருந்தது. அரசின் ஆணைக்கேற்ப குழு. கப்பல் ஒன்றுக்கு சராசரி 13.00 மில்லியன் யு.எஸ். டாலர் என்ற நிலையில் ஒப்பந்தத்தை முடித்தது.

இந்த நிலையில் அரசுக்கோ, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கோ தெரியாமல் சில தகவல்களை இடைத்தரகர்கள் 'கொராபோ இம்பக்ஸ்' என்ற கப்பல் நிறுவனத்திற்குத் தெரிவித்தாகத் தெரிந்தது. இது குறித்து மூன்று டெலக்ஸ் நகல்கள் கப்பல் போக்குவரத்துக் கழக அதிகாரிகளுக்கு அவர்கள் 'வார்ணா' சென்றபொழுது கிடைத்திருக்கின்றன. இந்த டெலக்ஸ் நகல்கள் விவரம் 12.5.79வரை அரசுக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. முதன் முறையாக சுமார் 1½ மாத காலத்திற்குப்பிறகு அரசின் கவனத்திற்கு இது கொண்டுவரப்பட்டது. **இடைத்தரகர்கள் கையாண்ட தவறுகள் அரசுக்குத் தெரிந்தவுடன் கப்பல் வாங்குவது சம்பந்தமாக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் இடைத்தரகர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடாது, கப்பல்கள் வாங்குவது பற்றிய தொடர்புகள் இனி பல்கேரிய அரசுடன் நேரடித் தொடர்பாகத் தான் இருக்க வேண்டும்; வேறு எந்தத் தனிநபர் மூலமாகவும் இருக்கக்கூடாது என்று அரசு உடனடி ஆணை பிறப்பித்தது. அத்துடன் இந்தத் தவறுகளில் சம்பந்தப்பட்டவர்கள் மீது தக்க கடும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டது.**

இதற்கிடையில் 'பௌலாத் லைன்ஸ்' என்ற நிறுவனம் போலந்து கப்பல்களை சராசரி 12.77 மில்லியன் யு.எஸ் டாலர் என்ற விலைக்குக் கொடுக்க முன்வந்தது. மேலும் இந்த விலையை ரூபாய் நாணயங்களாகவும் பெற்றுக்கொள்ள முன் வந்தது. இந்த ஆஃபர் ஆனது பல்கேரியக் கப்பல்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட முடிவான விலையான 13.00 மில்லியன் யு.எஸ். டாலரை விடக் குறைவாக இருந்த காரணத்தாலும் இந்தக் கப்பல்களின் விலையை ரூபாய் நாணயங்களாகப் பெற்றுக்கொள்ள இந்த நிறுவனம் அறிவித்திருந்ததாலும், விவரத்தை பரிசீலனை செய்யுமாறு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை அரசு கேட்டுக்கொண்டது. இதைப் பரிசீலனை செய்யும் வரை பல்கேரியக் கப்பல்களை வாங்குவதற்கு அனுமதி தருவதை நிறுத்தி வைக்குமாறு டெல்லியிலுள்ள கப்பல் வளர்ச்சி நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டது. 'பௌலாத் லைன்ஸ்' கொடுத்த விவரங்களின்படிநிலக்கரியை ஹால்டியா துறைமுகத்திலிருந்து தூத்துக்குடிக்குக் கொண்டுவர சராசரி டன் ஒன்றுக்கு ரூ. 6.71 அதிகமாகுமென்றும், அதனால் மின்வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1.50 கோடி அதிகம் செலவாகுமென்றும் கணக்கிடப்பட்டது. இந்தத் தொடர் செலவினைக் கணக்கில் கொண்டு, போலந்து நாட்டுக் கப்பல்களை வாங்குவது பற்றிய குறிப்பு நிராகரிக்கப்பட்டது. மூன்று பல்கேரியக் கப்பல்களை சராசரி 13.00 மில்லியன் யு.எஸ் டாலர் என்ற விலையில் நேரடியாக வாங்க முடிவு எடுக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டது. மத்திய அரசு இந்த விலையை அங்கீகரிக்குமுன்பு, மத்திய அரசின் கப்பல் இலாகா சம்பந்தப்பட்ட ஒரு உயர் அதிகாரியை பல்கேரியாவின் 'வார்ணாவிற்கு' அனுப்பி கப்பல்களின் உத்தேச விலையை நிர்ணயிக்கக் கோரியது. மேலும் மத்திய அரசினர் லண்டனில் உள்ள இரண்டு மதிப்பீட்டாளர்களின் மதிப்பீடுகளையும் கேட்டிருந்தார்கள். இதன் அடிப்படையில் மத்திய அரசு தனது கடிதத்தின் மூலம் (எண்: SW - MPS (12)/79 Miny.of Shipping & Tpt. dt.17-9-79). மூன்று கப்பல்களை சராசரி 13.00 மில்லியன் யு. எஸ். டாலருக்கு வாங்க அனுமதி அளித்தது. மேலும் மத்திய அரசின் டைரக்டர் ஜெனரல் ஆஃப் ஷிப்பிங் தனது கடிதத்தின்மூலம்(எண்.6.SDB. (10/79 dt. 22-9-1979) பல்கேரியக் கப்பல்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலை நியாயமானது என்று தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல்களின் மதிப்பீடு பற்றி, லண்டனிலுள்ள மூன்று தரமுள்ள மதிப்பீட்டாளர்கள் கொடுத்துள்ள மதிப்பீடுகளின் விவரங்களும், தமிழக அரசு ஒப்புதல் அளித்த சராசரி விலையும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| மதிப்பீட்டு நிறுவனத்தின் பெயர் | அரசு ஒப்புதலளித்த சராசரி விலை | கப்பல் 1 | கப்பல் 2 | கப்பல் 3 |
|---|---|---|---|---|
| | | (மில்லியன் யு.எஸ்.டாலரில்) | | |
| சி.எச்.ரக் அண் கோ, லண்டன் | 13.00 | 15.20 | 15.40 | 15.70 |
| டேவிஸ் புரூஸ் அண் கோ, லண்டன் | 13.00 | 15.40 | 15.50 | 15.75 |
| டேம்ப்ளின் அண் கோ, லண்டன் | 13.00 | 15.00 | 15.00 | 15.00 |

மேலே குறிப்பிட்டுள்ள மதிப்பீட்டு விலைகளுடன் ஒப்பந்த விலையை ஒப்பிட்டுப் பார்த்தால் பல்கேரியக் கப்பல் வாங்குவதுபற்றி அரசு அனுமதித்து உள்ள விலை மிகவும் லாபகரமானது என்பதில் துளியளவும் ஐயமில்லை. ஒப்பந்த சராசரி விலையான 13.00மில்லியன் யு.எஸ்.டாலர் என்பது முதலில் பல்கேரியக் கப்பல் விற்கும் நிறுவனத்தால் முதல் விலையாகக் குறிப்பிட்டிருந்த 15.50 மில்லியன் யு.எஸ் டாலர் என்ற தொகைக்கு எதிரானதாகும். ஒவ்வொரு கப்பலுக்கும் .2.50 மில்லியன் யு.எஸ். டாலர் அளவு விலை அதாவது ரூபாய் 2 கோடி வரை குறைக்கப்பட்டுள்ளது. மூன்று கப்பல்களுக்கும் சேர்த்து குறைக்கப்பட்டுள்ள தொகை சுமார் 7.5 மில்லியன் யு.எஸ். டாலர் அதாவது சுமார் ரூபாய் 6 கோடி ஆகும்.

## மருத்துவக் கல்லூரிகளில் அனுமதி

**தமிழ்நாட்டில் உள்ள எட்டு மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற 1015 எம்.பி.பி.எஸ்., வகுப்பு இடங்களில் 30 இடங்கள் வேறு மாநிலத்தைச் சார்ந்தோருக்காகவும், மூன்று இடங்கள் உடல் ஊனமுற்றவர்களுக்காகவும், பத்து இடங்கள் விதவைகளுக்கும், ஆறு இடங்கள் படையில் முன்னாள் / மாண்ட / பணியாற்றும் வீரர்களின் குழந்தைகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.**

பல்கேரியக் கப்பல் வாங்குவதில் விலையை நிர்ணயிப்பது குறித்த உண்மை நிலை இது தான். பல்கேரியக் கப்பல் வாங்குவதற்கு நடத்திய பேச்சு வார்த்தைகள் இரண்டு அரசு நிறுவனங்களுக்கிடையே நடந்துள்ள அதிகார பூர்வமான பேச்சு வார்த்தையாகும். கப்பல்களை வாங்கவிருக்கும் நிறுவனமும், விற்கவிருக்கும் நிறுவனமும் அரசு நிறுவனங்கள் என்ற நிலையில் முறைகேடு நடக்கவிருந்தது என்ற பேச்சுக்கே இதில் இடமில்லை.

இதுகுறித்து பல்கேரிய நாட்டு வர்த்தக அதிகாரி திரு ஆர்.வி. சார்கோப் அவர்கள் ''பல்கேரிய அரசு லஞ்சம் கொடுத்ததாகக் கூறப்படும் புகார் ஆதாரமற்றது, அவதூறானது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு 3 கப்பல்கள் விற்க நடந்த பேரம் அதிகாரபூர்வமானது. இதில் சந்தேகப்படும்படி எதுவும் நடந்திருக்கும் என்று நினைப்பதற்கு இடமேயில்லை, ஒரு அரசுக்கும் இன்னொரு அரசுக்கும் இடையே நடந்த பேரத்தைப் பற்றி அப்படி சந்தேகிக்கப்படுவது வருந்தத்தக்கது'' என்று டெல்லியில் பத்திரிகையாளர்களிடையே தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மத்திய அமைச்சராக இருந்த திரு மோகன்தாரியா அவர்கள் கடைசியாக பல்கேரியா வந்தபோது, குறிப்பிட்ட அந்த வகைக் கப்பல்களை நேரில் பார்வையிட்டு அவற்றை வாங்க அங்கீகாரம் அளித்திருந்தார். மேலும் அந்தக் கப்பல்கள் இன்னும் தமிழக அரசிடம் ஒப்படைக்கப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

பல்கேரியக் கப்பல்களின் விலையை நிர்ணயிப்பதில் நடந்தவை என்ன என்பது பற்றிப் பொதுமக்கள் தெளிவுறத் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற கருத்தில் தான் இந்த விவரங்கள் இங்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

# அறநிலையத்துறை அலுவலர்களுக்கு சலுகைகள்



இந்துசமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தில் சுமார் 25,000 அறநிலையங்கள் உள்ளன. இந்த அறநிலையங்களில் சுமார் 80,000 பணியாளர்கள் (அர்ச்சகர்கள் உட்பட) உள்ளனர். இவர்களுக்கு கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் அரசு பல சலுகைகளை அளித்துள்ளது.

இந்த ஆலயப் பணியாளர்களில், பட்டியலில் சேர்ந்த ஆலய ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 10-ம் பட்டியலில் சேராத ஆலய ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 5-ம் 1-12-77 முதல் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது.

துணைஆணையர்[உதவி ஆணையர் அந்தஸ்தில் செயல் அலுவலர்கள் உள்ள ஆலயங்களிலுள்ள பணியாளர்களின் ஊதிய உயர்வு கோரிக்கைகளைப் பரிசீலித்து, அவர்களின் பணி நிலை, பணியின் தன்மை, பணி விதிகள், கல்வித் தகுதி இவைகளைக் கருத்திற்கொண்டு சிப்பந்திகளுக்கு மாதம் ரூ. 10 முதல் ரூ. 40 வரை ஊதிய உயர்வு 1-7-79 முதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதர ஆலயங்களில் பணிபுரியும் பணியாளர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து கீழ் நிலை ஊழியர்களுக்கு ( Lower Staff ) மாதம் ரூ. 5-ம் அதற்கு மேற்படாமலும் மேல் நிலை ஊழியர்களுக்கு ( Higher Staff ) ரூ. 10-ம் அதற்கு மேற்படாமலும் 1-7-79 முதல் சம்பள உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வங்களில்பணிபுரியும் ''கண்டிஜன்சி'' பணியாளர்களுக்கு 1-7-77 முதல் நபர் 1-க்கு ரூ. 5 பஞ்சப்படி உயர்வு அளிக்கப்பட்டது. மேலும் இவர்களில் 690 பேருக்கு ரூ. 10 வீதமும், 356 பேருக்கு ரூ. 5 வீதமும், 1-7-78 முதல் பஞ்சப்படி உயர்வு அளிக்கப்பட்டது. அதே போல் 1-7-79 முதல் 690 பேருக்கு ரூ. 20 வீதமும், 356 பேருக்கு ரூ. 10 வீதமும் பஞ்சப்படி உயர்வு அளிக்கப்பட்டது.

மேலும் ஆலயப் பணியாளர்களுக்கு இந்த ஆண்டு முதல் கீழ்க்கண்ட சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன :—

வங்கியில் செலுத்தப்படும் ஆலயப் பணியாளர்களின் வருங்கால சேம நல நிதித் தொகைகளுக்கு வங்கியினால்கொடுக்கப்படும் வட்டி முழுவதையும் பணிக்கணக்கில் சேர்க்க வேண்டும் எனவும் இதில் எந்த ஒரு பாகத்தையும் நிர்வாகச் செலவிற்கு ஆலயக் கணக்கில் சேர்க்கக் கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆலயப் பணியாளர் விபத்தில் இறந்தாலும் அல்லது ஊனமடைந்தாலும் அவரது குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு அவர் விதிகளின்படி தகுதி வாய்ந்தவராக இருப்பின் அவருக்கு ஆலயத்தில் வேலைவாய்ப்பு அளிக்க முன்னுரிமை கொடுக்கலாம் என அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மனையிருந்து வீடு இல்லாத ஆலய ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கு முன்பணம் கொடுக்க வழிவகை செய்ய சட்ட விதிகளைத் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈட்டிய விடுப்பு 120 நாட்கள் 1/11 என்ற விகிதப்படி சேர்த்துக் கொள்ளவும் மருத்துவ விடுப்பு 120 நாட்கள் எடுத்துக் கொள்ளவும் வழிவகை செய்ய சட்ட விதிகளை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆலய ஊழியர்களுக்கு அவருடைய புதல்வி, புதல்வர்களுக்கும் திருமணத்திற்காக முன்பணம் கொடுக்க வகை செய்ய சட்ட விதிகளை திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆலயப் பணியாளர்களுக்கான குடும்ப நலத் திட்டத்தின் விவரங்கள் முடிவு செய்யப்பட உள்ளன.

# செழித்து வளரும் தொழில் துறை

தமிழக அரசின் தொழில்துறை கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் குடிசைத் தொழில், சிறு தொழில், கிராமத் தொழில் வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்து அவற்றைச் செயல்படுத்தும் தலையாய பொறுப்பை ஏற்று கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற கொள்கையை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறது. சிறுதொழில், கிராமத் தொழில் துறைகள் வளர்ச்சி, மிகுந்த முக்கியத்துவம் பெற்று வருகையில் பெரிய தொழில்கள் வளர்ச்சியும் புறக்கணிக்கப்படவில்லை. சிறுதொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும் நடுத்தர மற்றும் இதர தொழில்களின் வளர்ச்சிக்கும் மாநில அரசு ஊக்கம் அளித்து வருகிறது.

தொழிற்சாலையை உருவாக்குவது, மேம்படுத்துவது, அதற்கு வேண்டிய நிதிக்கு வகை செய்வது, அடிப்படைத் தேவைகளை மேம்படுத்துவது ஆகிய பணிகளையும் தொழில் துறை ஆற்றி வருகிறது. அரசு நிறைவேற்றும் பல்வேறு தொழில் திட்டங்களின் பயனாக 1978-79-ஆம் ஆண்டில் 1½ இலட்சம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் 2 இலட்சத்திற்கும் மேலாக புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## டாக்டர் நாயுடம்மா அறிக்கை:

கடந்த ஆண்டில் டாக்டர் நாயுடம்மா தலைமையில் நிறுவப்பட்ட கிராமக் கைத் தொழில் வல்லுநர் ஆய்வுக் குழு தனது அறிக்கையை அரசுக்குச் சமீபத்தில்சமர்ப்பித்துள்ளது. 300-க்கும் மேற்பட்ட திட்டங்களை அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது. இந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றையும் செயல்படுத்தக் கூடிய சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, தனித்தனியாக உருவாக்கி அவைகளைப் பொதுமக்களிடையே பரவலாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தீ குச்சித் தொழில்:

2,000 தீப்பெட்டித் தொழிற்சாலைகளை குடிசைத் தொழிலாகத் துவங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டத்தினால் சுமார் 40,000 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

## பட்டுத் தொழில் வளர்ச்சி

1—4—1977 அன்று முசுக் கட்டை பயிரிடப்பட்ட நிலப் பரப்பு 11,500 ஏக்கராக இருந்தது. இன்று இந்நிலப்பரப்பு 21,500 ஏக்கராக அதிகரித்துள்ளது. இந்த ஈராண்டுகளில் பட்டுப் புழு வளர்ப்புத் தொழிற்பயிற்சித் திட்டங்களின் கீழ் ஏறத்தாழ 4,000 விவசாயிகள் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

நடப்பு ஆண்டு முடிவில் 1,50,000 பேர்கள் பட்டுப்புழு வளர்ப்புத் தொழிலில் ஈடுபடுவார்கள்.

## தேயிலைத் தொழில்

நலிந்த மலைவாசிகள் சுமார் 5,500 பேருக்குத் தேயிலைத் தோட்டங்களிலும் தேயிலைத் தொழிற்சாலைகளிலும் வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு ரூபாய் 10 கோடி செலவில் 5

அரியலூரில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் ஆலை





தேயிலைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். இதில் ஒரு தொழிற்சாலை 1979-80-இல் நிறுவப்படும். இது 1000 பேருக்குவேலை அளிக்கும்.

**தோல் தொழில்:**

நிறைவு செய்யப்பட்ட தோல்களைத் தயாரிக்கும் இரண்டு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இராணிப்பேட்டை மற்றும் திண்டுக்கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஒன்று, வட ஆர்க்காடு மாவட்டம் பேரணாம்பட்டில் விரைவில் அமைக்கப்படும்.

**தென்னை நார்த் தொழில்**

ஆண்டு முழுவதற்கும் தமிழ் நாட்டில் கிராமப் பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களில் சுமார் 3,000 பேருக்கு வேலையளிக்கின்றன. இரப்பர் கலந்த தென்னங்கயிறு தயாரிக்கும் நிலையங்கள், பாய்கள் மற்றும் தூசு மிதியடிகள் போன்றவற்றைத் தயாரிக்கும் நிலையங்களைத் தோற்றுவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மின்சாரம் மற்றும் மின் அணுத் தொழில்கள்**

சிறு தொழில் துறையில் தயாராகும் மின்னணுப் பொருட்களின் அளவு படிப்படியாக உயர்ந்து கொண்டே வருகிறது. 1970-71ல் 10 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் தயாரிக்கப்பட்டன. இப்பொழுது அது ரூ. 900 இலட்சத்துக்கும் அதிகமாகும்.

**குறிப்பிடும்படியான சிறு தொழில்களின் வளர்ச்சி:**

**ஊதுவத்தி:** ஊதுவத்தித் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசு எடுத்துக்கொண்ட தனி முயற்சிகளின் காரணமாக இப்பொழுது மாநிலத்தில் 20 ஊதுவத்தித் தொழில் நிலையங்கள் உள்ளன.

**சவ்வரிசி:** நாட்டிலேயே சவ்வரிசி ''ஸ்டார்ச்சு'' மாவு தயாரிக்கும் பெருமை பெரும்பாலும் தமிழ்நாட்டிற்கே உரியதாகும். புரதச்சத்துடன் சவ்வரிசி தயாரிக்கும் திட்டம் ஒன்றை, இந்திய அரசின் உதவியோடு தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வருகிறது.

**கைத்தறித் துறையின் வளர்ச்சி:**

கைத்தறித் துணிகளின் உற்பத்தியைப் பெருக்குவதுடன் துணித்தேக்கத்தைத் தவிர்க்கும் வகையிலும், புது வண்ணம், புது வடிவமைப்பு மற்றும் புது ரகங்களில் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன. பாலிஸ்டர், அச்சிட்ட வாயில் சேலைகள் அச்சிட்ட பட்டுச் சேலைகள், போன்றவை முதன் முறையாகக் கைத்தறித் துணிகளில் அறிமுகப் படுத்தப்பட்டன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 44,720 நெசவாளர்கள் தனியார் துறையில் இருந்து கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். மேலும், தமிழ் நாட்டில் 118 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 1977-79 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கூட்டுறவுத் துறையில் 1976-77-ல் ரூபாய் 36 கோடியாக இருந்த துணி உற்பத்தி 1978-79-ல் ரூ. 45 கோடி அளவிற்கு உயர்த்தப்பட்டது. இதற்கேற்ப 1976-77-ல் ரூ. 42 கோடியாக இருந்த கைத்தறித் துணிகளின் விற்பனை 1978-79ல் ரூ. 54 கோடியாக உயர்ந்தது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலப்பொருளான நூல் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டுத் தமிழக அரசு 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளை நிறுவி இயக்கி வருகிறது. இந்த நூற்பு ஆலைகளின் மொத்தத் திறன் 2.30 இலட்சம் கதிர்களிலிருந்து 1978-79-ல் 3.05 இலட்சம் கதிர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தவிர இரண்டாண்டுகளுக்கு முன்பு மாதந்தோறும் 4,500 பேல்களாக இருந்த உற்பத்தி, தற்போது 8,500 பேல் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

குறைந்த விலையில் மக்களுக்குக் கைத்தறித் துணிகள் வழங்க மொத்தம் 15,000 தறிகள் ஜனதா ரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு, ஜனதா துணிகள் இத்தறிகளின் மூலம் உற்பத்தி செய்து விற்பனைக்கு அனுப்பப்பட்டது. இவை தவிர, சொந்தத் தறியில்லாத சுமார் 40,000 நெசவாளர்களுக்கென, அடுத்த ஐந்தாண்டுகளில் 200 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.

**சர்க்கரை ஆலைகள்**

1977-78-ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் மொத்த அளவு 54.65 இலட்சம் டன்கள். உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 4.68 இலட்சம் டன்கள். 1978-79-ஆம் ஆண்டு சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் மொத்த அளவு 57.80 இலட்சம் டன்கள். உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு 4.95 இலட்சம் டன்கள்.

தென்னார்க்காடு மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டை வட்டத்தில் பெரிய செவலை கிராமத்தில் புதிய சர்க்கரை ஆலையொன்றைக் கூட்டுறவுத்துறையில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 1980-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் இந்த ஆலை உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**டிட்கோ**

கடந்த இரண்டு ஆண்டுகளில் டிட்கோ ரூ. 10 கோடி அளவில் முதலீடு செய்து ரூ. 84 கோடி திட்ட முதலீடு உள்ள பல்வேறு பொதுத்துறை மற்றும் கூட்டுத் துறை நிறுவனங்களைத் துவக்கியுள்ளது. இது ஒரு குறிப்பிடத் தக்க சாதனையாகும். தற்போது பொதுத்துறையில் நிறுவப்பட்டு வரும் 5 இலட்சம் டன்கள் உற்பத்தித் திறன் கொண்ட அரியலூர் சிமிண்ட் ஆலை இவ்வாண்டு ஆகஸ்டு மாதத்தில் உற்பத்தியைத் தொடங்கி இருக்கிறது.

**தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)**

சிப்காட்டின் முக்கிய நோக்கம், நடுத்தர, பெரிய தொழில்களுக்குத் திட்டமிடுதலும், முன்னேற்றம் செய்வதும், விரிவாக்குதலும் ஆகும்.

இராணிப்பேட்டை,ஓசூர் ஆகிய பகுதிகளில் இரண்டு தொழில் இணையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டை இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 1979-80-ஆம் ஆண்டில் புதிய தொழில் இணையங்கள் தொடங்க சிப்காட் உத்தேசித்துள்ளது.

**தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்:**

1978-79-ஆம் ஆண்டில் 453 தொழில் பிரிவுகளுக்கு ரூ.904.25 இலட்சம் கடன் வழங்கியுள்ளது. இதனால் 13,670 பேர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகியுள்ளது.

**தமிழ்நாடு உப்பு நிறுவனம்**

தஞ்சை மாவட்டம் மரவக்காடு, வடக்காடு பகுதியில் சுமார் 5,400 ஏக்கர் சதுப்புநிலப் பரப்பளவில் உப்பு உற்பத்தி செய்யும் திட்டத்தை உப்பு நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் புது இரசாயனத் தொழிற்சாலை

மதுச் சாரத்தை (Alcohol) மூலப் பொருளாக வைத்து, அசிட்டிக் அமிலம், அசிட்டிக் அன்ஹைட்ரைட் போன்ற இரசாயனப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக ரூ. 2.25 கோடி திட்டச் செலவில், பின்தங்கிய மாவட்டமான புதுக்கோட்டையில் உள்ள லட்சுமணன் பட்டி கிராமத்தில் ஒரு தொழிற்சாலை ''டிட்கோ'' கூட்டுத் துறையில் நிறுவப்பட்டுள்ளது. டிசம்பர் திங்கள் இறுதிக்குள் உற்பத்தியை இது துவங்கும். இதனால் வேலை வாய்ப்புப் பெறுவோர் 250 பேர்.



**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)**

இந்த நிறுவனத்தின் பிரிவுகளில் உற்பத்தி மதிப்பு 1965-66-ல் ரூ. 389 இலட்சமாக இருந்தது. படிப்படியாக உயர்ந்து 1976-77-ல் ரூ. 1,062 இலட்சமாகவும் 1977-78-ல் 1187 இலட்சமாகவும் அதிகரித்துள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 1978-79 முதல் டான்சியால் எடுத்துக் கொள்ளப் படும் புதிய திட்டங்களில் கீழ்க் கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட அனுமதியளிக்கப்பட்டுள்ளன.



# சைனிக் பள்ளி, அமராவதி நகர்

## கோவை மாவட்டம்

**6-வது வகுப்புக்கு மட்டும் 1980-ம் ஆண்டு ஜூலை வகுப்புத் தொடருக்கான நுழைவுத் தேர்வு**

மேற்கண்ட தேர்வு 1980 பிப்ரவரி மாதம் 23, 24 தேதிகளில் நடைபெறும். (விடைகளை தமிழ், ஆங்கிலம், இந்தி, மற்றும் இந்தியப்பிரதேச மொழிகளில் எழுதலாம்.) இந்தத் தேர்வில் தேர்ச்சி பெற்ற சிறுவர்கள் நிர்ணயிக்கப்படும் தேதியன்று நேர்முகப்பேட்டி மற்றும் மருத்துவ தேர்வுக்கு, தேர்வு போர்டு முன் ஆஜராகவேண்டும். பள்ளியில் ஏற்படும் காலியிடங்களின் அளவுக்கேற்றவாறு தேவையான சிறுவர்கள் மட்டும்தான் இத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள், வெற்றிபெற்ற சிறுவர்கள் அவர்களது உயர்ந்த மதிப்பெண் வரிசையில் பள்ளியில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த சிறுவர்களுக்கு 15 சதவிகிதமும், பழங்குடி வகுப்பைச் சார்ந்த சிறுவர்களுக்கு 7½ சதவிகிதமும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவர்களது தேர்ச்சிக்கான மதிப்பெண்களும் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளன. ஒருமுறை இந்த தேர்வு எழுதிய மாணவர்கள் மறுமுறை எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**வயது**

*1968 ஜூலை 2 மற்றும் 1970 ஜூலை 1-ந்தேதிக்கு இடையே பிறந்திருக்க வேண்டும். (இரண்டு நாட்களும் உள்பட).*

**தமிழ்நாட்டில் தேர்வு நிகழும் இடங்கள்**

| | |
|---|---|
| சென்னை | மதுரை |
| கடலூர் (புதுநகர்) | திருநெல்வேலி |
| தஞ்சாவூர் | வேலூர் (வ.ஆ. மாவட்டம்) |
| திருச்சிராப்பள்ளி | சேலம் |
| அமராவதிநகர் | |

**பள்ளி பாடத்திட்டம்**

திறமையான கல்வி, உணவு, வசதி மற்றும் விளையாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படும். நல் ஒழுக்கமும், உடற்பயிற்சிகளும் விசேஷ முக்கியத்துவத்துடன் கவனிக்கப்படும். தேசிய பாதுகாப்பு அகாடமி நுழைவுத் தேர்வுக்கும், மத்திய செகண்டரி கல்வி போர்டாரால் 10+2 பாடத்திட்டத்தின் படி நடத்தப்படும். அகில இந்திய செகண்டரி தேர்வுகளுக்கும் சிறுவர்களைத் தயார் செய்யும்.போதனை மொழி ஆங்கிலம். தவிர உயர்-கீழ் மட்டத்தில் மாணவர்கள் தமிழ் அல்லது இந்தியைக் கட்டாயப் பாடமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**பள்ளிக் கட்டணம்**

ஆண்டுக்கு ரூ. 3,500- (உணவு, இருப்பிடம், போதனை, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் ஆகிய செலவுகள் உள்பட). உடை வகைகள் கட்டணம் (Outfit charge) ரூ. 500 முதல் ஆண்டும், மற்றும் ரூ. 250 பின்வரும் ஆண்டுகளிலும் செலுத்த வேண்டும். காப்புத் தொகை ரூ. 150 (இது பள்ளியைவிட்டுச் செல்லும்போது திருப்பித்தரப்படும்), கைச்செலவுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 250 செலுத்த வேண்டும்.

**தகுதி மற்றும் வருமான அடிப்படையில் அரசாங்க உதவித் தொகைத் திட்டங்கள்**

**தமிழ்நாடு** — தமிழ்நாட்டில் நிலைத்து வாழ்ந்துவரும் சிறுவர்களுக்கும் மற்றும் பள்ளியில் சேர்த்துக்கொள்ளும் வருடத்தின் ஜனவரி 1-ஆம் தேதியன்று குறைந்த பட்சம் மூன்று வருடங்களுக்குத் தமிழ்நாட்டில் தொடர்ந்து உத்தியோகத்தில் இருந்து வந்திருக்கும் மற்ற மாநிலங்களைச் சேர்ந்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கும் தாராளமாக உபகாரச் சம்பளம் கிடைக்கும்.

கூட்டாக பெற்றோர்களின் மாத வருமானம் ரூ. 500, ரூ. 600, ரூ. 800, ரூ. 1,000 வரையில் இருக்குமானல் அப்பொழுது அளிக்கப்படக்கூடிய உபகாரச் சம்பளத்தின் மதிப்பு முறையே, ரூ. 3,000, ரூ. 2,250, ரூ. 1,500, ரூ. 750-

**பாதுகாப்பு அமைச்சகம்** — பணிபுரிந்து வரும் முன்னாள் JCOSக்கள், Other Rankகள் மற்றும் அவர்களுக்குச் சமமான கடற்படை விமானப்படைகளில் பதவிகளை வகித்தவர்களின் பிள்ளைகளுக்கு அளவான எண்ணிக்கையுள்ள பாதுகாப்பு அமைச்சகத்தின் உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

**மத்திய அரசு நேரடி ஆட்சிப பகுதிகள்** — மத்திய அரசு நேரடி ஆட்சியில் உள்ள பாண்டிச்சேரி, காரைக்கால் பகுதிகளைச் சேர்ந்த சிறுவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் கிடைக்கும்.

**விண்ணப்பம் மற்றும் தகவல் தொகுப்பு**

விண்ணப்பப் படிவம், பள்ளித் தகவல் தொகுப்பு, மாதிரி வினத்தாள் ஆகியவைகள் வேண்டுவோர் 50 பைசா தபால் தலை ஒட்டிய 25 செ.மீ X 20 செ.மீ அளவுள்ள சுயவிலாசமிட்ட உறையுடன் "முதல்வர், சைனிக் பள்ளி, அமராவதிநகர் (அமராவதிநகர் தபால் அலுவலகத்தில் பெறுமாறு) அவர்கள் பெயருக்கு ரூ. 5க்கான கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டருடன் முதல்வர் அவர்களுக்கு மனுச்செய்து பெறலாம். பதிவுத் தபால் மூலம் பெறவிரும்புவோர் ரூ. 2.55க்குத் தபால் தலை ஒட்டிய சுயவிலாசமிட்ட உறை அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பள்ளி முதல்வருக்கு வந்து சேர இறுதி நாள் 31.1.1980.

## மாவட்டத் தொழில் மையங்கள்

சிறு தொழில் மற்றும் குடிசைத்தொழில்கள் பெருகி வளர்வதற்கும் சிறு தொழில் முனைவோருக்குத் தேவைப்படும் எல்லா உதவிகளையும் ஒரே இடத்தில் கிடைப்பதற்கும், மாவட்டத் தொழில் மையங்கள் சென்னையைத் தவிர மற்ற எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

தொழில் முனைவோர் அனுமதிகோரிப் பல்வேறு அலுவலகங்களுக்குச் செல்லாமல் சுலபமாக அனுமதி பெறும் வகையில் அரசு விதிகளைத் தளர்த்தியும் பரவலாக்கியும் உள்ளது. மாவட்டத் தொழில் மையங்கள் அமைத்ததன் விளைவாக 1979ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் வரை 3235 சிறு தொழில்கள் துவக்கப்பட்டு, 37,475 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது. 3,471 கைவினைஞர்கள் வங்கிகளிலிருந்து ரூ. 22.83 இலட்சம் கடனாகப் பெற்றுள்ளனர். 210 சிறு தொழில்களுக்கு ரூ.13.06 இலட்சம் கிராமத் தொழில் திட்டக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 1,134 சிறு தொழில்கள் ரூ. 282.59 இலட்சம், வங்கிகளிலிருந்து கடனாகப் பெற்றுள்ளன.



*(1) ஆடைக்குரிய தோல் உற்பத்தித் தொழிற்சாலை.*

*2. சந்தன எண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலை.*

வேறு பல திட்டங்களும் ஆய்விலுள்ளன. இந்தப் புதிய திட்டங்கள் எல்லாம் முழுமையாக நிறைவேற்றப்படும் போது மேலும் சுமார் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஏதுவாகும்.

**தமிழ்நாடு கனிம நிறுவனம்:**

இதுவரை இந்நிறுவனம் சுமார் 1,000 டன் கரும்பாறைகளை வெட்டியெடுத்து 3 ஜப்பானிய நிறுவனங்களுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இதன் மூலம் ரூ. 7.78 இலட்சங்கள் அந்நியச் செலாவணியை டாமின் ஈட்டியுள்ளது. இந்த நிதியாண்டில் சுமார் 7,500 டன் கரும்பாறைகளையும் (மதிப்பு சுமார் ரூ. 44 இலட்சம்) சுமார் 15,000 டன் பிற கனிமங்களையும் (சுமார் ரூ. 44 இலட்சம்) சுமார் 15,000 டன்கள் பிற கனிமங்களையும் (மதிப்பு ரூ. 5 இலட்சம்) வெட்டியெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மேகனைசட் நிறுவனம்:**

இந்நிறுவனம் 6-2-79 முதல் சுரங்க வேலையைத் தொடங்கியுள்ளது. பணிபுரியத் தொடங்கிய குறுகிய காலத்தில் இதுவரை 70,509 டன் மேகனைசட் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. தனியார் துறையில் இந்நிறுவனம் இயங்கி வந்தபொழுது 2,000

ஏழைத் தொழிலாளர்களுக்கு இந்நிறுவனத்திலேயே வேலை வாய்ப்பு அளித்து மறு வாழ்வு கொடுக்கப்பட்டுள்ளது.

**கதர் கிராமத் தொழில் வாரியம்**

கடந்த இரண்டாண்டில் கதர் கிராமத் தொழில்கள் மூலம் 32,799 பேர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டது. இவ்வாண்டில் 34,775 பேர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

1976-77-ல் ரூ. 381.51 இலட்சமாக இருந்த கதர் உற்பத்தி, மேற்கொண்டு கடந்த இரண்டாண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 128 இலட்சம் கூடுதலாக உற்பத்தியாயிற்று. இவ்வரசு அளித்த ஊக்கத்தினாலும், தள்ளுபடித் தொகைகளினாலும், 1976-77-ல் ரூ. 405.55 இலட்சமாக இருந்த கதர் விற்பனை, 1977-78-ல் ரூ. 607.64 இலட்சமாகவும், 1978-79-ல் ரூ. 613.88 ஆக உயர்ந்தது. நடப்பாண்டில் கதர் விற்பனை ரூ. 650 இலட்சமாகவும் உயரும்.

இவ்வண்ணமே, 1976-77-ல், ரூ. 1,502.26 இலட்சமாக இருந்த கிராமப் பொருள் உற்பத்தி, 1977-78-ல் ரூ. 1,925 இலட்சமாகவும், 1978-79-ல் ரூ. 2463 இலட்சமாகவும் உயர்ந்தது. 1976-77-ல் ரூ. 1678 இலட்சமாக இருந்த கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை, 1977-78-ல் ரூ. 2179 இலட்சமாகவும் 1978-79-ல் ரூ. 2594 இலட்சமாகவும் உயர்ந்தது. நடப்பாண்டில் கிராமத் தொழில் பொருட்களின் விற்பனை ரூ. 3183 இலட்சமாக உயரும்.



# போக்குவரத்துத் துறையில் புதிய வளர்ச்சி

மக்களுக்குப் பணிபுரிவது என்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அரசு போக்குவரத்துக் கழகங்கள் இழப்பினைக் கருதாது, பொது நல நோக்கத்தோடு இதுவரை போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற அரசின் கொள்கைக்கு இணங்க செயல்பட்டு வருகின்றன.

பெரும்பாலான பயணிகளுக்கு நன்மை ஏற்படும் வகையில் விரைவுப் பேருந்துகளின் கட்டணம் 1976 மார்ச் மாதத்தில் கிலோ மீட்டருக்கு 6 காசு என்றிருந்தது முதல் தடவையாக 1977 செப்டம்பர் திங்களில் 5½ காசாகக் குறைக்கப்பட்டு, மேலும் 1978 ஏப்ரல் மாதத்திலிருந்து 5 காசாகக் குறைக்கப்பட்டுள்ளது.

நகரப் பேருந்துகளில் தற்போது மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் கட்டணச் சலுகைகள் போன்று, கிராமப்புற மாணவர்களும் பயனடையும்






வகையில் 33 1/3 சதவிகிதம் கட்டணச் சலுகை இக்கல்வியாண்டிலிருந்து அளித்து வருகிறது.

சர்வதேசக் குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு, இதுவரை 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட இலவசப் பயணச் சலுகை 5 வயதுக் குழந்தைகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது.

தொழிலாளர் நலம் கருதி, அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் 5 குடும்ப அங்கத்தினர்களுடன் ஆண்டிற்கொரு முறை தமிழகத்தில் எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் இலவசமாகச் சென்று வர அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சலுகை போக்குவரத்துக் கழகங்களின் சரித்திரத்திலேயே இப்போது தான் முதல் முறையாக அளிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்கள் சொந்தத்தில் வீடு கட்டிக்கொள்ள வசதியளிக்கும் வகையில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஊழியர்கள் கூட்டுறவுச் சங்க மூலமாக வீடு கட்டிக் கொள்ள கடன் வசதி தாராளமாக அளிக்கப்பட்டு வருகிறது.

இரவு நேரங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்குத் தற்போது சிற்றுண்டி வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய வசதி இதற்கு முன்பாக இருந்ததில்லை.

போக்குவரத்துக் கழகங்களில் சிறப்புப் பணி மூலமாகக் கிடைக்கும் பலன் ஊழியர்களுடன் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. இவ்வாண்டு, தந்தை பெரியார் கழகம், பல்லவன் கழகம் தவிர மற்ற எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் ஊழியர்களுக்குச் சுமார் 20 சதவீதம் வரை ஊதியக் கொடை-கருணைத் தொகையாக கொடுக்கத் தீர்மானித்துள்ளது. இது தவிர வேலை நிறுத்தம் இல்லாமல் ஒத்துழைப்பு கொடுத்த ஊழியர்களுக்கு எவர்சில்வர் பாத்திரங்கள் சிறப்பு வெகுமதியாக அளித்து வருகின்றனர்.

போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஓய்வு பெறும் வயது 55 லிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

விபத்து இல்லாமல் பேருந்துகளை நல்லமுறையில் ஓட்ட வேண்டுமென்ற உணர்வை ஓட்டுநரின் மனத்தில் தோற்றுவிக்கும் பொருட்டு, 'விபத்தின்றி ஓட்டுவதற்காக ஓட்டுநர்களுக்குப்பரிசு



உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும், பள்ளிக்கு 750ம் அதற்கு மேலும் மாணவர் எண்ணிக்கை உள்ள பள்ளிகள் அனைத்திலும் அந்தந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களில் பி.டி. சம்பளம் பெறும் ஆசிரியர்களுள் பணி மூப்பு மிகுதியாக உடையவர் உதவித் தலைமை ஆசிரியர் என அறிவிக்கப் பட்டு அவருக்கு மாதம் ரூ. 25 சிறப்பூதியம் வழங்கப்படும்.

அரசு ஊழியர்களைப் போல இனி அரசல்லாத பிற நிருவாகங்களின் கீழ் உள்ள கல்வி நிலையங்களின் ஆசிரியர்களும் பிற அலுவலர்களும் தங்களுடைய பணிப் பதிவேட்டின் மறுபிரதி ஒன்றைத் தாங்களே வைத்து வர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியர்களுக்குக் காலத் தாழ்வின்றி ஒய்வு ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 20 ஆண்டு பணி முடித்தவர்கள் தாங்கள் விரும்பினால் ஒய்வூதியத்துடன் பணியிலிருந்து ஒய்வு பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்ட சலுகை தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றில் பணி ஆற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் பொருந்துமெனத் தெளிவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறையில் 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு என இரண்டு பிரிவுகள் பல ஆண்டுகளாக இருந்து வந்தன. அவற்றை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை நன்கு ஆராய்ந்து இரண்டு பிரிவுகளையும் நியாயமான முறையில் ஒருங்கிணைக்க முடிவு செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அரசுப் பள்ளிகளில் முன்னர் பல ஆண்டுகளாகத் தற்காலிகமாகப் பணிசெய்து வந்த பி.டி. ஆசிரியர்கள், தமிழ் ஆசிரியர்கள் ஆகியோர் பணியை வரன் முறை செய்வதற்காகத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு மூலம் தனியாக ஒரு சிறப்புத் தேர்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 1.4.70க்குப் பின் நியமிக்கப் பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுள் முழுத் தகுதி பெற்றவர்கள் அனைவருடைய நியமனங்களும் அவரவர் நியமன நாள் முதல் வரன் முறைப்படுத்தப் பட்டு, ஊதிய உயர்வு நிலுவைத் தொகைகளும் வழங்கப்பட்டுள்ளன.



சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் தேர்ந்து எடுத்து நியமனம் செய்ய வேண்டும் என்றும், அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளைத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைச் சாதியினருக்கு ஒதுக்கி ஆக வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

தனியார் பள்ளி நிர்வாகங்கள் சிலவற்றில் முறை கேடான வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியோரை மீண்டும் பணியில் சேர்க்குமாறு பள்ளிக் கல்வித் துறை ஆணையிடும் பொழுது அவ்வாணைகளைச் சில நிர்வாகங்கள் செயல் படுத்த மறுத்தால் அத்தகைய பள்ளிகளில் உள்ள பணியாளர்களுக்கு அரசே நேரடியாகச் சம்பளம் வழங்க வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட ஆசிரியரை அல்லது பிற பணியாளரை கூடுதல் ஆசிரியர் தேவையாக உள்ள பிறப் பள்ளிகளுக்கு அவர் பதவியோடு சேர்த்து மாற்றிவிடவும் ஆணை வெளியிடப் பட்டுள்ளது.

சென்னையில் ரூ. 10 லட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் கட்ட அனுமதி தரப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் குழந்தைகளுக்குத் தொழில் படிப்பு படிக்க ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகளை வழங்கும் திட்டம் ஏற்பளிக்கப் பட்டுள்ளது. அத்தொகையின் மதிப்பு ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 500 ஆகும்.

தொடக்கப் பள்ளி ஆசிரியர்களின் குழந்தைகளுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி தரப்படும் என்றும் 1979 அக்டோபரில் அரசு அறிவித்துள்ளது.

**மேல்நிலைப் பள்ளிக் கல்வி**

கிராமப்புற வளர்ச்சியை மனத்தில் கொண்டு, கல்வித் துறை நிபுணர்களைக் கலந்து ஆலோசித்து - 10+2+3 முறைக் கல்வியின் 2வது நிலை, பள்ளிகளிலேயே இருக்க வேண்டும் என இவ்வரசு ஆணை இட்டது. 1978-79ல் 912 உயர்நிலைப் பள்ளிகளில் மேல்நிலைப் பள்ளி வகுப்புகள் தொடங்கப்பட்டன. (அவ் வகுப்புகளில் 1,14,000 மாணவ மாணவியர் 1978-79ல் பயின்றனர்). 1979-80ல் மேலும் 160 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன.

மேல்நிலைப் பள்ளிகளில் தமிழிலோ சிறுபான்மை மொழிகளிலோ பயிலும் மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை என்ற சலுகையையும் இவ்வரசு தந்துள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளுக்கான பல்வேறு வசதிகளைச் செய்ய இவ்வரசு மிகத் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. மேல்நிலைப் பள்ளிகளுக்காக 78-79ல் சுமார் 1,400 கூடுதல் ஆசிரியர் பதவிகளும் 78-79ல் 2500 பதவிகளும் ஏற்படுத்தப்பட்டன. அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகளும் ஆய்வுக் கூடங்களும் மொத்தம் சுமார் ரூ. 6.40 கோடி செலவில் கட்டித் தரப்படுகின்றன. அப்பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்களுக்காக ரூ. 4 கோடி அளவில் செலவிடப்படுகிறது. தனியார் மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வுக் கூடம் ஆகியவற்றிற்கு 40 விழுக்காடு அரசு மானியம் வழங்கும் செலவிற்காக 1978-80ல் ரூ. 1.75 கோடி ஏற்பளிக்கப்பட்டுள்ளது. மேலும் எல்லா மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நூலகப் புத்தகங்கள், ரூ. 37 லட்சம் செலவில் அளிக்கப்படுகின்றன.

மேல்நிலைப் பள்ளிகளில் பல்வேறு தொழிற்பாடங்கள் கற்றுத்தரப்படுகிறன. 709 பள்ளிகளில் தொழிற்பாட வகுப்புகள் உள்ளன. மேல்நிலைப் பள்ளி வகுப்பு மாணவர்களுள் சுமார் கால் பகுதியினர் தொழில் பாடங்களைப் பயிலுகின்றனர். அனைத்திந்தியாவிலுமே மேல்நிலைப் பள்ளி நிலையில் தொழிற் பாடங்களைக் கற்றுத் தருவதில் தமிழ்நாடு முதன்மை பெற்றுள்ளது.

**முதியோர் கல்வியும் பள்ளி சாராக் கல்வியும்**

பள்ளி சாராக் கல்வித் துறைக்கு முதன்மை அளிக்கப்பட்டு இதற்குத் தேவை

யான கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அத் துறை 76-77ல் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்துக்கு ஒன்றுவீதம் முதலில் 374 பள்ளிச் சாராக் கல்வி மையங்களைத் தொடங்கியது. இம்மையங்களின் எண்ணிக்கை 77-78ல் 2 ஆகவும், 78-79ல் 4ஆகவும் உயர்த்தப்பட்டது. தற்பொழுது 1496 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம் மையம் ஒவ்வொன்றும் 3 ஆண்டு வேலை செய்யும் 10 மாத வகுப்புகள் மூன்று நடத்துகின்றன. ஒவ்வொரு 10 மாத வகுப்பிலும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கின்றன. இம்மையங்கள் அனைத்திலும் இப்பொழுது பயில்வோர் சுமார் 45,000 பேர் ஆவர்.

மேற் சொன்னவாறு அரசு நடத்தும் பள்ளி சாராக் கல்வி மையங்கள் தவிர, ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து சுமார் 780 பிற ஊர்களில் பள்ளி சாராக் கல்வி மையங்களை நடத்தி வருகின்றன.





முதியோர்களுக்கு எழுத்தறிவிப்பதற்காக 1979-80 முதல் கிராமப் புறங்களில் சுமார் 6600 முதியோர் கல்வி மையங்கள் பல்வேறு திட்டங்கள் மற்றும் அமைப்புகளின் கீழ் தொடங்கி நடத்தப்படுகின்றன. இவற்றுக்கும் மேலாக மாநில அரசுத் திட்டத்தின் கீழ் 6100 மையங்களைத் தொடங்கி நடத்த 1979 நவம்பரில் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அரசுக்கு முதியோர் கல்வி பற்றி ஆலோசனை கூற முதியோர் கல்விக்கான மாநில வாரியம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

**கல்லூரிக் கல்வி**

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கல்லூரிக் கல்விக்குச் செலவிடும் தொகை இரு மடங்காகியுள்ளது. கல்லூரிக் கல்விக்குச் செலவான தொகை 75-76ல் ரூ 10 கோடி, 76-77ல் ரூ. 12 கோடி, 77-78ல் ரூ. 19கோடி 78-79ல் ரூ. 24 கோடி, 79-80ல் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 22 கோடி.

கல்லூரிக் கல்வி நிருவாகத்தை மேம்படுத்துவதற்காக இயக்கத்தின் வட்டார அலுவலகங்கள் 5 ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பல்கலைக் கழக மானியக் குழு 1974ஆம் ஆண்டிலேயே கல்லூரி ஆசிரியர் சம்பளங்களை உயர்த்த அப்போதைய அரசை அணுகியிருந்த போதிலும் இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர்தான் பல்கலைக் கழக மானியக் குழு ஊதிய விகிதங்களை 1.4.74 முதல் அமல் படுத்தியும் 1.1.77 முதல் பணப்பயன் வழங்கியும் ஆணைகளை வெளியிட்டு அமல் படுத்தியுள்ளது.

1979-80 முதல் கோயம்புத்தூரில் ஒன்றும் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் ஆக இரண்டு புதிய சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**கல்லூரிகளுக்குச் சுய ஆட்சி உரிமை தரப் பட்டுள்ள முதல் மாநிலம் தமிழ்நாடு தான்!**

சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள 6 கல்லூரிகளும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள 4 கல்லூரிகளும் ஆக மொத்தம் 10 கல்லூரிகளுக்கு இவ்வுரிமை தரப்பட்டுள்ளது. இதன் மூலம் அக்கல்லூரிகள் கல்வித் தரத்தை உயர்த்தப் பாடுபட வகை செய்யப்பட்டுள்ளது.



தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுள் பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கும் புகுமுக வகுப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெறுபவர்களுக்கும் ரூ. 300 உதவிப் பணம் வழங்கப்படுகிறது.

1977-78ஆம் ஆண்டிலிருந்து பட்ட வகுப்புகளில் பயிலும் ஷெட்யூல்டு வகுப்பினர், மலைச் சாதியினர் ஆகியோருக்கு (அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் பற்றிக் கருதாமல்) முழுச் சம்பளச் சலுகை அளிக்கப் பட்டு வருகிறது. முன்னர் இருந்த வருமான வரம்பாகிய ஆண்டுக்கு ரூ. 2500 என்பது நீக்கப்பட்டு விட்டது.

1.12.77 அன்று மூன்றாண்டு ஆலது அதற்கு மேலும் பணி செய்திருந்த விளக்குநர்கள், பயிற்றுநர்கள் ஆகியோருள் அவரவர் துறையில் பட்ட மேற்படிப்புத் (எம்.ஏ., எம்.எஸ்சி., எம்.காம். போன்றவை) தகுதி பெற்றிருந்தவர்களுக்கெல்லாம் 1.12.77 முதல் துணைப் பேராசிரியர்கள் பதவி அளிக்கப்பட்டு அப்பதவிக்கான பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதம் தரப்பட்டுள்ளது. இனிமேல் இந்தத் தகுதிகளைப் (3 அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பணியும் பட்ட மேற்படிப்புத் தகுதியும்) பெறுபவர்களுக்கும் இந்தச் சலுகை அவரவர் அத்தகுதியை அடையும் நாள் முதல் கிடைத்து வரும்.

பட்ட மேற் படிப்புக் கல்லூரி முதல்வருக்கு ரூ. 1200-1900 என்ற உயர் சம்பள விகிதம் அளிக்கப்பட்டுள்ளது.

கலைக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் பொறியியற் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் ரூ. 700- 40-1100-50-1300-இ.பி.-50-1600 என்ற சம்பள விகிதத்தில் ரூ. 1100 தொடக்க அடிப்படைச் சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்லூரி ஆசிரியர்கள் முழுமையாகவும் காலத்தாழ்வின்றியும் சம்பளம் பெற்று வர வகை செய்யும் நோக்கத்துடன் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் வழங்கும் புதிய முறையை 1.6.77 முதல் அரசு செயல் படுத்தி வருகிறது. சம்பளம் வழங்கும் வகையில் அக்கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவில் நிகரப்பற்றாக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது.

பணியிலிருக்கும் பொழுது ஒருவர் இறந்துவிட்டால் அவர் குடும்பத்திற்கு ரூ. 10,000

அளிக்கும் திட்டம்' மேலும் கவர்ச்சிகரமாக்கப்பட்டுள்ளது.

அரசு போக்குவரத்துக் கழகங்களின் செயல் திறன் கடந்த 2½ ஆண்டுகளில் மிகவும் முன்னேற்றமடைந்துள்ளது. பேருந்து உபயோகத்திறன் 1977 முன்பகுதியில் 85 சதவிகிதமாக இருந்தது, தற்போது 90 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

கடந்த இரண்டாண்டுகளாக அதிகமான இலாபம் ஈட்டியது, பேருந்துகளை ஓட்டியதில் ஏற்பட்ட முன்னேற்றம்தான் முக்கிய காரணமாகும். இந்தப் போக்குவரத்துக் கழகங்கள், சென்ற ஆண்டு தனிச் சட்டப்படி தாங்கள் செலுத்த வேண்டிய மோட்டார் வாகன வரிகளை விட, சிறப்பு மோட்டார் வாகன வரியாக ரூ. 687 இலட்சம் செலுத்தின. தமிழகத்திலுள்ள அரசு போக்குவரத்துக் கழகங்கள் நம் நாட்டிலேயே மிகச் சிறந்த முறையில் இயங்கிவரும் நிறுவனங்களில் ஒன்றாகும் என்ற நற்பெயர் ஈட்டியுள்ளன.




நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்துத்துறையில் கடந்த 2½ ஆண்டுகளில் அடைந்த முன்னேற்றம்

| | பல்லவன் (பெருநகர்) | பல்லவன் (விரைவு) | பல்லவன் (மாவட்டம்) | பாண்டியன் | சேரன் | சோழன் | அண்ணா | கட்டபொம்மன் | தந்தை பெரியார் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 புதிதாக விடப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை | 472 | 287 | 196 | 452 | 391 | 148 | 233 | 300 | 146 | 2625 |
| 2 புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வழித்தடங்கள் | 48 | 51 | 61 | 159 | 79 | 188 | 36 | 179 | 92 | 893 |
| 3 புதிதாக வசதிபெற்ற கிராமங்கள் | 29 | — | 177 | 757 | 205 | 393 | 395 | 63 | 120 | 2139 |
| 4 பேருந்து வசதிபெற்ற மக்கள் தொகை (இலட்சங்களில்) | 0.93 | — | 1.38 | 14.75 | 2.78 | 4.98 | 3.74 | 3.78 | 1.92 | 34.26 |
| 5 மோட்டார் வாகன வரிகளைவிட சிறப்பு மோட்டார் வாகன வரிகள் செலுத்துவதற்கு முன்பு அடைந்த இலாபம் (ரூ. இலட்சத்தில்) | 10 | 111 | 30 | 571 | 328 | 205 | 166 | 358 | 26 | 1805 |
| 1977-78, 1978-79 ஆண்டுகளுக்கான வழங்கிய ஊதியக் கொடை (ரூ. இலட்சத்தில்) | 79 | 19 | 22 | 88 | 59 | 44 | 18 | 68 | 10 | 407 |

தர வகை செய்யும் குழு ஈட்டுறுதித் திட்டம் தனியார் கல்லூரிகளுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

10+2+3 கல்வி முறையினால் கல்லூரி ஆசிரியர்கள் எவரும் பணி இழக்காத படி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார் கல்லூரிகளில் முறையின்றி வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை நிர்வாகம் கல்வித் துறையின் ஆணைக்கு ஏற்பத் திரும்பப் பணியில் அமர்த்தாவிட்டால், சம்பந்தப்பட்டவர்களின் இசைவுடன் அந்த ஆசிரியரை அவருடைய பதவியோடு, வேறு ஒரு கல்லூரிக்கு மாற்ற கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

### தொழில் நுட்பக் கல்வி

சென்னையில் பேரறிஞர் அண்ணா தொழிற் நுட்பப் பல்கலைக் கழகத்தை இவ்வரசு தொடங்கியுள்ளது. கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியில் இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட நிறுவனங்களும் அந்தப் பல்கலைக் கழகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன:

1. சென்னைப் பொறியியற் கல்லூரி நிறுவனம், குரோம்பேட்டை
2. கட்டிடக் கலை - நகர அமைப்புப் பள்ளி, செங்கை
3. சென்னையிலுள்ள அழகப்பச் செட்டியார் பொறியியற் கல்லூரியைச் சேர்ந்த நெசவுத் தொழில் நுட்பம், தோல் தொழில் நுட்பம், இரசாயனம், பொறியியல் ஆகிய துறைகள்.

1979-80ல் தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் பல் தொழில் நுட்பப் பயிலகம் (பாலிடெக்னிக்) புதியதாக நிறுவப்பட்டுள்ளது. சேலம் மாவட்டம் குமாரபாளையத்தில் நெசவுப் பொறியியல் டிப்ளமா படிப்பு நிறுவனம் ஒன்றும் 1979-80ல் தொடங்கிட ஏற்பளிக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடியிலும், நாகப்பட்டினத்திலும் உள்ள பாலிடெக்னிக்குகளில் 1979-80 முதல் மாணவியர் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன.

### விளையாட்டு

''விளையாட்டுக்கள் - இளைஞர் நலப் பணியைக்'' கவனிக்க இவ்வரசு தனித் துறை ஒன்றை அமைத்துள்ளது. 1978-79லிருந்து உயர்நிலைப் பள்ளி உடற் பயிற்சி ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் அந்தந்தப் பள்ளி விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து ஆண்டுதோறும் சீருடைப் படியாக ரூ. 50- வழங்கப் படுகிறது.



60 வயதிற்கு மேற்பட்டவர்களும் வறுமையில் வாடுபவர்களுமான விளையாட்டு வீரர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவதற்கான திட்டத்தை இவ்வரசு முதல் முதலாக ஏற்படுத்தியுள்ளது. அத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ. 75- வீதம் 1.4.1979 முதல் ஓய்வூதியம் பெறுவதற்குரிய 25 விளையாட்டு வீரர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

## கலைப் பணிகள்

### நூலகங்கள்

தகுந்த நூலகக் கட்டிடங்கள் உள்ள இடங்கள் போகச் சென்னை நகரிலுள்ள 150 வட்டங்களிலும் நூலகக் கட்டிடங்கள் நல்ல முறையில் அதற்கெனத் தனியாகக் கட்ட ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

சேலம் நகரில் மாவட்ட மைய நூலகத்திற்கு நவீன வசதிகள் கொண்ட ரூ. 5- லட்சம் மதிப்புள்ள கட்டிடம் கட்ட ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு அலுவலர்கள் பெற்று வரும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலச் சலு



கைகள் போன்றவற்றை மாவட்ட நூலகக் குழுக்களின் கீழ் பணி செய்பவர்களுக்கும் விரிவாக்குவதுபற்றி ஆய்வு செய்யப்படுகிறது.

### தொல் பொருள் ஆய்வு

வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னங்களைத் தொல் பொருள் ஆய்வுத் துறை பேணிப் பாதுகாத்து வருகிறது.

ஆங்காங்கு பல ஊர்களிலும் சிதறிக் கிடக்கும் சிற்பங்களையும் மதிப்புமிக்க பழைய ஓலைச் சுவடிகளையும் சேகரித்துப் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்றை 9 மாவட்டங்களில் மேற்கொள்ள ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1979-80ம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அத்தகைய சிற்பங்கள் முதலியவற்றைச் சேகரித்துத் தர்மபுரியில் ஒரு நிலையான அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### அருங்காட்சியகங்கள்

மாவட்டத் தலைமை இடங்கள் ஒவ்வொன்றிலும் அருங்காட்சியகம் ஒன்று நிறுவிட அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாண்டு சேலத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள வசதிகளும் மேம்படுத்தப்படும்.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டாகிய 1979ஐ ஒட்டிச் சென்னையில் ரூ 29 லட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க ஏற்பளிக்கப்பட்டுள்ளது.

## இசை, நடனம், நாடகம்:

1979 சனவரியில் மதுரையில் இசைக் கல்லூரி என்று தொடங்கப்பட்டுள்ளது. (இதுவரை சென்னையில் மட்டுமே இசைக் கல்லூரி இருந்து வந்தது).

அரசு அறிவித்துள்ள ஒரு புதிய திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் தொழில் மரபுக் கேற்பத் தமிழில் புதிய இசைப் பாடல்கள் எழுதும் கவிஞர் ஒருவருக்கு ரூ. 5 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும். தமிழ்ப் பண் பாட்டுக்கு இசைந்த வகையிலும் இசை நுணுக்கங்களுக்கேற்ற வகையிலும் புதிய மெட்டுக்களைப் புகுத்தும் இசைவாணர் ஒருவருக்கும் இத்தகைய ரொக்கப் பரிசு ஒன்று வழங்கப்படும்.

1979ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாளன்று சிறந்த கலைஞர்கள் 8 பேருக்கு 'அரசவைக் கலைஞர்' என்ற விருது வழங்கப் பட்டது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 1,000 வீதம் 5 ஆண்டுகளுக்கு மதிப்பூதியம் வழங்கப் பெறும்.

இளம் மாணவர்களுக்கு நாடகக் கலையில் தனிப் பயிற்சி அளிக்கவும் அதனுடன் பொதுக் கல்வி கற்பிக்கவும் வழிவகை செய்து நாடகத்தில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவித்து நாடகப் பள்ளி தொடங்கப்பட இருக்கிறது. இதற்கான பாடத் திட்டங்களை வல்லுநர் குழு ஒன்று வகுத்து வருகிறது.

வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் மேலும் மேலும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம்தரப்பட்டு வருகிறது. 79-80ல் கூடுதலாக 175 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும்.



## தமிழ் வளர்ச்சி

மாநில அரசுத் துறைகள், அலுவலகங்கள் எல்லாவற்றிலும் முழுதும் தமிழிலேயே செயல்படும் நிலையை வெகு விரைவில் கொண்டுவர வேண்டும் என்பது இவ்வரசின் கொள்கை. விதிவிலக்களித்த இனங்களைத் தவிர மற்ற இனங்களுக்கு அரசு அலுவலகங்களில் தமிழையே கையாளவேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். இதனைச் செயல் படுத்தச் சுணக்கம் காட்டும் அதிகாரிகள் மது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

வறுமையில் உழலும் தமிழ் அறிஞர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கும் திட்டம் இவ்வரசால் தொடங்கப் பட்டது. உதவித் தொகையாக மாதம் ரூ. 250- தரப்படுகிறது.

தமிழில் பகுதி நேர வகுப்புக்களைத் தொடங்கும் பிற மாநிலப் பல்கலைக் கழகங்கள், பிற கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் சுமார் 20க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 15,000 வீதம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் அவர்களுடைய எழுத்துச் சீர்திருத்தத்தை இவ்வரசு செயல்படுத்தியுள்ளது.

தமிழ் நூல்களைப் பிற மொழிகளில் பெயர்த்து வெளியிடவும் பிறமொழி நூல்களைத் தமிழாக்கம் செய்து வெளியிடவும் திட்டம் வகுத்துச் செயல்படுத்த வல்லுநர் குழுவின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

கம்பன், வள்ளலார் போன்ற தமிழ்ச் சான்றோர்கள் நினைவாகச் சென்னையில் தமிழ்க் கலை மையம், ஒன்று, நூலகம், படிப்பகம், கருத்தரங்கு மன்றம் போன்ற வசதிகளுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறது. இதற்கான தனித் துறை ஒன்று ''தமிழ்ப் பண்பாட்டு மைய இயக்குநரின்'' கீழ் செயல்பட்டுவருகிறது.

உமறுப்புலவர் பெயரில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்கான மதுரை-காமராஜ் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று தொடங்க ரூ. 2 லட்சத்தை அறக்கட்டளைத் தொகையாக இவ்வரசு கொடுத்துள்ளது.

பாவேந்தர் பாரதிதாசன் நினைவாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ரூ. 25,000 அறக்கட்டளை ஒன்றை அரசு நிறுவியுள்ளது. அத்தொகையின் வட்டியைக் கொண்டு ஆண்டு தோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறும்.

'பாவேந்தர் பாரதிதாசன் 'விருது' ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆண்டு தோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு இவ் விருது வழங்கப்பட்டு, அவருக்குப் பதக்கம் ஒன்றும் ரூ. 10,000 ரொக்கப் பரிசும் அளிக்கப்படும். 1978-க்கான விருது கவிஞர் சுரதாவுக்கு அளிக்கப்பட்டது. 1979க்கான விருது மறைந்த கவிஞர்கள் வாணிதாசன், எஸ். டி. சுந்தரம் ஆகியோரின் குடும்பத்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

'தமிழ்த் தென்றல் திரு வி. கல்யாண சுந்தரனார் விருது' என ஒன்றும் புதிதாக ஏற்படுத்தப்பட்டுச் சிறந்த தமிழ் எழுத்தாளருக்கு ஆண்டுக்கு ரூ. 10,000 வழங்கப்படுகிறது. 1979-80க்கான விருது, மறைந்த திரு ஜெகசிற்பியனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழறிஞர்களையும் தமிழ்ச் சான்றோர்களையும் போற்றும் அரசுக் கொள்கையின் அடிப்படையில் திருவாளர்கள் கா. அப்பாத்துரை, தி.சு. அவினாசிலிங்கம், ஞா. தேவநேயப் பாவாணர், ம. ப. பெரியசாமித் தூரன், வ. சுப்பையா ஆகியோருக்கு 79ல் நடைபெற்ற திருவள்ளுவர் நாளன்று 'செந்தமிழ்ச் செல்வர்' என்னும் விருது வழங்கப்பட்டது.

ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு- கருத்தரங்கு 1980 ஜூன் திங்களில் மதுரை நகரில் நடைபெறும். '68-ல் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய அரசு செய்தது போல இந்த ஐந்தாவது மாநாட்டுக்கும் விரிவான ஏற்பாடுகளை அரசு செய்யும். இதையொட்டி மதுரை திருமலை நாயக்கர் மகாலில் ரூ. 28 லட்சம் செலவில் ஒலி-ஒளிக் காட்சி ஒன்றும் அமைக்கப்பட இருக்கிறது.





# உணவுத்துறையில் ஒப்பற்ற சாதனை!

தமிழக மக்களின் தலையாய உணவுப் பொருளான அரிசி, தாராளமாகவும் நயமான விலைகளிலும் கிடைத்து வருகிறது. அரசிடமும் கணிசமான அளவில் கையிருப்பு உள்ளது. இப்போது உணவு நிலைமையைப் பொறுத்தவரை பிரச்சினையே இல்லாத அளவுக்கு நிலைமை சுமுகமாக இருப்பது மிகுந்த மனநிறைவு அளிக்கக் கூடியதாகும். தமிழகத்தில் உணவு நிலைமை வசதியாகவும் சுமுகமாகவும் இந்த இரண்டு ஆண்டுகளில் இருப்பதைப்போல் சென்ற பத்துப் பதினைந்து ஆண்டுகளில் இருந்ததில்லை என்று துணிந்து கூறலாம். உணவு உற்பத்தியைப் பெருக்க விவசாயப் பெருமக்கள் எடுத்துக் கொண்டுள்ள பெரு முயற்சியின் காரணமாகவும், அரசின் விழிப்பான நடவடிக்கைகளின் காரணமாகவும், இந்த நிலைமை தமிழகத்தில் நிலவி வருகிறது. இது அனைவருக்கும் பெருமை அளிக்கும் ஒரு சாதனையாகும்.

1977-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளிலிருந்து, நாடு முழுவதும், அரிசியைப் பொறுத்தவரையில் ஒரே உணவு மண்டலமாக அமையும் என்று மத்திய அரசு அறிவிப்பு செய்தது. அதன் விளைவுகளை அறுதியிட்டுக் கூற முடியாத நிலையில் அதனால் தமிழகத்தின் நலன்கள் பாதிக்கப்படகூடாது என்ற கவலையில், நிலைமையைச் சமாளிக்கத் தமிழக அரசு முன்னெச்சரிக்கையாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. அந்த முன்னேற்பாடுகளின் பலனாக இன்று நிலைமை சீராக உள்ளது என்பது தமிழக அரசின் துணிவான நடவடிக்கைகளுக்கும், தெளிவான கொள்கைகளுக்கும் சிறந்த சான்றாக அமைந்துள்ளது.

**விவசாயிகளின் நலனுக்கு உகந்த வகையில் கொள்முதல்:**

கடந்த காலத்தில் செய்யப்பட்டதுபோல் விவசாயிகளிடம் நேரடிக் கட்டாயக் கொள்முதல் செய்யப்படவில்லை. விவசாயிகள் தங்கள் உபரி நெல்லை எந்த வணிகர் அதிக விலை கொடுக்க முன் வருகிறாரோ அவருக்கு சுதந்திரமாக விற்றுக் கொள்ளுகின்றனர். வணிகர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த லெவியும் 1.6.79 முதல் விவசாயிகளுக்கு நலம் பயக்கும் வகையில் நீக்கப்பட்டது. மேலும், அரசு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் வாயிலாக நேரடிக் கொள்முதல் நிலையங்களைத் திறந்து விவசாயிகள் தாமாக முன் வந்து அளிக்கும் நெல்லை கீழ்க்கண்ட விலைகளில் வாங்கி வருகிறது.

| | | |
|---|---|---|
| சாதாரண ரகம் | குவிண்டால் | ரூ.105 |
| சன்ன ரகம் | குவிண்டால் | ரூ.109 |

மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலைகளோ, ரூ.95, 99 ஆகும். மாநில அரசு கூடுதல் விலை கொடுத்து வாங்குவனால் வெளிச்சந்தையிலும் அந்த அளவில் விலைகள் உறுதிப்பட்டுள்ளன.

**விநியோகம் செய்ய கடைகள்:**

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு நியாய விலைக் கடை திறக்கப்படுமென்று இந்த அரசு பொறுப்பேற்றவுடன் அறிவிப்பு செய்தது. இவ்வாறு கிராமங்கள் அனைவற்றிலும் பல்லாயிரக்கணக்கான கடைகளைத் திறந்து இயக்குவதில் செலவு ஏராளமாக ஆகும். என்று உணர்ந்திருந்தபோதிலும்,.. கிராம மக்களுக்கு இந்த வசதி கிடைக்கவேண்டுமென்ற கவலையில் அரசு இக்கொள்கை முடிவைச் செய்தது. கிராமங்களில் பொது விநியோக முறையை விரிவாக்க வேண்டுமென்று அனைத்திந்திய அடிப்படையில் மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அறிவுரை கூறுவதற்கு முன்னதாகவே தமிழகத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டு இத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நாடு முழுவதற்கும் முன்னோடியாகத் தமிழகம் விளங்குகிறது.





தமிழ்நாட்டில் உள்ள 16,660 வருவாய் கிராமங்களில் குடியிருப்புகள் இல்லாத கிராமங்கள் 925 நீங்கலாக, 15,735 குடியிருப்புகள் உள்ள வருவாய்க் கிராமங்கள் ஆகும். இவற்றில் ஏற்கெனவே ஏறக்குறைய 5200 கடைகள் இயங்கி வந்தன. இக்கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தன. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு இன்றியமையாத மற்ற பொருள்களையும் இக்கடைகளில் விற்பதற்கு ஏற்பாடு செய்து அவற்றைப் பல்பொருள் நியாயவிலைக் கடைகளாக மாற்றும், நடவடிக்கையை அரசு மேற்கொண்டது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் இரண்டு அணுகு முறைகளை அரசு பின்பற்றியது. ஏற்கெனவே இயங்கிவந்த உணவுப் பங்கீட்டுக் கடைகளைப் பல்பொருள் நியாய விலைக் கடைகளாக மாற்றுவது ஓர் அம்சம். கடைகள இல்லாத கிராமங்களில் புதிதாகக் கடைகளைத் திறப்பது மற்றோர் அம்சம். இந்த இரண்டு அம்சங்களையும் ஒருங்கிணைத்து இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பு தஞ்சை, தென்னார்க்காடு, திருநெல்வேலி, தர்மபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திடமும், எஞ்சிய மாவட்டங்களில் கூட்டுறவு அமைப்புகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஏற்கெனவே இயங்கி வந்த ஏறக்குறைய 5200க்கும் மேற்பட்ட உணவுப் பங்கீட்டுக் கடைகள், பல்பொருள் நியாயவிலைக் கடைகளாக முதல் கட்டமாக மாற்றப்பட்டன. புதிதாக 10718 கடைகள் திறக்கப்பட்டுவிட்டன. மாவட்டவாரியாகப் புதிதாகத் திறக்கப்பட்டுள்ள கடைகளின் விவரம் கீழே உள்ள பட்டியலில் கொடுக்கப் பட்டுள்ளன:

| தொடர் எண். (1) | மாவட்டம் (2) | திறக்கப் பட்ட கடைகள் (3) |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | 1628 |
| 2. | வடார்க்காடு | 1481 |
| 3. | திருச்சிராப்பள்ளி | 571 |
| 4. | புதுக்கோட்டை | 558 |
| 5. | மதுரை | 605 |
| 6. | முகவை | 968 |
| 7. | கோவை | 436 |
| 8. | நீலகிரி | 3 |
| 9. | சேலம் | 569 |
| 10. | குமரி | (எல்லாக் கிராமங்களிலும் கடைகள் உள்ளன) |
| 11. | நெல்லை | 442 |
| 12. | தஞ்சை | 1,040 |
| 13. | தர்மபுரி | 613 |
| 14. | தென்னார்க்காடு | 1,804 |
| | | 10,718 |

அறுவடைக் காலத்தில் உற்பத்தியாகும் பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களிலேயே வாங்கி தரமான பொருள்களை நயமான விலைகளில் விற்க இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு அமைப்புகளும், நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. குறிப்பாகத் தமிழகத்தில் பற்றாக்குறையாக உள்ள பயறு வகைகள்போன்றவற்றை உபரியாக உற்பத்தியாகும் வெளி மாநிலங்களிலிருந்து வாங்கி நம் மாநிலத்தில் விற்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பொருள்களின் விலைகள் அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு ஒத்த தரமுள்ள பொருள்களின் வெளிச்சந்தை விலைகளுக்குக் குறைவாகவே நிர்ணயிக்கப்படுகின்றன.

**விலைவாசிகளின் நிலைமை:**

அரசின் விழிப்பான நடவடிக்கைகள் மூலம் பெரும்பாலான அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடிந்தது. கடந்த ஓராண்டுக்கு முன் கடலை எண்ணெய்யின் விலை அதிகமாக உயர்ந்து கவலைதருவதாக இருந்தது. இப்போது அது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடலை எண்ணெய் தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ. 10 என்ற அளவில் எளிதாகக் கிடைக்கிறது. பொது விநியோக முறையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பாமோலிவ் எண்ணெய் விநியோகித்ததன் மூலம் இவ்வாறு கட்டுப்படுத்த முடிந்தது.

சென்ற சில மாதங்களுக்கு முன் நிலவி வந்த விலைகளைவிட இப்போது சர்க்கரை விலையும் குறைந்துள்ளது. பருப்பு வகைகளைப் பொறுத்தவரை தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலம் என்பதால் பருப்புகளின் விலை உயர்ந்துள்ளது. நியாயமான விலையில் பருப்புகள் கிடைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் உபரி மாநிலங்களில் உற்பத்தியாகும் இடங்களிலிருந்து மொத்தமாக வாங்கி பொது விநியோக முறையின் கீழ் விநியோகிப்பதற்குத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

**வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள் :**

மக்களின் அன்றாடத் தேவைகளுக்கான இன்றியமையாப் பண்டங்களின் வணிகத்தை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன், வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள், 1955-ஆம் ஆண்டு அத்தியாவசியப் பண்டங்களின் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நெல், அரிசி, சிறுதானியங்கள், கோதுமை, கோதுமைப் பொருள்கள், கடலை எண்ணெய், வனஸ்பதி, சர்க்கரை போன்ற பண்டங்களின் வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதற்கு தற்போது நடைமுறையில் உள்ள ஆணைகளில் முக்கியமானவை:

1. தமிழ்நாடு நெல் அரிசி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1974.
2. தமிழ்நாடு கோதுமை, கோதுமைப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1974.
3. தமிழ்நாடு உணவு தானிய வர்த்தகர்கள் (உரிமம் வழங்கும்) ஆணை, 1968
4. தமிழ்நாடு நிலக்கடலை, நிலக்கடலைப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1974.
5. தமிழ்நாடு வனஸ்பதி (வர்த்தகக் கட்டுப்பாடு ஆணை 1974.
6. தமிழ்நாடு சர்க்கரை வர்த்தகர்களின் (உரிமம் வழங்கும்) ஆணை, 1962.
7. தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை 1973.

இக்கட்டுப்பாடு ஆணைகளின் கீழ் மொத்த வணிகர்களுக்கு உரிமங்களும், சில்லறை வணிகர்களுக்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. மேலும், பொது நலனுக்குக் குந்தகம் ஏற்படாதவண்ணம் செயல்படத் தேவையான ஆணைகள் பிறப்பிப்பதற்கும் இக்கட்டுப்பாடு ஆணைகளில் வகை செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடு ஆணைகளின்படி வர்த்தகர்கள், தங்களின் கொள்முதல் விற்பனைக் கையிருப்பு ஆகியவற்றின் விவரங்களை உரிமம் வழங்கும் அலுவலருக்கு மாதம் இருமுறை தெரிவிக்க வேண்டும். மேலும், வணிகர்கள் ஒரே சமயத்தில் வைத்துக் கொள்ளக் கூடியவற்றிற்கு உச்ச வரம்பும் இக்கட்டுப்பாடு ஆணைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள், வர்த்தகர்கள், நுகர்வோர் ஆகிய பல்வேறு சாரார்களின் நலன்களையும் பாதுகாக்கும் முறையில் ஒருங்கிணைந்த உணவுக் கொள்கையைத் தமிழக அரசு பின்பற்றி வருகிறது. உணவு முறையில் நிறைவும் நிம்மதியும், ஆக்கமும், ஊக்கமும், நிலவும் சூழ்நிலையை எல்லாருடைய ஒத்துழைப்பால் இந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் உருவாக்கக் முடிந்தது பற்றி தமிழக அரசும், மக்களும் பெருமிதம் கொள்ளலாம்.

## வணிகவரித் துறையின் அரும் பணிகள்

இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட உடன், விற்பனை வரி செலுத்துபவர்களின் குறைகளை நீக்கும் நோக்குடனும், துறை அதிகாரிகளின் ஊழல்களைக் குறைக்கும் பொருட்டும் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை ஆராய்ந்து பரிந்துரை செய்யும்பொருட்டு ஓய்வுபெற்ற ஐ.சி.எஸ். அதிகாரியான திரு கெய்வார் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு குழுவை அமைத்தது. அக்குழு தனது பரிந்துரைகளை அரசுக்குத் தற்போது சமர்ப்பித்துள்ளது. அவைகளை அரசு பரிசீலித்துப் படிப்படியாகச் செயல்படுத்தி வருகிறது. இக்குழுவின் பரிந்துரையின் பேரில் விற்பனை வரிச் சட்டம் திருத்தப்பட்டு இணைக்க வரி விகிதமும் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளன.

**வரிச்சலுகைகள் :**

ஏழை மக்களால் பெரிதும் பயன்படுத்தப்படுகிற பன்ரொட்டி, பொறை போன்ற பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும் தயிர், வெண்ணெய், கோழிகள் போன்றவைகளுக்கும் வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. காதி கிராம கைத்தொழில் வாரியம் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் இயங்கி வரும் விசைச் செக்குகளால் தயார் செய்யப்படும் பொருள்களுக்கும், ஆதிவாசிகளின் கூட்டுறவுக் கழகங்கள் விற்பனை செய்யும் கறிவேப்பிலை முதலானவைகளுக்கு வரிவிலக்கு அளித்துள்ளது. ஒரு முனை வரி விதிப்பின்கீழ். மேலும் சில பொருள்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

**சிறு வியாபாரிகளுக்கு சலுகைகள்:**

ரூபாய் ஐம்பதாயிரத்துக்கும் மேற்படாத அளவிலான மொத்த விற்பனைத் தொகைக்குள் வியாபாரம் செய்துவரும் சிறு வியாபாரிகளுக்கு ஏற்கெனவே பலமுனை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இப்போது ரூ. 50,000-க்கும் ரூ. 1,00,000-க்கும் இடையே விற்பனைத்தொகை உடைய வணிகர்கள் இணக்க முறையில் வரி செலுத்த அரசு வழி செய்ததோடு, இணக்கமுறையில் இதுவரை ஒவ்வொரு ஐந்தாயிரத்துக்கும் செலுத்த வேண்டியிருந்த வரி விகிதத்தை மாற்றி, ஒவ்வொரு பத்தாயிரத்துக்கும் புது மாதிரியான விகிதத்தில் செலுத்த வழி செய்துள்ளது.

இதன் முன்னர் இம்மாநிலம் நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. நிர்வாகம் திறம்பட நடைபெறும் பொருட்டு முன்பிருந்த கோட்டங்களைப் பிரித்துப் புதிதாக மூன்று கோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது இம்மாநிலம் வணிகவரியைப் பொறுத்தமட்டில் ஏழு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

## சிறந்தோங்கும் சமூகநலம்



**1978-79**-ஆம் ஆண்டு ஊனமுற்றவருக்கு 500 மூன்று சக்கரச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டு ரூ. 10,00,000 செலவில் 1000 மூன்று சக்கரச் சைக்கிள்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1978-79ஆம் ஆண்டு பள்ளி செல்லும் ஏழைக் குழந்தைகளில் காது கேளாதவருக்கு ரூ. 1.20 இலட்சம் செலவில் 300 காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டாக இருப்பதால் மேலும் 700 சேர்த்து 1000 காது கேட்கும் கருவிகள் வழங்கப்பட இருக்கின்றன.

1978-79ஆம் ஆண்டில் முதல் முறையாக ரூ. 12,500 செலவில் 50 ஊன்றுகோல்கள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் ரூ. 2.50 இலட்சம் செலவில் 1000 குழந்தைகளுக்கு ஊன்றுகோல்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் உடல் ஊனமுற்றவருக்கு (ஒரு சில விதவைகளுக்கும் கூட) 1000 பெட்டிக் கடைகள் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியோடு அமைத்துக் கொடுக்கப்படும்.

நடப்பு ஆண்டில் 100 மனநிலை சரியில்லாத குழந்தைகளுக்கு (60 பேர் தங்கும் வசதியுடனும், 40 பேர் வெளியில் இருந்து வந்து பயிற்சி பெறவும்) கல்வி, வாய்மொழிப் பயிற்சி, சமூகப் பணிகளில் பயிற்சி முதலியன அளிக்க ஒரு நிலையம் துவக்கப்பட இருக்கின்றது.



நடப்பு ஆண்டில் ஆதரவற்ற ஏழைப் பெண்களுக்கு 1000 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட இருக்கின்றன.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் முதல்வராக இருந்தபோது 1.4.1962 முதல் வயதானவர்களுக்கு ரூ. 20 ஓய்வு ஊதியமாக வழங்கப்பட்டது. ஏறக்குறைய 17 ஆண்டுகளுக்கு பின் தற்பொழுது இந்தத் தொகை ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர பொங்கல் மற்றும் சுதந்திரத் திருநாளில் இவர்களுக்குச் சேலைகள், வேட்டிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. இந்த வயது 1978-79-ஆம் ஆண்டு 45ல் இருந்து 40 ஆகக் குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதுவரை ஊனமுற்றவருக்கு ரூ. 20 ஓய்வு ஊதியமாக வழங்கப்பட்டு வந்தது. நடப்பு ஆண்டிலிருந்து இந்தத் தொகை ரூ. 25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர பொங்கல் மற்றும் சுதந்திரத் திருநாளின் போது இவர்களுக்குச் சேலைகள், வேட்டிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன.

நடப்பு ஆண்டு முதல் ஆதரவற்ற விழி இழந்த நபர்களுக்கு, அவர் எந்த வயதானவராக இருந்தாலும், வயதானவர் பெறும் ஓய்வு ஊதியம் அவர்களுக்கும் வழங்கப்பெறுவது இத்திட்டத்தில் முக்கியமானதொரு அம்சமாகும்.

1978-79ஆம் ஆண்டில் 40 பார்வை இழந்த மகளிர் தங்கும் வசதியுடன் கூடிய பார்வையிழந்தோர் மறுவாழ்வு இல்லத்தை தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது. இந்த இல்லம் நடப்பு ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும்.

ரூ. 25,00,000 செலவில் 20,000 பெண்கள் வீட்டில் இருந்தவாறு கைத்தொழில்களில் ஈடுபட்டு வறுமையைப் போக்கும் திட்டம் தற்பொழுது செயல்பட்டு வரு

கின்றது. இந்தத் திட்டத்தின்கீழ் கிழ்க்கண்ட கைத்தொழில்கள் அவர்களுக்குக் கற்றுத் தரப் படுகிறது:

1. சாக்குத் துண்டு தயாரித்தல்.
2. காகித உறைகள் செய்தல்
3. நூல் நூற்றல்.
4. தீப்பெட்டி செய்தல்
5. பாய் பின்னுதல்.
6. மூங்கில் கூடை செய்தல்.
7. பனை ஓலைக் பொருட்கள் தயாரித்தல்.
8. பருப்பு வகைகளில் பொடிகள் தயாரித்தல்.
9. பாட நோட்டுப் புத்தகங்கள் தைத்தல்.
10. ஜெம் கிளிப்புகள் தயாரித்தல்.

கிராமப்புறங்களில் கூட்டுறவு முறையில் தீப்பெட்டி மற்றும் காகித உறை தயாரிக்கவும், நகரங்களில் பாட நோட்டுப் புத்தகங்கள் தயாரிக்கவும் பெண்களுக்கான நிலையங்கள் நிறுவப்படும்.

திருமங்கலம் தொகுதியில் 500 பெண்களுக்கு ரூ. 80,500 செலவில் தீப்பெட்டி செய்யும் தொழிலுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி இவர்கள் செய்யும் பொருட்களை விற்பதற்கு வகை செய்ய வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஆண்டு வருமானம் ரூ. 3000-க்குக் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளில் ஒன்றுக்கு இலவச பாடப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் 1978-79ஆம் ஆண்டில் 3000 குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர். 1979-80 கல்வியாண்டிலும் இத்திட்டம் அமலாக்கப்பட இருக்கின்றது.

நடப்பு ஆண்டில் 50 விதவைகளின் குழந்தைகளுக்கு, ஒரு குழந்தைக்கு மாதம் ரூ. 36 வீதம் தொண்டுபுரியும் நிறுவனங்களின் மூலமாக அவர்களின் கல்வி மற்றும் பராமரிப்புக்காக ரூ. 22,000 செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் 250 ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்பட இருக்கின்றன. ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு குழந்தைகள் நல நிலையம் அமையவேண்டும் என்பதே நோக்கமாகக் கொண்டு, 9,000 குழந்தைகள் நல நிலையங்கள் உலகக் குழந்தைகள் ஆண்டான 1979ல் தொடங்கி 5 ஆண்டுக்குள்ளாகத் திறக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் பணிபுரியும் பெண்களுக்காக விடுதிகள் நிறுவப்படும். இதற்காகும் செலவில் 75 சதவிகிதத்தை மத்திய அரசும், 15 சதவிகிதத்தை மாநில அரசும், மீதி 10 சதவிகிதத்தை சம்பந்தப்பட்ட மாநகராட்சி-நகராட்சியும் ஏற்கும்.

உலக வங்கியின் உதவியுடன் 1980 முதல் ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. செழுமைகுன்றி பின்தங்கிய நிலையிலுள்ள 6 மாவட்டங்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறும். இதன் மூலம் 20,000 கிராமப் பெண்



களும், 1,000 மேற்பார்வையாளர்களும் வேலைவாய்ப்புப் பெறுவர். 10,000 புதிய பாலப் பள்ளிகள் தொடங்கப்பட்டு அதன் மூலம் ஊட்டச் சத்துக் குறைவுள்ள குழந்தைகள் அனைவரும் பயனடைவர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை 5 ஆண்டுகள் அமல்படுத்தும் வகையில் ரூ. 70 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய அரசின் மூலம் உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் படிப்பு உதவி ஒன்பதாம் வகுப்பும் அதற்குமேலும் படிப்பவர்களுக்கு மட்டுமே முன்னர் வழங்கப்பட்டது. நடப்பாண்டு முதல் ஒன்று முதல் எட்டு வகுப்பு வரை படிப்பவர்களுக்கும் மாநில அரசு நிதியிலிருந்து படிப்பு உதவி வழங்கப்படும்.

இவ்வாண்டு முதல் உடல் ஊனமுற்ற குழந்தைகள் அனைவரும் பஸ்களில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகை அளிக்கப்படுகிறது.

1000 குழந்தைகள் பயனடையத்தக்க அளவில் அனாதை விடுதி நான்கு தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

எல்லா மாவட்டங்களிலுமுள்ள விதவைகளுக்கு உதவுவதற்காக சென்னை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 4 வழிகாட்டி நிலையங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த வழிகாட்டி நிலையங்களின் மூலம் விதவைகளின் குழந்தைகளுக்குக் கல்வி வசதி செய்தல், விடுதிகளில் சேர்த்தல் சம்பந்தமான ஆலோசனையும், அவர்களுக்குச் சேர வேண்டிய இன்சூரன்ஸ் தொகை வருங்காலச் சேமநலநிதி போன்றவற்றினைப் பெற உதவியும் செய்யப்படுகிறது.

ரூ. 3000-க்குக் குறையாக ஆண்டு வருமானமுடைய குடும்பத்தைச் சேர்ந்த 16 முதல் 30 வயது வரையுள்ள பெண்கள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து போன்ற வேலை வாய்ப்புத் தொழில்களில் பயிற்சிபெற, பயிற்சியாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150 வீதம் 1000 ஏழைப் பெண்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு 1977-78ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 1978-79லும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

# வளர்ந்து வரும் சுற்றுலாத் துறை



முதன் முறையாக, தமிழ்நாட்டில் சுற்றுலா எந்த அளவுக்குப் படிப்படியாக வளம் பெற்றுப் பெருகியுள்ளது என்பது பற்றி ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வை ஒட்டி ரூபாய் 20 கோடி மூலதனச் செலவு கொண்ட நீண்டகாலத் திட்டம் வகுக்கப்பட்டது. மத்திய அரசு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தை முடிவு செய்யும்போது, இந்த நீண்ட காலத் திட்டம் பற்றியும் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள சுற்றுலா மையங்களில் மேம்பாட்டுப் பணிகளை மத்திய அரசுத் துறையின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுமென்று மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது. மாமல்லபுரம், உதகமண்டலம், கோடைக்கானல் முதலிய இடங்களுக்காகவும் பெருந்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1975-76ல் திட்ட மூலதனச் செலவு 22.70 இலட்சம் ரூபாய் மட்டுமேயாகும். இது 1977-78ல் ரூ. 46.10 இலட்சமாகவும், 1978-79ல் ரூ. 92.55 இலட்சமாக உயர்ந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக கோயம்புத்தூர் இரயில் நிலையத்தில் சுற்றுலாத் தகவல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி இரயில் சந்திப்பு, புதுடில்லி, சென்னை விமான நிலையம் ஆகிய இடங்களிலும் இதுபோன்ற சுற்றுலாத் தகவல் நிலையங்கள் திறக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவை விரைவிலேயே திறக்கப்படவிருக்கின்றன. சிதம்பரத்தில் புதிய சுற்றுலா அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. பிச்சாவரம் பகுதி சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை இந்த அலுவலகம் கவனித்துக் கொள்ளும். சுற்றுலாப் பயணிகளின் நலனுக்காக மாமல்லபுரத்தில் சுற்றுலாமுகாம் கட்டுவதற்கு 3.5 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. பிச்சாவரத்தில் குடில்கள், சிற்றுணவகம், படகுத் துறை இன்ன பிற வசதிகள் செய்து கொடுப்பதற்காக 1979-80ல் ரூபாய் 3 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தில் துயிலிடக் கூடம், உடை மாற்றிக் கொள்வதற்கான அறைகள், தகவல் நிலையம், குளிக்குமிட மேம்பாடு, அணுகுசாலை, புல்தரை, தோட்டங்கள் முதலியவற்றிற்கு 1979-80ல் ரூபாய் 3 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஒகேனக்கல்லில் உணவு -உறங்கும் வசதியுடைய கூடம் கட்டுவதற்கு 3 இலட்சம் ரூபாய் செலவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உதகமண்டலம், கோடைக்கானல், குற்றாலம் ஆகிய இடங்களில் ரூபாய் 25 இலட்சம் செலவில் குறைந்த வருமானத்தொகுதி சுற்றுலாப் பயணிகளுக்குத் துயில் கூட வசதிகளுக்கான பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் விரைவிலேயே தொடங்க இருக்கின்றன.

ஏலகிரியில் ஒவ்வொரு குடிலிலும் தனி வசதியுடைய இரு அறைகள் கொண்ட குடில்கள் இரண்டு முடிக்கப்பட்டுள்ளன. மண்டபத்தில் துயிலகக் கூடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. ஆவுடையார் கோவில், விராலிமலை ஆகிய இடங்களில் ஓய்வுக் கொட்டகைகள், ஒதுக்கிடங்கள் (Toilets) ஏனைய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவிருக்கின்றன.

ஏர்க்காட்டில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் பெருகியுள்ளன. சிற்றுண்டி வசதிகளுடன், படகு குழாம் கட்டும் பணி முடிவடையும் நிலையிலுள்ளது. இத்துடன் ஏர்க்காட்டில் 1979-80ல் ரூ. 3 இலட்சம் செலவில் துயில் மனையகம் கட்டுவதற்கும் திட்டம் உள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூபாய் 15 இலட்சம் செலவில் உதகை ஏரி சுற்றுப்புறங்கள் மேம்படுத்தப்பட்டு பாங்குற விளங்குகின்றன. இங்கு சுற்றுலாப் பயணிகளுக்குச் சிறந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஏரிக்கருகாமையில் பூத்துக்குலுங்கும் மலர்த் தோட்டம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

கோடைக்கானலில் தொலை நோக்காடி நிலையங்கள் இரண்டு திறக்கப்பட்டுள்ளன. இவற்றைச் சுற்றுலாப் பயணிகள் மிகவும் ரசித்துப் போற்றுகின்றனர். இது போன்ற தொலை நோக்காடி நிலையங்கள் உதகமண்டலம், குன்னூர், ஏர்க்காடு ஆகிய இடங்களில் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

சென்னையில், ஜனதா ஓட்டல் ஒன்றைக் கட்டுவதற்கு இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இதற்கு ரூபாய் 3 கோடி மூலதனம் செலவாகும். இத்திட்டத்திற்காக நமது அரசு பெயரளவு விலையில் இந்திய அரசுக்கு மிகுந்த விலைமதிப்புடைய நிலம் வழங்கியுள்ளது.

இத்துறை நடத்தும் இளைஞர் இல்லம் (Youth Hostel) எப்போதும் போலவே பிரசித்திப் பெற்றுள்ளது. இளைஞர் இல்லத்திலிருந்து வருவாய் பெருகியுள்ளது. நாட்டிலேயே சிறந்த இல்லங்களில் ஒன்று மத்திய அரசு நியமித்த ஆய்வுக்குழு கருத்து தெரிவித்துள்ளது.

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத்துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித்தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

**டான்சி**

**தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI


# கூட்டுறவுத் துறை குவிக்கும் வெற்றிகள்

தமிழ்நாட்டில் அரசின் அனைத்து வளர்ச்சிப் பணிகளிலும் கூட்டுறவு இயக்கம் பெரும் பங்கு வகிக்கின்றது. இந்த வகையில், தீப்பெட்டி தயாரிக்கும் சிறிய தொழிற்சாலையிலிருந்து கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகள் போன்ற பெரிய கூட்டுறவுத் தொழிற்சாலைகள் வரையிலான கூட்டுறவுத் தொழில் நிறுவனங்களை நாம் பெற்றிருக்கிறோம்.

அதைப் போலவே விவசாயிகளுக்கு வாடகைக்கு டிராக்டர் வழங்குதல் போன்ற வசதிகள் அளிப்பதற்கும் கூட்டுறவுப் பணிச் சங்கங்கள் உள்ளன. கடலை எண்ணெய் தயாரித்தல் போன்ற வேளாண்மைப் பொருள்களுக்கான பெரிய பதனிடும் தொழிற்சாலைகளை நாம் பெற்றிருக்கிறோம். சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கங்கள், தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், சலவைத் தொழிலாளர் சங்கங்கள், முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள், மலைசாதியினருக்கான கூட்டுறவுச்சங்கங்கள் ஆகிய பல கூட்டுறவுச் சங்கங்கள் தற்பொழுது சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்காக உள்ளன.

கூட்டுறவு அமைப்புகள் மனித சமுதாயத்தின் வாழ்க்கை மற்றும் அதன் நடவடிக்கைகளின் முழுத் தேவைகளை நிறைவு செய்கிறது.

தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு கூட்டுறவுத்துறையில் எடுக்கப்பட்ட முக்கியமான திட்டங்களில் ஒன்று, கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு இன்றியமையாத நுகர்பொருட்கள் கிடைக்க வழிவகை செய்யும் திட்டமாகும். ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் திறக்கப்படும் சில்லறைக் கடை மூலம் விநியோகம்செய்து, கிராமப்புறப் பகுதிகளில் அத்தியாவசியப் பண்டங்கள் நியாயமான விலையில் தாராளமாகக் கிடைக்க மாநிலம் முழுவதிலும் பொது விநியோக முறையை அரசு கொண்டு வந்துள்ளது.

செங்கல்பட்டு, வட ஆர்க்காடு மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி, பெரியார் ஆகிய 11 மாவட்டங்களில் கிராமக் கடைகள் திறக்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இக்கடைகள் திறக்கும் பொறுப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தவிர அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரை போன்ற இன்றியமையாத பொருட்களை இதற்கு முன்பு விநியோகித்த கூட்டுறவுச் சில்லறைக் கடைகள் பொதுமக்களுக்கு அதிக அளவில் நுகர் பொருட்களை வழங்குவதற்காக முழு அளவு நுகர்பொருள் விற்பனைக் கடைகளாக மாற்றப்பட்டு, எல்லா அத்தியாவசியப் பண்டங்களையும் கிராமப்புற மக்களுக்கு வழங்கி வருகின்றன.

இரண்டு மூன்று மாதக் குறுகிய காலத்திற்குள் கிட்டத்தட்ட 6000 புதிய நியாய விலைக்கடைகள் திறக்கப்பட்டதும், 4500 நியாய விலைக்கடைகள் முழு அளவு நுகர்பொருள் விற்பனைக் கடைகளாக மாற்றப்பட்டதும், அரசின் அரிய சாதனைகளாகும்.

இவ்விதமாக இம்மாநிலத்தில் உள்ள 16,000 ரெவின்யூ கிராமங்களில் சுமார் 11,000 கிராமங்களில் அத்தியாவசியமான பொருக்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகம் செய்து வருகின்றன. அரிசி, கோதுமை, சர்க்கரை, மிளகாய், புளி, கொத்தமல்லி, சமையல் எண்ணெய் போன்ற இன்றியமையாத பொருட்கள் தவிர, மேலும் 42 வகைப் பொருட்கள் இந்த நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தஓர் ஆண்டுக்காலத்திற்குள் இந்த நியாய விலைக் கடைகள் பொது மக்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப செயல்பட்டு, கிட்டதட்ட ரூ. 7½ கோடி அளவிற்கான பொருட்களை விற்பனை செய்துள்ளது.

மாநில அரசு மற்றும் தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஆகிய இரண்டும் அளித்த நிதி உதவியைக் கொண்டுதான் இதனைச் செயல்படுத்த முடிந்தது. இந்தக் கிராம நுகர்பொருள் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகமானது இதுவரை கிட்டத்தட்ட ரூ. 2.4 கோடி வழங்கியுள்ளது. மற்றும் மாநில அரசானது ரூ. 2.2 கோடி முன்பணமாக அளித்துள்ளது. இந்தக் கணிசமான நிதியுதவி திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்றுவதற்குப் பெருமளவில் பயன்பட்டது.

கிராமக் கடைகள் மாவட்ட அளவிலான மொத்த விற்பனை பண்டகசாலைகளுடன் இணைக்கப்பட்டன. அவற்றுக்குத்தேவையான இடம், கடன் உதவி மற்றும் இருவாரங்களுக்கு ஒருமுறை தேவைப்படும் பொருட்கள் முதலியவற்றை மாவட்ட அளவிலான மொத்த விற்பனைப் பண்டகசாலைகளிடமிருந்து பெற்றுக் கொண்டன.

கோயம்புத்தூரிலும், சென்னையிலும் உள்ள மண்டல நுகர்பொருள் நிலையங்கள் நுகர்வோர் கூட்டுறவுத்துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் உள்ள புதிய திட்டமாகும்.



தென்னிந்தியாவிலுள்ள சுற்றுலா இடங்கள் அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற இடங்கள் வெளிநாடுகளில் பலருக்கும் தெரியாதிருந்தது. இதனாலேயே இந்தியாவுக்கு வந்த அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளில் வெகு சிலரே தென்னிந்தியாவுக்கு வந்தனர். இந்தக் குறையைப் போக்குவதற்காகவே, 'ஏர் இந்தியா' நிறுவனம், இந்திய அரசு சுற்றுலாத் துறை ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் 1977 செப்டம்பரில் ''தென்னகம் நோக்கி'' (Desti nation South India) என்னும் திட்டத்தை நாம் செயல் படுத்தினோம். இத்திட்டத்தின் கீழ் உலகெங்கிலுமிருந்து பயணக் கட்டுரை எழுத்தாளர்கள், புகழ் பெற்ற புகைப்படக்காரர்கள் அறுபது பேர் நமது விருந்தினராக அழைக்கப் பெற்றிருந்தனர். அவர்கள் தமிழ்நாட்டில் முக்கியமான சுற்றுலா இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வெளிநாட்டுப் பத்திரிகைகளில் இந்தப் பயணக் கட்டுரை எழுத்தாளர்கள் எழுதிய கட்டுரைகளின் பயனாக தமிழ்நாட்டுக்கு வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வரவு சுமார் 30 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்த வெற்றியினை அடிப்படையாகக்கொண்டு தென்னிந்தியாவை நோக்கி 1979 திட்டம் 1979 அக்டோபரில் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. அவ்வமயம் தமிழ்நாட்டுக்கு வருகை தந்த பயணக் கட்டுரை எழுத்தாளர்கள் தமிழ்நாட்டை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.



பெங்களூரில் நடை பெற்ற TAAI மாநாட்டிலும், ''பாட்டா (Pata) 1977இல் டில்லியில் நடத்திய மாநாட்டிலும் நமது சுற்றுலாத் துறை பயனுள்ள முறையில் சிறப்பாகக் கலந்து கொண்டது. இந்த மாநாட்டுக்கு வருகை தந்த பிரதிநிதிகள் நமது விருந்தாளிகளாக நமது மாநிலத்துக்கு வருகை தந்தனர். இவ்வாறெல்லாம் சுற்றுலா வளர்ச்சிக்காக நாம் மேற்கொண்ட முயற்சிகள் தமிழ்நாட்டுக்குச் சுற்றுலாப் பயணிகள் வருகையைப் பெருக்குவதற்குப் பெரிதும் துணைபுரிந்துள்ளன.

சுற்றுலாப் பயணிகளின் வருகையைப் பெருக்குவதற்காக, சென்னை விமான நிலையம் மூலமாக அனைத்து நாட்டு விமானங்கள் மேலும் பல செல்வதற்கும், சென்னை விமான நிலையத்தில் தற்போதுள்ள வசதிகளை மேலும் பெருக்குவதற்கும் துணை புரியுமாறு இந்திய அரசையும் ஏர்-இந்திய நிறுவனத்தையும் நாம் வற்புறுத்தி வருகிறோம்.'

பூம்புகார், பாஞ்சாலங் குறிச்சி ஆகிய இடங்களிலுள்ள சிலப்பதிகாரக் கலைக்கூடம், கட்டபொம்மன் கோட்டை, சுற்றுலாத் துறையின் பொறுப்புக்கு மாற்றப் பட்டுள்ளன. இந்த இடங்களில் சுற்றுலா வசதிகளை மேம்படுத்துவதற்கான வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

உள்நாட்டுச் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்காக எல்லா மாவட்டங்களிலும் மாவட்டச் சுற்றுலா நிலையங்கள் (Excursion Centres) அமைக்கத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. பிற துறைகளின் துணைகொண்டு பல்வேறு கட்டங்களில் இவை நிறைவேற்றப்படும்.

**சுற்றுலா வளர்ச்சிக்கழகம்:**

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக அமைப்பு பலப்படுத்தப்பட்டு சீரமைப்பு நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப் பட்டுள்ளன. இதனால், இக்கழகத்துக்கு 1978-79ல் முதன்முறையாக நிகர இலாபம் கிட்டியது. 1976—77ல் இக்கழகத்தின் மொத்த வியாபாரத் தொகை சுமார் ரூபாய் 67 இலட்சமாக இருந்தது, 1978-79இல் ரூபாய் ஒரு கோடியைக் கடந்துள்ளது.

நெடுஞ்சாலைச் சுற்றுலாவைப் பெருக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்கு வழிப்பயண வசதிகளைச் செய்து கொடுக்கவும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முக்கியமான தேசிய நெடுஞ்சாலைகளில் விடுதிகளைக் ( Motels ) கட்டியுள்ளது. 1978- செப்டம்பரில் இராணிப்பேட்டையில் ஒரு நெடுஞ்சாலை விடுதி திறக்கப்பட்டது. 1979 ஆகஸ்டில் உளுந்தூர்ப்பேட்டையில் இரண்டாவது நெடுஞ்சாலை விடுதி திறக்கப்பட்டது. இந்த விடுதிகள் வர்த்தகத் திலும்கூட வெற்றி கண்டுள்ளன.

தெரிந்தெடுக்கப்பட்ட, குறிப்பிட்ட சுற்றுலா இடங்களிலெல்லாம் சுற்றுலாப் பயணி மாளிகைகள் பல கட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டில் கோடைக்கானல், மதுரை, ஏர்க்காடு ஆகிய இடங்களில் புதிய வசதிகள் கூடியுள்ளன. ஏனைய சுற்றுலா மாளிகைகளை விரிவுபடுத்தும் திட்டம் பல கட்டங்களில் செயல்படுத்தப் பட்டு வருகின்றது.

மதுரையில் ரூபாய் 35 இலட்சம் செலவில் பெரிய அளவில் சுற்றுலா மாளிகை ஒன்றும், ரூபாய் 22 இலட்சம் செலவில் கோயம்புத்தூரில் மற்றொரு சுற்றுலா மாளிகையும் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இவ்விரு திட்டம் சம்பந்தப்பட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பேருந்துகள் கூடுதலாகியுள்ளன. குளுமை வசதி செய்யப்பட்ட சொகுசுப் பேருந்துகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும்,இரண்டு சிறு பேருந்துகள் சேர்க்கவும் திட்டமுள்ளது.

# தமிழ்நாட்டில் வன வளர்ச்சி



வனக் கொள்கைக்கிணங்க தமிழ்நாட்டில் குறைந்த வருவாய் உள்ள காடுகளை அழித்து அவ்விடங்களில் அதிக வருவாய் தரும் மர இனங்களைத் தமிழக அரசு நட்டுப் பாதுகாத்து வருகிறது. அதே சமயத்தில் கரையோரங்களில் வளர்ந்து முதிர்ந்த காடுகளைப் பாதுகாத்தும் வளர்க்கப்படுகின்றன.

1977-78 மற்றும் 1978-79 ஆகிய ஆண்டுகளில் வனங்களிலிருந்து சுமார் 1127 மற்றும் 1052 இலட்ச ரூபாய் வருவாயாக முறையே கிடைத்துள்ளது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் அதிக நிலங்களில் காடுகளை உண்டாக்குவதை மையமாகக் கொண்டு விலை உயர்ந்த மரங்களையும், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் பயன் மரங்களையும்,தோல் பதனிடத் தேவையான மர வகைகளையும் நட்டுப் பாதுகாக்க முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

வன வளர்ச்சி மட்டுமின்றி சென்னைப் புகை வண்டி நிலையத்தை வளரச் செய்யும் பொருட்டும்,பேசின்பிரிட்ஜ் அருகிலுள்ள மின் சக்தி நிலையத்தில் புகையின் காரணமாக விலங்குக் காட்சிச் சாலையைச் சென்னைக்கு அருகாமையிலுள்ள வண்டலூர் என்னும் இடத்திற்கு மாற்றும் பணி சுமார் 105 இலட்ச ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விலையுயர்ந்த மரக் கடத்தலைத் தவிர்க்கவும்,வன ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், வனத் துறைத் தலைவரின் நேர்முகக் கண்காணிப்பில் குற்றப்பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட குற்றம் புரிபவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த தண்டனை அதிகரித்து மூன்று ஆண்டுக் கடுங்காவல் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கவும் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தீவிர மர உற்பத்தித் திட்டத்தின் கீழ் அரசாங்கம் மற்றும் பொதுப் பணியாளர்கள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு, சுமார் ஒரு கோடியே அறுபத்து ஐந்து இலட்ச செடிகளைக் கடந்த நடப்பாண்டில் நட திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகளில் மலைவாழ் மக்களின் வளர்ச்சிக்காக அவர்களைப் பணியில் அமர்த்தி வேலை வாய்ப்பு அளித்து அவர்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது. மலை வாழ் மக்களின் மறுவாழ்விற்காக அவர்களுக்குக் குடியிருப்பு இல்லங்களும், பள்ளிகளும், இலவசப் புத்தகங்களும், உடைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.'

போதைய ஈட்டுறுதி அளவுடன் விபத்துக்களுக்கு மாநில உள்ளான பயணிகளுக்கும் பயணிகள் அல்லாதோருக்கும் உதவித் தொகை வழங்கப்படும்.

இதற்காக ''முதலமைச்சர் விபத்து நிவாரண நிதி'' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது, மோட்டார் வண்டி வரியின் கீழ் கிடைக்கின்ற ஆண்டு மொத்த வருமானத்தில் 1 சதவீதத் தொகை இதற்காக மேற்படி நிவாரண நிதிக்கு ஆண்டு தோறும் மாற்றப்படுகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் செயற்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் அரசு போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அல்லாத வாகனங்களினால் ஏற்படும் விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழங்குமாறு அரசு ஆணை எண். 232 உள்துறை, நாள் 24.1.79ல் உத்திரவிடப்பட்டுள்ளது.

### சிறைத்துறை

அவசர நிலை பிரகடனத்தின் போது, சென்னை மத்திய சிறையில் சிறைவாசிகள் கொடுமைப் படுத்தப்பட்டதாக கூறிய புகார்களை விசாரித்திட தலைமை நீதிமன்ற நீதிபதி இஸ்மாயில் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவினை (இஸ்மாயில் கமிஷன்) அரசு நியமித்தது. இக்குழுவின் அறிக்கையினை அரசு பெற்று அவற்றின் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. திரு ஆர். நடராசன், இ.அ.ப. அவர்கள் விசாரணை நடத்தி வருகிறார்கள். சம்பந்தப்பட்ட சிறை அலுவலர்களை அரசு தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது.

சிறை நிர்வாகத்தில் மேம்பாடு கண்டிடவும் சிறைவாசிகளின் தரத்தினை உயர்த்தும் எண்ணம் கொண்டும் அரசு ஒய்வுபெற்ற பாட்னா தலைமை நீதிபதி திரு ஆர்.எல். நரசிம்மன் அவர்கள் தலைமையில் ஒரு சீர்திருத்தக் கமிஷனை அமைத்தது.

இக்குழுவின் அறிக்கை சட்டமன்றப் பேரவையிலும் மற்றும் மேலவையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் பார்வைக்காக வைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையினை அரசு பொதுப் படையாக ஏற்றுக் கொண்டுள்ளது. பல பரிந்துரைகளின் மீது தக்க ஆணைகளை அரசு பிறப்பித்துள்ளது. ஏனைய பரிந்துரைகளை நடைமுறைப் படுத்திட மாண்புமிகு சட்ட அமைச்சர் அரசு தலைமை செயலர், மற்றும் துறைச் செயலர்கள் அடங்கிய உயர்மட்ட அளவு குழுக்கள் அமைத்து உரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது.

### வட்டார சீர்திருத்த நிர்வாகப் பள்ளி, வேலூர்:

நான்கு தென் மாநிலங்களுக்கும் பொதுவாகப் சிறை அலுவலர்களுக்குப் பல்வேறு துறைகளில் பயிற்சி அளித்திட வேலூரில் சீர்திருத்த நிர்வாகப் பள்ளி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இப்பள்ளி 1.10.79 முதல்இயங்கி வருகின்றது. மாநிலத்தில் சிறைத் துறையில் பல்வேறு மட்டங்களில் பணிபுரியும் சிறை அலுவலர்கள் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்றிட இப்பள்ளிக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். இப்பயிற்சி மாநிலத்தின் சிறை நிர்வாகத்தினை மேம்படுத்திடப் பெரிதும் உதவிடும் என நம்பப் படுகிறது.

தமிழகத்திலுள்ள எல்லா கிளைச் சிறைகளிலும் நீரடிக் கழிப்பிடம், மற்றும் தண்ணீர் வசதிகள் ஏற்படுத்துவதற்கான திட்டங்களுக்கு அரசு ஏற்பாணை வழங்கியுள்ளது. இத்திட்டங்களுக்காக மத்திய அரசின் நிதியுதவியுடன் அரசு ரூ. 68 இலட்சம் வழங்கியுள்ளது.

கோவை மத்திய சிறையிலுள்ள நெசவுத் தொழிற்சாலையை மேம்படுத்துவதற்காகவும், 80 புதிய விசைத் தறிகள் வாங்கவும் மற்ற சிறைகளிலுள்ள கைத்தறிகளைப் பழுது பார்க்கவும், மொத்தம் ரூ. 15 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. சிறைகளில் நடைபெறும் விவசாய முன்னேற்றத்திற்காகக் குறிப்பிட்ட சிறைகளில் ஆழ் கிணறு அமைக்கும் திட்டங்களுக்கும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துறையின் அடிப்படையில் தமிழகத்திற்கு ரூ. 1469 லட்சம் மத்திய அரசு மூலம் வழங்கப்பட இருக்கிறது. சிறைச்சாலைகளில் தற்போதுள்ள இட நெருக்கடியைத் தவிர்க்கும் நோக்கத்துடன் சுமார் 5000 கைதிகளுக்கு கூடுதல் இடவசதி அமைக்கவும், கைதிகளுக்கு அளிக்கப்படும் உணவு, உடை, மருத்துவ வசதி சுகாதார வசதி, மின் வசதி ஆகியவற்றின் தரத்தை உயர்த்தவும் இத்தொகை பயன்படுத்தப்பட திட்டங்கள் வகுக்கப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. விரைவில் மத்திய அரசின் நிதி உதவி கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சிறைகளில் இட நெருக்கடியைப் பற்றி ஆய்வதற்காகவும், விசாரணைக் கைதிகள் நீண்ட காலம் சிறைகளில் வைத்திருப்பதைத் தவிர்க்க வழிவகை செய்யவும், அனைத்து மாநிலத் தலைமைச்செயலர்களின் மாநாடு டெல்லியில் நடந்தது. இம்மாநாட்டின் பரிந்துரைகளின் மீது அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

### கைதிகளை விடுதலை செய்தல்:

மறைந்த ராஜாஜி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை ஒட்டி 843 கைதிகளுக்கு அரசு சிறப்பு தண்டனை நீக்கம் அளித்தது.

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை ஒட்டி பொது இடத்திலோ அல்லது தனி இடத்திலோ ,போதை நிலையில் காணப்பட்டு, தமிழக அரசு மது விலக்கு சட்டம்,1937 பிரிவு 4-ஏன்படி கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்த கைதிகள் மற்றும் மது அல்லது போதையூட்டும் மருந்து அருந்தி பிரிவு 4 (1) (J)ன் படி கைது செய்யப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் 29.10.79ன் நிலவரப்படி, மேற் கூறிய ஆணையின்படி 1619 கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

## திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் துவக்கம்

1980-ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாள் அன்று "திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம்'' என்ற பெயரில் ஒரு புதிய போக்குவரத்துக் கழகம் துவக்கப்படும். தற்போது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் எக்ஸ்பிரஸ் பிரிவு இப்புதிய போக்குவரத்துக் கழகமாக மாற்றப்படுகிறது. இது பொதுத்துறை நிறுவனமாக இருக்கும்.

### போக்குவரத்து வசதிகள்:

தமிழ் நாட்டில் தற்போது போக்குவரத்து வசதியற்ற கிராமங்களுக்குப் போக்குவரத்து வசதி செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்தது. தேசிய நெடுஞ்சாலைகள் அல்லது மாநில நெடுஞ்சாலைகளுடன் இணைப்பு பெறாமலேயே இக்கிராமங்கள் இருந்து வருகின்றன. இக்கிராமப்பகுதிகள் தற்போது மாவட்ட அல்லது கிராமப்புறச் சாலைகளினால் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளன. இக்கிராமப்புறச்சாலைகளின் நிலைமையும், போதிய பயணிகள் போக்குவரத்து இல்லாமையாலும் இச்சாலைகள் பேருந்து போக்குவரத்துக்குத் தகுதியில்லை என்பதினால் மினி பஸ்கள் என்கிற சிறு ஊந்துகள் மட்டுமே செல்வதற்கு ஏற்றவை என தெரிய வந்தது. இதனைத் கருத்திற் கொண்டு போக்குவரத்து வசதியற்ற கிராமங்



களுக்கு வசதி செய்யும்பொருட்டு மினி பஸ்கள் ஓட்டும் திட்டத்தினை அரசு மேற்கொண்டுள்ளது.

சென்ற இரண்டரை ஆண்டுகளில் 788 புதிய வழித்தடங்களிலும், 816 வழித்தடங்களில் சிறு மாறுதல்கள் செய்வதன் மூலமும் 33,77,168 மக்கட் தொகை பயனடையும் வண்ணம் 1934 கிராமங்களுக்கு போக்குவரத்து வசதி அளிக்கப்பட்டுள்ளது.

### திரைப்படங்கள்.

தமிழ் திரைப்படத்துறை, ஆங்கிலம், இந்தி, மலையாளம் தெலுங்கு மற்றும் கன்னடப் படங்கள் கடுமையான போட்டியால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை நலிந்து போனநிலையில் இருந்ததால் அதற்கு வலியூட்டி வளர்க்க இவ்வரசு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே தமிழ்த் திரைப்பட உலகம் புத்துணர்ச்சியும் புது வேகமும் பெற்று வளர்ச்சியடைந்துள்ளது. இதனால், தமிழ்த் திரைப்படங்களுக்குப் போதிய நல்ல திரையரங்குகள் கிடைக்க வழி செய்யும் நோக்குடன் எப்போதும் பிறமொழிப் படங்களையே திரையிட்டு வரும் திரையரங்குகளில், கட்டாயமாக ஆண்டுக்கு 12 வாரங்கள் தமிழ்ப்படங்களைத் திரையிடாக வேண்டுமென்று விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

தற்போது, தமிழ்த் திரைப் படங்களின் வெளியிட்டு எண்ணிக்கைக்கு ஈடு கொடுக்கப் போதிய அளவு திரையரங்குகள் இல்லாத நிலைமையைப்போக்க, குறைந்த முதலீட்டில் திறந்த வெளித் திரையரங்குகளும்,டூரிங் திரையரங்குகளும், செமி பர்மணண்ட் திரையரங்குகளும் அமைக்க சட்டப்படி அனுமதி வழங்குவதில் உள்ள சிக்கல்களை தவிர்த்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாநகரக் காவல் துறை ஆணையர் ஆகியோர் இது போன்ற அனுமதி மனுக்களின் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர். திரையரங்குகளுக்குக் கட்டட உறுதிச் சான்றிதழ் மற்றும் மின் சான்றிதழ் ஆகியவைகளை வழங்குவதில் உள்ள கால தாமதங்களையும் சிரமங்களையும் தவிர்க்க நடவடிக்கை எடுப்பதுடன் நடைமுடை உணர்வுடன் நடந்து கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

டூரிங் திரையரங்குகளின் உரிமக் காலத்தை $2\frac{1}{2}$ ஆண்டிலிருந்து 3 ஆண்டுகளாகவும், செமி பர்மனண்ட் திரையரங்குகள் நிரந்தரத் திரையரங்குகளாக மாற்றுவதற்கான கால அளவை 5 ஆண்டிலிருந்து 7 ஆண்டாகவும் கால நீடிப்பு வழங்கியுள்ளதுடன் கிராமப் புறங்களிலுள்ள செமி பர்மனண்ட் திரையரங்குகளுக்கு நிலையாக இயங்க அனுமதி வழங்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. மேலும் குளிர் சாதன வசதியுடைய திரையரங்குகள் மின்சார வெட்டு உள்ள காலங்களில் குளிர் சாதன வசதி செய்யாவிடில் அவை சாதாரணத் திரையரங்குகளைப் போலவே குறைந்த அனுமதி கட்டணங்களைத் தான் வசூலிக்க வேண்டுமென்றும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இப்படிப்பட்ட முடிவுகளினால் திரையரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன் மூலம் அரசுக்கு வருவாயும், ஏழைஎளிய மக்களுக்குப் பொழுது போக்கு வசதியும் பெருகியுள்ளது.

திரையரங்குகளின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் 1957ஆம் ஆண்டில் தமிழ்நாடு திரைப்பட (ஒழுங்குபடுத்தல்) விதிகள் நடைமுறைத் தேவைக்குத் தக்கவாறு திருத்தப்படுவதுடன், பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு திரைப் பட அரங்குகள் சுத்தமாகவும் விதிகளில் கண்டவாறு வசதிகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டுமென அடிக்கடி சோதனைகள் நடத்தப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளன.

வீதிகள் மற்றும் பொது இடங்களில் திரைப்படக் காட்சிகள் நடத்தப்படுவதை தடை செய்யப்பட்டுள்ளது.

திரைப்படங்கள் சட்டத்தின் கீழ் மேல் முறையீட்டு மன்றமான வருவாய் வாரியம் வழங்கும் தீர்ப்புகள் அல்லது ஆணை

கோயம்புத்தூரில் மண்டல நுகர் பொருள் விநியோக நிலையம் கடந்த ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர், நீலகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களின் நுகர்வோர் பண்டகச் சாலைகளின் மொத்தத் தேவைக்கேற்ப பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்வதன் மூலம் கொள்முதல் விலையைக் கட்டுப்படுத்த முடிகிறது. மேலும் கூட்டுறவுப் பண்டகச் சாலைகள் மூலம் பொருட்களைக் கூடுமான வரை சகாய விலையில் விற்கவும் முடிகிறது.

சென்னையிலுள்ள மண்டல நுகர்பொருள் வளர்ச்சி நிலையம் சென்னை, செங்கல்பட்டு மற்றும் வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். மண்டல விநியோக நிலைய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அதிக அளவில் கொள்முதல் செய்யப்படும்பொருட்களைச்சேமித்து வைக்கவும், அவ்வாறு சேமித்து வைத்த பொருட்களைக் கிராமக் கடைகளுக்குத் தேவைப்படும் போது வழங்கவும் பெரிய கிடங்குகள் கட்டப்படுகின்றன.

கிராமப் பகுதிகளில் மின்சாரம் பரவலாக வழங்குவதற்கும் மின் இணைப்புக்கொடுப்பதை விரைவுபடுத்தவும், ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உதவும் பொருட்டும் தமிழ்நாட்டில் முதன் முதலாக கும்பகோணத்தில் ஒரு கிராமப்புற மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு கிராம மின்சாரக் கழகத்திடமிருந்து கணிசமான உதவியை கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் பெற்றுள்ளது. நாடு முழுவதும் 12 கிராம மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

மலை சாதி மக்களின் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்தப் பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மலை சாதி மக்கள் தமிழ்நாட்டில் இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களில் தான் வாழ்கிறார்கள். இவர்களுக்கு உதவ ஒன்பது பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மலைப்பகுதிகளில் காடுபடு பொருட்கள் அதிக அளவில் கிடைக்கின்றன.

மலை சாதி மக்கள் இடைத்தரகர்களால் சுரண்டப்பட்டார்கள். மலை சாதி கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் அந்த கூட்டுறவுச் சங்கங்களில் மலை சாதி மக்களை இயக்குநர்களாகப் பங்கு ஏற்கச் செய்யும் வாய்ப்பு உண்டாகிறது. வன, வருவாய் மற்றும் கூட்டுறவுத்துறை அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் மலை சாதிக் கூட்டுறவுச் சங்கங்கள் மலைவாழ் மக்களிடமுள்ள காடுபடுபொருட்களை வாங்கி, இடைத்தரகர்கள் மூலம் அதற்குமுன்பு அவர்கள் பெற்ற தொகையை விட அதிக இலாப விலைக்கு விற்கின்றனர். தங்களுடைய பண்டைக்கால வாழ்க்கை முறையைப் படிப்படியாக மாற்றிக்கொள்வதற்கும், விவசாய நிலங்களை விஞ்ஞான நவீன முறைகள் மூலம் விவசாயம். செய்வதற்காகவும், மலை வாழ் மக்களுக்கு விவசாயக் கடன்கள் வழங்கப்படுகின்றன. மலை சாதி மக்களுக்கு மிகக் குறைந்த வட்டி அதாவது நான்கு சதவீதம் வட்டிக்குக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன.

இவ்வகைச் சங்கங்கள் வழங்கிய கடன்களில் அளவு 1976-77-ஆம் ஆண்டில் 9.10 இலட்சரூபாய் ஆனது. 1978-79-ஆம் ஆண்டில் 39.44 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மலைவாழ் மக்களுக்கு விநியோகித்த நுகர் பொருட்களின் மதிப்புக்கூட 1976-77ல் ஆண்டிலிருந்த ரூபாய் 38 ஆயிரத்திலிருந்து 1978-79-ஆம் ஆண்டில் ரூபாய் 17 இலட்சமாக அதிகரித்துள்ளது.

இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாறான பல் முனைக் கூட்டுறவு ஒழுங்கியல் மற்றும் நுட்பங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி நம் நாட்டின் வளர்ச்சிக்கோர் எடுத்துக்காட்டாகும்.

## கன்னியாகுமரிதேவஸ்வம் ஊழியர் அரசு ஊழியர் ஆகினர்!

முன்பொரு காலத்தில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அரசு ஊழியர்களாக இருந்து இப்பொழுது கன்னியாகுமாரிதேவஸ்வங்களில் பணியாற்றும் 131 நிர்வாக அலுவலக ஊழியர்களின் நெடு நாளைய கோரிக்கையை அரசு ஏற்று, 1.4.1979 முதல் அரசு ஊழியர்கள் ஆக்கப்பட்டு விட்டார்கள். இதனால் இவ்வூழியர்கள் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்ஷன், பிராவிடண்ட் பண்ட், குடும்ப நல நிதி உட்பட்ட எல்லாச் சலுகைகளையும் பெறத் தகுதி உடையவர்கள் ஆகி விட்டார்கள்.

## வல்லுநர் குழு நியமனம்

இந்து சமயத்தைச் சார்ந்த தகுதியுள்ளவர்களிடையேயிருந்து சாதி, இன உட்பிரிவு போன்ற வேறுபாடின்றி அர்ச்சகர்கள், பூசாரிகள் மற்றும் உள்துறை ஊழியர்கள் இந்து சமய நிறுவனங்களில் நியமிக்கப்பட வேண்டுமென்ற அரசின் கருத்தை எவ்வாறு செயல்படுத்துவது எனப் பரிசீலித்து அரசுக்கு அறிக்கை தர வேண்டி, சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி திரு எஸ். மகராஜன் அவர்களின் தலைமையில் வேதம், ஆகமம், திருமுறை ஆகிய வழிபாட்டு முறைகளில் வல்லுநர்களாக உள்ள நபர்களை உறுப்பினர்களாகக் கொண்ட வல்லுநர் குழு (Expert Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



# உள்துறை ஆற்றிவரும் உயரிய பணிகள்

காவல் துறையின் நிர்வாகத்தினை திறமையானதாக்க காவல் துறை மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிற்கும் தலைமையாக ஒரு காவல் பேராய்வாளரும், மூன்று பிரிவிற்கும் தலைமையாகமாநில காவல்துறைத் தலைவராகவும் இருப்பர்.

இந்த மாநிலத்தில் நெடுங்காலமாக இருந்து வந்த காவலர்களை ஏவலர்களாகப் பயன்படுத்தும் பழக்கம் ஒழிக்கப்பட்டுவிட்டது.

வாராந்திர விடுப்பு நாட்களில் பணிபுரியும் காவலர்களுக்கும் தலைமைக் காவலர்களுக்கும் கொடுக்கப்படும் படி ரூ. 2லிருந்து ரூ. 7 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசு, காவல்துறை பணியாளர்கள் சில விதிமுறைகளுக்கும் வரன்முறைகளுக்கும் உட்பட்டு மூன்று தனித்தனி சங்கங்கள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காவல்துறைக்கு 10,000 காவலர்களை நியமிக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக 1979-80 ஆம் ஆண்டில் 2,000 காவலர்களை கூடுதலாக நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டில் காவலர்களுக்கு ரூ. 70.87 இலட்ச ரூபாய் செலவில் 384 குடியிருப்புகள் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் பல மாவட்டங்களில் ரூ. 1,94,17,000 செலவில் 768 குடியிருப்புகள் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காவல்துறையில் உள்ள இரண்டாம் நிலைக்காவலர் முதல் ஆய்வாளர் உள்ளிட்ட அனைவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.20- இடையூறுப்படியாக வழங்கஅரசு ஆணையிட்டுள்ளது. சேமக் காவல் படையினர், சிறப்பு காவல் படையினர், ரகசியப் போலீசார், சிறப்பு இரகசிய போலீசார் ஆகியோருக்கும்இந்த இடையூறுப்படி வழங்கப்படும்.

### போக்குவரத்து

இம்மாநிலத்தில் சாலைகளில் ஓடும் வண்டிகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க மோட்டார் வண்டிகளினால் ஏற்படும் விபத்தால் கொல்லப்படுகின்ற அல்லது ஊனமேற்படுத்தப்படுகின்றவர்களில் எண்ணிக்கையும்பெருகி வருகிறது. இதனால் விபத்துக்குள்ளானவரின் குடும்பம் திடீரென பேரிழப்பிற்கு உள்ளாகிறது. சில வேளைகளில் தனது ஆதரவாளரையே இழக்கவும் நேரிடுகிறது. இப்படிப்பட்ட சமயங்களில் அக்குடும்பத்திற்கு உடனடியாக நிவாரணம் அளிக்கப்பட வேண்டியதைக் கருத்திற்கொண்டு போக்குவரத்து நிறுவனங்கள் அல்லது இம்மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டு இம்மாநிலத் ஓடிக் கொண்டிருக்கின்ற பேருந்துகளினாலும் இம்மாநிலத்திற்குள் ஏற்பட்ட விபத்துக்களில் காயமடைந்தவர் அல்லது விபத்தில் மரணமடைந்தால் அவர் தம் குடும்பத்தினர் மருத்துவச் செலவையும் பிற உடனடிச் செலவுகளையும் செய்ய ஏதுவான வகையில் ரொக்க உதவித் தொகை வழங்கப்படவேண்டும் என்று அரசு கட்டளை இட்டுள்ளது.

ரொக்க உதவி நிவாரணத் தொகை முற்றிலும் கருணையின் பால்பட்டதே ஆகும். இத்தொகை மோட்டார் விபத்துக்கள் உரிமை நடுவர் மன்றம் அல்லது ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து விபத்துக்குள்ளானவருக்கு அல்லது அவரது குடும்பத்திற்கு கிடைக்கின்ற இழப்பீட்டுத் தொகை எதனையும் பாதிக்காது; மேலும் விபத்துக்குள்ளானவர்களது நிதிநிலை அல்லது தற்

களை மறுபரிசீலனை செய்யும் நோக்குடன் அரசுக்கு மறு விசாரணை அதிகாரம், அளிக்கும் வகையில் தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) சட்டம் திருத்தப்பட்டுள்ளது.

சமீபத்தில் தூத்துக்குடிக்கு அருகே ஒரு டூரிங் திரையரங்கில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலுள்ள எல்லா டூரிங் திரையரங்குகளும் பொது மக்களுக்கு பாதுகாப்பானதாகவும், வசதியானதாகவும் இருக்கின்றனவா என்று கண்டறிய சோதனையிடப்பட்டு விதிகளின்படி நடத்தப்படாத டூரிங் திரையரங்குகள் நிறுத்தப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டது. டூரிங் திரையரங்குகளில் மாட்னி காட்சிகள் நடத்த வழங்கப்பட்டிருந்த அனுமதியும் இரத்து செய்யப்பட்டது. மேலும் இனிமேல் எல்லா டூரிங் திரையரங்குகளும் தீப்பிடிக்காத பொருள்களைக் கொண்டுதான் கட்டப்பட வேண்டுமெனவும் விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

## காவலர் வீட்டு வசதி திட்டம்:

காவலர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ், 1977-78ம் ஆண்டில் 602 வீடுகளும், 1978-79ல் சென்னை அண்ணா நகர், திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை ரோடு, மயிலாப்பூர் மற்றும் ஸ்ரீரங்கத்தில் மொத்தம் 270 வீடுகளும், 1979-80ல் தமிழ்நாடு முழுவதும் 27 இடங்களில் 5 ஆய்வாளர்களுக்கும், 33 உதவி ஆய்வாளர்களுக்கும், 47 தலைமைக் காவலர்களுக்கும், 683 காவலர்களுக்கும் வீடுகள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

## வங்கிகளின் மூலம் வரிவசூலிப்பு:

போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கான வரி, சென்னை நகரில் வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் அலுவலகத்திலும், போக்குவரத்து ஆணையரின் அலுவலகத்திலும் மேலும் வரி வசூலிப்புக் காலங்களில் காவல்நிலையங்களில் ஏற்படுத்தப்படும் கவுண்டர்களிலும் வசூலிக்கப்பட்டு வந்தது.

இம் முறையில் போதுமான வசதியின்மையால் நீண்ட 'க்யூ' வரிசை கவுண்டர்களின் முன் ஏற்படுகின்றன என அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதன்பேரில் பொது மக்களுக்கும், வரி செலுத்துவோருக்கும் வசதியைச் செய்துதரும் பொருட்டு, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் மூலமும் வரி வசூலிக்கவும், அனுமதிச்




சீட்டுகளை வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டது. மேற்கூறிய வண்ணமே சென்னையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலமாகப் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வரி வசூலிப்பதற்கான திட்டத்திற்கு 21.6.'78 முதல் அரசு அனுமதித்தது.

இத் திட்டம் 16.3.79 முதல் மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் முக்கிய நகரங்களில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் இந்தியன் வங்கியின் மூலம் போக்குவரத்து அல்லாத வாகனங்களுக்கு வரி வசூலிக்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## மதுவிலக்கு:

மதுவிலக்குத் திட்டம், ஒரு சமூக நலத் திட்டமாகும். கடின உழைப்பின் மூலம் ஈட்டிய வருமானத்தை மதுவிற்காகச் செலவிட்டுச் சீரழிவதினின்றும் ஏழை எளிய மக்களைக் காத்து அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். பாமர மக்களின் நல்வாழ்வைக் கருதி மதுவிலக்கைச் செவ்வனே செயல்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

மதுவிலக்கைத் திறம்படவும், கண்டிப்பாகவும் அமல்படுத்துவதில் இந்த மாநில அரசு தனிக் கவனம் செலுத்துகிறது. கள்ளத்தனமாக மதுவகைகள் தயாரிக்கப்படுவதற்கு முக்கிய ஆதாரமாக விளங்குகின்ற வாயில்களையே ஒழிப்பதற்குத்தான் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் விளைவாகக் கள்ளத்தனமாக மதுவிற்போர், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், மதுவகைகள் கடத்துவோர் ஆகியோரின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மதுவிலக்குக் குற்றம் செய்பவர்களுக்கு மிகக் கடுமையான தண்டனை வழங்குவதற்கு வகை செய்யும் தமிழ்நாடு 9.1.1979 சட்டம் அதிகாரமுறையில் வெளியிடப்பட்டு மதுவிலக்குச் சட்டம் கடுமையாக்கப்பட்டுள்ளது. அது முதற்கொண்டு மதுவிலக்குக் குற்றங்கள் குறிப்பிடத்தக்க வகையில் குறைந்துள்ளன.

கள்ள மதுவை அருந்தியதன் காரணமாக ஏற்பட்ட மரணங்களுக்குப் பொறுப்புடையவர்களுக்கு ஆயுள் சிறைத் தண்டனை வழங்கவும் இந்த சட்டம் வகை செய்கிறது. மேலும் மதுவிலக்கினைச் செவ்வனே நன்மை பயக்கும் வகையில், காவல் துறைத் தலைவரின்(அமலாக்கம்) கீழ் ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டுச் செயல்பட்டுவருகிறது. சமீபத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவின்போது தமிழக முதல்வர் அறிவிப்பின் படி 1937ம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் பிரிவுகள் 4-ஏ மற்றும் அல்லது 4(1) (ஜே)ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளவர்களின் (போதை நிலையில் இருந்தவர்கள் மற்றும் மது அருந்தியவர்கள் அல்லது போதைப் பொருள்களை உட்கொண்டவர்கள்)வழக்குகளை நீதிமன்றங்களிலிருந்து வாபஸ் பெறவும், மேற்கண்ட குற்றத்திற்காகச் சிறைத்தண்டனை அனுபவித்துக்கொண்டிருப்போரை விடுதலை செய்யவும் 13.10.79 அன்றுஇவ்வரசுஆணை பிறப்பித்தது. இவ்விதம் மதுவிலக்கு மக்களுக்கு நலம் பயக்கும் முறையில் தமிழகத்தில் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னையில் உள்ள மதுவிலக்கு, ஆயத்தீர்வை ஆய்வுக் கூடம், தமிழ்நாடு குற்றவியல் கூடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மதுவிலக்கு சம்பந்தப்பட்ட தடையங்களை விரைவாக ஆய்வு செய்யும் பொருட்டு சேலத்தில் இதற்காகவென்று தனியான ஒரு பரிசோதனைக்கூடம் அமைக்கவும், உத்தரவு இடப்பட்டுள்ளது.



# நலம் காக்கும் நல்வாழ்வுத் துறை

**1977-78**-ஆம் ஆண்டில் ரூ. 71 கோடியும் 1978-79ஆம் ஆண்டில் ரூ. 86 கோடியும் (திருத்திய மதிப்பீடு) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுப் பணிக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து ஒவ்வோராண்டும் மக்களுடைய மருத்துவத் தேவைகளை நன்குணர்ந்து அதற்காகப் புதிய புதிய மேம்பாட்டுத் திட்டங்களைத் தீட்டி கூடுதல் தொகை வழங்கிவருவது நன்கு புலனாகும்.

## 1979-80-ஆண்டுக்கான 2 புதிய திட்டங்கள்

என்றுமில்லாத வகையில்1979-80ஆம் ஆண்டு 4.70 கோடி ரூபாய் செலவில் 90 புதிய திட்டங்களை நிறைவேற்றித்தரும் வகையில் வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்திய மருத்துவத்தை வளர்க்க வேண்டும் என்ற ஆவலில், அத்துறையின் வளர்ச்சிக்காக 96 இலட்சம் ரூபாய். மொத்தச் செலவில் 22 புதிய திட்டங்களுக்கு 1979-80-ஆம் ஆண்டு வழிவகை' செய்திருப்பது மற்றொரு சாதனையாகும்.

## கிராமப்புறங்களில் வாழும் ஏழை மக்களுக்கு மருத்துவ வசதி:

மாநிலத்தில் உள்ள கிராமப் பகுதிகளில் உள்ள ஒவ்வொருவரும் நகரப்பகுதியில் உள்ளோர் பெறும் வசதிகளை அடைய வேண்டும் என்பதே இவ்வரசின் இலட்சியமாகும். அதற்காக மாநிலத்தில் உள்ள 383 ஆரம்ப சுகாதார நிலையங்களில், இதுவரையில் 124 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவப் பிரிவுகள் அமைத்தும் இவ்வாண்டு 62 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில் மேலும் 100 நடமாடும் மருத்துவக் குழுக்களை அமைக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறது.

1977-78ஆம் ஆண்டில் 54 சிறு சுகாதார நிலையங்கள் அமைக்கவும், 78-79ஆம் ஆண்டில் மேலும் 50 நிலையங்கள் அமைக்கவும் 79-80ஆம் ஆண்டில் மேலும்கூடுதலாக60சிறுசுகாதார நிலையங்கள் அமைக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்த ஆண்டில் ரூ. 43.75 இலட்சம் செலவில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுவதற்கும் மருத்துவர்களுக்கான வீடுகள் கட்டுவதற்கும் வழிவகை செய்திருக்கிறது..

ஆரம்ப சுகாதார நிலையங்களை நல்ல முறையில் பாதுகாப்பதற்காக அதைச் சுற்றி ரூ. 30 இலட்சம் மொத்தச் செலவில் சுற்றுச் சுவர் எழுப்ப ஆவன செய்திருக்கிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களை யொட்டிய கிளை நிலையங்களில் மருந்துகள் வழங்கப்படுவதற்கு கூடுதலாக 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

மாநில சுகாதாரத்துறை ஊர்திகள் பராமரிப்பு நிறுவன வளர்ச்சிக்காகவும் மேம்பாட்டுக்காகவும் ரூ. 15.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

மூன்று நோய்த் தடுப்பு ஊசித் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தும் நோக்கத்திற்கிணங்க 78-79ஆம் ஆண்டு வரை 110 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிறைவேற்றப்பட்டு வந்த இத் திட்டம், 79-80ல் மேலும் 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு நீட்டிக்க ஏற்பாடு செய்துள்ளது.

பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைத் திட்டம் மொத்தம் 83 சுகாதார நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மாணவர்கள் பயனடையும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

## மருத்துவக் கல்வித்துறை ஆற்றியுள்ள பணிகள்:

சென்னை மருத்துவக் கல்லூரியைச் சார்ந்துள்ள பல்பிரிவினைத் தனக்கெனச் சொந்த நிதி ஒதுக்கீட்டுடன் கூடிய தனிக் கல்லூரியாக மாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் மருத்துவக் கல்லூரிகளிலும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் பணியாற்றும் பல் மருத்துவர்களைக் கொண்டு ஊரகப் பல் சிகிச்சை முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்திய மருத்துவ மன்றம் மற்றும் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகங்கள் இசைவு பெற்ற பின்னர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிகளில் 1979-80ல் சில குறிப்பிட்ட சிறப்புப் பிரிவுகளில் பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டயத் தகுதி படிப்புகளை துவக்கக்

கருதப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள 6 செவிலியர் பயிற்சி நிலையங்களில் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை 300லிருந்து 350 ஆகவும், வருங்காலத் தேவைகளை நிறைவு செய்ய ஆண்டொன்றுக்கு 120 கூடுதல் செவிலியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் செவிலியர்களின் தற்காலப் பற்றாக் குறையை நீக்குவதற்காகத் திருச்சிராப்பள்ளியிலும் சேலத்திலும் செவிலியர் பள்ளிகளைத் திறப்பதற்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

வளர்ந்து வரும் மருத்துவத்துறையில் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர்களின் இன்றியமையாத் தேவையை உணர்ந்து, பயிற்சி பெற்று வருகின்றவர்களுடைய எண்ணிக்கையைத் தேவைக்கேற்ப பெறுவதற்கான அளவில் எண்ணிக்கையை 120லிருந்து 240க்கு இரட்டிப்பாக்கவும், இராமநாதபுரம், நாகப்பட்டிணம், கடலூர், நாகர்கோவில், ஈரோடு ஆகிய இடங்களில் துணைச் செவிலியர் மற்றும் மகப்பேறு உதவியாளர் பயிற்சி நிலையங்கள் திறக்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

நீண்டகாலமாகத் தமிழகத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கண் பார்வை வரைவியலாளர் படிப்பினை மீண்டும் சென்னை அரசு கண் மருத்துவ மனையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மருந்தாக்கியல் சட்டம் 1948 இன் கீழ் 1981ஆம் ஆண்டிற்குள் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்களை மட்டுமே வேலைக்கு அமர்த்தும் நிலை அவசியமாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் 1978-79ல் இப் பயிற்சிக்கான இடங்களின் எண்ணிக்கை 121லிருந்து 150 ஆக உயர்த்தியும், 79-80ஆம் ஆண்டிலிருந்து திருச்சிராப்பள்ளி அரசு தலைமையிட மருத்து மனையில் மருந்தாக்கியல் பட்டயத் நகுதிப் பயிற்சியைத் துவக்கவும் வழிவகை செய்யப்புட்டிருக்கிறது.

சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் பொது மருத்துவ மனையைச் சார்ந்த எல்லாத் துறைகளையும் உயர்நிலைத் துறைகளாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகள்

1977-78-ல் 13,507 ஆக இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 78-79ல் 13,800 ஆக உயர்ந்துள்ளது.

9 மருத்துவ மனைகளில் மருத்துவ ஆவணத்துறையை அமைத்தும், மேலும் 8 மருத்துவ மனைகளில் ஏற்படுத்தவும்ஆவன செய்யப்பட்டுள்ளது.

செயற்கை உறுப்புகள் நிலையத்தை கே. கே. நகர் மருத்துவமனையில் ரூ. 14 இலட்சம் செலவில் தேவையான பணியாளர்களை நியமிக்கவும் கருவிகள் வாங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை பொது மருத்துவமனையிலுள்ள பல மாடிக் கட்டிடத்தைப் பயன்படுத்தும் வகையில் ரூ. 13 இலட்சம் செலவில் பணியாளர்கள் நியமனம் கருவிகள் வாங்குதல் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் உள்ள பல் மருத்துவ சிகிச்சைப் பிரிவிற்கும் முடநீக்கியல் மருத்துவச் சிகிச்சைப் பிரிவிற்கும் ரூ. 16 இலட்சம் செலவில் கட்டடங்கள் கட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளிப் பகுதிக்கு மேல் ரூ.8 இலட்சம் செலவில் கட்டடம் கட்டவும், ரூ. 2.35 இலட்சம் செலவில் 28 படுக்கைகள் கொண்ட பெண்கள் சிகிச்சைக்கான கட்டடம் கட்டவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள அரசு கண்நோய் மருத்துவமனையில் ரூ. 11.63 இலட்சம் செலவில் 146 கூடுதல் படுக்கைகளுக்காகப் பணியாளர் நியமனம் கருவிகள் வாங்குதல் ஆகியவற்றிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தண்டையார்பேட்டை, அண்ணாநகரில் உள்ள புறநகர் மருத்துவ மனைகளில் ரூ.33.78 இலட்சம் செலவில் பணியாளர் நியமனம் கருவிகள் வாங்குதல் ஆகியவற்றிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கிராமப்பகுதிகளில் விபத்திற்குள்ளானவர்களுக்கு உடனடியாகவும் பயனுள்ளதாகவும் சிகிச்சையளிப்பதற்காக முதலுதவி மற்றும் புத்துயிர் கொடுக்கும் கருவியுடன் கூடிய அரசு மருத்துவ ஊர்திகள்(ஆம்புலன்ஸ்) முதல் கட்டமாக மதுரை திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய 4 மாவட்டங்களில் ரூ. 118.32 இலட்சம் மொத்த செலவில் ஏற்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது.

### மருத்துவக் கருவிகள்

ஒவ்வோராண்டும் பல்வேறு மருத்துவமனைகளுக்கு புதிய கருவிகளைத் தொடர்ச்சியாக வாங்கும் இவ்வரசு 1978-79ஆம் ஆண்டில் ரூ. 27.79 இலட்சம் மதிப்பில் நவீன மருத்துவக் கருவிகளை வாங்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மருத்துவமனைகளின் இன்றியமையாப் பணிகளைப் பராமரிக்க மின் ஆக்கிகள் அத்தியாவசியமானதாகையால் ரூ. 20 இலட்சம் மொத்தச் செலவில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், சென்னை குழந்தை நல நிறுவனத்திற்கும், திருச்சிராப்பள்ளி மற்றும் நாகபட்டினத்தில் உள்ள தலைமையிட மருத்துவமனைகளுக்கும் மின் உற்பத்திக் கருவிகள் இவ்வாண்டு வழங்க ஆவன செய்திருக்கிறது.



சென்னை பொது மருத்துவ மனையிலுள்ள நரம்பியல் துறையில் ரூ. 40 இலட்சம் செலவில் மனித மூளையிலுள்ள நரம்புகளில் ஏற்படும் கோளாறுகளை உடனுக்குடன் படம் பிடித்துக் காட்டி தகுந்த சிகிச்சை அளிக்க உதவும் நவீன ஊடுருவிக் கருவி ஒன்று வாங்க ஆணை பிறப்பித்திருப்பது அதுவும் ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் அதிகம் வரும் சென்னை அரசு மருத்துவமனையில் பொருத்த முயற்சித்திருப்பது இந்தியத் துணைக்கண்டத்திலேயே முதன்மையானதாக அமைய இருக்கும் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

### மருத்துவப் பணிகள் மற்றும் குடும்பநலத்துறை

மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்டத் தலைமையிடமில்லாத மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் 1977-78ல் 12,713 ஆக இருந்த படுக்கைகளின் எண்ணிக்கை 78-79ல் 13,218 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

சேலம், ஈரோடு, திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய நான்கு மாவட்டத் தலைமையிட மருத்துவம்னைகளில் மருத்துவ ஆவணத் துறையை ஏற்படுத்த ஆவன செய்யப்பட்டுள்ளது.

பத்து பெரும் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் மற்றும் சென்னை நகரிலும் செயல்பட்டு வரும் அரசு ஊழியர்களுக்கான மருந்தகங்களை மேலும் விரிவாக்கும் நோக்குடன் இந்த நிதியாண்டில் ரூ. 6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, வட்டத்தலைமையிட மருத்துவமனை, வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகள், மருந்தகங்கள் ஆகியவைகளில் மருத்துவ மேம்பாட்டினை ஏற்படுத்தக் கருதி இதுவரையில் பல புதிய கட்டடம் மற்றும் மருந்தகம் திறப்பதற்கான திட்டங்களுக்கு ஆணை வழங்கியும், இந்த ஆண்டிற்கு 12 புதிய திட்டங்களுக்கான வழிவகை செய்தும் இருக்கிறது.

மக்கள் உயிர் காக்கத் தேவையான மருத்துவக் கருவிகளை வாங்க ஆணை வழங்கியும் மாநிலத்தின் ஐந்து மருத்துவ மனைகளில் எக்ஸ்-கதிர் சாதனங்கள் வாங்க ஆணையும்பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் இயங்கிவரும் 43 இரத்த சேமிப்பு வங்கிகளோடு மேலும் 10 இடங்களில் இரத்த சேமிப்பு வங்கிகள் ஏற்படுத்தவும் இருக்கும் 88 பல் மருத்துவப் பிரிவுகளோடு மேலும் 5 இடங்களில் புதிதாகப் பல் மருத்துவ சிகிச்சை பிரிவுகளை ஏற்படுத்தவும் 10 முடநீக்கியல் மருத்துவச் சிகிச்சை பிரிவுகளோடு மேலும் ஓரிடத்தில் புதிதாக முடநீக்கியல் மருத்துவ சிகிச்சை ஏற்படுத்தவும்,12 காது, மூக்கு, தொண்டை மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளோடு மேலும் இரு இடங்களில் காது, மூக்கு தொண்டை மருத்துவ சிகிச்சை ஏற்படுத்தவும், 18 பால்வினை நோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளோடு மேலும் 5 இடங்களில் புதிதாக பால்வினை நோய் சிகிச்சை மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தவும், 14 கண் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளோடு இரண்டு இடங்களில் புதிதாகக் கண் மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தவும், 14 சிசுநோய் மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளோடு 5 இடங்களில் புதிதாகச் சிசுநோய் மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தவும் வழிவகை செய்திருப்பது, சிறப்புத் துறைகளை ஏற்படுத்துவதில் அரசின் ஆர்வம் தெளிவாகப் புரியும்.

### குடும்பநலத் திட்டம்

தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் செயல்படத் தொடங்கிய நாள் முதல் எவ்விதக் கட்டாயமோ அல்லது நிர்பந்தமோ இன்றி செயற்படுத்தப்பட்டு வருகிறது. குடும்பநலத் திட்டம் தாய்சேய் நலத்திட்டத்தோடு இணைக்கப்பட்டு செம்மையாகச் செயல்படுவதை பாராட்டி தேசிய விருதுகளைக் கூட பெற்றுள்ளது.

### 1978-79-ஆம் ஆண்டில் அறுவைச் சிகிச்சைத் திட்டச் சாதனை

குடும்பநலத் திட்டம் செயல்படத் தொடங்கிய நாள் முதல் 31—3—79 ஆம் நாள் வரை 30,05,194 கருத்தடை அறுவைகள் செய்யப்பட்டுள்ளன. அவைகளில் ஆண் அறுவை சிகிச்சை



எண்ணிக்கை 22,17,235. பெண் அறுவை சிகிச்சை எண்ணிக்கை 7,87,959. 1978-79ஆம் ஆண்டில் மட்டும் நிர்ணயிக்கப்பட்ட 2,76,700 கருத்தடை அறுவை சிகிச்சைகளுக்கு 2,22,355 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன. அவைகளில் ஆண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 88,936 பேர். பெண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் எண்ணிக்கை 1,33,419 பேர்கள். இதன் மூலம் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள மாநிலங்களிலேயே தமிழ்நாடு தான் முதலாவதாக இடம் வகிக்கும் பெருமை அடைகிறது.

### இந்திய முறை மருத்துவம்

சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறை மருத்துவமனையை விரிவாக்கும் நோக்குடன், 9.12 இலட்ச ரூபாய் செலவில் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்த முனைந்திருப்பது தற்போது இயங்கி வருகின்ற 73 சித்தமருத்துவப் பிரிவுகளோடு மேலும் 15 அரசினர் மருத்துவ மனைகளில் ரூ. 4.65 இலட்சம் மொத்தச் செலவில் தொடங்க வழிவகை செய்துள்ள ரூ. 6.70 இலட்சம் செலவில் இராமநாதபுரம் தர்மபுரி ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளில் சித்த மருத்துவ முறைக்கென்று 15 படுக்கை வசதிகள் கொண்ட தனிக் கட்டடம் கட்டுவதற்கும் சிதம்பரத்தில் நகராட்சி மன்ற பழைய மருத்துவமனைக் கட்டடத்தில் சித்த மருத்துவத்தில் தொக்கன முறையையும் ஆயுர்வேதத்தில் நவரக்கிளி முறையையும் பெருமளவு பயன்படுத்தும் மருத்துவமனை துவக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ரூ 2.99 இலட்சம் மொத்தச் செலவில் புதிதாக 20 கிராம மருந்தகங்கள் தொடங்கப்பட உள்ளன.

# துயர் துடைத்த அரசு



நவம்பர் திங்கள் என்றாலே தமிழகத்தைப் பொறுத்தவரையில் மக்கள் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருக்கிற நிலைக்கு இயற்கையின் சீற்றம் ஆளாக்கிவிடுகிறது.

கடந்த 1977-78ஆம் ஆண்டுகளிலும் இதே நவம்பர் திங்களில்தான் வெள்ளமும் புயலும் தமிழக மக்களைச் சோதனைக் கடலில் மூழ்கித் தவிக்க வைத்தது.

இதுபோன்ற இயற்கையின் சீற்றத்தையும் - எதிர் பாராத சோதனைகளையும் - வேதனைகளையும் இடையூறுகளையும் ஏழை - எளிய மக்கள் நல்வாழ்வில் அக்கறை கொண்டுள்ள அரசு திறமையுடனும், உடனடியாகவும் சமாளித்து பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைத்தது.

அரசு எடுத்த முன் எச்சரிக்கையின் விளைவாக உயிர்ச்சேதங்கள் பெருமளவுக்கு ஏற்படாத அளவுக்கு, தடுக்க-தவிர்க்க முடிந்தது. மக்கள் பெருத்த பாதிப்பிற்கு ஆளாகாதவர்களாகஇருக்க மிக நெருக்கடியான பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியில், இந்தப் பிரசனையைத் தமிழக அரசு உரிய நேரத்தில், தலையிட்டு உடனடியாக உதவி நிவாரணங்களைச் செய்து,வெற்றிகரமாகச் சமாளித்து, மக்களை இந்தக் கோரப்பிடியிலிருந்து மீட்டுத்தந்தது.

இந்த ஆண்டு நவம்பர் மாதமும் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பெருமழை பெய்தது.

கட்லோரத் தமிழகப் பகுதி மட்டுமின்றி மதுரை, முகவை, நெல்லை,கோவை,நீலகிரி மாவட்டங்களிலும் பலத்தமழை. எங்கும் வெள்ளக்காடு. ஏரிகள்-குளங்கள் கண்மாய்கள் நிரம்பி வழிந்தன. ஆறுகளிலோ கேட்கவே வேண்டாம். அவ்வளவு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

அணைகள் அத்தனையும் நிரம்பின.

எண்ணற்றோர் இன்னலுக்கு ஆளாகினர்.

நிலச்சரிவு, வீடுகள்,குடிசைகள் நீரில் மூழ்குதல், வெள்ளத்தால் பயிர்கள் பாதிப்பு, சாலைகள் உடைப்பு, ஏரிக்கரைகளில் சேதம் பல இடங்களில் உயிர்ச்சேதம்.





புயலால் - பெருமழையால் - வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படலாம் என்று தமிழக அரசின் அதிகாரிகள் முன்னதாகவே வானொலி - தினசரி செய்தித் தாள்கள்-மற்றும் 'தண்டோரா' மூலம் எச்சரிக்கையும் செய்தார்கள்.

துயர் தணிப்புப் பணிகளில் ஈடுபட அனைத்து அரசுத்துறைகளும் தயார்நிலையில் இருந்தன.

பல்வேறு பணிகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு வெள்ளப் பாதிப்புப் பகுதிகளில் துயர்தணிப்புப் புணிகளை மேற்பார்வையிடவும்,முடுக்கிவிடவும், பாதிக்கப்கப்பட்ட மக்களுக்கு நேரில் ஆறுதல் கூறவும் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும் உடனடியாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைந்தனர்.

அரசு இயந்திரம் போர்க்கால அடிப்படையில் பணியாற்றுகிற வகையில் உடனடியாக முடுக்கிவிடப்பட்டது. போர்க்கால முனைப்போடு பணியாற்றிச் சேதங்களைத் தவிர்த்து உதவிகளை வழங்கினர்.

பொதுவாக, மழை பற்றாக்குறைப் பகுதிகளான மதுரை, நெல்லை, முகவை மாவட்டங்களில் கூட வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. கடந்த 50 ஆண்டுகளில் இதுபோன்ற மழை இருந்ததில்லை என்று கூறுமளவிற்கு மழை மிகுதியாகவும் கடுமையாகவும் இருந்தது.

## முதல்வர் விரைந்தார்

வெள்ளச் செய்தி என்பதைத் கேள்விப்பட்ட உடனேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோவை நகருக்குப்பயணமானார்கள். கோவை நகரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப்பார்த்து நிவாரணப் பணிகள் எப்படி நடக்கின்றன என்பதைப் பார்வையிட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர்கள் திரு அரங்கநாயகம், திரு. குழந்தைவேலு, திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் ஆகியோரும் வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட்டனர்.

கோவை நகர் மட்டுமல்லாது கோவையைச் சுற்றிலுமுள்ள பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறினார்கள். முதல்வர் அவர்கள் சேற்றிலும் சகதியிலும் நடந்து போய் வெள்ளத்தால் தவிப்போருக்கு ஆறுதல் கூறினார்கள். அமைச்சர்களும் ஆறுதல் கூறினார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேட்டி, சேலைகள் அவர்கள் வழங்கினார்கள். வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் திருஎஸ்.பி. அம்புரோஸ்,கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும், பொது நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் அரசுத் துறை அதிகாரிகளும் வெள்ளச் சேதப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்து நிவாரண நடவடிக்கைகளை எடுத்தனர்.

## நீலகிரியில் நிலச்சரிவு

நீலகிரி மாவட்டத்தில் குன்னூர் பகுதியிலும் மற்ற பகுதிகளிலும் ஏற்பட்ட நிலச்சரிவு சேத விவரங்களை முதல்வர் அவர்கள் அறிந்து துரித நடவடிக்கைகளை எடுக்கச் செய்தார்கள்.

## கூடல்மாநகரில்

மதுரை மாவட்டம் முழுவதும் வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தால் மூழ்கியது போல் காட்சி அளித்தது. மதுரையில் உள்ள எல்லா ஏரிகளிலும் வெள்ளத்தினால் கண்மாய்களில் உடைப்பு ஏற்பட்டு பல கிராமங்கள் தண்ணீரில் மூழ்கின. அந்தக் கிராமங்கள் வெள்ளத்தில் மிதந்தன என்றுகூடச் சொல்லும் அளவுக்கு இயற்கையின் சீற்றம் இருந்தது. சோழவந்தான் பகுதி கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

மழை மிகுதியால் பல்லாயிரக் கணக்கான குடிசைகள் அடியோடு அழிந்துபோயின. இந்தப் பகுதிகளில் எந்தவிதமான போக்குவரத்தும் இல்லாமல் இருந்தன. இதனால் இப்பகுதி மக்கள் தங்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வீடுகளின் கூரை மீது ஏறி நிற்கவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.



இவர்களை உடனடியாகக் காப்பாற்ற தமிழக அரசு ராணுவத்திடமிருந்து 3 ஹெலிகாப்டர்களைத் தருவித்திருந்தது. அதே போல ராணுவ வீரர்கள்மிதவைப் படகுகள் உயிர்க்காப்புச் சாதனங்களுடன் மதுரையில் மீட்புப் பணிகளில் இறங்கினார்கள். கூரைமீது இருந்தவர்களைத் தூக்கி பாதுகாப்பான இடத்தில் கொண்டு சேர்த்தனர்.

மதுரை மாநகரிலும் முகவை மாவட்டம் திருப்புவனம், பரமக்குடி உள்பட பல்வேறு இடங்களிலும் வெள்ளத்தினால் மூழ்கியுள்ள கிராம மக்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் காளிமுத்து மற்றும் இரு மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஹெலிகாப்டரில் சென்று உணவுப் பொட்டலங்(பன்-பிஸ்கட்-ரொட்டி) களையும் விநியோகித்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் தாழ்வாக ஹெலிகாப்டரை பறக்கச் செய்து பாத்தனர்.

## போர்க்கால நடவடிக்கை

சேதப் பகுதிகளுக்குச் சென்று திரும்பிய மாண்புமிகு முதல்வர் உயர் அதிகாரிகளை அழைத்து நிவாரணப் பணிகளை முடுக்கி விட்டார். தங்குதடை எதுவுமின்றி மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

மதுரைப் பகுதியில் தொடர்ந்து பெய்த மழையினால் மதுரை-இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள நிலங்கள் எல்லாம் கடல் போல் காட்சி அளித்தன. முன் எச்சரிக்கை மூலமாக உயிர்ச்சேதம் எதுவுமில்லாமல் தடுக்க முடிந்தது. ஏரிகளில் ஏற்பட்ட உடைப்புகள் அடைக்கப்பட்டன. விருதுநகர்-ராஜபாளையம், திருவாடானை வட்டாரங்களிலும் ஏரிகளில் உடைப்பு ஏற்பட்டது. அவைகளும் உடனடியாக அடைக்கப்பட்டன.

## அரசு உடனடி உதவி

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, மண்ணெண்ணெய், தங்குமிடவசதி மற்றும் லட்சக்கணக்கான ரூபாயும் அரசுச் சார்பில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மழையில் முழுவதும் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு 100 ரூபாயும், ஒரு பகுதி சேதம் அடைந்தால் 50 ரூபாயும் மானியமாகக் கொடுக்கப்படுவதற்கான உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறப்பித்தார்கள்.

மதுரை மாவட்டம் வைகைக் கரைப் பகுதியில் குடியிருந்து வந்த 6,000 குடும்பங்கள் மிகவும பத்திரமாக அரசு அறிவித்த வெள்ள அபாயத்தைக் கேட்டு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டன.

## மீட்புப் பணிகள் தீவிரம்

மதுரை- இராமநாதபுரம் மாவட்டத்தில் மீட்புப் பணிகளில் பல ராணுவப் படகுகள் இறங்கின. வெள்ளத்தினால வீடுகளின் கூரைகள்மீது இருந்தவர்களைக் காப்பாற்றுவது மிகவும் சிரமமாக இருந்தது. அப்படியிருந்தும் ஹெலிகாப்டர் விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்பட்டு அவர்களைக் காப்பாற்ற விமானமும் மீட்புப் படகுகளும் தீவிரமாக வேலை செய்தன.



வீடுவாசல், உடைமைகளை இழந்து தவித்த மக்கள் நிவாரண முகாம்களில் அடைக்கலம் புகுந்தனர். இவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு அதிகாரிகள் உடனிருந்து செய்து வந்தனர்.

மதுரைக்கு மேற்கேயுள்ள 'மாடக்குளம்' கண்மாய் உடைப்பு மதுரை மக்களையே பீதியடையச் செய்துவிட்டது. இந்தக் கண்மாய் உடைப்பினால் சேதம் இல்லை என்றாலும் திடீர்நகர், மத்தியப் பேருந்து நிலையம், மதுரைக் கல்லூரி, தமிழ்நாடு பாலிடெக்னிக் கல்லூரி, பழங்காநத்தம், அழகப்பன்நகர், ஜெய்ஹிந்துபுரம் ஆகிய இடங்கள் கண்மாய் உடைப்பினால் தண்ணீரில் மூழ்கின.

இங்குள்ள மக்கள் அருகிலுள்ள மாநகராட்சி - தனியார் பள்ளிகளில் தங்கச் செய்து பாதுகாக்கப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் எல்லா வசதிகளும் உடனுக்குடன் செய்து கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து தண்ணீர் நிற்கும் பகுதிக்குச் சென்று பார்த்தார். மதுரை மத்திய பேருந்து நிலையத்திற்குள் சென்று பார்த்து பேருந்துப் போக்குவரத்திற்கு மாற்று ஏற்பாடுகளைச் செய்தார்.

மாண்புமிகு அமைச்சர் திரு ராஜாமுகமது, மாண்புமிகு அமைச்சர் திரு சவுந்தரராஜன் மற்றும் மதுரை மேயர், மாநகராட்சி அலுவலர்கள் வெள்ளப் பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டனர். மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

## 40 ஆண்டு வரலாற்றில் இல்லாத வெள்ளம்

40 ஆண்டுக்கால வரலாற்றில் இல்லாத அளவுக்கு மதுரை மாவட்டம் பெரியகுளம் 'வராக நதி'யில் பெருமழை - வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பல நூற்றுக்கணக்கான குடிசைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு உடனடியாக அனைத்து உதவிகளையும் செய்தது.

மதுரை மாநகரில் மழையால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்ட மக்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நேரில் சந்தித்து, சரியாக உணவு கிடைக்கிறதா என்று, கேட்டறிந்தார். உடனுக்குடன் உணவு கிடைக்கவும் முதல்வர் உத்தரவு போட்டார்.

திருமங்கலம் பகுதியில் பெருமழையால் ஏற்பட்ட பாதிப்பிற்குள்ளான மக்களுக்கு நிவாரண உதவிகள் அளிக்குமாறு அதிகாரிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் செல்வி பி.டி. சரஸ்வதி உத்தரவிட்டார். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அமைச்சர், மக்களிடம் குறைகளைக் கேட்டு அதனைப் போக்கினார். கண்மாய் உடைப்புப் பகுதிகளுக்குச்சென்று பார்வையிட்டுத் தடுப்பு நடவடிக்கைகளை எடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## நெல்லைச் சீமையில்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெல்லை மாவட்டத்தில் வெள்ளச் சேதப் பகுதிகளுக்குச் சென்றார்கள். அவர் ஹெலிகாப்டர் மூலம் சென்று, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார். பல இடங்களுக்குச் சகதியிலும், முட்டு அளவு தண்ணீரிலும் நடந்துபோய் மக்களிடம் நேரடியாகத் தொடர்புகொண்டு ஆறுதல் கூறினார்.

வங்கக் கடலில் இலங்கை அருகே மையம் கொண்டிருந்த புயல் காற்றுச் சின்னம் மேலும் மேலும் வலுவடைந்து நெல்லை மாவட்டம் தூத்துக்குடி கரையை நெருங்கித் தாக்கியது.

முன் எச்சரிக்கையால் பெரும் சேதங்கள் நிகழா வண்ணம்



தடுப்பு நடவடிக்கையை அரசு மேற்கொண்டது.

நெல்லை மாவட்டத்தில் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளைக் கவனிப்பதற்காக மாண்புமிகு அமைச்சர்கள் திரு எட்மண்ட், திரு ராகவானந்தம் திரு குழந்தைவேலு நெல்லைப் பகுதிக்கு விரைந்து வந்தனர். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிகாரிகளுடன் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

அப்பகுதிவாழ் மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கடலோரப்பகுதிகளில் காவல் துறையினரின் பாதுகாப்பும் போடப்பட்டது.

நெல்லை மாவட்டத்திலுள்ள பாபநாசம், மணி முத்தாறு அணைகள் நிரம்பிவிட்டன. மணிமுத்தாறு அணை 115 அடி தண்ணீர் நிரம்பிவிட்டதால் அணையைத் திறக்க நேரும்பொழுது அந்த அணைத் தண்ணீர் திறந்துவிடுவதின் மூலம் பல கிராமங்களே மூழ்கிவிடும் நிலை ஏற்படும் என்று மக்களுக்கு அரசு எச்சரிக்கை கொடுத்தது. அதனால் அந்தக் கிராமங்களிலுள்ள மக்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர். நெல்லை மாவட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் மழையால் பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்கு அரிசியும், உதவித்தொகையும் அரசு சார்பில் அளித்தார்.

## மற்ற மாவட்டங்கள்

திருச்சி, புதுக்கோட்டை மாவட்டத்திலும் தஞ்சை மாவட்டத்திலும் தொடர்ந்து பெய்த மழையினால் இம்மாவட்டங்களில் பல இடங்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்கள் தண்ணீரில் மூழ்கின. இந்தப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான குடிசைகள் தண்ணீரில் மூழ்கி அழிந்தன. திருச்சியில் தொடர்ந்து பெய்த மழையினால் காவேரி நதியின் தண்ணீரைக்கொள்ளிடத்திற்குத் திருப்பிவிடப்பட்டது.

மழையின் காரணமாகத். தமிழ் நாட்டில் பல மாவட்டங்களி



லுள்ள ஏரி, குளம், கண்மாய்களில் தண்ணீர் நிரம்பி வந்தது. இவை தண்ணீர் மட்டத்தைத் தாண்டாமல் இருக்க, கரைகளை வலுப்படுத்தி ஆவன செய்யப்பட்டு வருகிறது.

இதனால் உயிர்ச்சேதம் ஏற்படாமல் இருக்க தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டு அவர்கள் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து இருக்கிற தகவலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.



### சென்னையையும் விட்டு வைக்கவில்லை

சென்னை நகர மக்களைச் சென்ற ஆண்டு பயமுறுத்திய புயல்-மழை இந்தத் தடவை அவ்வளவு வேகத்தை-சீற்றத்தைக் காட்டவில்லை எனினும் புயல் வருமோ, வெள்ளம் வருமோ என்ற பீதி நகரமக்கள் மத்தியில் பரவலாக இருக்கத்தான் செய்தது. மிகவும் பீதிக்கு ஆளான கோட்டூர் புரம் பகுதி மக்கள் அரசின் முன் எச்சரிக்கை, தடுப்பு நடவடிக்கை காரணமாக எந்த விதப் பாதிப்பிற்கும் ஆளாகாமல் பாதுகாக்கப்பட்டனர்.

தற்போது ஏற்பட்ட வெள்ளத் துயரங்கள் அடுத்த மழைக்காலத்தில் ஏற்படாதிருக்க நிரந்தர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. குடிசைப் பகுதிகளில் வடிகால் வசதி ஏற்படுத்தப்பட்டது. குடிசை மாற்று வாரியம், குடிநீர் வடிகால் வாரியம், வீட்டு வசதி வாரியம் மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் சென்னை மாநகராட்சி தனியான கவனம் எடுத்துக் கொண்டு சென்னையில் மழையால் பாதிக்கப்படக்கூடிய பகுதிவாழ் மக்களுக்கு உதவி செய்ய முழுமூச்சுடன் முன்னெச்சரிக்கையாகவே பணியில் இறங்கின.

### கோட்டூர்புரம்

அடையாறு, கோட்டூர்புரம் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு இந்த ஆண்டு தவிர்க்கப்பட்டது. இதேபோல வியாசர்பாடி பகுதியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது தவிர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சென்னை மாநகராட்சி பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் திருகாளிமுத்து அவர்களும் மாநகராட்சி அதிகாரிகளும் சென்று அவர்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினார்கள்.

வெள்ளக் கொடுமை காரணமாகக் கொடூரமான நோய் எதுவும் மக்களுக்கு வந்துவிடக் கூடாது என்பதில் அரசு அதிக அக்கறைகாட்டி, நோய் தடுக்க தமிழ்நாடு முழுவதும் 5 இலட்சம் பேருக்கு காலரா தடுப்பூசி போடப்பட்டது.



### வெள்ளச்சேதம் பலகோடியைத் தாண்டும்

தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளச்சேதம் பல கோடி ரூபாயைத் தாண்டும் என்று வெள்ளப் பகுதிகளை நேரில் பார்த்து திரும்பிய மாண்புமிகு முதல்வர் ஒரு பேட்டியில் கூறினார்கள். இதே கருத்தை மாண்புமிகு நிதியமைச்சர் நாஞ்சில் மனோகரன் அவர்களும், இந்தியத் தலைமை அமைச்சர் மாண்புமிகு சரண்சிங் அவர்களிடம் நேரில் டெல்லிக்குச் சென்று தெரிவித்துள்ளார்கள்.

தமிழ்நாட்டில் பெரு மழை வெள்ள கொடூரத்துற்கு ஆளான கோவை, மதுரை, முகவை, நெல்லை மாவட்டங்கள் மட்டுமின்றி தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு, செங்கற்பட்டு, வடஆர்க்காடு, நீலகிரி மற்றும் சேலம், தர்மபுரி, சென்னை ஆகிய மாவட்டங்களிலும் மழை மிகுதியால் பலவகையில் பாதிப்பு நடந்திருக்கின்றன. அத்தகைய இடங்களுக்கும் அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

### சேதங்களும் நிவாரணங்களும்

தமிழ்நாட்டில் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களும் அதற்குத் தமிழக அரசு எடுத்த துரித நடவடிக்கையின் விவரங்களும் வருமாறு:

1,51,323 குடிசைகள் சேதமடைந்தன. சேதமடைந்த வீடுகளுக்கு 50 சதவிகித மானியமும் 50 சதவிகிதம் கடனாகவும் அரசு கொடுக்கிறது. 15,19,84,000 ரூபாய் குடிசைக்கும் வீடுகளுக்கும் வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

மீனவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்பட்ட 20,000 ரூபாய் மதிப்புக்கு யந்திர படகுகளும் செங்கல்பட்டு மாவட்டத்திலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 18,300 ரூபாய் மதிப்புக்கு யந்திரப் படகுகளும் சேதம் அடைந்தன. இதே போலத் தஞ்சாவூர் மாவட்டத்தில் 8,800 ரூபாய் மதிப்புக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ. 2,000 மதிப்புக்கும் பெரியார் மாவட்டத்தில் ரூ. 750 மதிப்புக்கும் கட்டு மரங்கள் இழப்பு ஏற்பட்டது. மீனளத் துறைஉடனடியாகஇந்தமாவட்ட மீனவர்களுக்கு ரூ. 29,020 மதிப்புள்ள வலைகள் வழங்க உத்தேசித்துள்ளது.

தமிழ்நாட்டில் 1,161 குளங்கள், 178 அணைக்கட்டுகள். 1610 கால்வாய்கள் சேதம் அடைந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இவைகளைச் செப்பனிட்டு சீர்படுத்த ரூ. 537.00 இலட்சம் செலவழிக்க வேண்டியுள்ளது.

சேதமடைந்துள்ள அரசுத் துறைக்குச் சொந்தமான சாலைகளுக்காக 1550.50 இலட்ச ரூபாயும், ஊராட்சி - ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்காக 1028.00 இலட்சம் ரூபாயும் வனத்துறை சாலைகளுக்காக ரூ. 5.00 இலட்ச ரூபாயும் ஆகமொத்தம் 2583.50 இலட்சம் ரூபாய் செலவிட வேண்டியுள்ளது. மேலும் பொதுப் பணித்துறையின் பராமரிப்பில் உள்ள 1,644 கட்டடங்களும் பாதிக்கப்பட்டன. இவைகளைச் செப்பனிட ரூபாய் 2,34,60,700 தேவைப்படும்.

சேதமடைந்த ஊராட்சி கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், அரசுக் கட்டடங்களுக்காக 81.71 இலட்சம் ரூபாய் செலவிட வேண்டியுள்ளது.

### வெள்ளச் சேதங்களைத் தடுக்க அரசின் நிரந்தர நிவாரணத் திட்டங்கள்

பெருமழை வெள்ளம் போன்ற இயற்கை உற்பாதங்களால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து நிரந்தர நிவாரணம் அளிக்கும் பல அம்சத் திட்டத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மதுரையில் செய்தியாளர்களிடையே வெளியிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அறிவித்த நிவாரணத் திட்டங்களுக்கு இணங்க 'அரசு ஆணைகள்' பிறப்பிக்கப்படும்.



வெள்ளத்தினால் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ள இடங்களுக்கு செய்தி - போக்குவரத்து சாலை வசதிகள், மற்றவசதிகளை ஏற்படுத்துவதே நிவாரணப் பணிகளில் முதல் நடவடிக்கையாகும்.

பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உணவு, உடை, தங்குமிடம் மருத்துவ வசதி ஆகியவற்றை நிவாரணக்குழு உடனடியாகச் செய்யும்.

நெசவாளர்கள், தொழிலாளர்கள், கைவினைத் தொழிலாளர்கள் வெள்ளத்தினால் தங்களுடைய தொழிற்கருவிகள் இழந்து இருப்பார்களேயானால் ஆதாரத்துடன் மனுச்செய்தால் பாதித்தொகை மானியமாகவும் பாதித்தொகை கடனாகவும் வழங்கப்படும்.

அரசாங்க உயர் அதிகாரிகள் உள்ளடக்கிய வெள்ள நிவாரணக் குழு 'போர்க்கால முனைப்போடு' சீரமைப்பு வேலைகளை மேற்கொள்ளும்.

அதிக வளைவாக இருக்கும் பாதைகள் நேர்ப்பாதைகளாக மாற்றி அமைக்கப்படும். அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் மேட்டுப்பாங்கான இடத்தில் குடியமர்த்தப்படுவார்கள்.

தீயினாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.200 ரூ. 100, ரூ. 50 என்ற அடிப்படையில் முன்பு உதவி அளிக்கப்பட்டு வந்தது.

இனிமேல், வீடு இழந்த குடும்பத்தில் உள்ளவர்களின் உழைப்பைப் பெற்று பாதி மானியமாகவும், பாதி கடனாகவும் வழங்கி மேட்டுப்பாங்கான இடத்தில் அவர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கப்படும். கடனை ரூபாய் பத்து வீதம் தவணைகளில் திருப்பிச் செலுத்தினால்போதும்.

ஏரி, குளம் ஆற்றுப் படுக்கைகளின் கரைகள் உறுதி உள்ளதாக உயர்த்தப்படும்.

ஆறு, ஏரிக்கரைகளின் மேல் மரங்களை நடுவதால் அவற்றின் அகலம் குறைந்து வெள்ளம் ஏற்பட்டால் உடைப்புகள் எடுத்துக் கொள்வதால் இனி கரைகளில் மரங்கள் நடுவதை அனுமதிப்பதில்லை. எதிர்காலத்தில் வெள்ள அபாயங்களைத் தடுக்க மக்கள் வசிக்கும் இடங்கள் பாதைகள் ஆகியவற்றுக்குச் சேதம் விளைவிக்காத வகையில் ஆற்றின் தண்ணீர் வேறு பக்கம் ஓட வழிவகை செய்யப்படும்.

இப்படிப்பட்ட நெருக்கடி ஏற்படும் காலங்களில் உணவுப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் அவசர கால உதவிக்காக உணவுப் பொருட்கள் சேமிப்பில் இருக்கும் தானியங்கள் கெட்டுப்போகாமல் இருக்க ஆண்டுதோறும் மாற்றப்படும்.

நகரங்களில் குடிசைவீடுகளை இழந்தவர்கள் மீண்டும் வீடு கட்டிக்கொள்ள அவர்களுக்குச் சொந்த இடம் இல்லை என்றால் மேட்டுப்பாங்கான இடத்தில் வீடு கட்டிக் கொடுக்கும்போதே வீட்டு மனைப்பட்டாவும் வழங்கப்படும்.

அந்தப் பகுதிகளில் மக்கள் தொகைக்கு ஏற்ப தொடக்கப் பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவை கட்டப்படும். இந்தப் புதிய குடியிருப்புக்கள் கட்டி முடிக்கப்படும் வரை இப்போது உள்ள இடங்களில் சில திருத்தங்களோடு குடியிருக்க அனுமதி வழங்கப்படும்.

இனி எக்காரணம் கொண்டும் ஏரி, குளம், ஆற்றுப்படுகை போன்ற தாழ்வான இடங்களில் குடிசைவீடுகள் கட்ட அனுமதி கண்டிப்பாக வழங்கப்பட மாட்டாது.

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெள்ள நிவாரணத்திற்காக அடுக்கடுக்கான ஆக்கப்பூர்வ திட்டங்களை அறிவித்துள்ளார். இன்னலுறும் மக்களுக்கு, தாய்ப்பாசத்துடன் விரைந்தோடி வந்து துயர்துடைக்கும் தமிழக அரசின் பணிகள் பாதிக்கப்பட்ட மக்களின் நெஞ்சங்களிலே பால் வார்த்தது போல இருக்கும் என்பது உறுதி.

—ஆனந்தன்

## உங்களுக்குத் தெரியுமா?

சிறு தொழில்கள் துவக்குவதற்கான வழிமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

நீங்கள் துவங்கவிருக்கும் சிறுதொழில் நிர்ணயிக்கப்பட்ட
தொழில் பகுதிகளில் அமைவதோடு

* *பொது சுகாதாரத்தினைப் பாதிக்கக்கூடிய குறிப்பிட்ட*
*14 தொழில்களில் ஒன்றாக இல்லாதிருந்தால்*
*பொதுசுகாதாரத் துறையின்*
*முன் அனுமதி பெறத் தேவையில்லை.*

** *25 பரித்திறனுக்கு மேற்படாத மின் இணைப்பு பெற்றிருந்தால்*
*நகரமைப்புத் துறையின் முன் அனுமதி பெறத் தேவையில்லை.*

** *தொழிற்சாலைகள் சட்டத்திற்கு உட்படாததாக இருந்தால்*
*(அதாவது தொழிலாளர்களின் எண்ணிக்கை மின் சக்தி*
*உபயோகித்தால் 10க்குக் குறைவாகவும்,*
*மின்சக்தி உபயோகிக்காவிடில் 20க்குக் குறைவாகவும்*
*இருத்தல்) தொழிற்சாலைகள்,*
*துறையின் முன் அனுமதி பெறத் தேவையில்லை.*

**தொழிலைத் துவங்குமுன் உள்ளாட்சி மன்றத்தின்**
**ஒப்புதல் மட்டும் பெற்றால் போதுமானதாகும்.**

நீங்கள் துவங்கவிருக்கும் தொழில், குடிசைத் தொழிலாயிருந்து
5 பரித்திறனுக்குத் குறைந்த மின் இணைப்பு கொண்டதாயிருந்தால்,
குடியிருப்புப் பகுதிகளில் கூட துவங்கலாம். இதற்கும்
உள்ளாட்சி மன்றத்தின் ஒப்புதல் மட்டுமே போதுமானதாகும்.
சுகாதாரத்துறையின் ஒப்புதல் தேவையில்லை.

தேவையான இதர விவரங்களுக்கு உங்கள் மாவட்டத்திலுள்ள
தொழில் மையத்தின் பொது மேலாளரை /
தொழில் வணிகத்துறை இயக்குநரை அணுகவும்.

தொழில் வணிகத்துறை இயக்குநர்.

DIPR/54457/79-12


# தொழிலாளர் நலம்

தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்குச் சட்டப்படி கிடைக்கவேண்டிய சலுகைகள் முழுமையாக அவர்கள் பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கவும் அரசு பல சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறது.

தொழிற்சாலைகள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி மற்றும் சுருட்டு தயாரிக்கும் நிறுவனங்கள், கடைகள், நிறுவனங்கள் முதலியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் இதுவரை பணியாற்றிய காலம், அல்லது பெற்ற ஊதியம் பற்றிய எந்தவிதச் சான்றும் அவர்கள் கைவசம் இல்லாமலிருந்தது. அதனால் அவர்களால் சட்டப்படி பெற வேண்டிய சலுகைகளைப் பெற இயலாமல் இருந்தது. இந்த நிலைமையை மாற்றும் வகையில் தமிழக அரசு அந்தத் தொழிலாளர்களுக்கு, மேற்படி நிறுவனங்கள் பணிச்சீட்டு (சர்வீஸ் கார்டு) கட்டாயமாக வழங்கவேண்டும் என்று ஆணையிட்டுள்ளது.

தற்போது 100 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு 1946ஆம் ஆண்டு தொழில் நிறுவன வேலை (நிலை ஆணைகள்) சட்டத்தின் விதித்துறைகளை 50 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு நீட்டிக்க அரசு ஆணைகள் பிறப்பித்தது.

**மாதிரி நிலையாணைகள் நீக்கம்**

தொழிலாளர் ஒருவர் தொடர்ச்சியாக 8 நாட்களுக்கு மேல் வேலைக்கு வராதிருந்தால் அவரை வேலையிலிருந்து நீக்கி விடுவதற்கான மாதிரி நிலையாணைகளில் அல்லது சான்றிட்ட நிலையாணைகளில் உள்ள விதித்துறை நீக்கப்படவேண்டுமென்றும், அவர் வேலைக்கு வராது இருந்த நாட்கள் தவறான நடத்தை என்று மட்டுமே கருதப்பட்டு, தன்னிலை விளக்கம் அளிக்க அவருக்குப் போதிய வாய்ப்பு அளித்த பிறகு விசாரிக்கப்பட வேண்டும் என்பதே அரசின் கருத்தாகும். இக்கருத்துக்குச் செயல்வடிவம் அளிக்கும் வகையில் அரசு மாதிரி நிலையாணைகளைத் திருத்தி வெளியிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பான்மையோர் ஊதியக்கொடைப் பயனைப் பெறும் வண்ணம் ஊதியக் கொடை வழங்குவதைக் கடைகள், நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், சிறுதொழிற்சாலைகள், ஆகியவற்றில் பணி புரியும் தொழிலாளர்களுக்கும், தமிழ்நாடு அரசு நீட்டித்துள்ளது. அதனால் 20 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும், ஆனால் 10 தொழிலாளர்களுக்குக் குறைவாகவும் உள்ள மேற்கூறிய நிறுவனங்களில் உள்ள பணியாளர்கள் ஊதியக்கொடை வழங்கல் சட்டத்தில் வகைசெய்துள்ள பயன்களைத் துய்த்து வருகின்றனர்.

**பீடித் தொழிலாளர்களுக்குச் சலுகை :**

தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர்கள் (பணிநிலைமைகள்) விதிகள் 31(5)ன்கீழ் மேல்முறையீடு செய்பவர் என்ற முறையில், தொழிலாளரில் ஒருவர் தேவையான நகல் முத்திரைத் தாள்களுக்குக் கட்டணம் செலுத்துவதன் பேரிலேயே, மேல்முறையீட்டு அதிகாரியின் ஆணைகளைப் பெற இயலும் முத்திரைத் தாள்களை வழங்கவேண்டும் என்னும் நிபந்தனையிலிருந்து, தொழிலாளர்களுக்கு இருந்த இந்த இடர்ப்பாட்டை அரசு அகற்றியது.

இப்போதுள்ள நிலவரத்தின்படி, தொழிலாளர்கள் ஆணை நகலை இலவசமாகப் பெற இயலும்.

தொழிலாளர் துறை அலுவலர்கள், தொழிலாளர்கள், நீதிமன்றம் அல்லது தொழில் நடுவர் நீதிமன்றங்கள் முன்னிலையில் தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர் சார்பாகத் தொழிலாளர் சங்கங்கள் தாக்கல் செய்யும் மனுக்களில் நீதிமன்றக் கட்டண முத்திரைத் தாள் ஒட்ட வேண்டியதில்லை என்று அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

**உணவகங்கள் சட்டம்**

தொழிலாளர் நலனைக் கருத்திற் கொண்டு அரசு, உணவகங்களில் உள்ள தொழிலாளர்கள் மேல் முறையீடு செய்யும் பொழுது அத்தகைய அலுவலர்களுக்கு, வழக்கில் சம்பந்தப்பட்டவர்களுக்குச் சம்மன் (அழைப்பு ஆணை) அனுப்பிக் கட்டாயமாக வரவழைக்கும் அதிகாரத்தை வழங்கும் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

1948-ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் மாநில அரசு சம்பந்தப்பட்ட அட்டவணையிலுள்ள வேலைகளுக்கும், தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டத்தின் விதிகளை அரசு தற்போது நீட்டித்துள்ளது. இதன் பலனாக, இந்த நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களும் தேசிய பண்டிகை விடுமுறை நாட்களைப் பெற உரிமை பெற்றுள்ளனர்.

**தொழில் உறவு**

தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்வதற்கு உள்ள உரிமையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. அதே சமயத்தில் வேலை நிறுத்தங்கள் அடிக்கடி நிகழ்வதைத் தடுக்க அல்லது அத்தகைய வேலை நிறுத்தங்கள் நீடித்துக் கொண்டே போகும்போது அவற்றிற்கு முடிவுகாண வேண்டி தொழில் தகராறுகளில் தலையிட்டுச் சிறந்த முறையில் இணக்

கம் செய்வதன் மூலமும் சுமுகமாக அவற்றிற்குத் தீர்வு காண்பதன் மூலமும் அரசு உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொண்டது.

தொழிற்சங்க அமைப்பிற்குட்பட்ட பல தொழிலாளிகளின் நலத்தைப் பாதுகாக்க அரசு குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தின் மூலம் அவர்களுக்குப் பின்வரும் நன்மைகளை அளித்துள்ளது:

வேளாண்மை, வேளாண்மைத் துணைத் தொழில் ஆகியவற்றில் ஈடுபட்டோர்களுக்கான குறைந்த அளவு ஊதியத்தை இந்த அரசு உயர்த்தி அமைத்திருக்கிறது. இத்தகைய உயர்வு, வருவாய்த் துறை வாரிய உறுப்பினர் தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 15.9.79 முதல் அமலுக்கு வருவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, களைஎடுத்தல், நாற்று நடுதல் என்ற பணிக்குக் குறைந்த பட்சக் கூலி ரூ. 5-ம், மற்ற பணிகளுக்குக் குறைந்தபட்சக் கூலி ரூ. 7-ம் தன்னுடைய மாட்டைக் கொண்டு உழவுக்கு வரும் தொழிலாளிக்கு நாளொன்றுக்கு ரூ.12-ம் அதிகப்படுத்தப்பட்ட ஊதியம் கிடைக்கும்.

பின்வரும் வேலைகளுக்குக் குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது:

1. ''மார்க்கட்டுகள்'' சந்தைகள் மற்றும் இதுபோன்ற இடங்களில் பாரம் ஏற்றி இறக்கும் தொழில்.
2. மோட்டார் வண்டிப் பட்டரைத் தொழில்.
3. அச்சகத் தொழில்

பின்வரும் வேலைகளுக்குக் குறைந்த பட்ச ஊதியம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது:

1. தீப்பெட்டி, வாணவெடி, உற்பத்தித் தொழில் பணிகள்.
2. செங்கல், ஓடு உற்பத்தித் தொழில் பணிகள்
3. சவ்வரிசித் தொழில் பணிகள்
4. உப்பளத் தொழில் பணிகள்.
5. பொதுப் போக்குவரத்துத் துறைப் பணிகள்.
6. புகையிலை (பீடி உற்பத்தி அடங்கலாக) தொழில் பணிகள்

### தமிழில் பெயர்ப் பலகைகள்

கடைகள், நிறுவனங்கள், உணவு விடுதிகளின் பெயர்ப்பலகைகளைத் தமிழில் எழுதி வைக்க உத்தரவிட்டு சம்பந்தப்பட்ட சட்ட விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

### தொழிலாளர் நலச் சட்டத்திருத்தங்கள்

சட்டத்திலேயே விதித்துறைக்கு வகை செய்து தொழிலாளர்களுக்குப் பயனும் பாதுகாப்பும் அளிக்க உறுதி செய்வதே அரசின் கொள்கையாகும். இதைக் கருத்திற்கொண்டு தற்போதுள்ள தொழிலாளர் நலச் சட்டங்களுக்குத் திருத்தங்களை எடுத்துரைக்கத் தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய முத்தரப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது.

### சிறந்த தொழில் உறவு

இத்திட்டத்தின் கீழ் நிர்வாகத்தினருக்கும், தொழிற்சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகளை வழங்குவதன் மூலம் நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சிறந்த தொழில் உறவைப் பராமரிக்கவும், அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் ஊக்குவிப்பதற்காக 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, சிறந்ததொரு நடவடிக்கை எடுத்தது. பரிசு பெறுவதற்கு உரியோரைத் தேர்ந்தெடுக்க ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் இயங்கிய குழுவின் பரிந்துரைகளை ஏற்று அரசு 1978ஆம் ஆண்டிற்கான பரிசு பெறும் நிர்வாகத்தினரையும், தொழிற்சங்கங்களையும் தேர்ந்தெடுத்துள்ளது.



### தொழிலாளர் நல வாரியத்தின் பணிகள்

இவ்வாரியம் மாமல்லபுரம், குற்றாலம், ஊட்டி ஆகிய இடங்களில் தொழிலாளர்களுக்கு விடுமுறை ஓய்வு இல்லம் நடத்தத் தீர்மானித்துள்ளது. தற்போது ஏர்க்காட்டில் விடுமுறை ஓய்வு இல்லம் நடைபெற்று வருகின்றது. இங்கு ஒரே சமயத்தில் 10 நபர்கள் தங்கலாம். நபர் ஒருவருக்கு ரூ. 1.50 வீதம் இயல்பான வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. பிற இடங்களில் விடுமுறை இல்லங்கள் விரைவில் தொடங்கப்படும்.

### தாம்பரம் காசநோய் மருத்துவமனையில்...

இவ்வாரியம், தாம்பரம் காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்குத் தனியாக 26 படுக்கைகள் கொண்ட காச நோய் வார்டைக் கட்டியுள்ளது.

இவ்வாரியம், பெரம்பூர் (சென்னை) தண்டையார்ப்பேட்டை,(சென்னை) மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு படிப்பகங்களை நடத்தி வருகிறது. வாசகர்களின் பயனுக்காகச் செய்தித்தாள்கள், வார, மாதாந்திர இதழ்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வாரியம் தொழிலாளர்களுக்காக மாவட்ட மண்டல மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசினை அளித்து வருகின்றது.



# கால்நடை வளர்ச்சி

நாட்டின் முன்னேற்றம் கிராமங்களின் முன்னேற்றத்திலேயே சார்ந்துள்ளது என்பதை நன்குணர்ந்த இன்றைய அரசு ஏற்றமிகு சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டு, பல்வேறு வளமான திட்டங்களைத் தீட்டி ஆக்கப் பணிகளில் முனைந்து செயலாற்றி வருகின்றது.

இத்திட்டங்களின் மூலம் முழுப் பலனையும் அடைபவர்கள் சிறு-குறு நில விவசாயிகள், வேளாண் தொழிலாளர்கள் மற்றும் சமுதாயத்தின் நலிந்த பிரிவினர் ஆவர். கடந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் கால்நடை பராமரிப்புத்துறை ஆற்றியஅரும் பணிகளின் சிறப்புக் கூறுபாடுகள் வருமாறு:

### கால்நடை வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள் :

இத்திட்டம் செங்கல்பட்டு, வடஆர்க்காடு, தென்ஆர்க்காடு, சேலம், மதுரை, கோவை, திருநெல்வேலி மாவட்டங்களில் செயல்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்கள் சிறு-குறு நில விவசாயிகள், வேளாண் தொழிலாளர்களாவர். இத்திட்டத்தின்கீழ் ஏற்பட்ட சாதனைகள் வருமாறு:

(அ) 9909 கலப்பினக் கன்றுகளுக்கு மான்யம் வழங்கப்பட்டன.
(ஆ) 5609 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.
(இ) 1570 கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.
(ஈ) ரூ. 162.34 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டது.

### பழங்குடியினரின் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் செயற்படும் மாவட்டங்கள் சேலம், தென்ஆர்க்காடு, வடஆர்க்காடு, திருச்சி தருமபுரி ஆகும். இத்திட்டத்தினரால் பழங்குடியினர் பெரும் பயனடைகின்றனர். கடந்த இரண்டரை ஆண்டில் (அ) பயனடைந்த குடும்பங்கள் 3712.

(ஆ) செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 25.70 இலட்சம்.

தமிழக அரசால் புதியதாகத் துவங்கப்பட்டத் திட்டங்களில் ஒன்று. இது, ரூ. 9.18 இலட்சத்தில் இதுவரை 6 நிலையங்கள் மதுரை, திருநெல்வேலி, வேலூர் ஊட்டி, கடலூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் துவங்கப்பட்டு செவ்வனே பணியாற்றி வருகின்றன.

இராமநாதபுரம், தருமபுரி, சென்னை முதலிய மாவட்டங்கள் தவிர மற்ற 12 மாவட்டங்களில் சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, ரூ.101.87 இலட்சம் செலவில் 18113 சிறுவிவசாயிகள் கறவை மாடுகள், வண்டி மாடுகள், ஆடுகள், பால்குவளைகள் முதலியன பெற்று பயனடைந்துள்ளனர்.

### ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம்

இத் திட்டம், இரண்டரை ஆண்டுக் காலத்தில் மத்திய அரசின் உதவியோடு துவங்கப்பட்ட புதிய திட்டமாகும். ரூ. 163.70 இலட்சம் செலவில் 161 வட்டாரங்களில் பசுமாடுகள் வழங்கப்பட்டதுடன், ஆடு, கோழி வளர்ப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொடைக்கானல் மற்றும் பழனி பகுதியிலுள்ள 1000 கலப்பினக் கன்றுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கடந்த இரண்டரையாண்டு காலத்தில் அவைகளுக்கு ரூ.7.0[illegible] இலட்சம், கன்று மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

உதகமண்டலம் மலைப் பகுதியில் வாழும் குறுநில விவசாயிகள், சிறு விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் இவர்களின் வாழ்க்கை வளம் பெற தமிழக அரசு 6.93 இலட்சம் செலவில் 400 ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைத்து 400 குடும்பங்கள் பயன் அடைய வழிவகை செய்துள்ளது.

மாவட்டக் கால்நடைப் பண்ணையை விரிவுபடுத்த 5.49 இலட்சம் ஒதுக்கியுள்ளது. உதகமண்டலத்தில் கால்நடை புலனாய்வுத் திட்டம் ஒன்றை ரூ. 2.09 இலட்சம் செலவில் ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் தருமபுரி, இராமநாத

# பாசனத் துறையின் பெருமைமிகு பணிகள்



**1978**-79ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட பாசனத்திட்டங்களினால் சுமார் 2,700 எக்டேர் (6,600 ஏக்கர்) புதிய நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும். நடப்பு (1979-80 )நிதி ஆண்டில் சுமார் 5,000 எக்டேர் (12,400 ஏக்கர்) புதிய நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் 6 நீர்த்தேக்கங்கள், ஒரு அணை, 7 கால்வாய்கள் தொடர்புச் சுரங்கங்கள் முதலியன கட்டி முடிக்கப்பட்டுப் பாசனவசதி அளிக்கப்பட்டு வருகிறது. கீழ் நீராறு நீர்த்தேக்கம், குடைவரை வேலைகள் நடைபெற்று வருகின்றன. இவை நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டு மேலும், 6,520 எக்டேர்(16,000 ஏக்கர்) நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்க வகை செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ் பாசன வசதி பெற திட்டமிட்ட பரப்பு இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ஏக்கர் ஆயினும், மற்றும் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பு பாசன நீர் வசதியின்றி உள்ளன. வறட்சியான பகுதிகளிலும், இத்திட்டத்தின் பயன் விரிவாக்கப்பட வேண்டும் என்று கருதி இந்த அரசு இத்திட்டத்தை மேலும் 1.15 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்கு இரண்டு ஆண்டிற்கு ஒரு முறையாவது பாசன வசதி அளிக்கும் வகையில் விரிவாக்க, அங்கீகரித்துள்ளது.

**பெரியாறு — வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் திட்டம்:**

பெரியாறு - வைகை பாசனத்தை நவீனப்படுத்தும் வகையிலும், நிலநீர் உறிஞ்சி வீணாகும் அளவைக் கட்டுப்படுத்தும் வகையிலும் ஒரு புதுமையான திட்டத்தை உலக வங்கியின் உதவியுடன் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 41.04 கோடியாகும். இதனால் 15,950 எக்டேர் (39,420 ஏக்கர்) புதிய நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டத்தை நடப்பு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சாத்தனூர் நீர்த்தேக்கத்தின் கீழ் உள்ள அணைக்கட்டிலிருந்து முன்பு பாசன வசதி அளிக்கப்படாத வலது பக்கத்தில் ஒரு கால்வாய் வெட்டப்பட்டு வருகிறது.

இக்கால்வாய்த் திட்டத்தைப் புன்செய் பாசனத்திற்குப் பயன்படுத்தினால் சுமார் 6,554 எக்டேர் (16,443 ஏக்கர்) நிலங்கள் பயனடையும் என்ற முறையில் மாற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நமக்குக் கிடைக்கும் நீரைக் கூடியவரை அதிக விவசாயிகள் பயன் பெறும் வகையில் புன்செய் பயிர்களுக்காவது பாசன வசதி அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தினைக் கொண்டே இந்த அரசு இம்மாற்றத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் பெண்ணையாற்றின் குறுக்கே கேலவரப்பள்ளி கிராமத்திற்கு அருகில் சுமார் 607 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஓர் அணை கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 1977-ஆம் ஆண்டில் இந்த அரசு ஒப்புதல் அளித்தது. இதனால் 3,237 எக்டேர் (8000 ஏக்கர்) பரப்புள்ள புதிய புன்செய் நிலங்கள் பாசனவசதி பெறும். 386 மில்லியன் கனஅடி கொள்ளளவுள்ள நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு இரண்டு கால்வாய்களும் வெட்டப்படும்.

வறட்சிப் பகுதி நிவாரணத் திட்டத்தின் கீழ், வறட்சியான பகுதியான தர்மபுரி மாவட்டத்தில் ஊத்தங்கரை தாலுக்கா, மரம்பட்டி கிராமத்திற்கு அருகில் பாம்பாற்றின் குறுக்கே 248 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஓர் நீர்த்தேக்கம் கட்டப்பட்டு வருகிறது. இதனால் 1,620 எக்டேர் (4,000 ஏக்கர்) பரப்புள்ள புதிய புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மேலும், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்தே சிறப்புச் சிறுபாசன வேலைகளும் நடந்து வருகின்றன.

கடந்த 1977-78 மற்றும் 1978-79 ஆகிய 2 ஆண்டுகளில் 8,533 எக்டேர் (21,087 ஏக்கர்) புதிய நிலங்களுக்குப் பயனளிக்கும் வகையில் 216 வேலைகள் முடிக்கப்பட்டன. 1978-79ஆம் ஆண்டு முடிய மொத்தம் 17,911 வேலைகள் முடிக்கப்பட்டு 2.13 இலட்சம் எக்டேர் (5.26 இலட்சம் ஏக்கர்) புதிய நிலயங்களுக்குப் பாசனவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் சிறப்புச் சிறுபாசன வேலைகளுக்காக 250 இலட்சம் ரூபாய் இந்த அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

தூர் ஏறிவிட்டதன் காரணமாக பாசன ஏரிகள் கொள்ளளவை இழக்கின்றன. துவக்கத்திலிருந்து 1978-79ஆம் ஆண்டு முடிய மொத்தம் 263 ஏரிகளிலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் 13 ஏரிகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இவ்வேலைக்காக நடப்பு ஆண்டில் இவ்வரசு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாட்டில் 37,000க்கும் மேற்பட்ட ஏரிகளின் மூலம் சுமார் 9.3 இலட்சம் எக்டேர் (22.98 இலட்சம் ஏக்கர்) நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இவற்றுள், 40 எக்டேருக்கு (100 ஏக்கர்) அதிகமாக பாசன வசதியளிப்பவை மட்டுமே தற்போது பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ளது.

1978-79ஆம் ஆண்டு முடிய 3,734 இத்தகைய வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. கடந்த 1977-78 மற்றும் 1978-79ஆகிய இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1,043 வேலைகள் முடிக்கப்பட்டன. நடப்பு ஆண்டில் இவ்வேலைகளுக்காக மொத்தம் 135 இலட்சம் ரூபாய் அரசு ஒதுக்கியுள்ளது.

மேலும், 200 எக்டேரும் (500 ஏக்கர்) அதற்கு அதிகமாகவும் ஆயக்கட்டு கொண்ட சுமார் 500 ஏரிகளை நவீனப்படுத்தவும், அவற்றின் நீரைச் சிக்கனமுறையில் பயன்படுத்தவும் ஒரு பெரிய திட்டம் 192.68 கோடி ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

இருக்கும் நீர்வளத்தைக் கொண்டு நல்லமுறையில் பாசன வசதிகளை இயன்ற அளவு விரிவுபடுத்த இந்த அரசு ஆவன செய்கிறது. இனியும் தொடர்ந்து செய்யும்.

# வேளாண்மை உற்பத்தியில் வியத்தகு பணிகள்



**இ**துவரை எந்த அரசும்-குறிப்பாக எந்த மாநில அரசும் முன்வந்து வேளாண் மக்களின் நீண்டகாலப் பிரச்னைகளை ஆய்ந்து அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளவில்லை. இந்த அரசு அமைத்த உயர்மட்டக் குழுவின் சிபாரிசுகளின் முன் பரிசீலனையில் உடனடியாக விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் அளவு சலுகைகள் அளித்துள்ளது.

**மிகக் குறைவான மின்சாரக் கட்டணம்**

முன்பு யூனிட்டிற்கு 16 காசாக இருந்ததை 14 காசாகக் குறைத்திட்ட அரசு, சிறு உழவர்களுக்கு யூனிட்டிற்கு 12 காசாகவும்,இதர உழவர்களுக்கு 14 காசு என்றும் மாற்றி அமைத்தது. இதனால் ஆண்டிற்கு 6 கோடி ரூபாய் அளவு அரசுக்கு இழப்பு ஏற்பட்டாலும், இந்தச் சலுகை 1.6.1978 முதல் செயலாக்கப்படுகிறது.

மீட்டர் கட்டணம் ரூ5லிருந்து ரூ.4ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் அளவு இழப்பு ஏற்படுகிறது.

**புயலும் நிவாரணமும்**

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் தமிழ்நாட்டு விவசாயிகள் புயலினாலும், வெள்ளத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். எனினும் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குஉடன் எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகளால் அப்பயிர்களுக்கு ஏற்பட்ட கடுமையான சேதமும், உற்பத்தியில் ஏற்படவிருந்த பெருமளவு இழப்பும் தவிர்க்கப்பட்டன. கீழ்க்கண்ட நிவாரண நடவடிக்கைகளை அரசு உடனடியாகச் செயல்படுத்தியது;

**(அ) இலவச விதை விநியோகம்**

தாளடி, சம்பா பயிர் செய்வதற்காகத் தரமான நெல்விதைகள் சிறு உழவர்களுக்கும், குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் 30 இலட்சம் ரூபாய் அளவிற்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**(ஆ) சிறு விவசாயிகளுக்கு மானியம்**

கரும்பு பயிரிட்டிருந்த சிறு உழவர்கள் மற்றும் குத்தகைச் சாகுபடியாளர்களுக்கு ரூ.87,300 மானியமாக வழங்கப்பட்டது.

வாழை சாகுபடியாளர்களில் சிறு உழவர்களுக்கும் மற்றும் குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் ரூ. 5,42,600 மானியமாக வழங்கப்பட்டது.

வெற்றிலை பயிரிட்டிருந்த சிறு உழவர்கள் மற்றும் குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் ரூ. 10,27,000 மானியமாக வழங்கப்பட்டது.

எல்லா பயிர்களுக்கும், எல்லா விவசாயிகளுக்கும் ரூ. 80 இலட்சம் அளவிற்குப் பூச்சி மருந்துகள் 25 சதவிகித மானிய விலையில் வழங்கப்பட்டது.

98,200 தென்னங்கன்றுகள் இலவசமாக சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மண்மேடிட்டுப் போன நிலங்களில் 7,064 எக்டேரில் சிறு உழவர்கள் மற்றும் குத்தகைச் சாகுபடியாளர்களுக்கு இலவசமாகவும், ஏனைய உழவர்களுக்கு 50 சதவிகித மானிய செலவிலும் நிலச் சீர்திருத்தம் செய்யப்பட்டது.

தாளடி, சம்பா பயிர் செய்வதற்காகச் சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ரூ. 2,11,770 பெறுமான தரமான நெல் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட வாழை மற்றும் கரும்பு பயிர்களைப் புதுப்பிக்க சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ரூ. 79,400 உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட வெற்றிலைக் கொடிக்கால்களைப் புதுப்பிக்க சிறுவிவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ரூ. 3,51,370 உதவித் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக சிறு விவசாயிகளுக்கு இலவசமாக 4,017 தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

நீலகிரியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 25 சதவிகித மானிய விலையில் ஏக்கருக்கு ரூ. 250 வீதம் ஒரு நபருக்கு ரூ. 1000 வரை உருளைக் கிழங்கு விதைகள் வழங்கப்பட்டன. இந்த வகையில் ரூ.38,600 மானியமாக வழங்கப்பட்டது.

இலவசமாக ரூ. 54,000 பெறுமான காய்கறி விதைகள் வழங்கப்பட்டன.

மண்மேடிட்ட நிலங்களையும் கிணறுகளையும் சிறுவிவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இலவசமாகவும், மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்திலும் ரூபாய் ஆயிரம் உச்சவரம்பிற்கு உட்பட்டு வேளாண்மைத் துறை மூலம் சீர்திருத்தம் செய்து கொடுக்கப்பட்டது. இந்த வகையில் 35.53 இலட்சம்ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.

**வரிவிலக்கு**

புயல், மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி, நிலத்தீர்வை, இதர நிலவரிகள், இதர நீர்வரிகள், வர்த்தகப் பயிர்கள் வரி ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**கரும்புக்கு அதிக விலை**

மத்திய அரசு கரும்பின் விலையை டன்னுக்கு ரூ. 85ஆக நிர்ணயித்திருந்தாலும், கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் மூலம் டன்னுக்கு ரூ. 100 முதல் ரூ. 125 வரை விவசாயிகளுக்கு விலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

**உற்பத்தியில் உபரி**

இவ்விரு ஆண்டுகளில் விளை பொருட்களின் உற்பத்தியில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1977இல் 62 இலட்சம் டன் அரிசியும், 19 இலட்சம் டன் சிறுதானியங்களும், 3 இலட்

புரம் மாவட்டங்களில் ரூ.62.09 இலட்சம் செலவில் 3990 விவசாயிகளுக்கு மான்யத் தொகை, கறவை மாடுகள் வாங்க ஆட்டுப் பண்ணை பிரிவுகள் அமைக்க, சிறிய கோழிப்பண்ணைகள் அமைக்க அளிக்கப்பட்டது. 2040 விவசாயிகளுக்கு நவீன முறை கால்நடைப் பராமரிப்பில் பயிற்சி அளிக்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்திற்கு 29.76 இலட்சமும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 29.32 இலட்சமும் செலவிட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

ஈச்சங்கோட்டையில் முதன் முறையாக உயர் அயலின கால்நடை பண்ணையொன்று ஏற்படுத்தப்பட்டு, 150 ஜெர்சிகிடாரிகளும், 2 காளைகளும் ஆஸ்திரேலியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு ஈச்சங்கோட்டையில் பராமரிக்கப்படுகின்றன. இதற்காக இதுவரை செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 30.50 இலட்சம் ஆகும்.

இராணிப்பேட்டை தடுப்பூசி மருந்துகள் தயாரிக்கும் நிலையத்தில், முதன்முறையாக கீழ்க்கண்ட புதிய தடுப்பு மருந்துகளை உற்பத்திசெய்து வெளியிட்டு இருப்பது மிகப்பெரிய சாதனைகளில் ஒன்றாகும். 1. வெறிநோய் ஒற்றைத் தடுப்பு மருந்து. 2 புதிய ஆட்டம்மை தடுப்பு மருந்து 3. பி.பி.எல்.ஓ. ஆண்டிஜன்.



### மருத்துவ வசதி

இரண்டரையாண்டு காலத்தில் கீழ்க்கண்ட புதிய மருத்துவ நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. (அ) கால்நடை மருந்தகங்கள் திறக்கப்பட்டவை 30 (ஆ) மருத்துவ மனையாக உயர்த்தப்பட்டவை, 15, (இ) பிரதம மருத்துவ மனையாக உயர்த்தப்பட்டவை, 4.

மிகக் கொடிய நோயான கோமாரியைத் தடுக்கும் பொருட்டு ரூ. 15.83 இலட்சம் செலவில் 2,08,200 கால்நடைகளை பாதுகாக்க மருந்து வாங்கப்பட்டு கோயம்புத்தூர் நீலகிரி மாவட்டங்களில் தடுப்பூசி போடப்படுகின்றன.

கால்நடை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் புதியதாகத் திறக்கப்பட்ட நிலையங்கள் பின்வருமாறு: (அ) கேந்திர கிராம நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டவை,31 (ஆ) தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டவை,1

## நிலவுடைமை மேம்பாட்டுத் திட்டம்

தமிழக அரசு ''நிலவுடமைப் பதிவுருக்களைச் சீர் செய்து இன்றைய நிலைக்குக் கொண்டு வருதல்'' என்ற பயனுள்ள ஒரு திட்டத்தினை 1-6-1979 முதல் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினால்:—

1 விவசாயின் உரிமையையும், நிலத்தின் எல்லைகளையும் நிர்ணயித்து அதை அவருக்கு உடைமையாக்குதல்,
2 நிலச் சீர்திருத்தச் சட்டங்களை செவ்வனே செயல்படுத்த உதவுதல்.
3 பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு ஆதாரமாக புள்ளி விவரங்களை அளித்தல்,
4 விவசாய வளர்ச்சிக்கும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும் துணை செய்தல்,
5 கூட்டுறவு நிலவள வங்கிகளாலும், அரசினராலும் வழங்கப்படுகிற கடன்களைப் பெற வாய்ப்பளிப்பதுடன் அவற்றை உரியவர்களிடமிருந்து திரும்பப் பெறவும் வழிவகை செய்தல்,
6 கிராமப்புற பகுதிகளில் சீரான நில வருவாய்ப் பணிகளை அமுல் செய்யவும் நிலத்தாவாக்களை எளிதில், விரைவில் முடிப்பதற்கும் வழிசெய்தல்.
7 நிலவரி, விவசாய வருமான வரி போன்ற வரிகளை, உரியவர்கள் திட்டவட்டமாக அறிந்து செலுத்த வழி செய்தல்.

போன்ற அனுகூலங்கள் ஏற்படுகின்றன.

இத்திட்டம் சமீபத்தில் நில அளவை செய்து முடிக்கப்பட்ட இடங்கள், சென்னை, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற பன்னிரண்டு மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இம் மாவட்டங்களில் கூட, சமீபத்தில் மறு நில அளவை செய்து முடிக்கப்பட்ட வட்டங்களும் தீவிர உட்பிரிவு திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட நிலப்பரப்பும், சேலம் மற்றும் தென்னார்க்காடுமாவட்டங்களில் தற்போது அளந்து முடிக்கப்பட்ட கல்ராயன்மலைப் பகுதிகளும் அடங்கா. எனவே, இப்பன்னிரண்டு மாவட்டங்களிலும் சுமார் 30,000 சதுர மைல் அளவில் இத்திட்டம் அய்ந்தாண்டுகளில் செயல் படுத்தப்படும். முதலாவதாக பன்னிரண்டு மாவட்டங்களிலும், இருபத்தியெட்டு அலகுகள் அதாவது யூனிட்டுகள் பணிபுரியும். இத்திட்டத்தால் அரசுக்கு கூடுதலாக ரூ. 1.48 கோடி அய்ந்தாண்டு காலத்தில் செலவாகும். இத்திட்டம் 1.6.1979 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



## பெருகிடும் மீன்வளம்

நேரமான மீன் குஞ்சு உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1977ல் 12 தூண்டுதல் முறை மீன் குஞ்சுகள் உற்பத்தி நிலையங்கள் இருந்தன. 1979ல் புதிதாக 2 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 3 இடங்களில் இந்நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கண்ணாடி ஜாடிகளில் (Glass Jar hatchery) குஞ்சுபொரிக்க வைப்பதற்கான நிலையமொன்று பவானிசாகரில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

### மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை

தனியார்களும் மீனவர்களும் உள்நாட்டு மீன் வளர்ப்பிலும் நவீன மீன் வளர்ப்புத் தொழில் நுட்ப முறைகளிலும் ஆர்வம் கொள்ள வேண்டி 1976ல் தஞ்சாவூர் மாவட்டத்திலும், 1978ல் திருச்சிராப்பள்ளி, மதுரை, தர்மபுரி மாவட்டங்களிலும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாதிரி முகமைகள் மற்றைய மாவட்டங்களிலும் அமைக்கப்படவிருக்கின்றன.

மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், உதக மண்டலத்திலுள்ள வில்சன் மீன் பண்ணையில் உள்ள பண்ணைகள் சுமார் 3 இலட்சம் செலவில் விரிவாக்கப்பட்டதுடன் தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி நிலையம் பரிசோதனைச் சாலை மற்றும் பண்டக சாலை முதலியன கட்டி முடிக்கப்பட்டன. மேலும் ரூ. 1.78 இலட்சம் செலவில் மீன் காட்சிச் சாலை ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது.

### இறால் வளர்ப்பு

சென்னை அடையாறு மீன் துறை உவர் நீர்ப்பண்ணையில் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொண்டதன் பலனாக, இறால் மீன் வளர்ப்பில் அதிக ஆதாயம் இருப்பது தெரிய வந்தது. செங்கல்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தனியார் பலர் இறால் மீன் வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இத்தகைய ஆர்வம் கொண்டவர் 80 பேர்களுக்கு இறால் வளர்ப்பு குறித்த தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்பட்டது. உவர் நீர் பரப்பில் எல்லாம் இறால் வளர்ப்பை மீனவர் கூட்டுறவுகள் மூலம் மேற்கொள்ள அரசுஆணை பிறப்பித்துள்ளது. இறால் வளர்ப்புப்பற்றி 600 மீனவர் உள்ளிட்ட கிராமப்புற இளைஞர்களுக்கு ரூ. 75 உதவித் தொகையுடன் ஒரு மாதக் காலத் தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படத்துவங்கியுள்ளது.

### மீனவர்களுக்கு உதவி

முன்பு மீன் பிடிக்கும்போது இறந்துவிடும் மீனவரின் குடும்பத்திற்கு ரூ. 1000 கருணை மானியம் வழங்கிவந்தது. 15.7.77க்குப் பிறகு மீன்பிடிக்கும்போது இறக்க நேரிட்ட மீனவரை நம்பி இருந்த குடும்பங்களுக்கு ரூ. 5000 கருணை மானியம் வழங்கப்படுகிறது. இதுவன்றி மற்றும் ரூ. 5000 வரை இறந்துபோன மீனவர் குழந்தைகள் உயர் தொழில் கல்வி பயிலவும் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

### வீட்டு வசதி

எல்லா மீனவர் குடும்பங்களுக்கும் இலவசமாக வீட்டுவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க 1975ம் ஆண்டில் ஒரு திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 1975-76 வரை 182 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. பிறகு இந்நாள் வரை 3619 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது. இது தவிர புயல் பாதுகாப்பு இல்லங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

### மீன் விற்பனைத் திட்டம்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மீன் விற்பனையையும் 17.12.1978 முதற்கொண்டு நடத்திக் கொண்டு வருகிறது. இதன் நோக்கம் ' மக்களுக்குக் குறைந்த விலையில் சுகாதார முறையில் புரதச் சத்து நிறைந்த மீன்களை வழங்குவதாகும்.

சென்னையில் 7 இடங்களில் மீன் விற்பனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. சென்னையில் நடமாடும் ஊர்தி மூலமாகவும் மீன்விற்பனை நடத்தப்பட்டு வருகின்றது. 1978-79ஆம் ஆண்டில் கழகம் சென்னை நகரத்தில் மட்டும் 101 டன் மீன்களை ரூ. 6.36 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

சென்னையைத் தவிர கோவையில் 3 இடங்களிலும் உடுமலைப் பேட்டையிலும், திருநெல்வேலி பேட்டையில் ஓர் அங்காடியும், மதுரை பேச்சியம்மன் படித்துறையில் ஓர் அங்காடியும் இயங்கி வருகின்றன. மேலும்14 மீன்விற்பனைக் கூடங்களை விரைவில் மதுரை, கோவை, திருநெல்வேலி, சென்னை, செங்கல்பட்டு, திருச்சி முதலிய இடங்களில் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### ஆழ் கடல் மீன்பிடிப்புத் திட்டம்

ஆழ்கடலிலும் மற்றும் தூரக் கடலிலும் உள்ள மீன் வளத்தினை வெளிக் கொணர்வதன் பொருட்டு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் சுமார் 80 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இரண்டு 23 மீட்டர் நீளம் கொண்ட ஆழ் கடல் மீன்பிடி நாவாய்களை மெக்ஸிகோ நாட்டிலிருந்து 1978ஆம் ஆண்டு இறக்குமதி செய்தது. தஞ்சை, நெல்லை எனும் பெயர் கொண்ட இவ்விரு நாவாய்களும் 7.3.1978 அன்று சென்னை வந்தடைந்தன.

நாவாய் 'தஞ்சை' 26.5.'78 முதல் மீன்பிடிப்பினை ஆரம்பித்து 26 கடற் பயணங்களையும் 'நெல்லை' 14.4.'78 முதல் மீன்பிடிப்பினை ஆரம்பித்து 30 கடற்பயணங்களையும் 17.10.'79 முடிய மேற்கொண்டுள்ளன. இவ்விரு நாவாய்களின் 56 கடற் பயணங்களின் மூலம் 55 டன் இறால்களும் 89 டன் இதர மீன்களும் பிடிக்கப்பட்டு ரூ. 32,85,491.90 வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

சம் டன் பயறு வகைகளும், 14 இலட்சம் டன் வெல்லமும், 4.04 இலட்சம் பேல் பருத்தியும் 12,29 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

1978-ஆம் ஆண்டு 64 இலட்சம் டன் அரிசியும், 20 இலட்சம் டன் சிறுதானியங்களும், 3.25 இலட்சம் டன்கள் பயறுவகைகளும், 14.07 இலட்சம் டன்கள் எண்ணெய் வித்துக்களும்,19.05 இலட்சம் டன்கள் வெல்லமும், 4.96 இலட்சம் பேல்கள் பருத்தியும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 1976-77இல் ஏக்கருக்குச் சராசரி நெல் உற்பத்தி 1277 கிலோ என்று இருந்தது. 1978-79ஆம் ஆண்டு 1350 கிலோ என்ற அளவிற்கு உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**வேளாண்மைத்துறையும், நீர்ப் பாசனத்துறையும்**

வேளாண்மைத் துறையும், நீர்ப்பாசனத்துறையும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கீழ் செயல்பட்டு வருவதால் தமிழ்நாட்டு விவசாயிகளுக்குக் காலத்தில் தட்டுப்பாடின்றி ஒழுங்காகப் பாசனத்திற்காகத் தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது.

**பயறுவகைகள் விதை உற்பத்தி**

பயறு வகைகளின் விதைகள் உற்பத்தியை அதிகப்படுத்த ஐந்து விதை உற்பத்தி நிலையங்கள் வட ஆர்க்காடு, திருநெல்வேலி, மதுரை, புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் துவக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் உதவியுடன் கோவையில் மேலும் ஒரு விதை உற்பத்தி நிலையம் துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

**தென்னங்கன்றுகள் விநியோகம்:**

ஆண்டுக்கு 12 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகித்து வந்ததை அதிகப்படுத்தி, 1978-79ஆம் ஆண்டில் 14,20,000 தென்னங்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது ஒரு சிறந்த சாதனையாகும்.

தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க கோயம்புத்தூர், கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தென்னை தீவிரவளர்ச்சிச் சாகுபடி திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குட்டை நெட்டை ஒட்டுத் தென்னங்கன்றுகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டையில் ஆண்டுக்கு ஒரு இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இராசயன உர விநியோகம்:**

1976-77ஆம் ஆண்டு 2 இலட்சம் டன் தழைச் சத்தும், 0.45 இலட்சம் டன் மணிச்சத்தும், 0.57 இலட்சம் டன் சாம்பல் சத்தும் தரவல்ல இரசாயன உரங்கள்தான் விநியோகம் செய்யப்பட்டன.

1978-79ஆம் ஆண்டு 2.90 இலட்சம் டன்கள் தழைச்சத்தும் 0.94 இலட்சம் டன்கள் மணிச்சத்தும், 1.07 இலட்சம் டன்கள் சாம்பல் சத்தும் தரவல்ல இரசாயன உரங்கள் விநியோகம் செய்திருப்பது குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

பயிர்ப்பாதுகாப்பு

நெற்பயிரைத் தாக்குகின்ற புகையான், தண்டு துளைப்பான் மற்றும் நிலக்கடலையில் தோன்றும் சிகப்புக் கம்பளிப் புழுவை ஒழிக்க ஒட்டுமொத்த மருந்து தெளிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில் 1977-78இல் நெற்பயிரில் 34,000 எக்டேர் பரப்பிலும், மணிலாவில் 53,000 எக்டேர் பரப்பிலும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3 மானியம் அளிக்கப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

**தோட்டக் கலை வளர்ச்சி**

தோட்டக் கலை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தியை அதிகப்படுத்த தோட்டக்கலை இயக்ககம் ஒன்று தனியே அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

பழ உற்பத்தியை அதிகரிக்கவும், மாதிரி பழப் பண்ணையாக விளங்கவும், புதுக்கோட்டையில் 1000 ஏக்கர் அளவில் ஒரு மாபெரும் பழப் பண்ணை துவக்கப் பட்டுள்ளது.

**விதைச் சான்றிதழ் திட்டம்**

1978-79ஆம் ஆண்டில்4,692 எக்டேரில் நெல்லும், 1.600 எக்டேரில் வீரிய ஒட்டு சிறுதானிய ரகங்களும், 390 எக்டேரில் வீரிய ஒட்டுப் பருத்தி ரகங்களும் சான்றிதழ் விதைத் திட்டத்தின் கீழ் சான்றிதழ் வழங்கப்பட்டன. இதன் மூலம் விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும், இந்த அரசு விதைச் சான்றிதழ் திட்டத்தை ஒரு தனி இயக்கமாகச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து சான்றிதழ் பெற்ற விதைகளை வெளிமாநிலங்களிலுள்ள விவசாயிகள் விரும்பி வாங்குகிறார்கள். இதன் மூலம் தமிழ்நாட்டில் விதை உற்பத்தியை அதிகப்படுத்தவும், விவசாயிகளுக்கு அதிக வேலை வாய்ப்புகள் பெருகவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மைப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு**

சென்ற ஆண்டு வரைவேளாண்மைப் பட்டம் பெற்றவர் அனைவருக்கும் தமிழ்நாடு அரசுவேலை வாய்ப்பு நல்கியுள்ளது. வேளாண்மைப் பட்டதாரிகளில் வேலை இல்லாதவர் இன்று இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஆண்டு முதல் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பு பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 220-லிருந்து 250 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைக் கல்லூரிகளில் நிலமுள்ள விவசாயிகளின் பிள்ளைகளுக்காக இது வரை ஒதுக்கப்பட்ட 12 இடங்களுக்குப் பதிலாக இந்த ஆண்டு 20 இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.



**பெரிய விளக்கப் பண்ணைகள்**

மானாவாரி விவசாய மக்களின் வருமானத்தைப் பெருக்க மண்வளப் பாதுகாப்பு, மற்றும் நீர் பராமரிப்பு முறைகள் 400 எக்டேர் ஒருங்கிணைந்த தளைகளில் புதிய முறையில் முதல் முறையாகச் செயல்படத் தொடங்கியுள்ளது. இந்த விளக்கப் பண்ணைகள் 100க்கும் மேற்பட்ட இடங்களில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# விவசாயிகள்-தொழிலாளர் போராட்டங்களும்அரசின் அணுகுமுறையும்!

இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் - விவசாயிகளுக்குப் பல சலுகைகள் அளித்தும், விவசாய சங்கத்தினர் தங்களது கோரிக்கைகளுக்காக ஏப்ரல் '78ல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின்போது சாலைகளில் போக்குவரத்திற்கு இடையூறாகத் தடைகளை வைத்தும் சிறு சிறு பாலங்களைத் தகர்த்தும், வெடிகளைப் பயன்படுத்தியும் வன்முறையில் ஈடுபட்டனர். பேருந்துகள் எரிக்கப்பட்டன. சமூக விரோதிகள் இந்தப் போராட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு அமைதிக்கு ஊறு விளைவிக்க முயற்சித்தனர். இதனால் உண்டான நட்டங்கள் ஏராளமாகும். மீண்டும் ஜூன் '78ல் அரசு அலுவலகங்கள் முன்பாகப் போராட்டங்கள் நடத்தினர். நகர்ப்புறங்களுக்குக் காய்கறிகள் முதலிய பொருட்கள் கிடைக்கா வண்ணம் தடைசெய்தனர்.

மீண்டும் அவர்கள் 23.4.'79 அன்று போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்போராட்டத்தின் போது திருநெல்வேலி மாவட்டத்தில் மெசியாபுரம் என்ற இடத்தில் ஒரு காவல்துறை துணை ஆய்வாளர் படுகொலை செய்யப்பட்டார். அரசு அதிகாரிகளைத் தாக்கவும்அரசு வாகனங்களுக்குச் சேதம் ஏற்படுத்தவும் விவசாயிகள் தூண்டிவிடப்பட்டனர்.

மேற்கண்ட போராட்டங்களின்போது நாட்டில் சட்டம் ஒழுங்கைக் காக்க அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது.

போராட்டத்தின்போது விவசாயிகள் மீது சாதாரண குற்றங்களுக்காகப் போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெற அரசு ஏப்ரல் '78 மற்றும் ஆகஸ்டு'78ல் ஆணையிட்டுள்ளது.

**தொழில் — தொழிலாளர்**

தமிழ்நாடு, தொழில் அமைதியை நோக்கிப் பீடு நடைபோடுகிறது.

தொழிலாளர்களுக்குப் பயனளிக்கின்ற சட்டங்கள் அனைத்தையும் கண்டிப்பாகச் செயல்படுத்துவதும், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே ஏற்படும் மோதல்களைக் குறைப்பதற்காகத் தொழிலாளர்களின் நிலையைப் பாதுகாக்க சட்டத்தில் வகை செய்வதுமே இவ்வரசின் கொள்கையாகும்.

இதனையே நோக்கமாகக் கொண்டு, தற்போதைய தொழிலாளர் சட்டங்களில் செய்ய வேண்டிய திருத்தங்கள் பற்றி யோசனை தெரிவிப்பதற்காக அரசு, தொழிற்சாலை நிர்வாகம், தொழிற் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் சட்டமன்ற உறுப்பினர்களும் அடங்கிய உயர் அதிகாரக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.அத்தியாவசியத் தொழில்களில் வேலை நிறுத்தங்கள் நடைபெற்றால், அதுபற்றிக் கலந்தாலோசிப்பதற்காகப் பிரபலமான ஏழு தொழிற்சங்கத் தலைவர்கள் அடங்கிய நிலைக் குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது.

போக்குவரத்துத் தொழிலாளர்கள், டி.வி.எஸ்., லட்சுமி மிஷின் ஒர்க்ஸ், சிம்கோ மீட்டர் ஆகிய தொழிலாளர் போராட்டங்களில், அரசு தலையிட்டு அவர்களது போராட்டங்களைச் சுமுகமாகத் தீர்த்து, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் வேண்டிய அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்துக்கொண்டது.

பெரியார் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பிக்கும் வகையில் தொழிலாளர்கள் மீதுள்ள சாதாரண வழக்குகளைத் திரும்பப் பெற அரசு ஆணையிட்டது. இவையனைத்தும் தொழில் வளர்ச்சியிலும் தொழிலாளர் நலனிலும் அரசு கொண்டுள்ள அக்கறைக்குச் சான்றுகளாகும்.

## மழையினால் பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு மானிய உதவி



நவம்பரில் பெய்த கடுமையான மழையாலும், வெள்ளத்தாலும் நெற்பயிர்கள் நாசமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்கு உதவியளிக்க அரசு தீர்மானித்துள்ளது. நெற்பயிர் பாதிப்பினைச் சரி செய்வதற்குத் தேவைப்படும் உரங்களின் செலவில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் மானியம் ஏக்கர் ஒன்றுக்கு அதிக பட்சம் ரூ. 50 - ஆகும். மேலுரம் இடுவதற்கு ஆகும் செலவில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 25க்கு மேற்படாமல், உரங்களின் செலவில் 25 சதவிகிதமும் மானியமாக அளிக்கப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மழையாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ள பகுதிகளிலுள்ள சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் நேரடி ஆய்விற்குப் பின் இந்த உதவிகள் அளிக்கப்படும். இந்த உதவிகள் பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள நட்டத்தின் அளவைப் பொறுத்திருக்கும்.






# தமிழகத்தில் வீட்டு வசதி

கட்டடம் கட்டுவதற்கும், நிலம் மேம்படுத்தும் பணிக்கும் 1977-78, 1978-79 மற்றும் 1979-80 (30.9.79 வரை) ஆண்டுகளில் செலவிட்டத் தொகை முறையே ரூ. 1741, ரூ.2116.16 மற்றும் 723 இலட்சங்களாகும். இது கடந்த 1969-70-ஆம் ஆண்டு செலவிடப்பட்டத் தொகையை விட 300 சதவீதம் அதிகமாகும்.

நிலம் கையகப்படுத்தி மேம்படுத்தும் திட்டத்திற்காக வாரியத்தால் 1977-78ஆம் ஆண்டு ரூ. 346.02 இலட்சங்களும், 1978-79ஆம் ஆண்டு ரூ. 462.49 இலட்சங்களும், 1979-80 ஆம் ஆண்டு 30.9.79 வரை 103.00 இலட்சங்களும் செலவிடப்பட்டுள்ளன.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களின்கீழ் 500 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ. 235 இலட்சம் மதிப்பீட்டில் மறைமலை நகர் என்ற இடத்தில் மேம்படுத்தும் திட்டங்களைத் துவங்கியுள்ளது. சாலை போடுதல், மழை நீர் வடிகால் அமைத்தல், சிறுபாலம் அமைத்தல் போன்ற மேம்படுத்தும் வேலைகளை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது. இந்நகரில் வாரியம் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக 144 குடியிருப்புகள் கட்டி வருகிறது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் 419 ஏக்கர் நிலப்பரப்பில் தீட்டப்பட்டுள்ள மற்றுமொரு மேம்படுத்தும் திட்டம் மணலி என்ற இடத்திலாகும். இவ்விடத்தில் 212 ஏக்கர் நிலப்பரப்பினை மேம்படுத்துவதற்கான திட்ட வேலைகளை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டுள்ளது. மேலும், வாரியத்தால் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காக இந்த இடத்தில் 960 குடியிருப்புகள் கட்டப்பட்டு வீடுகள் முடியும் தருவாயில் உள்ளன.

உலக வங்கி நிதி உதவியுடன் துவக்கப்பட்டுள்ள வேலை மற்றும் மேம்படுத்தும் திட்டம் 1977-78ஆம் ஆண்டுகளில் வீட்டுவசதி வாரியத்தால் எடுக்கப்பட்ட மனை நிறைவு தரும் திட்டங்களில் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் 13,467 மனைகள் அரும்பாக்கம், வில்லிவாக்கம் மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் கிடைக்கும். இவற்றில் 9760 மனைகள் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்காகவும் உள்ளன. அரும்பாக்கத்தில் இத்திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது. வில்லிவாக்கத்திலும், கொடுங்கையூரிலும் இத்திட்டம் துவங்கிச் செயல்பட்டு வருகிறது. மொத்த மதிப்பீடாக ரூ.932.88 இலட்சத் தொகையில் 1977-78 ஆம் ஆண்டு ரூ. 175 இலட்சங்களும், 1978-79ஆம் ஆண்டு ரூ. 206.18 இலட்சங்களும் மற்றும் 1979-80ஆம் ஆண்டு 30.9.79 வரை ரூ. 92.68 இலட்சங்களும் செலவிடப்பட்டுள்ளன.

## குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம்

பெருகிவரும் குடிசைப் பகுதிகளின் பல பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு மாற்றுத் திட்டத்தின் கீழ் குடிசைமாற்று வாரியத்தால் 1977-78. 1978-79 ஆண்டுகளில் 1013 இலட்சம் செலவில் 11,996 வீடுகள் கட்ட திட்டம் தீட்டப்பட்டு, ரூ. 340 இலட்சம் செலவில் 4416 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது ரூ. 667.68 இலட்சம் செலவில் 7658 குடியிருப்புகள் கட்டும் வேலை 26 திட்டப்பகுதிகளில் நடைபெற்று வருகிறது. 1979-80ஆம் ஆண்டிற்கு ரூ. 613.705 இலட்சம் செலவில் 4784 குடியிருப்புகள் 15 பகுதிகளில் புதிதாகக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு நிதி உதவியுடன் அட்கோ (HUDCO) நிறுவனமும், 8776 குடியிருப்புகள் 30 பகுதிகளில் கட்டுவதற்கு ரூ. 674.14 இலட்சம் நிதி உதவியுள்ளது.

## விரைவுபடுத்தப்பட்ட மேம்பாட்டுத் திட்டம்

இந்தத் திட்டம் 1977ஆம் ஆண்டு முதல் தொடங்கி செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் கீழ்க்காணும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன:

1. 10 குடும்பங்களுக்கு ஒரு கழிவுநீர் அறை.
2. 20 குடும்பங்களுக்கு ஒரு குடிநீர்க் குழாய்.
3. குடிநீர்க் குழாய் அமைக்க முடியாத இடத்தில் ஒரு குழாய்க் கிணறு அல்லது ஊர்தி மூலம் குடிநீர்வழங்குதல்.
4. 150லிருந்து 200 குடும்பங்களுக்கு ஒரு மின் விளக்கு





## மதுரை ரேஸ் கோர்ஸ் காலனியில் உருவாகி உள்ள குடியிருப்புகள்.

அல்லது ஒரு ஏககரா பரபபுள்ள குடிசைப் பகுதிக்கு ஒரு மின் விளக்கு.

இத்திட்டத்தின் மூலம் வாரியம் ரூ. 72.43 இலட்சம் செலவில் 125 குடிசைப்பகுதிகளுக்கு 1978-79-ஆம் ஆண்டு வசதி செய்து தந்துள்ளது. மேலும் 30,000 குடும்பங்களுக்கு ரூ.100 இலட்சம் செலவில் 1979-80ஆம் ஆண்டு வசதி செய்து தருவதற்குத் திட்டமிடப்பட்டுத் துரிதமாகச் செயல்பட்டு வருகிறது.

எல்லாக் குடிசைப் பகுதிகளுக்கும் அவர்கள் வாழும் குடிசைப் பகுதி நிலத்தை அவர்களுக்கே சொந்த உரிமை வழங்க பட்டா கொடுக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### தமிழ்நாட்டில் கூட்டுறவு வீட்டு வசதி:

கிராமங்களில் இருக்கும் பொருளாதாரத்தில் நலிவுற்றோர் அதிகமாக வீடுகள் கட்ட முன்வரவேண்டும் என்று கிராமக் கூட்டுறவு வீடுகட்டும் திட்டத்தின் கீழ் அரிஜனங்களுக்கு மானியம் வழங்கப்படுகின்றது. அரிஜனமல்லாதவர்கள் அரிஜனங்கள் அதிகமாக வசிக்கும் இடத்தில் ரூ. 3,000க்கு மேற்படாமல் வீடுகட்ட முன்வந்தால் அவர்களுக்கும் மானியம் வழங்கப்படுகிறது. இநத மானியம் கடன் தொகையில் 20 சதவிகிதம் அல்லது ரூ.600 இதில் எது குறைவோ அத்தொகையை மானியமாக வழங்கப்படும். அரிஜனங்களுக்கு வீடுகட்ட வழங்கப்படும் கடன்களுக்கு வட்டியை அரசே செலுத்த இசைந்துள்ளது. இச்சங்கங்களில் கிறிஸ்தவர்களாக மாறிய அரிஜனங்களுக்கும் மேற்படிச் சலுகைகள் வழங்கப்படும்.

அரிஜனமல்லாதவர் பொருளாதாரத்தில் நலிந்தவர்கள் 9¼ சதவீதம் வட்டி செலுத்தவேண்டும். குறைந்த வருவாய் உள்ளவர்கள் 10¼ சதவிகிதம் வட்டி செலுத்த வேண்டும்.

1979-80-ஆம் ஆண்டிற்குக் கட்டி முடிக்கவேண்டிய வீடுகளின் குறியீட்டை 20,000லிருந்து 30,000 ஆக அரசு உயர்த்தியுள்ளது. 30.9.79வரை 20,810 கடன்கள் வழங்க ரூ. 850.14 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டில் 30,000 வீடுகள் கட்டிமுடிக்க வேண்டிய குறியீட்டை அடைய எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துணி, தானியம் மற்றும் அழுகும் பொருள் தொடர்பான மொத்த வியாபாரிகளை, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள கோயம்பேடு என்ற இடத்தில் மாற்றுவது முக்கியமான திட்டமாகும்.. இதற்காக 230 ஏககா தனியார் நிலத்தை மேறகொள்ளும்பணி, முடிவு பெறும் தருவாயில் உள்ளது.

கோயம்பேடு அங்காடியுடன் ஒரு பேருந்து மற்றும் சுமை வண்டி முனையையும் அமைக்க சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் திட்டமிட்டுள்ளது.

வடக்கு மற்றும் தென் சென்னையில் அலுவலக மையம் நிறுவுதல், பிராட்வே பழ அங்காடியைப் புதுப்பித்தல் ஆகியனவும் விரைவில் நிறைவேற்றப்பட இருக்கும் திட்டங்களாகும்.

பர்மாவிலிருந்து இடம் பெயர்ந்து வந்தோரும், மற்றோரும், வாழும் வியாசர்பாடியில் சில மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புனர் வாழ்வுப்பணி மற்றும் ஐ.டி.ஏ. உதவியின் கீழ் செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தை ஒருங்கிணைந்த நிறைவேற்றும் பொறுப்பை ஓர் ஆட்சிக்குழு கவனித்து வருகின்றது.



**நா**டு நலம் பெற, நன்மை விளைந்திட 1.7.1977 முதல் 15.11.1979 வரை 99 சட்டங்கள் மாநிலச் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்டுள்ளன.

சமூக நீதி தொடர்பான சட்டமியற்றுவதைப் பொறுத்த மட்டில், கடன் தீர்த்தல் நிறுத்திவைப்புச் சட்டம் குறிப்பிடத்தக்கது. ஏழை மக்களிடமிருந்து கடனை வசூலிப்பதை, இந்தச் சட்டங்கள் ஒத்திப் போட்டிருக்கின்றன. முதலில் கடன் வசூலிப்பது 1978 சனவரி 15 ஆம் தேதி வரை ஒத்திவைக்கப்பட்டது. அதன் பிறகு மேலும் ஓர் ஆறுமாத காலத்திற்கு அந்த நிறுத்திவைப்பு நீட்டிக்கப்பட்டது.

அடகுக் கடைக்காரர்கள் தங்களிடம் அடகு வைக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதைத் தடை செய்வதையும் 1978 ஜூலை 15ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது. மேலும் அடகுக் கடைக்காரர்கள் மீட்கப்படாத பொருள்களை விற்பனை செய்வதற்கு விதிக்கப்பட்ட தடையை 15.1.79 வரை நீட்டித்து, அதன் மூலம் அடகு வைத்தவர்களைத் தவணைகளில் தங்கள் கடன்களைத் திரும்பச் செலுத்தித் தங்களது பொருட்களை மீட்க இயலும்படி செய்ய வேண்டும் என்று தமிழக அரசு கருதியதால் 1943 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகுக் கடைக்காரர்கள் சட்டம் அதற்குத் தகுந்தவாறு திருத்தப்பட்டது.

1979-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டமானது கடன்பட்டவர்கள் சிலருக்கு விரிவானமுறையில் நிவாரணம் அளிக்க வகை செய்கிறது.

குத்தகைத் தொகை பாக்கிக்காக, பயிரிடும் வாடகைதாரர்கள் வெளியேற்றப்படுவதிலிருந்து முதலில் 15.1.1979 வரை பாதுகாப்பளிக்கப்பட்டது. அந்தத் தேதிக்குப் பின்னர், குத்தகைத் தொகை பாக்கி வசூலிப்புக்காக ஏராளமான மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்திருக்கும். இதைத் தவிர்ப்பதற்காக, மேற்படி பாதுகாப்பை 15.7.79 வரை நீட்டித்து அரசு மூலம் ஓர் சட்டம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து, பயிரிடும் வாடகைதாரர்களுக்கு 1978 ஜூன் 30ந் தேதி முடிய பசலி ஆண்டுக்கு குத்தகைத் தொகை செலுத்தாமைக்காக, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதிலிருந்து - அதிலிருந்து அல்லது அவர்கள் அதற்காக வெளியேற்றப்படுவதிலிருந்து புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள அத்தகைய பயிரிடும் வாடகைதாரர்களுக்கு முதலில் அளிக்கப்பட்ட பாதுகாப்பானது தற்போது 15.1.1980 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

1978ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்காக நிலத்தைக் கையகப் படுத்துதல் சட்டத்தை அரசு நிறைவேற்றியுள்ளது. திரைப்படத் தொழிலில் உள்ளவர்கள் கேளிக்கை வரியை ஒன்று சேர்த்துக் கட்டும் திட்டத்தைக் கொண்டுவருமாறு அரசைக் கேட்டுக் கொண்டு வந்தனர். இதனைச் செயல்பாட்டுக்குக் கொண்டுவந்து அத்தொழிலை ஊக்குவிக்கும் வகையில் 1978ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைவரி மற்றும் உள்ளாட்சி நிதி (திருத்தச்) சட்டம் கொண்டுவரப் பட்டது.

1976 ஆகஸ்டு 3ந் தேதி அமலுக்கு வந்த தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்ச வரம்பும் ஒழுங்குபடுத்துதலும்) சட்டத்தைச் செயல்படுத்தியதில் பொது மக்களுக்குச் சில இன்னல்கள் ஏற்பட்டுள்ளன என்று தெரியவந்தது. அதை அகற்றும் பொருட்டு அச்சட்டம் நீக்கப்பட்டு கணிசமான மாற்றங்களுடன் தற்போதுள்ள சட்டம் மீண்டும் இயற்றப்பட்டது.

பொறியியல், தொழில் நுட்பவியல் மற்றும் அவற்றையொத்த அறிவியற் கலைகளில் மேற்படிப்பையும் ஆராய்ச்சியையும் வளர்ச்சியுறச் செய்து மேம்பாடுகாணும் நோக்கத்துடனும், மாறி வரும் தேவைகளுக்குகேற்ப கல்விமுறை அமைவதுடன் அவற்றிற்கு ஆதரவாக அது இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்யவும் தமிழ் நாட்டில் தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான தலைமையை நல்கும் மையமொன்றை வளர்க்க வேண்டுமென்பதற்காகவும், மாநிலத்தில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகமொன்றை நிறுவ அரசு தீர்மானித்தது. அதன் விளைவாக 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டம் இயற்றப்பட்டது.

சென்னைப் பல்கலைக் கழகம், மதுரைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் எல்லைக்குட்பட்ட சில கல்லூரிகளுக்குச் சுயாட்சி உரிமை அளிக்கும்வகையிலும் திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

சென்னை, உதகமண்டலம் உள்ளிட்ட இந்தியாவிலுள்ள பல்வேறு நிலையங்களில் நடத்தப்படும் பந்தயங்களுக்கு, பந்தயம் கட்டுபவர்களின் சார்பாக, குதிரைப்பந்தய (டர்ப்) ஏஜன்சிகள், தரகுக்காக குதிரைப் பந்தயம் எதற்கும் சீட்டுகளை வாங்கி வந்தன. இந்தக் குதிரைப் பந்தய (டர்ப்) ஏஜன்சி முறையில், தீய பழக்கங்களும், மோசடியான செயல்களும் காணப்பட்டன. எனவே, பொதுநலனை முன்னிட்டு, இந்த முறையானது, அவசரச் சட்டமொன்றின் மூலமாக ஒழிக்கப்பட்டது.

இவற்றிற்கெல்லாம் மேலாக, மதுவிலக்கைத் தீவிரமாக அமல்படுத்தும் வகையில் திருத்தச் சட்டமொன்று நிறைவேற்றப்பட்டது. மதுவிலக்கைச் செயல்படுத்துவதை ஒரு சவாலாக ஏற்றுக் கொண்டு அதைத் திறம்பட நிறைவேற்றி, இரண்டாண்டுக் காலத்தில் முழு மதுவிலக்கைக் கொண்டுவருவதாக 11.6.1977ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாவது திருத்த) அவசரச் சட்டம் முதலில் பிரகடனம் செய்யப்பட்டு, பின்னர் சட்டமாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளது. கள்ளச் சாராயம் காய்ச்சுவதும், போதையூட்டும் மதுபானச் சரக்குகளை விற்பனை செய்வதும், நாளுக்குநாள் பெருகிக் கொண்டே போவது சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதை உணர்ந்து, அதிலிருந்து சமுதாயத்தை மீட்டு மேம்படச் செய்யும் எண்ணத்துடன், குற்றவாளிகளுக்கு மிகக் கடுமையான தண்டனைகளைப் புகுத்தி இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சமூகப் பொருளாதாரத் துறையில் சட்டமியற்றுவதில் இதை ஒரு மைல் கல் என்று குறிப்பிடலாம்.




# குடிநீர்த் தேவைகள் நிறைவேற அரும் பணிகள்

**1978-79**ஆம் ஆண்டுவரை 2 மாநகராட்சிகளுக்கும், 90 நகராட்சிகளுக்கும் 5 நகராட்சி நகரியங்களுக்கும் 8 பேரூராட்சி நகரியங்களுக்கும் மற்றும் 108 பேரூராட்சிகளுக்கும் ஆக மொத்தம் 213 நகரங்களுக்குக் குடிநீர்த் திட்டம் அமலாக்கப்பட்டுப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டன. இதனால் 105.40 இலட்சம் நகர மக்கள் பயனடைந்துள்ளனர். மொத்த நகர மக்கட் தொகையில் இது 68 விழுக்காடுகளாகும்.

73 நகரங்களில் புதிய குடிநீர்த் திட்டங்கள் செயலிலும், 146 நகரங்களில் குடிநீர்த் திட்டங்கள் ஆய்விலும் தற்போது உள்ளன. வடிகால் திட்டங்களைப் பொறுத்தவரை மொத்தமுள்ள நகர மக்கட் தொகையில் 38 இலட்ச மக்கள் செயலாக்கப்பட்ட திட்டங்களால் பயன் பெற்று வருகின்றனர்.

இது நகர மக்கட் தொகையில் 25 விழுக்காடுகளாகும். மற்றும் 9 நகரங்களில் புதைச் சாக்கடைத் திட்டங்கள் செயலிலும் 29 நகரங்களில் ஆய்விலும் தற்போது உள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தொடங்கிய பின்னர் இதுவரை ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து ரூ. 38.04 கோடிகளும் தமிழக அரசிடமிருந்து ரூ. 17.03 கோடிகளும் கடனாகப் பெறப்பட்டு குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கப்பட்டு பல திட்டங்கள் பயனிலும், பல திட்டங்கள் செயலிலும் உள்ளன. செலவிடப்பட்ட தொகை ரூ. 67.15 கோடிகளாகும்.

நடப்பு ஆண்டில் இதுவரை 12 குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.208.40 இலட்சங்கள் மதிப்பில் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1979-80 ஆண்டுக்குக் குடிநீர் ரூ. வடிகால் திட்டங்களுக்காக 1187.26 இலட்சங்கள் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ரூ. 31 குடிநீர்த் திட்டங்களும் 2 வடிகால் திட்டங்களும் மக்கள் பயனுக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைப்பு நகர முன்னேற்றக் குழுவிடமிருந்தும் கடன்கள் பெறப்பட்டுத் கோவை, மதுரை திருச்சி ஆகிய நகரங்களுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயலில் இருந்து வருகின்றன. ஒரு இலட்சத்துக்கு மேல் மக்கள் தொகையுள்ள ஒன்பது நகரங்களுக்கு வடிகால் திட்டங்களும் உலக வங்கியின் உதவியுடன் அமைக்கப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சாரிபில், நிறைவேற்றப்பட்டுள்ள கிராமக் குடிநீர்த்திட்டங்கள் வருமாறு:

1976-77ல் நிதி ஒதுக்கீடு 300 அரசு ஆணையிட்ட தொகை 1,205.93. ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 8,466. பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 9,470. பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 32.270. செலவிடப்பட்ட தொகை ரூபாய் 388.00 இலட்சம்.

1977-78ல் நிதி ஒதுக்கீடு 400. அரசு ஆணையிட்டதொகை 717.30. ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 3,712. பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 2,888. பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 14,590. செலவிடப்பட்ட தொகை 675.69 இலட்சம்.

1978-79ல் நிதி ஒதுக்கீடு 600. அரசு ஆணையிட்ட தொகை 1316.87. ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 1,921. பயனடைந்த சிற் றூர்களின் எண்ணிக்கை 1,404. பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 7,440. செலவிடப்பட்டதொகை 860.30 இலட்சம்.

1979-80ல் நிதி ஒதுக்கீடு1200. அரசு ஆணையிட்ட தொகை 600. ஆழ்துளைக் கிணறுகளின் எண்ணிக்கை 900. பயனடைந்த சிற்றூர்களின் எண்ணிக்கை 262. பயனடைந்த மக்கள் தொகை இலட்சத்தில் 850. செலவிடப்பட்ட தொகை 317.61 இலட்சம்.

இவ்வாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், குடிநீர்த் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றி வருகின்றது.

# வருவாய்த் துறையின் அரிய பணிகள்!

**1978**-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலச் (உச்சவரம்பு-முறைப்படுத்துதல்) சட்டத்தின்படி 20.10.1979 முடிய தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் 13,957 ஆகும். இதில் 10,257 அறிக்கைகள் உச்ச வரம்பிற் குட்பட்டதாகும். மீதி 3,700 அறிக்கைகள் நடைமுறையில் உள்ளன.

இந்த அறிக்கைகளின்படி 2,579 எக்டேர், 58 ஏர், 92 சதுர மீட்டர் காலி நிலங்கள் உபரியாக உள்ளன. 54 அறிக்கைகளின் பேரில் நடவடிக்கை எடுத்து 35 எக்டேர், 57 சதுர மீட்டர் உபரி காலி நிலங்களைக் கையகப்படுத்தும் பொருட்டு அறிவிப்பு ஒன்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. 5 அறிக்கைகளின் பேரில் 4 எக்டேர், 12 ஏர், 63 சதுர மீட்டர் உபரி காலி நிலங்களை அரசால் கையகப்படுத்தி தமிழ்நாடு அரசிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

### நகர்ப்புற நிலவரி

1966ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலவரிச் சட்டம், தற்போது சென்னை மாநகரம், மதுரை மாநகரம், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி நகரங்கள் மற்றும் சென்னை நகர எல்லையோரப் பகுதி ஆகிய இடங்களில் அமலில் உள்ளது.

1979-80-ஆம் ஆண்டு கேட்புத் தொகை ரூ. 1380.96 இலட்சத்தில் 1979-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ந் தேதி வரை 135.96 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. ரூ.1245.00 இலட்சம் வசூலிக்கப்பட வேண்டியுள்ளது.

### அரசு நிலங்கள் ஒப்படை

நில ஒப்படையில் உள்ள முறைகேடுகளையும், ஒப்படை செய்யப்பட்டபின் ஏற்பட்ட விளைவுகளால் தகுதியற்றவர்களிடம் சென்றடைந்த நிலங்களைக் கண்டுபிடிக்கவும் ஏழைகளும், தகுதியுள்ளவர்களும் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களைப் பெறத் தேவையான நடவடிக்கை எடுக்கவும், இதுவரை கொடுக்கப்பட்ட ஒப்படைகளை மறு ஆய்வு செய்யவேண்டும் என்று அரசு ஆணையிட்டது.

மறு ஆய்வுப் பணிக்காக சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரசின் கொள்கையின்படி விலை மதிப்பீடு செய்யப்படாத நிலம், நேரடி சாகுபடியில் ஈடுபடும் நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகிறது.

கடந்த பத்தாண்டுகளில் ஒப்படை செய்யும் பணியைத் துரிதப்படுத்த அரசு எடுத்துக் கொண்ட தனி முயற்சியின் காரணமாக 1967-68-ஆம் ஆண்டிலிருந்து 31.8.79 முடிய 8,82,555.47 ஏக்கர் பரப்புள்ள அரசு நிலம் 5,12,116 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. ஒப்படை செய்வதற்கு அதிக அளவில் அரசு தரிசு நிலங்கள் கிடைக்கும் மாவட்டங்களில்,ஒப்படை செய்யும் பணியை விரைவுபடுத்த 27 சிறப்புப் பணியாளர் தொகுதிகள் பணியாற்றி வருகின்றன.

தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், ஜாம்பவான்ஓடை கிராமத்தில் முன்னாள் இராணுவத்தினர் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட 74265 ஏக்கர் நிலத்தை அரசு திரும்பப் பெற்று, அந்நிலத்தைச் சங்கத்தின்'உறுப்பினர், நிலமில்லாத ஏழையா என்றும், அவரோ அல்லது அவரது குடும்பத்தினரோ நிலத்தைச் சீர்படுத்தி சாகுபடி செய்தாரா என்றும் விசாரணை செய்து, ஒவ்வொரு உறுப்பினருக்கும் 5 ஏக்கர் வீதம் இனாமாக ஒப்படை செய்யலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

### நிலச் சீர்திருத்தம்

இவ்வரசு பதவியேற்ற பின் 866 அறிக்கைகள் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் சுமார் 30,668 ஏக்கர்களை உபரி நிலமாக அரசுடைமையாக்கி வெளியிடப்பட்டுள்ளன. ஒப்படை செய்யப்பட்ட மொத்த நிலம் 79,906 ஏக்கர்.

| பயன் அடைந்தவர்கள் | மொத்த நபர்கள் | பரப்பு |
|---|---|---|
| ஷெட்யூல் வகுப்பினர் | 17,767 | 24,497 |
| ஷெட்யூல் மலை சாதியினர் | 20 | 9 |
| இதர நபர்கள் | 32,139 | 50,871 |
| | 49,926 | 75,377 |

உபரி நிலம் ஒப்படைபெறும் ஏழை மக்கள் சந்தை விலையைவிட அதிக நிலக்கிரயம் கொடுக்க வேண்டிய நிலையினைத் தவிர்க்க, உபரி நிலங்களுக்கு அளிக்க வேண்டிய தொகை நிலவரி அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டு அதன்படி மிகச்சிறந்த நிலத்துக்கும் தொகை ஏக்கருக்கு ரூ. 3,500-க்கு மேற்படாமலிருக்குமாறு சட்ட விதிகள் 27.10.78 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.



**தக்காவிக் கடன்கள்:**

விவசாயிகளின் பிரச்சனைகளைப் பரிசீலிப்பதற்காக தமிழக அரசினால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவின் அறிக்கையையும், அதன் பல்வேறு பரிந்துரைகளையும் விரிவாகப் பரிசீலித்து, தக்காவிக் கடன்கள் தொடர்பான பரிந்துரைகளை முழுமையாக ஏற்று விவசாயிகளுக்கு நிவாரணங்கள் அளித்து அரசு உத்தரவுகளைப் பிறப்பித்தது. இந்த உத்தரவுகளின்படி 7,48,123 விவசாயிகள் ரூ. 8,43,74,254 தொகை அளவில் பயன் பெறுவார்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. தகுதியுள்ள விவசாயிகளுக்கு இந்தச் சலுகைகள் விரைவில் கிட்டப்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சியாளர்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர். இதுவரை 2,60,859 விவசாயிகளின் நேர்வுகளில் ரூ. 2,23,99,655 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**மறுவாழ்வுத் துறை**

பர்மா, வியட்நாம் ஆகிய நாடுகளினின்றும் தாயகம் திரும்புபவர்களைத் சிரிமாவோ சாஸ்திரி ஒப்பந்தப்படி தாயகம் திரும்பும் சுமார் ஆறு இலட்சம் அகதிகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டு, இவ்வரசு பல்வேறு திட்டங்களை அமல்படுத்திக் கொண்டிருக்கின்றது. இவ்விதமாகக் குடியமர்த்தப்பட்ட பர்மா அகதிக் குடும்பங்கள் 541க்கும், வியட்நாம் அகதிக் குடும்பங்கள் 199 ஆகியவற்றிற்கும் ரூ. 82.88 இலட்சம் மத்திய அரசின் மானியமும், ரூ. 1,517.69 இலட்சம் இவ்வரசின் நிதியினின்றும் செலவிடப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட குறிப்பிடத்தகுந்த திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன:

மண்டபம் முகாமில் ரூ. 88,000 செலவில் மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. நெய்வேலி, மாநிலப் பண்ணையில் இலங்கை அகதிகளுக்காக ரூ. 28,000 செலவில் தனி மருத்துவமனை நிறுவப்பட்டுள்ளது.

தாயகம் திரும்பியோருக்காக ஒரு கிலோ அரிசி 57 காசு விலையில், அகதிகள் கூட்டுறவு வங்கியின் வாயிலாகக் குடியமர்த்தப்பட்டோருக்கு விரிவுபடுத்தப்பட்டன. திட்டங்களில் குடியமர்த்தப்பட்ட ஒவ்வொரு அகதிகள் குடும்பத்திற்கும் தற்காலிகமாகக் குடியிருப்பதற்காக ரூ. 250 மானியமாக வழங்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்காக நீலகிரி மாவட்டத்தில் ஜன்மம் நிலத்தில் 4000 ஏக்கர், தமிழ்நாடு தேயிலைக் கழகத்தின் மூலம் தேயிலை பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை அகதிகள் குழந்தைகள் கல்விச் சலுகைகள் பெற உயர்ந்தபட்ச மாத வருமானம் ரூ. 250லிருந்து ரூ. 400 ஆக உயர்த்த மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

திருச்சி மாவட்டத்தில் கோட்டப்பட்டு என்னும் இடத்தில் ரூ. 26.46 இலட்சம் செலவில் புதிய இடைத்தங்கல் முகாம் நிறுவப்பட்டுள்ளது.

இராணிப்பேட்டையில், தமிழ்நாடு குரோமேட் மற்றும் இரசாயனத் தொழிற்சாலையில் அகதிகளுக்காக வீடு ஒன்றுக்கு ரூ. 5,805 வீதமும், தண்ணீர் வசதிக்காக ரூ. 47,200மாக, ரூ. 9,81,045 செலவில் 159 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, 28.9.78ல் மத்திய வீட்டு வசதி அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது. வியாசர்பாடியில் ரூ.177.63 இலட்சம் செலவில், 3,132 அகதிக் குடும்பங்கட்கு வீடு கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

மத்தியப்பிரதேசத்தில் இயங்கி வந்த கனரகத் தொழில்நுட்பம் மற்றும் ஓட்டுநர் பயிற்சி நிலையம், தமிழ்நாடு, செங்கல்பட்டு, கும்மிடிப்பூண்டி முகாமிற்கு மாற்றப்பட்டு ரூ. 25.41 இலட்சம் செலவில் புதிய நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களால் 29.9.78 அன்று திறந்து வைக்கப்பட்டது.

நெய்வேலி, மாவட்டப் பண்ணைக் கழகத்தில் பணியாற்றும் அகதிகட்கு ரூ. 28.50 இலட்சம் செலவில் 600 வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுவாக, இதுவரை தாயகம் திரும்பியோர்களில் 75 சதவீத்தினருக்கு வணிகக் கடன் அளிக்கப்பட்டும், மற்ற 25 சதவீதத்தினர் இதர திட்டங்களிலும் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

## இராணுவ வீரர்களுக்கு அரசு உதவி!

நாட்டுப் பாதுகாப்பிற்காகப் பாடுபடும் இராணுவ வீரர்களின் குடும்பப் பாதுகாப்பில், தமிழக அரசு கொண்டுள்ள அக்கறை மகத்தானதாகும். படைவீரர்களின் மனைவியரின் பொது நலச் சேவைகளுக்காக ரூபாய் ஒரு இலட்சம் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

கப்பற்படையில் பணிபுரிந்து வருகின்ற, கப்பற்படைப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஊனமுற்றக் குழந்தைகளுக்காகப் பள்ளிகள், தொழிற்பயிற்சி உதவி போன்ற பணி நலத் திட்டங்களுக்காகக் கடற்படையினரால் நிதி திரட்டப்படுகிறது. இந்நிதிக்குக் கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசு ரூ. 10,000 வழங்கியுள்ளது. அதுபோல இவ்வாண்டும் ரூ. 10,000 வழங்கியுள்ளது.

திருச்சிராப்பள்ளியில் உள்ள தமிழ்நாடு பிரதேச இராணுவப் படையின் 117வது காலாட் படைப் பிரிவிற்கு விருது அளித்தல் விழாவின் போது, இப்படைப் பிரிவு இந்தியாவிலேயே சிறந்தது என்னும் கௌரவம் அடைந்ததைப் பாராட்டும் வகையில் தமிழ்நாடு அரசு ரூபாய் ஒரு இலட்சம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.

நீலகிரி மாவட்டம் "மெட்ராஸ் ரெஜிமெண்டல் சென்டர்" இராணுவப் பிரிவில் பணியாற்றும் வீரர்களின் குடும்பத்தினருடைய பொது நலச் சேவைகளுக்காக இவ்வரசாங்கம் ரூபாய் ஒரு இலட்சம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

# தமிழகத்தில் மின்வசதி

சுருளியாறு நீர் மின் திட்டம் (35மெ.வா) ஆகஸ்ட் 1978-ல் துவக்கி வைக்கப்பட்டது. குந்தா நீர் மின் திட்டத்தின் நான்காவது நிலையின் இரண்டாவது மின் பிரிவு (50 மெ.வா) 1978-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் துவக்கி வைக்கப்பட்டது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் முதல் மின் பிரிவு (210 மெ.வா) 1979ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் துவக்கி வைக்கப்பட்டது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது பிரிவு (210 மெ.வா)க்கான அனுமதி மத்திய அரசிடம் இருந்து பெறப்பட்டு இத்திட்டத்திற்கான பணிகள் செப்டம்பர் 1977ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன.

பல்வேறு காரணங்களுக்காக, நிறுத்தி வைக்கப்பட்ட காடம்பாறை நீரேற்று மின் நிலையத்தின் (4 X 100 மெ.வா) பணிகளை ஜனவரி 1978ஆம் ஆண்டு மீண்டும் துவக்க அரசு ஆணையிட்டது. கீழ்மேட்டூர் நீர் மின் திட்டம் (120 மெ.வா) பணிகள் ஆரம்பக் கட்ட நிலையில் உள்ளன. இதற்கான மத்திய அரசின் அனுமதி கிடைக்க மாநில அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

எண்ணூர் அனல் மின் நிலையத்தில் மேற்கொண்ட புனரமைப்புப் பணிகளின் காரணமாக இந்நிலையம் அதிகபட்சமாக 440 மெ.வா. மின் உற்பத்தியை 1978ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் எட்டியது. இந்நிலையத்தின் நிறுவனத்திறன் 450 மெ.வா. என்பது குறிப்பிடத்தக்கது.

மின் உற்பத்தியிலும், தமிழ்நாடு முன்னேறிக் கொண்டு வருகிறது.

ஜூலை 1976-ஜூன் 1977- 815.2 கோடி யூனிட்

ஜூலை 1977-ஜூன் 1978-1006.4 ,,

ஜூலை 1978-ஜூன் 1979- 1041.8 ,,

தமிழகத்தின் உச்ச மின் தேவை 1641 மெ.வா. (1977-78) இல் இருந்து 1779மெ.வா(1978-79ல்) ஆக உயர்ந்தது.

சிறு விவசாயிகளுக்கான மின் கட்டண விகிதம் ஒரு யூனிட்டுக்கு 16 காசிலிருந்து 14 காசாக ஜூலை 1977-இல் குறைக்கப்பட்டது. பின்னர் இவ்விகிதம் 14 காசிலிருந்து 12 காசாக ஜூன் 1978ல் மீண்டும் குறைக்கப்பட்டது. இதனால் சிறு விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை அரசால் நிறைவேற்றப்பட்டது.

ஊரெல்லாம் ஒளிமயமாக ஆக்கிய தமிழக அரசு, வீடெல்லாம் ஒளிமயமாக்க வேண்டும் எனக் கருதிக் குடிசைகளுக்கும் மிகக் குறைந்த கட்டண விகிதத்தில் (மாதம் ரூபாய் 2½ மட்டும்) ஒரு 40 வாட் பல்ப் மின் இணைப்புக் கொடுக்க ஆணையிட்டுள்ளது.

1977 ஜூலைத் திங்கள் முதல் இன்று வரை, மின்வெட்டு எதுவும் அமல் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஆனால் தவிர்க்க முடியாத காரணங்களால் உயர் மின் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மட்டும் உச்ச மின் தேவையில் மின்வெட்டு 1979 மார்ச் முதல் ஜூன் வரை அமலில் இருந்தது).

விவசாயிகளுக்கான மின் இணைப்புக் கொடுப்பதில் முன்னுரிமை அவரவர்கள் விண்ணப்பம் கொடுத்த தேதியின் வரிசைப்படிதான் கொடுக்கப்பட வேண்டும் எனப் புது ஆணையிடப்பட்டுள்ளது. புது மின் இணைப்புக் கொடுக்கும்போது இதுவரை கருத்தில் கொண்ட குறைந்தபட்ச வருமானம் என்கிற விதிமுறை நீக்கப்பட்டுள்ளது. விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கும்போது இதுவரை நில அடி நீர்த்துறையில் இருந்து ஒப்புதல் பெறவேண்டும் என இருந்த விதிமுறையும் நீக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் மின் இணைப்புப் பெறுமுன் ஊராட்சி, நகராட்சி போன்றவற்றில் இருந்து அனுமதி பெறவேண்டும் என இருந்த விதிமுறையும் தற்போது நீக்கப்பட்டுள்ளது. 1979-மார்ச்சில் தமிழகத்தில் உள்ள எல்லா அரிசனக் குடியிருப்புகளுக்கும் (25526) மின் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. வாரிய ஊழியர்கள் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், வாரிய ஊழியர்களின் வாரிசுகளுக்கு வாரியத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

உயர் மின் அழுத்தப் பயனீட்டாளர்களின் மூன்று மாதப் பிணைப்புத் தொகையினை, ஒன்றரை மாதப் பிணைப்புத் தொகையாக வாரியம் குறைத்துள்ளது. இத்திட்டத்தை அமல்படுத்துவதற்காக உயர் மின் அழுத்தப் பயனீட்டாளர்களின் மின் பட்டியல் அனுப்புவதைத் துரிதமாக்கும் புதுமுறையினை, வாரியம் நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.

சிறு தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் கேட்கும்போது, அதே இடத்தில் முன்னால் ஒரு தொழிற்சாலை இருந்து, அந்தத் தொழிலதிபர் மின் கட்டணப் பாக்கியை வாரியத்திற்குக் கொடுக்காமல் இருந்தால், புது மின் இணைப்பு இதுவரை கொடுப்பது இல்லை. இது தொழில் வளர்ச்சிக்குத் தடங்கலாக இருப்பதால், இப்போது வாரியம் புதுமின் இணைப்பை, புதிய தொழில்களுக்குக் கொடுத்துவிட்டு, பழைய பாக்கியைச் சட்ட ரீதியாகப் பழைய தொழிலதிபரிடம் இருந்து வசூல் செய்ய முயற்சி எடுக்கிறது.

அனுமதிக்கப்பட்ட மின் சுமையினைவிட அதிகமாக மின் சுமையை இணைத்திருப்பவர்கள் அவர்களாகவே இதனை மின் வாரியத்திற்குக் குறிப்பிட்ட தேதிக்குள் தெரியப்படுத்தினால், அபராதம் எதுவுமின்றி, இந்த அதிக மின் சுமை, அனுமதிக்கப்பட்ட மின் சுமையாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**வோட்டாவின் சொந்தக்காரர்**
**நதிகளின் சொந்தக்காரர்!**






வோட்டா — நீங்கள் முழுதும் நம்பக்கூடிய பெயர்.
ஏனெனில் உயர்ந்த தரத்தின் மறுபெயரே வோட்டா.
வோட்டா சாதனங்களை உங்களிடம் கொணர்ந்தளிப்போர்
வோல்டாஸ் — விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்குப்
புகழ் பெற்றோர்.

நீங்களும் வோட்டா வாங்கிடுவீர். வேண்டியபோது
நீர்ப்பாசனம் பெற்றிடுவீர்!

***வோல்டாஸ் லிமிடெட்***
ஆக்ரோ இண்டஸ்டிரியல்
புரோடக்ட்ஸ் டிவிஷன்
52, அரண்மனைக்காரத் தெரு
சென்னை 600 001.

வெள்ளி விழா

VT-5210

# அரிசன-பழங்குடி மக்களுக்கு அரசின் உதவிகள்



**1977**-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் புதிய அரசு மலர்ந்த பின், அரிசன மக்கள் - பழங்குடியினர் நலப் பணிகளுக்கான பல்வேறு புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழகத்திலுள்ள அரிசன பழங்குடியினரின் எண்ணிக்கை 76 இலட்சமாகும். இது நமது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 18 சதவிகிதமாகும்.

அரிசன பழங்குடி மக்கள் நலப் பணித் திட்டங்களுக்காக 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 1595.09 இலட்சமும், 1978-79-ஆம் ஆண்டில் ரூ. 1694.46 இலட்சமும், 1979-80-ஆம் ஆண்டில் ரூ. 1941.13 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1976-77-ஆம் ஆண்டு வரையில் 1 முதல் 11-ஆம் வகுப்பு வரையில் படித்த அரிசன பழங்குடி மாணவர்களுக்கும், கிறித்துவர்களாக மதம் மாறிய அரிசன மாணவர்களுக்கும் புத்தகச் செலவுக்கும், சிறப்புக் கட்டணங்களும் படிப்பு உதவித் தொகை பணமாக வழங்கப்பட்டது. இப்படிப்பு உதவித் தொகையை வழங்குவதற்குப் பெற்றோர், காப்பாளரின் ஆண்டு வருமானம் ரூ. 3000 ஆகும். 1977-78-ஆம் ஆண்டில் இருந்து 4 முதல் 10வது வகுப்பு வரையில் படிக்கும் அரிசன பழங்குடி மற்றும் கிறித்துவர்களாக மாறிய அரிசன மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானத்தைக் கருத்திற்கொண்டு பாராமல் எல்லாப் பாடப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. (1 முதல் 3 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கும் கல்வித் துறை இலவசமாகப் புத்தகங்களையும் பலகைகளையும் வழங்குகிறது) சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்கள் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தை வழங்கிவிடுகிறது.





1976-77-ஆம் ஆண்டு வரை மெட்ரிக்குக்குப் பிந்திய வகுப்புகளில் படிக்கும் அரிசன பழங்குடி மாணவர்களுக்கு அவர்களது பெற்றோரின் வருமானம். ரூ2500 வரை இருந்தால் மட்டுமே கட்டணச் சலுகை அளிக்கப்பட்டது. 1977-78-ஆம் ஆண்டில் இருந்து அவர்களது பெற்றோரின் வருவாயைக் கருதிப் பாராமல் படிப்புக் கட்டணச் சலுகை. எல்லா அரிசனப் பழங்குடி மாணவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. அவர்களுக்கு எல்லா நிலைகளிலும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

அரிசன பழங்குடி மாணவர்களுக்கு வழங்கும் இந்திய அரசு படிப்பு உதவித்தொகையில் அடங்கும் பராமரிப்புத் தொகையை. மாணவ விடுதிகளில் உள்ள மருத்துவம், பொறியியல், பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 1978-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1ஆம் நாளிலிருந்து மாதமொன்றுக்கு ரூ. 60 கூடுதலாக வழங்கப்படுகிறது.

**அரிசனங்களுக்கு வீட்டுமனை கையகப்படுத்துதல்**

தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி வீடற்ற அரிசனங்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும் திட்டமானது கடந்த இரண்டரை ஆண்டுகளாகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1977-78-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 63.17இலட்சம் செலவில் 1282.66 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 20,799 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. இவற்றிற்கு முந்தைய ஆண்டுகளில் ரூ. 50 இலட்சத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும் செலவு செய்யப்பட்டது.

1978-79-ம் ஆண்டில் ரூ.111.29 இலட்ச செலவில் 1842.36 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு 31,304 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

1979-80ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஈமக் கடன் செய்ய நிதி உதவி**

அரிசனக் குடும்பங்களில் இறந்துபோகும் நபர்களுக்கு ஈமக் கடன் செய்வதற்கென நபர் ஒன்றுக்கு ரூ. 50 வீதம் நிதி உதவி வழங்கும் புதிய திட்டம் 1978ஆம் ஆண்டு சூலை மாதம் அரசினரால் அனுமதிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

1978-79-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 5309 அரிசனக் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இதற்கான செலவு ரூ. 2,65,400 ஆகும்.

நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ. 5 இலட்சம், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



தற்போதைய அரசு பதவியேற்ற பிறகுதான் அரிசன மக்களுக்கு வியாபாரக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷா, பெட்ரோல் பங்க் வைத்து நடத்துதல் போன்றவைகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. சைக்கிள் ரிக்ஷா விலையில் நபர் ஒன்றுக்கு ரூ. 270 வீதம் 37 நபர்களுக்கு இறுதி நிலை ரொக்கமாக (மார்ஜின் மணி) இந்த அரசு வழங்கியுள்ளது. மோட்டார் பொருத்திய சைக்கிள் ரிக்ஷாவுக்கு ஐந்து நபர்களுக்குத் தலா ரூ. 750 இந்த அரசு வுழங்கியுள்ளது. மீதமுள்ள தொகையை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி வழங்கியுள்ளது. ஒரு நபருக்கு ரூ. 1,300 இறுதி நிலை ரொக்கமாக (மார்ஜின்மணி) ஆட்டோ ரிக்ஷா வாங்குவதற்கு இந்த அரசு வழங்கியுள்ளது. மீதித்தொகையை யுனைடெட் கமர்ஷியல் வங்கி கொடுத்துள்ளது.

பெட்ரோல் வியாபாரத்திற்கான (Petrol Dealership) ஒரு நபருக்கு ரூ. 12,000 இந்த அரசு வழங்கியுள்ளது. இதுவரை13,717 நபர்களுக்கு ரூ. 96.38 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**விவசாயக் கிணறு மான்யம்**

விவசாயக் கிணறு வெட்ட ரூ. 2,500 மான்யமாக வழங்கப்படுகிறது. 1977-78-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 537 அரிசன மக்களும், 47 அரிசன கிறித்தவ மக்களும் பயனடைந்தனர். அதே போல 1978-79ல் 152 அரிசன மக்களும், 15 அரிசன கிறித்தவர் மக்களும் பயனடைந்தனர்.

நடப்பு நிதியாண்டில் அரிசன மற்றும் அரிசன கிருத்துவ விவசாயிகளுக்கு விவசாயக் கிணறு வெட்ட மான்யம் வழங்க ரூ. 6.98 இலட்சமும், உழவு மாடு மான்யம் வழங்க ரூ. 1.52 இலட்சமும் ஒதுக்கப்பட்டுச் செலவு செய்யப்படுகிறது.



**குடிநீர் வசதி**

அரிசன காலனிகளில் குடிதண்ணீர் வசதிக்காகக் கிணறு தோண்டுவதற்கு உச்சவரம்புத் தொகை ரூ. 5,000 லிருந்து ரூபாய் 6,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் அரசு ஒப்புதலின் பேரில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு வந்தன. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எங்கெங்கே நீர்த்தொட்டிகள் அவசியமோ அங்கங்கே கட்ட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் குடிதண்ணீர் வசதியில்லாத காலனிகளில் தண்ணீர் இருந்தும் குடிக்க லாயக்கில்லாத - வசதியற்ற காலனிகளுக்கும் 1978-79ல் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கத் தீவிர திட்டம் வகுக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது

1979-80ஆம் ஆண்டில் சேலம் மாவட்டம் பச்சை மலைக்குன்றுகளில் பெரிய பாக்காளம் கிராமத்தில் அரசு பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளியொன்று திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. 1979-80ஆம் ஆண்டில் ரூ. 0.50 இலட்சம் செலவில் நீலகிரி மாவட்டத்தில் இரண்டு அரசு பழங்குடியினர் நடுத்தரப் பள்ளிகளுக்குப் பயிற்சிக்கூடங்கள் கட்டுவதற்காக அரசு ஆணை பிறப்பித்தது.

## ஆதி ஆந்திரா வகுப்பினருக்கு வீட்டுமனைப் பட்டா

சென்னை நகரில் ஆதி ஆந்திரா வகுப்பினர் சிறுபான்மையினராக சுமார் 4,000 குடும்பங்கள் பல ஆண்டுகளாக வசித்து வருகின்றனர். இவர்கள் அரசுக்குச் சொந்தமான நிலத்திலும், மாநகராட்சியின் நிலத்திலும், மற்றும் கோவில், தனியார் நிலத்திலும் குடிசைகளில் அல்லது தகரக் கூரையினால் ஆன வீடுகளில் வசித்து வருகின்றனர்.

இவர்கள் வசிக்கும் நிலம் அவர்களுக்கே சொந்தம் செய்யவேண்டும் என்ற தமிழக அரசின் திட்டத்திற்கு இணங்க, கடந்த ஆண்டு நவம்பர் திங்களில் சென்னை நேரு அரங்கில் மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களால் 393 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. அதன் பிறகு, 135 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டது. தற்போது 29.11.'79 அன்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் 150 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கினார்கள். ஆக மொத்தம் இதுவரையில் 729 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.



# பெருமைக்குரிய பிற்பட்டோர் நலத்துறை



பரவர், முக்கவர் அல்லது முக்கையர், பர்வதராச குலம் பட்டணவார், செம்படவர், மற்றும் மீனவர் இனத்தைச்சேர்ந்த மீனவ கிருத்துவர்கள் பின் தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். கோயம் புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்திலுள்ள "தாசபளிஞ்சிகா" வகுப்பினரும், நான் குடி வேளாளர் வகுப்பினரும், பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அரசுப் பணியிடங்களிலும் மற்றும் கல்வி நிறுவனங்களிலும் பின்தங்கிய வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு எவருடைய பெற்றோரின் மொத்த ஆண்டு வருமானம் ரூ. 9000-க்கு மிகைபடாது உள்ளதோ மற்றும் ஆணை இணைப்பில் குறிப்பிட்டுள்ள சாதி மற்றும் இனத்தைச் சார்ந்திருக்கிறார்களோ அவர்கள்தாம் சாதி மற்றும் கல்வி நிலையில் பின்தங்கியோர் எனக் கருதப்படுவர் என்று 2.7.'79 நாளிட்ட சமூக நலத்துறை ஆணை எண் 1156ல் ஆணை வெளியிடப்பட்டது.

பிற்பட்டோர் நலத்துறையால் நடத்தப்படும் மேல்நிலை உயர்நிலை மற்றும் இடைநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் சுற்றுலா செல்ல பள்ளி ஒன்றுக்கு ரூ. 500- செலவு செய்ய அரசு அனுமதித்துள்ளது.

இந்த அரசு பதவியேற்றபின் பின்தங்கிய வகுப்பு மாணவர் மாணவியருக்காக 1977-78ஆம் ஆண்டுகளில் 23 விடுதிகளைக் திறந்துள்ளது. 1979-80ஆம் ஆண்டில் புதிதாக மூன்று குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர் விடுதிகளும் 25 பிற்பட்டோர் மாணவர்களுக்கான விடுதிகளும் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. கல்லூரி விடுதி மாணவ மாணவியர்களுக்கு உணவுத் தொகை மாதம் ரூ. 65ஆக இருந்ததை ரூ. 80ஆக உயர்த்தியுள்ளது. இதேபோல் பள்ளி மாணவ, மாணவியர் விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு உணவுத் தொகை ரூ. 40லிருந்து ரூ. 45-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பிற்பட்டோர் நலத்துறையால் நடத்தப்படும் விடுதிகளில் மாணவர், மாணவிகளை அனுமதிப்பதற்காக அவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2000க்கு மேற்படாது இருக்கவேண்டும் என்பதை ரூ. 2500ஆக உயர்த்த ஆணை வெளியிட்டுள்ளது.

மாநிலத்தில் +2 கல்வி முறை அமலாக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேல்நிலைக் கல்வி பயிலும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவ-மாணவியருக்கு மெட்ரிக் படிப்பிற்குப் பிந்திய படிப்புக்கு உரிய உதவித்தொகையினை வழங்கவும், அவர்களை உயர்நிலைப் பள்ளி மாணவ-மாணவியர்களை பிற்பட்டோர் நலத்துறை நடத்தும் விடுதிகளில் சேர்த்துக் கொள்ளவும் அரசு ஆணை வழங்கியுள்ளது.

முந்தைய ஆண்டுகளில் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 2,500க்குக் குறைவாக உள்ள, பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்கப்பட்டது.

1977-78ம் ஆண்டு முதல், பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகையினைப் பணமாக வழங்குவதற்குப் பதிலாக, குறிப்பிட்ட புத்தகங்களை நேரிடையாக வழங்கவும் தனிக் கட்டணங்களை நேரிடையாகக் கல்வி நிலையங்களுக்கு வழங்கவும் பள்ளி இறுதி தேர்வு எழுதும் மாணவர்களுக்குரிய தேர்வுக் கட்டணங்களை அரசுத்தேர்வுகள் இயக்குநருக்கு வழங்கவும் புதிய திட்டம் அமலாக்கப்பட்டது. அரசால் நேரிடையாகச் செலுத்தப்படும் இச்செலவுகள் முன்பு வழங்கப்பட்ட உபகாரச் சம்பளத்திற்கு இணையாக இருக்கும்.



முடி திருத்துவோருக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அவரவர் தொழில்களைச் செய்து வர தொழிற் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவை தவிர, சலவைத் தொழிலாளர்கள் இயங்கும் சலவையகம் நடத்த பாரத ஸ்டேட் பாங்கிலிருந்து கடன் பெறுவதற்காக ஒவ்வொரு நபருக்கும் ரூ. 165 மானியமாக வழங்கவும் ரூ. 1050 மதிப்பளவில் சலவையகம் தொடங்குவதற்கு பாங்கியிலிருந்து கடன் பெற வசதியாக மேற்படி தொகையில் 20 விழுக்காடான ரூ. 210-ஐ மானியமாக வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆணைகள் 1978ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பிறப்பிக்கப்பட்டன.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போயர்களுக்கு இலவச தொழில் கருவிகள் வழங்கும் திட்டம் ஒன்று 1978-79ல் தொடங்கப்பட்டது. ஒரு செட் தொழில் கருவிகளின் விலை ரூ. 100 ஆகும். இத்திட்டம் முதலில் சேலம்,தென்னார்க்காடு, கோவை மதுரை மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் அமல் செய்யப்பட்டது. 1979-80க்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 25,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதால் இத்திட்டத்தை இவ்வாண்டுமுதல் திருநெல்வேலி, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த பெண்களுக்குத் தையல் பயிற்சி அளிப்பதற்காக 1978-79ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட ஐந்து இடங்களிலும் தையல் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டன.

1. கன்னியாகுமரி மாவட்டம்
2. அஜிஸ்நகர் குடியிருப்பு
3. மதுரை மாவட்டம்
4. இராமநாதபுரம் மாவட்டம்
5. திருநெல்வேலி மாவட்டம்



## நான்குடி வெள்ளாளர் பிற்பட்ட வகுப்பார் என அறிவிப்பு

நான்குடி வெள்ளாளர் ஜாதியினைச் சேர்ந்தவர்கள் சமூகத்திலும், கல்வியிலும், பின் நிலையில் இருப்பதால் அவர்களை பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலில் சேர்க்க அரசு ஆணை யிட்டுள்ளது. நீண்ட நாட்களாக 'நான்குடி வெள்ளாளர்' சமூக சங்கங்கள் தங்கள் இனத்தவரை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன. பிற்பட்டோர் வகுப்புப் பட்டியலில் வரிசை எண். 70-ஆ என்ற இடத்தில் இச் சமூகத்தினர் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

உழவுத் தொழிலுக்கு உதவும் ஓர் புதுமைக் கருவி

**'புவனு மினி டில்லர்'**

நவீன விவசாய வளர்ச்சிக்கு ஓர் வரப்பிரசாதமாக அமைந்திருப்பது, நான்கு டிஸ்குகள் இணைக்கப்பட்டுள்ள 'புவனு மினி டில்லர்' கலப்பைகள். நிலத்தில் உழுவதற்கு மிகவும் நேர்த்தியாக அமைந்துள்ளது. எட்டு எருதுகளைப் பூட்டி நான்கு ஆட்களைக் கொண்டு செய்யும் வேலையை ஒரு ஜோடி எருதுகளைக் கொண்டு ஒரே ஆள் சிரமம் இல்லாமல் உட்கார்ந்த வண்ணம் ஒரு ஏக்கர் நிலத்தை 3 மணி நேரத்திற்குள் உழுது பண்படுத்த முடிகிறது. மாடுகளுக்கு எந்தவிதமான சிரமமும் இல்லாமல் சுலபமாக இழுத்துச் செல்கிறது. நஞ்சை, புஞ்சை இருவித விவசாயத்திற்கும் ஏற்ப அமைந்துள்ளது.

விவசாயம் செய்ய 'புவனு மினி டில்லர்' கலப்பை மிகவும் பயன் உள்ளதாக இருக்கிறது. எனது அனுபவத்தில் அனைத்து விவசாயிகளும் மேற்படி கலப்பைகளை வாங்கிப் பயன் அடைய வேண்டும் எனத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்ஙனம்,

எஸ். கோவிந்தராஜ முதலியார்,
48, சுப்பிரமணிய சுவாமி கோயில் தெரு,
செங்கீர்க்குப்பம், பூந்தமல்லி,
சென்னை — 600 056

புவனு

மினிடில்லர்

நான்கு டிஸ்க்குகள் இணைக்கப்பட்டது

நஞ்சை, புஞ்சை இருநில விவசாயத்திற்கும் ஏற்றது. உங்கள் உழவுத் தொழிலை நீங்கள் உட்கார்ந்தபடியே செய்ய உதவும். 30 அங்குல அகலமும் 8 அங்குல ஆழமும் உழக்கூடியது.



விவரங்களுக்கு:

புவனு அக்ரோ சர்வீஸ் கார்ப்பரேஷன்

72, ஆலந்தூர் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை - 600015.

S.R.A.A.

# உயர்ந்தோங்கும் ஊரக வளர்ச்சி

தமிழ்நாட்டில் மொத்தம் 375 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. நிர்வாகச் சீரமைப்பினைக் கருதி, மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியங்களாக இருக்கும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை, திருவரங்குளம், அறந்தாங்கி, ஆவுடையார் கோயில் ஒன்றியங்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள போகலூர் மற்றும் நைனார்கோயில் ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்க அரசு ஆணை பிறப்பித்தது. பெரிய ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கும் அதே நேரத்தில், மாநிலத்தில் உள்ள சிறிய ஊராட்சி ஒன்றியங்களை ஒன்றாகவும் இணைக்க அரசு எண்ணி இருக்கிறது. இதைப் பிறகு அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

**நிர்வாகப் பணியாளர்கள் சீரமைப்பு :**

ஊர் வளர்ச்சி நிர்வாகக் கிளைகளில் பணிபுரியும் தொழில் நுட்பமில்லா இதர பணியாளர்களில் பணி விதிகளைச் சீரடையச் செய்யவும், எல்லா நிலுவைகளிலும் தேக்கத்தைப் போக்கவும், வேலை உயர்வில் அனைவருக்கும் சமவாய்ப்புகள் அளிக்கவும் ''ஒரு பணி விதிகள்'' அமைக்க அரசு முடிவு செய்து தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**விவசாய வளர்ச்சியும், பொருளாதார மேம்பாடும் :**

தற்போது மத்திய அரசின் திட்டங்களாகிய ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டங்களும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டங்களும், வறட்சிப் பகுதி திட்டங்களும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும், குறுநில விவசாயிகளுக்கும் விவசாயத் தொழிலாளர்கட்கும் 33 1/3 சதவிகிதமும் மானியமாக அளிக்கப்படுகின்றன.

ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 161 வட்டாரங்களும், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 166 வட்டாரங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு, திட்டங்கள் செயலாற்றப்பட்டு வருகின்றன.

மொத்தத்தில் இவ்விரண்டு திட்டங்களின் மூலம் சுமார் 7 கோடி ரூபாய் மானியமாக வழங்கி 1,40,000 குடும்பங்களுக்குப் பொருளாதார மேம்பாட்டுக்கான வழிவகைகள் செய்து தரப்பட்டுள்ளன. கிராம மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகக் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளான பாதைகள் அமைத்தல், குடிதண்ணீர் வசதி அமைத்துக் கொடுத்தல் போன்றவைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

**கல்விக் கட்டடங்கள் அமைத்தல் :**

ஒன்றியங்களில் பள்ளிக்கூடங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லாத கிராமங்களின் எண்ணிக்கை 2848. நடப்பாண்டில் 500 பள்ளிக் கட்டடங்கள் கட்ட ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1 கோடி. சொந்தக் கட்டடங்கள் கொண்ட பள்ளிகளின் எண்ணிக்கை 18,939.

ஒன்றியப் பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டுவதற்கு 1975, 1976, 1977-ஆம் ஆண்டுகளில் சுமார் 53 இலட்சம்தான் செலவு செய்யப்பட்டு இருந்தது. இது சென்ற ஆண்டு 85 இலட்சமாகவும், இந்த ஆண்டு ஒரு கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

கிராமங்களில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஹையர் செகண்டரி பள்ளிக்கூடக்





கட்டடங்களுக்கு உதவி செய்திட ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து ரூ. 20,000 வரை வழங்கிட அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறது.

**குடிநீர் வசதியும், வேலைவாய்ப்பும் :**

குடிநீர்த் தட்டுப்பாடுகளைக் களைவதற்கு இவ்வரசு இரண்டாண்டுக் காலக் கட்டத்திற்குள் கட்டி முடித்துள்ள குடிநீர்த் தேக்க கட்டடங்களின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் | 454 |
| மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் | 440 |
| தானியங்கு அழுத்தத் தொட்டி | 91 |
| கைக் குழாய்கள் | 3034 |
| திறந்த கிணறுகள் | 1488 |
| ஆழ் குழாய்க் கிணறுகள் | 602 |
| ஆழப்படுத்தப்பட்ட குடிநீர்க் கிணறுகள் | 512 |

கிராம வேலைத் திட்டங்கள் செயல்படுத்துவதன் மூலமாகச் சராசரி ஆண்டொன்றுக்கு 40,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் தர ஏதுவாகிறது.

ஆண்டுதோறும் உயர்கிறது நிதி ஒதுக்கீடு. கிராமப்புற வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் நிதிகளின் விவரம் ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே வருகிறது.

| ஆண்டு | ஊராட்சி வளர்ச்சியின் மீது ஆகும் செலவினத்தின் மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்) | வட்டாரம் ஒன்றுக்கு அளிக்கப்படும் சராசரி ஒதுக்கீடு |
|---|---|---|
| 1976—77 | 1,16,25.40 | 31.08 |
| 1977—78 | 1,32,55.30 | 35.44 |
| 1978—79 | 1,43,07.36 | 38.25 |

**சமுதாயக் கிணறுகளும், ஆற்று நீரேற்றுத் திட்டமும் :**

தமிழ்நாட்டில் தென்னார்க்காடு, திருநெல்வேலி, சேலம், இராமநாதபுரம், திருச்சி, தஞ்சாவூர், தர்மபுரி, புதுக்கோட்டை ஆகிய எட்டு மாவட்டங்களில் மொத்தம் 511 சமுதாயக் கிணறுகள் செயல்பட்டு வருகின்றன. இதனால் பயன்பெறும் உழவர்களின் மொத்த எண்ணிக்கை 5,786. பயிர் செய்யப்படும் மொத்த நிலப்பரப்பு 18,728.56 ஏக்கர்.

**சமூகக் கல்வி :**

கிராமங்களில் வயது வந்தோர் நாட்டு நடப்புச் செய்திகளின்மீது அவரவர்களுக்குள் விவாதிக்கும் நிலையமாக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 13,259 சமூகக் கல்வி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**மகளிர் நலம் :**

ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் என்ற விகிதத்தில் ஓர் ஒன்றியத்திற்கு 30 மகளிர் மன்றமும் நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. தற்போது 12,308 மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன.

**ஊட்டச்சத்துணவுத் திட்டம் :**

நடப்பு ஆண்டில் 38 ஊட்டச்சத்துத் திட்ட முடிவுற்ற ஒன்றியங்களும் 37 திட்டம் நடைமுறையிலுள்ள ஒன்றியங்களும் ஆக 75 ஒன்றியங்களில் ஊட்டச்சத்துணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை விவரங்களாவன1977-78 ரூ. 26.73 இலட்சம், இதில் சுமார் 10.38 இலட்சம் நடுவண் அரசின் தனி மானிய உதவியாகும். 1978-79-ஆம் ஆண்டு ஒதுக்கீடு ரூ. 39 இலட்சம். இவற்றில் நடுவண் அரசின் பங்கு ரூபாய் 15.02 இலட்சமாகும்.

**சிறு சுகாதார நிலையம் :**

சிறு ஆரம்பச் சுகாதார நிலையம் ஏறத்தாழ 1000 குடும்பங்கள் அல்லது 5000 மக்களுக்கு ஒருங்கிணைக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு வழங்கும். சென்ற ஆண்டு 49 நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாண்டு 24 நிலையங்கள் திறக்கப்பட்டு, மொத்தம் 73 நிலையங்கள் நடைபெற்று வருகின்றன.

**சாண எரிவாயுத் திட்டம் :**

ஒரு சாண எரிவாயுக் கூடத்தை நிறுவ ஏறத்தாழ 4,000 ரூபாய் ஆகிறது. இந்திய அரசு 20 சதவீத உதவித் தொகையை ஒவ்வொரு கூடம் அமைப்பதற்கு அளிக்கிறது. 75 சதவீத உதவித்தொகை அரிசனங்களுக்கும் மலைச் சாதியினருக்கும் அளிக்கப்படுகிறது. எரிவாயுக் கூடங்களை நிறுவுவதில் அரசு வங்கிகளும், கூட்டுறவுத் துறை வங்கிகளும் கடன் வழங்கி வருகின்றன.

1978-79-ஆம் ஆண்டில் மட்டும் சாதனை 1200 எண்ணிக்கையை எட்டியுள்ளது. இது தவிர ஒன்றியங்களில் பெரிய அளவில் சமுதாய சாண எரிவாயுச் சாதனங்களை அமைத்து கொடுக்கவும் கருத்து ஒன்று செயல் வடிவம் பெற்று வருகின்றது.

**கிராம முழு வளர்ச்சித் திட்டம் :**

இத்திட்டத்தைச் செயல்முறைப்படுத்த தேசிய வேளாண்மைக்குழு தேர்ந்தெடுத்தது. தமிழ்நாட்டிலுள்ள நெல்லை மாவட்டம் மேலநீலிதநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள (1) சின்னக்கோயிலான் குளம் (2) பெரிய நடுவக்குறிச்சி (3) சிறிய நடுவக்குறிச்சி (4) பட்டாடைக்கட்டி ஆகிய கிராமங்களை மூன்று கடைசிக் கிராமங்கள் ''கிராம தானக் கிராமங்களாகும்''. சின்னக் கோயிலான் குளம் கிராமதானக் கிராமமாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

மாநில அரசு மூலமாக இத்திட்டம் இந்திய அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதுகாறும் இத்திட்டச் செயலாக்கத்திற்கு ரூ. 14.35 இலட்சம் மைய அரசு ஒப்பளிப்புச் செய்துள்ளது. இத்திட்டத்தால் பல தரப்பட்ட வருமானங்களை உடைய 1,102 குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன.

**உழைப்புக்கு உணவுத் திட்டம் :**

உழைப்புக்கு உணவுத் திட்டம் மாநில அரசால் நடப்பாண்டில் செயல்படுத்தப்படுகிறது.

நீர்ப்பாசன, மண் பாதுகாப்பு, சாலைகள், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் இன்னும் இது போன்ற இதர பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் கூலியின் ஒரு பகுதி அரிசியாக அளிக்கப்படும். இது மத்திய அரசால் இலவசமாக வழங்கப்படும். இதுவே இத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும்.

# வேளாண்மை விற்பனைத் துறையின் அரிய பணிகள்



விளைபொருள் விற்பனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து இதற்கெனத் தனித்தியங்கும் துறையின் அவசியத்தைக் கருதி, தமிழக அரசு சரியாக வேளாண்மை விற்பனை இயக்குநரகத்தைத் தோற்றுவித்தது.

உற்பத்தியாளர்கள், தம் விளைபொருளை மிக நல்ல முறையில் இலாபகாமாக விற்பதற்குத் தேவையான ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கையை 140லிருந்து 187 ஆக உயர்த்தியுள்ளனர். இவற்றின் பயன்களைச் சிற்றூர்களிலும் கிட்டச் செய்ய 33 இடங்களில் துணை விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

இதன் விளைவாக 3,30,000 டன் வரத்துக்கள் 4,77,400 டன்களாக உயர்ந்துள்ளது. இம் முன்னேற்றங்கள் தற்காலிகமானதாக இல்லாமல், நிரந்தர அடிப்படையில் இருக்கச் செய்யவும், விற்பனைக் கூடங்களை நவீனப்படுத்தவும் தற்பொழுது 77 விற்பனைக் கூடங்களில் சொந்த நிலங்களில் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் 25 இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் நேரடியாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

விற்பனைக் குழுக்களின் ஆண்டு வருமானத்தை 2.59 கோடியிலிருந்து ரூ.2.96 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பதினோரு மாவட்டங்களில் விற்பனைக் குழுக்கள் இருந்து வந்தன. தற்பொழுது சேலம், புதுக்கோட்டை மாவட்டங்களையும் சேர்த்து பதின்மூன்று மாவட்டங்களில் விற்பனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் முதன் முறையாக 25 விற்பனைக் கூடங்களின் வளர்ச்சிக்காக ரூ. 37.5 இலட்சம் உதவி பெறப்பட்டுள்ளது.

நுகர்வோருக்குத் தரமான தூய்மையான கலப்படமற்ற பண்டங்களை வழங்கச் செய்ய 13 அக்மார்க் ஆய்வுக்கூடங்களை, 20 அக்மார்க் ஆய்வுக் கூடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு சுமார் 4.3 இலட்சம் குவிண்டால் உணவுப் பண்டங்கள் ''அக்மார்க்'' தரம் பிரிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் தம் விளைபொருள்களின் தரத்திற்கேற்ற நியாயமான விலையைப் பெறுவதற்கேதுவாக 52 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இருந்த வணிகமுறைத் தரம் பிரிப்பது தற்பொழுது 77 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாநிலத்திலுள்ள அனைத்து ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களையும், மேம்படுத்துவதற்கும், புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளவற்றிலும், அனைத்து வசதிகளும் ஒருமித்துக் கொண்டு வரவும், விளைபொருள் ஈட்டுக் கடன் பெறுவதற்கேற்ற வகையில் சேமிப்புக் கிடங்குகள், வங்கிகள், போதுமான ஏலக் கொட்டகைகள், ஓய்வுக் கூடங்கள், பணப்பட்டுவாடா அறைகள், உணவு விடுதிகள், தபால் அலுவலகங்கள், காய்வுக் குளங்கள், தண்ணீர், மின்வசதி, கால்நடை மருத்துவ வசதிகள் ஆகியவைகளுக்காகவும் உலக வங்கியின் நிதி உதவி பெறுவதற்குச் சுமார் 102 கோடி ரூபாய்க்கான வளர்ச்சித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

# அரசு அலுவலர்களுக்கு
# சலுகைகள்



தமிழகத்தில் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின் கீழ் பணி புரியும் ஊதியக் குழுவை இந்த அரசுதான் நியமித்தது.

இந்த மூன்றாவது ஊதியக்குழு, 76 வகையாக இருந்த ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்துச் சீரமைத்தது.

ஒருவர் ஒரே பதவியில் பத்தாண்டுக் காலம் பணிபுரிந்தால், அந்த அலுவலருக்குத் தானாகவே பதவி உயர்ஊதியம் வழங்கப்படும்.



கிராமப்புறங்களில் அரசுச் சார்புடைய வீடுகளில் வசிக்கும் ஊழியர்களின் ஊதியத்திலிருந்து வீட்டு வாடகைக்காக 10 சதவிகிதம் பிடிக்கப்பட்டு வந்ததை 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களின் குறைந்த அளவு மாதாந்தர குடும்ப ஓய்வூதியத் தொகையை ரூ. 50-லிருந்து ரூ. 100 ஆக தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது. இது, கடந்த ஏப்ரல் முதல் அமலாக்கப் பட்டுள்ளது.

அரசு ஊழியர்களின் வருங்கால சேமிப்பு நிதிக்கு 7½ சதவீதம் வட்டி தரப்படுகிறது. இப்போது, முதல் 25 ஆயிரம் ரூபாய் வரையில் இந்தப் பணத்திற்கு 8 சதவீத வட்டி அளிக்கப்படும்.

தானாக ஓய்வு பெற விரும்பும் ஊழியர்களுக்கு மருத்துவப் பரிசோதனை எதுவும் இன்றி அவர்களுக்குச் சேர வேண்டிய ஓய்வு ஊதியத்தின் மொத்தத் தொகையில் மூன்றில் ஒரு பங்குப் பணத்தை உடனடியாக அளிப்பது என்றும் அரசு முடிவு செய்திருக்கிறது.

பத்து ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட வீடுகள் வாங்குவதாக இருந்தால் தான் கடன் கொடுக்கப்படும் என்பது மாற்றப்படுகிறது. இனி முப்பது ஆண்டுகளுக்குள் கட்டப்பட்ட முதல்தரமான வீடுகளுக்கும் கடன் கொடுக்கப்படும்,

மத்திய அரசு கைக்கொள்ளும் முறையினை ஒட்டியும் மாநில அரசின் நிதி நிலையினைக் கருத்திலே கொண்டும் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு, ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு அகவிலைப்படி அளிக்க முடிவு செய்தது.




அரசு ஊழியர்களுக்கு மிதிவண்டி (Cycle) வாங்குவதற்காக வழக்கமாகக் கொடுக்கப்பட்டு வந்த முன்பணம் ரூ. 400-லிருந்து ரூ. 600-க்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது 55-லிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



அரசு அலுவலர்களின் பிள்ளைகள் உயர் கல்லூரிக் கல்வி பெறுவதற்கு வட்டியில்லாக் கடன் முன்பணம் வழங்கும் திட்டம் அமல் செய்யப்பட்டுள்ளது.


**தமிழரசு**

**சந்தா விவரம்**

ஓர் ஆண்டு ரூ. 12-00

அரையாண்டு ரூ. 6-00




# விடுதலைப்போராட்ட வீரர்களுக்கு உதவிகள்




**வி**டுதலைப் போராட்ட வீரர்களுக்கும், முன்னாள் இந்தியத் தேசிய இராணுவ வீரர்களுக்கும், அவர்களின் குடும்பத்தார்க்கும் இன்றைய அரசு அளித்துவரும் உதவிகள் அளவற்றவைகளாகும்.

முன்பு ஒருவர் ஒய்வூதியம் பெற்றிட, அவரது உயர்ந்தபட்ச மாத வருமானம் ரூ. 100 என இருந்து வந்தது. அதனை, இவ்வரசு மறுபரிசீலனை செய்து இதைத் தளர்த்துவதனால் மேலும் பல விடுதலைப் போராட்ட வீரர்களும், முன்னாள் தேசிய இராணுவ வீரர்களும், அவர்களின் குடும்பத்தினரும் ஒய்வூதியம் பெறும் வாய்ப்புக் கிட்டும் வகையில், உயர்ந்தபட்ச மாத வருமான வரம்பை ரூ.125 ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்தது. இதனைத் தொடர்ந்து ஏறக்குறைய 2,500க்கு மேலான விடுதலைப் போராட்ட வீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்று அவை பரிசீலிக்கப் பட்டு வருகின்றன.

மத்திய அரசு வழங்கி வரும் ஒய்வூதியமான ரூ. 200 பெற்று வரும் ஒய்வூதியம் பெறுபவர்க்கு, மாநில அரசின் ஒய்வூதியம் முன்னர் நிறுத்தப்பட்டு இருந்தது. இதனை இவ்வரசு மறுபரிசீலனை செய்து, மத்திய ஒய்வூதியம் பெற்று வருவோருக்கும் மாநில ஒய்வூதியம் வழங்கிடஅனுமதித்து உத்தரவிட்டது.

இந்தப் புதிய ஆணை சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் ஊக்கத்தினை அளித்திடுவதாகும்.

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் தியாக உணர்வோடு ஆறுமாதத்துக்கும் குறையாமல் சிறை சென்றோர் மத்திய அரசிலிருந்து ரூ. 200ம், தமிழக அரசிலிருந்து ரூ. 75-ம் என மொத்தம் ரூ. 275- பெறும்போது, மூன்று மாதங்களுக்கு மேல் ஆறுமாதங்களுக்குள்ளான சிறைத்தண்டனைப் பெற்று, தமிழக அரசு ஒய்வூதியம் ரூ. 75 மட்டும்பெறும் தியாகிகளுக்கு மேலும் உதவி அளித்திடும் வகையில், அதனை மாதம் ரூ. 100 ஆக உயர்த்தியுள்ளது. இது, தமிழக ஒய்வூதியம் மட்டும் பெறுவோருக்கு அரசு அளித்துள்ள தனி உதவியாகும்.

இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றிய பால சேனாவைச் சேர்ந்தவர்களுக்கு உதவித் தொகை 1973 வரை வழங்கப்பட்டு, பின் மத்திய அரசினால் நிறுத்தப்பட்ட நிலையை நமது மாநில அரசு பரிவுடன் மறுபரிசீலனை செய்தது. அப்படிப்பட்டவர்களுக்கு மீண்டும் உதவித் தொகை வழங்கிட அண்மையில் ஆணையிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

காலஞ்சென்ற தலைவர் திரு. காமராசர் அவர்களின் தங்கை திருமதி நாகம்மாவுக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டு வந்த மாத உதவித்தொகை ரூ. 250 இப்போது ரூ. 500 ஆக வழங்கப்பட்டு வருகிறது. அதுபோல விடுதலைப் போராட்ட வீரரும் முன்னாள் உள்துறை அமைச்சருமான திரு. கக்கன் அவர்களுக்கு மாத உதவித் தொகையாக ரூ. 500ம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் அமைச்சர் தரத்தில் மருத்துவ வசதியும், வாடகையின்றிக் குடியிருப்பும், அரசுத் துறைப் பேருந்துகளில் கட்டணமின்றிப் பயணம் செய்ய வசதியும் வழங்கப்படுகின்றன.

மறைந்த விடுதலைப் போராட்ட வீரர் ஆரணி திரு. சுப்பிரமணி சாஸ்திரியார் அவர்களின் மருமகள் திருமதி எம். வீ. சீதாலட்சுமி அவர்களின் வாழ்க்கைச் சிக்கல் தீர அவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து சிறப்பு நேர்வாக ரூ. 2,000 அரசு மூலம் வழங்கப்படுகிறது.

பெருந்தன்மையான இத்தகைய உதவிகளின் மூலம், விடுதலைப் போராட்ட வீரர்களின் நலன்களைப் பரிவுடன் கவனித்து சுதந்திரம் பெற்றிட உறுதுணையாக இருந்தவர்களுக்கு நன்றி செலுத்தினோம் என்ற திருப்தியை மட்டுமல்ல, பெருமையையும் பெறுகின்றது இவ்வரசு!

## நரம்பியல் துறையில் புதிய சிகிச்சைக் கருவி

சென்னைப் பொது மருத்துவ மனையிலுள்ள நரம்பியல் துறையில்(Department of Neurology) ரூ.40 இலட்சம் செலவில் மனித மூளையிலுள்ள நரம்புகளில் ஏற்படும் கோளாறுகளை உடனுக்குடன் படம் பிடித்துக் காட்டித் தகுந்த சிகிச்சை அளிக்க உதவும் ''நவீன ஊடுருவிக் கருவி (Scanner) ஒன்றினை வாங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

பொதுவாக, ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் அதிகம் வரும் சென்னை அரசு மருத்துவமனையில் இக்கருவியினைப் பொருத்துவதனால் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களும் நவீன விஞ்ஞான ரீதியான மருத்துவ வசதிகளைப் பெறமுடியும்.

ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பும், அரசுக்கு அதிக அளவில் வருமானமும் தருகின்ற திரைப்படத்துறை, மக்களிடையே செய்திகளை எளிதில் பரப்பும் சக்தி மிக்கதாகும்.



ஆகவே ஏழை எளியோர் நெஞ்சில் அதன் மூலம் நல்ல பல கருத்துக்கள் விதைக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. ஆகையால், குடிப்பழக்கத்தால் விளையும் கேடுகளை விளக்கியும், தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப் பற்று ஆகியவற்றை வலியுறுத்தும் தரமான படங்களைத் தயாரிக்கும் படத் தயாரிப்பாளருக்கு அரசு, இலட்சம் ரூபாய் பரிசு வழங்கிச் சிறப்பிக்கிறது.

அதுமட்டுமல்ல; சிறந்த படங்கள், சிறந்த நடிக-நடிகையர், சிறந்த தொழில் நுணுக்க வல்லுநர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்து அரசு பரிசளித்துக் கௌரவிக்கிறது.

அரசின் வருமானம் குறையாமல் இருக்கவும், திரைப்படத் துறையினர் பெரும்பயன் பெறவும் வழி வகுக்கப்பட்டது.

திரைப்படம், சமூகத்தில் முக்கியப் பங்கு வகிப்பதால் - ஏழை எளிய மக்கள் குறைந்த செலவில் பார்க்கும் வகையில் கட்டணம் குறைக்கப்பட்டது.

திரையரங்குகள் கட்டுவதற்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டதால், பல புதிய திரையரங்குகள் உருவாக்க வழி ஏற்பட்டது. திறந்த வெளித் திரையரங்குகள்அமைத்திட அரசு ஊக்கமும் உதவியும் அளித்து வருகிறது.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரியின்-செய்திப் படப் பிரிவின் பணிகள் செம்மையுற அமைவதற்காகப் பழம்பெரும் திரைப்பட இயக்குநர் திரு ப. நீலகண்டன் அவர்கள் அவற்றின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## திரைப்படத்துறை வளர்ச்சிக்கு அரிய உதவிகள்



வெளிப்புறக் காட்சிப் படப்பிடிப்பிற்காக நான்கைந்து துறையினரிடம் அனுமதி பெற வேண்டும் என்றிருந்த நிலையை மாற்றி செய்தித் துறை இயக்குநரிடத்தில் அனுமதி பெற்றால் போதும் என்ற எளிதான நிலை உருவாக்கப் பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள டூரிங் திரைப்பட அரங்குகளுக்கு இரண்டேகால் ஆண்டு மட்டுமே அனுமதி என்றிருந்த முறையை மாற்றி அதனை மூன்று ஆண்டுகளாக நீட்டித்துள்ளது, இந்த அரசு. டூரிங் திரையரங்குகள் தீப் பிடிக்காத கூரையோடு அமைந்திட வேண்டும் எனவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

கேளிக்கை வரி விதிப்பிலும் சிறப்பானதொரு சீர்திருத்தம் இவ்வரசால் கொண்டு வரப்பட்டது. 1977 டிசம்பர் 26 முதல், ஊராட்சி மன்றங்கள், பேரூராட்சிகள் மற்றும் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகராட்சிகள் ஆகியவற்றிலுள்ள திரையரங்குகளுக்கு அந்தந்த அரங்கின் மொத்த இருக்கைகளின் வசூல் அடிப்படையில் ஒவ்வொரு காட்சிக்கும் மொத்தமாக வரிவிதிக்க அரசு முடிவெடுத்தது.

இப்படி, 'காம்பவுண்டிங் முறை' மூலம் வரி செலுத்தப்படும்போது, ஊழல் ஒழியவும்,

நடிப்புக் கல்லூரியில் சேருவோருக்கான விதிமுறைகள் தளர்த்தப்பட்டன.



தமிழகத்தில் உள்ள பல திரையரங்குகள் ஆண்டு முழுவதும் ஆங்கிலம், இந்தி போன்ற வேற்றுமொழிப் படங்களையே திரையிட்டு வரும் நிலை இருந்து வந்தது. தமிழ் வளர்ச்சியிலும், தமிழ்த் திரைப்பட வளர்ச்சியிலும் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, தமிழகத் திரையரங்குகள் அனைத்திலும் ஓராண்டுக்கு 12 வாரங்கள் தமிழ்ப்படம் திரையிடப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளது.




1979 மே திங்களில் 40 கோடி ரூபாய் அளவில் அரசுக் கடன்களிலும் கூட்டுறவுக் கடன்களிலும் பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு அரசு வழங்கியுள்ளது.
என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டது.
நடமாடும் மருத்துவமனை
அரசு அலுவலர்களது பிள்ளைகளின் உயர் கல்விக்கு வட்டியில்லா முன்பணம் வழங்கப் -படுகிறது.
கட்டாயக் கொள்முதல் முறை அடியோடு ஒழிக்கப்பட்டு விட்டது.


மின்விளக்குக்கு இணைப்பு வழங்கப்படுகிறது. இதற்கு மாதம் மின் கட்டணம் ரூ 2½ தான்
இது வரை போக்குவரத்து வசதி இல்லாத கிராமங்களுக்கு பேருந்து வசதி செய்து கொடுக்கப்படுகிறது.
அத்தியாவசியப் பண்டங்கள் நியாய விலையில் கிராமப்புற மக்களுக்கும் கிடைக்க 'கிராமக் கடைத் திட்டம்' செயல்படுத்தப்படுகிறது.
பெண்கள் வீட்டில் இருந்தவாறு சிறு கைத் தொழில்களில் ஈடுபடும் திட்டம் 25 லட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப் படுகிறது.

# வேலைவாய்ப்புப் பயிற்சி நிறுவனம்

தொழில் வளர்ச்சியடைவதற்கு ஏற்ப தொழில் நுட்ப பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றனர். இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் 1967-68 ஆண்டுத் திட்ட இறுதி வாக்கில் தமிழகத்தில் 31 அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் இருந்தன. அவைகளில் பயிற்சிப் பெற ஒப்பளிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கை 13,112 ஆகும். 1968-69 முதல் 1976-77 வரை உள்ள காலத்தில் எந்தவித புதிய அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தவோ அல்லது புதியதாக அதிக இருக்கைகளோ (ஏற்கனவே உள்ள 31 தொழிற் பயிற்சி நிலையங்களிலும்) ஏற்படுத்தப்படவில்லை.

கம்மியர் (பொது மின்னணுவியல்) துறையில் பயிற்சி பெற்ற கைவினைஞர்கள் பெருகிவரும் உடனடித் தேவைகளைப்பூர்த்தி செய்ய, 1977-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் 16 பயிற்சியாளர்கள் கொண்ட தொழிற் பயிற்சிப் பிரிவு ஒன்று அடையாறு மின் அணுத்தொகுதி வளாகத்தில் தனியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப் பயிற்சிப் பிரிவில் மொத்தம் 32 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்,

**தொழில்களைப் பலதிறப்படுத்தும் திட்டம் :**

கோயம்புத்தூரிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் பொறிப் பகுதி பொருத்துபவர் பிரிவில் 32 இருக்கைகளுக்குப் பதிலாக கம்மியர் (குளிர்ப்பதனம் தட்ப வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துதல்) பயிற்சிஒன்று 1.8.1978-ல் தொடங்கப்பட்டது. இதில் 1.8.1978ல் 16 பேர்கள் சேர்க்கப்பட்டு பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் 16 பேர்கள் 1.8.1979ல் சேர்க்கப்பட்டனர்.

நுண்ணிய கருவிகளை அதிகமாகப் பயன்படுத்துவதையும் தொழிலியலில் அடைந்து வரும் மாற்றத்தையும் கருத்தில் கொண்டு ஐக்கிய நாடுகள்வளர்ச்சித் திட்டம்-அனைத்து நாடுகள் தொழிலாளர் ஸ்தாபனம் ஆகியவற்றின் உதவியுடன் அம்பத்தூரில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் உயர்நிலை தொழில் பழகுவோர் • பயிற்சிப் பாடப்பிரிவு தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், இந்தியதர நிர்ணயம், பொறியியல் வரை படங்கள் படித்தல் மற்றும் முன்னேற்ற பற்றவைப்பு கருவி மற்றும் அச்சு செய்பவர், இயந்திரம் மற்றும் மின்சாரச் சாதனங்கள் பராமரிப்பு ஆகிய தொழிற் பயிற்சிப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது வரை பல்வேறு தொழிற் சாலைகளிலிருந்து இப்பயிற்சிக்கென அனுப்பப்பட்ட 228 தொழிலாளர்கள் இத்தொழில் பயிற்சிப் பிரிவில் பயிற்சி பெற்றுள்ளனர்.

சிறந்த முறையில் மேற்பார்வையிட்டு கட்டுப்பாடு, ஆய்வு செலுத்துவதில் மூலம் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியின் திறனைச் செம்மையாக்க 1978-79ஆம் ஆண்டில் திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மூன்று வட்டார துறை இயக்குநர் அலுவலகங்கள் அமைக்கப்பட்டன.

1978-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் முதல் நாளிலிருந்து, பொருத்துபவர், மின் கம்பியாள், பற்றவைப்பவர் முதலிய பயிற்சி பிரிவுகளில் ஏற்கனவே குறைக்கப்பட்ட இடங்களில் 500 இடங்கள் மீண்டும் கொண்டு வரப்பட்டன.

**அனைத்திந்திய ஆண்டு திறனாய்வுப் போட்டியில் முதன்மையிடம் :**

இம்மாநிலத்தில் தொழிற் பயிற்சி நிலையங்களில் அளிக்கப்படும் பயிற்சியின் தரம் மிகச் சிறப்பானதொன்று. 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடந்த பதினைந்தாவது அகில இந்திய திறனாய்வுப்போட்டியில் கடைசல் மற்றும் பற்றவைப்பு பிரிவுகளில் நமது பயிற்சியாளர்கள் முதன்மை இடம் பெற்று இம்மாநிலம் 8-வது தடவையாக முதன்மை இடத்தைப்பெற்றுள்ளது. குடியரசுத் தலைவரின் சுழற்கேடயம் 8-வது முறையாக பெற்றுள்ளது.

1977-ம் ஆண்டு வரை, 18 இயந்திர தொழில்களில் பயில்வதற்கு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர கல்வித் தகுதி பள்ளியிறுதி ஆண்டுக்கு இரண்டாண்டுகள் குறைவு ஆகும். பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதற்கு மேற்சொன்ன தொழில்களில்சேர்ந்து பயில கல்வித் தகுதி பள்ளி இறுதி வரை படித்திருக்க வேண்டும் என உயர்த்தப்பட்டது.

மேலும், கணக்கு மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் குறைந்த அளவு மதிப்பெண்களும் நிர்ணயிக்கப்பட்டு 1978-ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**ஊரக இளைஞர் பயிற்சித் திட்டம்**

தமிழக அரசு ஆணை 1177 (தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை) தேதி 24.7.1979-ன்படி, ஊரக இளைஞர்களுக்கு பல்வேறு தொழில்களில் குறுகிய காலப்பயிற்சித் திட்டம் ஒன்றிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 14.9.1979 முதல் கீழ்க்கண்ட தொழிற் பயிற்சி நிலையங்களில் செயலாக்கப்பட்டுள்ளது.

அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், உளுந்தூர்பேட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், அரியலூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, கூனூர், மேட்டூர் அணை, கோயம்புத்தூர், ஈரோடு, தாராபுரம், ஓசூர், தூத்துக்குடி, திருச்செந்தூர்.

இத்திட்டம் கிராமப்புறக் கைவினைஞர்களிடையே அவர்களது கைத்திறனை உயர்த்தி அவர்களது தொழிலை இன்னும் செவ்வனே செய்ய உதவி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது வரையில் கைத்திறனில் மேம்பாடு அடையாதவர்களுக்கு கைத்திறன் அளிப்பதையும் இத்திட்டம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப்புறப் பகுதிகளில் எந்தத் தொழில்களில் கைத்திறன் மேம்பாட்டைச் செய்ய வேண்டுமோ, அந்தத் தொழில்களில் கைத்திறன் அதிகரிக்கச் செய்வதையும், அதன் மூலம் திறமைமிக்க கைவினைஞர்கள் நகர்புறச் சேரிகளுக்குக் குடிபெயர்வதைத் தடுத்து, அவரவர்களது கிராமங்களிலேயே தங்கிதொழில் புரிவதை ஊக்குவிப்பதையும் அடிப்படையாகக் கொண்டது.

# பணியாளர் நிர்வாக சீர்திருத்தம்

அடிப்படை விதி 56 (டி) பிரிவின்படி, 25 ஆண்டுகள் பணிமுடித்த அல்லது 50 வயது நிறைந்த அரசு ஊழியர் மூன்று மாத அறிவிப்பு கொடுத்து தன் விருப்பப்படி ஓய்வு பெறலாம் என்றிருந்த விதியினைத் திருத்தி, 20 ஆண்டுகள் மட்டுமே ஓய்வூதியம் பெறுவதற்குரிய பணி செய்திருப்பின் அவர் தம் விருப்பப்படி ஓய்வு பெறலாம் என அரசு ஆணை பிறப்பித்தது.

அரசு அலுவலர்க்கு ஈட்டிய விடுப்பில் அல்லது பணியில் இருக்கும்பொழுது தம் கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பைக் காசாக்கும் சலுகை இருந்தது. பணியில் இருக்கும் பொழுது ஈட்டிய விடுப்பைக் காசாக்கும் திட்டம் இருப்பதால் ஈட்டிய விடுப்பில் இருக்கும்பொழுதும் இச்சலுகை தரவேண்டியதில்லை என்று மாநில கணக்காயர் தெரிவித்த கருத்தை ஒட்டி இச்சலுகை கைவிடப்பட்டது. மீண்டும் இப்பொழுது அரசு அலுவலர்க்கு ஈட்டிய விடுப்பில் இருக்கும்பொழுதும், தம் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பினைக் காசாக்கும் சலுகை வழங்கப்பட்டது.

அரசு அலுவலர் ஓய்வுபெறும்பொழுது, ஓய்வூதியம் மற்றும் அதற்கு நிகரான இறப்பு ஓய்வுக்காலப் பணிக்கொடைக்கான பிடித்த மின்றி, தம் கணக்கில் உள்ள ஈட்டிய விடுப் பினைக் காசாக்கும் சலுகை ஓய்வு பெற்றவர் களுக்கு மீண்டும் 1-10-78 முதல் அளிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழலுக்கெதிரான பிரச்சார இயக்கத்திற்கு இன்னும் அதிக ஊக்கமளிக்கும் வகையில் பொதுமக்கள், பத்திரிகைகள், துறை அளவிலான கண்காணிப்பு ஆகியவை ஒரு முகப்படுத்தப்பட்டுள்ளன.

ஒழுக்க கண்காணிப்பு இயக்குநர் அலுவலகத்தில், விசாரணை நடைமுறைகளைச் சீரமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் மூலம் விசாரணைகளையும், புலனாய்வுகளையும் விரைவாக முடிக்க இயலுகின்றது.




இந்த இயக்குநர் அலுவலகம், புலனாய்வு அமைப்பு என்ற முறையில் முக்கிய பங்கினை ஆற்றுவதுடன், லஞ்ச ஊழல் நடைபெறுவதைத் தடுக்கும் பணியிலும் தனது நாட்டத்தைச் செலுத்தி வந்துள்ளது. இம்மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள மாநில அரசுத்துறை அலுவலகங்களிலும், பொது நிறுவனங்களிலும் பொதுமக்களுடன் தொடர்பு ஏற்படுகிற இடங்களில் மாவட்ட ஆய்வுக் குழுக்கள் திடீர் சோதனைகள் நடத்துவதற்குரிய விரிவான திட்டம் ஒன்று, இந்த இயக்குநர் அலுவலகத்தின் ஆலோசனையின் பேரில், 1977 ஆகஸ்ட் முதற்கொண்டு செயல்படுத்தப்பட்டது.

அரசு அலுவலர்களின் ஓய்வு பெறும் வயது, 25-4-1979-க்கு முன்பு யார் யாருக்கு 55-ஆக இருந்ததோ, அவர்களனைவருக்கும் 58-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இறந்துபோன அடிப்படை ஊழியர்கள் குடும்பத்தின் வாரிசுதாரர் ஒருவர் அந்த அலுவலர் இடத்திலேயே பணிசெய்யத் தகுதி உள்ளவராயிருந்தால் அவரை நியமனம் செய்ய அறிவுரை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

''கடைநிலை ஊழியர்'' என்னும் பெயர் மாற்றப்பட்டு ''அடிப்படை ஊழியர்'' என்று அழைக்கப்படுவர்.

மூன்று ஊர்தி ஓட்டுனருக்கு ஒரு ஏவலாள் மற்றும் ஓட்டுநர் (Peon-Cum-Driver) என்னும் புதிய பதவி ஏற்படுத்தி அவர்களுக்கு மாதம் ரூ. 10 தனிப்படி வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

அரசுப் பணியில் சேருவதற்கான உச்ச வயது வரம்பை 26-லிருந்து 28 ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# செய்தித் துறையின் சிறப்பான பணிகள்



**போ**துத் தொண்டாற்றிப் பெருமை பெற்ற அறிஞர்கள், கவிஞர்கள், தேசியத் தலைவர்கள் ஆகியோருக்கு அரசின் சார்பில் விழா எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வகையில்-பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, பெருந் தலைவர் காமராசர், பசும்பொன்முத்து ராமலிங்கத் தேவர், காயிதே மில்லத், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் ஆகியோரின் விழாக்கள் செய்தித்துறையின் சார்பில் அரசால் கொண்டாடப் பட்டன.

**த**ந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா மாவட்டம்தோறும் சிறப்புற ஓராண்டுக் காலம் கொண்டாடப்பட்டது. சென்னையில் தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ஒலி-ஒளி காட்சி நடத்தப்பட்டது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதனைப் பாராட்டிக் கருத்துத் தெரிவித்தனர்.

**ந**லிவுற்றிருந்த நாடகத் தமிழை நன் முறையில் வளர்ந்தோங்கச் செய்வதற்காக-தீண்டாமை ஒழிப்பு குறித்தும், மதுவிலக்கு குறித்தும் செய்தித் துறை மூலம் நாடகப் போட்டியொன்று வைக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நாடகங்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் பரிசளிக்கப்பட்டு அந்நாடகங்கள் நாடெங்கும் நடத்தப்பட்டன.

**செ**ய்தித்துறைக்கும், பத்திரிகையாளர்களுக்கும் இடையிலான உறவு பலவழிகளிலும் பலப்படுத்தப்பட்டிருக்கிறது. பத்திரிகை எழுத்தாளர் குடும்பங்களுக்கு உதவும் வகையில் 'பத்திரிகையாளர் உதவி நிதி' துவக்கும் திட்டமொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

**செ**ன்னையில், பெருந்தலைவர் காமராசர் வாழ்ந்த இல்லத்தை அரசே வாங்கி 'காமராசர் நினைவு இல்ல' மாக்கிச் சிறப்பித்தது. இதுமட்டுமல்லாமல்-காமராசர் நினைவாலயத்தை நன்முறையில் பராமரிக்கவும், ஈரோட்டில் தந்தை பெரியாரும், காஞ்சியில் அமரர் அண்ணாவும் வாழ்ந்த இல்லங்களைச் சிறந்த முறையில் பராமரிக்கவும் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**வ**றுமையில் உழலும் கலைஞர்களுக்கு மாதந்தோறும் ரூ. 250 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**கு**மரி முனையில் உள்ள கடற்பாறையில் குறள்தந்த வள்ளுவருக்குச் சிலையெடுக்கவும், கன்னியாகுமரியில் திருவள்ளுவர் நினைவாலயம் உருவாக்கிடவும் அடிக்கல் நாட்டப்பட்டது.

**ப**ழந்தமிழ்க் கலைமணம் நம்நாட்டில் மட்டுமல்லாமல், உலகு முழுதும் பரவ வேண்டும் என்கிற நன்னோக்கத்தில், வறிய கலைக்குடும்பத்தைச் சேர்ந்த நடனக்கலை வல்லுநர், செல்வி சுவர்ணமுகிக்கு உதவிட அரசு முன் வந்தது.

## நீதிமன்றங்கள்

நீதி மன்றங்களின் அதிகார வரம்புக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்படுத்தும் வகையில், 1978-79 ஆம் ஆண்டில் நான்கு நிரந்தர உரிமையியல் நீதிமன்றங்களும் 1979-80 ஆம் ஆண்டில் மூன்று நிரந்தர உரிமையியல் நீதி மன்றங்களும், நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை துரிதமாக முடிவுசெய்ய 1978-79 மற்றும் 1979-80 ஆண்டுகளில் ஆறு -கூடுதல் உரிமையியல் நீதிமன்றங்களும் துவக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

85329

சென்னை சிறு வழக்கு நீதிமன்றத்தில் (Court of small causes Madras) நிலுவையில் உள்ள வீட்டு வாடகைக் கட்டுப்பாடு வழக்குகளை (House Rent control cases) விரைந்து முடிவு செய்ய, நான்கு கூடுதல் நீதிமன்றங்கள் துவக்க (மாவட்ட முன்சீப் தரத்தில்) 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன.

இவை தவிர, 1978-79 ஆம் ஆண்டில் நிலுவை வழக்குகளைக் குறைக்க நான்கு கூடுதல் செஷன்ஸ் நீதிமன்றங்களும், 1979-80 ஆம் ஆண்டில் ஒரு கூடுதல் நீதித்துறை முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றமும், நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்தும் வகையில் 1979-80 ஆம் ஆண்டில் புதியதாக எட்டு நீதித்துறை இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதிமன்றங்களும் இரண்டு நீதித்துறை முதல் வகுப்புக் குற்றவியல் நீதி மன்றங்களும் அமைக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

குற்றவியல் நீதிமன்றங்களில் விளங்கும் வழக்குகளைத் துரிதமாக நடைபெறச்செய்ய மாநிலத்திலுள்ள எல்லாத் தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்களும், பெருநகர் தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்திற்கும், சென்னை உயர்நீதி மன்றத்திற்கும் மின்னியக்க நகல்கள் எடுக்கும் பொறிகள் வழங்க ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.







ஒரத்தநாட்டில் கிராமப் புறங்களுக்கு புதிய பேருந்து வழித் தடங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1-12-79-ல் துவக்கி வைத்தார்.



பதிவு எண். M. 8[illegible]



தமிழகத்திற்கு வருகை தந்த
மாண்புமிகு இந்தியக் குடியரசுத்
தலைவர் திரு. நீலம் சஞ்சீவ [illegible]
மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர்.
5-12-79ல் மீனம்பாக்கம் விமான
நிலையத்தில் வரவேற்றார். [illegible]
ஆளுநர் அவர்களும் மாண்பு[illegible]
[illegible] அமைச்சர் அவர்களும்
உடன் உள்ளனர்.



முன்னாள் [illegible]
திரு. எம். பக்தவத்சலம் [illegible]
[illegible] படத்தை மாண்புமி[illegible]
இந்தியத் தலைமை அ[illegible]
திரு. சரண்சிங் அவர்கள்
2[illegible]-1-79 அன்று சென்னை
கலைவாணர் அரங்கில் [illegible]
வைத்தார்.

[illegible]

